உ

சிவமயம்.

திருக்கோவையார்.

சைவ சமயாசாரியராகிய

மாணிக்கவாசகசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது

மதுரையாசிரியர் பாரத்துவாசி

நச்சினார்க்கினியருரையோடு

இராமநாதபுர ஜமீந்தாரவர்களின்

மாநேஜராகிய ம-ள-ள-ஸ்ரீ

பொன்னுச்சாமித்தேவரவர்கள்

கேட்டுக்கொண்டபடி,

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து,

சென்னபட்டணம்

முத்தமிழ்விளக்கவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ரௌத்திரி௵ ஐப்பசிமீ

Registered Copyright.

சென்னிமேற் செங்கரஞ் சேர்த்தியைந் தெழுத்தாங்
மன்னிய பாச வலிகெடுத் தின்பப்
பூரண வடிவம் புரிந்தவப் போதமே
ராரண மறியா வருட்டே சிகனெ
மாணிக்க நிகர்க்கு மதுரவா சகந்தாற்
பேணிப் பரவப் பிரானனி மகிழ்ந்தவ்
வாசில்கா ரணத்தா லமலமா ணிக்க
வாசக னெனப்பெயர் வழங்கினன் மறைகளும்
வியந்துபின் றெளிந்தவ் விரிபொரு ளனைத்து
நயந்தர லுலய நற்பணி தனக்கு
மணிவிழா வித்குமர்ச் சனைக்குமங் கணன்கண்
மணிகொண் மெய்யடியார் மாண்பூ சனைக்கு
மமைத்தரு டந்த வாரிய னடிக
டமைப்பணிந் தன்னவனஞ் சார்ந்தன ரிருப்ப
வழுதியீ தறிந்து வரவழைத் தெம்பொருண்
முழுதுமீ பலதுமா முறையினித் கொணர்தியென்
றண்டரு மஞ்ச வல்லல்செய் மல்லராற்
றண்டனை செயவது சகிக்கில னாகிக்
கூடலங் கோனரி குதிரையாக் கியதிரு
வாடலா திகளா லரசனைத் தெருட்டத்
தெருண்டவவ் வரசனிச் சிவனடி யானை
மருண்டபுன் மதியான் வருத்தின னெனவவ்
வல்பனை யடைவுற் றடிகளிற் பணிந்தே
யெள்பிழை பொறுத்தருள் வீரென் றிரப்ப
வகமகிழ்ந் தன்பரவ் வரசனுக் கலகில
முகமனன் குரைத்து மூனைமதி முடியோன்
சன்னிதி சார்ந்து தாழ்ந்துபின் புறம்போந்
தென்னிதி யேயென வெய்துபான் டியனை
நிற்கப் பணித்து நின்மல மாக்கிய
வற்களத் தைய ரமர்பெருந் துறையை
யடைந்து முன்போல வாரியற் காணவுள்
ளுடைந்துறைந் துருகி யுலப்பில்பே ரன்பாற்
பற்பல விதமாப் பாமாலைகள்புனைந்
தற்புதன் சேவடிக் கணிந்தவ ணிருப்பத்
தில்லையில் வருகெனச் சிவபா னருளாஞ்
மொல்லையி னிறைஞ்சி யுதனினீங் கியாறு

செல்வுழிச் சிற்சில சிவநகர் துதித்துப் *
பல்வளம் படைத்த பரமா காய *
புண்ட ரீக புரந்தனிற் பொருந்தி *
யண்டர்சம் பெருமா னருணடங் கும்பிட் *
டாரா வன்பி னருட்டுதி யியற்றிச் *
சீரார் சிவயோ கினிற்சிறந் திருப்ப *
மணிமதிற் கூடலில் வளர்தமிழ்ச் சங்கத் *
தணிமுதற் புலவனா யமர்தரும் போது *
கூறரு மின்பொருட் கூறிறந் திடுதலின் *
மாறனும் புலவரு மயங்குறு காலை *
யிறையனா ரகப்பொரு ளெனப்படும் பனுவலை *
முறைமையின் மொழிந்த முதிர்திரு வாக்கா *
லைந்திணைக் கோவை யலங்கரித் துரையெனச் *
சுந்தரத் தாண்டவத் தோன்றலார் பணிப்பக் *
கருணையை யுன்னிக் கணக்கில்பே ரின்பப் *
பொருணயந் தழுவிப் புனிதநல் வாக்காற் *
றிருக்கோவை யுள்ளிந் தேவரும் பரவத் *
திருக்கோவை யாரினைச் செப்பின ரஃதை *
யிருக்கினுஞ் சிறந்ததா வேற்றெம் பெருமான் *
திருக்கரங் கொண்டு தீட்டிய தன்றியு *
மழகிய திருச்சிற் றம்பல முடையா *
னெழுதிய தெனநெட் டெழுத்துமிட் டருளின *
னாதலா லிந்நூ லரும்பொருட் பயனை *
யோதவுங் கேட்கவு மொருவரான் முடிமோ *
காமச் சுவையினைக் கட்டுரைத் திடுதலாற் *
காமுகர் காமநூ லெனக்களித் துரைப்பவு *
மிலக்கியக் கடலின் றேறுதற் கீதோ *
ரிலக்கிய நூலெனக் கவிஞர்க ளிசைப்பவு *
மிலக்கண விதியெலா மெளிதினிற் பயில *
விலக்கண நூலென வியல்வலோ ரியம்பவு *
மன்பினைப் பெருக்கி யானடி யளித்தலா *
லன்புநூ லெனமெய் யன்பின ரறையவும் *
வேதமெய்ப் பொருளினை விளங்கவோ துதலால் *
வேதமே யெனவே தியர்வியந் துரைப்பவுஞ் *
சைவசித் தாந்தத் தனிப்பொரு டருதலிற் *
சைவா கமமெனச் சைவர்கள் சாற்றவும் *

பலபட விங்ஙனம் பாருளோர் புனைந்து *
சொலநனி விளங்கித் தோன்று மிந்நூலிற் *
குச்சிமேற் புலவர்கொ ளுரைநூற் குரைகள்செய் *
நச்சினார்க் கினியார் நயந்துரை செயவெனி *
மற்றைப் பொருளெலா மனக்குமெட் டாமையைத் *
தெற்றென வுணர்ந்து சீர்சா லப்பொரு *
ணூலின னுதவிய நன்பொருட் கிணங்க *
வாலிதிற் றேர்ந்து வகுத்தபே ருரையினை *
வெளிதினிற் கற்றிவ் விருநிலத் தோருளங் *
களிபெறும் பயனைக் கருத்திடை யுன்னிக் *
கரலிகி தங்களிற் காண்டுகள் கழிந்தே *
யுரமொடு மச்சிட் டுதவுக வென்று *
நதியணி சடில நம்பனேர் முனியுறை *
பொதியமென் றுரைக்கும் பொருவின்மா மலையின *
னுயர் கொடியின னருளினாற் போதலின் *
வானுளோர் களும்புகழ் ஔவையவா ராற்றின *
னம்பினோர்க் கெல்லா நலங்களுங் கொடுத்துயர் *
செம்புகழ் படைத்த செம்பிநன் னாட்டினன் *
விதுவையூர் மாடமு மேடையும் விளங்கும் *
பொதுவையுங் கொண்டொளிர் புதுவைமா நகரான் *
கற்றவர் புனைபா மாலையி னொடுகவி *
னுற்றதண் டளவ வொண்பூ மாலையான் *
பண்பரி யிப்பரி யாகவுட் பதியவும் *
விண்பரிந் திசைப்பவும் விளங்கும்வெண் பரியான் *
றிகைக்களிற் றினமுஞ் செண்டெதிர் மலைந்திடிற் *
றிகைக்குமா றிகல்புரி சேமவெங் களிற்றினன் *
மாண்படு மாற்றல ரன்றிமற் றையருங் *
காண்பரோ லச்சுறுங் காவியங் கொடியினன் *
வம்மினென் றெவரையும் வரச்செயுங் கொடைமுதல்
மும்மைகொண் டென்று முழங்குமும் முரசினன் *
பொங்கொளிக் கதிரோன் போந்துலாம் புவியிட *
மெங்கணு நடாத்து மிசைச்செங் கோலின *
னொழுக்கமும் வாய்மையு முயர்குடிப் பிறப்பு *
மழுக்கிலா வன்பு மடக்கமு மருளுங் *
கல்வியுங் கொடையுங் கணக்கில்பே ராற்றலுஞ் *

செல்வமு மியல்பாச் சிவனுறச் சிறந்தோ
ரருந்தமி ழளக்கரை யறிவெனு மம்பியாற்
றிருந்துறக் கடத்தலாற் சீர்பெறத் திகழ்வோன்
சாந்த சமுத்திரந் தருமமா ணிக்கம்
வாய்ந்தபொற் பேழை வரகுண மேரு
சீரிய புலவர் திறந்தெரிந் தொண்பொருண்
மாரியும் வெள்குற வழங்கிடும் வள்ளன்
மேவுமெய் யறிவால் மேம்பா டுற்று
யாவருள் ளத்து மாசுவீற் றிருப்போ
னிராசாங் கத்தினை யீரோப் பியரும்
பராவுறச் செலுத்தும் பண்புகொள் பார்த்திவன்
சேது பதிகடஞ் செங்கோற் சீர்மை
நீதியோ டென்று நில்வுறச் செய்வோன்
பூக்கொளே ரம்பனாய்ப் பொருந்தலிற் புவியோர்
மாக்கொண்மன் னிபமுக வானவ னெனவுந்
தெய்வப் பிடியொடு சேர்தலிற் றேவர்கட்
குய்வைத் தருவே லுத்தம னெனவு
மின்னார் பயோதர மேவலில் விண்மிளிர்
பொன்னா டளிக்கும் புரந்தர னெனவு
மம்புய மேவி யமர்தலி னுலகெலா
மும்பரும் வியக்க வுதவுவோ னெனவு
மீகை யுடையனா யிருத்தலிற் றிருவொடு
மோகையுற் றுறைதரு முபேந்திர னெனவும்
புலவர்கள் கவிகளாற் புனைந்தேத் தெடுப்ப
நலமலி வாழ்வினா னண்ணு நரேந்திரன்
பரிதிகள் பலவெண் பாற்கட லுதித்தாங்
கரிமூரல் செந்தா மரையலர்ந் தொளிரும்
பூம்புனற் பொய்கையும் புதுமணம் பரப்புந்
தேம்பழச் சோலையுஞ் செறிந்துசூழ்ந் திலங்கிப்
புகழ்தரு மிராம நாதபூம் புரத்திற்
றிகழ்தரு சேது பதியெனு மிராணி
பாச்சீர் பெற்றுயர் பருவத வர்த்தனி
நாச்சியார்க் கினிய நற்சகோ தரியு
மவஞா னந்தனை யகற்றிநல் லறிவுகொள்
சிவஞா னப்பெயர்த் தேவரும் புரிந்த
நற்றவப் பேற்றா னரலைசூழ் ஞாலத்

னூற்றொளிர் கின்ற வுயர்குணத் தூவோ
னேரிடந் தனக்கோ வுரியமா னேசரிப்
பாரிடந் தனக்கெலாம் பகருமா னேசபொன்
றெம்பமே றோர் புகலவெண் செல்வமு மெய்திச்
செம்மையி னோங்கிச் சிறந்திடுஞ் சீமான்
பொன்னுசா மிப்பெயர்ப் புரவலன் மகிழ்ந்து
நன்னய மோடு நவின்றன னாக
மூலமு முரையு முறைமுறை நோக்கி
பெலமேவ திருத்தி யெழுகா வெழுத்திற்
பதிப்பித் தளித்தனன் பரசிவ தலங்களுட்
கதிர்ப்பொடு மிரண்டுதன் கண்ணுறக் காட்டு
மீழநாட் டைச்சேர்ந் திலங்குபல் வளங்களுந்
தாழ்விலா தூற்றுத் தயங்கும்யாழ்ப் பாண
நகர்தனி னல்லூர் நாமமார் புரத்திற்
பகர்தரு சைவ பரம்பரைக் குலத்திற்
றோன்றிய கந்தவே டொல்லையிற் செய்த
வேன்றநற் றவத்தா லெழில்பெற வுதித்தோ
னியற்றமிழ்ப் பகுதியி னியல்பெலாந் தெள்ளி
நயத்தக வுணர்ந்த நற்றமிழ்க் குரிசி
லிருக்குற ளுரைமுதற் சிறந்தநூ லுரையெலாஞ்
சுருக்கமின் றறிந்த தூக்கில்பே ரறிவினோன்
கதிதரு சைவா கமங்களிற் கூறும்
பதிமுதன் முப்பொருட் பகுதியி னியல்பெலாஞ்
சங்கையொன் றின்றித் தவவிசே டத்தா
லங்கையி னெல்லிபோ லளவிட் டறிந்தோ
னரனடி யருச்சனை யன்றிமற் றொன்றுந்
திரமுறு பவநோய் தீர்த்திடா தெனவச்
சம்புவின் பூசனை தன்னைநா டோறு
நம்பிமெய் யன்பா னடாத்திடு நல்லோ
னயிட்டிகப் பிரம சாரிநன் னிலையிற்
றிபக்கற நிற்குஞ் சீர்மைபெற் றுடையோன்
சங்கர னடியவர் தமைச்சரண் பணிந்தே
யிங்கியான் செய்பணி யென்னென வியற்றுவோன்
சிவபிரான் மகிமையைச் சிவர்க டமக்குப்
பவமறப் போதனை பண்ணுபாக் கியத்தோன்
கிரியையா ஞானங் கிடைக்கும தன்றி

யுரியமெய்ம் முத்திக் குபாயமன் றென்றுஞ் *
சார்கே வலமுதற் சாற்றுமூ விடத்து *
மாருயிர் சிவனுக் கடிமைமெய் யென்றும் *
புகலுசிவா கமவாக் கியப்பொரு டன்னை *
யிகலறத் தேர்வுற் றிதயத் திருத்தினோன் *
கல்வியிற் காலங் கழித்தலீங் கிவல்கனோன் *
றல்வில குளத்தவ ரறைதர வமைந்தே *
யாறு முகனென வவனி *
கூறு மியற்பெயர் கொண்டநா வலனே. *

திரிசிரபுரம்,

மகா-ள-ள-ஸ்ரீ-மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரப்பிள்ளை

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

திருவளர் மார்பத் திருவளர் கோவுந் *
தாமரை வாழ்க்கைக் காமரு தேவு *
நண்ணுதற் கரிய கண்ணுதற் பெருமா *
னுமையொரு பாகத் தமைதரு நாளும் *
பெற்றும் விகாரஞ் சற்று மிலாதவ *
னொருவா வைந்தொழின் மருவா நின்றுந் *
தொழிலொன் றில்லா வெழிலொன் றொருவன் *
மண்ணுரு வாதி யெண்ணுரு வெட்டு *
மேவுரு வத்து வாவுரு வாறுஞ் *
சால்வைந் தொழிற்கு மூல மாகிய *
வொன்பா னுருவு மன்பான் மருவிபு *
முருவொன் றில்லான் கருவொன் றில்லான் *
முணிடு மலனாக் காணிடு மலனொன் *
றன்ன னுருவுற முன்ன முதல்வன் *
முத்தி விரும்புநர் பத்திமை யென்னும் *
பொருணயத் தமருங் கருணையெம் பெருமான் *
செந்தளி ரீன்ற பைந்துணர் கான்று *
கனிபல பழுத்து முனிவறப் பிலிற்று *
நறவுவட் டெடுத்துச் சுறவுழக் கெழி *

போருவப் பெய்த நீருவர்ப் பகற்றி *
யுயிர்மல மகற்றுஞ் செயிரகல் குரவர் *
தன்மை தெரிக்கு நன்மையிற் பொலியுந் *
தேமாம் பொழிலும் வாமாஞ் செறுவும் *
பொற்ப வுடுத்த கற்பமெண் ணிலதெரி *
குருந்துறை தெய்வப் பெருந்துறை மேவித் *
திருவுரு வென்னுங் குருவுருக் காட்டி *
யருடர நன்று மருடப நின்று *
துரியங் கடந்து பிரியம் படர்ந்த *
பேரா னந்த மாரா நின்ற *
வேதவூ ரெனவு நாதவூ ரெனவும் *
போதவூ ரெனவு மோதவூர் சீர்த்தி *
வாதவூ ரடிகள் வாய்மலர்ந் தருளிய *
திருக்கோவை யாரெனுந் தெய்வமா மறையைப் *
பழமறை தெரிந்த பாரத்து வாச *
நச்சினார்க் கினியர் நவின்றபே ருரையொடு *
கரலிகி தங்களிற் காண்பிழை மாற்றிச் *
சிரலிகி தம்போற் றிருந்துற வாற்றி *
யச்சிற் பதிப்பித் தமைதரத் தருகென் *
றிச்சகம் புகழு மிராசசூ ளாமணி *
நலந்தரு மிராம நாத புரத்தில் *
வலந்தரு செங்கோன் மாண்பி னடாத்தி *
யரசுவீற் றிருக்கு மன்னனற் குணமே *
விரசுமா மேரு விரைநறுங் கமல *
மாதுபதி யென்று வானவர் துணிபுற் *
றேதுபதி பற்ப லுயிர்க்குநல் லருட்கடல் *
கோதுபதி யாத குலசிந் தாமணி *
சேதுபதி ராணி திரைக்கடல் வரைப்பிற் *
றுன்னுமா ருயிர்க்கெலாந் தோன்றுதா யேயாய் *
மன்னுசீர்ப் பருப்பத வர்த்தனி நாச்சியார் *
தமக்கினி தாய சகோதரி யாரு *
நமக்கினி தாஞ்சிவ ஞானத் தேவரு *
மியற்றருந் தவத்தா விருநில மகிழவு *
மயற்றலை புகுத்தா வண்டமிழ் தழைபவுந் *
திகழ்தரு பற்பல சிவாலயம் விளங்கவும் *

புகழ்தரு தருமம் பொலிந்து முழங்கவு *
மறக்கடை யாவு மஞ்சியோட் டெடுக்கவும் *
பிறக்கடை ஞானப் பெருவிளை வோங்கவுங் *
கலிதரு நரகக் கடுங்கத வடைக்கவும் *
பொலிதரு மின்பப் புகவந் திறக்கவு *
முணருந் திறத்தர்க் கொளியா மொருவன் *
புணருந் திருவருள் போலவ தரித்தோ *
னற்புறத் தமிழோ டளாய்நறுஞ் சாந்தம் *
பொற்புறக் கமழும் பொதியமால் வரையா *
னணிபல கொழிக்கு மருந்தமிழ்ச் சுவைதெரீஇ *
மணிபல கொழிக்கும் வையைமா நதியான் *
கன்னலுங் கமுகுங் கதலியும் பலவுஞ் *
செந்நெலும் பொலியுஞ் செம்பிறன் னாட்டான் *
றன்னெயி லெனமேற் றலங்கொண் டுவக்கப் *
பொன்னெயி லோங்கும் புதுவைமா நகரா *
னினியெனல் பொய்மை யிதுவே மால்கொ *
டனியுரு வென்று சாற்றுவரம் பரியா *
னுற்றுள வொருகோட் டொன்றனை வணங்கி *
மற்றுள வெவையும் வணக்குமால் களிற்றான் *
கண்டுதிகர் மொழியார் கண்ணொடு காமர் *
வண்டுபடிந் தழைக்கும் வாகைமா லைகையான் *
றண்டார் புனைந்து தடஞ்சிலை குனிக்கு *
மண்டார் நடுங்க வதிர்தரு முரசான் *
மயலுக் கொடியா வருந்தவே னுயர்த்த *
கயலுக் கொடியாக் காவிக் கொடியான் *
றுப்புகு மான்றேர்த் தரணியொண் செங்கதிர் *
போய்ப்புகு மிடமெலாம் போய்ப்புகு மாணையான்
மேவிக் குடையான் விறல்கொடு தொடுக்குங் *
காவிக் குடையான் காவிக் குடையான் *
சோரர் மணிமுடி தேய்க்குந் தாளான் *
காரா ரிருநிதி காம தேனு *
கற்பகத் தையும்புறங் காணுங் கையான் *
பொற்பக மலர்ந்து பொலிதிரு மார்பா *
னொன்றல மேருவென் றுணாசெய்திண் டோளான் *
மன்றமற் றில்லா மதியெனு முகத்தா *
னருண்மடை திறந்தா லனையசெங் கண்ணான் *

பொருணயத் தெரிந்து புகக்கொளுஞ் செவியால்
கனவினுங் கடுஞ்சொற் கரைதலில் வாயா
னனவினுங் கனவினு நள்ளார் நடுங்க
விளைதரும் படிசிறி தெழுங்குறு மூரலான்
நகைக்குடி யிருந்து தழைக்கு மனத்தான்
வெள்ளிய நீறு விளங்குதிரு நுதலான்
வள்ளிய வதற்கலால் வணங்கா முடியான்
பயன்மர முள்ளூர்ப் பழுத்தற் றனன்
னயனுடை யான்க ணெண்ணிய செல்வமென்
றுன்றே றுரைத்த வதற்கொரு சான்றாய்த்
தோன்று நின்ற சுந்தரக் குரிசி
லொன்று போகிப் புள்ளிடை தப்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ரல்லர்நின் மாட்டென்
றறிதர மூன்னு ளொன்றே றுரைத்த
திவன்செய னோக்கி யெதிரது போற்றி
யன்றே யென்றுபே ரறிஞ ருவப்ப
நன்றே நாளு நடாத்திவரு வள்ள
லிலனென்னு மெவ்வ மெனுந்திருக் குறட்குப்
பலர்பல விதமாப் பகர்ந்தப ருரையு
ளிரப்பவ னிரக்கப் படுவோ னாகச்
சுரக்குங் கொடையே சொல்லின் முதற்று
லக்கொடை யிவன்பா லமைந்ததியல் பேயென்
றெக்கொடை வல்லரு மியம்பப் பொலிவோ
னருந்தமி ழாகர வாரிய முழுதும்
பெருந்தமி ழாமொழி பெயர்ப்பது குவித்தோ
னிகழே யாரொடுத் தியம்புவ வெலாந்தன்
புகழே யாக்கிய புண்ணிய மூர்த்தி
யரியமா நேச ரதிகா ரத்தைத்
தெரிய நடாத்தித் திகழ்புரு டோத்தமன்
மன்னு சாமிநன் மாதவச் சாமி
பொன்னு சாமிவேள் புகன்றன னுவ
வண்டமிழ்ச் செய்யுணு லாறும்வா யுரையுட
னொண்பது மாதன னொருதலை கொண்டா
னெழுத்தே யுமென் றியாவரு மகிழ

வழுத்தே யச்சில் வயக்கி முடித்தனன்
மன்னுகோ ணாசல மாகே தீச்சர
மென்னு மிரண்டு மிரண்டு கண்ணாகப்
பெற்றவீ ழத்திற் பிறங்கும்யாழ்ப் பாணத்
துற்றபல் வளனுக் குறையிட னாகிச்
சொல்லூர் கழனி சூழ்தரக் கொண்டு
செல்லூர் பொழிலாற் சேணுல களந்து
வில்லூர் மாட மிகக்கொடு பொலியு
நல்லூர் வாழ்க்கை நயந்தரு வதிநன்
கந்தவே டவத்திற் கருதரன் பான்முன்
வந்தவே ளென்ன வந்தவ தரித்தோ
னீற்றொடு கண்மணி நிறையப் பூண்பார்ப்
போற்றொடு பொலியும் புண்ணிய புருட
னவநெறி யாய வனைத்துங் களைந்து
சிவநெறி வளர்க்குந் திப்பிய குணத்த
னெழுத்துமுத லாக வியம்பிலக் கணமும்
வழுத்திலக் கியமும் வரம்புகண் டெழுந்தோன்
சமயம் விசேடந் தகுநிரு வாணமென்
றமையுமுத் தீக்கையு மடைவுறப் பெற்றோன்
சுமங்கல விசேடச் சுருதியா மூலா
கமங்களின் முப்பொருள் கருதுபே ரருளான்
யுத்தியி னமைத்துணர்ந் தோங்கநு பூதி
சித்தியுற் றமைந்த சிவசிந் தாமணி
கற்றுணர் புலவருட் களிக்கு
முற்றுண ராறு முகநா வலனே.

உ

சிவமயம்.

திரிசிரபுரம்

ம-௱-௱-ஸ்ரீ-மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரப்பிள்ளைமாணாக்கரும்

சிதம்பரச்செட்டியார் குமாரருமாகிய

தியாகராஜச்செட்டியார்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

பூமலி சந்தனப் பொழிலிடை யுலாவுந் *
தேமலி கருங்குழற் சிறுகுறு மடவார் *
மீமிசைத் தொடுத்த விலைழ்நற விருலை *
யிருள்குடித் தெழுந்து மருவுதங் காதலர் *
வரவு தகைந்த மாமதி யெனநினைந் *
தங்கைக் கவணுற் றவிர்கதிர் மணியாற் *
றுக்குறச் சிதையா மீக்கிளர் புலமையோர் *
றனிவருத் துறுநர்க்கு நன்கு புரிந்தாங் *
கிழுமென வொழுக்குஞ் செழுமது வொழுக்கந் *
தம்முள மகலாத் தலைவர்தோ டழுவு *
மாவலொடு புரியுங் காவலை யோவ *
விளைவுநீஇ யியற்றிய வுளைவுறு பகைபெறப் *
பளிக்கறை வகுத்த வொளிக்கறைக் குழிப்பெய் *
தடுகரி மருப்பி னதிர்வுற வளைத்த *
பைந்தினை யிடியிற் பாய்தரத் திரட்டிக் *
கடவு ளமுதமுங் கைப்பவார்ந் துவக்கும் *
பொதியப் பொருப்பிற் பொலிந்தினி திருக்குந் *
தெய்வப் பெருமைச் சைவமா முனிவர *
னன்புளம் பெருக வின்புட னளித்த *
செந்தமிழ்க் கன்னியைச் செவிலிபோல் வளர்க்கு *
மங்கலப் பாண்டி வளநா டதனுள் *
விண்ணா சளிக்கும் பண்ணவர் பெருமான் *
றன்பகை மறையிடற் றந்தபகை நினைந்தென *
வளநெழ வளக்க ரார்புனல் பருகி *
யுவர்கழித் தினிய வுதக மாக்கிப் *

பெருநிலஞ் செழிக்கப் பிழையறப் பெய்கென்
றுணைபா ரெழுகு மாணம ரொழிலினை
யேவுபே ருதவினை யினிதுளத் துன்னு
வெதிர்செயுங் கைம்மா றேய்ப்ப வான்புகுந்
தன்னவ னமர்தரு மணிவசந் தத்தின்
முன்னர் மேவி முகநனி மலர்ந்து
தலைவளந் தின்கனி தளிர்க்கை தாங்குபு
நின்றுற விளங்குந் துன்றலர் பொதுளிய
தண்பொழி லுடுத்த வண்புனன் மருத
வளம்பொலிந் தொளிர்திரு வாத வூரிற்
காமாரி யன்றிக் கனவினுங் கருதா
வாமாத் தியரெனு மருமறைக் குலஞ்செய்
தொல்லைமா தவப்பயன் றோன்றிய தென்ன
வேத மாகம மிளிர்தலை யெடுப்பப்
பாதகப் பிடகம் படுகுழி வீழ
மெய்யுறு சைவம் விளங்கிநனி செழிப்பப்
பொய்யுறு பௌத்தம் போய்மாய்ந் தொளிப்ப
வுன்னுபே ரன்பா முருக்கொடு தோன்றிய
மன்னுபே ரருட்டிரு வாதவூ ரடிகள்
கதிர்மணி மாடங் கஞலொளி காலு
மதுரை யாளரி மருத்தன பாண்டியன்
முதலமைச் சுரிமை யுதவுறப் பெற்று
வதிதரு நாளில் வாசிகொள் வானச்
செழிய னேவச் சென்றிடு காலைக்
கரும்பவ சாகரங் கடந்தினி தேறும்
பெருந்துறை யெனுந்திருப் பெருந்துறை யதனில்
வண்டுண் மதுப்பெய் மலர்க்குருந் தடியிற்
றழைதரு சத்துவந் தழீஇக்கொண் டென்னப்
புண்ணிய நீறு சண்ணித்த மேனியுஞ்
சிரமு முரமுங் கரமுங் காதுங்
கண்டமும் பொலிதரு கண்டிகை யழகுங்
கொண்டொளி ரடியார் குழாங்கள் சூழ
நவிமலர்ந் தெறுசிவ ஞான போதங்
கரமலர் பொருந்தக் கனிதிரு வுளத்தொடு
பக்குவ நோக்கிப் பதநிழ லடியார்க்

ருதவுறு தன்னெறி யில்லையறி விக்கப்
பொருந்திய தென்னவீற் றிருந்தருள் பரசிவ
ஞான சற்குரு நாதனை முன்கண்
டெதிர்சென்று வணங்கி யிருகணீர் வார
நெஞ்சநெக் குருகி நிற்பவத் தேசிக
னுடல்பொரு ளாவிமூன் றுதகமொடு கவரா
வருட்டிரு நோக்கா லம்பரி சத்தாற்
பொருட்டிரு வாக்காற் பொலிவுற வருளி
யறிவுரு வாக்க வானந்த வெள்ளப்
பெருக்கிடை மூழ்கிப் பேருலகு வாழத்
திருவாய் மலர்ந்து செப்பிய சிற்சபைத்
தேவையே பாவுந் திருச்சிற் றம்பலக்
கோவையா ரென்னுங் குலவரு நூலை
நச்சினார்க் கினியராய் நலம்பல பயக்கு
நச்சினார்க் கினியர் நவையறச் செய்த
செறிசுவை யுரையொடு தேர்ந்துணர் வோர்க
ளாரண முணர்பய னாகம முணர்பயன்
சீரண வியயல் செழுங்கலை யுணர்பயன்
யாவு மெளிதி னினிதுணர்ந் தடையப்
பாவுறு மச்சிற் பதித்துத் தருகெனப்
பளிங்கு படுத்த பன்மலர் வாவியைக்
கயவாய்ச் செங்கட் கவையடிக் கவரி
கன்றுள்ளிப் பொழிந்த துஞ்சுவைத் தீம்பால்
பாய்ந்து பெருகலிற் பயோததி யென்று
முதனிடை யாட வவாவிப் புக்குத்
தாமரை நாளத் தனாதர நிற்குங்
கறையடிப் புகர்முகக் கவுட்கடாக் களிற்றை
வாசுகி பிணித்த மந்தர மென்றும்
வெள்ளொளி விரிக்கும் வள்ளிதழ்க் கமலச்
செறிவினை யமுதத் திரள்வினை யென்றும்
பொற்றுறை பொதிந்த பொற்புடை மராளத்
தடமூலைச் சிற்றிடைத் தாக்கணங் கென்றுந்
திரையெறி மணியுஞ் செம்பொனு நிறைந்த
குடக்கூன் சங்கையுங் கோகன தத்தையும்
பெருநிதி யளிக்கு மிருநிதி யென்றுத்

தேவருண் மதித்துச் சேர்தரப் பொலிந்து *
பம்பவளஞ் சுரக்குஞ் செம்பிநன் னாடன் *
பீடுற வுயர்ந்த வாடகக் குன்றம் *
பல்வுருக் கொண்டு நிலவிய தென்னச் *
சேயொளி விரிக்குஞ் செப்பொன் மாடத் *
தொளிர்சா லியத்தின் மிளிர்தர மேவிக் *
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைப் பைந்தொடிக் *
குனிநுத னெடுங்கட் கொடியிடைக் கோதையர் *
நித்திலங் குயிற்றிய நத்தொளி யம்மனை *
செந்தளிர்க் கரங்கொடு தெய்வநன் னாட்டுக் *
கடவுள் வேழங் கவளமென் றுன்னித் *
துதிக்கை நீட்டத் துதைந்தினி தாடும் *
புனைவளஞ் செறியும் புதுவைமா நகரான் *
கனியினும் பாகினுங் கண்டினுந் தேனினு *
மினியதெள் ளமுதினு மினிக்குஞ் சுவைத்தமி *
ழேடெதி ரேற்ற பாடுறு நதியான் *
விற்கொடி கயற்கொடி புற்கொடி யிவைகட் *
காவிக் கொடியெனுங் காவிக் கொடியா *
னல்லெழி லிராம நாத புரமெனும் *
பதியாள் சேது பதிமகி ழிராணியார் *
தருமவா கரமாம் பருவத வர்த்தனி *
நாச்சியா ருடன்வரு நற்சகோ தரியும் [கு
பெறுபெரு நலனெலாம் பெயரொன்றின் விளக்கு
சிவஞானத் தேவருஞ் செய்தமா தவத்திற் *
புண்ணிய மென்னும் பொலிபயிர் தழைப்பக் *
கண்ணுறு பாவக் காஞ்சிரந் தருவிழச் *
செல்வ மென்னுஞ் செழுங்கிரி வளர *
வல்ல லென்னு மார்கலி வறப்ப *
வேதமி லறிஞ ரெண்ணில ராக *
வாதுல ரவனியி லரிய ராகச் *
சாந்தங் கருணை சார்தரு மன்பு *
வாய்ந்தநற் சீல மாண்புகழ் தேற்றம் *
வாய்மை யடக்க மலிதரு நீதி *
யின்னன குணமெலா மெழிலுறப் பாகக் *
கொடையொரு நல்லுருக் கொண்டு வந்ததென் *

திரும்புவி வியப்புத் திசைப்பத் தோன்றியோன் ✻
வளையாழி வாள்வில் வயங்குகரஞ் சுமந்து ✻
துளசீர் கொள்வனந் தலைதொடை தாங்கி ✻
மாயக் கலையொழித் தேய்பொற் கலைசூழீஇத் ✻
தாணுவை யேந்தித் தளர்பசு விடச்சூழீஇக் ✻
கான முவந்து கவினுற வாய்ந்து ✻
வானுறு புலவர் வழுத்தப் பெற்று ✻
மிளிர்தலின் வனச மென்மலர் வதியும் ✻
பொன்னுச் சாமியே யெனப்புல வோர்சொலப் ✻
பொன்னுச் சாமிப் பூம்பெயர் புனைந்த ✻
பூபதி யினிது புகன்றன னாக ✻
நன்றுநன் றென்று நனியுள மகிழ்ந்தே ✻
யுயர்பிர ணவப்பொரு ளொருதா னென்றே ✻
நன்றறி வுறுத்தக் கொன்றைமலர் முடித்த ✻
புராதனப் பெருமான் பொலிந்தினி தமரு ✻
மருக்கொள்பூஞ் சோலைத் திருக்கோ ணசலங் ✻
கருக்கோ தகற்றுந் திருக்கே தீச்சுர ✻
மென்னுமித் தலங்களைத் தன்னகத் தடக்கிய ✻
தென்னீழ நாட்டின் மன்னுயாழ்ப் பாணத்துப் ✻
பல்லூர் புகழு நல்லூர் வாணன் ✻
சந்தத முஞ்சிவ சிந்தனை யகலாக் ✻
கந்தவே டவத்தினில் வந்தவ தரித்தோன் ✻
றொல்காப் பியமுத னூலிலக் கணங்களு ✻
மொல்காப் பயன்றரும் பல்காப் பியங்களுந் ✻
தவநெறி காட்டுஞ் சிவபுரா ணங்களும் ✻
பதிபசு பாசப் பகுப்பினி துணர்த்துஞ் ✻
செய்தவர்க் கேயுறுஞ் சைவசாத் திரங்களு ✻
மையந் திரிபற வறிந்து தெளிந்து ✻
பெயரா வறிவிற் பெரியோ னாகி ✻
வீறுகொண் டுயர்ந்த வாறுமுக நாவலன் ✻
கரலிகி தங்களாற் காணுறு வழுக்களைத் ✻
தானடி யவர்க்கின் பருப்பப் ✻
பாவுறு மச்சிற் பதிப்பித் தனனே. ✻

ஏகாம்பரம்

ம-௱-௱-ஸ்ரீ, மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரம்பிள்ளை மாணாக்கராகிய

சோடசாவதானம்

சுப்பராயச்செட்டியார்

இயற்றிய

நேரிசையாசிரியப்பா.

மணிதிகழ் பஃறலை வாளரா வனந்த *
னணிதிகழ் செஞ்சூட் டதன்மிசைக் கிடக்குங் *
கடல்விளிம் புடுத்த நெடுநிலப் பரப்பின் *
மீமிசைப் போர்த்த விரியிருட் குப்பை *
பாம மார்கடற் பனிதிரை முகட்டெடு நீஇக் *
கதிர்வா ளோச்சுங் கனலொளிப் பரிதிக் *
கதிர்வகைத் தடைகுற் றடைக்கலம் புக்கெனத் *
துணங்கற னிவர்ந்த மணக்கமழ் பொதும்பர் *
புடைதவழ் பாண்டிப் பொருவினன் னாட்டிற் *
கடையுகத் தெழுந்த கார்க்குல மென்ன *
மகத்தெழு புகைக்குவால் வான்முகடு துவன்றி *
யிகப்பருஞ் சீற்றத் தெறுழ்வலி யொருத்தல் *
கனல்கொப் புளிக்குறுங் கண்களும் புளிப்பப் *
பனலுறந் திசைதொறும் படர்ந்து போர்ப்பப் *
புரிநூல் கிடந்து புரளு மார்பினர் *
திரிபினெய் வழாஅது சிருக்குவழி வாக்குஞ் *
சீர்சால் வாதவூர் செய்தவப் பேற்றாற் *
பேர்சா னான்மறைப் பிணக்கற வந்த *
மாதவர் குழாம்புகழ் வாதவூ ரடிக *
ளிருவகைப் பந்தத் திரையினா லெற்றுண் *
டடலரும் போதத் தடஞ்சுழி வாய்ப்பட் *
டொடிவில்வெம் பிறவிக் கடலிற் றுளைந்துளோ *
ரொன்றிரண் டிகந்த பொன்றலின் முத்தி *
வியன்கரை காணுபு நயன்றரு மின்பிற் *
றெற்றெனத் திளைத்துத் தேக்கெறிந் துவப்பக் *
குற்றமின் மதலையைக் கொடுத்தளித் தென்னப் *

பொருவா சகவிருட் புணர்ப்பினை யிரிக்குந்
திருவா சகமருள் செழுந்தவ மாமணி
செய்வதுந் தவிர்வதும் பெறுவது முறுவது
முய்வது மாய வொருநான் கிவற்று
ளுறுவதே பேரின் புறுதலா மென்ன
மாயிரு ஞால மேயமன் பதைக
ளகத்தடைத் துய்தரப் பகுத்துவந் தருளிய
திருச்சிற் றம்பலத் திருத்தகு கோவையா
ரரும்பொரு ளொருங்கும் பெரும்புவி மீது
கைத்தலத் தமர்தரு கழுமணி கடுத்து
வித்தக ருளத்தெளி விடுத்துக் கிடப்பத்
துள்ளரும் புலமைத் தலைமைசால் சிறப்பி
னச்சினார்க் கரணிகர் நச்சினார்க் கினிய
ரிலக்கண நெறியின் புலக்கணத் ததுவெனத்
திருவுளம் பற்றிய பொருவிலின் னுரையினை
யறுகாற் புள்ளின மறுகாத் துதைந்து
மடுத்துக் கனைத்துக் குமட்டிவெறி டுப்பப்
புரிமுறுக் கவிழ்ந்து நறுமது வாக்கு
மம்போ ருகவயல் வெம்போ ருகந்த
வணங்கவே டனது மனங்கவ லுறுத்தும்
பாசறை நிவர்ப்பப் பாசடைக் கொடிகடாய்
விழைதரு மின்சுவைக் கழைதலை வணக்கும்
பம்பிய வளஞ்சேர் செம்பிநன் னாடன்
சுனையொடு பொருதுந் திரையொலி சமழ்ப்பு
வதுவையின் முழக்கார் புதுவைநக ரளி
புங்கவர் குடைவான் கங்கையிற் றிடர்படத்
தேந்துகள் கொட்டும் பூந்துணர் பொதுளிய
சேகுறு வான்சினைச் செஞ்சாந்து செறிந்த
போகுயர் குடுமிப் பொதியப் பொருப்பன்
சுரிமுகச் சங்கினஞ் சூலுளைந் துயிர்த்த
விரிதிரை வெறிக்கும் வெண்மணிக் குலையினை
யிருகையுஞ் சிந்தி யெக்க ராக்கும்
பெருநதி வையைப் பீடுகெழு துறைவ
னன்றின ருளத்துத் துன்றுமச் சிறந்த
மேவிக் கதிர்க்குங் காவிக் கொடியினோன்

கலியுருப் பகற்றிக் கருதுயல் லுயிர்கட்
கோவற நிழற்றங் காவிக் கவிகையன்
றடமருப் பிருங்கவுட் கடவுள் யானை
விழையுமிவ் பிடியெனப் புழைக்கை நீட்ட
முழுமணி யினங்கல் முகிழ்க்குறும் பித்திகை
கெழுமிய மாடமீக் கிளர்தரு மரமியத்
திந்துநொந் துயிர்த்த பைந்தர ளம்போன்
மறுவில்வாண் முகத்திற் குறுவெயர் வரும்பச்
சில்வரிச் சிலம்பொலி யொல்லென வொலிப்பச்
சிறகிடை மறுகச் செறிகுழன் மடவியர்
நித்திலங் குயின்ற பொற்கழங் குந்தும்
பரவிய சீர்சா லிராம நாத
புரந்திகழ் வுறவருள் சுரந்து புரக்குஞ்
சேது பதியயிற் சேது பதித
லில்லறக் கிழமை பூண் டல்லலை மழுக்கு
மருந்ததிக் கற்பிற் பெருந்துதி யிராணி
நங்கையொடு வந்த வங்கனை தம்பாற்
பவஞா னந்தெறு பான்மையிற் படிந்த
சிவஞான தேவர் செய்தவச் சிறப்பான்
வலம்புரி பயந்த நலம்புரி முத்தின்
வந்தநன் புலமைச் செந்தமிழ்க் குரிசி
லிவ்வகைப் பகையு மெய்வகை யுயிர்கட்
கணுகா வண்ண நணுகா வளிக்கும்
பரவு பூண்ட வுரவதி காரன்
றெம்முனை யடுபோர்ச் சீற்றத் துப்பின்
வெம்முனை யவுணர் வெரின்கொடுத் திரியத்
திரிமருப் பிரலை செருமுகத் துகைக்குங்
கொற்றவைக் கரங்காங் கொற்றப் புயத்தினன்
கோத்திரை மிசைவேர் வீழ்த்தெழுந் தகன்ற
திசைதொறும் படர்ந்து செல்லிட மின்றிப்
பகைநிறத் தங்கட் புட்கரம் போர்த்துக்
கண்ணகன் ஞாலத் தண்ணிய கவியிரு
ளுண்ணென வொளிப்ப வெண்ணில வெறிக்கும்
புகழ்ப்படாம் போர்த்த தகைப்பெருஞ் செம்ம
றன்பா லேற்குநர் தம்பா லேற்ப

வரையாது கொடுக்கும் வள்ளன்மை கற்றோ *
னுரைசால் கலைபயி லுணர்ச்சியின் மிக்கோன் *
றன்னுறு பல்லறத் துறையிற் பிறழாப் *
பொன்னுச் சாமிப் புனைகழ னரேந்திரன் *
பெருகிய லச்சிற் றருகென வுரைப்பத் *
தோன்றிய பலரும் வேண்டிய வாறே *
வரைதலின் வலவரும் வல்லா ராகி *
நிரைதளர்ந் தயிர்த்து நெட்டுயிர்ப் பெறிய. *
மிக்குங் குறைந்தா முறழ்ந்தும் பிறழ்ந்துந் *
தொக்கபல் பிரதியின் றரிசொருங் ககற்றி *
யெளியரு மினிதுணர்ந் துளநனி வியப்பக் *
கனிவகத் தரும்பி நனிபெறப் பதித்தனன் *
முழுமணி குயின்றபொன் மௌலிக ளுரிஞ்சிப் *
பழுதறு பொற்றுகட் புழுதி படுப்ப *
நறுமணங் கமழுந் துறுமலர் சொரிந்து *
விண்ணவ ருச்சியி லண்ணிய கரங்கூய்க் *
கெழுமிய நிகேதனக் கேதீச் சுரமுந் *
தொழுதகை யடியவர் தொல்பவத் தொடக்கைக் *
காணு வகைசெய் கோணு சலமுந் *
தன்னிடை தழுவ மன்னிய சிறப்பாற் *
றுவரும் பழமறை மூவர்சொல் புனைந்த *
காழகிற் பொழிற்கு ழீழநன் னாட்டின் *
முகிறுழா மிலாங்கலி நகுமிட றமிழ்ந்த *
முற்றிய முப்புடை நெற்றிளங் கமுகின் *
படுகுலை சாய்த்துத் துடுமென வீழ்தலின் *
வானயாற் றகவயின் மீனின மொளிப்பக் *
கானிமிர்த் திளவரால் கடிதுதாய்த் திருநூ *
நீர்கால் யாத்த சீர்சால் படப்பை. *
புறந்தழீஇ யோங்கிச் சிறந்தநல் லூரன் *
சூர்முத றடிந்த கூர்நுதி வேற்கைக் *
கந்தவேட் கன்பார் கந்தவேட் பெயரியோன் *
சொல்லியன் றவத்தாற் கல்வியங் குரித்தென *
விடலரும் பல்லுயிர் மடனற வந்தோ *
னிலக்கண விலக்கிய தருக்கவே தாந்தப் *
பெருக்கமுற் றுணர்ந்த ஆறிறு பெரியோன் *

பதிபசு பாசப் பகுப்பிற் றூமெனப் *
பொதிவுறத் தெரித்துப் பொருவிலின் புறத்துஞ் *
சைவசித் தாந்த மெய்வரு பனுவன் *
முற்றொருங் குணர்ந்தருள் பொத்திய வசத்தாற் *
சிவமே பொருளெனத் தேர்ந்த புந்தியோ *
னவநிதி சமழ்ப்ப நல்கருட் கொண்டயினேன் *
கதுவிய புலமைக் கதிர்ப்பின் *
முதுபுக ழாறு முகநா வலனே. *

திரிசிரபுரம்,

முத்துச்சாமிப்பிள்ளைகுமாரர்

முருகையப்பிள்ளை

இயற்றிய

ஆசிரியவிருத்தம்.

டிருவளர் மலர்க்கணையன் மாற்கரிய திருமுடியு மலரடியும் வையை நதியின் *
வான்கரைமண் ணளிதுணர மலியன்பு வாய்ந்ததிருவாதவூ ரடிக ளருள்செய்
திருவளர் திருக்கோவை யார்நச்சி னார்க்கினியர் செய்தவுரைசேர்ந்தெழுதவுஞ்
சிற்றம்ப லத்தந்தை தினையினங் கரமலர் சிவக்குமென் றனுமுருகவே *
ளுருவளரு மோருரு வெடுத்துள முவந்துதற் குரியதிரு நாம மேதோண் [ய்வந்
பேர்நலூர் தனில்வந்த தெனவாறு முகனென்னு மொண்பெயர் சுமந்துதெ
தருவளர் கரத்தினு லருளன்பு முதலாய சற்குணஞ் சார்ந்த பொன்னுச் *
சாமிவேள் கொண்டாட வடியர்கட் கின்பந் தழைப்பவச் சிட்டனனரோ.

சூசிபத்திரம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோவையார்

என்கின்ற

திருச்சிற்றம்பலக்கோவையார்

மூலமும் உரையும்.

விநாயகவணக்கம்.

எண்ணிறைந்ததில்லை யெழுகோபுரந்திகழக் *
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே-நண்ணியசீர்த் *
தேனூறுசெஞ்சொற் றிருக்கோவையென்கின்ற *
நானூறுமென்மனத்தே நல்கு. *

நூற்சிறப்பு.

ஆரணங்காணென்பரந்தணர்யோகியராகமத்தின் *
காரணங்காணென்பர்காமுகர்காமநன்னூலதென்ப *
ரேரணங்காணென்பரெண்ண * ரெழுத்தென்பரின்புலவோர் *
சீரணங்காயசிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே. *

இவ்விரண்டு செய்யுளும்
பிற்காலத்தான்றோராற் செய்யப்பட்டன.

அதிகாரவரலாறு.

இயற்கைபாங்க னிடந்தலைமதியுட, னிருவருமுளவழி யவன்
வரவுணர்தன், முன்னுறவுணர்தல் குறையுறவுணர்த, லன்னிலைநா
ண நரிங்கநாடன், மடல்குறைநயப்பு வழிச்சேட்படுத்த, லிடமி
ருபகற்குறி யிரவுக்குறியோ, டொருவழித்தணத்த லுடல்கொண்

---

* எண்ணென்பது தருக்கநூலுக்கும், எழுத்தென்பது இலக்கணநூலுக்
கும்பெயர். அது "எண்ணுமெழுத் துங்கண் ணிலையாய்ந்தித் நூற்பயனைக்- க
ண்ணுககாண பார்நற் கதி. காண்டலனு மானங் கதையருத்தா பத்தியிவை-யீ
ண்டிசைந்த வெண்ணெனவே யெண். வழுப்பதந்தை வாக்கினுக்கு மாற்றிவர
மாக்கு-மெழுத்தெழுவா யைந்து மெழுத்து.,, என்னும் பரமத திமிரபானுத்
திருக்குறள்களாலுணர்க. வரணமெனினும் எண்ணெனினும் அளவையென்னும்
தருக்கமெனினும் நியாயமெனினுமொக்கும். வடநூலாரும் தருக்கம் வியாகர
ணமென்னும இரண்டையுமே மக்கட்கிருகண்ணெனக்கூறுமாறுகேட்டுணர்க.

டேகல், வரைவுமுடுக்கம் வரைபொருட்பிரிதல், மணஞ்சிறப்போதல் வார்புவிகாவ, விணங்கலர்ப்பொருத்தல் வேந்தற்குற்றுழி, பொருள்வயிற்பிரிதல் பரத்தையிற்பிரிதலென், றருள்வயிற்சிறந்த வகத்திணை மருங்கி, னிருளறு நிகழ்ச்சி யிவையெனமொழிப.

இதன்பொருள்.

இயற்கைப்புணர்ச்சி- பாங்கற்கூட்டம்- இடந்தலைப்பாடு- மதியுடன்படுத்தல்-இருவருமுளவழி யவன்வரவுணர்தல்- முன்னுறவுணர்தல்-குறையுறவுணர்தல்-நாணநாட்டம்-நடுங்கநாட்டம்-மடல்-குறைநயப்பித்தல்-சேட்படை-பகற்குறி-இரவுக்குறி-ஒருவழித்தணத்தல்-உடன்போக்கு- வரைவுமுடுக்கம்- வரைபொருட்பிரிதல்-மணஞ்சிறப்புரைத்தல்- ஓதற்பிரிதல்- காவற்பிரிதல்- பகைதணிவினைப்பிரிதல்-வேந்தற்குற்றுழிப்பிரிதல்-பொருள்வயிற்பிரிதல்-பரத்தையிற்பிரிதல் எனவிவ்விருபத்தைந்தும் இந்நூற்குக் கிளவிக்கொத்தெனப்படுமதிகாரங்களாமென்றுகூறுவர் அகத்திணையிலக்கணமுணர்ந்தோரென்றவாறு. அவற்றுள்,—

இயற்கைப்புணர்ச்சி.

இயற்கைப்புணர்ச்சியென்பது- பொருளதிகாரத்திற் கூறப்பட்ட தலைமகனும், தலைமகளும், அவ்வாறொரு பொழிலிடத்தெதிர்ப்பட்டுத் தெய்வமிடைநிற்பப் பான்மை வழியோடி ஓராவிற்கிருகோடுதோன்றினாற்போலத் தம்முளொத்தவன்பினராய் அவ்விருவரொத்தார் தம்முட்டாமே கூடுங்கூட்டம்.

அது நிகழுமாறு- காட்சியையந் தெளிதனயப்பே, யுட்கோடெய்வந் துணிதல்கைக்கிளையொடு, கலவியுரைத்த லிருவயினொத்தல், கிளவிவேட்ட னலம்புனைந்துரைத்தல், பிரிவுணர்த்தலொடு பருவரலறித, லருட்குணமுரைத்த லணிமைகூற, லாடிடத்துய்த்த லருமையறிதல், பாங்கியையறித லெனவீரொன்பா, னீங்காவியற்கை நெறியெனமொழிப.

(இ-ள்.) காட்சி-ஐயம்- தெளிதல்-நயப்பு- உட்கோள்- தெய்வத்தைமகிழ்தல்-புணர்ச்சிதுணிதல்- கலவியுரைத்தல்- இருவயினொத்தல்-கிளவிவேட்டல்-நலம்புனைந்துரைத்தல்- பிரிவுணர்த்தல்-பருவரலறிதல்-அருட்குணமுரைத்தல்- இடமணித்துக்கூறிவற்புறுத்தல்-ஆடிடத்துய்த்தல்-அருமையறிதல்-பாங்கியையறிதல் என விவைபதினெட்டும் இயற்கைப்புணர்ச்சியாம். எ-று. அவற்றுள்,—

காட்சி.

காட்சியென்பது-தலைமகளைத் தலைமகன் கண்ணுற்று இஃதொரு வியப்பென்னென்றல். அதற்குச்செய்யுள்.

திருவளர்தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக் *
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள் கொண்டோங்குதெய்வ
மருவளர்மாலையோர்வல்லியினொல்கியனநடைவாய்ந் *
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே(௧)

மதிவாணுதல் வளர்வஞ்சியைக்
கதிர்வேலவன் கண்ணுற்றது.

திருவாதவூரடிகள் இத்திருக்கோவை யை
என்னுதலியெடுத்துக்கொண்டாரோவெனின்,

அறிவோனறிவில தெனவிரண்டாகு *
நெறியினிற்றொகைபெற்ற நிலப்படவிரிந்த *
மண்புனலனல்வளி மாவிசும்பெனாஅ *
வெண்மதிசெஞ்சுடர் வேட்போனெனாஅ *
வெண்வகைநிலைஇய வெவ்வகைப்பொருளுந் *
தோற்றநிலையிறுதி கட்டுவீடென்னு *
மாற்றருஞ்செயல்வழி மாறுதசெயப்பட்டு *
வெருவாவுள்ளத்து வேட்போன்றன்செய் *
யிருவினைப்பயன்றுய்த்து மும்மலனொரீஇப் *
பொருவறுசிவகதி பொற்பினிற்பொருந்தவு *
மேனையனைத்தங் குணநிலைபுணரவு *
நிலைஇயவ்வயி னிமித்தமாகி *
யலகுதவிர்த்த பலவகையண்டமு *
மின்னுமிழ்வெயிலின் றன்னணுப்புணர்த்து *
தன்னுளடக்கவுந் தானவற்றுள்ளு *
நுண்ணுணர்வாயு நோக்கருநுழைபிற் *
சிறுமைபெருமைக் கிருவரம்பெய்திப் *
போக்கும்வரவும் புணர்வுமின்றி *
யாக்கமுங்கேடு மாதியுமந்தமு *
நடுவுமிகந்து ஞானத்திரளா *
யடியுமுடியு மளவாதயர்ந்து *
நெடியோனான்முக னான்மறைபோற்ற *
வெரிசுடர்க்கண்விழி னீங்காதுவிரிசுடர் *

வெப்பமும்விளக்கமு மொப்பவோர்பொழுதினிற் *
றப்பறவியற்றவ தெனவெப்பொருளுங் *
காண்டலுமியற்றலு மியல்பாமாண்டுடன் *
றன்னினீங்காது தானவின்றுவிளங்கிய *
வெண்டெண்கலையுஞ் சிலம்புஞ்சிலம்படிப் *
பண்ணமைத்தபொழிப் பார்ப்பதிகாண *
வையாறதன்மிசை யெட்டுத்தலையிட்ட *
மையிலவான்கலை மெய்யுடன்பொருந்தித் *
தில்லைமூதூர்ப் பொதுவினிற்றோன்றி *
யெல்லையிலானந்த நடம்புரிகின்ற *
பரமகாரணன் றிருவருளதனாற் *
றிருவாதவூர்மகிழ் செழுமறைமுனிவர் *
ஐம்பொறிகையிகந் தறிவாயறியாச் *
செம்புலச்செல்வ ராயினராதலி *
னறிவனூற்பொருளு மூலநூல்வழக்குமென *
விருபொருளுமுதலி யெடுத்துக்கொண்டனர் *
ஆங்கவ் விரண்டனுள்
ஆகமநூல்வழியி னுதலியஞான *
போதநன்பொருளினை யுணர்த்துதற்கரி *
துலகநூல்வழியி னுதலியபொருளனு *
மலகிறீம்பாற் பரவைக்கண்ணெம் *
புலனனுங்கொள்கலன் முகந்தவகைசிறி *
துலையாமரபி னுரைக்கற்பாற்று. *

அஃதியாதோவெனின், எழுவாய்க்கிடந்தபாட்டின்பொருளுரைக்கவேவிளங்கும். அஃதேல், இப்பாட்டென்னுதலிற்றோவெனின், அறம் பொருள் இன்பம் வீடென்னு நான்குபொருளினும்,இன்பத்தை நுதலி இத்திருக்கோவையின்கணுரைக்கின்ற களவியற்பொருளினது பொழிப்பிலக்கணத்தையுப், அதற்குமுட்பாகிய கைக்கிளைத்திணையின்கண் முதற்கிடந்த காட்சியென்னும் ஒருதலைக்காமத்திணையும், உடனிலைச்சிலேடையாக வுணர்த்துதனுதலிற்று.

திருவளர்தாமரை—போன்றொளிர்கின்றதே.
மதிவாணுதல்—கண்ணுற்றது. *

இதன்பொருள்: திருவளருந் தாமரைப்பூவினையும், அழகுவளரு நீலப்பூக்களையும், ஈசர் தில்லைவரைப்பின்கணுண்டாகிய பூங்குமிழினது நிறம்வளரும்பூவினையும், கோங்கரும்புகளையும், செவ்விக்காந்தட்பூக்களையும் உறுப்பாகக்கொண்டு, மேம்பட்ட தெய்வமணம்வளரும்மாலை ஒருவல்லிபோலநுடங்கி, அன்னத்தினடைபோலநடைவாய்ந்து, வடிவுவளருங்காமனது வெற்றிக்கொடிபோன்று விளங்காநின்றது; என்னவியப்போ! என்றவாறு.

திருவென்பது-கண்டாரால் விரும்பப்படுந் தன்மைநோக்கம். ஏ-று திருமகடங்குந் தாமரையெனினுமமையும். பூங்குமிழென்பது முதலாகிய தன்பொருட்கேற்ற அடையடுத்துநிற்றதோராகுபெயர். ஈசர்தில்லையென்பதனை எல்லாவற்றோடுங்கூட்டுக. பலநிலங்கட்குமுரிய பூக்களைக்கூறியவதனால், நிலமயக்கங்கூறியவாறாயிற்று. ஆகவே, பலநிலங்களினுஞ்சென்று நுகர்க்குமின்பமெல்லாந் தில்லையில்வாழ்வார் ஆண்டிருந்தே நுகர்ப்பரென்பதுபோதரும். போதர, இம்மையின்பத்திற்குத் தில்லையேகாரணமென்பது கூறியவாறாயிற்று. ஆகவே, ஈசர்தில்லையென்றதனான், மறுமையின்பத்திற்குங்காரணமாதல் சொல்லாமையேவிளங்கும். கொப்பளாதலாற் செவ்வெண்ணின்றொகைதொக்குநின்றது. ஓங்குமாலையெனவியையும். தெய்வமருவளர்மாலையென்றதனால், தாமரைமுதலாயினவற்றானியன்றபிறமாலையோடு இதற்குவேற்றுமைகூறியவாறாம். வாய்ந்தென்பது நடையின்வினையாகலாற் சினைவினைப்பாற்பட்டு முதல்வினையோடுமுடிந்தது. உருவளர்காமன்றன் வென்றிக்கொடியென்றது நுதல்விழிக்குத்தோற்று உருவிழப்பதன்முன் மடியாவாணைபெய்திற்றுயர்த்தகொடியை. அனநடைவாய்ந்தென்பதற்கு அவ்வவ்வியல்புவாய்ப்பப் பெற்றெனினுமமையும்.

திருவென்பது கண்டாரால்விரும்பப்படுந் தன்மைநோக்கமென்றது அழகு. இஃதென்சொல்லியவாறோவெனில், யாவனொருவன் யாதொருபொருளைக்கண்டானோ அக்கண்டவற்கு அப்பொருண்மேற்சென்ற விருப்பத்தோடேகூடியவழகு. அதன்மேலவற்கு விருப்பஞ்சேறல் அதனிற்சிறந்தவுருவும் நலனும் ஒளியுமெவ்வகையானும் பிறிதொன்றற்கில்லாமையால். திருவென்றது அழகுக்கேபெயராயிற்று. அங்ஙனமாயின் இதுசெய்யுளினன்றி வழக்கினும்வருவதுண்டோவெனில், உண்டு, கோயிலைத்திருக்கோயிலென்றும், கோயில்வாயிலைத்திருவாயிலென்றும், அலகை

த்திருவலகென்றும், பாதுகையைத்திருவடிநிலையென்றும், வழங்கும் இத்தொடக்கத்தனவெல்லாந் திருமகளை நோக்கியெழுந்தனவல்ல. அது கண்டவனுடைய விருப்பத்தானேயெழுந்தது. ஆதலானுந் திருவென்பது அழகென்றேயறிக. அஃதாற்றிருவென்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மைநோக்கமே. அல்லதூஉந் தான்கண்டவடிவின் பெருமையைப் பாராட்டுவானாதலான், ஒருத்தியிருந்த தவிசை இவனுக்குமுகமாகக்கூறுதல் வழுவாம். ஆதலாற் றான்கண்டவடிவினுயர்ச்சியையே கூறினானெனக்கொள்க.

வளரென்பதற்கு வளருமென்றும்மைகொடுத்து உரைவாய்பாடுகாட்டியதெற்றிற்கு மேலாலோ வளரக்கடவதென்பது கடா. அதற்குவிடை-வளர்ந்ததாமரை வளராநின்றதாமரையென்றுகழிகாலத்தையும் நிகழ்காலத்தையுங்கூறாது, மேல்வருங்காலத்தைக் கூறவேண்டியது. கழிகாலத்தைக்கூறினாற் கழிந்ததனைக்கூறிற்றாம். நிகழ்காலத்தைக்கூறினால் முன்னும்பின்னுமின்றி இப்பொழுதுள்ளதனைக்கூறிற்றாம். ஆதலான் வளருமென்று வருங்காலங்கூறியவாறன்று. மூன்றுகாலத்திற்கும் பொதுவாகிய சொற்றோன்றவேகூறினார். ஆயின் உம்மைச்சொன் மூன்றுகாலத்திற்கும் பொதுவாகிவந்தவாறென்னை?- இது செய்யுட்சொல்லாதலால்வந்தது. செய்யுளினொழிய வழக்கினும் வருவதுண்டோவெனின், உண்டு. அது ஞாயிறு திங்களியங்கும் -யாறொழுகும்- மலைநிற்கும் என்றற்றொடக்கத்தனவற்றானறிக. அன்றியும், "முந்நிலைக் காலமுந்தோன்று மியற்கை- யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து- மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்." என்றாராகலின், உம்மைச்சொல் வருங்காலத்தையே காட்டாது மூன்றுகாலத்திற்கும் பொதுவாய்நிற்குமென்றேயறிக.

இனித்திருமகடங்குந் தாமரையெனினுமமையுமென்று அமைவுரைத்ததென்னை இதனையுவமையாக்கக்குறையென்னையெனின், திருமகளாலே தாமரையுயர்ந்ததாம். தாமரையினது சிறப்புக்கூறிற்றில்லையாம். என்னை, எல்லாராலும்விரும்பப்பட்ட அழகு அவட்குண்டாகையாலே திருமகளென்று பெயராயிற்று அங்ஙனம் பெருமையுடையவளும் இதன்சிறப்புநோக்கியேயிதனிலிருந்தாளல்லது தன்னாலேயிதற்குச் சிறப்புப்பெறவேண்டியிருந்தாளல்லள், ஆதலாற் றாமரைக்கொத்ததும் மிக்கதுமில்லை. அங்ஙனம் பெருமையுடையவளாலும்விரும்பப்பட்டதாதலால், திருவென்

பது கண்டாரால்விரும்பப்படுந்தன்மை நோக்கமென்பதுபெற்றும்.

இனித்திருவளர்தாமரை சீர்வளர்காவியென்றனபோல இதனையுங் குருவளர் குமிழென்னாது பூங்குமிழென்றதெற்றிற்கெனின், முன்னும்பின்னும் வருகின்ற எண்ணிற் பூவைநோக்கியன்று, ஈண்டுச்செய்யுளின்பத்தைநோக்கியும் இதற்காகுபெயரை நோக்கியுமெனவறிக. அஃதென்போலவெனின், "தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பின்று-முளிமுதற் பொதுளிய முட்புறப்பிடவமும்" என்பதுபோல. கோங்கென இதனையொழிந்த நான்கிற்கு மடைகொடுத்து இதற்கடைகொடாதது பாலைநிலஞ் சொல்லுதனோக்கி, என்னை, பாலைக்குநிலமின்றாதலான். ஆயின் மற்றைய நிலம்போலப் பாலைக்கு நிலமின்மையாற் கூறினாராகின்றார் மகளிர்க்குறுப்பிற்சிறந்தவுறுப்பாகிய முலைக்குவமையாகப் புணர்க்கப்பட்ட கோங்கிற்கு அடைகொடுக்கக்கடவதன்றோவெனின், அடைகொடுப்பிற் பிறவுறுப்புக்களுடன் இதனையுமொப்பித்ததாம். ஆதலான் இதற்கடைகொடாமையே முலைக்கேற்றத்தை விளக்கிநின்றது. அஃது முற்கூறியவகையில் திருக்கோயில் திருவாயில் திருவலகு என்றவற்றிற்கு நாயகராகிய நாயனாரைத் திருநாயனாரென்னாததுபோலவெனக்கொள்க.

இனியுடனிலைச் சிலேடையாவது ஒருபாட்டிரண்டுவகைபாற்பொருள்கொண்டுநிற்பது. அவ்விரண்டனுள்ளும் இத்திருக்கோவையின்கணுரைக்கின்றபொருளாவது காமனதுவென்றிக்கொடிபோன்றுவிளங்கி அன்னநடைத்தாய்த் தாமரையே நெய்தலே குமிழே கோங்கே காந்தளே யென்றிப்பூக்களாற் றொடுக்கப்பட்டோங்குந் தெய்வமருவளர்மாலையின் வரலாறு விரித்துரைக்கப்படுகின்றதென்பது. என்றது என்சொல்லியவாறோவெனின், தாமரை மருதநிலத்துப்பூவாதலான் மருதமும், நெய்தல் நெய்தனிலத்துப்பூவாதலான் நெய்தலும், குமிழ் முல்லைநிலத்துப்பூவாதலான் முல்லையும், கோங்குபாலைநிலத்துப் பூவாதலாற் பாலையும், காந்தள் குறிஞ்சிநிலத்துப்பூவாதலாற் குறிஞ்சியுமென இவ்வைந்துபூவினாலும் ஐந்திணையுஞ்சுட்டினார். ஆதலாற் றொடுத்துக்கொண்ட அகத்தமிழின்பெருமைகூறாது தில்லைநகரின்பெருமைகூறினார், நிலமயக்கங்கூறுதலான். அற்றன்று அஃதேகூறினார். என்னை, சொல்லின் முடிவினப்பொருண்முடித்தலென்னுந் தந்திரவுத்தியாற் புணர்தலும் புணர்தனிமித்தமுமாகிய குறிஞ்சியேகூறினார். என்

னை, ஸ்டபங்காந்தளென்று குறிஞ்சிக்குரிய பூவிலே முடித்தலான். அன்றியும் பூவினானே நிலமுணர்த்திடவாறு இத்திருக்கோவையில் கண்மூன்றனர்க்“குறப்பாவைநின்குழல்வேங்கையம்போதொடு கோங்கம்விராய்,, என்னும்பாட்டினுட்கண்டுகொள்க. அல்லதூஉஞ்சினையைக்கூற முதலறிகிளவியென்னு மாகுபெயரானுமாம். ஆயின் குறிஞ்சியே கூறவமையாதோ நிலமயக்கங்கூறவேண்டியது எற்றிற்கெனின்; ஓரிடத்தொரு கலியாணமுண்டானால் எல்லாரிடத்துமுண்டாகிய ஆபரணங்களெல்லாம் அவ்விடத்துக் கூடி அக்கலியாணத்தைச் சிறப்பித்தாற்போலப் பலநிலங்களும் இக்குறிஞ்சியையே சிறப்பித்து நின்றன் உருவளர்காமன்றன்வென்றிக்கொடியென்றமையின், அன்பினானே நிகழ்ந்தகாமப்பொருளைச்சுட்டினார். யாருங்கேட்போரின்றித் தன்னெஞ்சிற்குச் சொன்னமையின், கந்தருவவொழுக்கத்தையேயொத்த களவொழுக்கத்தையேசுட்டினார். ஈசர்தில்லையென்றமையின், வீடுபேற்றின் பயத்ததெனச்சுட்டினார்.

களவொழுக்கமென்னும் பெயர்பெற்று வீடுபேற்றின் பயத்ததாய் அன்பினானிகழ்ந்த காமப்பொருணுதலிக் கந்தருவவொழுக்கத்தோடொத்துக்காமனதுவென்றிக்கொடிபோன்ற ஐந்திணையின்கண்ணும் வென்று விளங்காநின்ற கடிமலர்மாலையின்வரலாறு இத்திருக்கோவையின்கணுரைக்கப்படுகின்றதெவ்வாறு. களவொழுக்கத்தினை ஓர் மாலையாகவுட்கொண்டு உருவகவாய்பாட்டானுணர்த்தினானென்பது. இன்பத்தை நுதலியதென்றாராயினும், இன்பந்தலைக்கீடாக அறம் பொருள் இன்பம் வீடென நான்குபொருளையுநுதலிற்று. அவற்றுள் வீடுநுதலியவாறு மேலே சொன்னோம். ஒழிந்தமூன்றனையும் நுதலியவாறென்னையெனின், ஈண்டுத்தலைமகனுந் தலைமகளுமென்றுநாட்டினார். இவனுக்கு ஆண்குழுவினுள் மிக்காருமொப்பாருமில்லை இழிந்தாரல்லது. இவளுமன்னள். இவர் ஒருவர்கண்ணொருவர் இன்றியமையாத அன்புடையராதலான், இவர்கண்ணே அம்மூன்றுமுளவாம். இவ்வொழுக்கத்தினது சுவைமிகுதிகேட்கவே விழைவுவிடுத்தவிழுமியோருள்ளமும் விழைவின்கட்டாழுமாதலின், காமனதுவென்றிக்கொடியெனவே வென்றிகொள்ளாநின்றதென்றுமென்பது. முதற்கட்கிடந்த இப்பாட்டுக் காட்சியின்மேற்று. இப்பாட்டால் வேட்கை இவன்கணுண்டாயவாறென்னைபெறுமாறெனின், உருவளர் காமன்றன்வென்றிக்கொடியென்றமையிற் பெற்றாம்.

உவமைமிகுதியாற் சொன்னனாகலின், இப்பாட்டிற்கு மெய்ப்பாடு-உவகை. உவகையாவது சிருங்காரம், அது காமப்பொருண் முதலாயவின்பத்தின் மேற்று உவகையென்பது காரணக்குறி, உவப்பித்தலினுவகையாயிற்று. உவந்தநெஞ்சினனாய் அவளையோர் தெய்வப் பூமாலையாகவுருவகங்கொண்டு காமனது வெற்றிக்கொடியோடுவமித்துச்சொன்னானென்பது. என்னை மாலையாமாறு, "பூப்புனை மாலையு மாலைபுனை மாதருந், தோற்புனை வின்னாண் டொடர்கைக் கட்டியுங், கோச்சேரன் பெயருங் கோதையென் றாகும்.," என்பதனாற் பெண்ணுக்கு மாலையென்றுபெயராயிற்று. ஆயின் யாரொருவரையுங் கேசாதிபாதமாதல் பாதாதிகேசமாதல் வருணிக்கவேண்டும். அவற்றுள், இது கேசாதிபாதமாகவருணிக்கப்பட்டது. என்னை, திருவளர்தாமரையென்று மு முதலாகவெடுத்துக்கொண்டு அன்னநடையென்றுபாதத்திலேமுடித்தவான். ஆயின், இதில்நடைகண்டானாயின் மேல் ஐயநிலையுணர்த்தல் வழுவாமெனின், இவன் நடைகண்டானல்லன், இம்மாலை நடக்குமாயின் அன்னநடையையொக்குமென்றான். வாய்ந்தென்பது நடையின் வினையாகலிற் சினைவினைப்பாற்பட்டு முதல்வினையோடு முடிந்ததென்றது-அன்னத்திற்குச்சினை கால், காலிற்குச்சினை நடை, ஆகையால் முதலென்றது அன்னத்தை.

அங்ஙனமுவமித்துச் சொன்னதனாற்பயன் மகிழ்தல். என்னை, "சொல்லெதிர் பெறாஅன் சொல்லியின் புறுதல், புல்லித்தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே ,, என்று அகத்திணையியற் சூத்திரத்திற்சொன்னாராகலினென்பது. அஃதேல் உவகையென்னு மெய்ப்பாட்டானே மகிழ்ச்சிபெற்றாம். இனியிச்சொற்கள்விசேடித்து மகிழ்வித்தவாறென்னையெனின், நெஞ்சின்மிக்கது வாய்சோர்ந்து தான்வேட்டபொருள்வயிற்றன்குறிப்பன்றியேயுஞ்சொன்னிகழும். நிகழுந்தோறு மகிழ்ச்சிதோன்றுமென்பது, என்போலவெனின், ஒருவன் தான்வழிபடுந்தெய்வத்தைப்பரவியசெய்யுட்களையோதியுணர்ந்திருந்தானெனினும், அவற்றான் அத்தெய்வத்தை வழிபடும்போழ்து கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்பக்காண்டும், அல்லதூஉஞ் சுற்றத்தாரது சாக்காடுமுற்றவுணர்ந்தானேயெனினுஞ் செத்தாரிடனாக உரையாடினபொழுது துன்பமீதூரக் கலுழக்காண்டும், இவைபோலவென்பது. ஆகலின் நினைப்பின்வழியதுரையாயினும் நினைப்பின் உரைப்பயன் விசேடமு

ளடக்கிதென்பது. நெஞ்சின்மிக்கது வாய்சோர்ந்து சொன்னிகழுமென்பதனை இக்கோவையின் எண்வகைமெய்ப்பாட்டின்கண்ணுந் சந்துணர்த்துக்கொள்க. பயனென்பது நெஞ்சினடுத்ததோர் மெய்ப்பாடு காரணமாகத் தன்வயினிகழ்ந்த சொல்லானெய்துவது. மெய்ப்பாடென்பது புறத்துக்கண்டதோர்பொருள் காரணமாக நெஞ்சின்கட்டோன்றிய விகாரத்தின்விளைவு. எழுவாய்க்கிடந்த இப்பாட்டு நுதலியபொருள் பொழிப்பினுலுரைத்தாம், நுண்ணிதாக வுரைப்பான்புகின் வரம்பின்றிப்பெருகுமென்பது. (௧)

ஐயம்.

ஐயமென்பது- கண்ணுற்றபின்னர் இங்ஙனந் தோன்றாநின்ற இம்மாது திருமகள்முதலாகிய தெய்வமோ அன்றி மக்களுள்ளாள் கொல்லோவென் றையுறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

போதோவிசும்போபுனலோபணிகளதுபதியோ *
யாதோவறிகுவதேதுமரிதியமன்விடுத்த *
தூதோவனங்கன்றுணைபோவிளையிலிதொல்லைத்தில்லை *
மாதோமடமயிலோவெனநின்றவர்வாழ்பதியே. (௨)

தெரியவரியதோர் தெய்வமென் ன
அருவரைநாட னையுற்ற து.

(இ-ள்.) யமனால்விடுக்கப்பட்ட தூதோ, வசித்தற்கரியாரை வசித்தற்கு அனங்கற்குண்டாயிற்றோர் துணையோ, ஒப்பில்லாதானது பழையதாகிய இத்தில்லைக்கண் வாழ்வாரோர்மாதரோ, மடப்பத்தையுடைய மயிலோவென்று சொல்லும்வண்ணம் நின்றவரது வாழ்பதி தாமரைப்பூவோ, ஆகாயமோ, நீரோ, பாம்புகளதுபதியாகிய நாகருலகமோ, யாதோ சிறிதுந் துணிதலரிது. எ-று.

யமன்றூதும், அனங்கன்றுணையும், மடமயிலும், ஐயநிலையுவமைக்கணுவமையாய்நின்றன. தில்லைமாது உவமிக்கப்படும்பொருள். ஐயநிகழ்ந்தது திருமகள்முதலாகிய தெய்வமோ மக்களுள்ளாளோவென்றென்க, மக்களுள்ளாளாதல் சிறுபான்மையாதலிற் கூறிற்றிலர்.

தில்லைமாதோ வென்பதற்குத் தில்லைக்கண் வாழ்வாரோர் மானுடமாதரோவென் றுரைப்பாருமுளர். தில்லைமானுடமாது மகளிர்க்குவமையாகப் புணர்க்கப்படுவனவற்றி னொன்றன்மையால் உவமையாகாது. உவமிக்கப்படும் பொருளெனின், ஐயமின்றித்

துணிவாம். அதனால் தில்லைமாதோவென்பது மானுடம் தெய்வமென்னும் வேறுபாடுகருதாது மகளிரென்னும் பொதுமைபற்றிநின்றது. தில்லைநின்றவளெனக் கூட்டினுமமையும்.

தெய்வமென்ன- தெய்வமோ அல்லளோவென. மெய்ப்பாடு- உவகையைச்சார்ந்தமருட்கை. என்னை, "புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு,மதிமை சாலா மருட்கை நான்கே.,,என்றாராகவின். ஈண்டு வனப்பினதுபெருமையை வியந்தானென்பது. அவ்வியப்பு மருட்கைப்பாற்படும். பயன்-ஐயந்தீர்தல். (உ)

தெளிதல்.

தெளிதலென்பது- ஐயுற்றபின்னர் அவயவமியங்கக்கண்டு இவள் தெய்வமல்லளென்று தெளியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பாயும்விடையரன்றில்லையன்னாள்படைக்கண்ணிமைக்குந் *
தோயுநிலத்தடிதூமலர்வாடுந்துயரமெய்தி *
யாயுமனனேயணங்கல்லளம்மாமுலைசுமந்து *
தேயுமருங்குற்பெரும்பணைத்தோளிச்சிறுநுதலே. (௩)

அணங்கலலளென் றயில்வேலவ ன்
குணங்களைநோக்கிக் குறித்துரைத்த து.

(இ-ள்) பாய்ந்துசெல்லும் விடையையுடைய அரனது தில்லையையொப்பாளுடைய படைபோலுங்கண்கள் இமையாநின்றன. நிலத்தின்கண் அடிதீண்டாநின்றன. தூயமலர்கள் வாடாநின்றன. ஆதலின், துயரத்தையெய்தி ஆராயுமனனே, அழகியபெரியவாகிய முலைகளைச்சுமந்து தேயாநின்ற மருங்குலையும் பணைபோலும் பெரியதோள்களையுமுடைய இச்சிறுநுதல் தெய்வமல்லள்,எ-று.

துயரமெய்தியாயுமனனே யென்றதனால், தெளிதல்கூறப்பட்டதாம். மெய்ப்பாடு - மருட்கையினீங்கிய பெருமிதம். என்னை, "கல்வி தறுக ணிசைமை கொடையெனச், சொல்லப் பட்ட பெருமித நான்கே.,, என்றாராகலின், தெளிதலுங் கல்வியின்பாற்படும். பயன்-தெளிதல்.

அவ்வகை தெய்வங்கொல்லோவென் றையுற்றுநின்றான் இவ்வகை குறிகண்டு தெய்வமல்லள் மக்களுள்ளாளெனத்துணிந்தானென்பது. எனவே தெய்வமல்லளாதற்குக்காரணம் இவையனகுறிப்பே வேற்றுமை யில்லையென்பது துணிவு.

நயப்பு.

நயப்பென்பது-தெய்வமல்லளென்று தெளிந்தபின்னர் மக்களு

ள்ளாளென்று நயந்து இடையில்லைகொலென்ற நெஞ்சிற்கு அல்குலும் முலையுங்காட்டி இடையுண்டென்று சென்றெய்த நினையா நிற்றல். அதற்குச்செய்யுள்.

அகல்கின்றவல்குற்றடமதுகொங்கையவையவநீ *
புகல்கின்றதென்னைநெஞ்சுண்டேயிடையடையார்புரங்க *
ளிகல்குன்றவில்லிற்செற்றோன்றில்லையீசனெம்மானெதிர்ந்த *
பகல்குன்றப்பல்லுகுத்தோன்பழனம்மன்னபல்வளைக்கே. (௫)

வண்டமர்புரிகுழ லொண்டொடிமடந்தையை
நயந்தவண்ணல் வியந்துள்ளிய து.

(இ-ள்) அகலாநின்ற வல்குலாகிய தடம் அது, முலை அவை, நெஞ்சே, காரணமின்றி நீ சொல்லுகின்றதென்! அடையாதார் புரங்களை இகலைக் குன்றமாகிய வில்லாற்செற்றவன், தில்லைக்கணுள்ளானாகிய வீசன், எம்முடையவிறைவன், மாறுபட்ட ஆதித்தனது பெருமை குன்றப் பல்லையுகுத்தோன், அவனது திருப்பழனத்தையொக்கும் பல்வளைக்கு இடையுண்டு. எ-று.

தடம்-உயர்ந்தவிடம். அல்குற்றடமது கொங்கையவை என்புழி அல்குற்பெருமையானும் முலைப்பெருமையானும் இடையுண்டு என்றவாறன்று, அல்குலும்முலையுமுண்மையான் இடையுண்டு என்றவாறு. அல்குற்றடமதுவென்றும் முலையவைவென்றும் பெருமைகூறியது அவை விளங்கித்தோன்றுதனோக்கி. இகல்குன்றவில்லிற் செற்றோனென்பதற்கு இகல்குன்றைய வில்லாற்செற்றோ னெனினும் அமையும். நயந்தவண்ணல்- மக்களுள்ளாளென்று துணிதலால் நயந்தவண்ணல். உள்ளியது - கூட்டத்தை நினைந்தது. மெய்ப்பாடு- உவகையைச்சார்ந்தமருட்கை, வியந்துரைத்தலின். பயன்- ஐயந்தீர்ந்துமகிழ்தல்.

இந்நான்குபாட்டும் ஒருவருள்ளக்கருத்தை யொருவரறியாதவொருதலைக்காமமாதலிற் கைக்கிளைப்பால. அகத்திணையின்கட் கைக்கிளைவருதல் திணைமயக்காம் பிறவெனின், கைக்கிளைமுதற் பெருந்திணையிறுவாயெழுதிணையினுள்ளுங் கைக்கிளையும் பெருந்திணையும் அகத்தைச்சார்ந்த புறமாயினும், களவிக்கோவையின் எடுத்துக்கோடற்கட் காட்சிமுதலாயின சொல்லுதல்வனப்புடைமைநோக்கிக் கைக்கிளை தழீஇயினார். பெருந்திணைதழுவுதல் சிறப்பின்மையினீக்கினார். இது நலம்பாராட்டல். (௪)

உட்கோள்.

உட்கோளென்பது-மக்களுள்ளாளென்று நயந்துசென்றெய்த நினையாநின்றவன் தன்னிடத்து அவளுக்குண்டாகிய காதல் அவள் கண்ணிற்கண்டு தன்னுட்கொள்ளாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அணியுமமிழ்துமென்னாவியுமாயவன் தில்லைச்சிந்தா *
மணியும்பராரறியாமறையோனடிவாழ்த்தலரிற் *
பிணியுமதற்குமருந்தும்பிறழப்பிறழநின்னும் *
பணியும்புனைமருங்குற்பெருந்தோளிபடைக்கண்களே. (௬)

இறைதிருக்கரத்து மறிமானெக் ௬
யுள்ளக்கருத்து வள்ளலறிந்தது.

(இ-ள்.) மின்னையும் பாம்பையுமொக்கு மிடையினையும் பெருந்தோளினையுமுடையாளது படைபோலுங்கண்கள் பிறழுந்தோறும் பிறழுந்தோறும் பொதுநோக்கத்தாற் பிணியும், உள்ளக்கருத்து வெளிப்படுக்குநாணோடுகூடிய நோக்கத்தால் அதற்குமருந்துமாகாநின்றன. எ-று. எனக்காபரணமும் அமிழ்தும் என்னுயிருமாயவன், தில்லைக்கட்சிந்தாமணிபோல் அன்பர்க்குநினைத்தவைகொடுப்போன், அன்பரல்லாததேவர்களறியாதவந்தணன், அவனுடையதிருவடிகளை வழுத்தாதவரைப்போல உறும்பிணியுமெனக்கூட்டுக.

அணியென்றார் அழகுசெய்தலான். அமிழ்தென்றார்கழிபெருஞ்சுவையோடுறுதிபயத்தலுடைமையான். ஆவியென்றார் காதலிக்கப்படும் பொருள்களெல்லாவற்றினுஞ் சிறந்தமையான். ஈறிலின்பம்பயக்கு மிறைவனோடுசார்த்த அணியும் அமிழ்தும் ஆவியும் இறப்ப விழிந்தனவேயாயினும், “பொருளது புணர்வே புணர்ப்போன் குறிப்பின், மருளற வருஉ மரபிற் றென்ப,, என்பதனான் ஈண்டுச்சொல்லுவானது கருத்துவகையானும், உலகத்துப்பொருள்களுள் அவற்றினூங்கு மிக்கனவின்மையானும், உயர்ந்தனவாயுவமையாயின. உம்பராலென்பது பாடமாயின், உம்பரானறியப்படாதவெனவுரைக்க. பிறழப்பிறழுமென்பது பாடமாயின், பிணியுமருந்தும் மாறிமாறிவரப் படைக்கண்கள் பிறழுமெனவுரைக்க. இஃதுட்கோள். இவையைந்துங்கைக்கிளை.

திணை-குறிஞ்சி. கைகோள் - களவு. கூற்று - தலைமகன்கூற்று. கேட்பது-நெஞ்சு. நெஞ்சென்பது பாட்டின்கண் இல்லையாலோ

வெனின் எஞ்சிற்றென்பதாம், வறிதே கூறினனெனினு மமையும்.
இடம்-முன்னிலை. காலம்-நிகழ்காலம். எச்சம்-இப்பெருந்தோளி
படைக்கண்களென்புழி இவ்வென்னுஞ் சுட்டுச் சொல்லெஞ்சிற்
று. மெய்ப்பாடு-உவகையைச்சார்ந்தபெருமிதம். கண்டு மெய்ப்
பாட்டுப்பொருள்கோள் - கண்ணினன் யாப்புறவறிதல். என்னை,
"கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரு,முணர்வுடை மா
ந்தர்க் கல்லது தெரியி,னன்னயப் பொருள்கோ ளெண்ணருங்
குரைத்தே." என்றாராகலின். பயன்-தலைமகளது குறிப்பறிந்தும
கிழ்தல். பிணியுமதற்கு மருந்துமாம் பெருந்தோளி படைக்கண்
களென்றமையின், அவளுடம்பாட்டுக்குறிப்பு அவள் நாட்டத்தா
னுணர்ந்தானென்பது. என்னை, "நாட்ட மிரண்டு மறிவுடம் படு
த்தற்குக், கூட்டி யுரைக்குங் குறிப்புரையாகும்." என்றாராகலின்.

தெய்வத்தைமகிழ்தல்.

தெய்வத்தைமகிழ்தலென்பது-உட்கொண்டுநின்று, என்னிடத்
துவிருப்பத்தையுடைய இவளைத்தந்த தெய்வத்தையல்லது வே
றொருதெய்வத்தை யான் வியவேனெனத் தெய்வத்தைமகிழ்ந்து
கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

வளைபயில்கீழ்கடனின்றிடமேல்கடல்வானுகத்தின் *
றுளைவழிநேர்கழிகோத்தெனத்தில்லைத்தொல்லோன்கயிலைக் *
கிளைவயினீக்கியிக்கெண்டையங்கண்ணியைக்கொண்டுதந்த *
விளைவையல்லால்வியவேனயவேன்றெய்வமிக்கனவே. (௯)

அன்னமென்னடை யரிவையைத்தந் தரு.
மன்னிருந்தெய்வத்தை மகிழ்ந்துரைத்த து.

(இ-ள்.) சங்குநெருங்கின கீழ்த்திசைக்கடலிலேநின்றுஇட, அவ்
வொத்தகழி மேற்றிசைக்கடலிலிட்ட பெரிய நுகத்தினது துளை
க்கட்சென்று கோத்தாற்போல, தில்லையிடத்துப் பழையோனது
கைலைக்கண் ஆயத்தாரிடத்துநின்றுநீக்கி இக்கெண்டைபோலுங்
கண்ணையுடையாளைக் கைக்கொண்டுதந்த நல்வினையின் விளைவாகி
ய தெய்வத்தையல்லது, மிக்கனவாகிய பிறதெய்வத்தை வியப்பது
ஞ்செய்யேன் நயப்பதுஞ்செய்யேன். எ-று.

கைலைக்கட்கொண்டுதந்த வெனவியையும். இவளைத்தந்த தெய்
வத்தையல்லது நயவேனென்று அவளது நலத்தை மிகுத்தமையி
ன், இதுவும் நலம்பாராட்டல். பயந்தோர்ப்பழிச்சற்பாற்படுத்தி
னுமமையும். மெய்ப்பாடு- உவகையைச்சார்ந்தமருட்கை. பயன்-
மகிழ்தல். (௯)

புணர்ச்சிதுணிதல்.

புணர்ச்சிதுணிதலென்பது-தெய்வத்தைமகிழாநின்றவன் இது நமக்குத்தெய்வப்புணர்ச்சியெனத் தன்னெஞ்சிற்குச்சொல்லி அவளோடுபுணரத் துணியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஏழுடையான்பொழிலெட்டுடையான்புயமென்னைமுன்னா *
ளூழுடையான்புலியூரன்னபொன்னிவ்வுயர்பொழில்வாய்ச் *
சூழுடையாயத்தைநீக்கும்விதிதுணையாமனனே *
யாழுடையார்மணங்காணணங்காய்வந்தகப்பட்டதே. (எ)

கொவ்வைச்செவ்வாய்க் கொடியிடைப்பேதையைத்
தெய்வப்புணர்ச்சி செம்மறுணிந்தது.

(இ-ள்.) பொழிலேழுடையான், புயமெட்டுடையான், எனக்கு ஆட்படுந்தன்மையுண்டாவதற்குமுன்னே என்னையாள்வதொருபுதிதாகிய முறைமையையுடையான், அவனது புலியூரையொக்கும் பொன்னனையாள் இவ்வுயர்ந்த பொழிலிடத்து ஒருபொழுதும் விடாது சூழ்தலையுடைய ஆயத்தை நீக்குதற்குக்காரணமாகிய விதிதுணையாக, மனமே, கந்தருவர்மணங்காண்முன்வருத்துவதாய் வந்து அகப்பட்டது. இனிக்கூட்டத்துக்குடன்படுவாயாக. எ-று.

பொன்னிக்குமெனவியையும். ஆகவென்பது ஆவெனநின்ற செய்யுண்முடிபு புறனடையாற்கொள்க. அணங்காய்வந்தென்றான், உள்ளஞ்செல்லவும் இதுதகாதென்று விலக்குதலால் முன்வருத்தமாயினமையின். தெய்வத்தன்மை யுடைத்தாய் வந்தெனினுமமையும். அகப்பட்டதென்று இறந்தகாலத்தாற்கூறினான், புணர்ச்சிதுணிந்தமையான். இதுவுமுட்கோட்பாற்படும்.

இவையிரண்டும் ஒருதலைக்காமமல்லவெனினும் புணர்ச்சிநிகழாமையிற் கைக்கிளைப்பாற்படும். புணர்ச்சிநிகழாமை தெய்வப்புணர்ச்சி செம்மறுணிந்ததென்பதனானறிக. பேதையைப்புணர்ச்சிதுணிந்தது, விதிதுணையாகக் கந்தருவர்மணம் ஓர்பெண்வடிவுகொண்டு எனக்கெய்திற்றென்றமையின். இவனோடிவளிடையுண்டாய அன்பிற்குக்காரணம் விதியல்லாமை ஈண்டுப்பெற்றாம். பாங்கற்கூட்டந் தோழியிற்கூட்டமென்றிவற்றில் அவர்துணையாயவாறுபோல விதியும் இவரை ஆயத்தினீக்கிக்கூட்டினமாத்திரையேயன்றி அன்பிற்குக்காரணமன்றென்பது. அல்லதூஉம், விதி

யாவது செயப்படும் வினையினது நிபநியன்றே, அதனானேயன்பு தோன்றிப்புணர்ந்தாரெனின், அதுவுஞ்செயற்கைப்புணர்ச்சியாய்முடியும், அதுமறுத்தற்பொருட்டன்றே தொல்லோரிதனையியற்கைப்புணர்ச்சியென்றுகுறியிட்டது அல்லதூஉம், நல்வினை துய்த்தக்கால் முடிவெய்தும் இவர்களன்பு துய்த்தாலு முடிவெய்தாது எஞ்ஞான்று மொருபெற்றியே நிற்குமென்பது அல்லதூஉம், "பிறப்பா னடுப்பினும் பின்னுந் துன்னத்தகும் பெற்றியர்." என்றலானும் இவர்களன்பிற்குக்காரணம் விதியன்றென்பது. பலபிறப்பினுமொத்த அன்பென்றாராகலின், பலபிறப்பினுமொத்து நிற்பதோர்வினையில்லையென்பது. அஃதேல், மேலைச்செய்யுளில் வினைவிளைவே கூட்டிற்றாக விசேடித்துச் சொல்லவேண்டியதென்னையெனின், இம்மையிற்பாங்கனையுந் தோழியையுங்குறையுற அவர்கள் தங்களினாகிய கூட்டங்கூட்டினார்கள். உம்மை நல்வினையைக் குறையுற்றுவைத்து இம்மையதனை மறந்தான், மறப்புழியும், அதுதான் மறவாது இவர்களையுங் கண்ணுறுவித்து இவர்க்குத்துப்புமாயிற்றாகலான், விசேடிக்கப்பட்டது. அல்லதூஉம், "பாங்கனை யானன்ன பண்பனை" என்று அவனை விசேடித்தும், "முத்தகஞ்சேர் மென்னகைப்பெருந்தோளி." என்று அவளைவிசேடித்தும், அவர்களினாலாய கூட்டத்திற்குக் கூறினமையின், நல்வினைப்பயனும் அம்மாத்திரையே விசேடித்ததென்பது. (எ)

கலவியுரைத்தல்.

கலவியுரைத்தலென்பது-தெய்வப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் புணர்ச்சியின்பத்தியல்பு கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சொற்பாலமுதிவள்யான்சுவையென்னத்துணிந்திங்ஙனே *
நற்பால்வினைத்தெய்வந்தந்தின் றுநானிவளாம்பகுதிப் *
பொற்பாரறிவார்புலியூர்ப்புனிதன்பொதியில்வெற்பிற் *
கற்பாவியவரைவாய்க்கடிதோட்டகளவகத்தே. (அ)

கொலைவேலவன் கொடியிடையொடு
கலவியின்பங் கட்டுரைத்தது.

(இ-ள்.) சொற்பால்-தந்து. எ-து சொல்லும்பகுதியில் அமுதிவள் யானதன்சுவையென்று துணிந்துசொல்ல இவ்வண்ணமேநல்லகூற்றின்வினையாகியதெய்வந்தர எ-று. என்றது சுவையையுடையபொருட்குஞ் சுவைக்கும் வேறுபாடில்லாதவாறுபோல எனக்கும் இவட்கும் வேறுபாடில்லை. எ-று. இன்று நானிவளாம்பகுதி

ப்பொற்பாரறிவார். எ-து. இவ்வாறுவேறுபாடில்லையாயினும், புணர்ச்சியான் வரும் இன்பந்துய்த்தற்பொருட்டாக இன்றுயானென்றும் இவளென்றும் வேறுபாட்டோடுகூடிய அழகை யாரறிவார் இதனையனுபவிக்கின்ற யானே யறியினல்லது! எ-று. புலியூர்- களவகத்தே. எ-து. புலியூர்க்கணுளனாகிய தூயோனது பொதியிலாகிய வெற்பிற் கற்பாந்த தாழ்வரையிடத்துக் காவலைவாங்கிய களவிடத்து. எ-று.

களவகத்துப்பொற்பெனக்கூட்டுக. தற்றென்பது தரவெனத்திரிக்கப்பட்டது. தந்தின்றென்பது தந்ததென்னும் பொருள்படாமை யறிந்துகொள்க. தந்தன்றென்பதூஉம்பாடம்போலும். கடிதோட்டவென்பதற்குக் கடியப்பட்ட தொகுதியையுடைய களவென்றுரைப்பினுமமையும். தோட்டவென்றது தலைமகளாயத்தையுந் தன்னிளைஞரையும். கடிதொட்டவென்பது பாடமாயின், மணந்தொடங்கிய களவென்றுரைக்க. கொடியிடையொடுகலவி- கொடியிடையொடுநிகழ்ந்தகலவி. மெய்ப்பாடு- உவகை. பயன் - மகிழ்ச்சி, தலைமகளைமகிழ்வித்தலுமாம். நல்வினைத்தெய்வம் இவளைக் களவின்கட்கூட்ட அமுதமும் அதன்கட் கரந்துநின்ற சுவையுமென்ன என்னெஞ்சம் இவள்கண்ணே யொடுங்கயானென்பதோர்தன்மை காணாதொழிய இருவருள்ளங்களும் ஒருவேமாமாறுகரப்ப ஒருவேமாகிய ஏகாந்தத்தின்கட் பிறந்தபுணர்ச்சிப் பேரின்பவெள்ளம் யாவரானறியப்படுமென்றுமகிழ்ந்துரைத்தான், உரைப்பக்கேட்டதலைமகளும் எம்பெருமான் என்கண்வைத்த அருளினானன்றோ இவ்வகையருளியதென்று இறப்பவு மகிழ்வாளாம்.(அ)

இருவயினொத்தல்.

இருவயினொத்தலென்பது - புணராதமுன்னின்றவேட்கையன்பு புணர்ந்தபின்னும் அப்பெற்றியே நின்றுவளர்ந்து சேறலால் தலைமகளைமகிழ்த்து கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

உணர்ந்தார்க்குணர்வரியோன்றில்லைச்சிற்றம்பலத்தொருத்தன் *
குணந்தான்வெளிப்பட்டகொவ்வைச்செவ்வாயிக்கொடியிடைதோள் *
புணர்ந்தாற்புணருந்தொறும்பெரும்போகம்பின்னும்புதிதாய் *
மணந்தாழ்புரிகுழலாளல்குல்போலவளர்கின்றதே. (௯

ஆராவின்பத் தன்புமீதூர. ர
வாரார்முலையை மகிழ்ந்துரைத்தது.

(இ-ள்.) ஒருகாற்றன்னையுணர்ந்தவர்கட்குப் பின்னுணர்தற்குக் கருவியாகிய சித்தவிருத்தியுமொடுங்குதலான் மீட்டுணர்வரியோன், தில்லையிற் சிற்றம்பலத்தின்கணுள்ளனாகிய ஒப்பில்லாதான், அவனது குணமாகிய ஆனந்தம் வெளிப்பட்டாற்போலுங் கொவ்வைக் கனிபோலுஞ் செவ்வாயையுடைய இக்கொடியிடை தோளைக் கூடினாலும், கூடுந்தோறும் பெரிதாகியவின்பம் முன்புபோலப் பின்னும் புதிதாய், மணந்தங்கிய சுருண்ட குழலையுடையாளது அல்குல்போல வளராநின்றது. எ-று.

உணர்ந்தார்க்குக் குணந்தான் வெளிப்பட்டவென இயைத்துரைப்பினுமமையும். உணர்ந்தார்க்குணர்வரியோனென்பதற்குத் தவத்தானுந் தியானத்தானும் எல்லாப் பொருள்களையுமுணர்ந்தவர்க்கும் உணர்வரியோனெனினுமமையும். இப்பொருட்கு உணர்ந்தார்க்குமென உம்மை வருவித்துரைக்கப்பட்டது. குணந்தான் வெளிப்பட்ட கொடியிடையென்புழி உவமையோடு பொருட்கொற்றுமைகருதி உவமைவினை உவமிக்கப்படும்பொருண்மேலேற்றப்பட்டது. புணர்ந்தாற் புதிதாயெனவியையும். புணர்ந்தாலுமென இதற்கும் உம்மை வருவித்துரைக்கப்பட்டது இன்பத்தன்பு-இன்பத்தான்வந்தசெயற்கையன்பு. மெய்ப்பாடும் பயனும் அவை. புணர்ச்சிக்கட்டோன்றியொருகாலைக்கொருகாற் பெருகாநின்ற பேரின்பவெள்ளத்தைத் தாங்கலாற்றாத தலைமகன் ஆற்றுதல் பயனெனினுமமையும்.

வளர்கின்ற தென்றமையிற் புணர்ந்ததனாற் பயனென்னையெனின், புணராதமுன்னின்ற வேட்கை புணர்ச்சிக்கட்குறைபடும், அக்குறைபாட்டைக் கூட்டத்தின்கட் டம்மிற்பெற்ற குணங்களினாகிய அன்பு நிறைக்கும், நிறைக்க எஞ்ஞான்றும் ஒரு பெற்றித்தாய் நிற்குமென்பது. அல்குல்போல வளர்கின்றதென்றவழி ஒருகாலைக்கொருகால் வளருமென்றாரல்லர். என்னை, குறைபாடுள்ளதற்கன்றே வளர்ச்சியுண்டாவது, அல்லதூஉம் எஞ்ஞான்றும் வளருமெனின், அல்குற்கு வரம்பின்மையுந்தோன்றும், மற்றென்னை கருதியதெனின், இயற்கைப்புணர்ச்சி புணர்கின்றகாலத்து இவள் பதினோராண்டும் பத்துத்திங்களும் புக்காள், ஆகலின் இவளது அல்குல் இலக்கணக்குறைபாடின்றியே வளராநின்றது. வளர்

ந்துபன்னீராண்டு நீரம்பினால் ஒருபெற்றியேநிற்கும். அதுபோல இவன்காதலும் உள்ளமுள்ளளவுநிறைந்து பின்னைக்குறைபாடின்றி ஒருபெற்றியே நிற்குமென்பது. (௯)

கிளவிவேட்டல்.

கிளவிவேட்டலென்பது - இருவயினொத்தின்புறுநின்ற தலைமகன் உறுதன்முதலாகிய நான்கு புணர்ச்சியும்பெற்றுச் செவிப்புணர்ச்சிபெறுமையின் ஒருசொல்வேட்டு வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அளவியையார்க்குமறிவரியோன்றில்லையம்பலம்போல் *
வளவியவான்கொங்கைவாட்டடங்கண்ணுதன்மாமதியின் *
பிளவியன்மின்னிடைபேரமைதோளிதுபெற்றியென்றாற் *
கிளவியையென்னோவினிக்கிள்ளையார்வாயிற்கேட்கின்றதே. (௰)

அன்னமன்னவ ளவயவங்கண்டு
மென்மொழிகேட்க விருப்புற்றது.

(இ-ள்.) அளவை யார்க்குமறிவரியவனது தில்லையம்பலம்போலப் பெருங்கொங்கைகள் வளத்தையுடையன. பெரியகண்கள் வாளோடொக்கும். நுதல் பெரிய மதியின்பாகத்தினியல்பையுடைத்து. இடை மின்னோடொக்கும். தோள்கள் பெரியவேய்யோடொக்கும். இவற்றதுதன்மை இதுவாறாற் கிள்ளைபோல்வாள் வாயின்மொழியை இனிக்கேட்கவேண்டுகின்றதென்! இப்பெற்றிக்குத் தக்கதேயிருக்கும். எ-று.

துறவு துறவியென நின்றாற்போல அளவு அளவியெனநின்றது. மொழி கிளிமொழியோடொக்குமென்பதுபோதரக் கிள்ளையாரென்றான். வயினென்பது பாடமாயின், வாயினென்பது குறுகிநின்றதாகவுரைக்க. வயின் இடமெனினு மமையும். அவயவங்கண்டென்புழி உறுதன்முதலாகியநான்கையுங்கண்டென்றார். மெய்ப்பாடு- உவகை. பயன்-நயப்புணர்த்துதல். (௰)

நலம்புனைந்துரைத்தல்.

நலம்புனைந்துரைத்தலென்பது - கிளவிவேட்டு வருந்தக்கண்ட தலைமகள் மூரன்முறுவல்செய்ய, தலைமகன் அதுபெற்றுச் சொல்லாடாமையானுண்டாகிய வருத்தநீங்கி, நமதகன்றமருதநிலத்துக் குறிஞ்சிநிலத்து இவள்வாய்போல நாறும் ஆம்பற்பூக்களுளவோவென அந்நிலத்துவண்டோடு வினவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கூம்பலங்கைத்தலத்தன்பரென்பூடுருகக்குனிக்கும் *
பாம்பலங்காரப்பரன்றில்லையம்பலம்பாடலரித் *
தேம்பலஞ்சிற்றிடையீங்கிவளீங்கனிவாய்கமழு *
மாம்பலம்போதுளவோவளிகாணும்மகன்பணையே. (௰௧)

பொங்கிழையைப் புனைநலம்புகழ்ந்
தங்கதிர்வேலோ னயர்வுநீங்கியது.

(இ-ள்.) வண்டுகாள், நுமதகன்றமருதநிலத்துத்தேம்புஞ் சிறியவிடையையுடைய இவளது இனியதாகிய கனிந்தவாய்போல நாறும் ஆம்பற்பூக்களுளவோ? சொல்லுமின். எ-று. கூம்புங்கைத்தலங்களையுடைய அன்பரது என்புமுள்ளுருகக் கூத்தாடா நின்ற பாம்பாகிய அணியையுடைய பரமனது தில்லையம்பலத்தைப்பாடாதாரைப்போலத் தேம்புமெனக்கூட்டுக.

அல்லும் அம்மும் அல்வழிச்சாரியை. பாம்பலங்காரம் மெலித்துநின்றது. ஈங்கிவளென்பது ஒருசொல். கனிவாய் - கனிபோலும் வாயெனினுமமையும். புனைநலமென்றது புனையப்பட்ட வியற்கைநலத்தை. அயர்வுநீக்கியது - சொல்லாடாமையி னுண்டாகிய வருத்தநீங்கியது. மெய்ப்பாடு-உவகை. பயன்-நயப்புணர்த்துதல். இயற்கையன்பினானும் அவள் குணங்களாற்றோன்றிய செயற்கையன்பினானுங்கடாவப்பட்டு நின்ற தலைமகன் தனதன்பு மிகுதியை புணர்த்துதல் நயப்புணர்த்துதலென்பது. (௰௧)

பிரிவுணர்த்தல்.

பிரிவுணர்த்தலென்பது - ஐவகைப்புணர்ச்சியும்பெற்றுப் புணர்வதன்முன்னும் புணர்ந்தபின்னும் ஒத்தவன்பினனாய் நின்ற தலைமகன் பிரியுமாறென்னையெனின், இப்புணர்ச்சி நெடுங்காலஞ் செல்லக்கடவதாக இருவரையுங்கூட்டியதெய்வந் தானே பிரியாமற்பிரிவிக்கும். அது பிரிவிக்குமாறு, தலைமகன் தனதாதரவினானலம்பாராட்டக் கேட்டு, எம்பெருமான் முன்னின்று வாய்திறந்து பெரியதோர்நாணின்மைசெய்தேனெனத்தலைமகள்நாணிவருந்தாநிற்ப, அதுகண்டு இவள்வருந்துகின்றது யான்பிரிவேனாக நினைந்தாக வேண்டுமென் றுட்கொண்டு, அவளுக்குத் தான் பிரிவின்மை கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

சிந்தாமணிதெண்கடலமிர்தந்தில்லையானருளால் *
வந்தாலிகழப்படுமேமடமான்விழிமயிலே *
யந்தாமரையன்னமேநின்னையானகன்றாற்றுவனோ *
சிந்தாகுலமுற்றென்னோவென்னைவாட்டந்திருத்துவதே. (௪௨)

பணிவளரல்குலைப் பயிர்ப்புறுத்தி ப்
பிணிமலர்த்தாரோன் பிரிவுணர்த்திய து.

(இ-ள்.) ஒருவன்றவஞ்செய்து பெறுஞ்சிந்தாமணியுந் தெளிந்தகடலினமிர்தமும் வருத்தமின்றித் தில்லையானருளாற் றானேவந்தால், அவை அவனாலிகழப்படுமா? மடமான்விழிபோலும் விழியையுடைய மயிலே, அழகிய தாமரைக்கண் வாழு மன்னமே, நின்னை யான் பிரிந்தாற்றியுளனாவனோ? சிந்தையின்மயக்கமுற்று என்னைவாட்டுவதென்னோ? எ-று.

அந்தாமரையன்னம் திருவென்பாருமுளர். நின்னையென்புழி உயிரினுஞ் சிறந்தநின்னையென்றும், யானென்புழி இருதலைப்புள்ளினோருயிரேனாகிய யானென்றும், அச்சொற்களான் விளங்கின. வாட்டந்திருத்துவதேயென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீர்மையவாய், வாட்டுவதேயென்னும் பொருள்பட்டு, இரண்டாவதற்கு முடிபாயின. வாட்டந்திருத்துவதென்று பாடமாயின், வாட்டத்தின்கணிருத்துவதென்றுரைக்க. பயிர்ப்பு-பயிலாத பொருட்கண்வந்த அருவருப்பு. ஈண்டுப்பயிலாத பொருள் பிரிவு. பிரிவுணர்த்தல்- அகன்றாற்றுவனோவெனப் பிரிவென்பதொன்றுண்டென்பதுபட மொழிதல். மெய்ப்பாடு- அச்சத்தைச்சார்ந்த பெருமிதம். பயன்- பிரிவசசமுணர்த்துதல். (௪௨)

பருவரலறிதல்.

பருவரலறிதலென்பது- பிரிவின்மைகூறக்கேட்டதலைமகள் பிரிவென்பதொன்றுண்டுபோலுமெனவுட்கொண்டு முன்னணினாற்சென்றெய்திய வருத்தநீங்கிப் பெரியதோர் வருத்தமெய்த அதுகண்டு, இவள் மேலுமேலும்வருந்துகின்றது பிரிந்தாற்கூடுதலரிதென்று நினைந்தோ நெடும்பொழுதிவ்வாறிருந்தால் அவ்விடத்துக் குடிப்பழியாமென்று நினைந்தோ அறிகிலேனென அவள் வருத்தமறியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கோங்கிற்பொலியரும்பேய்கொங்கைபங்கன்குறுகலரூர் *
தீங்கிற்புகச்செற்றகொற்றவன்சிற்றம்பலமனையா *

ணீங்கிற்புணர்வரிதென்றேநெடிதிங்ஙனேயிருந்தா *
லாங்கிற்பழியாமெனவோவறியேனயர்கின்றதே. (௰௩)

பிரிவுணர்ந்த பெண்கொடிதன்
பருவரலின் பரிசுநினைந்த து.

(இ-ள்.) கோங்கின்கணுண்டாகிய பொலிந்தவரும்பையொக்கு முலையையுடையாளது பங்கையுடையான், குறுகாதார்புரங்கள் பாசண்ட தருமமாகியதீங்கிலே புகுதலான் அவற்றைக்கெடுத்த வெற்றியையுடையான், அவனது திருச்சிற்றம்பலத்தை யொப்பாள் வருந்துகின்றது பிரிந்தாற்கூடுதலரிதென்று நினைந்தோ! நெடும்பொழுதிவ்வாறிருந்தால் அவ்விடத்துக் குடிப்பழியாமென்று நினைந்தோ! அறிகிலேன். எ-று.

தீங்கிற்புகவென்பதற்குத் துன்பமறியாதார் துன்பத்திற்புகவெனினுமமையும் ஆங்கென்றது - சுற்றத்தாரிடத்தும் அயலாரிடத்து; ஆங்கு அசைநிலையெனினுமமையும். பிரியலுறுகின்றானாகலின், இற்பழியாமென்று வேறுபட்டாளாயின் நன்றென்பது கருத்து. மெய்ப்பாடு- அச்சத்தைச்சார்ந்தமருட்கை. பயன் - ஐயந்தீர்தல். அவ்வகை தலைமகளது ஆற்றாமைத் தன்மைதலைமகற்குப் புலனாயிற்று, புலனாகத் தலைமகன் இவ்வகை தன்னெஞ்சோடுசாவி ஆற்றானாயினானென்பது. (௰௩)

அருட்குணமுரைத்தல்.

அருட்குணமுரைத்தலென்பது - இற்பழியாமென்று நினைந்தோவென்று கூறக்கேட்டதலைமகள் இது நந்தோழியறியின் என்னாங்கொல்லோவென்று பிரிவுட்கொண்டு பிரிவாற்றாது வருந்தாநிற்ப, அக்குறிப்பறிந்து அவள்பிரிவுடம்படுவது காரணமாகத் தலைமகன் யாம்பிரிந்தேமாயினும் பிரிவில்லையெனத் தெய்வத்தினருள்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

தேவரிற்பெற்றநஞ்செல்வக்கடிவடிவார்திருவே *
யாவரிற்பெற்றினியார்சிதைப்பாரிமையாதமுக்கண் *
மூவரிற்பெற்றவர்சிற்றம்பலமணிமொய்பொழில்வாய்ப் *
பூவரிற்பெற்றகுழலியென்வாடிப்புலம்புவதே (௰௪)

கூட்டியதெய்வத் தின்னருட்குணம்
வாட்டமின்மை வள்ளலுரைத்த து.

(இ-ள்.) முயற்சியும் உரைப்பாடுமின்றித் தேவராலேபெற்றநமதழகியமணத்தை, வடிவார்ந்த திருவே, இனிச்சிதைத்தற்கேடாகியத

ன்மையை யாவராலேபெற்று யாவர் சிதைப்பார்? இமையாத மூன்றுகண்ணையும் மூவராலேபெற்றவரது சிற்றம்பலத்தையழகுசெய்த செறிந்தபொழிலிடத்துளவாகிய பூக்களது மணத்தைப்பெற்றகுழலையுடையாய், நீ பொலிவழிந்து துன்பப்படுகின்றதென்னோ? எ-று.

மூவர்-சந்திராதித்தர் செந்தீக்கடவுள். பிரிவுணர்த்தினானாகலின் பிரிந்தாலென்னாமென்னும் ஐயநீக்கக்கூறினான். இக்கடியை யாவராற் பெற்றேனினுமமையும். மெய்ப்பாடு- பெருமிதம். பயன்- வன்புறை. பெரியதோருவகைமீதூர இவ்வகை வற்புறீஇயினானென்பது. (௰௪)

இடமணித்துக்கூறிவற்புறுத்தல்.

இடமணித்துக்கூறி வற்புறுத்தலென்பது- அருட்குணமுணர்த்துவற்புறுத்தவும் ஆற்றாமைநீங்காத தலைமகட்கு, நம்மூரிடத்திற்கு எம்மூரிடம் இத்தன்மைத்தெனத் தன்னூரினணிமைகூறி வற்புறுத்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வருங்குன்றமொன்றுரித்தோன்றில்லையம்பலவன்மலயத் *
திருங்குன்றவாணரிளங்கொடியேயிடரெய்தலெம்மூர்ப் *
பருங்குன்றமாளிகைநுண்களபத்தொளிபாயநும்மூர்க் *
கருங்குன்றம்வெண்ணிறக்கஞ்சுகமேய்க்குங்கனங்குழையே. (௰௫)

மடவரலை வற்புறுத்தி
இடமணித்தென் றவனியம்பியது.

(இ-ள்.) இயங்குமலையொன்றை யுரித்தவன், தில்லையம்பலத்தையுடையான், அவனது பொதியின் மலையிடத்துப் பெரியகுன்றத்தின்கண்வாழ்வாருடைய மகளே, வருத்தத்தைவிடு. கனங்குழாய், எம்மூரிடத்துப் பெரியகுன்றம்போலு மாளிகைகளின் நுண்ணிதாகிய சாந்தினொளிபரந்து நும்மூர்க்கணுண்டாகிய கரியகுன்றம் வெள்ளைநிறத்தையுடைய சட்டையிட்டதனோடொக்கும். எ-று.

கருங்குன்ற வெண்ணிறமென்பது பாடமாயி[illegible]ன், நுண்களபத்தொளிபரப்ப அவ்வொளி நும்மூர்க் கருங்கு[illegible]த்திற்கிட்டவெண்ணிறக்கஞ்சுகத்தோடொக்குமென்றுரைக்க. [illegible]டுரைத்தவாற்றால், தலைமகன்மிக்கோனாதல்வேண்டும், வேண்டவே ஒப்பு என்னை பொருந்துமாறெனின், "மிக்கோனாயினுங் கடிவரையின்றே" என்பதோத்தாகலிற் பொருந்துமென்க. வற்புறுத்தி-வலியுறுத்தி.

இடமணித்தென்றலே வற்புறுத்தலாக வுரைப்பினுமமையும். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-இடமணித்தென்று வற்புறுத்தல். ()

ஆடிடத்துய்த்தல்.

ஆடிடத்துய்த்தலென்பது- அணிமைகூறி யகலாநின்றவன், இனி நீமுற்பட்டுவிளையாடு யான் இங்ஙனம்போய் அங்ஙனம் வாராநின்றேனென அவளை ஆடிடத்துச் செலுத்தாநிற்றல். அதற்குச் செய்யுள்.

தெளிவளர்வான்சிலைசெங்கனிவெண்முத்தந்திங்களின்வாய்த் *
தளிவளர்வல்லியன்னாய்முன்னியாடுபின்யானளவா *
வொளிவளர்தில்லையொருவன்கயிலையுகுபெருந்தேன் *
றுளிவளர்சாரற்கரந்துங்கனேவந்துதோன்றுவனே. (௰௯)

வன்புறையின் வற்புறுத் தி
அன்புறமொழியை யருககன்ற து.

(இ-ள்.) காணிமிர்ந்த பெரியசிலைகளும் சிவந்தகொவ்வைக்கனியும் வெள்ளியமுத்தங்களும் ஒருதிங்களின்கண்ணே வாய்ப்ப அளிகள் தங்கும் வல்லியையொப்பாய், யான்சொன்னவற்றைத் தெளிவாயாக, இனிமுற்பட்டு விளையாடுவாயாக ஒளிவளராநின்ற தில்லைக்கணுளனாகிய அளக்கப்படாத ஒருவனது கைலையிடத்து உகாநின்ற பெருந்தேன்றுளிகள் பெருகுஞ்சாரற் பொதும்பரிலொளித்து யான் பின்னும் உவ்விடத்தேவந்து தோன்றுவேன். எ-று.

தெளிவளர்வான்சிலை என்பதற்கு ஒளிவளருஞ் சிலையென்றுரைப்பினுமமையும். திங்களை வல்லிக்கண்ணதாகக்கொள்க. வாய்ந்தென்பது வாய்ப்பவென்பதன்றிரிபாகலின், அளிவளரொன்றும் பிறவினைகொண்டது. சாரலென்பது- ஆகுபெயர். வன்புறையின்-வற்புறுத்துஞ்சொற்களால். மெய்ப்பாடு அது. பயன்- இடங்குறித்துவற்புறுத்தல். (௰௯)

அருமையறிதல்.

அருமையறிதலென்பது-ஆடிடத்துய்த்து அகலாநின்றவன் ஆயவெள்ளத்தையும் அவ்விடத்தையும் நோக்கி, இவளை யாமெய்தினேமென்பது மாயமோ கனவோ இன்னதென்று அறியேன் இனியிவள் நமக்கு எய்தற்கு அரியவளென அவளது அருமையறிந்துவருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

புணர்ப்போனிலனும்விசும்பும்பொருப்புந்தன்பூங்கழலின் *
றுணர்ப்போதெனக்கணியாக்குந் தொல்லோன்றில்லைச்சூழ்பொழில்வா
யிணர்ப்போதணிகுழலேழைதன்னீர்மையிந்நீர்மையென்றாற் *
புணர்ப்போகனவோபிறிதோவறியேன்புகுந்ததுவே. (௰௭)

சுற்றமுமிடனுஞ் சூழலுநோக் கி
மற்றவளருமை மன்னனறிந்த து.

(இ-ள்.) பூங்கொத்துக்களை அணிந்த குழலையுடைய ஏழைதன துநீர்மை இத்தன்மையாயின், மண்ணையும் விண்ணையும் மண்ணி ன்கணுள்ள மலையையும் படைப்போன், தன்னுடைய பொலிவினை யுடைய திருவடியாகிய துணர்ப்போதுகளை எனக்குமுடியணியா க்கும் பழையோன், அவனது தில்லைக்கணுண்டாகிய சூழ்பொழி லிடத்து இவள் புகுந்தது, மாயமோ கனவோ! இரண்டுமன்றி வே றொன்றோ! இன்னதென்றறியேன். எ-று.

பூங்கழலென்பது பூப்போலுங் கழலென உவமைத்தொகையா ய்க் கழலென்னுந் துணையாய் நின்றதெனினுமமையும். வீரக்கழ லையுடைய துணர்ப்போதென் றுரைப்பினுமமையும். பொழில் வாயிணர்ப்போதென்பாருமுளர். பிறிதோவென்பதற்குநனவோ வென்பாருமுளர். புகுந்ததுவேயென்பதில் வகாரம் விசாரவகை யான்வந்தது. சுற்றம்-ஆயம். இடம்-அந்நிலம். சூழல்-அந்நிலத்து ள்ளும்புகுதற்கரிய அப்பொழில். மெய்ப்பாடு-மருட்கை. பயன்- தலைமகளதருமையுணர்தல். (௰௭)

பாங்கியையறிதல்.

பாங்கியையறிதலென்பது - அருமையறிந்து வருந்தாநின்ற த லைமகன் ஆயத்தோடு செல்லாநின்ற தலைமகளை நோக்க, அந்நிலை மைக்கண் அவளும் இப்புணர்ச்சி இவளுக்குப்புலனாங்கொல்லோ வென உட்கொண்டு எல்லாரையும்போலன்றித் தன்காதற்றோழி யைப் பல்காற் கடைக்கண்ணாற் பார்க்கக்கண்டு, இவள்போலும் இ வட்குச்சிறந்தாள் இதுவும் எனக்கோர்சார்பாமெனவுட்கொண்டு அவள்காதற்றோழியை அறியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

உயிரொன்றுளமுமொன்றொன்றேசிறப்பிவட்கென்னொடென்னப்
பயில்கின்றசென்றுசெவியுறநீள்படைக்கண்கள்விண்வாய்ச் *
செயிரொன்றுமுப்புரஞ்செற்றவன்றில்லைச்சிற்றம்பலத்துப் *
பயில்கின்றகூத்தனருளெனலாகும்பணிமொழிக்கே. (௰௮)

கடல்புரையாயத்துக் காதற்றோழி யை
மடவரல்காட்ட மன்னனறிந்த து.

(இ-ள்.) என்னோடு இவட்கு உயிருமொன்று மனமுமொன்று குரவர்களாற் செய்யப்படுஞ் சிறப்புக்களுமொன்றென்று சொல்லி, தாழ்ந்த மொழியையுடையாட்கு, செவியுறய்வண்ணம் நீண்டபடைபோலுங்கண்கள் இவள்கட்சென்று பயிலாநின்றன. அதனால் இவள்போலும் இவட்குச்சிறந்தாள். எ-று. விண்ணிடத்துக் குற்றத்தைப்பொருந்தின மூன்றுபுரத்தினையுங்கெடுத்தவன், தில்லைச்சிற்றம்பலத்தின்கண் இடைவிடாதாடுகின்ற கூத்தையுடையான், அவனதருளென்று துணிபலாம்பணிமொழிக்கெனக்கூட்டுக.

அருளென்றது- அருளான்வரும் ஆனந்தத்தை. மெய்ப்பாடு- பெருமிதம். பயன்-ஆற்றாமைநீங்குதல்.

இப்பதினெட்டுப்பாட்டும் இயற்கைப்புணர்ச்சியையும் அதனிமித்தமாகிய களவியையும் நுதலின. இதனை இயற்கைப்புணர்ச்சியெனினும், தெய்வப்புணர்ச்சியெனினும், முன்னுறுபுணர்ச்சியெனினும், காமப்புணர்ச்சியெனினும் ஒக்கும். (௧அ)

இயற்கைப்புணர்ச்சி முற்றிற்று.

பாங்கற்கூட்டம்.

இனிப்பாங்கற்கூட்டம்வருமாறு - தெய்வப்புணர்ச்சிபுணர்ந்த தலைமகன், தெருண்டுவரைதலைத்தெருளானாயின், தன்பாங்கனானால் இடந்தலைப்பாட்டானாதல் இரண்டனுளொன்றாற் சென்றெய்துதல் முறைமையென்ப. அவற்றுள்,—

பாங்கற்கூட்டமாவது- நினைதல் வினாத லுற்ற துரைத்தல், கழறன் மறுத்தல் கவன்றுரைத் தல்லே, வலியழி வுரைத்தல் விதியொடு வெறுத்த, லெதிர்ந்து கூற லேருக வீங்கி, யியலிடங் கேட்ட லியலிடங் கூறல், வற்புறுத் தல்குறி வழிச்சேறல் காண்டல், வியந்துரைத்தல் மெல்லிய றன்னைக், கண்டமை கூறல் கருத்துக் கேற்பச், செவ்வி செப்ப லவ்விடத் தேக, லீங்கிலவ நிற்க விடந்தலை தனக்கு, பாங்கவன் மெலிதல் பொழில்கண்டு மகிழ்த, லீங்கா மகிழ்வொடு நிலைகண்டு வியத்த, றளர்வகன் றுரைத்தன் மொழிபெற வருந்தல், கண்புதை வருத்தங் காவ ஞன்னவிட, னண்பொடு சென்று நன்மருங் கணைத, லின்றியமை யாமை யாயத் துய்த்த, னின்று வருந்த னிகழா நிறந்துந், தொன்று பாங்கற் றுறையென மொழிப.

(இ-ள்.) பாங்கனை நினைதல்- பாங்கன் வினாதல்- உற்றதுரைத்தல்- கழறியுரைத்தல்- கழற்றெதிர்மறுத்தல்- கவன்றுரைத்தல்- வலியழிவுரைத்தல்-விதியொடுவெறுத்தல்- பாங்கனொந்துரைத்தல்- இயலிடங்கேட்டல்- இயலிடங்கூறல்- வற்புறுத்தல்- குறிவழிச்சேறல்-குறிவழிக்காண்டல்- தலைவனைவியந்துரைத்தல்-கண்டமைகூறல்-செவ்விசெப்பல் - அவ்விடத்தேகல் - இப்பதினெட்டுக்கிளவியுநிற்க, இடந்தலைதனக்கும், மின்னிடைமெலிதல் - பொழில்கண்டுமகிழ்தல்-உயிரெனவியத்தல்- தளர்வகன்றுரைத்தல்-மொழிபெறவருந்தல்-நாணிக்கண்புதைத்தல்- கண்புதைக்கவருந்தல்- நாண்விடவருந்தல்-மருங்கணைதல்-இன்றியமையாமைகூறல், ஆயத்துய்த்தல்-நின்றுவருந்தல் என விவைமுப்பதும் பாங்கற்கூட்டமாம். எ-று. அவற்றுள்,—

பாங்கனை நினைதல்.

பாங்கனை நினைதலென்பது- தெய்வப்புணர்ச்சியிறுதிக்கட் சென்றெய்துதற் கருமைநினைந்து வருந்தாநின்ற தலைமகன் அவள் கண்ணாலறியப்பட்ட காதற்றோழியை நயந்து, இவள் அவட்குச் சிறந்த துணையன்றே அத்துணை எனக்குச் சிறந்தாளல்லள் எனக்குச் சிறந்தானைக்கண்டு இப்பரிசுரைத்தாற் பின்னிவளைச்சென்றெய்துதற் குறையில்லையெனத் தன்காதற்பாங்கனை நினையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பூங்கனையார்புனற்றென்புலியூர்புரிந்தம்பலத்து *
ளாங்கெனையாண்டுகொண்டாடும்பிரானடித்தாமரைக்கே *
பாங்கனையானன்னபண்பனைக்கண்டிப்பரிசுரைத்தா *
லீங்கெனையார்தடுப்பார்மடப்பாவையையெய்துதற்கே. (௩௧)

எய்துதற்கருமை யேழையிற்றோன்றப்
பையுளுற்றவன் பாங்கனை நினைந்தது.

(இ-ள்.) பூக்களையுடைத்தாய் முழங்குதனிறைந்த புனலையுடைத்தாகிய தென்புலியூ ரம்பலத்தின்கண்விரும்பி அவ்வாறென்னை யாண்டுகொண்டு ஆடும் பிரானுடைய அடியாகிய தாமரைக்கே பாங்காயுள்ளானை என்னையொக்கு மியல்புடையானைக் கண்டு நிகழ்ந்தவிப்பரிசையுரைத்தால், மடப்பாவையையெய்துதற்கு இவ்வுலகத்தின்கண் என்னைத்தடுப்பார்யாவர்? ஒருவருமில்லை. எ-று.

அம்பலத்துளாடும் பிரானெனவியையும். தென்புலியூர்புரிந்தம்பலத்துளாங்கெனை யாண்டுகொண்டென்பதற்குப் பிறவுமு

ணைப்ப. ஆங்கென்றார் ஆண்டவாறுசொல்லுதற்கருமையான். மழையினென்புழி இன்-ஏழனுருப, அது புறனடையாற்கொள்ளப்பட்டது. பையுள்-நோய். மயக்கமெனினுமமையும். மெய்ப்பாடு-அசைவுபற்றிவந்த அழுகை. என்னை, "இளிவேயிழவே யசைவே வறுமையென, விளிவில் கொள்கை யழுகை நான்கே" என்றாராகலின். பயன்- ஆற்றாமைநீங்குதல். மேற்றோழியால் என்குறைமுடிக்கலாமென்றுகருதிப் பெயர்ந்த தலைமகன் பாங்கனால் முடிப்பலெனக்கருதினானென்பது. என்னை, தமரான்முடியாக் கருமமுளவாயினன்றே பிறனைக் குறையுற வேண்டுவதென்பது.

பாங்கன்வினாதல்.

பாங்கன்வினாதலென்பது-தன்னைநினைந்து வாராநின்ற தலைமகனைத் தானெதிர்ப்பட்டு அடியிற்கொண்டு முடிகாறுநோக்கி, நின்னுடையதோள்கள் மெலிந்து நீயிவ்வாறாதற்குக்காரணமென்னோவென்று பாங்கன்முற்றூற்று வினவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

இறைவன்புனற்றில்லைச்சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளு *
முறைவானுயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழின் *
றுறைவாய்நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ *
விறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே. (உ௰)

கலிகெழுதிரடோண் மெலிவதுகண்டு
இன்னுயிர்ப்பாங்கன் மன்னனைவினாயது.

(இ-ள்.) காவலாயுள்ளமிக்க நீரையுடைய தில்லைச்சிற்றம்பலமாகிய நல்லவிடத்தும் என்னெஞ்சமாகிய தீயவிடத்தும் ஒப்பத்தங்குமவனது உயர்ந்த மதிலையுடைய கூடலின்கணாராய்ந்த ஒள்ளியவினிய தமிழின்றுறைகளிடத்து நுழைந்தாயோ? அன்றி ஏழிசையினது சூழலின்கட் புகுதலானோ, இறைவனே, பெரியவரைபோலுநின்றோள்கட்கு மெலியப் புகுந்தெய்தியதென்னோ? எ-று.

தமிழின்றுறைகளாவன அகமும் புறமுமாகிய பொருட்கூறு. ஏழிசையாவன குரல் முதலாயின. சூழலென்றது அவற்றானியன்ற பண்ணும் பாடலுமுதலாயினவற்றை. கொல் - கொலாமென விகாரித்தது. ஆம்-அசைநிலையெனினுமமையும். கலி-புகழான்வருமாரவாரம், தழைத்தவெனினுமமையும். மெய்ப்பாடு-அணங்குபற்றிவந்த அச்சம். என்னை, "அணங்கே விலங்கே கள்வர்தம் மிறையெனப், பிணங்கல் சாலா வச்ச நான்கே" என்றாராகலின். பயன்-தலைமகற்கு உற்றதுணர்தல். (உ௰)

உற்றதுரைத்தல்.

உற்றதுரைத்தலென்பது-எதிர்ப்பட்டுவினவாநின்ற பாங்கனுக்கு,நெருநலைநாட் கைலைப்பொழிற்கட் சென்றேன் அவ்விடத்து ஒருசிற்றிடைச்சிறுமான்விழிக்குறத்தியால் இவ்வாறாயினேனெனத்தனக்குற்றது கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

கோம்பிக்கொதுங்கிமேயாமஞ்ஞைகுஞ்சரங்கோளிழைக்கும் *
பாம்பைப்பிடித்துப்படங்கிழித்தாங்கப்பணைமுலைக்கே *
தேம்பற்றுடியிடைமான்மடநோக்கிதில்லைச்சிவன்றா *
ளாம்பொற்றடமலர்சூடுமென்னாற்றலகற்றியதே. (உக)

மற்றவன் வினவ
உற்ற துரைத்தது.

(இ-ள்.) ஓந்திக்கொதுங்கிப் புறப்பட்டிரைகவராத மயில் குஞ்சரத்தைக்கோளிழைக்கவல்ல பாம்பைப்பிடித்துப் படத்தைக்கிழித்தாற்போல, மானின் மடநோக்குப்போலும் நோக்கையுடையாளுடைய அப்பணைமுலையானே தேய்தலையுடைய துடிபோலுமிடை தில்லைக்கணுளனாகிய சிவனுடைய தாளாகிய பொன்போற் சிறப்புடைய பெரியதாமரைப்பூவைச் சூடுகின்ற எனதுவலியை நீக்கிற்று.எ-று.

குஞ்சரம் தான் உவமையன்றி உவமைக்கடையாய் அதனாற்றல் விளக்கிநின்றது. தடமலர் தான் உவமிக்கப்படும்பொருளன்றி உவமிக்கப்படும்பொருட் கடையாய் அதனாற்றல் விளக்கிநின்றது. அப்பணைமுலைக்கே யென்றிழித்தது இவள்முலையை நோக்கியன்று,முலையென்னுஞ் சாதியைநோக்கி. துடியிடையையுடைய மான்மடநோக்கி என்னாற்றலகற்றியது மஞ்ஞை பாம்பைப்பிடித்துப் படத்தைக்கிழித்தாற் போலுமெனக்கூட்டியுரைப்பாருமுளர். மெய்ப்பாடு-அழுகை. பயன்-பாங்கற்குணர்த்துதல். (உக)

கழறியுரைத்தல்.

கழறியுரைத்தலென்பது-உற்றதுரைப்பக் கேட்டபாங்கன், இஃது இவன்றலைமைப்பாட்டிற்குப்போதாதென உட்கொண்டு, நீ ஒரு சிறுமான் விழிக்கு யான் இவ்வாறாயினேனென்றல் நின்கற்பனைக்குப் போதாதெனக் கழறிக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

உளமாம்வகைநம்மையுய்யவந்தாண்டுசென்றும்பருய்யக் *
களமாம்விடமமிர்தாக்கியதில்லைத்தொல்லோன்கயிலை *
வளமாம்பொதும்பரின்வஞ்சித்துநின்றோர்வஞ்சிம்மருங்கு *
விளமான்விழித்ததென்றோவின்றெம்மண்ணலிரங்கியதே. (௨௨)

வெற்பனைத்தன் மெய்ப்பாங்கன்
கற்பனையிற் கழறியது.

(இ-ள்.) உளமாயும் இலமாயும் மாறிவாராது நாமொருபடியே உளமாம்வண்ணம் பிறவித்துன்பத்திற்பிழைக்கத் தான்வந்து நம்மையாண்டு உம்பரெல்லாந்தன்கட்சென்று பிழைக்க மிடற்றின்கணுளதாகு நஞ்சையமிர்தமாக்கிய தில்லைக்கணுளனாகிய பழையோனது கைலையில் வளவிய மாஞ்சோலைக்கண் வருத்துவதென் றறியாமல்நின்று வஞ்சிபோலு மருங்குலையுடையதோரிளமான் விழித்ததென்றோ எம்மண்ணல் இன்றிரங்கியது! இது நின்பெருமைக்குத்தகாது எ-று.

நம்மையென்றது தம்மைப்போல்வாரை. களமார்விடமென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு எள்ளல்பற்றிவந்தநகை. என்னை, "எள்ள விளமைபேதைமை மடனென், றுள்ளப் பட்ட நகைநான் கென்ப.,, என்றாராகலின். பயன்-கழறுதல். (௨௨)

கழற்றெதிர்மறுத்தல்.

கழற்றெதிர்மறுத்தலென்பது-காதற்பாங்கன்கழறவும் கேளானாய்ப் பின்னும் வேட்கைவயத்தனாய்நின்று, என்னாற்காணப்பட்டவடிவை நீகண்டிலை கண்டனையாயிற் கழறாயென்று அவனோடு மறுத்துரைத்து வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சேணிற்பொலிசெம்பொன்மாளிகைத்தில்லைச்சிற்றம்பலத்து *
மாணிக்கக்கூத்தன்வடவான்கயிலைமயிலைமன்னும் *
பூணிற்பொலிகொங்கையாவியையோவியப்பொற்கொழுந்தைக்
காணிற்கழறலைகண்டிலைமென்றோட்கரும்பினையே. (௨௩)

ஆங்குயிரன்ன பாங்கன்கழற
வளர்ந்தருவெற்பனுளந்தளர்ந்துரைத்தது.

(இ-ள்.) சேய்மைக்கண் விளங்கித்தோன்றுநின்ற செம்பொனொளிபன்ற மாளிகையையுடைய தில்லைச்சிற்றம்பலத்தின்கணுளனாகிய மாணிக்கம்போலுங் கூத்தனது வடக்கின்கணுண்டாகிய பெரிய கைலைக்கண்வாழு மயிலை, பொருந்திய பூண்களாற் பொலிகி

ன்ற கொங்கையையுடைய என்னுயிரை, ஓவியமாகிய பொற்கொழுந்தைக் கண்டனையாயிற் கழறாய், மென்றோளையுடைய கரும்பைக் கண்டிலை. எ-று.

மாணிக்கக்கூத்தனென்புழி மாணிக்கத்தைக் கூத்திற்குவமையாகவுரைப்பினுமமையும். பொற்கொழுந்து - பொன்னைவண்ணமாகக்கொண்டெழுதியகொழுந்து. மென்றோட்கரும்பினையென்பதற்கு மெல்லியதோளிலெழுதிய கரும்பையுடையாளையெனினுமமையும். மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தவருத்தம்பற்றிவந்தவிளிவரல். என்னை, "மூப்பே பிணியே வருத்த மென்மையோ, டியாப்புற வந்த விளிவர னான்கே.,, என்றாராகலின். பயன்-பாங்கனையுடம்படுவித்தல். பாங்கன் கழறவும் இவ்வகைமறுத்துரைத்தானென்பது. (௨௫)

கவன்றுரைத்தல்.

கவன்றுரைத்தலென்பது- மறுத்துரைத்து வருந்தாநிற்பக்கண்டபாங்கன் ஒருகாலத்துங்கலங்காதவுள்ளம் இவ்வாறு கலங்குதற்குக் காரணமென்னோவெனத் தலைவனுடன் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

விலங்கலைக்கால்விண்டுமேன்மேலிடவிண்ணுமண்ணுமுந்நீர்க் *
கலங்கலைச்சென்றவன்றுங்கலங்காய்கமழ்கொன்றைதுன்று *
மலங்கலைச்சூழ்ந்தசிற்றம்பலத்தானருளில்லவர்போற் *
றுலங்கலைச்சென்றிதென்னோவள்ளலுள்ளந்துயர்கின்றதே (௨௬)

கொலைக்களிற்றண்ணல் குறைநயந்துரைப்பக்
கலக்கஞ்செய்பாங்கன் கவன்றுரைத்தது.

(இ-ள்) மலைகளைக் காற்றுப்பிளந்து மேலுமேலுமிட வானுலகும் மண்ணுலகும் முந்நீராற்கலக்குதலையடைந்தவிடத்துங் கலங்குந்தன்மையையல்லை, கமழாநின்றகொன்றைப் பூநெருங்கிய மாலைய முடிமாலைபாகச் சுற்றிய சிற்றம்பலத்தானது அருளையுடையாரல்லாதாரைப்போலத் துளங்குதலையடைந்து, வள்ளலே, நினதுள்ளந்துயர்கின்றது இஃதென்னோ! எ-று.

விண்டென்பது பிளந்தென்பதுபோலச் செய்வதன்றொழிற்குஞ் செய்விப்பதன்றொழிற்கும் பொது. இவனது கலக்கத்திற்குக்காரணமாய் அதற்கு முன்னிகழ்ந்தனோக்கிச் சென்றவன்றுமெனவிறந்தகாலத்தாற்கூறினான். வள்ளலென்பது ஈண்டுமுன்னிலைக்

கன்வர்சது. இதென்றோவென்பது வினாவுதல் கருதாது அவனது கவற்சியைவிளக்கிநின்றது. கலக்கஞ்செய்பாங்கன்-கலங்கியபாங்கன். தலைமகனைக்கலக்கிய பாங்கனெனினுமமையும். மெய்ப்பாடு-இளிவரல். பயன்-கழறுதல். மேற்பொதுவகையாற்கழறினான், ஈண்டுவிசேடவகையாற்கழறினானென்பது. (௨௪)

வலியழிவுரைத்தல்.

வலியழிவுரைத்தலென்பது- பாங்கன்கவன்றுரையாநிற்ப,முன்பு இத்தன்மையேனாகிய யான் இன்று ஒருசிறுமான்விழிக்கு இவ்வாறாயினேனெனத் தலைமகன் தன் வலியழிந்தமை கூறிவருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தலைப்படுசால்பினுக்குந்தளரேன்சித்தம்பித்தனென்று *
மலைத்தறிவாரில்லையாரையுந்தேற்றுவனெத்துணையுங் *
கலைச்சிறுதிங்கண்மிலைத்தசிற்றம்பலவன்கயிலை *
மலைச்சிறுமான்விழியாலழிவுற்றுமயங்கினனே. (௨௫)

நிறைபொறைதேற்ற நீதியொடுசால் பு
மறியுறுநோக்கிற்கு வாடினேனென்ற து.

(இ-ள்.) முன் தலைமையாய அமைதியானுமுள்ளந்தளரேன், பிறழவுணர்ந்தாயென்று மாறுபட்டறிவாருமில்லை, பிறழவுணர்ந்தார் யாவரையும் மிகவுந் தெளிவியாநிற்பேன், இப்பொழுது ஒருகலையாகியசிறியபிறையைச்சூடியசிற்றம்பலவனது கைலைமலைக்கணுண்டாகிய சிறுமானினது விழியால் அழிந்துமயங்கினேன் எ-று.

சால்பழிந்துள்ளந்தளரேனென்பான் சால்பினுக்குந் தளரேனென்றான். தலைப்படு சால்பென்பதற்கு எல்லாப்பொருளுஞ்சிவனைத்தலைப்பட்டுச்சென்றொடுங்கும் ஊழியிறுதியென்றுரைப்பினுமமையும். நிறையும் பொறையுஞ் சால்பும் தலைப்படு சால்பென்றதனாற்பெற்றாம். பித்தனென்று மலைத்தறிவாரில்லையென்றதனால் தேற்றம்பெற்றாம். யாரையுந் தேற்றுவனென்றதனால் நீதிபெற்றாம், கலங்கினாரைத் தெளிவித்தல் நீதியாகலான். ஈண்டுத்தலையுயர்த்தலென்னுங் குற்றந்தங்காது, சால்புமுதலாயினவற்றை இப்பொழுதுடையேனென்னாமையின். சால்பு. "அன்புநாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ, டைந்துசால் பூன்றிய தூண்.", என்பதனானறிக. நோக்கிற்கு-நோக்கினால். மெய்ப்பாடு-அழுகை. பயன்-ஆற்றாமையுணர்த்தல். இதுவும் மேலதேபோலமறுத்துரைத்தானென்பது. (௨௫)

விதியொடுவெறுத்தல்.

விதியொடுவெறுத்தலென்பது - வலியழிந்தமைகூறி வருந்தாநின்ற தலைமகன் பாங்கனோடுபுலந்து வெள்கி, யான்செய்த நல்வினையும்வந்து பயன்றந்ததில்லையெனத் தன் விதியோடு வெறுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

நல்வினையுந்நயந்தந்தின்றுவந்துநடுங்குமின்மேற் *
கொல்வினைவல்லனகோங்கரும்பாமென்றபாங்கன்சொல்ல *
வில்வினைமேருவில்வைத்தவன்றில்லைதொழாரின்வெள்கித் *
தொல்வினையாற்றுயருமெனதாருயிர்துப்புறவே. (௨௬)

கல்விமிகுபாங்கன் கழறவெள்கி - ச்
செல்வமிகுசிலம்பன் றெரிந்துசெப்பிய - து.

(இ-ள்.) கொல்லுந்தொழிலைவல்லன நடுங்கு மின்மேலுண்டாகிய கோங்கரும்புகளாமென்று யான் பற்றுக்கோடாக நினைந்திருந்த பாங்கன்றானே இகழ்ந்துசொல்லுதலால், நாணிப் பழையதாகிய தீவினையாற்றுயருறாநின்ற எனது அரியவுயிர் வலியுறும்வண்ணம், யான் உம்மைச்செய்த நல்வினையும் வந்து பயன்றந்ததில்லை. எ-று. வில்லின்றொழில்வினை மேருவின்கண்வைத்தவனது தில்லைதொழாதாரைப்போல வெள்கியெனக்கூட்டுக.

உம்மை-எச்சவும்மை, கல்வியேயுமன்றியென்றவாறு. நல்வினை தீவினையைக்கெடுக்குமாயினும் யான்செய்த நல்வினை அது செய்ததில்லையென்பது கருத்து. நாணினார்மேனி வெள்குதலான், வெள்கியென்றான். துப்புறவென்னுமெச்சம் தந்திலதென்பதில் தருதலென்பதனோடு முடிந்தது. துப்புறத்துயருமென்றியைத்துமிகவுந் துயருமென முற்றாகவுரைப்பினுமமையும். நல்வினையுந் நயப்பத்தந்ததென்பது பாடமாயின், குறிப்புநிலையாகக்கொள்க. மெய்ப்பாடும் பயனும் அவை. (௨௬)

பாங்கனோந்துரைத்தல்.

பாகனொந்துரைத்தலென்பது- விதியொடுவெறுத்து வருந்தாநிற்பக் கண்டபாங்கன், அமிர்தமும் மழையும் தங்குணங்கெடினும் நின்குணங்கெடாதநீ ஒருத்திகாரணமாக நின்னிலைத்தலைத நினையாதவாறு இவ்வாறாகிய் எனது தீவினையின்பயனும் இத்தன்மைத்தன்றோவெனத் தானும் அவனோடுகூட வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஆலத்தினாலமிர்தாக்கியகோன்றில்லையம்பலம்போற் *
கோலத்தினாள்பொருட்டாகவமிர்தங்குணங்கெடினும் *
காலத்தினான்மழைமாறினுமாறாக்கவிகைநின்பொற் *
சீலத்தைநீயுநினையாதொழிவதென்றீவினையே. (௨௭)

இன்னுயிர்ப்பாங்க னேழையைச்சுட் டி
நின்னதுதன்மை நினைந்திலையென்ற து.

(இ-ள்.) நஞ்சால் அமிர்தத்தையுண்டாக்கிய இறைவனது தில்லையம்பலம்போலும் அழகையுடையாளொருத்தி காரணமாக, அமிர்தம் தன்குணங்கெடினும் பெய்யுங்காலத்து மழை பெய்யாது மாறினும் மாறாத வண்மையையுடைய நினது பொன்போலப் பெறுதற்கரிய ஒழுக்கத்தை, அறிவதறிந்தநீயும், அறியாதொழிகின்றது எனது தீவினைப்பயன். எ-று.

நஞ்சின்றன்மையொழிந்து அமிர்தஞ்செய்யுங் காரியத்தைச் செய்தலின், அமிர்தாக்கியவென்றார். ஆலத்தினாலென்னு மூன்றாவது பாலாற்றயிராக்கியவென்பதுபோலநின்றது. நஞ்சினாலோர் போனகத்தையுண்டாக்கிய வெனினுமமையும். அம்பலம்போலுமென்னு முவமை பட்டாங்குசொல்லுதற்கண்வந்தது. புகழ்தற்கண் வந்ததென்பார் அம்பலம்போற் கோலத்தினாள் பொருட்டேயாயினுமாகவென முற்றாகவுரைப்ப. மாறாக்கவிகையென வண்மை மிகுத்துக்கூறினான், தானுமொன்றிரக்கின்றானாகலின். மாறாக்கவிகைநீயுமெனக்கூட்டினுமமையும். மெய்ப்பாடு - இளிவரல். பயன்-தலைமகனைத்தெருட்டல். (௨௭)

இயலிடங்கேட்டல்.

இயலிடங்கேட்டலென்பது-தலைமகனுடன்கூட வருந்தாநின்றபாங்கன் யானும் இவனுடன்கூடவருந்தினால் இவனை ஆற்றுவிப்பாரில்லையென அது பற்றுக்கோடாகத் தானாற்றிநின்று, அது கிடக்க நின்னாற்காணப்பட்டவடிவுக்கு இயல் யாது இடம் யாது கூறுவாயாகவென அவளுடைய இயலும் இடமுங்கேளாநிற்றல். அதற்குச்செய்யுள்.

நின்னுடைநீர்மையுநீயுமிவ்வாறுநினைத்தெருட்டு *
மென்னுடைநீர்மையிதென்னென்பதேதில்லையோர்கொண்முக்கண் *
மன்னுடைமால்வரையோமலரோவிசும்போசிலம்பா *
வென்னிடம்பாதியனின்னையின்னேசெய்தவீர்ங்கொடிக்கே. ௨௮

கழுமலெய்திய காதற்றோழ ன்
செழுமலைநாடனைத் தெரிந்துவினவி து.

(இ-ள்.) நின்னுடைய வியல்பாகியகுணமும் இவ்வாறாயிற்று, ஒருகாலத்துங்கலங்காதநீயும் இத்தன்மையையாயினாய், இனி நின்னைத்தெளிவிக்கும் என்னுடையவியல்பு யாதென்று சொல்லுவதோ! அதுகிடக்க, சிலம்பா, நின்னையித்தன்மையையாகச்செய்த இனியகொடிக்குத் தில்லைக்கணுள்ளாகிய அழகுபொருந்திய மூன்றுகண்ணையுடையமன்னனது பெரியகைலைமலையோ தாமரைப்பூவோ வாழ்வோ இடம் யாது? இயல் யாது? கூறுவாயாக. எ-று.

என்னென்பதேயென்னு மேகாரம் வினா, அசைநிலையெனினு மமையும். பிறர்கண்போலாது மூன்றாயிருந்தனவாயினும் அவைதாம் ஓரழகுடையவென்னுங்கருத்தால், ஏர்கொண்முக்கணனென்றார். கழுமல்- மயக்கம். மெய்ப்பாடு- அச்சம். பயன் - தலைமகனையாற்றுவித்தல். (௨௮)

இயலிடங்கூறல்.

இயலிடங்கூறலென்பது-இயலிடங்கேட்டபாங்கனுக்குத் தான் அவளையெய்தினாற்போலப் பெரியதோ ராற்றலையுடையனாய் நின்று, என்னாற்காணப்பட்டவடிவுக்கு இயல் இவை இடம் இது என்று இயலும் இடமுங் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

விழியாற்பிணையாம்விளங்கியலான்மயிலாமிழற்று *
மொழியாற்கிளியாமுதுவானவர்தமுடித்தொகைகள் *
கழியாக்கழற்றில்லைக்கூத்தன்கயிலைமுத்தம்மலைத்தேன் *
கொழியாத்திகழும்பொழிற்கெழிலாமெங்குலதெய்வமே. (௨௯)

அழுங்கலெய்திய வாருயிர்ப்பாங்கற்கு ச்
செழுங்கதிர்வேலோன் றெரிந்துசெப்பிய து.

(இ-ள்.) தலைவராகிய இந்திரன்முதலாகிய தேவர்களுடைய முடித்திரள்கள் நீங்காதகழலையுடையதில்லைக்கூத்தனது கைலைமலையிடத்து முத்துக்களைப்பெருந்தேன்கொழித்து விளங்கும்பொழிற்கு அழகாம் எம்முடைய நல்லதெய்வம் விழிகளாற் பிணையாம், விளங்காநின்ற இயலான் மயிலாம், கொஞ்சுமொழியாற் கிளியாம். எ-று.

இயல் இன்னவென்றும் இடம் கைலைப்பொழிலென்றுங் கூறப்பட்டனவாம். முத்தம் -யானைக்கோட்டினும் வேயினும் பிறந்தமுத்து. அழுங்கல்-இரக்கம். செழுமை-வளமை. மெய்ப்பாடு-உவகை. பயன்-பாங்கற்குணர்த்தல். (௨௯)

வற்புறுத்தல்.

வற்புறுத்தலென்பது-இயலிடங்கூறக்கேட்டபாங்கன் நீ சொன்ன கைலையிடத்தே சென்று இப்பெற்றியாளைக்கண்டு இப்பொழுதேவருவன் அவ்வளவும் நீ யாற்றுவாயாதல் வேண்டுமெனத் தலைமகனை வற்புறுத்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

குயிலைச்சிலம்படிக்கொம்பினைத்தில்லையெங்கூத்தப்பிரான் *
கயிலைச்சிலம்பிற்பைம்பூம்புனங்காக்குங்கருங்கட்செவ்வாய் *
மயிலைச்சிலம்பகண்டியான்போய்வருவன்வண்பூங்கொடிகள் *
பயிலச்சிலம்பெதிர்கூய்ப்பண்ணைநண்ணும்பளிக்கறையே. (௫௰)

பெயர்ந்துரைத்த பெருவரைநாட னை
வயங்கெழுபுகழோன் வற்புறுத்திய து.

(இ-ள்.) சிலம்பனே, குயிலை, சிலம்படியையுடையதோர் கொம்பை, தில்லைக்கணுளனாகிய எம்முடைய கூத்தப்பிரானது கைலையாகிய சிலம்பின்கட் பைம்பூம்புனத்தைக்காக்குங் கரியகண்ணையுஞ் சிவந்தவாயையுமுடையதோர்மயிலை, வளவிய பூவையுடைய கொடிகள்போலும் ஆயத்தார்நெருங்க அவரோடு சிலம்பிற்கெதிர்கூவித் தான் விளையாட்டைப்பொருந்தும் பளிக்கறைக்கண் யான்சென்று, கண்டுவருவேன், நீ யாற்றுவாயாக. எ-று.

கூத்தப்பிரான் என்பது கூத்தனாயினும் பிரானாயுள்ளான். எ-று. பெயர்ந்துரைத்தல்-கழறமறுத்துரைத்தல். ஆற்றாத்தன்மையனைப் பெயர்த்து இயலும் இடனுங்கூறியவெனினுமமையும். வயவென்னுமுரிச்சொல் விகாரவகையால் வயமென நின்றது. சிறுபான்மை மெல்லெழுத்துப்பெற்றதெனினுமமையும். கெழு-சாரியை. மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-வற்புறுத்தல். (௫௰)

குறிவழிச்சேறல்.

குறிவழிச்சேறலென்பது-தலைமகனை வற்புறுத்தி அவன்குறிவழிச்செல்லாநின்ற பாங்கன் இத்தன்மையாளை யான் அவ்விடத்துக்காணலாங்கொல்லோவென அந்நினைவோடு செல்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கோடுங்கால்குலவரையேழேழ்பொழிலெழில்குன்றுமன்று *
நடுங்காதவனைநடுங்கநுடங்குநடுவுடைய *
விடங்காலயிற்கண்ணிமேவுங்கொலாந்தில்லையீசன்வெற்பிற் *
றடங்கார்தருபெருவான்பொழினீழலந்தண்புனத்தே. (௫௧)

அறைகழலண்ண லருளிலவழி யே
நிறையுடைப்பாங்கனினைவொடுசென்றது.

(இ-ள்.) கொடியகாற்றாற் குலமலைகளேழும் பொழிலேழும் அழகுகெடும் ஊழியிறுதியாகிய அன்றும் நடுங்காதவனை நடுங்குவிக்கும் இடையையுடைய நஞ்சைக்காலும் வேல்போலுங் கண்ணையுடையாள் தில்லைக்கண்ணுளனாகிய ஈசனது வெற்பிடத்துப் பெரிய முகில்போலும் மிகவும் பெரிய பொழிலினீழலையுடைய குளிர்ந்தபுனத்தின்கண் மேவுமோ மேவாளோ! எ-று.

கொடுங்காலெனச் சந்தநோக்கித் திரியாது நின்றது. கொடுங்காலுமெனவெண்ணினுமமையும். நடுங்க நடுங்குமென்னுஞ் சொற்கள் ஒருசொன்னீரவாய் நடுக்குமென்னும் பொருள்பட்டு இரண்டாவதற்கு முடிபாயின. ஐகாரம் அசைநிலையெனினுமமையும். தருவென்பது ஒருவகைவாய்பாடு. தடங்கார் தருபெருவான்பொழிலென்பதற்குக் கார்தங்கும்பொழிலெனினுமமையும். நிறை- ஐம்பொறிகளையுமடக்குதல். மெய்ப்பாடு-பெருமிதஞ்சார்ந்த மருட்கை. பயன்-உசாவியுணர்தல். (௨௧)

குறிவழிக்காண்டல்.

குறிவழிக்காண்டலென்பது - குறிவழிச்சென்றபாங்கன் தலைவியை அவன் காணாமல் தானவளைக் கண்டதோரணிமைக்கணின்று, அவன்சொன்ன இடமும் இதுவே இயலும் இவையே இவளும் அவளேயென்று ஐயமறத் தெளியக்காணுநிற்றல். அதற்குச்செய்யுள்.

வடிக்கணிவைவஞ்சியஞ்சுமிடையிதுவாய்பவளந் *
துடிக்கின்றவாவெற்பன்சொற்பரிசேயான்றொடர்ந்துவிடா *
வடிச்சந்தமாமலரண்ணல்விண்ணோர்வணங்கம்பலம்போற் *
படிச்சந்தமுமிதுவேயிவளேயப்பணிமொழியே. (௨௨)

குளிர்வரைநாடன் குறிவழிச்சென் று
தளிர்புரைமெல்லடித் தையலைக்கண்டது.

(இ-ள்.) அவன்கூறிய வடுவகிர்போலுங்கண்களும் இவையே, வஞ்சிக்கொம்பஞ்சு மிடையும் இதுவே, வெற்பன் சொற்பரிசே வாய்ப்பவளந் துடித்தாற்போலத் துடிக்கின்றவாறென்! அதனால், ஓருணர்வில்லாதயானும் பற்றி விடமாட்டாத அடியாகிய சந்தமாமலரையுடைய தலைவனது விண்ணோர்வந்துவணங்கும் அம்பலம்போலும் ஒப்பும் இதுவே, அப்பணிமொழியும் இவளே! எ-று.

வெற்பன்சொற்பரிசேயென்றது - இதனையவன் தப்பாமற்கூறியவாறென்னை. எ-று. வடியென்பது வடுவகிருக்கோர்பெயர். அதாத்திற்றுத்துடித்தல் இயல்பாகக்கூறுப. பவளந்துடிக்கின்றவா என்பதற்குப் பவளம்போலப்பாடஞ்செய்கின்றவாறு என்னென்றுரைப்பாருமுளர். படிச்சந்தமென்பது வடமொழித்திரிபு. மெய்ப்பாடு- பெருமிதம். பயன்-தெளிதல். (௫௨)

தலைவனை வியந்துரைத்தல்.

தலைவனைவியந்துரைத்தலென்பது - குறிவழிக்கண்டபாங்கன் இவ்வுறுப்புக்களையுடைய இவளைக்கண்டு பிரிந்து இங்குநின்று அங்குவந்து யான்கழறவும் ஆற்றி அத்தன்மையுந் தப்பாமற் சொன்ன அண்ணலே திண்ணியானெனத் தலைமகனை வியந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

குவளைக்களத்தம்பலவன்குரைகழல்போற்கமலத் *
தவளைப்பயங்கரமாகநின்றாண்டவவயவத்தி *
னிவளைக்கண்டிங்குநின்றங்குவந்தத்தனையும்பகர்ந்த *
கவளக்களிற்றண்ணலேதிண்ணியானிக்கடலிடத்தே. (௫௩)

நயந்தவுருவு நலனுங்கண்டு
வியந்தவனையே மிகுத்துரைத்தது.

(இ-ள்.) குவளைப்பூப்போலுந் திருமிடற்றையுடைய அம்பலவனுடைய ஒலிக்குங் கழலையுடைய திருவடிபோலுந்தாமரைப்பூவிலிருக்குந் திருமகளைத் தாமவட்குப் பயத்தைச்செய்வனவாகநின்று அடிமைகொண்ட உறுப்புக்களையுடைய இவளைக்கண்டு பிரிந்து இங்குநின்றும் அவ்விடத்துவந்து யான்கழறவும் ஆற்றி அவ்வளவெல்லாங்கூறிய கவளக்களிற்றையுடைய அண்ணலே இவ்வுலகத்துத் திண்ணியான். எ-று.

இவளைக்கண்டென்றது இவளுடைய நலத்தைக்கொண்டாடியவாறன்று, முன்னங்கே தலைவனுடைய பொலிவழிவுகண்டு இங்கே வந்தவன் இங்குமிவளுடைய பொலிவழிவுகண்டு இலேசித்து இவளித்தன்மையளாக இங்கே யிவளைப்பிரிந்து அங்கேவந்து அத்துணையும்பகர்ந்தவனே திண்ணியானென்று இருவருடைய அனுராகமுங்கூறியவாறு. கவளக்களிறு- தான்விரும்புங்கவளம்பெற்று வளர்ந்தகளிறு. நயந்த-தலைமகனயந்த. மெய்ப்பாடு- மருட்கையைச்சார்ந்த அச்சம். பயன்-தலைமகனைவியத்தல். (௫௩)

கண்டமைகூறல்.

கண்டமைகூறலென்பது - தலைமகனை வியந்துரைத்தபாங்கன் விரைந்துசென்று, தானவளைக்கண்டமை தலைமகனுக்குப் பிடியிசைவைத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பணந்தாழரவரைச்சிற்றம்பலவர்பைம்பொற்கயிலைப் *
புணர்ந்தாங்ககன்றபொருகரியுன்னிப்புனத்தயலே *
மணந்தாழ்பொழிற்கண்வடிக்கண்பரப்பிமடப்பிடிவாய் *
நிணந்தாழ்சுடரிலைவேலகண்டேனென்றுநின்றதுவே. (௫௪)

பிடியிசைவைத்துப் பேதையதுநிலைமை
அடுதிறலண்ணற் கறிபவுரைத்தது.

(இ-ள்.) வாய்க்கணிணந்தங்கிய சுடரிலைவேலையுடையாய், பணந்தாழ்ந்த அரவையணிந்த அரையையுடைய சிற்றம்பலவரது பசும்பொன்னையுடைய கைலைக்கண், கூடி அவ்விடத்துநின்றுமகன்றபொருகரியைநினைந்து, புனத்திற்கயலே மணந்தங்கிய பொழிற்கண் வடுவகிர்போலுங் கண்களைப்பரப்பி மடப்பிடியொன்றுநின்றதனைக் கண்டேன். எ-று.

பணந்தாழ்தல் - முடிந்துவிடுதலாற்சுருங்கல்போலத்தாழ்தல். தங்குதலெனினுமமையும். ஆங்ககன்றவென்புழி நின்றென ஐந்தாம்வேற்றுமைப் பொருளுணரநிற்பதோரிடைச்சொல்வருவித்துரைக்கப்பட்டது. புனத்தயலேயென்றான், புனத்துவிளையாடும் ஆயத்தைநீங்கிநிற்றலின். வடிக்கண்பரப்பியென்றான், இன்னதிசையால்வருமென்றறியாது சுற்றெங்குநோக்குதலின். கைலைக்கணென்பதூஉம், புனத்தயலென்பதூஉம், பொழிற்கணென்பதூஉம், நின்றதென்னுந்தொழிற்பெயரோடுமுடியும். நின்றதுவேயென்புழி வகாரஞ்சந்தநோக்கி வந்தது விரிக்கும்வழி விரித்தறியாற்படும். மெய்ப்பாடு உவகை. பயன்-தலைமகனையாற்றுவித்தல்.

செவ்விசெப்பல்.

செவ்விசெப்பலென்பது-பிடியிசை வைத்துக்கூறக்கேட்ட தலைமகன் அது தனக்குச்செவ்விபோதாமையிற் பின்னும் ஆற்றாமைநீங்காதாயினான், அதுகண்டு அவனை ஆற்றுவிப்பதுகாரணமாக அவனுக்கு அவளவயங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

கயலுளவேகமலத்தலர்மீதுகனிபவளத் *
தயலுளவேமுத்தமொத்தநிரையானம்பலத்தி *
னியலுளவேயிணைச்செப்புவெற்பாநினதூர்க்கொடிமேற் *
புயலுளவேமலர்சூழ்ந்திருடங்கிப்புரள்வனவே. (௫௪)

அற்புதன்கைலை மற்பொலிசிலம்ப ற்
கவ்வுருக்கண்டவன் செவ்விசெப்பிய து.

(இ-ள்.) வெற்பா, நினது ஊர்க்கொடிக்கண் தாமரைப்பூவின்மேற்கிடப்பன சிலகயல்களுளவே, கனிந்தபவளத்திற்கயல் இனமொத்தநிரையாகிய முத்துக்களுளவே, இணையாகியசெப்பு அவனது அம்பலத்தி னியல்பையுடையனவுளவே, மாலைசூழ்ந்து இருள்செறிந்துகிடந்து புரள்வன புயலுளவே, உளவாயின் யான்கண்டவுருவம் நீ கூறியவுருவமாம். எ-று.

அரனம்பலத்தினியல்-ஆறாம்வேற்றுமைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. சூழ்ந்தென்பதூஉம், தங்கியென்பதூஉம், சினைவினைப்பாற்பட்டு முதல்வினைகொண்டன. மலர் சினைபோலக் குழற்கின்றியமையாமையிற் சினைப்பாற்பட்டது. புயல் திரண்டாற்போலுமென்பது தோன்றப் புரள்வனவெனப் பன்மையாற் கூறினான். மெய்ப்பாடும் பயனும் அவை. (௫௫)

அவ்விடத்தேகல்.

அவ்விடத்தேகலென்பது - செவ்விசெப்பக்கேட்ட தலைமகன் இவ்வாறு காணப்பட்டதுண்டாயின் அது என்னுயிரெனத் தானவ்விடநோக்கிச் செல்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

எயிற்குலமூன்றிருந்தீயெய்தவெய்யவன்றில்லையொத்துக் *
குயிற்குலங்கொண்டுதொண்டைக்கனிவாய்க்குளிர்முத்தநிரைத் *
தயிற்குலவேல்கமலத்திற்கிடத்தியன்னநடக்கு *
மயிற்குலங்கண்டதுண்டேலதுவென்னுடைமன்னுயிரே. (௫௬)

அரிவையதுநிலைமையறிந்தவனுரைப் ப
எரிகதிர்வேலோனேகிய து.

(இ-ள்.) எயிற்சாதிமூன்றும் பெரியதீயையெய்த அவற்றையெய்தவனது தில்லையையொத்துக் குயிலாகிய சாதியைக்கொண்டு தொண்டைக்கனியிடத்துக் குளிர்ந்தமுத்தங்களை நிரைத்துக் கூர்மையையுடைய நல்லவேலைக் கமலத்தின்கட்கிடத்தி அன்னம்போலநடப்பதோர் மயிற்சாதி காணப்பட்டதுண்டாயின், அது எனது நிலைபெறுமுயிர். எ-று.

எயிற்குலமூன்றென்றார், அவை இரும்பு, வெள்ளியம், பொன் னுமாகிய சாதிவேறுபாடுடைமையின். குயிற்குலங் கொண்டெ ன்றான், மொழியாற் குயிற்றன்மையை யுடைத்தாகலின். தொண் டைக்கனிவாயென்பதற்குத் தொண்டைக்கனிபோலும் வாயென் பாருமுளர். மெய்ப்பாடு-உவகை. பயன்-ஆற்றாமைநீங்குதல். ()

இவைநிற்க இடந்தலைப்பாட்டுக்குமாமாறு சொல்லுமாறு.

மின்னிடைமெலிதல்.

மின்னிடைமெலிதலென்பது- தெருநல்நாளில் தலையளிசெய்து நின்னிற்பிரியேன் பிரியினும் ஆற்றேனென்று கூறிப் பிரிந்தவர் வேட்கைமிகுதியால் இடமறியாது ஆயத்திடைவருவார்கொல்லோவென்னும் பெருநாணினானும், ஆற்றாமையான் இறந்துபட்டார்கொல்லோவென்னும் பேரச்சத்தினானும், யாருமில்லொருசிறைத் தனியேநின்று, தலைமகனை நினைந்து, தலைமகள் மெலியாநிற்றல் அதற்குச்செய்யுள்.

ஆவியன்னாய்கவலேலகலேமென்றளித்தொளித்த *
வாவியன்னார்மிக்கவாவினராய்க்கெழுமற்கழிவுற் *
றாவியன்னார்மன்னிபாடிடஞ்சேர்வர்கொலம்பலத்தெம் *
மாவியன்னான்பயிலுங்கயிலாயத்தருவரையே. (௬௭)

மன்னனை நினைந்து
மின்னிடை மெலிந்தது.

(இ-ள்.) தலையளிசெய்து ஆவியையொப்பாய் கவலாதொழி நின்னை நீங்கேமென்றுசொல்லி மறைந்த என்னுவியையொப்பார், மிக்கவிருப்பத்தையுடையராய்க் கெழுமுதல்காரணமாக நெஞ்சழிதலான், இடமறியாது, அம்பலத்தின்கணுளனாகிய எம்மாவியையொப்பான் அடுத்துவாழுங் கைலாயத்தின்கட் பிறராலெய்துதற்கரிய தாழ்வரையிடத்து, ஆவியையொக்கும் ஆயத்தார் நிலைபெற்று விளையாடும் அவ்விடத்து,அவர்காண வந்துபொருந்துவரோ! எ-று.

அளித்தல்-பிரிகின்றகாலத்துச்செய்த தலையளியெனினுமமையும். மிக்கவென்பது கடைக்குறைந்துநின்றது. ஆயத்திடைவருவர்கொல்லென ஐயத்துள் ஒருதலையேகூறினான், பெருநாணினளாதலின். மெய்ப்பாடு- அச்சத்தைச்சார்ந்த மருட்கை. பயன்-உசாவியாற்றாமைநீங்குதல். ஆயவெள்ளத்துள்ளே வருவர்கொல்லோ வென்னும் பெருநாணினானும்,ஆற்றாமையான் இறந்துபட்டனர்

சொல்லோவென்னும் பேரச்சத்தினானும் மீதூரப்பட்டுத் தன்றன்மையளன்றிநின்று இவ்வகை உசாவினானென்பது. (௧௭)

பொழில்கண்டுமகிழ்தல்.

பொழில்கண்டுமகிழ்தலென்பது-தலைமகளைநோக்கிச் செல்லாநின்ற தலைமகன் முன்னொரு நான்று அவளைக்கண்ணுற்றபொழிலைச் சென்றணைந்து, அப்பொழிலிடை அவளுறுப்புக்களைக்கண்டு, இப்பொழில் என்சிந்தனைக்கு அவள்தானேயெனத் தோன்றாநின்றதென்று இன்புறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

காம்பிணையாற்களிமாமயிலாற்கதிர்மாமணியால் *
வாம்பிணையால்வல்லியொல்குதலான்மன்னு மம்பலவன் *
பாம்பிணையாக்குழைகொண்டோன்கயிலைப்பயில்புனமுந் *
தேம்பிணைவார்குழலாளெனத்தோன்றுமென்சிந்தனைக்கே. (௧௮)

மணங்கமழ்பொழிலின் வடிவுக ண்
டணங்கெனநினைந் தயர்வுநீங்கிய து.

(இ-ள்.) வேயிணையானும், களிப்பையுடைய கரியமயிலானும், ஒளியையுடைய பெரியநீலமணியானும், வாவும்பிணையானும், வல்லி நுடங்குதலானும், கைலைக்கணுண்டாகிய அவர்பயிலும்புனமும் இன்புறுத்துதலால் என்மனத்திற்குத் தேம்பிணையையுடைய நெடியகுழலையுடையாளென்றே தோன்றாநின்றது. எ-று. நிலைபெறுமம்பலத்தையுடையவன், பாம்பை ஒன்றுமொவ்வாத குழையாகக்கொண்டவன் அவனது கைலையெனக்கூட்டுக.

பாம்பையிணைத்துக் குழையாகக்கொண்டவனெனினுமமையும். தேம்பிணை-தேனையுடையதொடை. தேம்பிணைவார்குழலாளெனத்தோன்றுமென்பதற்கு அவளைப்போலப் புனமும் யானின்புறத்தோன்றாநின்றதென்பாருமுளர். மெய்ப்பாடு-உவகை. பயன்-மகிழ்தல். நெருநலைநாளில் தலைமகளைக்கூடின பொழிலிடம்புகுந்து இவ்வகை சொன்னானென்பது. (௧௮)

உயிரெனவியத்தல்.

உயிரெனவியத்தலென்பது-பொழில்கண்டுமகிழ்ந்து அப்பொழிலிடைச்சென்றுபுக்கு, அவளைக்கண்டதுணையான் என்னுயிர் இவ்வாறு செய்தோநிற்பதென வியந்துகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

நேயத்ததாய்நென்னலென்னைப்புணர்ந்துநெஞ்சந்நெகப்போ *
யாயத்ததாயமிழ்தாயணங்காயரனம்பலம்போற் *
றேயத்ததாயென்றன்சிந்தையதாய்த்தெரியிற்பெரிது *
மாயத்ததாகியிதோவந்துநின்றதென்மன்னுயிரே. (௩௬)

வெறியுறுபொழிலின் வியன்பொதும்பரின்
நெறியுறுகுழலி நிலைமைகண்டது.

(இ-ள்.) நெருநல் உள்ளநெகிழ்ச்சியையுடைத்தாய் என்னைக்கூடி, பின் நேயமில்லதுபோல என்னெஞ்சுடையும் வண்ண நீங்கிப்போய், ஆயத்தின்கண்ணதாய், இன்பத்தைச்செய்தலின் அமிர்தமாய், துன்பத்தைச்செய்தலின் அணங்காய், புலப்பாட்டான் அரனதம்பலம்போலும் ஒளியையுடைத்தாய், புலப்படாதுவந்து என்சிந்தைக்கண்ணதாய் ஆராயிற் பெரிதும் மாயத்தையுடைத்தாய்வந்துநின்றது இதுவோ எனதுமன்னுயிர். எ-று.

நேயமுடைமையும் நேயமின்மையும் இன்பஞ்செய்தலும் துன்பஞ்செய்தலும் புலப்படுதலும் புலப்படாமையும் ஒருபொருட்கியையாமையின், பெரிதுமாயத்ததாகியென்றான். தேயம்-வடமொழிச்சிதைவு. அம்பலம்போலுந் தேசத்தின் கண்ணதாயென்றுரைப்பினுமமையும். ஒகாரம் அசைநிலையெனினுமமையும் என்மாட்டருளுடைத்தாய் முற்காலத்து என்னைவந்துகூடி அருளில்லதுபோல என்னெஞ்சுடையும்வண்ணம்போய்த் தன்மெய்யடியார்க்குழாத்ததாய் நினைதோறும் அமிர்தம்போல இன்பஞ்செய்து கட்புலனாகாமையிற்றுன்பஞ்செய்து அம்பலம்போலும் நல்லதேசங்களின்கண்ணதாய் வந்து என்மனத்தகத்ததாய் இத்தன்மைத்தாகலிற் பெரிதும் மாயத்தையுடைத்தாய் எனதுநிலைபெறுமுயிர் வந்துதோன்றுநின்றதென வேறுமொருபொருள் விளங்கியவாறு கண்டுகொள்க. பொழிலின்வியன்பொதும்பர் - பொழிலில் மரஞ்செறிந்தவிடம். மெய்ப்பாடும் பயனும் அவை. (௩௭)

தளர்வகன்றுரைத்தல்.

தளர்வகன்றுரைத்தலென்பது-உயிரென வியந்துசென்று, பூக்கொய்தன்முதலிய விளையாட்டையொழிந்து யாருமில்லொருசிறைத்தனியேநின்று இவர்செய்யாநின்ற பெரியதவம் யாதோவென அவளைப் பெரும்பான்மைகூறித் தளர்வுநீங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

தாதிவர்போதுகொய்யார்தையலாரங்கைகூப்பநின்று *
சோதிவரிப்பந்தடியார்சுனைப்புனலாடல்செய்யார் *
போதிவர்கற்பகநாடுபுல்லென்னத்தம்பொன்னடிப்பா *
யாதிவர்மாதவமம்பலத்தான்மலையெய்துதற்கே. (௪௰)

பனிமதிநுதலியைப் பைம்பொழிலிடை த்
தனிநிலைகண்டு தளர்வகன்றுரைத்த து.

(இ-ள்.) தாதுபரந்த பூக்களைக்கொய்கின்றிலர், ஆயத்தாராகிய தையலார் அங்கைகளைக்கூப்பநின்று ஒளியையும் வரியையுமுடைய பந்தையடிக்கின்றிலர், சுனைப்புனலாடுதலைச் செய்கின்றிலர், அதனாற் போதுபரந்த கற்பகங்களையுடைய தேவருலகம்பொலிவழிய நிலந்தோயாத தமதுபொன்போலுமடியை நிலத்திற்கட்பாவி அம்பலத்தானது கைலையை யெய்துதற்கு இவர் செய்யக் கருதுகின்றபெரியதவம் யாது! எ-று.

தவஞ்செய்வார் புறத்தொழில்களைவிட்டு அகத்தொன்றையுன்னி மலைக்கட்டடங்குவரன்றே, இவளும் பூக்கொய்தல் முதலாகிய தொழில்களைவிட்டு மனத்தாற்றன்னை நினைந்து வரையிடத்து நிற்றலான் யாதிவர்மாதவமென்றான். மெய்ப்பாடும் பயனும் அவை.

மொழிபெறவருந்தல்.

மொழிபெறவருந்தலென்பது - தளர்வுநீங்கியபின்னர்ச் சார்ந்துநின்றவன் ஒருசொற் பெறுமுறையாற்சென்று சாரவேண்டிப்பின்னும் அவளைப்பெரும்பான்மைகூறி ஒருசொல்வேண்டி வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

காவிநின்றேர்தருகண்டர்வண்டில்லைக்கண்ணார்கமலத் *
தேவியென்றேயையஞ்சென்றதன்றேயறியச்சிறிது *
மாவியன்றன்னமென்னோக்கிநின்வாய்திறவாவிடினென் *
னாவியன்றேயமிழ்தேயணங்கேயின்றழிகின்றதே. (௪௧)

கூடற் கரிதெ ன
வாடி யுரைத்த து.

(இ-ள்.) மானோக்கத்தான் இயன்றாற்போலும் மெல்லியநோக்கையுடையாய், நஞ்சாகியநீலப்பூ நின்று அழகைக்கொடுக்கும் மிடற்றையுடையவரது வளவிய தில்லைக்கணுண்டாகிய கண்ணிற்கு ஆருந்தாமரைப்பூவின்வாழுந் தேவியோவென்று ஐயநிகழ்ந்தது, தெளிந்தறியச் சிறிதாயினும் நின்வாய்திறவா தொழியின்,

அமிழ்தமே, அணங்கே, இப்பொழுதழிகின்றது என்னுயிரன்றே, இதனை நீ கருதாதொழிகின்றதென்னை! எ-று.

தேவியென்பது பெரும்பான்மையாகலின், தேவியென்றே யைபஞ்சென்றதென ஐயத்துள் ஒருதலையைப்பற்றிக் கூறினான். அழியவென்னும் வினையெச்சமும் சிறிதென்னும் வினையெச்சமும் திறவாவிடினென்னுமெதிர்மறையிற் றிறத்தலோடு முடிந்தன. அமிழ்தேயணங்கேயென்றான், இன்பமுந் துன்பமும் ஒருங்குறி ழ்தலின். மெய்ப்பாடு-அழுகை. பயன்-ஆற்றாமையுணர்த்துதல்.

நாணிக்கண்புதைத்தல்.

நாணிக்கண்புதைத்தலென்பது-தலைமகன்றன்முன்னின்று பெரும்பான்மைகூறக்கேட்ட தலைமகள் பெருநாணினளாதலின் அவன்முன்னிற்கலாகாது நாணி, ஒருகொடியினொதுங்கி, தன்கண்புதைத்து வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அகலிடந்தாவியவானோனறிந்திறைஞ்சம்பலத்தி *
னிகலிடந்தாவிடையீசற்றொழாரினின்னற்கிடமா *
யுகலிடந்தான்சென்றெனதுயிர்நையாவகையொதுங்கப் *
புகலிடந்தாபொழில்வாயெழில்வாய்தருபூங்கொடியே. (சஉ)

ஆயிடைத்தனிநின் றாற்றாதழிந் து
வேயுடைத்தோளிமெய்யர் மென்கொடிமறைந்த து.

(இ-ள்.) உலகத்தைத்தாவியளந்த வானவன் வணங்கப்படுவதென்றறிந்து வணங்கும் அம்பலத்தின்கணுளனாகிய இகலையுடையவிடங்களிலே தாவும் விடையையுடைய ஈசனைத்தொழாதாரைப்போலத் துன்பத்திற்கிடமாய் அழிபுமளவைத்தானடைந்து எனதுயிர் நையாதவண்ணம், பொழிலிடத்துளவாகிய அழகுவாய்த்த பூவையுடையகொடியே, யானொதுங்குதற்குப் புகலிடந்தருவாயாக. எ-று.

உகலிடம்- உகுதற்கிடம். உகுதலையுடைய விடமெனினுமமையும். ஆயிடை-தலைமகன் அவ்வாறுகூறியவிடத்து. தனிநின்று- ஆற்றுவிப்பாரையின்றிநின்று. ஆற்றாது-நாணினாற்றாது. வேய்-வேய்த்தன்மை. மெய்ப்பாடு- அச்சம். பயன்- ஆற்றாமை நீங்குதல்.()

கண்புதைக்கவருந்தல்.

கண்புதைக்கவருந்தலென்பது- தலைமகள் நாணிக்கண்புதையாநிற்ப, இவள் கண் புதையாநின்றது தன்னுடையகண்கள் என்னை

வருத்தத்தைச்செய்யுமென்றுகாதேயென உட்கொண்டு, யானிவ்வருந்தாதொழியவேண்டுவையாயின் நின்மேனி முழுதும் புதைப்பாயாகவெனத் தலைமகன் தன்வருத்த மிகுதி கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தாழச்செய்தார்முடிதன்னடிக்கீழ்வைத்தவரைவிண்ணோர் *
சூழச்செய்தானம்பலங்கைதொழாரினுள்ளந்துளங்கப் *
போழச்செய்யாமல்லவேற்கண்புதைத்துப்பொன்னேயென்னைநீ *
வாழச்செய்தாய்சுற்றுமுற்றும்புதைநின்னைவாணுதலே. (௪௩)

வேற்றருங்கண்ணிணை மிளிர்வனவன்றி ன்
கூற்றருமேனியே கூற்றெனக்கென்ற து.

(இ-ள்.) தன்கட்டாழ்ந்தவர்களுடைய முடிகளைத் தன் திருவடிக்கீழ்வைத்து அவர்களை விண்ணோர் பரிவாரமாய்ச் சூழும்வண்ணஞ்செய்தவனது அம்பலத்தைக் கைதொழாதாரைப்போல நெஞ்சந்துளங்கப் போழாமற் கூரிய வேல்போலுங்கண்களைப் புதைத்து, பொன்னே, நீ என்னை வாழும்வண்ணஞ்செய்தாய், வாணுதலையுடையாய், என்னுள்ளந் துளங்காமைவேண்டின் நின்னைச் சுற்று முழுதும் புதைப்பாயாக. எ-று.

தாழச்செய்தாரென்பதனை ஒருசொல்லாக்காது தாழும்வண்ணம் முற்றவுஞ்செய்தாரென்றானும், தம்மைச்செய்தாரென்றானும் ஒருசொல்வருவித்தும், போழச்செய்யாமலென்புழியும் போழும்வண்ணமொருதொழிலைச்செய்யாமலென ஒருசொல்வருவித்தும், விரித்துரைப்பினுமமையும். வாழச்செய்தாயென்பது குறிப்புநிலை. புதைத்தவென்பதூஉம்பாடம். வேற்றருங்கண்-வேல்போலுங்கண். மெய்ப்பாடு-அழுகை. பயன் - ஆற்றாமையுணர்த்தல் ()

நாண்விடவருந்தல்.

நாண்விடவருந்தலென்பது- தலைமகன் தனது ஆற்றாமைமிகுதிகூறக்கேட்டு, ஒருஞான்றுந் தன்னைவிட்டுநீங்காதநாண் அழலைச்சேர்ந்த மெழுகுபோலத் தன்னைவிட்டுநீங்காநிற்ப, தலைமகள் அதற்குப் பிரிவாற்றாது வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

குருநாண்மலர்ப்பொழில்சூழ்தில்லைக்கூத்தனையேத்தலர்போல் *
வருநாட்பிறவற்கவாழியரோமற்றென்கண்மணிபோன் *
றொருநாள்பிரியாதுயிரிற்பழகியுடன்வளர்ந்த *
வருநாணளியவழல்சேர்மெழுகொத்தழிகின்றதே. (௪௪)

ஆங்கனங்கண்டாற்றுனா இ
நீங்கினநாளெண்ணி நேரிழைநின்றது.

(இ-ள்.) இன்றியமையாமையால் என்கண்மணியைப்பொருவ உயிர்போலச்சிறப்புடைத்தாய்ப் பழகி ஒருபொழுதும் பிரியாது என்னுடனேவளர்ந்த பெறுதற்கரிய அளித்தாகியநாண் அழலைச் சேர்ந்தமெழுகைப்போத்து என்கணில்லாது அழிபாநின்றது, அதனால், திறத்தையுடையவாகிய நாண்மலர்களையுடைய பொழில்களாற் சூழப்பட்ட தில்லைக்கணுளனாகிய கூத்தனையேத்தாதார் அன்புறும் பிறவியிற் பிறப்பார்கன்றே அவர்களைப்போல மேல்வாக்கடவநாளில், யான் இவ்வாறு பிறவாதொழிக. எ-று.

வருநாட்பிறவற்கவென்பதற்கு ஏத்தாதாரைப்போல வருந்த இவ்வாறு பயின்றாரைப் பிரியவருநாட்கள் உளவாகாதொழிகவெனினுமமையும், வாழியென்பது இத்தன்மைத்தாகிய இடுக்கணின்றி இந்நாண் வாழ்வதாகவென்றவாறு. அரோவும்மற்றும் அசைநிலை. ஆங்கனங்கண்டு- அவ்வாற்றுனைக் கண்டு. மெய்ப்பாடு- அழுகை. பயன்- ஆற்றாமைநீக்குதல். (௪௪)

மருங்கணைதல்.

மருங்கணைதலென்பது - தலைமகள் நாணிழந்து வருந்தாநிற்ப, சென்றுசார்தலாகாமையில், தலைமகன் தன்றுரைவிருல் அவ்வருத்தந்தணிப்பான்போன்று முலையொடுமுனிந்து, ஒருகையால் இருமருங்குறுங்கியும், ஒருகையால் அளிகுலம்விலக்கி அளகந்தொட்டும், சென்று அணையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கோலத்தனிக்கொம்பரும்பர்புக்கஃதேகுறைப்பவர்தஞ் *
சீலத்தனகொங்கைதேற்றகிலேஞ்சிவன்றில்லையன்ன *
நூலொத்தநேரிடைநொய்ம்மையெண்ணாதுநன்டேனசையாற்
சாலத்தகாதுகண்டீர்வண்டுகாள்கொண்டைசார்வதுவே. (௪௫)

ஒளிதிகழ்வார்குழலளிகுலம்விலக்கி க
கருங்களிற்றன்னவன் மருங்கணைந்தது.

(இ-ள்.) அழகையுடைய தனியாகிய கொம்பின்மேலேறி அதனையே அடிக்கட்குறைப்பார்தமது தன்மையை யுடையவாயிருந்தன கொங்கைகள், இவை இத்தன்மையவாயிருத்தலான் இதுவீழுமென்றியாந்தெளிகின்றிலம், அதனால், வண்டுகாள், சிவனது தில்லையையொப்பாளுடைய நூலைபொத்த நேரியவிடையினது நொய்ம்மையைக் கருதாது நுண்ணிய தேன்மேலுண்டாகிய நசையால் நீயிர் கொண்டையைச்சார்தல் மிகவுந்தகாது. எ-று.

தேற்றகிலேமென்பது "தேற்றாப்புன்சொ னோற்றிசின்,, என்பதுபோலத் தெளிதற்கண்வந்தது. முலைகளைத் தெளிவிக்கமாட்டேமென்பாருமுளர். பின்வருமேதத்தைநோக்கின் நீயிர்படயனுக நினைக்கின்ற இஃது இறப்பச்சிறிதென்னுங்கருத்தால், நண்ணேடனென்றான். கண்டீரென்பது முன்னிலையசைச்சொல். அளிகுலம் வடமொழிமுடிபு விலக்கியணைந்தது - விலக்காநின்றணைந்தது. மெய்ப்பாடு-உவகை. பயன்-சார்தல். அவ்வகைநின்றமை குறிப்பினானுணர்ந்த தலைமகன் இவ்வகை சொல்லிச்சார்ந்தானென்பது.

இன்றியமையாமைகூறல்.

இன்றியமையாமைகூறலென்பது - புணர்ச்சியிறுதிக்கண் விசும்பும் நிலனும் ஒருங்குபெறவரினும் இக்கொங்கைகளைமறந்து அதன்கண் முயலேனெனப் பிரிவுதோன்றத் தலைமகன் தனது இன்றியமையாமை கூறுநிற்றல் அதற்குச்செய்யுள்.

நீங்கரும்பொற்கழற்சிற்றம்பலவர்நெடுவிசும்பும் *
வாங்கிருந்தெண்கடல்வையமுமெய்தினும்யான்மறவேன் *
தீங்கரும்புமமிழ்துஞ்செழுந்தேனும்பொதிந்துசெப்புங் *
கோங்கரும்புந்தொலைத்தென்னையுமாட்கொண்டகொங்கைகளே.

வென்றிவேலவன் மெல்லியறனக்
கின்றியமையாமை யெடுத்துரைத்தது.

(இ-ள்.) விடுதற்கரிய பொன்னாலியன்ற கழலையுடைத்தாகிய திருவடியையுடைய சிற்றம்பலவரது நெடிதாகிய தேவருலகையும் வளைந்தபெரிய தெண்கடலாற் சூழப்பட்ட நிலத்தையும் ஒருங்கு பெறவரினும் இனியகரும்பின் சாற்றையும் அமிர்தத்தையும் கொழுவியதேனையும் உள்ளடக்கிச் செப்பையுங் கோங்கரும்பையும் வென்று என்னையும் அடிமைக்கொண்ட கொங்கைகளை யான் மறவேன். எ-று.

விசும்பும் நிலனும் ஒருங்குபெறவரினும் இக்கொங்கைகளை மறந்து அதன்கண் முயலுமாறில்லையெனத் தன்னின்றியமையாமைகூறியவாறாயிற்று. என்னையுமென்றவும்மை எச்சவும்மை. தொழிற்படுத்தலொற்றுமையால் தன்வினையாயிற்று. மெய்ப்பாடு- அது. பயன்-நயப்புணர்த்துதல். (௬௫)

ஆயத்துய்த்தல்.

ஆயத்துய்த்தலென்பது- இன்றியமையாமைகூறிப் பிரியலுறாநின்றவன், இனிப்பலசொல்லியென்னை என்னுயிர் நினக்கடிமை

யாயின்று இனிச்சென்று நின்னாயத்திடைச் சேர்வாயாகவெனத்த
ன் பிரிவின்மை கூறித் தலைமகளை ஆயத்துச்செலுத்தாநிற்றல். அ
தற்குச்செய்யுள்.

சூளாமணியும்பர்க்காயவன்சூழ்பொழிற்றில்லையன்னாய்க் *
காளாயொழிந்ததென்னாருயிராரமிழ்தேயணங்கே *
தோளாமணியேபிணையேபலசொல்லியென்னைதுன்னு *
நாளார்மலர்ப்பொழில்வாயெழிலாயநணுகுகவே. (சஎ)

தேங்கமழ் சிலம்பன்
பாங்கிற் கூட்டியது.

(இ-ள்.) வானவர்க்கு முடிமணியாயவனது சூழ்ந்த பொழிலையு
டைய தில்லையையொக்கும் நினக்கு எனதாருயிர் அடிமையாயிற்
று, ஆகலாற் பலசொல்லிப் பெறுவதென்! நிறைந்தவமிர்தே, அ
ணங்கே, துளைக்கப்படாதமாணிக்கமே, மான்பிணையே, நீ பலகா
லுஞ்சேர்ந்துவிளையாடும் நிறைந்தநாண்மலரையுடைய பொழிற்
கண்விளையாடும் அழகிய ஆயத்தை இனிச்சேர்வாயாக. எ-று.

அடுக்கிய விளிகளாற் காதற்சிறப்புவிளங்கும். பலசொல்லியெ
ன்னையென்றது உயிர் நினக்கு ஆளாகியபின் வேறுபல சொல்லு
தல் பயனில கூறலன்றேயென்றவாறு. சொல்லியென்னும் வினை
யெச்சத்திற்குப் பெறுவதென ஒருசொல்வருவித்துரைக்கப்பட்
டது. பொழில்வாய் நணுகுகவென இயைப்பினுமமையும். மெய்
ப்பாடு-பெருமிதம். பயன்-பிரியலுறுந்தலைமகன்வற்புறுத்தல். ()

நின்றுவருந்தல்.

நின்றுவருந்தலென்பது- தலைமகளை ஆயத்துய்த்துத் தானவ்வி
டத்தேநின்று அப்புனத்தியல்புகூறித் தலைமகன் பிரிவாற்றாதுவ
ருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொய்யுடையார்க்கரன்போலகலும்மகன்முற்புணரின் *
மெய்யுடையார்க்கவனம்பலம்போலமிகநணுகு *
மையுடைவாட்கண்மணியுடைப்பூண்முலைவாணுதல்வான் *
பையுடைவாளரவத்தல்குல்காக்கும்பைம்பூம்புனமே. (சஅ)

பாங்கிற்கூட்டிப் பதிவயிற்பெயர்வோன்
நீங்கற்கருமை நின்றுநினைந்தது.

(இ-ள்.) மையையுடைய வாள்போலுங்கண்ணையும் மணியையு
டையபூணணிந்த முலையையுமுடைய வாணுதல், பெரியபடத்தை

யுடைத்தாகிய ஒளியையுடைய அரவுபோலும் அல்குலையுடையாள், அவள் காக்கும் பூக்களையுடைய பசியபுனம், தன்னை யானகன்றால், மெய்யையுடையவர்க்கு அரன்றுன்பத்தைச்செய்து சேயனுமாறுபோல, மிக்கதுயரத்தைச்செய்து, எனக்குச்சேய்த்தாம். அணைந்தால், மெய்யையுடையவர்க்கு அவனது அம்பலம் பேரின்பத்தைச்செய்து அணித்தாமாறுபோல, கழியுவகைசெய்து, எனக்குமிகவும் அணித்தாம். ஆதலான் நீங்குதல் பெரிதும் அரிது. எ-று.

வாணுதலையுமென்றெண்ணினும் அமையும். மெய்ப்பாடு-அழுகை. பயன்-ஆற்றுமை நீங்குதல். (௪௮)

பாங்கற்கூட்டம் முற்றிற்று.

இடந்தலைப்பாடு.

சூத்திரம். பொழிலிடைச் சேற லிடந்தலைசொன்ன, வழியொடு கூட்டி வகுத்திசி னோரே.

(இ-ள்.) பொழிலிடைச்சேறலொன்றும் இடந்தலைப்பாட்டிற் கேயுரியது. இதனையும் மேலைப் பாங்கற் கூட்டமுணர்த்திய சூத்திரத்தில் "ஈங்கிவைநிற்க விடந்தலைதனக்கும்„ எனக்கூறியவாறே மின்னிடைமெலிதல் முதல் நின்றுவருந்துதலீருகக்கூறப்பட்ட கிளவிகளோடுகூட்டி இடந்தலைப்பாடாமென்றுவகுத்துரைத்துக் கொள்க. அவை பாங்கற்கூட்டத்திற்கும், இடந்தலைப்பாட்டிற்கும், உரியவாமாறு என்னையெனின், பாங்கற்கூட்டம் நிகழாதாயின் இடந்தலைப்பாடு நிகழும், இடந்தலைப்பாடு நிகழாதாயின் பாங்கற் கூட்டநிகழும் ஆகலின்.

பொழிலிடைச்சேறல்.

பொழிலிடைச்சேறலென்பது - இயற்கைப்புணர்ச்சியதிறுதிக்கட் சென்றெய்துதற்கருமை நினைந்து வருந்தாநின்ற தலைமகன் இப்புணர்ச்சி நெருநலும் என்னறிவோடுகூடிய முயற்சியான்வந்ததன்று தெய்வந்தர வந்தது இன்னும் அத்தெய்வந்தானே தரும் யாம் அப்பொழிலிடைச்செல்வேமெனத் தன்னெஞ்சொடு கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

என்னறிவால்வந்ததன் றிதுமுன்னுமின் னும்முயன்றுன் *
மன்னெறிசந்தி நந்தன்று தெய்வம்வருந்தனெஞ்சே *
மின்னெறி செஞ்சடைக்கூத்தப்பிரான்வியன் றில்லைமுந்நீர் *
பொன்னெறிவார்துறைவாய்ச்சென் றுமின்றேய்பொழி லிடத்தே

ஐயரிக்கண்ணியை யாடிடத்தேசெ ன்
றெய்துவனெனநினைந் தேந்தல்சென்றது.

(இ-ள்.) இப்புணர்ச்சி நெருநலும் என்னறிவோடு கூடிய முய ற்சியான்வந்ததன்று, தெய்வந்தர வந்தது. இன்னுஞ் சிறிது முய ன்றான் மன்னியநெறியாகிய இவ்வொழுக்கத்தைத் தந்ததாகிய தெ ய்வம் இன்னுமிருந்தது, அது முடிக்கும். அதனான் நெஞ்சமே, வருந்தாதொழி, மின்னைவெல்கின்ற சிவந்தசடையையுடைய கூ த்தப்பிரானது அகன்ற தில்லையைச் சூழ்ந்த கடற்றிரை பொன்னை க்கொணர்ந்தெறிகின்ற நெடிய துறையிடத்து மின்னையுடைய முகிலைத் தோயும் பொழிற்கட்செல்லுதும். எ-று.

இன்னுமிருந்தன்றெனக்கூட்டி முயன்றாலென்னும்வினையெ ச்சத்திற்கு முடிக்குமென ஒருசொல் வருவித்துரைக்கப்பட்டது. மின்போலுநெறித்த சடையெனினுமமையும். கரையிற்பொன்னை த்திரையெறியுந்துறையெனினுமமையும். இருந்தின்றென்பது பாடமாயின், இருந்தின்றோவென ஓகாரம் வருவித்து இருந்தி ல்லையோவெனவுரைக்க. மெய்ப்பாடு- பெருமிதம். பயன்- இடந் தலைப்படுதல். (௪௧)

இதற்கு மின்னிடைமெலிதன் முதலாக நின்றுவருந்தலீறாக வருங்கிளவியெல்லாம் எடுத்துரைத்துக்கொள்க. என்னை, இவ்விர ண்டனுள்ளும் ஒன்றே நிகழுமாகலின்.

இடந்தலைப்பாடு முற்றிற்று.

மதியுடம்படுத்தல்.

மதியுடம்படுத்தல்வருமாறு.- இரண்டனுள் ஒன்றாற் சென்றெ ய்தியபின்னர்த் தெருண்டுவரைதலைத் தெருளானாயின் அவள் கண் ணாற் காட்டப்பட்டகாதற்றோழியை வழிப்பட்டுச் சென்றெய்து தல் முறைமையென்ப. வழிப்படுமாறு-தெற்றெனத் தன்குறைகூ றாது இரந்துவைத்துக் கரந்தமொழியாற் றன்கருத்தறிவித்து அ வளை ஐயவுணர்வினளாக்கி அதுவழியாகநின்று தன்குறைகூறுதல்.

சூத்திரம். சேற றுணிதல் வேழம் வினாதல், கலைமான் வழிபதி பெயர்வினா தல்லே, மொழிபெறா துரைத்தல் கருத்தறி வித்த, லிடைவி னாதலோ டிவையீ ரைந்தி, மடவரற் றோழிக்கு மதியுட ம் படுத்தல்.

(இ-ள்.) பாங்கியிடைச்சேறல்- குறைபுறத்துணிதல் - வேழம்வி னாதல்-கலைமான்வினாதல்- வழிவினாதல்-பதிவினாதல் - பெயர்வினா

தல்- மொழிபெறாதுகூறல்-கருத்தறிவித்தல்- இடைவினாதல் எனவிவ்வைபத்தும் மதியுடம்படுத்தலாம், எ-று. அவற்றுள்,—

பாங்கியிடைச்சேறல்.

பாங்கியிடைச்சேறலென்பது-இரண்டனுள் ஒன்றாற் சென்றெய்திப் புணர்ந்து நீங்கிய தலைமகன் இனியிவளைச் சென்றெய்துதல் எளிதன்று யாம் அவள் கண்ணாற்காட்டப்பட்ட காதற்றோழிக்கு நங்குறையுள்ளது சொல்வேமென்று அவளைநோக்கிச் செல்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

எளிதன் றினிக்கனிவாய்வல்லிபுல்லலெழின்மதிக்கீற் *
றொளிசென்றசெஞ்சடைக்கூத்தப்பிரானையுன்னாரினெஞ்சட் *
டெளிசென்றமவற்கண்வருவித்தசெல்லலெல்லாந்தெளிவித் *
தளிசென்றபூங்குழற்றோழிக்குவாழியறிவிப்பனே (௫௰)

கரந்துறைகிளவியிற் காதற்றோழி யை
இரந்துகுறையுறவலென் றேந்தல்சென்ற து.

(இ-ள்.) தொண்டைக்கனிபோலும் வாயையுடைய வல்லியைப் புல்லுதல் இனியெளிதன்று, அதனால் எழிலையுடைய மதியாகிய கீற்றினொளிபரந்த சிவந்தசடையையுடைய கூத்தப்பிரானை நினையாதாரைப்போல வருந்த என்னிடத்துத் தெளிதலையடைந்த வேல்போலுங்கண்கள் வருவித்த இன்னாமை முழுதையும், வண்டடைந்தபூங்குழலையுடைய தோழிக்குக் குறிப்பினாலே தெளியாநின்று சொல்லுவேன், எ-று.

இரண்டாவது விகாரவகையாற்றொக்கது. வல்லியது புல்லலெனினுமமையும். வருந்தவென வொருசொல் வருவித்துரைக்கப்பட்டது. கண்ணோடாது பிறர்க்குத்துன்பஞ்செய்தலின், உன்னாதார் கண்ணிற்கு உவமையாகவுரைப்பினுமமையும். செல்லலெல்லாந் தெளிவித்தென்பதற்குச்செல்லலெல்லாவற்றையுநீக்கியென்பாருமுளர். வாழி-அசைநிலை. கரந்துறைகிளவி- உள்ளக்குறிப்புக்கரந்துறையுமொழி. மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தபெருமிதம். பயன்-தோழிக்குணர்த்தி அவளான் முடிப்பலெனக்கருதி ஆற்றாமைநீங்குதல். (௫௰)

குறையுறத்துணிதல்.

குறையுறத்துணிதலென்பது- பாங்கியைநினைந்துசெல்லாநின்றவன் தெய்வத்தினருளால் அவ்விருவரும் ஓரிடத்தெதிர்நிற்பக் கண்டு, இவள் இவட்குச் சிறந்தாள் இனியென்குறையுள்ளது சொல்லுவேனெனத் தன்குறைகூறத் துணியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

குவளைக்கருங்கட்கொடியேரிடையிக்கொடிகடைக்க *
ணுவளைத்தனதுயிரொன்றதுதன்னொடுவேலையில்லா *
தவளைத்தன்பால்வைத்தசிற்றம்பலத்தானருளிலர்போற் *
றுவளத்தலைவந்தவின்னலின்னேயினிச்சொல்லுவனே. (௫௧)

ஓரிடத்தவனா யொருங்குகண்டுதன்
பேரிடர்பெருந்தகை பேசத்துணிந்தது.

(இ-ள்) குவளைப்பூப்போலுங் கரியகண்ணிணையுங் கொடியை யொத்த இடையினையமுடைய இக்கொடியினது கடைக்கண் உவ ளைத் தன்னுடையவுயிரொன்றுசொல்லிற்று. அதனால், தனக்கொப் பில்லாதவளைத் தன்னொருகூற்றின்கண்வைத்த சிற்றம்பலத்தான து அருளையுடையரல்லாதாரைப்போல் யான் வருந்தும்வண்ணம் என்னிடத்துவந்த இன்னாமையை, இவட்கு இனி யிப்பொழுதே சொல்லுவேன். எ-று.

கடைக்கணுவளையுயிரொன்றதென்றது - எனக்கிவ்விடர் செய்த கடைக்கண் இடர் நீர்தும் வாயிலுந் தானே கூறிற்றென்றவாறு. இன்னேயென்பது இவர்கூடிய இப்பொழுதேஎன்றவாறு. இனி யென்றது இவளிவட்கு ன்றியமையாமையறிந்தபின்னென்பது பட நின்றது. ஒருங்குகண்டு-ஒருகாலத்துக்கண்டு. மெய்ப்பாடு- அழு கையைச்சார்ந்தபெருமிதம். பயன் - மதியுடம்படுத்தற்கொருப் படுதல். (௫௧

வேழம்வினாதல்.

வேழம்வினாதலென்பது - குறைகூறத்துணியாநின்றவன் என் குறையின்னதென்று இவளுக்கு வெளிப்படக்கூறுவேனாயின் இ வள் மறுக்கவுங்கூடுமென உட்கொண்டு, என்குறை இன்னதென் று இவடானேயுணருமளவும் கரந்தமொழியாற் சிலசொல்லிப் பி ன்குறையுறுவதே காரியமென, வேட்டைகருதிச் சென்றானாக அவ்விருவருமுழைச்சென்று நின்று, தன்காதன்றோன்ற, இவ்விடத்தொ ருமதயானைவரக் கண்டீரோவென வேழம் வினாவாநிற்றல். அதற் குச்செய்யுள்.

இருங்களியாயின்றியானின்றுமாப்பவின்பம்பணிவோர் *
மருங்களியாவனலாடவல்லோன்றில்லையான்மலையீங் *
கொருங்களியார்ப்பவுமிழ்ந்ம்மதத்திருகோட்டொருநீள் *
கருங்களியார்மதயானையுண்டோவரக்கண்டதுவே. (௫௨)

ஏனையரிருவரு மிருந்தசெவ்வியு ளீ
வேழம்வினாஅய் வெற்பன்சென்ற து.

(இ-ள்.) அடியவரிடத்தே அவரோடுகூடிப்பெரிய களிப்பையு டையேனை யான் இன்றிறுமாக்கும் வண்ணம் இன்பத்தைவென க்களித்துத் தீயாடவல்லோன், தில்லையான், அவனது மலையின் இ வ்விடத்து அளிகளொருங்கார்ப்ப உமிழப்படாநின்ற மூன்று ம தத்தையும் இரண்டுகோட்டையுமுடைய நீண்ட கரிய களியார்ந்த ஒருமதயானை வாராநிற்பக் கண்டதுண்டோ? உரைமின் எ-று.

மருங்கிறுமாப்பவெனக் கூடிற்று. அனலாடவென்பது அன லோடாடவெனவிரியும். ஆர்ப்ப வரவெனக்கூட்டுக. ஆர்ப்பவுமி ழுமெனினுமமையும். நீட்சி - விலங்குண்டாகிய நெடுமை. களி-உ ள்வச்செருக்கு. மதயானை-மதமிடையறாத யானை. (௩௨)

கலைமான்வினாதல்.

கலைமான்வினாதலென்பது- வேழம்வினாவி உட்புகுந்தபின்னர், தான் கண்ணுவிடர்ப்பட்டமை தோன்ற நின்று, நும்முடைய க ண்கள்போலுங் கணைபொருதலா லுண்டாகிய புண்ணோடு இப்பு னத்தின்கண் ஒருகலைமான் வரக் கண்டீரோவென்று கலைமான் வி னாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கருங்கண்ணனையறியாமைநின் றோன்றில்லைக்கார்ப்பொழில்வாய்.
வருங்கண்ணனையவண்டாடும்வளரிளவல்லியன்னீர் *
இருங்கண்ணனையகணைபொருபுண்புணரிப்புனத்தின் *
மருங்கண்ணனையதுண்டோவந்ததீங்கொருவான்கலையே. (௩௩)

சிலைமா னண்ண ல்
கலைமான் வினாய து.

(இ-ள்.) கரியமாலை அவனறியாமற் றன்னை யொளித்துநின்றவ னது தில்லைவரைப்பி னுண்டாகிய கரியபொழிலிடத்துப் புறப்ப டாநின்ற கள்ளாற் றம்மேனிதனையும்வண்ணம் வண்டுகளாடும் வ ளராநின்ற இளையவல்லியை யொப்பீர், நும்முடைய பெரியக ண்கள்போலுங் கணைபொருதலாலுண்டாகிய புண்ணைப்புணர்ந் து ஒருவான்கலை அத்தன்மையது இப்புனத்தின்மருங்கு ஈங்கு வ ந்ததுண்டோ? உரைமின் எ-று.

கண்ணனென்பது கரியோனென்னும் பொருளதோர்பாகத ச்சிதைவு. அஃது அப்பண்புகுறியாது ஈண்டுப்பெயராய்நின்ற

மையின், கருங்கண்ணனென்றார், சேற்றிற்பங்கயமென்றாற்போல அறியாமை நின்றேனென்னுஞ் சொற்கள் ஒருசொன்னீரவாய், ஒளித்தோனென்னும் பொருள்பட்டு, இரண்டாவதற்கு முடிபாயின. ஐகாரம் அசைநிலையெனினுமமையும். வருங்கண்ணனையவென்பதற்கு உண்டாகக்கடவ கள்ளையுடைய அரும்புகளை யுடைமையான் வண்டு காலம்பார்த்து ஆடுமாறுபோல, நம் முள்ளத்து நெகிழ்ச்சியுண்டாமளவும் நமதுபக்கம் விடாது உழல்கின்றேனென்பது பயப்பவருங்கண்ணனையையுடையவென்றுரைப்பினுமமையும். மருங்கென்பது மருங்கண்ணென ஈறுதிரிந்துநின்றது. அணித்தாகவென்னும்பொருட்டாய், அணி அண்ணெனக்குறைந்து நின்றதெனினுமமையும். மருங்கண்ணனைய துண்டோவென்பதற்கு அண்ணனையதென்று, புனத்தின்மருங்கு நல்லமை நைதலையுடையதெனினுமமையும். (௫௩)

வழிவினாதல்.

வழிவினாதலென்பது- கலைமான்வினாவாநின்றவன், இவன்கருத்து வேறென்று தோழியறிய, அதனோடு மாறுபடநின்று, அதுகூறீராயின் நும்மூர்க்குச் செல்லுநெறி கூறுமினென்றுவழிவினாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சிலம்பணிகொண்டசெஞ்சீறடிபங்கன்றன்சீரடியார் *
குலம்பணிகொள்ளவெனைக்கொடுத்தோன்கொண்டுதானணியுங் *
கலம்பணிகொண்டிடமம்பலங்கொண்டவன்கார்க்கயிலைச் *
சிலம்பணிகொண்டநுஞ்சீறூர்க்குரைமின்கள்சென்னெறியே.()

கலைமான்வினாய கருத்துவேறறிய
மலைமானண்ணல் வழிவினாயது.

(இ-ள்.) சிலம்பு தானழகுபெற்ற செய்ய சிறிய அடியையுடையாளது கூற்றையுடையான், தன்மெய்யடியாரது கூட்டங் குற்றேவல்கொள்ள என்னைக்கொடுத்தவன், தான்கொண்டணியும் அணிகலம் பாம்பாகக்கொண்டு அம்பலத்தையிடமாகக்கொண்டவன், அவனது முகில்களையுடைய கைலைக்கட் சிலம்பழகுபெற்ற நுமது சிறியவூர்க்குச் செல்லு நெறியை உரைமின். எ-று.

கொண்டுகொடுத்தோனென இயைப்பாருமுளர். தனக்குத்தக்க தையலை இடத்து வைத்தானென்றுந் தன்னடியார்க்குத் தகாத என்னை அவர்க்குக் கொடுத்தானென்றும், அணிதற்குத்தகாத பாம்பை அணிந்தானென்றும் தனக்குத் தகுமம்பலத்தை இடமாகக்

கொண்டானென்றும், மாறுபாட்டொழுக்கங் கூறியவாறும். கருத்துவேறறிப- வினையதற்கு மறுமொழி பெறாது பின்னுமொன்றை வினவுதலான் இவன்கருத்து வேறென்று தோழியறிய. சின்னெறியென்றுபாடமாயின், சிறியநெறியென்றுரைக்க. சின்னெறியென்பது அந்நிலத்துப்பண்பு. (௫௪)

பதிவினாதல்.

பதிவினாதலென்பது- மாறுபட நின்று வழி வினவவும் அதற்கு மறுமொழி கொடாதாளை எதிர்முகமாகநின்று, வழிகூறீராயின் நும்பதி கூறுதல் பழியன்றே அது கூறுவீ ராயினென்று அவர்பதி வினவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஒருங்கட மூவெயிலொற்றைக்கணைகொள்சிற்றம்பலவன் *
கருங்கட மூன்றுகுநால்வாய்க்கரியுரித்தோன்கயிலை *
யிருங்கட மூடும்பொழிலெழிற்கொம்பரன்னீர்களின்னே *
வருங்கடப் பூர்பகர்ந்தாற்பழியோவிங்குவாழ்பவர்க்கே. (௫௫)

பதியொடுபிறவினாய் மொழிபலமொழிந் து
மதியுடம்படுக்க மன்னன்வலித்த து.

(இ-ள்.) மூவெயிலையும் ஒருங்கே அடவேண்டித் தனியம்பைக்கொண்ட சிற்றம்பலவன், கரிய மதமூன்றுமொழுகாநின்றநான்றவாயையுடைய கரியையுரித்தவன், அவனது கைலைக்கட் பெரியகாட்டான் மூடப்படும் பொழிற்கணிற்கின்ற எழிலையுடைய கொம்பையொப்பீராகிய நீங்கள் இங்கே வாரும், தம்மூரை யுரைத்தால் இம்மலைவாழ்வார்க்குப் பழியாமோ! பழியாயின் உரைக்கற்பாலீரல்லீர். எ-று.

இரண்டுமதங் கடத்திற்பிறத்தலிற் பன்மைபற்றிக் கடமென்றார். கொம்பரன்னீர்களென்பது முன்னிலைப்பெயர். இன்னேவருங்களென்பது எதிர்முகமாக்கியவாறு. வாருமென்பதுகுறைகின்றது. (௫௬)

பெயர்வினாதல்.

பெயர்வினாதலென்பது-பதிவினாவவும் அதற்கொன்றுங்கூறாளை, நும்பதிகூறுதல் பழியாயின் அதனையொழியின் நும்பெயர்கூறுதல் பழியன்றே இதனைக்கூறுவீராயினென்று அவரது பெயர் வினவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தாரென்னவோங்குஞ்சடைமுடிமேற்றனித்திங்கள்வைத்த *
காரென்னவாருங்கறைமிடற்றம்பலவன்கயிலை *

ஊரென்னவென்னவும்வாய்திறவீரொழிவீர்பழிபேற் *
பேரென்னவோவுரையீர்விரையீர்ங்குழற்பேதையரே. (௩௬)

பேரமைத் தோளிய ர்
பேர்வி னய து.

(இ-ள்.) உயர்ந்த சடையானியன்ற முடிமேல் தாராக ஒருகலையாகிய திங்களை வைத்த கொண்டலென்று சொல்லும்வண்ணம் நிறைந்த கறுப்பையுடைத்தாகிய மிடற்றையுடைய அம்பலவனது கைலைக்கண் நும்முடைய ஊர்கள் பெயர் முதலாயினவற்றுள் எத்தன்மையவென்று சொல்லவும் வாய்திறக்கின்றிலீர், ஊர் கூறுதல் பழியாயின், அதனையொழிமின். நும்முடைய பெயர்கள் எத்தன்மையவோ! நறுநாற்றத்தையும் நெய்ப்பையு முடையவாகிய குழலையுடையபேதையீர், உரைப்பீராமின். எ-று.

தனித்திங்கள் ஒப்பில்லாத திங்களெனினுமமையும். ஒகாரம்- வினா. தலைமகளுந்தோழியும் ஒரூராரல்லரொன்று கருதினாற்போல ஊரென்னவெனப் பன்மையாற்கூறினான். என்னை, "இரந்துகுறையுறாஅ கிழவியுந் தோழியு, மொருங்குதலைப் பெய்த செவ்வி நோக்கிப், பதியும் பெயரும் பிறவும் வினாஅய்ப், புதுவோன் போலப் பொருந்துபு கிளந்து, மதியுடம் படுத்தற்கு முரிய னென்ப" என்பதிலக்கணமாதலின். பேதையரேயெனச் சிறுபான்மை ஏகாரம்பெற்றது. ஊருஞ்சொல்லாதாரைப் பெயர்கேட்கவே வேறுகருத்துடையனென்பது விளங்கும். வாய்திறவரொழிவீரென்பதூஉம் பாடம். (௩௬)

மொழிபெறாதுகூறல்.

மொழிபெறாதுகூறலென்பது- பெயர்வினாவவும் வாய்திறவாமையின், இப்புனத்தார் எதிர்கொள்ளத்தக்க விருந்தினரோடு வாய்திறவாமையை விரதமாகவுடையாராதல் அதுவன்றி வாய்திறக்கின் மணிசிந்துமென்பதனைச் சாதமாகவுடையாராதல் இவ்விரண்டனுளொன்று தப்பாதென்று கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

இரதமுடையநடமாட்டுடையவரெம்முடையர் *
வரதமுடையவணிதில்லையன்னவரிப்புனத்தார் *
விரதமுடையர்விருந்தொடுபேச்சின்மைமீட்டதன்றேற் *
சாதமுடையர்மணிவாய்திறக்கிற்சலக்கென்பவே. (௩௭)

தேமொழியவர் வாய்மொழிபெறு து
மட்டவிழ்தாரோன் கட்டுரைத்த து.

(இ-ள்.) இனிமையையுடைய கூத்தாட்டையுடையவர், எம்முடையதலைவர், அவரது வரதமுடைய அழகியதில்லையையொப்பாராகிய இப்புனத்துநின்றஇவர்கள் எதிர்கொள்ளத்தக்க விருந்தினரோடு பேசாமையை விரதமாகவுடையர், அதுவன்றாயின், பின் வாய்திறக்கிற் சலக்கென விழுவன முத்தமணிகளை மெய்யாகவுடையர். எ-று.

இரதமென்றது நாட்டியச்சுவையையன்று, கட்கினிமையை. நடமென்றது நாட்டியத்தையன்று, கூத்தென்னும் பொதுமையை. மீட்டென்பது பிறிதுமொன்றுண்டென்பதுபட வினைமாற்றாய்நிற்பதோரிடைச்சொல். இவையாறற்கும் மெய்ப்பாடு-இளிவரலைச்சார்ந்தபெருமிதம். பயன்-மதியுடம்படுத்தல். (ருஎ)

கருத்தறிவித்தல்.

கருத்தறிவித்தலென்பது-நீயிர் வாய்திறவாமைக்குக்காரணமுடையீர் அதுகிடக்க இத்தழை நும்மல்குற்குத் தகுமாயின் அணிவீராமினெனத் தழைகாட்டிநின்று தன்கருத்தை அறிவியாநிற்றல். அசற்குச்செய்யுள்.

வின்னிறவாணுதல்வேனிறக்கண்மெல்லியலைமல்லற் *
றன்னிறமொன்றிலிருத்திநின்றோன்றனதம்பலம்போன் *
மின்னிறநுண்ணிடைப்பேரெழில்வெண்ணகைப்பைந்தொடியீர்
பொன்னிறவல்குலுக்காமோமணிநிறப்பூந்தழையே. (ருஅ)

உரைத்த துறையா து
கருத்தறி வித்த து.

(இ-ள்.) வில்லினியல்பையுடைய வாணுதலையும் வேலினியல்பையுடைய கண்களையுமுடைய மெல்லியலை அழகையுடைய தன் திருமேனியொன்றின்கண் இருத்திநின்றவனது அம்பலத்தை யொக்கும் மின்னினியல்பையுடைய நுண்ணிய இடையையும் பெரியவெழிலையும் வெள்ளியமுறுவலையுமுடைய பைந்தொடியீர், மணியினது நிறத்தையுடைய இப்பூந்தழை நும்பொன்னிற அல்குலுக்குத் தகுமோ தகுமாயின் அணிவீராமின். எ-று.

பொன்னிறத்திற்கு மணிநிறம் பொருத்தமுடைத்தென்பது கருத்து. பொன்னிறவல்குலென்று அல்குலின்றன்மைகூறியவதனான், முன்னமே புணர்ச்சிநிகழ்ந்தமையுமுண்டென்பது கூறியவாறாயிற்று. ஆமோவென்ற ஓகாரம் கொடுப்பாரதுண்மகிழ்ச்சியையும் கொள்வாரது தலைமையையும் விளக்கிநின்றது. மெய்ப்பாடும் பயனும் அவை. (ருஅ)

இடைவினாதல்.

இடைவினாதலென்பது - தழைகாட்டித் தன்கருத்தறிவித்து அதுவழியாகநின்று நும்மல்குலும் முலையும் அதிபாரமாயிராநின்றன இவை இவ்வாறு நிற்றற்குக்காரணம் யாதோவென்று அவரிடைவினவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கலைக்கீழகலல்குற்பாரமதாரங்கண்ணார்ந்திலங்கு *
முலைக்கீழ்ச்சிறிதின்றிநிற்றன்முற்றுதன்றிலங்கையர்கோன் *
மலைக்கீழ்விழச்செற்றசிற்றம்பலவர்வண்பூங்கயிலைச் *
சிலைக்கீழ்க்கணையன்னகண்ணீரெதுநுங்கள்சிற்றிடையே. (௫௧)

வழிபடு பிறவினா ய்
மொழிபல மொழிந்த து.

(இ-ள்.) மேகலைக்குக் கீழாகிய அகன்றவல்குலாகிய பாரமது முத்துவடம் கண்ணிற்கு ஆர்ந்திலங்காநின்ற முலையின் கீழ் இடை சிறிதின்றித் தானே நிற்றல் முடிவுபெறாது. இவ்வரையையெடுத்த அன்று இலங்கையர்கோன் இவ்வரைக்கீழ் வீழும்வண்ணஞ் செற்ற சிற்றம்பலவரது வளவியபொலிவையுடைய கைலையினிற்கின்ற சிலையின்கீழ்வைத்த கணைபோலும் புருவத்தின்கீழுளவாகிய கண்ணையுடையீர், நும்முடைய சிற்றிடை யாது? கட்புலனாகின்றதில்லை. எ-று.

பாரமது நிற்றலெனவியையும். பாரம் அதுவென எழுவாயும் பயனிலையுமாக்கி, முலைக்கீழ்ச் சிறிதாயினும் ஒன்றின்றி இவ்வுருவ் நிற்றல் முற்றாதென்றுரைப்பாருமுளர். அதுவென்றும் எதுவென்றும் சாதிபற்றி ஒருமையாற்கூறினான். மெய்ப்பாடு-அது. பயன்-விசேடவகையான் மதியுடம்படுத்தல்.

மேலைப்பாட்டாறனானும் வம்புமாக்கள் வினவும்பெற்றியேகருமெனத் தனது குறைதோன்றுவகை வினவினான், இப்பாட்டினானும் இவன்குறை நங்கண்ணதேயென்பது தோழிக்குப்புலப்பட, இத்தழைநல்ல கொள்ளீரென்றும், நும்மிடை யாதென்றும் வினவினானென்பது. (௫௧)

மதியுடம்படுத்தல் முற்றிற்று.

இருவருமுள்வழியவன்வரவுணர்தல்.

இருவருமுள்வழியவன்வரவுணர்தலென்பது - தலைமகளுந்தோழியுமுள்வழிச்சென்று, தலைமகன் கரந்தமொழியாற் றன்கருத்து அறிவிக்க, தோழி அவனினைவறியாநிற்றல்.

அதுவருமாறு,-சூத்திரம் - ஐயுற னாட லாங்கவை யிரண்டு,மைய று தோழி யவன்வர வுணர்தல்.

(இ-ள்.) ஐயுறுதல் - அறிவுநாடல் எனவிவையிரண்டும் இருவருமுள்வழியவன்வரவுணர்தலாம். எ-று. அவற்றுள்,—

ஐயுறுதல்.

ஐயுறுதலென்பது-தலைமகன் தழைகொண்டுநின்று சாந்தமொழியாற் றன்கருத்தறிவிக்க, மேனியொளியிலனாய் இப்புனத்தினின்றும்போகாது யானையோடு ஏனம்வினாவி இவ்வாறு பொய்கூறுநின்ற இவன் யாவனோவெனத் தோழி அவனையையுற்றுக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பல்லிலனாகப்பகலைவென்றோன்றில்லைபாடலர்போ *
லெல்லிலனாகத்தொடேனம்வினாவிவன்யாவன்கொலாம் *
வில்லிலனாகத்தழைகையில்வேட்டைகொண்டாட்டமெய்யோர் *
சொல்லிலனாகற்றவாகடவானிச்சுனைப்புனமே. (கூ௰)

அடற்கதிர்வேலோன் றொடர்ச்சிநோக்கித்
தையற்பாங்கி யையமுற்றது.

(இ-ள்.) பல்லிலனாம்வண்ணம் பகலோனைவென்றவனது தில்லையைப் பாடாதாரைப்போல ஒளியையுடையனல்லன், ஆயினும் வினாவப்படுகின்றன யானையும் ஏனமுமாயிருந்தன, வில்லையுடையனல்லன், கையின் நாகமரத்தின்றழைகளாயினும், கொண்டாடப்படுகின்றது வேட்டை, கண்டவாற்றான் மெய்யாயிருப்பதொரு சொல்லையுமுடையனல்லன், இவன் பொய்யுரைப்பக்கற்றவாறு என்! பொய்யுரைத்து வறிதுபோவானுமல்லன், ஈண்டொருகுறையுடையான்போல இச்சுனைப்புனத்தைக் கடவான், இவன் யாவனோ! எ-று.

வினாவென்பது ஆகுபெயர். ஆ-வியப்பின்கட்குறிப்பு. ஆகத்தொடேனமென்றுபாடமோதி, ஆகத்தொளியிலனெனவுரைப்பாருமுளர். வினாய் என்பதுபாடமாயின்,வாராநின்றவென ஒருசொல்வருவித்து முடிக்க வினாய்க் கடவானென்று கூட்டுவாருமுளர். தையல்-புனையப்படுதல். மெய்ப்பாடு- மருட்கை. பயன்- உசாவியையந்தீர்தல். (கூ௰)

அறிவுநாடல்.

அறிவுநாடலென்பது-இவன் யாவனோவென்றையுறுநின்ற தோழி பேராராய்ச்சியளாதலின், அவன் கூறியவழியே நாடாது வந்துதங்களிடைக்கேமுடிதலின்,இவ்வையர்வார்த்தை இருந்தவாற்று

ன் ஆழமுடைத்தாயிருந்ததென்று அவனையறியாநிற்றல். அதற்குச் செய்யுள்.

ஆழமன் னோவுடைத்திவ்வையர்வார்த்தையனங்கனைந்து *
வீழமுன் னோக்கியவம்பலத்தான்வெற்பினிப்புனத்தே *
வேழமுன்னாய்க்கலையாய்ப்பிறவாய்ப்பின்னுமென்றழையாய் *
மாழைமென்னோக்கியிடையாய்க்கழிந்ததுவந்துவந்தே. (௬௧)

வெற்பன்வினவ சொற்பதநோக் கி
நெறிகுழற்பாங்கி யறிவுநாடிய து.

(இ-ள்.) முற்காலத்து அனங்கன் அழிந்து பொடியாய்வீழ நோக்கிய அம்பலத்தானது வெற்பின் இப்புனத்தின்கண்ணே கூறுவது முன் வேழமாய், பின் கலையாய், பின் வேறுசிலவாய், பின்னும் மெல்லியதழையாய், வந்துவந்து, முடிவிற் பேதைமையையுடைய மெல்லிய நோக்கத்தையுடையாளது இடையாய்விட்டது, அதனான் இவ்வையர்வார்த்தை இருந்தவாற்றான் ஆழமுடைத்து. எ-று.

மன்னும் ஓவும் அசைநிலை. இப்புனத்தேயென்றது இவளிருந்தபுனத்தேயென்றவாறு. மெல்லிய நோக்கத்தை யுடையாள் இடைபோலப் பொய்யாய்விட்டதென்பாருமுளர். பின்னுமென்றது முன்னைவினவே ஐயந்தீராநிற்பப் பின்னுமொன்று கூறினனென்பதுபட நின்றது. தங்கண்வந்து முடிதலின் வந்துவந்தென்றாள். சொற்பதம்-சொல்லளவு. அறிவுநாடியது- அறிவானாடியது. மெய்ப்பாடு-மருட்கையைச்சார்ந்த பெருமிதம். பயன்- ஐயந்தீர்தல். (௬௧)

இருவருமுள்வழியவன்வரவுணர்தல் முற்றிற்று.

மூன்றுறவுணர்தல்.

சூத்திரம்- வாட்டம் வினாதன் மூன்றுற வுணர்தல், கூட்டி யுணருங் குறிப்புரை யாகும்.

(இ-ள்.) வாட்டம்வினாதல் எனவிஃதொன்றும் மூன்றுறவுணர்தலாம். எ-று.

அது தலைமகன் இங்ஙனம்வினவுதற்கெல்லாம் தோழி மறுமொழிகொடாளாகத் தலைமகன் வாடினான், வாடவே தலைமகளும் அதுகண்டு வாடினாள், ஆதலால் இருவரது வாட்டமும் வினவப்படுதல். அன்றியும் முன்னர்த் தலைமகனது வாட்டத்தைப் பாங்கன் வினாயதுபோலத் தலைவியது வாட்டத்தையும் பாங்கி வினாதலாம். மூன்றுற்றதனையுணர்தலானே இதற்கு மூன்றுறவுணர்தலென்று

பெயராயிற்று. அஃதாவது தலைமகனைப் பாங்கன் வினாயவாறு போலத் தலைமகளையும் யாதனானோ இவள்வாடியதென ஐயுற்றுணர்தல். இவள் தலைமகளை வினாவுவது இயற்கை யிறுதி இடந்தலையிறுதியிலெனக்கொள்க. என்னை, தோழியும் பாங்கனைப் போலப் பிற்றைஞான்றே தலைமகளைவினாவப் பெறாளோவெனின், வினாவாள். எற்றிற்கு? தலைமகளை ஒருபொழுதும் விடாத தோழி இவளை இத்துணைக்காறுங்காணாளோவெனின், காணும். காணின், இயற்கைப் புணர்ச்சியது நீக்கத்து இவளது வாட்டம் தோழி காணாதொழிவானேனெனின், இவளைக்கூட்டி முடித்த விதி தோழிக்குத் தலைமகளது வாட்டம் புலனாகாமை மறைக்கும். என்னை, பாங்கற்கூட்டமும் இடந்தலைப்பாடும் நடக்கவேண்டி. அல்லதூஉம், தலைமகனுக்குந் தலைமகளுக்கும் வாட்டம் ஒக்கநிகழினும் இயற்கைப்புணர்ச்சியது இறுதிக்கட் டலைமகனைப் பாங்கன் கூடியும் தலைமகளைப் பாங்கிகூடியுஞ் செய்தாராயினும், தலைமகனது வாட்டத்தைப் பாங்கன் வினாவுதல் தலைமையாதலான் முன் வினாவப்படும். பாங்கன் வினாவியபின்னர்ப் பாங்கி வினாவப்படும். ஆதலால் இடந்தலைப்பாட்டினிறுதியே தோழிக்கு வாட்டம்வினாதற்கு இடமாயிற்றெனவறிக.

கூட்டியுணருங் குறிப்புரையாகுமென்றது இந்தவாட்டம் வினாதற்குப் பக்கக்கிளவியாகச் சேறல் துணிதல் முதலாக முன்னுரைக்கப்பட்ட கிளவியெல்லாங் கூட்டியுரைத்துக் கொள்ளப்படுமென்றவாறு. என்னை பக்கக்கிளவியாமாறு? தலைமகன் தனது வாட்டத்தால் அங்ஙனம்பலவும் வினாயனவெல்லாம் தலைமகள் தனது வாட்டத்தானுரைத்தாற்போலாயின. என்னை, அவ்வளவெல்லாம் அவன்வினாயதற்குத் தோழி மறுமொழி கொடாது நிற்றலானெனவறிக.

வாட்டம்வினாதல்.

வாட்டம்வினாதலென்பது - தலைமகன் மதியுடம்படுத்துவருந்தாநிற்பக்கண்டு, எம்பெருமான் என்பொருட்டான் இவ்வாறு இடர்ப்படாநின்றானெனத் தலைமகள் தன்னுள்ளே கவன்று வருந்தாநிற்க, அதுகண்டு, சுனையாடிச் சிலம்பெதிரழைத்தோ பிறிதொன்றினானோ நீ வாடியதென்னோவெனத் தோழி தலைமகளது வாட்டம் வினாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

திருத்தம்பயின்றவன்சிற்றம்பலத்துநெற்றித்தனிக்க *
ணொருத்தன்பயிலுங்கயிலைமலையினுயர்குடுமித் *

திருத்தம்பயிலுஞ்சுனைகுடைந்தாடிச்சிலம்பெதிர்கூய் *
வருத்தம்பயின்றுகொல்லோவல்லிமெல்லியல்வாடியதே. (௬௨)

மின்னிடைமடந்தை தன்னியனோக் கி
வீங்குமென்முலைப் பாங்கிபகர்ந்த து.

(இ-ள்.) சிற்றம்பலத்தின்கண் நிருத்தத்தையிடைவிடாதேயாடியவன், நெற்றியிலுண்டாகிய தனிக்கண்ணையுடைய ஒப்பிலாதான், அவன் பயிலுங் கைலையாகிய மலையினது உயர்ந்தவுச்சியிற் புண்ணியநீர் இடையறாதுநிற்குஞ் சுனையைக் குடைந்தாடிச் சிலம்புக்கெதிரழைத்து இவ்வாறு வருந்தத்தைச்செய்யும் விளையாட்டைப் பயின்றோ பிறிதொன்றினாலோ வல்லிபோலும் மெல்லியவியல்பினையுடையாள் வாடியது! எ-று.

வருத்தம்-ஆகுபெயர். மெய்ப்பாடு-மருட்கை. பயன்- தலைமகட்குற்ற வாட்டமுணர்தல். (௭௨)

முன்னுறவுணர்தல் முற்றிற்று.

குறையுறவுணர்தல்.

குறையுறவுணர்தலாவது தலைமகன் குறையுறத் தோழி அதனைத் தணிந்துணரா நிற்றல்.

அதுவருமாறு சூத்திரம். குறையுற்று நிற்ற லவன்குறிப் பறித, லவள்குறிப் பறிதலோ டவர்நினை வெண்ணல், கூறிய நான்குங் குறையுற வுணர்வெனத், தேறிய பொருளிற் றெளிந்திசி னோரே.

(இ-ள்.) குறையுற்றுநிற்றல்- அவன்குறிப்பறிதல் - அவள்குறிப்பறிதல்-இருவர்நினைவுமொருவழியுணர்தல் எனவிவைநான்குங் குறையுறவுணர்தலாம். எ-று. அவற்றுள்,—

குறையுற்றுநிற்றல்.

குறையுற்றுநிற்றலென்பது- தலைமகளதுவாட்டங்கண்டு ஐயுறாநின்ற தோழியிடைச்சென்று,'யான் உங்களுக்கெல்லாத்தொழிலுக்கும் வல்லேன் நீயிர் வேண்டுவதொன்று சொல்லுமின் யான் அதுசெய்யக்குறையில்லையென இழிந்தசொல்லால் தலைமகன் தன்னினைவுதோன்ற ஐயுறக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மடுக்கோகடலின்விடுதிமிலன்றிமறிதிரைமீன் *
படுக்கோபணிலம்பலகுளிக்கோபரன்றில்லைமுன்றிற் *
கொடுக்கோவளைமற்றுநும்மையர்க்காயகுற்றேவல்செய்கோ *
தொடுக்கோபணியீரணியீர்மலர்நுஞ்சுரிகுழற்கே. (௬௩)

குறையுற்ற வேலவ ன்
குறை யுற்ற து.

(இ-ள்.) விடப்படுந்திமிலைக் கடலின்கட்செலுத்துவேனோ? அன்றிக் கீழ்மேலாந் திரையையுடைய கிளர்ந்தகடலிற்புக்கு மீனைப்பபிடிப்பேனோ? ஒருகுளிப்பின்கட் பலபணிலங்களையுமெடுப்பேனோ? பரனது தில்லைமுற்றத்திற்சென்று எல்லாருங்காணச் சங்கவளைகளை விற்பேனோ? அன்றி நும்மையன்மார்க்குப்பொருந்தினகுற்றேவல்களைச் செய்வேனோ? அணியப்படுந் தேனுலாவியமலரை நஞ்சாரிகுழற்குத் தொடுப்பேனோ? நீயிர்வேண்டியது சொல்லுமின். எ-று.

மற்று-வினைமாற்று. இவன் உயர்ந்ததலைமகனாதலின் அவர் தன்னைவேறுபடவுணராமைக்கூறியவாறு. முன்னிரந்து குறையுறாதற்கிடங்காட்டிக் குறையுறவுணர்தற்கு இயைபுபடக் குறையுறுமாற்றை நீண்டுக்கூறினான். இது திணைமயக்கம். என்னை, "உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே.,, எ-ம். "புனவர் தட்டை புடைப்பி னயலதிர் சங்குகதிரலமருங்கழனியும் பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங்கெழுமே.,, எ-ம். சொன்னாராகலின். மெய்ப்பாடு-இளிவரல். பயன்-குறையுறுதல். (௬௫)

அவன்குறிப்பறிதல்.

அவன்குறிப்பறிதலென்பது-குறையுறநின்றவன் முகத்தே தலைமகளது செயல் புலப்படக்கண்டு, இவ்வண்ணல் குறிப்பு இவளிடத்ததெனத் தோழி தலைமகனது நினைவு துணிந்துணராநிற்றல். அதற்குச்செய்யுள்.

அளியமன்னும்மொன்றுடைத்தண்ணலெண்ணரன்றில்லையன்னாள்
கிளியைமன்னுங்கடியச்செல்லநிற்பிற்கிளரளகத் *
தளியமர்ந்தேறின்வறிதேயிருப்பிற்பளிங்கடுத்த [த்தே.
வொளியமர்ந்தாங்கொன்றுபோன்றொன்று தோன்றுமொளிமுக
பொற்றொடித்தோளிதன் சிற்றிடைப்பாங் கி
வெறிப்பூஞ்சிலம்பன் குறிப்பறிந்த து.

(இ-ள்.) அரனது தில்லையையொப்பாள் புனத்துமன்னுங்கிளியைக்கடிவதற்குச் சிறிதகலநிற்பினும், இவளுடைய விளங்காநின்ற அளகத்தின்கண் வண்டுகள் மேவியேறினும், இவள் வாளாவிருப்பினும், இவனதொளியையுடைய முகத்தின்கண்ணே பளிங்கு தன்னிறத்தைவிட்டுத் தன்னையடுத்த நிறத்தை மேவினாற்போல முன் வேறொன்றுபோன்றிருந்து பின்னிவள்குறிப்பாகிய வேறொன்று தோன்றாநின்றது. அதனால் அளிய அண்ணலது குறிப்பு மன்னுமொன்றுடைத்து, அஃதிவள்கண்ணதேபோலும். எ-று.

கிளியைமன்னுமென்புழி மன்னும் அசைநிலையெனினுமமையும். ஒன்றுபோன்றொன்றுதோன்றுமென்றது- கிளியைக்கடியச் சிறிதுபுடைபெயரின் நெட்டிடைகழிந்தாற்போல ஆற்றுதலானும், வண்டுமூசப் பொறாளென்று வருந்தி வண்டைமேயாச்சுவாண்போலச் சேறலானும், வாளாவிருப்பிற் கண்டின்புறுதலானும், இவள்கண்ணிகழ்ச்சி இவன்முகத்தே புலப்படாநின்றது. எ-று. ஏறி வறிதேயிருப்பினென்பது பாடமாயின், அளியேறி அளகத்தின்கட்சிறிதிருப்பினுமெனவுரைக்க. ஒளிர்முகமேயென்பதூஉம்பாடம். (௬௪)

அவள்குறிப்பறிதல்.

அவள்குறிப்பறிதலென்பது- தலைமகனது நினைவறிந்த தோழி இவளிடத்து இவனினைவேயன்றி இவனிடத்து இவள் நினைவுமுண்டோவெனத் தலைமகளை நோக்க, அவண்முகத்தேயும் அவன்செயல் புலப்படக்கண்டு, இவ்வொண்ணுதல் குறிப்புமொன்றுடைத்தென அவனினைவுந் துணிந்துணராநிற்றல். அதற்குச்செய்யுள்.

பிழைகொண்டொருவிக்கெடாதன்புசெய்யிற்பிறவியென்னு *
முழைகொண்டொருவன்செல்லாமைநின்றம்பலத்தாடுமுன்னோ
னுழைகொண்டொருங்கிருநோக்கம்பயின்றவெம்மொண்ணுதன் மாத்
தழைகொண்டொருவனென்னுமுன்னமுள்ளந்தழைத்திடுமே. ()

ஆங்கவள் குறிப்பு ப்
பாங்கி பகர்ந்த து.

(இ-ள்.) பிழைத்தலைப்பொருந்தித் தன்கட்செல்லாதுநீங்கி இவ்வாறுகெடாதே ஒருவன் அன்புசெய்யுமாயின் அவன் பிறவியென்னுநின்ற பாழியையடைந்து செல்லாதவண்ணம் அம்பலத்தின்கணின்றாடும் எல்லாப்பொருட்கும் முன்னுபவனது உழைமானை மருணோக்கத்தாலொத்து வெள்ளைநோக்கமும் அவ்வுழைக்கில்லாத கள்ளநோக்கமுமாகிய இருநோக்கத்தையும் ஒருங்கே செய்யக்கற்ற எம்முடைய ஒண்ணுதல், மாந்தழையைக் கொண்டொருவனென்று சொல்லுவதன்முன், உள்ளந்தழையாநின்றாள், அதனால் இவள்குறிப்பு இவன் கண்ணதேபோலும். எ-று.

அடைந்தார்பிழைப்பின், தலையாயினார் பிழையையுட்கொண்டமைதலும், இடையாயினார் அவரைத் துறத்தலும், கடையாயினார் அவரைக்கெடுத்தலும் உலகத்துண்மையின், அம்மூவகையுஞ் செய்யாதெனினுமமையும். பிறிதுரைப்பாருமுளர். ஒருவியென்னும்

வினையெச்சம் கெடாதென்னு மெதிர்மறைவினையெச்சத்திற் கெடுதலோடுமுடிந்தது. (௬௫)

இருவர்நினைவு மொருவழியுணர்தல்.

இருவர்நினைவுமொருவழிபுணர்தலென்பது- இருவர்நினைவுங்கண்டு இன்புறுநின்றதோழி இவ்விருவரும் இவ்விடத்துவந்தகாரியம் இவன்முகமாகிய தாமரைக்கண் இவள்கண்ணாகிய வண்டு இன்பத்தேனையுண்டு எழில்பெறவந்த இத்துணையல்லது பிறிதில்லையென அவ்விருவரது நினைவுந்துணிந்துணராநிற்றல். அதற்குச்செய்யுள்.

மெய்யேயிவற்கில்லைவேட்டையின்மேன்மனமீட்டிவளும் *
பொய்யேபுனத்தினைகாப்பதிறைபுலியூரனையாண் *
மையேர்குவளைக்கண்வண்டினம்வாழுஞ்செந்தாமரைவா *
யெய்யேமெனினுங்குடைந்தின்பத்தேனுண்டெழிறருமே. ()

அன்புறுநோக் காங்கறி ந்
தின்புறுதோழி யெண்ணியது.

(இ-ள்.) இறைவனதுபுலியூரை யொப்பாளுடைய மையழகையுடைய குவளைபோலுங்கண்ணாகிய வண்டினம், தான்வாழ்தற்குத் தகும் இவன் முகமாகிய செந்தாமரைமலர்க்கண், யாமறியேமாயினும், குடைந்து இன்பமாகிய தேனையுண்டு, எழில்பெறுநின்றது! அதனால் இவற்கு மெய்யாகவே வேட்டையின்மேல் உள்ளமில்லை. இவளும் புனத்தினையைக் காப்பது பொய்யே. எ-று.

மீட்டென்பதற்கு மீட்டதன்றேலென்புழி உரைத்ததுரைக்க. ஏர்குவளையென்னுமியல்பு புறனடையாற்கொள்க. வண்டினமென்றான், நோக்கத்தின் பன்மைகருதி. எய்யேமெனினுமென்பதற்கு ஒருவரையொருவரறியேமென்றிருப் பினுமெனினுமமையும். எழிறருதல்- எழிலைப்புலப்படுத்துதல். இன்புறுதோழி - இருவர் காதலையுங்கண்டின்புறுதோழி. ஐயநீங்கித்தெளிதலான் இன்புறுமெனினுமமையும். அன்றியும் இவளுடையநலத்திற்கேற்ற நலத்தையுடைய தலைமகனைக் கண்டின்புறுந்தோழி. என்னை, களவொழுக்கத்தில் எழினல முடையானொருவனைக்கண்டு இன்புறக்கடவளோவெனின்,எழினலமேயன்று,பின் அறத்தொடுநிலைநின்று கூட்டுகை அகத்தமிழினிலக்கணமாதலால் தன்குரவர் வினவத் தாமறத்தொடுநிற்குமிடத்துக் குரவர் தாமேசென்று மகட்கொடுக்குங்குடிப்பிறப்பினால் உயர்ச்சியையுடையனாதலானும் இன்புற்று

ள். இவைமூன்றற்கும் மெய்ப்பாடு- பெருமிதம். பயன்- துணிந் துணர்தல். இவைமூன்றும் குறையுறவுணர்தல். என்னை, "இருவரு முள்வழி யவன்வர வுணர்தன், மூன்னுற வுணர்தல் குறையுற வுணர்தலென், றம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி.,, என்பவாகலின்.

குறையுறவுணர்தல் முற்றிற்று.

நாணநாட்டம்.

இனிமுன்னர் "நன்னிலைநாணம்,, என்றோதப்பட்ட நாணநாட் டமென்பது- இருவர்நினைவும் ஐயமறத் துணிந்ததோழி அவரது கூட்டமுண்மை அறிவது காரணமாகத் தலைமகளை நாணநாடாநிற் றல். நன்னிலைநாணமென்றது நல்லநிலைபெற்றநாணம். நல்லநிலை யாவது-நாணவும் நடுங்கவுநாடுதல் அகத்தமிழிலக்கணமன்றாதலா ன் இக்கோவை இஃதாமென்னுமிடம்பெற்றதாம். என்னை, தலைம கள் தனக்குத் தலைமகனோடுண்டாகிய புணர்ச்சியொழுக்கத்துக்கு இவள் காவற்றோழியாகையான் இடையூறாமென்னும் உள்ளத்த ளாய்நின்று, இவ்வொழுக்கத்தைத் தோழியறியின் நன்றென்னும் நினைவு வாராநிற்க, அவ்விடத்திலே இவள் நாணநாடுகையின், நன் னிலை நாணமென்றார். என்னை. "நாணவு நடுங்கவு நாடா டோழி, காணுங் காலைத் தலைமகட் டேத்து.,, என்பவாகலின்.

சூத்திரம். பிறைதொழு கென்றல் பின்னு மவளை, யறவெண் வேறு படுத்தி யுரைத்தல், சுனையாடல் கூற றோற்றங் கண்டு, புண ர்ச்சி யுரைத்தல் பொதுவெனக் கூறி, மதியுடம் படுதல் வழிநா ண னடுங்கல், புலிமிசை வைத்தல் புகலுங்காலே.

(இ-ள்.) பிறைதொழுகென்றல்- வேறுபடுத்துக்கூறல்- சுனையா டல்கூறிநகைத்தல்- புணர்ச்சியுரைத்தல் - மதியுடம்படுதல் என வி வையைந்தும் நாணநாட்டமாம். புலிமிசைவைத்தல் எனவிஃதொ ன்றும் நடுங்கநாட்டமாம். எ-று. அவற்றுள்,—

பிறைதொழுகென்றல்.

பிறைதொழுகென்றலென்பது -பிறையைக்காட்டித் தான்றொ ழுதுநின்று, நீயும் இதனைத்தொழுவாயாகவெனத் தோழி தலைம களது புணர்ச்சிநினைவறியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மைவார்கருங்கண்ணிசெங்கரங்கூப்புமறந்துமற்றப் *
பொய்வானவரிற்புகாதுதன்பொற்கழற்கேயடியே *

னுய்வான்புகவொளிர்தில்லைநின்றோன்சடைமேலதொத்துச் *
செவ்வானடைந்தபசுங்கதிர்வெள்ளைச்சிறுபிறைக்கே. (௬௭)

பிறைதொழுகென்ற பேதைமாத ரா
நறுநுதற்பாங்கி நாணநாட்டிய து.

(இ-ள்.) மறந்தும் பொய்ம்மையையுடைய அவ்வானவரிடத்துப் புகாதே தன்னுடைய பொன்னணியன்ற கழலையுடைய திருவடிகளிலே அடியேன் உய்யவேண்டிப் புக விளங்குந்தில்லைக்கட் கட்புலனாய்நின்றவனுடைய சடைக்கண்ணதாகிய பிறையையொத்துச் செக்கர்வானையடைந்த செவ்விக் கதிரையுடைய வெள்ளையாகிய சிறியபிறைக்கு, மையையுடைய நெடிய கரிய கண்ணிணையுடையாய், நினது செய்ய கைகளைக் கூப்புவாயாக. எ-று.

மறந்துமென்பது ஈண்டு அறியாதுமென்னும்பொருட்டாய்நின்றது. மற்று- அசைநிலை. மற்றையென்பது பாடமாயின், அல்லாத பொய்வானவரென்றுரைக்க. இனமல்லராயினும் இனமாக உலகத்தாராற் கூறப்படுதலின் அவ்வாறுகூறினார். "மூவரொன்றேயெம் பிரானொடு மெண்ணி,, என்பதூஉம் அக்கருத்தேபற்றிவந்தது. பிறர்கூறும்பெருமை அவர்க்கின்மையிற் பொய்வானவரென்றார் எனக்குப்பொறிபுணர்வல்ல தின்மையிற் கண்கவருந்திருமேனிகாட்டி என்னைவசித்தானென்னுங்கருத்தான், உய்வான் புகத்தில்லைநின்றோனென்றார். சடை செக்கர்வானத்திற்குவமை. ()

வேறுபடுத்துக்கூறல்.

வேறுபடுத்துக்கூறலென்பது - பிறைதொழாது தலைசாய்த்து நாணி நிலங்கிளையாநிற்பக் கண்டு, பின்னும் இவள்வழியேயொழுகி இதனையறிவோமென உட்கொண்டு, நீபோய்ச் சுனையாடிவாவென்ன, அவளும் அதற்கிசைந்துபோய் அவனோடு தலைப்பெய்துவர, அக்குறியறிந்து அவளை வலாயணங்காகப் புனைந்து வேறுபடுத்துக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

அக்கின்றவாமணிசேர்கண்டனம்பலவன்மலயத் *
திக்குன்றவாணர்கொழுந்திச்செழுந்தண்புனமுடையா *
ளக்குன்றவாறமர்ந்தாடச்சென்றாளங்கமவ்வவையே *
யொக்கின்றவாறணங்கேயிணங்காகுமுனக்கவளே. (௬௮)

வேப்பவளைத்தோளியை வேறுபாடுக ண்
டாய்வளைத்தோழி யணங்கென்ற து.

(இ-ள்.) அக்காகிய நல்லமணிபொருந்திய மிடற்றையுடையா

ன், அம்பலவன், அவனது பொதியின்மலயத்தின்கணுளராகிய இக்குன்றவாணருடைய மகளாகிய வள்ளிய இத்தண்புனங் காவலுடையாள் அக்குன்றத்தின்கணுண்டாகிய ஆற்றைமேவி ஆடப் போயினள், நின்னுறுப்புக்கள் அவளுறுப்புக்களாகிய அவற்றையேயொக்கின்றபடி, என்னணங்கே, நினக்கு அவளிணைக்காகும், அதனால் அவளைக் கண்டு போவாயாக. எ-று.

இன்-அல்வழிச்சாரியை. மலயத்திக்குன்றமென்று இயைப்பாருமுளர். (௫௮)

சுனையாடல்கூறிநகைத்தல்.

சுனையாடல்கூறிநகைத்தலென்பது-வேறுபடுத்துக்கூற நாணல்கண்டு, சுனையாடினல் இவ்வாறு அழிந்தழியாத குங்குமமும் அளகத்தப்பிய தாதும் இந்நிறமுந்தருமாயின் யானுஞ் சுனையாடிக் காண்பேனெனத் தோழி தலைமகளோடு நகையாடாநிற்றல். அதற்குச்செய்யுள்.

செந்நிறமேனிவெண்ணீறணிவோன்றில்லையம்பலம்போ
லந்நிறமேனிநின்கொங்கையிலங்கழிகுங்குமமு
மைந்நிறவார்குழன்மாலையுந்தாதும்வளாய்மதஞ்சே
ரிந்நிறமும்பெறின்யானுங்குடைவனிருஞ்சுனையே. (௫௯)

மாணநாட்டிய வார்குழற்பேதை யை
நாணநாட்டி நகைசெய்த து.

(இ-ள்.) செய்யநிறத்தையுடைய மேனிக்கண் வெள்ளியநீற்றை அணிவோனது தில்லையம்பலத்தையொக்கும் அழகிய நிறத்தையுடைத்தாகிய மேனியையுடைய நின்னுடைய கொங்கைகளில் அவ்விடத்தழிந்த குங்குமத்தையும், மையைப்போலுநிறத்தையுடைய நெடியகுழலின் மாலையையும், அளகத்தப்பியதாதையும், மேனி முழுதையுஞ்சூழ்ந்து மதத்தைச்சேர்ந்த இந்நிறத்தையும் பெறுவேனாயின், நீகுடைந்த பெரியசுனையை யானுங்குடைவேன். எ-று.

அம்பலம்போன்மேனியெனவியையும். அங்கழிகுங்குமமென்றது முயக்கந்தான் அழியும் அவ்விடத்தழிந்த குங்குமம். எ-று. மைந்நிறவார்குழற்கண் மாலையுந் தாதும் வளாவ இதனையும் இதனையும் பெறினென்ன எச்சந்திரித்துரைப்பினுமமையும். வளாவுதல்-புணர்ச்சிக்காலத்தில் மாலையின் முறிந்தமலரும் அளகத்தப்பி

யதாதுஞ் சிதறிக் குங்குமத்தினழுந்தி வாங்குதற்கருமையாக விரவுதல். மதமென்றது காமக்களிப்பாலுண்டாகிய கதிர்ப்பை. ()

புணர்ச்சியுரைத்தல்.

புணர்ச்சியுரைத்தலென்பது-சுனையாடல்கூறி நகையாடாநின்ற தோழி, அதுகிடக்க நீயாடிய அப்பெரியசுனைதான் கண்சிவப்ப வாய்விளர்ப்ப அளிதொடரும் வரைமலரைச் சூட்டவற்றோ சொல்வாயாகவெனப் புணர்ச்சி உரையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பருங்கண்கவர்கொலைவேழப்படையோன்படப்படர்தீத் *
திருங்கண்ணுதற்றில்லையம்பலத்தோன்றடமால்வரைவாய்க் *
கருங்கண்சிவப்பக்கனிவாய்விளர்ப்பக்கண்ணாரளிபின் *
வருங்கண்மலைமலர்சூட்டவற்றோமற்றவ்வால்சுனையே. (௭௬)

மணக்குறி நோக்கிப்
புணர்ச்சி யுரைத்தது.

(இ-ள்.) பரியகண்ணையும் விரும்பப்படுங் கொலையையுமுடைய கரும்புச்சிலையாகிய படையையுடையவன் மாளச் செல்லுந் தீயைத்தருங் கண்ணையுடைத்தாகிய நுதலையுடைய தில்லையம்பலத்தானது பெரியமால்வரையிடத்து நீயாடிய அப்பெரியசுனை, கரிய கண்சிவப்ப, தொண்டைக்கனிபோலும் வாய் விளர்ப்ப, அளிகள் பின்றொடர்ந்துவருங் கண்ணிற்கு ஆருங்களியையுடைய மலை மலரைச்சூட்டவற்றோ! சொல்வாயாக. எ-று.

பருங்கண்ணென மெலிந்துநின்றது. தடமும் மாலும் பெருமையாகலின் மிகப்பெரியவென்பது விளங்கும். தடம்-தாழ்வரையெனினுமமையும். வருங்கண்வரைமலரென்பது பாடமாயின், அளிதொடருமிடத்தையுடைய வரைமலரென்க. இடமென்றது பூவினேகதேசத்தை. இன்னும் வரைமலரென்பது- ஒருபூவை முழுதுஞ்சூடினாயின் தலைவி அதனையறிந்து பேண வேண்டி வாங்குதலைக்கூடும். ஆகையால் இவளிஃதறியாமற் றோழியறிவது பயனாக ஒருபூவின் முறித்த தொருசிறியவிதழைச் சூட்டினான் ஆகையான் வரைந்தமலரென்றாள். மற்று-அசைநிலை. இவைநான்கும், நாணநாட்டம். மெய்ப்பாடு-நகை. பயன்-கரவுநாடியுணர்தல்.

இவை மூன்றுறவுணர்தலின்விகற்பம். இவைநான்கும் பெருந்திணைப்பாற்படும். என்னை, அகத்தமிழ்ச்சிதைவாகலான். என்னை, "கைக்கிளை பெருந்திணை யகப்புற மாகும்." இவற்றுள், கைக்கிளை

யென்பது ஒருதலைக்காமம். பெருந்திணையென்பது பொருந்தாக்காமம். என்னை "ஒப்பில் கூட்டமு மூத்தோர் முயக்கமுஞ், செப்பிய வகத்தமிழ்ச் சிதைவும் பெருந்திணை" என்பவாகலின். நாணநாடலாகாமை - இவள் பெருநாணினளாதலான், தான் மறைந்து செய்தகாரியத்தைப்பிறரறியின் இறந்துபடுமாதலான், நாணநாட்டமாகாது. நடுங்கநாட்டமுமாகாது, இருவர்க்கும் உயிரொன்றாகலான் இறந்துபடுமாதலின். ஆதலால், அகத்தமிழிற்கு இவை வழுவாயின. இனி இதற்கு வழுவமைதி "நன்னிலைநாணம்" என்பதனானறிக. (எ௰)

மதியுடம்படுதல்.

மதியுடம்படுதலென்பது - பலபடியும் நாணநாடிக் கூட்டமுண்மையுணர்ந்ததோழி இம்மலையிடத்து இவ்விருவர்க்கும் இன்பத்துன்பங்கள் பொதுவாய் வாராநின்றன அதனால் இவ்விருவர்க்கும் உயிரொன்றேயென வியந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

காகத்திருகண்ணிற்கொன்றேமணிகலந்தாங்கிருவ *
ராகத்துளோருயிர்கண்டனம்யாமின்றியாவையுமா *
மேகத்தொருவனிரும்பொழிலம்பலவன்மலையிற் *
றோகைக்குந்தோன்றற்குமொன்றாய்வருமின்பத்துன்பங்களே.()

அயில்வேற்கண்ணியொ டாடவன்றனக்குயிரொன்றெ ன
மயிலியற்றோழி மதியுடம்பட்ட து.

(இ-ள்.) எல்லாப்பொருள்களுமாய் விரியும் ஒன்றையுடையவொருவன், பெரியபொழில்களாற் சூழப்பட்ட அம்பலத்தையுடையான், அவனது மலையில் இத்தோகைக்கும் இத்தோன்றற்கும் இன்பத்துன்பங்கள் பொதுவாய் வாராநின்றன. அதனால், காகத்தினிரண்டு கண்ணிற்கும் மணியொன்றே கலந்தாற்போல இருவர் யாக்கையுள் ஒருயிரை யாமின்று கண்டேம். எ-று.

யாவையுமாமேகம்-பராசத்தி. அம்பலவன் மலையில் இன்றியாங்கண்டனமென்றுகூட்டி, வேறோரிடத்து வேறொருகாலத்து வேறொருவர் இதுகண்டறிவாரில்லையென்பது படவுரைப்பினுமமையும். கலந்தாரிருவவென்பது பாடமாயின், காகத்திருகண்ணிற்கொன்றேமணியென்பதனை எடுத்துக்காட்டாகவுரைக்க. மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-மதியுடம்படுதல். (எக)

நாணநாட்டம்முற்றிற்று.

நடுங்கநாட்டம்.

மேல் "நடுங்கல் புலிமிசைவைத்தல் புகலுங்காலே," என்றோதப்பட்ட நடுங்கநாட்டமென்பது-கூட்டமுண்மை யுணர்ந்தனளாயினும், தலைமகள் பெருநாணினளாகலானும் தான் அவள்குற்றேவன்மகளாகலானும் பின்னும் தான் சொல்லாடாது அவடன்னைக்கொண்டே கேட்பது காரணமாக நெருங்கிநின்று, ஒருபுலி ஒருவனை யெதிர்ப்பட்டதெனத் தோழி அவளை நடுங்க நாடாநிற்றல்.

அதற்குச்செய்யுள்.

ஆவாவிருவரறியாவடிதில்லையம்பலத்து *
மூவாயிரவர்வணங்கநின்றோனையுன்னாரின்முன்னித் *
தீவாயுழுவைகிழித்ததந்தோசிறிதேபிழைப்பித் *
தாவாமணிவேல்பணிகொண்டவாறின்றோராண்டகையே. (எஉ)

நடங்கிடைப் பாங் கி
நடுங்க நாடிய து.

(இ-ள்.) அயனும் அரியுமாகிய இருவரறியாத அடியை மூவாயிரவசந்தணர் வணங்கத் தில்லையம்பலத்து எளிவந்து நின்றவனை நினையாதாரைப்போல வருந்த, எதிர்ப்பட்டுத்தன்கொடியவாயை உழுவை அங்காந்தது, அங்காப்ப, அதனைச் சிறிதே தப்புவித்து இன்றோராண்டகை மணியையுடைய வேலைப்பணிகொண்டவாறென்! எ-று.

அயனும் அரியுந் தில்லையம்பலத்திற்சென்று வணங்குமாறறிந்திலரொன்றுங்கருத்தினராகலின், ஆவாவென்பது அருளின்கட்குறிப்பு. இரக்கத்தின்கட்குறிப்பாய்த் தீவாயுழுவை கிழித்ததென்பதனை நோக்கிநின்றதெனினுமமையும். வருந்தவென ஒருசொல் வருவித்துரைக்கப்பட்டது. கொடியவுள்ளத்தராகலின் உன்னாதார் புலிக்குவமையாக வுரைப்பினுமமையும். தீவாயையுடையவுழுவை அவனைக்கிழித்ததெனத் தெளிவுபற்றி இறந்தகாலத்தாற் கூறப்பட்டதெனினுமமையும். அந்தோவென்பது இரக்கத்தின் கட்குறிப்பு. இறுதிக்கண் ஆவாவென்பது வியப்பின்கட்குறிப்பு. இதனுள் தலைமகளை நடுங்கநாடியதெவ்வாறெனின், தன்கொடிய வாயைப் புலி அங்காந்தது, உழுவையினது தீவாயை வேறொன்றாகிழித்தது, உழுவையினது தீவாய் பிறிதொன்றனைக் கிழித்தது என இம்மூன்றுபொருளும்படுகையான், இது நடுங்கநாட்டமாயிற்று. என்னை, தலைமகள் இங்ஙனம் நடுங்கியாராயும்வண்ணம் தோழி நாடுகையான். தீவாயுழுவைகிழித்ததென்ற இம்மூன்றுபொரு

னாம் வினா. இங்ஙனந் தோழியுரைப்பத் தலைமகள் நாடி நடுங்காநிற்கக்கண்டு, ஓராண்டகை வேலைப்பணிகொண்டவாறென்னென நடுக்கந் தீர்த்ததாயிற்று. இது கரவுநாடுதல். அஃதாவது வெளிப்படச்சொல்லுஞ் சொல்லன்றிப் பிறிதொன்றன்மேல்வைத்துச் சொல்லுதல். இதுவும் பெருந்திணைப்பாற்படும். மெய்ப்பாடு-நகை. பயன்-நடுங்கநாடிக் கரவுநாடிப்புணர்தல்.

நிருத்தம்பயின்றவனென்பதுதொட்டு மெய்யேயிவற்கில்லையென்பதன்காறும் வர ஐந்துபாட்டினும் மூன்றுறவுணர்தலையும் ஐயுறவாக்கி, இருவருமுள்வழி யவன்வர வுணர்வினைத் துணிந்துணர்வாக்கினார். மைவாரென்பதுதொட்டு இதன்காறும்வர இவையாதினும் மூன்றுறவுணர்தல் குறையுறவுணர்தல் இருவருமுள்வழியவன்வரவுணர்தலென்னும் மூன்றனையுந் துணிந்துணர்வாக்கினார்: ஈண்டிவ்விகற்பங்கண்டுகொள்க. (௭௨)

நடுங்கநாட்டம் முற்றிற்று.

மடற்றிறம்.

மடற்றிறமென்பது-நடுங்கநாடவும் பெருநாணினளாதலின், தலைமகள் தன்குறைசொல்லமாட்டாது நிற்ப, இனி இவளிறந்துபடவுங்கூடுமென உட்கொண்டு தலைமகனுடன் சொல்லாடத்தொடங்காநின்ற தோழி, தானும் பெருநாணினளாதலிற் பின்னுந் தலைமகன் குறையுறவேண்டிநிற்ப, அந்நிலைமைக்கட் டலைமகன் சென்று, இந்நாளெல்லாம் என்குறை நின்னான் முடியுமென்று நின்னை வந்திரந்தேன் இது நின்னான்முடியாமையின் யான் மடலூர்ந்தாயினும் இக்குறைமுடித்துக் கொள்வேனெனத் தோழிக்குக் கூறாநிற்றல். என்னை, "முன்னுற வுணரினு மவன்குறை யுற்ற, பின்னரல்லது கிளவிதோன் றாது" என்பவாகலின்.

சூத்திரம். ஆற்றா துரைத்த லுலகின்மேல் வைத்த, றன்றுணி புரைத்த லொடுவகை யுரைத்த, லருளா லரிதென னடையா லரிதென, லவயவ மெழுத லரிதென விலக்க, லுடம்படாது விலக்க லுடம்பட்டு விலக்க, னிடம்பட வொன்பதுஞ் செப்புங் காலை, வடம்படு முலைமேன் மடலா கும்மே.

(இ-ள்.) ஆற்றாதுரைத்தல்- உலகின்மேல்வைத்துரைத்தல்- தன்றுணிபுரைத்தல்-மடலேறும்வகையுரைத்தல்-அருளாலரிதெனவிலக்கல்-மொழிநடையெழுதலரிதெனவிலக்கல்-அவயவமெழுதலரி

தெனவிலக்கல்- உடம்படாதுவிலக்கல்- உடம்பட்டுவிலக்கல் என விவை ஒன்பதும் மடற்றிறமாம். எ-று. அவற்றுள்,—

ஆற்றாதுரைத்தல்.

ஆற்றாதுரைத்தலென்பது- தலைமகன்மேன் மடற்றிறங்கூறுகின்றானாகலின் அதற்கிசைவுபட அவ்விருவருமெழச்சென்று நின்று, நீயிர் அருளாமையின் என்னுயிர் அழியாநின்றது இதனை அறிமினெனத் தலைமகன் தனது ஆற்றாமை மிகுதிகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொருளாவெனைப்புகுந்தாண்டுபுரந்தரன்மாலயன்பா *
லிருளாயிருக்குமொளிநின்றசிற்றம்பலமெனலாஞ் *
சுருளார்கருங்குழல்வெண்ணகைச்செவ்வாய்த்துடியிடையீ *
ரருளாதொழியினொழிபாதழியுமென்னாருயிரே. (௭௩)

மல்லற்றிரள் வரைத்தோளவன்
சொல்லாற்றாது சொல்லியது.

(இ-ள்.) தானேவந்து புகுந்து என்னைப்பொருளாக மதித்தாண்டு இந்திரன் மால் அயனென்னும் அவர்களிடத்து இருளாயிருக்கின்ற ஒளி தங்கிய சிற்றம்பலமென்று சொல்லத்தகுஞ் சுருளார்ந்த கரியகுழலினையும் வெள்ளியநகையினையுஞ் செய்யவாயினையுமுடைய துடியிடையீர், நீயிர் அருளாதொழியின் எனதாருயிர் தப்பாமலழியும், அதனான் அருளத்தகும். எ-று.

தொகையின்மையிற் பாலென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டுக. சிற்றம்பலம் துடியிடையார்க்குவமை. மடற்றிறங்கூறுகின்றானாகலின், அதற்கிசைவுபட ஈண்டுங் குறையுறுதல் கூறினான். சொல்லாற்றாது-சொல்லுதற்கும் ஆற்றாது. மெய்ப்பாடு-அழுகை. பயன்-ஆற்றாமையுணர்த்துதல். (௭௩)

உலகின்மேல்வைத்துரைத்தல்

உலகின்மேல்வைத்துரைத்தலென்பது- ஆற்றாமைகூறி அதுவழியாகநின்று, ஆடவர் தம்முள்ளமாகிய மீன் மகளிரது கண்வலைப்பட்டால் அதனைப் பெறுதற்கு வேறுபாயமில்லாதவிடத்து மடலூர்ந்தும் அதனைப்பெறுவரென உலகின்மேல் வைத்துக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

காய்சினவேலன்னமின்னியல்கண்ணின்வலைகலந்து *
வீசினபோதுள்ளமீனிழந்தார்வியன்றென்புலியூ *
ரீசனசாந்துமெருக்குமணிந்தோர்கிழிபிடித்துப் *
பாய்சினமாவெனவேறுவர்சீறூர்ப்பனைமடலே. (௭௪)

புலவேலண்ணல் புனைமடலே   ற்
றுலகின்மேல்வைத் துய்த்துரைத்த   து.

(இ-ள்.) காய்சினத்தையுடைய வேல்போலும் ஒளியியலுங் கண்ணாகிய வலையை மகளிர் கலந்துவீசினபோது அவ்வலைப்படுதலான் உள்ளமாகியமீனை யிழந்தவர்கள், பெரிய தென்புலியூர்க்கணுளனாகிய ஈசனுடைய நீற்றையும் எருக்கப்பூவையும் அணிந்து, ஒருகிழியைக் கையிற்பிடித்து, பாயவல்ல சினத்தையுடைய மாவெனப் பனைமடலைச் சீறூர்க்கணேறுவர், தம்முள்ளம் பெறுதற்கு வேறுபாயமில்லாதவிடத்து. எ-று.

மின்னியல்வேலென்று கூட்டினு மமையும். இன்-அல்வழிச்சாரியை. கண்ணென்வலையென்பதூஉம் பாடம். மகளிரென ஒருசொல்வருவியாது கருவி கருத்தாவாக உரைப்பினு மமையும். உள்ளமிழந்தவர் உள்ளம்பெறுமளவும் தம்வயமன்றி மடலின் வயத்தராய் நிற்றலால் கருவிகருத்தாவாகக்கொள்க. சாந்தும் எருக்குமென இரண்டாகலின் ஈசனவெனப் பன்மையுருபு கொடுத்தார். பாய்சினமென்புழிச் சினம்- உள்ளமிகுதி. உய்த்துரைத்தது-குறிப்பாலுரைத்தது. (௭௪)

தன்றுணிபுரைத்தல்.

தன்றுணிபுரைத்தலென்பது-மூன்றுலகின்மேல்வைத்துணர்த்தி அதுவழியாக நின்று, என்னையும் ஒருபெண்கொடி பிறரிகழ மடலேறப்பண்ணநின்றதென முன்னிலைப்புறமொழியாகத் தன்றுணிபு கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

விண்ணைமடங்கவிரிநீர்பரந்துவெற்புக்கரப்ப *
மண்ணைமடங்கவருமொருகாலத்துமன்னிநிற்கு *
மண்ணல்மடங்கலதளம்பலவனருளிலர்போற் *
பெண்ணைமடன்மிசையான்வரப்பண்ணிற்றோர்பெண்கொடியே

மாணவேலவன் மடன்மாமி   சை
யானுமேறுவ னென்னவுரைத்த   து.

(இ-ள்.) விண் மடங்கவும் விரிநீர் பரத்தலான் வெற்பொளிப்பவும் மண் மடங்கவும் வரும் ஊழிபிறுதியாகிய ஒருகாலத்தின்கண்ணும் நிலைபெற்றுநிற்கும் அண்ணல், சிங்கத்தினது தோலையுடைய அம்பலவன், அவனதருளில்லாதாரைப்போலப் பிறரிகழப் பனைமடன்மேல் யான்வரும்வண்ணம் அறிவின்மையைச் செய்தது ஒருபெண்கொடி. எ-று.

விண்ணை மண்ணை என்புழி ஐகாரம்-அசைநிலை மடங்குதல்-தத்தங்காரணங்களின் ஒடுங்குதல். மடங்கல்-புலியெனினுமமையும் மானம்-கொண்டாட்டம். வேலையுடையவனது மானமாகியகுணம் வேன்மேலேற்றப்பட்டதெனினுமமையும். இவை யிரண்டற்கும் மெய்ப்பாடு-இளிவரல். பயன்-ஆற்றாமையுணர்த்துதல். ()

மடலேறும்வகையுரைத்தல்.

மடலேறும்வகையுரைத்தலென்பது- துணிவுகூறவும் பெருநாணினளாதலிற் சொல்லாடாத தோழிக்கு வெளிப்படத் தான் நாணிழந்தமைதோன்ற நின்று,யான் நாளை நின்னூர்த்தெருவே மடலுங்கொண்டு வருவேன் பின்வருவது காணெனத் தலைமகன்றான் மடலேறும்வகை கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

கழிகின்றவென்னையுநின்றநின்கார்மயிறன்னையும்யான் *
கிழியொன்றநாடியெழுதிக்கைக்கொண்டென் பிறவிகெட்டின் *
றழிகின்றதாக்கியதாளம்பலவன்கயிலையந்தேன் *
பொழிகின்றசாரனுஞ்சீறூர்த்தெருவிடைப்போதுவனே. (௭௬)

அடல்வேலவ னழிவுற் று
மடலேறும் வகையுரைத்த து.

(இ-ள்.) கழியாநின்ற என்னையும் யானித்தன்மையனாகவுந் தன்றன்மையளாய்நின்ற நின்னுடைய கார்மயிறன்னையுங் கிழிக்கட்பொருந்த ஆராய்ந்தெழுதி, யான் அதனைக்கையிற் கொண்டு, என்பிறவியை இன்றுகெட்டழியாநின்றதாகச் செய்ததாளையுடைய அம்பலவனது கைலையின் அழகிய தேன் பொழியாநின்றசாரற்கணுண்டாகிய நுமது சீறூர்த்தெருவின்கட்டிரிவேன், பின்வருவதுகாண். எ-று.

தனக்குஅவளயலென்னுங் கருத்தினனாய், நின்கார்மயிலென்றான். என்னையும் நின் கார்மயிறன்னையும் மடலிடத்தெழுதுவேனென்றதென்னை கார்மயிலையெழுதுவதன்றித் தன்னையுமெழுதுமோவெனின், மடலெழுதிக் கையிற்கொண்டால் உரையாடுகையின்றி இவனும் ஓவியமாகலின், மடலின்றலையிலே தன்னுருவையுந் தன்பேரையும் அவளுருவையும் அவள் பேரையும் எழுதுகையால் என்னையுமென்றான். கார்மயில்-கார்காலத்துமயில். அழிகின்றதென நிகழ்காலத்தாற்கூறினார்,பிறத்தற்குக் காரணமாகிய மலங்கெட்டும் யாக்கைக்குக் காரணமாகிய மலத்துடனே வினைநின்றமையின். மெய்ப்பாடும் -பயனும் அவை. (௭௬)

அருளாலரிதெனவிலக்கல்.

அருளாலரிதெனவிலக்கலென்பது - தலைமகன் வெளிப்பட நின்று மடலேறுவேனென்று கூறக்கேட்ட தோழி இனியிவன் மடலேறவுங்கூடுமென உட்கொண்டு, தன்னிடத்து நாணினைவிட்டுவந்து எதிர்நின்று, நீர்மடலேறினால் உம்முடைய அருள் யாரிடத்ததாமென்று அவனதருளை யெடுத்துக்கூறி விலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

நடனாம்வணங்குந்தொல்லோனெல்லைநான்முகன்மாலறியாக் *
கடனாமுருவத்தரன்றில்லைமல்லற்கண்ணார்ந்தபெண்ணை *
யுடனாம்பெடையொடொண்சேவலுமுட்டையுங்கட்டழித்து *
மடனாம்புனைதரின்யார்கண்ணதோமன்னவின்னருளே. (௭௭)

அடல்வேலண்ண லருளுடைமையின்
மடலேற்றனக் கரிதென்றது.

(இ-ள்.) கூத்தன், நாம் வணங்கும் பழையோன், நான்முகனும் மாலும் முடியும் அடியுமாகிய எல்லைகளை அறியாத இயல்பாகிய வடிவையுடைய அரன், அவனது தில்லைக்கணுண்டாகிய வளத்தை யுடைய கண்ணிற்கார்ந்த பெண்ணைக்கண் உடனாகும் பெடையோடுஞ் ஒள்ளிய சேவலையும் முட்டையையுங் காவலையழித்து மடலை நாம் பண்ணின், மன்னனே, இனிய அருள் இவ்வுலகத்தில் யார்கண்ணதாய்? எ-று.

அறியாவுருவமென வியையும். அறியாத அக்கடனுளதாமுருவமெனினுமமையும். மடல்விலக்கித் தழீஇக்கொள்கின்றாளாதலின், நாமென உளப்படுத்துக்கூறினாள். நின்னருளென்பது, பாடமாயின், யார்கண்ணருளுளவையென்றுரைக்க. அண்ணல் - முன்னிலைக்கண்வந்தது. (௭௭)

மொழிநடையெழுதலரிதெனவிலக்கல்.

மொழிநடையெழுதலரிதெனவிலக்கலென்பது - அருளெடுத்து விலக்கவும் தன்வழி நில்லாமைகண்டு அவன்வழியொழுகி விலக்குவாளாக, நமதருள்கிடக்க மடலேறுவார் மடலேறுதல் மடலேறப்படுவாருருவெழுதிக்கொண்டன்றே நமக்கு அவள் மொழிநடையெழுதல் முடியாதாகலின் நீயிர் மடலேறுமாறென்னோவென விலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

அடிச்சந்தமால்கண்டிலாதனகாட்டிவந்தாண்டுகொண்டென் *
முடிச்சந்தமாமலராக்குமுன்னோன்புலியூர்புரையுஞ் *

கடிச்சந்தயாழ்கற்றமென்மொழிக்கன்னியனநடைக்குப் *
படிச்சந்தமாக்கும்படமுளவோநும்பரிசகத்தே. (எஅ)

அவயவமரிதி னண்ணறீட்டினு ம்
இவையிவைதீட்ட லியலாதென்ற து.

(இ-ள்.) மறையும் மாலுங் கண்டறியாதனவாகிய அடிகளை என க்குக்காட்டித் தானே வந்தாண்டுகொண்டு அவ்வடிகளை என்முடிக்கு நிறத்தையுடைய பெரியமலராகச்செய்யும் நூன்ஞனது புலியூரையொக்குஞ் சிறந்த நிறத்தையுடைய யாழோசையின்றன் மையைக்கற்ற மென்மொழியையுடைய கன்னியது அன்னத்தின டைபோலுநடைக்குப் படிச்சந்தமாகப் பண்ணப்படும் படங்கள் உளவோ நுமது சித்திரசாலையின்கண்? எ-று.

கடிச்சந்தயாழ்கற்ற மென்மொழியென்பதற்குச் சிறந்தவோசையையுடைய யாழ்வந்தினிதாகவொலித்தலைக்கற்ற மென்மொழியென்றுரைப்பாருமுளர். படிச்சந்தமென்பது ஒன்றன்வடிவையுடைத்தாய் அதுவென்றே கருதப்படுமியல்புடையது. படிச்சந்தமென்பது பிரதிச்சந்தமெல்லும்வடமொழிச்சிதைவு.()

அவயவமெழுதலரிதெனவிலக்கல்.

அவயவமெழுதலரிதெனவிலக்கலென்பது-அவளது மொழிநடைகிடக்க இவைதாமெழுதமுடியுமோமுடியுமாயின் யான்சொன்னபடியே தப்பாமலெழுதிக்கொண்டு வந்தேறுமென்று அவளதவயவங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

யாழுமெழுதியெழின்முத்தெழுதியிருளின்மென்பூச் *
சூழுமெழுதியொர்தொண்டையுந்தீட்டியென்றோல்பிறவி *
யேழுமெழுதாவகைசிதைத்தோன்புலியூரிளமாம் *
போழுமெழுதிற்றோர்கொம்பருண்டேற்கொண்டுபோதுகவே.

அவயவ மான வ
யிவையிவை யென்ற து.

(இ-ள்.) மொழியாக மொழியோடொக்கும் ஓசையையுடைய யாழையுமெழுதி, முறுவலாக எழிலையுடைய முத்துக்களையுமெழுதி, குழலாக இருளின்கண் மெல்லிய பூவாணியன்ற குழையுமெழுதி,வாயாக ஓர்தொண்டைக்கனியையுமெழுதி, கண்ணாக இளையதாகிய மாவடுவகிரையும் எழுதப்பட்டதோர் கொம்புண்டாயின், அதனைக் கொண்டு எம்மூர்க்கண் மடலேற வாரும். எ-று.
என்னுடைய பழையவாகிய பிறவிகளேழையும் கூற்றுவன் தங்க

ணைக்கிலெழுதாதவண்ணஞ் சிதைத்தவனது புலியூரிளமாம்போழுமெனக்கூட்டுக.

முத்துமென்னு மும்மை விகாரவகையாற்றொக்குநின்றது. ஞுழென்றது சூழ்ந்தமாலையை. செய்தெனெச்சங்கள் எழுதிற்றென்னுந்தொழிற்பெயரின் எழுதுதலொடு முடிந்தன. எழுதிற்றென்பது செயப்படுபொருளைச் செய்ததுபோலக் கூறிநின்றது. வினையெச்சங்களும் அவ்வாறு நின்றவெனினு மமையும். மொழியும் இவளதாகலின், அவயவமென்றாள். இவை மூன்றற்கும்மெய்ப்பாடு-நகை. பயன்- மடல்விலக்குதல். (௭௧)

உடப்படாதுவிலக்சல்.

உடம்படாதுவிலக்கலென்பது- எழுதலாகாமைகூறிக் காட்டி, அதுகிடக்க நும்மை யாம் விலக்குகின்றேமல்லேம் யான் சென்று அவணினைவறிந்து வந்தாற் பின்னை நீயிர்வேண்டிற்றைச்செய்யும் அவ்வளவும் நீயிர் வருந்தாதொழியுமெனத் தானுடம்படாது விலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஊர்வாமொழிவாயுயர்பெண்ணைத்திண்மடனின்குறிப்புச் *
சீர்வாய்சிலம்பிருந்தவிருந்திலமீசர்தில்லைக் *
கார்வாய்குழலிக்குன் னாதரவோதிக்கற்பித்துக்கண்டா *
லார்வாய்தரினறிவார்பின்னைச்செய்கவதிந்தனவே. (௭௨)

அடிபடையண்ண லழிதுயரொழிகென
மடநடைத்தோழி மடல்விலக்கியது.

(இ-ள்) உயர்ந்தபெண்ணையினது திண்ணியமடலையூர்வாய், அன்றியொழிவாய், அழகு வாய்த்த சிலம்பையுடையாய், நின்கருத்தை யாந்திருத்த விருந்தேமல்லேம், ஈசனது தில்லைக்கணுளதாகிய கருமைவாய்த்த குழலையுடையாட்கு உனது விருப்பத்தைச்சொல்லி, இதற்கு அவளுடம்படும்வண்ணஞ் சிலவற்றைக் கற்பித்துப்பார்த்தால், இடந்தருமாயினும் யாரறிவார்! இடந்தாராளாயிற் பின் நீயறிந்தவற்றைச் செய்வாயாக. எ-று.

கார்போலுங் குழலெனினுமமையும். வாய்தரினென்பதற்கு வாய்ப்பினெனினுமமையும். பின்னைச்செய்கவென்றது- நீகுறித்தது செய்வாயாயினும் என்குறிப்பிதுவென்றவாறு. (௭௨)

உடப்பட்டுவிலக்கல்.

உடம்பட்டுவிலக்கலென்பது உடம்படாது முன்பொதுப்பட விலக்கி முகங்கொண்டு, பின்னர்த் தன்னோடு அவளிடை வேற்றுமையின்மைகூறி, யான் நின்குறைமுடித்துத் தருவேன் நீவருந்த

வேண்டாவெனத் தோழி தானுடம்பட்டுவிலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்.

பைந்நாணரவன்படுகடல்வாய்ப்படுநஞ்சமுதா *
மைந்நாண்மணிகண்டன்மன்னும்புலியூர்மணந்தபொன்னிம் *
மொய்ந்நாண்முதுதிரைவாயானழுந்தினுமெய்ம்மின்முன்னு *
மிந்நாளிதுமதுவார்குழலாட்கென்கணின்னருளே. (௮௧)

அரவருநுண்ணிடைக் குரவருகூந்தலென்
னுள்ளக்கருத்து விள்ளாளென்றது.

(இ-ள்.) பையையுடைய அரவாகிய நாணையுடையான், ஒலிக்குங்கடலிடத்துப்பட்ட நஞ்சம்அமுதாகும் மைநாணு நீலமணிபோலுங்கண்டத்தையுடையான், அவன் மன்னும் புலியூரைப்பொருந்திய பொன்போல்வாள், நாட்காலத்தாடும் பெருமையையுடைய இம்முதிய கடற்கண் யானழுந்தினேனாயினும் தான் என்னின் முற்பட்டழுந்தும் தேனையுடைய நெடியகுழலாட்கு என்கணுண்டாகிய இனியஅருள் இப்பொழுதித்தன்மைத்தாயிராநின்றது.எ-று.

அமுதாமென்னும் பெயரெச்சம் கண்டமென்னு நிலப்பெயர்கொண்டது. மைந்நாணுங் கண்டமெனவிரையும். மணிகண்டனென்பது வடமொழியிலக்கணத்தாற்றொக்குப் பின்பிரிந்து நின்றது. மொய்-வலி, ஈண்டுப் பெருமைமேனின்றது. குற்றேவல்செய்வார்கட் பெரியோர்செய்யும் அருள் எக்காலத்துமொருதன்மைத்தாய் நிகழாதென்னுங்கருத்தான் இந்நாளிதுவென்றாள். எனவே தலைமகளது பெருமையுந் தன்முயற்சியது அருமையுங் கூறியவாறாயிற்று. அரா குரா வென்பன குறுகிநின்றன. வருமென்பது உவமச்சொல். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு- பெருமிதம். பயன்-தலைமகனையாற்றுவித்தல். (௮௧)

மடற்றிறம் முற்றிற்று.

குறைநயப்புக்கூறல்.

குறைநயப்புக்கூறலென்பது-தலைமகனை மடல்விலக்கிக் குறைநேர்ந்ததோழி தலைமகளைக் குறைநயப்பிக்க அவன் குறைகூறாநிற்றல்.

அதுவருமாறு, -சூத்திரம். குறிப்பறிதலோடு மென்மொழி கூறல், விரவிக் கூற லறியாள் போறல், வஞ்சித் துரைத்தல் புலந்து கூறல், வன்மொழி கூறன் மனத்தொடு நேர்தல், சொன்ன விரு நான்குந் துறைகுறை நயப்பென, மன்னிய பொருளில் வகுத்திசி னோரே.

(இ-ள்.) குறிப்பறிதல்-மென்மொழியாற்கூறல்-விரவிக்கூறல்-அறியாள்போறல்- வஞ்சித்துரைத்தல்-புலந்துகூறல்- வன்மொழியாற்கூறல்- மனத்தொடுநேர்தல் என விவையெட்டுங் குறைநயப்பித்தலாம். எ-று. அவற்றுள்,—

குறிப்பறிதல்.

குறிப்பறிதலென்பது-தலைமகனது குறைகூறத் துணியாநின்ற தோழி தெற்றெனக் கூறுவேனாயின் இவள் இதனை மறுக்கவுங் கூடுமென உட்கொண்டு, நம்புனத்தின்கட் சேயினது வடிவையுடையாராய்ச் சினவேலேந்தி ஒருவர் பலகாலும் வாராநின்றார் வந்துநின்று ஒன்று சொல்லுவதுஞ்செய்கின்றிலர் அவரிடத்து யாஞ்செய்யத்தக்கதியாதெனத் தான் அறியாதாள்போலத் தலைமகளோடு உசாவி, அவணினைவறியாநிற்றல். என்னை, "ஆங்குணர்ந் தல்லது கிழவோ டேத்துத், தான்குறை யுறுத றோழிக் கில்லை,, என்பவாகலின். அதற்குச்செய்யுள்.

தாதேய்மலர்க்குஞ்சியஞ்சிறைவண்டுதண்டேன்பருகித் *
தேதேயெனுந்தில்லையோன்சேயெனச்சினவேலொருவர் *
மாதேபுனத்திடைவாளாவருவர்வந்தியாதுஞ்சொல்லார் *
யாதேசெயத்தக்கதுமதுவார்குழலேந்திழையே. (அ௨)

நறைவளர்கோதையைக் குறைநயப்பித்த ற்
குள்ளறிகுற்ற வொள்ளிழையுரைத்த து.

. (இ-ள்.) மாதே, தாதுபொருந்திய மலரையுடைய குஞ்சிகளின்கண் அழகிய சிறகையுடைய வண்டினங்கள் தண்டேனைப்பருகித்தேதேயெனப்பாடுந் தில்லையையுடையானுடைய புதல்வனாகிய முருகவேளென்றே சொல்லும்வண்ணம் சினவேலையுடையாரொருவர் நம்புனத்தின்கண் வாளா பலகாலும் வாராநிற்பர், வந்துநின்று ஒன்றுமுரையாடார், மதுவார்ந்த குழலையுடைய ஏந்திழாய், அவரிடத்து நாஞ்செய்பத்தக்கது யாதென்றறிகின்றிலேன். எ-று.

குஞ்சி-தில்லைவாழ்வார் குஞ்சி; மலரினது குஞ்சியெனவிரித்து, அல்லியென்றுரைப்பினுமமையும். சேயோடொத்தல்- பண்பு வடிவு முதலாயினவும், சினவேலேந்தி வரையிடத்து வருதலுமாம். வேட்டைமுதலாகிய பயன்கருதாது வருவரொன்பாள், வாளா வருவரென்றாள். முகப்புகுகின்றாளாதலின், பின்னும் ஏந்திழையேயென்றாள். சேயென்புழி எண்ணேகாரந்தொக்குநின்றது, என்

ணே, மேலே "புரிசேர்சடையோன்புதல்வன்கொல் பூங்கணைவேள் கொல்,, எனவருதலான். யாதேயெனனுமேகாரம் வினா. மாதே ஏந்திழையே என்புழி ஏகாரம் விளியுருபு. அறிகுற்றவென்பது அறியவேண்டியவென்னும்பொருட்கண்வந்த ஒருமொழிமுடிபு.

மென்மொழியாற்கூறல்.

மென்மொழியாற்கூறலென்பது-நினைவறிந்து முகங்கண்டு, அது வழிபாகநின்று, ஒருபெரியோன் வாடிய மேனியனும் வாடாத தழையனுமாய் நம்புனத்தை விட்டுப் போவதுஞ் செய்கின்றிலன் தன்குறை இன்னதென்று வெளிப்படச்சொல்லுவதுஞ்செய்கின்றிலன் இஃதென்னமாயங்கொல்லோ அறிகின்றிலேனென்னத் தோழி தான் அதற்கு நேர்ந்து கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

வரிசேர்தடங்கண்ணிமம்மர்கைம்மிக்கென்னமாயங்கொலோ
எரிசேர்தளிரன்னமேனியனீர்ந்தழையன்புலியூர்ப்
புரிசேர்சடையோன்புதல்வன்கொல்பூங்கணைவேள்கொலென்னத்
தெரியேமுமாயான்பிரியாளொருவனித்தேப்புனமே. (அரு)

ஒளிருறுவேலவன் றளர்வுறுகின்ற மை
இன்மொழிபவட்கு மென்மொழிமொழிந்தது.

(இ-ள்.) வரிசேர்ந்த பெரியகண்ணையுடையாய், ஒருவன் மயக்கங்கைம்மிக்கு, எரியைச்சேர்ந்த தளிரைபொக்கும் மேனியையுடையனுமாய், வாடாத தழையையுடையனுமாய், இத்தேம்புனத்தைப் பிரிகின்றிலன், ஒன்றுரைப்பதுஞ் செய்கின்றிலன், அவன்றன்னைப் புலியூர்க்கணுளனாகிய புரிதலைச்சேர்ந்த சடையையுடையோனுடையபுதல்வனோ பூவாகிய அம்பையுடைய காமவேளோ வென்று யாந்துணிகின்றிலேம், ஈதென்னமாயமோ! எ-று.

அவ்வாறு இறப்பப்பெரியோன் இவ்வாறு எளிவந்தொழுகுதல் என்ன பொருத்தமுடைத்தென்னுங் கருத்தால், என்ன மாயங்கொலோவென்றாள். புலியூர்ப்புரிசேர்சடையோன்புதல்வன்கொலென்றதனால் நம்மை டழிக்கவந்தானோவென்றும், பூங்கணைவேள் கொலென்றதனால் நம்மைக்காக்கவந்தானோவென்றும் கூறியவாறாயிற்று. புரிசேர்சடையோன் புதல்வனென்றதனை மடற்குறிப்பென்றுணர்க. கொல்-ஐயம். மேனியன் தழையனென்பன வினையெச்சங்கள். மென்மொழிமொழிந்தது- மென்மொழியான்மொழிந்தது. (அகூ)

விரவிக்கூறல்.

விரவிக்கூறலென்பது-வன்மொழிபாற்கூறின் மனமெலியுமென்றஞ்சி, ஓரலவன் தன்பெடைக்கு நாவற்கனியை நல்கக்கண்டு ஒருபெருந்தகை பேய்கண்டாற்போல நின்றான். அந்நிலைமையை நீ கண்டாயாயின் உயிர்வாழமாட்டாய் யான் வன்கண்மையேனாகலான் ஆற்றியுளேனாய்ப் போந்தேனென மென்மொழியோடு சிறிது வன்மொழிபடக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

நீகண்டனையெனின்வாழலைநேரிழையம்பலத்தான் *
சேய்கண்டனையன்சென்றாங்கோரலவன்றன்சீர்ப்பெடையின் *
வாய்வண்டனையதோர்நாவற்கனிநனிநல்கக்கண்டு *
பேய்கண்டனையதொன்றாகிநின்றானப்பெருந்தகையே. (அச)

வன்மொழியின் மன மெலிவதஞ்சி
மென்மொழிவிரவி மிகுத்துரைத்தது.

(இ-ள்.) நேரிழாய், அம்பலத்தான் புதல்வனைக்கண்டாற்போன்றிருக்கும் ஒருவன் அவ்விடத்து ஓரலவன் தனதழகையுடைய பெடையின்வாயின்கண் வண்டனையதொருநாவற்கனியைச் சென்று மிகவுங்கொடுப்ப அதனைக்கண்டு அப்பெருந்தகை பேயாற்காணப்பட்டாற்போல்வதோர்வேறுபாட்டையுடையனாகி நின்றான், அந்நிலையை நீகண்டாயாயின் உயிர்வாழமாட்டாய். யான் வன்கண்மையேனாதலின், அதனைக்கண்டும் ஆற்றியுளேனாயினேன்.எ-று.

பேய்கண்டனையதென்பதற்குப் பேயைக்கண்டாற்போல்வதோர்வேறுபாடென்றுரைப்பினுமமையும். பேய்கண்டனையதொன்றையுடையனாயென்னாது ஒற்றுமைநயம்பற்றி ஒன்றாகியென்றாள். நாவற்கனியை நனிநல்கக்கண்டு தன்னுணர்வொழியப்போயினான் இன்றுவற்றிலனென்னாது பேய்கண்டனையதொன்றாகிநின்றானென்று கூறினமையான் மென்மொழியும், சேய்கண்டனையனென்றதனால் வன்மொழியும் விரவியதாயிற்று. மிகுத்தல்- ஆற்றாமைமிகுத்தல். இவைமூன்றற்கும் மெய்ப்பாடு-இளிவரலைச்சார்ந்தபெருமிதம். பயன்-தலைமகளை மெலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தல். (அச)

அறியாள்போறல்.

அறியாள்போறலென்பது-பேய்கண்டாற்போல நின்றானெனத் தலைமகனிலைமைகேட்ட தலைமகள் பெருநாணினளாதலின் இத

னையறியாதாளைப்போல, இஃதொருகடல்வடிவிருந்தவாறு காணு
மெனத் தானொன்று கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

சங்கத்தருமுத்தியாம்பெறவான்கழிதான்கெழுமிப் *
பொங்கும்புனற்கங்கைதாங்கிப்பொலிகலிப்பாறுலவு *
துங்கமலிதலையேந்தலினேந்திழைதொல்லைப்பன்மா *
வங்கமலிகலிநீர்தில்லைவானவனேர்வருமே. (௮௫)

அறியாள் போன் று
குறியாள் கூறிய து.

(இ-ள்.) ஏந்திழாய், இத்தன்மைத்தாகலிற் பலவாய்ப்பெரியவாகிய மரக்கலங்கள் மிகப்பெற்ற பழையதாகிய கடல் தில்லைவானவற்கொப்பாம் எ-று.

சங்குதருமுத்துக்களை யாம்பெறப் பெரிய கழிகளைத் தான் பொருந்திப் பொங்கும் புனலையுடைய கங்கையைத் தாங்கிப் பொலிந்த ஆரவாரத்தையுடைய பாறுகிய மரக்கலங்களியங்குந் திரைகளின்மிகுதியையுடைத்தாகலின் எனக் கடலிற்கேற்பவும், திருவடிக்கணுண்டாகிய பற்றுத்தரும் முத்தியை யாம்பெறும்வண்ணம் எல்லாப்பொருளையும் அகப்படுத்திநிற்கும் ஆகாயத்தையுங்கடந்துநின்ற தான் ஒருவடிவுகொண்டுவந்து பொருந்திப் பொங்கும் புனலையுடைய கங்கையைச்சூடி மிக்க ஆரவாரத்தையுடைய பாறுகிய புட்கள் சூழாநின்ற உயர்வுமிக்க தலையோட்டையேந்துதலின் எனத் தில்லைவானவற்கேற்பவும், உரைக்க.

வான்கழி- சிவலோகமெனினு மமையும். குறைநயப்பாற் றலைமகனிலைமைகேட்ட தலைமகள் பெருநாணினளாகலின், மறுமொழிகொடாது பிறிதொன்று கூறியவாறு. ஒருசொற்றொடர் இருபொருட்குச் சிலேடையாயினவாறுபோலத் தோழிக்கும் ஓர்ந்துணரப்படும். ஓர்ந்துணர்தலாவது-இவ்வொழுக்கங் களவொழுக்கமாகையாலும், தலைமகள் பெருநாணினளாகையாலும், முன்றோழியாற் கூறப்பட்ட கூற்றுகட்கு வெளிப்படையாக மறுமொழிகொடாது, ஓர்ந்துகூட்டினால் மறுமொழியாம்படி கடலின்மேல் வைத்துக்கூறினாள். என்னை, முன்னர் நீ புரிசேர்சடையோன்புதல்வனென்றும் பூங்கணைவேளென்றும் உயர்த்துக்கூறியவெல்லாம் அவனுக்குரிய, அங்ஙனம் பெரியவன் தன்மாட்டுண்டான புணர்ச்சியான பேரின்பத்தை நாம்பெறுகை காரணமாக இங்ஙன மெளிவந்து உன்னைவந்துசேர்ந்தான், அஃதென்போலவெனின், பெறுதற்கரிய சங்கு தருகிற முத்தை நாம் பெறுவான் எளிதாகக் கட

ல் பெரியகழிவையவர்த்து பொருந்தினற்போல், இனி உனக்கு வேண்டியது செய்வாயாகவென மறுமொழியாயிற்று. மெய்ப்பாடு- மருட்கை. தோழிசொன்னகுறையறியாள்போறலிற் பயன்-அறியாள்போறல். (௮௫)

வஞ்சித்துரைத்தல்.

வஞ்சித்துரைத்தலென்பது - நாணினற் குறைநேரமாட்டாது வருந்தாநின்ற தலைமகள் இவளும் பெருநாணினளாதலின் என்னைக்கொண்டே சொல்லுவித்துப்பின் முடிப்பாளாயிராநின்றாள் இதற்கியானென்றுஞ் சொல்லாதொழிந்தால் எம்பெருமான் இறந்துபடுமென்ன உட்கொண்டு, தன்னிடத்து நாணினைவிட்டு, பாங்கற்கூட்டம்பெற்றுத்தோழியிற்கூட்டத்திற்குத் துவளாநின்றானென்பதுதோன்ற, பின்னும் வெளிப்படக் கூறமாட்டாது, மாயவன்மேல்வைத்து வஞ்சித்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

புரங்கடந்தானடிகாண்பான்புவிவிண்டுபுக்கறியா ❋
திரங்கிடெந்தாயென்றிரப்பத்தன்னீரடிக்கென்னிரண்டு ❋
கரங்கடந்தானொன்றுகாட்டமற்றாங்கதுங்காட்டிடென்று ❋
வரங்கிடந்தான்றில்லையம்பலமுன்றிலம்மாயவனே. (௮௬)

நெஞ்சநெகிழ்வகை வஞ்சித்திலவயி லவை
செஞ்சடையோன்புகழ் வஞ்சிக்குரைத்த து.

(இ-ள்.) புரங்களைக்கடந்தவனது அடிகளைக் காணவேண்டி நெறியல்லா நெறியான் நிலத்தைப் பிளந்துகொண்டு புக்குக் காணாது பின் வழிபட்டுநின்று எந்தாய் அருளவேண்டுமென்றிரப்ப, தன்னுடைய இரண்டுதிருவடிகளையுந்தொழுதற்கு என்னுடைய இரண்டுகரங்களையுந் தந்தவனாகிய அவன் சிறிதிரங்கி,ஒருதிருவடியைக்காட்ட, மற்றதனையுங் காட்டிடல்வேண்டுமென்று தில்லையம்பலமுற்றத்தின்கண் முன்னர் அவ்வாறு யானென்னுஞ் செருக்காற் காணலுற்ற மாயவன் வரங்கிடந்தாற்போலும். எ-று.

விண்டெனபதற்கு முன்னுரைத்ததேயுரைக்க. மாயவன் முதலாயினார்க்கு அவ்வாறரியவாயினும் எம்மனோர்க்கு இவ்வாறெளிவந்தனவென்னுங்கருத்தால், தன்னடிக் கென்னிரண்டுகரங்கடந்தானென்றார். ஆங்கதென்பது ஒருசொல். இன்னும் வரங்கிடக்கின்றானாகலின்,முன்கண்டது ஒன்றுபோலுமென்பது கருத்து. புரங்கடந்தானடிகளைக் காணுமாறு வழிபட்டுக் காண்கையாவது- அன்னத்திற்குத் தாமரையும்,பன்றிக்குக் காடுமாதலால், இவரிங்ஙு

னந்தத்தநிலைப்பரிசே தேடுதல். இவ்வாறுதேடாது சமதசங்காரத்திறன் மாறுபட்டுப்பன்றி தாமரையும் அன்னங் காடுமாகப் படர்ந்து தேடுதலாற்கண்டிலர். இது நெறியல்லாநெறியாயினவாறு. இனி இது தோழிக்குத் தலைவி மறுமொழியாகக் கூறியவாறென்னை? ஒன்றுகாட்டவென்றது- முன்னர்ப் பாங்கற்கூட்டம் பெற்றான் அதன்பின் நின்னிணுயகூட்டம்பெறுகை காரணமாகநிகழ்விடத்து வந்திரந்துகுறையுறுநின்றான், அஃதென்போலவெனின், மற்றுங்களுங்காட்டிடென்று மால் வரங்கிடந்தாற்போல. எ-று. வஞ்சித்தல்- மறுமொழியை வெளிப்படையாகக் கொடாது பிறிதொன்றாகக்கூறுதல். இவையிவை-முன்னர்ப்பாட்டும் இப்பாட்டும். இதனைத் தோழிகூற்றாகவுரைப்பாருமுளர். இவையிவையென்ணு மடுக்காணும் இனி "உள்ளப்படுவன வுள்ளி" எனத் தலைமகளோடு புலந்துகூறுகின்றமையானும்,இவ்விரண்டுதிருப்பாட்டும் தலைமகள்கூற்றுதலே பொருத்தமுடைத்தென்பதறிக. (அசு)

புலந்துகூறல்.

புலந்துகூறலென்பது-வெளிப்படக்கூறாது வஞ்சித்துக் கூறுதனான் என்னோடிதனை வெளிப்படக்கூறாயாயின் நின்காதற்றோழியர்க்கு வெளிப்படச்சொல்லி அவரோடு சூழ்ந்து நினக்குற்றது செய்வாய் யான்சொன்ன அறியாமையை நின்னுள்ளத்துக் கொள்ளாது மறப்பாயாக யான் வேண்டுவ திதுவேயெனத் தோழி தலைமகளோடுபுலந்து கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

உள்ளப்படுவனவுள்ளியுரைத்தக்கவர்க்குரைத்து *
மெள்ளப்படிறு துணிதுணியேலிதுவேண்டுவல்யான் *
கள்ளப்படிறர்க்கருளாவரன்றில்லைகாணலர்போற் *
கொள்ளப்படாதுமறப்பதறிவிலென்கூற்றுக்களே. (அஎ)

திருந்தியசொல்லிற் செவ்விபெறு து
வருந்தியசொல்லின் வருத்துரைத்த து.

(இ-ள்.) இதன்கண் ஆராயப்படுவனவற்றை ஆராய்ந்து இதனை வெளிப்படவுரைத்தற்குத் தக்க நின்காதற்றோழியர்க்குரைத்து அவரோடுஞ்சூழ்ந்து நீபடிறென்று கருதிய இதனை மெள்ளத்துணிவாய், அன்றித் துணியாதொழிவாய், நெஞ்சிற் கள்ளத்தையுடையவஞ்சகர்க்கு அருள்செய்யாத அரனது தில்லையை ஒருகாற் காணுதாரைப்போல அறிவில்லாதேன் சொல்லிய சொற்களை உள்ளத்துக்கொள்ளத்தகாது, அவற்றை மறப்பாயாக,யான் வேண்டுவதிதுவே, எ-று.

தில்லைகாணலர் தோழிகூற்றிற்குவமை. கொள்ளப்படாதென்பது வினைமுக்கண்மேலுஞ் செயப்படுபொருண் மேலுமன்றி வினைமேனின்ற முற்றுச்சொல், “அகத்தின்னா வஞ்சரை யஞ்சப்படும்,, என்பதுபோல. மறப்பதென்பது வியங்கோள். வருந்திய சொல்லின்-வருத்தத்தை வெளிப்படுக்குஞ் சொல்லான். சொல்லியென்பதூஉம்பாடம். வகுத்துரைத்தது - வெளிப்படச் சொல்லவேண்டுஞ்சொற்கேட்குமளவுஞ் சொல்லுஞ்சொல. அஃதாவது நீசொல்லத்தகுங்காதற்றோழியர்க்கு வெளிப்படச்சொல்லென்று புலந்துகூறியது. (அஎ)

வன்மொழியாற்கூறல்.

வன்மொழியாற்கூறலென்பது- புலந்துகூறுநின்றதோழி அக்கொடியோன் அருளுறாமையான் மெய்யிற்பொடியுங் கையிற் கிழியுமாய் மடலேறத்துணிபாநின்றான் அக்கிழிதான் நின்னுடைய வடிவென்று உரையுமுளதாயிருந்தது இனி நீயும் நினக்குற்றது செய்வாயாக யானறியேனென வன்மொழியாற் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மேவியந்தோலுடுக்குந்தில்லையான்பொடிமெய்யிற்கையி *
லோவியந்தோன்றுங்கிழிநின்னெழிலென்றுரையுளதாற் *
றூவியந்தோகையன்னாயென்னபாவஞ்சொல்லாடல்செய்யான் *
பாவியந்தோபனைமாமடலேறக்கொல்பாவித்ததே. (அஅ)

கடலுலகறியக் கமழலந்துறைவன்
மடலேறுமென வன்மொழிமொழிந்தது.

(இ-ள்.) மெய்க்கட்பூசியது விரும்பி நல்லதோலைச் சாத்துந்தில்லையானுடையநீறு, கையின்கணுண்டாகியது சித்திரம் விளக்குங்கிழி, அக்கிழிதான் நின் வடிவென்று உரையுமுளதாயிருந்தது, தூவியையுடைய வழகியதோகையையொப்பாய், இதற்குக்காரணமாகிய தீவினையாதென்றறியேன்! ஒன்றுமுரையாடான், இருந்தவாற்றான் அக்கொடியோன், அந்தோ! பனையினது பெரியமடலேறுதற்குப்போலுநினைந்தது. எ-று.

கிழியென்றது கிழிக்கணெழுதியவடிவை. தன்குறையுறவுகண்டு உயிர்தாங்கலேனாக அதன்மேலும் மடலேறுதலையுந் துணிபாநின்றானென்னுங்கருத்தால், பாவியென்றாள். எனவே, அவனாற்றாமைக்குத் தானாற்றாளாகின்றமை கூறினளாம். கமழலந்துறைவனென்பதற்கு, கூம்பலங் கைத்தலமென்பதற் குரைத்தது உ

ளைக்க. இவை மூன்றற்கும் மெய்ப்பாடு- இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன்-வலிதாகச்சொல்லிக் குறைநயப்பித்தல். (௮௮)

மனத்தொடுநேர்தல்.

மனத்தொடுநேர்தலென்பது- ஆற்றுமையான் மடலேறத்துணியாநின்றானெனத் தோழியால் வன்மொழிகூறக் கேட்ட தலைமகள் அதற்குத் தானாற்றாளாய், தலைமகனைக் காண வேண்டித் தன் மனத்தொடுகூறி நேராநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொன்னார்சடையோன்புலியூர்புகழாரொனப்புரிநோ *
யென்னாலறிவில்லையானென்றுரைக்கிலன்வந்தயலார் *
சொன்னாலொனுமித்துரிசுதன்னாமைத்துணைமனனே *
யென்னாழ்துயர்வல்லையேற்சொல்லுநீர்மையினியவர்க்கே (௮௯)

அடல்வேலவனாற்றானென க்
கடலமிழ்தன்னவள் காணலுற்ற து.

(இ-ள்.) பொன்போலும் நிறைந்த சடையையுடையவனது புலியூரைப் புகழாதாரைப்போல வருந்த எனக்குப் புரிந்தநோய் என்னாலறியப்படுவதில்லை, ஆயினும் இதன்றிறத்து யானொன்றுரைக்கமாட்டேன், எனக்குத் துணையாகிய மனமே, அயலார் சொன்னாலொன்று இவள்வந்து சொல்லுகின்ற இக்குற்றம் என்கண்வாராமல் அவராற்றுமை கூறக்கேட்டலானுண்டாகிய எனதாழ்துயரை உள்ளவாறு சொல்லவல்லையாயின், நீர்மையையுடைய இனியவர்க்கு நீ சொல்லுவாயாக. எ-று.

புரிதல்-மிகுதல். அயலார் சொன்னாலொன்றது ஒவியந்தோன்றுங்கிழி நின்னெழிலென் றுளாயுளதாம் என்றதனைப்பற்றி. அயலார்சொன்னாலொன்பதற்கு யானறியாதிருப்ப அவராற்றுமையை அயலார்வந்து சொன்னாலொன்னும் இக்குற்றமென்றுரைப்பினுமமையும். இப்பொருட்கு அயலாரொன்றது தோழியை நோக்கி. ஆழ்துயர் - ஆழ்தற்கிடமாந்துயர். இவ்வாறு அவராற்றுமைக்கு ஆற்றாளாய் நிற்றலின், தோழி குறைநேர்ந்தமை யுணருமென்பது பெற்றும், ஆகவே இது தோழிக்கு வெளிப்பட மறுமொழி கூறியவாறுயிற்று. சொல்லுநீர்மையினியவர்க்கென்றவதனால் தன்னுயாமும் வெளிப்படக்கூறி மடலால் வருங்குற்றமுந்தன்னிடத்துவாராமல் விலக்கச்சொன்னாளாயிற்று. மெய்ப்பாடு - அச்சம். ஆற்றுனெனக்கேட்டலிற் பயன்-குறைநேர்தல். (௮௯)

குறைநயப்பித்தல் முற்றிற்று.

சேட்படை.

சேட்படையென்பது-தலைமகளைக் குறைநயப்பித்துத் தன்னி முய கூட்டங் கூட்டலுறுந்தோழி தலைமகளது பெருமையுந் தனதுமுயற்சியதருமையும் தோன்றுதல் காரணமாகவும், இத்துணை யருமையுடையாள் இனிநமக்கெய்துதற் கருமையுடையளென இதுவே புணர்ச்சியாக நீட்டியாது விரைய வரைந்துகோடல் காரணமாகவும், தலைமகனுக்கியைய மறுத்துக் கூறுநிற்றல்.

அதுவருமாறு-சூத்திரம். தழைகொண்டு சேற றகாதென்று மறுத்த, னிலத்தின்மை கூற னினைவறிவு கூறல், படைத்து மொழிதலொடு பணிமதி நுதலியை, யெடுத்துநா ணுரைத்த லிசையாமை கூறல், செவ்வியில ளென்றல் சேட்பட நிறுத்த, லவ்வினிய மொழிநீ யவட்குரை யென்றல், குலமுறை இளத்தல் கோதண் டத்தொழில், வலிசொல்லி மறுத்தன் மற்றவற் கிரங்கல், சிறப்பின்மை கூறல் சிறியளென் றுரைத்தன், மறைத்தமை கூறி நகைத்துரை செய்த, னகைகண்டு மகிழ்த லுனவு டன்னை, யறியே னென்ற லவயவங் கூறல், கண்ணயந் துரைத்தல் கையுறை யெதிர்தன், முகம்புக வுரைத்தன் முகங்கண்டு கூறல், வகுத்து ரைத்தலொடு வண்டழை யவட்கு, மிகுத்துரை செய்து விரும்பிக் கொடுத்த, றழைவிருப் புரைத்த லெனிருபத்தா, றிழைவளர் முலையா யிவை சேட் படையே.

(இ-ள்.) தழைகொண்டுசேறல்-சந்தனத்தழைதகாதென்றுமறுத்தல்-நிலத்தின்மைகூறிமறுத்தல்-நினைவறிவுகூறிமறுத்தல்-படைத்துமொழியான்மறுத்தல்-நாணுரைத்துமறுத்தல்-இசையாமைகூறிமறுத்தல்-செவ்வியிலளென்றுமறுத்தல்-காப்புடைத்தென்றுமறுத்தல்-நீயேகூறென்றுமறுத்தல்-குலமுறைகூறிமறுத்தல்-நகையாடிமறுத்தல்-இரக்கத்தொடுமறுத்தல்-சிறப்பின்மைகூறிமறுத்தல்-இளமைகூறிமறுத்தல்-மறைத்தமைகூறிநகைத்துரைத்தல்-நகைகண்டுமகிழ்தல்-அறியாள்போன்றுநினைவுகேட்டல்-அவயவங்கூறல்-கண்ணயந்துரைத்தல்-தழையெதிர்தல்-குறிப்பறிதல்-குறிப்பறிந்துகூறல்-வகுத்துரைத்தல்-தழையேற்பித்தல்-தழைவிருப்புரைத்தல் எனவிவையிருபத்தாறும்சேட்படையாம்.எ-று. அவற்றுள்,—

தழைகொண்டுசேறல்.

தழைகொண்டுசேறலென்பது- மேற்சேட்படைகூறத் தணியாநின்ற தோழியிடைச்சென்று, அவளது குறிப்பறிந்து, பின்

ளுங் குறையுறவு தோன்றநின்று, நம்மாலருளத்தக்காளை அல்லைபா வே இத்தழை வாங்கிக்கொண்டு என்குறைமுடித்தருளுவீராமென்று, மறுத்தற்கிடமற, சந்தனத்தழைகொண்டு தலைமகன் செல்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தேமென்கிளவிதன்பங்கத்திறையுறைதில்லையன்னீர் *
பூமென்றழையுமம்போதுங்கொள்ளீர்தமியேன்புலம்ப *
வாமென்றருங்கொடுப்பாடுகள்செய்து நுங்கண்மலராங் *
காமன்கணைகொண்டலைகொள்ளவோமுற்றக்கற்றதுவே. (௯௰)

கொய்ம்மலர்க்குழலி குறைநயந்தபின்
கையுறையோடு காளைசென்றது.

(இ-ள்.) தேன்போலும் மெல்லிய மொழியையுடையாளது கூற்றையுடைய இறைவனுறையுந் தில்லையையொப்பீர், யான் கொணர்ந்த பூவையுடைய மெல்லியதழையையும் அழகிய பூக்களையுங்கொள்கின்றிலீர், உணர்விழந்த யான்றனிமைப்படச் செய்யத்தகாத பொறுத்தற்கரிய கொடுமைகளைச் செய்யத்தகுமென்று துணிந்துசெய்து நுங்கண்மலராகின்ற காமன் கணைகொண்டு அருளத்தக்காளை அலைத்தலையோ முடியக்கற்கப்பட்டது, நும்மால் அருளுமாறு கற்கப்பட்டதில்லையோ! எ-று.

பங்கத்துறையிறையென்பதூஉம் பாடம். தமியேன்புலம்ப வென்பதற்குத் துணையிலாதேன் வருந்தவென்றுமமையும். மேற்சேட்படை கூறுகின்றமையின் அதற்கியைபுபட ஈண்டுங் குறையுறவுகூறினான். மெய்ப்பாடு-அழுகை. பயன்-ஆற்றாமையுணர்த்துதல். அவ்வகை தோழிக்குக் குறைநேர்ந்த நோத்துத் தலைமகன் கையுறையோடுஞ்சென்று இவ்வகைசொன்னானென்பது. ()

சந்தனத்தழைதகாதென்றுமறுத்தல்.

சந்தனத்தழைதகாதென்றுமறுத்தலென்பது - தலைமகன் சந்தனத்தழைகொண்டு செல்ல, அது வழியாக நின்று, சந்தனத்தழை இவர்க்கு வந்தவாறென்னோவென்று ஆராயப்படுதலான் இத்தழை எமக்காகாதெனத் தோழி மறுத்துக்கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்.

ஆரத்தழையராப்பூண்டம்பலத்தனலாடியன்பர்க் *
காரத்தழையன்பருளிநின்றோன்சென்றமாமலயத் *
தாரத்தழைபண்ணறந்தாவிலையவளல்குற்கண்டா *
லாரத்தழைகொடுவந்தாரெனவருமையுறவே. (௯௧)

பிறைநுதற்பேதையைக் குறைநயப்பித்தழி ன்
வாட்படையண்ணலைச் சேட்படுத்த து.

(இ-ள்.) ஆரமாகிய தழைந்த அரவைப்பூண்டு அம்பலத்தின்க ண் அனலோடாடி அன்பராயினார்க்குத் தானும் மிக்க அன்பைப் பெருகச்செய்து நின்றவன் சேர்ந்த பெரிய பொதியின் மலையிட த்துள்ளவாகிய சந்தனத்தழைகளை அண்ணல் தந்தால், இத்தழைக ளைப் பிறர் அவளல்குற்கட்காணின் ஈண்டில்லாத அத்தழைகொ ண்டுவந்தார் யாவரென ஐயமுண்டாம், அதனால் இவை கொள்ளே ம். எ-று.

ஆரத்தழையரா- பூண்டகாலத்து ஆரத்தழைத்த அரவெனினு மமையும். அன்பர்க்காரத்தழையன்பருளி நின்றோனென்பதற்கு அன்பர்க்கு அவர் நுகரும்வண்ணம் மிக்க அன்பைக்கொடுத்தோ னெனினுமமையும். அன்பான் வருங்காரியமேயன்றி அன்புதானு ம் ஓரின்பமாகலின் நுகர்ச்சியாயிற்று. அண்ணலென்பது ஈண்டு முன்னிலைக்கண்வந்தது. அத்தழையென்றது - அம்மலயத்தழை என்றவாறு. (௯௧)

நிலத்தின்மைகூறிமறுத்தல்.

நிலத்தின்மைகூறிமறுத்தலென்பது-சந்தனத்தழை தகாதென் றதல்லது மறுத்துக் கூறியவா றன்றென மற்றொருதழை கொண் டுசெல்ல, அது கண்டு, இக்குன்றிலில்லாத தழையை எமக்கு நீர்த ந்தால் எங்குடிக்கு இப்பொழுதே பழியாம் ஆகலான் அத்தழை யெமக்காகாதென்று மறுத்துக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்

முன்றகர்த்தெல்லாவிமையோரையும்பின்னைத்தக்கன்முத்தீச் *
சென்றகத்தில்லாவகைசிதைத்தோன்றிருந்தம்பலவன் *
குன்றகத்தில்லாத்தழையண்ணறந்தாற்கொடிச்சியருக் *
கின்றகத்தில்லாப்பழிவந்துமூடுமென்றெள்குதுமே. (௯௨)

கொங்கலர்தாரோய் கொணர்ந்தகொய்த ழை
எங்குலத்தாருக் கேலாதென்ற து.

(இ-ள்.) முன் வேள்விக்குச் சென்ற எல்லாத்தேவர்களையும் பு டைத்துப் பின்சென்று தக்கனுடைய மூன்றுதீயையுங் குண்டத் தின்கண் இல்லையாம்வண்ணம் அழித்தவன், திருந்தியவம்பலத்தை யுடையான், அவனுடைய இம்மலையிடத்தில்லாத தழையை அண் ணல் தந்தால், கொடிச்சியருக்கு இல்லின்கண் இல்லாதபழி இன் றுவந்துமூடுமென்றுகூசுதும், அதனால் இத்தழை கொணராற்பா லீரல்லீர். எ-று.

குன்றகத்தில்லாத்தழையென்றது- குறிஞ்சிநிலத்தார்க்கு உரிய வல்லாத தழையென்றவாறு. அண்ணலென்பது முன்னிலைக்கண்ணும், கொடிச்சியரென்பது தன்மைக்கண்ணும் வந்தன. இல்லாவென்பது பாடமாயின், இல்லையாம்வண்ணம் முன்றகர்த்தென்றுரைக்க. (௯௨)

நினைவறிவுகூறிமறுத்தல்.

நினைவறிவுகூறி மறுத்தலென்பது - இத்தழை தந்நிலத்துக்குரித்தன்றென்றதல்லது மறுத்துக்கூறியவாறன்றென உட்கொண்டு, அந்நிலத்திற்குரிய தழைகொண்டுசெல்ல, அதுகண்டு தானுடம்பட்டாளாய், யான் சென்று அவணினைவறிந்தால் நின்னெதிர் வந்துகொள்வேன் அதுவல்லது கொள்ள அஞ்சுவேனென மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

யாழார்மொழிமங்கைபங்கத்திறைவனெறிதிரைநீ *
ரேழாயெழுபொழிலாயிருந்தோனின்றதில்லையன்ன *
சூழார்குழலெழிற்றொண்டைச்செவ்வாய்நவ்விசொல்லறிந்தாற் *
றாழாதெதிர்வந்துகோடுஞ்சிலம்பதருந்தழையே. (௯௩)

மைதழைக்கண்ணி மனமறிந்தல்லது
கொய்தழைதந்தாற் கொள்ளேமென்றது.

(இ-ள்.) யாழோசைபோலும் மொழியையுடைய மங்கையது கூற்றையுடைய இறைவன், எறியாநின்ற திரையையுடைய கடலேழுமாய் எழுபொழிலுமாயிருந்தவன், அவனின்ற தில்லையை ஒக்குஞ் சுருண்ட நிறைந்த குழலினையுந் தொண்டைக்கனிபோலும் எழிலையுடைய செவ்வாயினையுமுடைய நவ்விபோல்வாளது மாற்றமறிந்தால், பின் சிலம்பனே, நீ தருந்தழையைத் தாழாது நின்னெதிர்வந்துகொள்வேம், அவள்சொல்லுவது அறியாது கொள்ளவஞ்சுதும். எ-று.

சூழாரென்புழிச் சூழ்தல்- சூழ்ந்துமுடித்தலெனினுமமையும். தில்லையன்ன நவ்வியெனவியையும். (௯௩)

படைத்துமொழியான்மறுத்தல்.

படைத்துமொழியான்மறுத்தலென்பது - நினைவறிந்தல்லது ஏலேமென்றது மறுத்துக்கூறியவாறன்று நினைவறிந்தால் ஏற்பேமென்றவாறெனவுட்கொண்டுநிற்ப, சிறிதுபுடைபெயர்ந்து அவணினைவறிந்தாளாகச்சென்று, இத்தழை யானேயன்றி அவளும் விரும்புமாயினும் இது குற்றுலத்துத் தழையாதலான் இதத

தழை இவர்க்கு வந்தவாறு என்றோவென்று ஆராயப்படுமாதலான் இத்தழையெமக்காகாதென்று மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

எழில்வாயிளவஞ்சியும்விரும்புமற்றிறைகுறையுண் *
டழல்வாயவிரொளியம்பலத்தாடுமஞ்சோதியந்தீங் *
குழல்வாய்மொழிமங்கைபங்கன்குற்றாலத்துக்கோலப்பிண்டிப் *
பொழில்வாய்தடவரைவாயல்லதில்லையிப்பூந்தழையே. (௯௪)

அருந்தழைமேன்மேற் பெருந்தகைகொணரப்
படைத்துமொழிகிளவியிற் றடுத்தவண்மொழிந்தது.

(இ-ள்.) நின்பாற்றழைகோடற்கு யானேயன்றி எழில்வாய்த்த இளையவஞ்சியையொப்பாளும் விரும்பும், ஆயினுஞ் சிறிதுகுறையுண்டு, அழலிடத்துளதாகிய விளங்குமொளியாயுள்ளான், அம்பலத்தின்கணுடும் அழகியசோதி, அழகியவினிய குழலோசைபோலும் மொழியையுடைய மங்கையது கூற்றையுடையான், அவனது குற்றாலத்தின்கணுளதாகிய அழகையுடைய அசோகப்பொழில்வாய்த்த பெரியதாழ்வரையிடத்தல்லது வேறோரிடத்து இப்பூந்தழையில்லை, அதனால் இத்தழை இவர்க்கு வந்தவாறென்னென்று ஆராயப்படும், ஆதலான் இவை கொள்ளேம். எ-று.

இத்தழையை யிளவஞ்சியும் விரும்புமெனினுமமையும். அவிரொளியையுடைய அஞ்சோதியென்றியைப்பினுமமையும். பிறவிடத்துமுள்ளதனை அவ்விடத்தல்லது இல்லையென்றமையின், படைத்துமொழியாயிற்று. (௯௪)

நாணுரைத்துமறுத்தல்.

நாணுரைத்துமறுத்தலென்பது - பலபடியுந்தழைகொண்டுசெல்ல மறுத்துக்கூறியவழி, இனித் தழையொழிந்து கன்னியைக் கையுறையாகக் கொண்டுசென்றால் அவள் மறுக்கும்வகையில்லையெனக் கழுநீர்மலராக் கன்னியாகப் புனைந்துகொண்டுசெல்ல, அதுகண்டு, செவிலியர் சூட்டிய கன்னியின்மேல் யானென்று சூட்டினும் நாணுநிற்பள் நீர்கொணர்ந்த இந்தக்கன்னியையாங்ஙனஞ் சூடுமெனத் தலைமகள் நாணுரைத்து மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

உறுங்கண்ணிவந்தகணையுரவோன்பொடியாயொடுங்கத் *
தெறுங்கண்ணிவந்தசிற்றம்பலவன்மலைச்சிற்றிலின்வாய் *

நறுங்கண்ணிசூட்டினு நாணுமென்வாணுதனாகத்தொண்பூங் *
குறுங்கண்ணிமேய்ந்திளமந்திகணாணுமிக்குன்றிடத்தே. (௯௫)

வாணுதற் பேதை யை
நாணுத லுரைத்த து.

(இ-ள்.) எல்லார்க்கணையினும் உயர்ந்த மிகுந்த தேனையுடைய மலர்க்கணையையுடைய பெரியவலியோன் நீறாய்க்கெடத் தெறவல்ல கண்ணோக்கிய சிற்றம்பலவனது மலைக்கணுண்டாகிய சிற்றிலிடத்துச்செவிலியர் சூட்டிய கண்ணிமேல் யானோர் நறுங்கண்ணியைச் சூட்டினும் அத்துணையானே என்னுடைய வாணுதல் புதிதென்று நாணாநிற்கும். மகளிரைச் சொல்லுகின்றதென்! இக்குன்றிடத்து நாகமரத்தினது ஒள்ளிய பூக்களாணியன்ற குறுங்கண்ணியைச் சூடி அச்சூடுதலான் இளமந்திகளும் நாணாநிற்கும். எ-று.

கண்ணிவந்தவென்பதற்குக் கள் மிக்க கணையெனினு மமையும். தெறுங்கண்ணிவந்தவென்றார், அக்கண் மற்றையவற்றிற்கு மேலாய்நிற்றலின். மேனோக்கி நிற்றலாலெனினுமமையும். முதலொடு சினைக்கொற்றுமையுண்மையான் நிவந்தவென்னும் பெயரெச்சத்திற்குச் சிற்றம்பலவனென்பது வினைமுதற்பெயராய்நின்றது. மந்திகணாணுமென்பது பெயரெச்சமாக மலைக்கண் இக்குன்றிடத்துச் சிற்றிலின்வாயெனக் கூட்டியுரைப்பினுமமையும். இப்பொருட்குக் குன்றென்றது சிறுகுவட்டை. யானொன்று சூட்டினும் நாணும் பெருநாணினாள் நீர்கொணர்ந்த இக்கண்ணியை யாங்ஙனஞ்சூடுமென்பது கருத்து. நாணுதலுரைத்ததென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீர்மைப்பட்டு இரண்டாவதனையமைத்தன. ()

இசையாமைகூறிமறுத்தல்.

இசையாமைகூறிமறுத்தலென்பது-தலைமகனுரைத்துமறுத்ததோழி அவனணங்கிடக்க யாங்கள் வேங்கைமலரல்லது தெய்வத்திற்குரிய வெறிமலர்சூட அஞ்சுதும் ஆதலான் இக்கண்ணி எங்குலத்திற் கிசையாதென மறுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

நறமனைவேங்கையின் பூப்பயிற்பாறையை நாகநண்ணி *
மறமனைவேங்கையெனநனிபஞ்சுமஞ்சார்சிலம்பா *
குறமனைவேங்கைச்சுணங்கொடணங்கலர்கூட்டுபவோ *
நிறமனைவேங்கையதளம்பலவனெடுவரையே. (௯௬)

வசைதீர் குலத்தி ற்
கிசையா தென்ற து.

(இ-ள்.) தேனிற்கிடமாகிய வேங்கைப்பூக்கள் பயின்ற பாறையை யானையென்றுணர்ந்து அதனைத் தறுகண்மைக்கிடமாகிய புலியென்று பிரவுமஞ்சும் மஞ்சாருஞ் சிலம்பையுடையாய், நிறந்தங்கிய புலியதளையுடைய அம்பலவனது நெடிய இவ்வரைக்கட் குறவர்மனையிலுள்ளவாகிய வேங்கையினது சுணங்கும்போலும் பூவோடு தெய்வத்திற்குரிய கழுநீர் முதலாகிய பூக்களைக் கூட்டுவரோ? கூட்டார். எ-று.

நறமனை வேங்கையென்பதற்கு நறுமிக்கபூவெனினுமமையும். குறமனை கூட்டுபவோ வென்பதற்குக் குறக்குடிகள் அவ்வாறு கூட்டுவரோவென்றுரைப்பாருமுளர். நிறமனையென்புழி ஐகாரம் அசைநிலை, வியப்பென்பாருமுளர். நிறம் அத்தன்மைத்தாகிய அதனெனினுமமையும். ஒன்றனை ஒன்றாக ஓர்க்கநாடனாதலான் அணங்கலர்சூடாத எம்மைச் சூடுவேமாக ஓர்ந்தாயென்பது இறைச்சிப்பொருள். ஒப்புமையான் அஞ்சப்படாததனையும் அஞ்சும் நிலமாகலான் எங்குலத்திற்கேலாத அணங்கலரை யாமஞ்சுதல் சொல்லவேண்டுமோவென்பது இறைச்சியெனினுமமையும். இப்பொருட்கு ஒருநிலத்துத் தலைமகளாகக் கொள்க. வேங்கைப்பூவிற்குச் சுணங்கணிந்திருத்தல் குணமாதலால் சுணங்கணியப்பட்டதனைச் சுணங்கென்றே கூறினாள். (௬௬)

செவ்வியிலளென்றுமறுத்தல்.

செவ்வியிலளென்றுமறுத்தலென்பது- அணங்கலர் தங்குலத்திற்கிசையாதென்றதல்லது மறுத்துக்கூறியவாறன்றென மாந்தழையோடுமலர் கொண்டுசெல்ல, அவை கண்டு உடம்படாளாய், அன்னம் பிணை கிள்ளை தந்தொழில்பயில இன்று செவ்விபெற்றனவில்லை அதுகிடக்க என்னுழை நீர்வந்தவாறும் யானுமக்குக் குறைநேர்ந்தவாறும் இன்னுமறிந்திலள் அதனாற் செவ்விபெற்றாற் கொணருமென மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

கற்றிலகண்டன்னமென்னடைகண்மலர்நோக்கருளப் *
பெற்றிலபென்பிணைபேச்சுப்பெறுகிள்ளைபிள்ளையின்றூன் *
றூற்றிலளுற்றதறிந்திலளாகத்தொளியிளிரும் *
புற்றிலவாளரவன்புலியூரன்னபூங்கொடியே. (௬௭)

நவ்வி நோக்கி
செவ்வியிலளென்றது.

(இ-ள்.) புடைபெயர்ந்து விளையாடாமையின் நடைகண்டு அன்னங்கள் மெல்லியநடையைக் கற்கப்பெற்றனவில்லை, தம்மாற் குறிக்கப்படுங் கண்மலர்நோக்குக்களை அவள்கொடுப்ப மென்பி

ணைகள் பெற்றனவில்லை, உரையாடாமையின் தாங்கருதுமொழிக
ளைக் கிளிகள் பெற்றனவில்லை, இருந்தவாற்றான் எம்பிள்ளை இன்
றொரு விளையாட்டின்கணுற்றிலள், அதுவேயுமன்றி ஆகத்திற்க
ட்கிடந்தொளிவிளங்கும் புற்றின்கண்ணவாகிய ஒளியையுடைய
பாம்பையுடையவனது புலியூரையொக்கும் பூங்கொடி என்னு
ழை நீர்வந்தவாறும் யானுமக்குக் குறைநேர்ந்தவாறும் இன்னு
மறிந்திலள், அதனாற் செவ்வி பெற்றுச் சொல்லல் வேண்டும். எ-று.

கண்டெனென்பது கற்றலோடும், அருளவென்பது பெறுதலோ
டும் முடிந்தன. புற்றிலவென்பதற்கு வேள்வித் தீயிற்பிறந்து தி
ருமேனிக்கண் வாழ்தலாற் புற்றையுடையவல்லாத அரவென்று
ரைப்பினுமமையும். ஆரத்தொளியென்பதூஉம் பாடம். இவையே
ழிற்கும் மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்தபெருமிதம். முடியா
தெனக்கருதுவாளாயின் இறந்துபடுமென்னும் அச்சமும் முடி
க்கக்கருதலிற் பெருமிதமுமாயிற்று. பயன் - செவ்விபெறுதல்.
மேற்றலைமகளைக் குறைநயப்பித்து அவளது கருத்துணர்ந்து தன்
னினாகிய கூட்டங்கூட்டலுறுந்தோழி தலைமகன் றெருண்டு வரை
ந்தெய்துதல்வேண்டி, இவைமுதலாக முன்னர் விண்ணிறந்தாரெ
ன்னும் பாட்டீறாக இவையெல்லாங்கூறிச் சேட்படுத்தப்பெறு
மென்பது. (௧௭)

காப்புடைத்தென்றுமறுத்தல்.

காப்புடைத்தென்றுமறுத்தலென்பது- செவ்வியிலளென்றது
செவ்விபெற்றாற் குறையில்லையென்றாளாமென உட்கொண்டுநிற்
ப, கதிரவன் மறைந்தான் இவ்விடம் காவலுடைத்து நம்பிடமு
ஞ்சேய்த்து எம்மையன்மாருங் கடியர் யாந்தாழ்ப்பின் அன்னையு
முனியும் நீரும் போய் நாளைவாருமென இசைய மறுத்துக்கூறா
நிற்றல். அதற்குச்செய்யுள்.

முனிதருமன்னையுமென்னையர்சாலவுமூர்க்கரின்னே *
தனிதருமிந்நிலத்தன்றையகுன்றமுந்தாழ்சடைமேற் *
பனிதருதிங்களணியம்பலவர்பகைசெகுக்குங் *
குனிதருதிண்சிலைக்கோடுசென்றான்சுடர்க்கொற்றவனே. (௧௮)

காப்புடைத் தென் று
சேட்படுத்த து.

(இ-ள்.) சுடர்களுட் டலைவன் றாழ்ந்த சடைமேற் குளிர்ச்சியை
த்தருந் திங்களைச் சூடிய அம்பலவர் பகையைச்செகுக்கும்வளைந்
த திண்ணிய சிலையாகிய மேருவினது கோட்டையடைந்தான்,

இனித்தாழ்ப்பின் அன்னையும் முனியும், என்னையன்மாரும் மிகவு மாராயாது எதஞ்செய்யுந்தன்மையர், இவ்விடமும் இனி யியங்குவாரின்மையின் இப்பொழுதே தனிமையைத்தரும். ஐயனே, நினது குன்றமும் இந்நிலத்தின் கண்ணதன்று, அதனால் ஈண்டுநிற்கத் தகாது. எ-று.

அம்பலவர் பகைசெகுத்தற்குத் தக்க திண்மை முதலாகிய இயல்பு அதற்கெக்காலத்து முண்மையால், செகுக்குமென நிகழ் காலத்தாற்கூறினர். இந்நிலத்தன்றென்பது பாடமாயின், இக்குன்றமும் இவ்வாறு மகளிரும் ஆடவருந் தலைப்பெய்து சொல்லாடு நிலைமைத்தன்றெனவுரைக்க. மெய்ப்பாடும் பயனும்-அவை. இவ்விடம் மிக்க காவலையுடைத்து இங்குவாரன்மினென்றுளென, இவ்விடத்தருமையை மறையாது எனக்குரைப்பாளாயது என்கட்கிடந்த பரிவினானன்றே இத்துணையும் பரிவுடையாள் எனதாற்றாமைக்கிரங்கி முடிக்குமென ஆற்றுமென்பது. (௯அ)

நீயேகூறென்றுமறுத்தல்.

நீயேகூறென்றுமறுத்தலென்பது - இவள் இவ்விடத்து நிலைமையை மறையாது எனக்குரைப்பாளாயது என்கட்கிடந்த பரிவினானன்றே இத்துணைப் பரிவுடையாள் எனக்கிது முடியாமையில்லையெனத் தலைவன் உட்கொண்டுபோய்ப் பிற்றைஞான்றுசெல்ல, தோழி யான் குற்றேவன் மகளாகலிற் றுணிந்துசொல்லமாட்டுகின்றிலேன் இனி நீயே சென்று நின்குறையுள்ளது சொல்லெனத்தானுடம்படாது மறுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்

அந்தியின்வாயெழிலம்பலத்தெம்பரனம்பொன்வெற்பிற் *
பந்தியின்வாய்ப்பலவின்சுளைபாற்றேனொடுங்கடுவன் *
மந்தியின்வாய்க்கொடுத்தோம்புஞ்சிலம்பமனங்கனிய *
முந்தியின்வாய்மொழிநீயேமொழிசென்றம்மொய்குழற்கே. ()

அஞ்சுதம்பெரும பஞ்சின்மெல்லடியைக்
கூறுவநீயே கூறுகென்றது.

(இ-ள்) அந்திபின்கணுண்டாகிய செவ்வானெழிலையுடைய அம்பலத்தின்கணுளனாகிய எம்முடைய எல்லாப்பொருட்கும் அப்பாலாயவனது அழகிய பொன்னையுடைய வெற்பிடத்துப்பந்தியாகிய நிரையின்கட் செவ்வித்தேனோடும் பலாச்சுளையைக் கடுவன் மந்தியின்வாயின் அருந்தக்கொடுத்துப் பாதுகாக்குஞ் சிலம்பையுடையாய், அவள் மன்நெகிழ விரைந்து இவ்வினிய வாய்

மொழிகளை அம்மொய்த்தகுழலையுடையாட்கு நீயேசென்றுசொல்லுவாயாக. எ-று.

எல்லாப்பொருளையுங் கடந்தானாயினும் எமக்கணியனென்னுங் கருத்தான், எம்பரனென்றார். வெற்பிற்சிலம்ப வெனவினையும். பந்திபலாநிரையென்பாருமுளர் சிலம்பென்றது வெற்பினொரு பக்கத்துளதாகிய சிறுகுவட்டை. வாய்மொழி-மொழியென்னுந் துணையாய்நின்றது. மனங்கனியுமென்பதூஉம், நின்வாய்மொழியென்பதூஉம் பாடம். மந்தி உயிர்வாழ்வதற்குக் காரணமாகியவற்றைக் கடுவன் தானேகொடுத்து மனமகிழ்வித்தாற்போல அவள் உயிர்வாழ்வதற்குக் காரணமாகிய நின்வார்த்தைகளை நீயே கூறி அவளை மனமகிழ்விப்பாயாகவென உள்ளுறையுவமங் கண்டுகொள்க. மெய்ப்பாடும் பயனும் அவை. (௧௧)

குலமுறைகூறிமறுத்தல்.

குலமுறைகூறிமறுத்தலென்பது - நீயேகூறெனச் சொல்லக் கேட்டு, உலகத்து ஒருவர்கண் ஒருவர் ஒருகுறை வேண்டிச்சென்றால் அக்குறை நீயே முடித்துக்கொள்ளென்பாரில்லை அவ்வாறன்றி இவளிற்நாளெல்லாம் என்குறைமுடித்துத் தருவேனென்று என்னையவமே யுழற்றி இன்று நின்குறை நீயேமுடித்துக்கொள்ளென்றுநின்றாளெனத் தலைமகன் ஆற்றாதுநிற்ப, அவனையாற்றுவிப்பது காரணமாக, நீர் பெரியீர் யாஞ்சிறியேம், ஆதலான் எம்மோடு நுமக்குச் சொல்லாடுதல் தகாதெனக் குலமுறைகூறி மறுத்துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்.

தெங்கம்பழங்கமுகின்குலைசாடிக்கதலிசெற்றுக் *
கொங்கம்பழனத்தொளிர்குளிர்நாட்டினைநீயுமைகூர் *
பங்கம்பலவன்பரங்குன்றிற்குன்றன்னமாபதைப்பச் *
சிங்கந்திரிதருசீறூர்ச்சிறுமியெந்தேமொழியே. (௩)

தொழுகுலத்தீர் சொற்காகேம்
இழிகுலத்தே மெனவுரைத்தது.

(இ-ள்.) மூக்கூழ்த்துவிழுகின்ற தெங்கம்பழம் கமுகினது குலையை உதிர மோதி வாழைகளைமுறித்துப் பூந்தாதையுடைய பழனத்துக்கிடந்து விளங்குங் குளிர்ந்தநாட்டினுள்ளாய் நீ, எம்முடைய தேமொழி உமை சிறந்த பாகத்தையுடைய அம்பலவனது பரங்குன்றிடத்து மலைபோலும் யானைகள் நடுங்கச் சிங்கங்கள் வேட்டந்திரியுஞ் சீறூர்க்கணுள்ளாள் ஓர் சிறியாள், அதனால் எம்மோடு நீ சொல்லாடுதல் தகாது. எ-று

நாட்டினையென்பதற்கு நாட்டையிடமாகவுடையையென இரண்டாவதன்பொருள்பட உரைப்பினுமமையும். பரங்குன்றிற் சீறூரோனவியையும். பெருங்காட்டிற் சிறுகுரம்பையென்பது போதா, சிங்கந்திரிதரு சீறூரென்றாள். மெய்ப்பாடும் பயனும் அவை. (௰)

நகையாடிமறுத்தல்.

நகையாடிமறுத்தலென்பது- இவள் குலமுறைகிளத்தலான் மறுத்துக்கூறியவாறன்றென மனமகிழ்ந்துநிற்ப, இனியிவனூற்றுவாரென உட்கொண்டு, பின்னுந்தழையெதிராது, எம்மையன்மாரேவுங்கண்டறிவேம் இவ்வையர் கையிலேப்போலக்கொலையாற் றிண்ணியதுகண்டறியேமென அவனேவாடல்சொல்லி நகையொடுமறுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சிலைபொன்றுவாணுதல்பங்கன்சிற்றம்பலவன்கயிலை *
மலைபொன்றுமாமுகத்தெம்மையரெய்கணைமண்குளிக்குங் *
கலைபொன்றுவெங்கணையோடுகடுகிட்டதென்னிற்கெட்டேன் *
கொலைபொன்றுதிண்ணியவாறையர்கையிற்கொடுஞ் சிலையே(௰௧)

வாட்டழையெதிராது சேட்படுத்தற் கு
மென்னகைத்தோழி யின்னகைசெய்தது.

(இ-ள்.) சிலையையொக்கும் வாணுதலையுடையாளது கூற்றையுடையான், சிற்றம்பலவன், அவனது கைலைக்கண் மலையையொக்கும் யானைமுகத்து எம்மையன்மார் எய்யுங்கணை அவற்றையுருவி மண்ணின்கட்குளிப்பக்காண்டும், அவ்வாறன்றி ஒருகலை இவரெய்த வெய்யவம்பினோடு விரைந்தோடிற்றாயின், இவ்வையர் கையில் வளைந்தசிலை, கெட்டேன், கொலையாகியவொன்று திண்ணியவாறென்! எ-று.

கைலைக்கண் மண்குளிக்குமெனவியையும். கொடுஞ்சரமென்பதூஉம் பாடம். (௰௧)

இரக்கத்தொடுமறுத்தல்.

இரக்கத்தொடுமறுத்தலென்பது- இவள் என்னுடனே நகையாடுகின்றது தழைவாங்குதற்பொருட்டென உட்கொண்டுநிற்ப, பின்னையுந் தழையேலாது, இவ்வையர் இவ்வாறுமயங்கிப் பித்தழையாநிற்றற்குக் காரணமென்னோவென்று அதற்கிரங்கி மறுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மைத்தழையாநின்றமாமிடற்றம்பலவன்கழற்கே *
மெய்த்தழையாநின்றவன்பினர்போலவிதிர்விதிர்த்துக் *

கைத்தலைழபேற்றிக்கடமாவிருய்க்கையில்வில்லின்றியே *
பித்தலையாதிற்பாரலென்னபாவம்பெரியவரே. (௱௨)

கையுறையெதிராது காதற்றோ ழி
யையநீபெரி தயர்த்தனையென்ற து.

(இ-ள்.) கருமை மிகாநின்ற கரியமிடற்றையுடைய அம்பலவனது கழற்கண்ணே பெருகாநின்ற மெய்யன்பையுடையவரைப்போல மிகநடுங்கிக் கைக்கண்ணே தழையை ஏந்தி, இதனோடுமாறுபடக் கடமாவை வினவி, தங்கையில வில்லின்றியே, இப்பெரியவர் பித்தலையாநின்றார், இஃதென்ன தீவினையோ! எ-று.

மா-கருமை. மாமிடறென்பது பண்புத்தொகையாய் இன்னதிறுவென்னுந் துணையாய் நிற்றலானும், மைமத்தலையாநின்றவென்பது அக்கருமையது மிகுதியை உணர்த்திநிற்றலானும், கூறியதுகூறலாகாமையறிக: அது "தாமரைமீமிசை,,எனவும், "குழிந்தாழ்ந்தகண்ண,, எனவும்,இத்தன்மையபிறவும் வருவனபோல். மெய்த்தலையாநின்றவனென்பதற்கு மெய்யாற்றலையாநின்ற அன்பெனினுமமையும். பித்தென்றது ஈண்டுப் பித்தாற்பிறந்த அலைப்பை. அலைப்பு-பொருள்புணராவோசை. (௱௨)

சிறப்பின்மைகூறிமறுத்தல்.

சிறப்பின்மைகூறிமறுத்தலென்பது- என்வருத்தத்திற்குக் கவலாநின்றனன் இவளாதலின் எனக்கிதுமுடியாமை யில்லையென உட்கொண்டுநிற்ப, தோழி இக்குன்றிடத்து மாவுஞ் சுனையும் இவள்வடிவுக்கஞ்சி மலர்ந்தறியாவாதலான் ஈண்டில்லாதனவற்றை யாமணியிற் கண்டார் ஐயுறுவரென மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

அக்குமரவுமணிமணிக்கூத்தன்சிற்றம்பலமே *
யொக்குமிவளதொளிருருவஞ்சிமஞ்சார்சிலம்பா *
கொக்குஞ்சுனையுங்குளிர்தளிருங்கொழும்போதுகளு *
மிக்குன்றிலென்றுமலர்ந்தறியாதவியல்பினவே. (௱௩)

மாந்தளிரு மலர்நீலமு ம்
ஏந்தலிம்மலை யில்லையென்ற து.

(இ-ள்.) மஞ்சார்ந்த சிலம்பையுடையாய், அக்கையும் அரவையுமணியும் மாணிக்கம்போலுங் கூத்தனது சிற்றம்பலத்தையொக்கும் இவளது விளங்காநின்ற வடிவையஞ்சி மாக்களுஞ் சுனைகளும் குளிர்ந்ததளிர்களுங் கொழுவியபோதுகளும் இக்குன்றில் எக்

காலத்தும் விரிந்தறியாத தன்மையையுடைய, அதனால் ஞான்றில்லாத இவற்றை யாமணியிற் கண்டார் ஐயுறுவர். எ-று.

தளிர்மலர்ந்தறியாதவென்னுஞ் சினைவினை முதன் மேலேறியும், போது மலர்ந்தறியாத வென்னும் இடத்து நிகழ்பொருளின் வினை இடத்துமேலேறியும், நின்றன. (௱௩)

இளமைகூறிமறுத்தல்.

இளமைகூறிமறுத்தலென்பது - அவளது வடிவுக்கஞ்சி மலர்ந்தறியாவென்றதல்லது மறுத்துக்கூறியவாறன்று சிறப்பின்மைகூறியவாறென உட்கொண்டு, சிறப்புடைத் தழை கொண்டுசெல்ல, அதுகண்டு, குழலும் முலையுங் குவியாத குதலைச்சொல்லிக்கு நீ சொல்லுகின்றகாரியம் சிறிதுமியைபுடைத்தன்றென அவளிளமை கூறி மறுத்துவாயாறிற்றல். அதற்குச்செய்யுள்.

உருகுதலைச்சென்றவுள்ளத்துமம்பலத்துமொளியே *
பெருகுதலைச்சென்றுநின்றோன் பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகுதலைச்சென்றகூழைமுடியாமுலைபொடியா *
வொருகுதலைச்சின்மழலைக்கென்னோவையவோதுவதே. (௱௪)

முளையெயிற் றரி வை
விளைவில ளென்ற து.

(இ-ள்.) அன்பருடைய உருகுதலையடைந்த உள்ளத்தின்கண்ணும் அம்பலத்தின்கண்ணும் இரண்டிடத்துமொப்ப ஒளிபெருகுதலையடைந்து நின்றவனது பெருந்துறைக்கணுள்ளராகிய எம்பிள்ளையுடைய தேனூர்ந்த நறுநாற்றம் தம்மிடத்தடைந்த குழல்கள் முடிக்கப்படா, முலைகள் தோன்றா, ஒரு குதலைச் சின்மழலை மொழியாட்கு, ஐயனே, நீ சொல்லுகின்றவிது யாதாய்! சிறிதுமியைபுடைத்தன்று. எ-று.

ஏகாரம்-அசைநிலை. கள்ளார் கூழையெனவியையும். குதலைமை-விளங்காமை. மழலை-இளஞ்சொல். சின்மழலைத் திறத்தென நான்காவது ஏழாவதன்பொருட்கண் வந்ததெனினுமமையும். இவைநான்கற்கும் மெய்ப்பாடும் பயனும் அவை. (௱௪)

மறைத்தமைகூறிநகைத்துரைத்தல்.

மறைத்தமைகூறிநகைத்துரைத்தலென்பது - இவளதிளமை கூறுகின்றது தழைவாங்குதற்பொருட்டன்றாகவேண்டும் அதுவல்லி

இந்நாளெல்லாமியைய மறந்து இப்பொழுது இவளிளையளென்று இயையாமைகூறி மறுக்கவேண்டியதென்னை இனி யிவ்வொழுக்கம் இவளையொழியவொழுகக்கடவேனென உட்கொண்டுநிற்பா நீயென்னைமறைத்தகாரியம் இனி நினக்கு முடியாதென அவனோடு நகைத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பண்டாலியலுமிலைவளர்பாலகன்பார்கிழித்துத் *
தொண்டாலியலுஞ்சுடர்க்கழலோன்றொல்லைத்தில்லையின்வாய் *
வண்டாலியலும்வளர்பூந்துறைவமறைக்கினென்னைக் *
கண்டாலியலுங்கடனில்லைகொல்லோகருதியதே. (௱௫)

என்னைமறைத்தபி னெண்ணியதரிதென
நன்னுதற்றோழி நகைசெய்தது.

(இ-ள்.) முற்காலத்து ஆலின்கணுளதாம் இலையின்கட்டுயின்ற பாலகனாகிய மாயோன் நிலத்தைக்கிழித்துக் காணாமையிற் பின்றொண்டாலொழுகுஞ் சுடர்க்கழலையுடையானது பழையதாகிய தில்லைவரைப்பினுண்டாகிய வண்டுகள் ஆலிப்போடு திரிதரும் மிக்கபூக்களையுடைய துறையையுடையாய், ஆராய்ந்தால் என்னை மறைப்பின் நீகருதியது முடியுமுறைமையில்லைபோலும். எ-று.

. பண்டுதொண்டாலியலுமெனவும், தில்லைவரைப்பிற்றுறையெனவுமியையும். தில்லைக்கட் டுறைவனெனினுமமையும். மெய்ப்பாடு- அச்சத்தைச்சார்ந்த நகை. இவள் நகுதலான் என்குறையின்னதென உணர்ந்த ஞான்று தானே முடிக்குமென நினைந்து ஆற்றுவானாவது-பயன். (௱௫)

நகைகண்டுமகிழ்தல்.

நகைகண்டுமகிழ்தலென்பது - இவள் தன்னை மறைத்தால் முடியாதென்றது மறையாதொழிந்தால் முடியுமென்றாளாமெனத் தலைமகன் உட்கொண்டு நின்று, உன்னுடைய சதுரப்பாட்டைச்சேர்ந்த மெல்லென்ற நோக்கமன்றோ எனக்குச் சிறந்த துணையல்லது வேறு துணையுண்டோவென அவளது நகை கண்டு மகிழாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மத்தகஞ்சேர்தனிநோக்கினன்வாக்கிறந்தூறமுதே *
யொத்தகஞ்சேர்ந்தென்னையுய்யநின்றோன்றில்லையொத்திலங்கு *
முத்தகஞ்சேர்மென்னகைப்பெருந்தோளிமுகமதியின் *
வித்தகஞ்சேர்மெல்லென்னோக்கமன்றோவென்விழுத்துணையே. ()

இன்னகைத்தோழி மென்னகைகண் டு
வண்ணக்கதிர்வே லண்ணலுணர்த்த ல்.

(இ-ள்.) நெற்றியைச்சேர்ந்த தனிக்கண்ணையுடையான், சொல்லளவைக் கடந்து ஊறுமமுதத்தையொத்து மனத்தைச்சேர்ந்து என்னையுய்யநின்றவன், அவனது தில்லையையொத்திலங்கும் முத்துப்போலும் எயிறுகளுள்ளடங்கிய முரன்முறுவலையுடைய பெருந்தோளியது முகமாகிய மதியின்கணுண்டாகிய சதுரப்பாட்டைச்சேர்ந்த மெல்லென்ற நோக்கமன்றோ எனது சிறந்த துணை, அதனால் ஆற்றத்தகும். எ-று.

வாக்கிறந்தென்பதூஉம், அமுதொத்தென்பதூஉம், அகஞ்சேர்ந்தென்பதனோடியையும். உய்யநின்றோனென்னுஞ் சொற்கள் உய்வித்தோனென்னும் பொருளவாய், ஒருசொல்னீர்மைப்பட்டு இரண்டாவதற்கு முடிபாயின. இலங்குமுகமதியென விழையும். மறுத்தாளாயினும் நங்கண் மலர்ந்தமுகத்தளென்னுங்கருத்தான் இலங்குமுகமதியினென்றான். உள்ளக்குறிப்பை நுண்ணிதின் விளக்கலின், வித்தகஞ்சேர்மெல்லெனோக்கமென்றான். உள்ளக்குறிப்பென்றவாறென்னை, முன்னர்ச் சின்மழலைக்கென்னோனையவோதுவதென்று இளையளென மறுத்தவிடத்து இந்நாளெல்லாமிழையமறுத்து இப்பொழுது இவளிளையளென்று இழையாமை மறுத்தாள் இவ்வொழுக்கம் இனி இவளை யொழிய வொழுகக்கடவேனென்று தலைமகன் தன்மனத்திற் குறித்தான் அக்குறிப்பைத் தோழி அறிந்து கூறினமையின் வித்தகஞ்சேர் மெல்லெனோக்கமன்றோ எனக்குச் சிறந்த துணை பிறிதில்லையெனத் தனதாற்றாமை தோன்றக் கூறினான். மெய்ப்பாடு-உவகை. பயன்- ஆற்றாமைநீங்குதல். (௬௬)

அறியாள்போன்றுநினைவுகேட்டல்.

அறியாள்போன்றுநினைவுகேட்டலென்பது - தலைமகனது மகிழ்ச்சிகண்டு இவன் வாடாமற் றழைவாங்குவேனென உட்கொண்டு, என்னுடைய தோழியர் எண்ணிறந்தாருளர் அவருள் நின்னுடைய நினைவு யார்கண்ணதோவெனத் தானறியாதாள்போன்று அவனினைவு கேளாநிற்றல். அதற்குச்செய்யுள்.

விண்ணிறந்தார்நிலம்விண்டவொன்றாயிக்காரிருவர் *
கண்ணிறந்தார்தில்லையம்பலத்தார்கழுக்குன்றினின்று *
தண்ணறுஞ்சாதிவர்சந்தனச்சோலைப்பந்தாடுகின்ற *
ஒண்ணிறந்தாரவர்யார்கண்ணதோமன்னநின்னருளே. (௬௭)

வேந்தன்சொன்ன மாந்தளிர்மேனி யை
வெறியார்கோதை யறியேனென்ற து.

(இ-ள்.) விண்ணைக்கடந்தவர் நிலத்தைப்பிளந்தவரென்று சொல்லப்படும் பெரியோரிருவருடைய கண்ணைக்கடந்தார், தில்லையம்பலத்தின்கண்ணார், அவரது எழுக்குன்றிற்கணின்று தண்ணிதாகிய நறிய தாது பரந்த சந்தனச்சோலையிடத்துப் பந்தாடுகின்றார் இறப்பப்பலர், மன்னனே, நினதருள் அவருள் யார்கண்ணதோ? கூறுவாயாக. எ-று.

விண்டவரென்பதற்கு முன்னுரைத்ததுரைக்க. அன்னோர்க்கு அரியராயினும் எம்மனோர்க்கு எளியரென்னுங்கருத்தால் தில்லையம்பலத்தாரென்றார். சோலைக்கணின்றென்று கூட்டியுரைப்பினுமமையும். எண்ணிறந்தார்பலரென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு- மருட்கையைச்சார்ந்த பெருமிதம். நம்மாற் கருதப்படுவாளை அறியேனென்றாளாக என்குறை இன்னாள்கண்ணதென அறிவித்தால் இவள் முடிக்குமென நினைந்து ஆற்றுவானாமென்பது -பயன். (௱எ)

அவயவங்கூறல்.

அவயவங்கூறலென்பது-இன்னும் அவளை யிவள் அறிந்திலள் அறிந்தாளாயிற் றழைவாங்குவாளென உட்கொண்டு நின்று, என்னாற் கருதப்பட்டாளுக்கு அவயவம் இவையெனத் தோழிக்குத் தலைமகன் அவளுடைய அவயவங்கூறிநிற்றல். அதற்குச்செய்யுள்.

குவவினகொங்கைகுரும்பைகுழல்கொன்றைகொவ்வைசெவ்வாய் *
கவவினவாணகைவெண்முத்தங்கண்மலர்செங்கழுநீர் *
தவவினைதீர்ப்பவன்றாழ்பொழிற்சிற்றம்பலமனையாட் *
குவவினநாண்மதிபோன்றொளிர்கின்றதொளிமுகமே. (௱அ)

அவயவ மவளு க்
இவையிவை யென்ற து.

(இ-ள்.) விரதங்களான் வருந்தாமற் றவத்தொழிலைநீக்கி அன்பர்க்கு இன்புறு நெறியருளியவனது தாழ்ந்தபொழிலையுடைய சிற்றம்பலத்தையொப்பாட்குக் குவிந்தகொங்கைகள் குரும்பையையொக்கும், குழல் கொன்றைப்பழத்தை யொக்கும், செய்யவாய் கொவ்வைக்கனியையொக்கும், அதனகத்திடப்பட்ட வாணகை வெண்முத்தையொக்கும், கண்மலர்கள் செங்கழுநீரையொக்கும், ஒளிமுகம் உவாவின்கணுளதாகிய செவ்வியமதிபோன்றொளிராநின்றது. எ-று.

துவினைதீர்ப்பவனென்பதற்கு மிகவும் வினைகளைத் தீர்ப்பவனெனினுமமையும். உவவினநாண்மதியென்றது "காலகுருகு" என்பதுபோலப் பன்மையொருமைமயக்கம். எப்பொழுதுந் தன்னுள்ளத்திடையறாது விளங்குதலின், ஒளிர்கின்றதெனநிகழ்காலத்தாற்கூறினான் உவவினமதி-பலகலைகள்கூடி நிறைந்த தன்மையையுடைய மதி. நாண்மதி-உவாவான நாளின்மதி. (௱௮)

கண்ணயந்துரைத்தல்.

கண்ணயந்துரைத்தலென்பது - அவயவங்கூறியவழிக் கூறியும் அமையாது, தனக்கு அன்று தோழியைக் காட்டினமை நினைந்து, பின்னுங்கண்ணயந்து கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஈசற்கியான்வைத்தவன்பினகன்றவன்வாங்கியவென் *
பாசத்திற்காரென்றவன்றில்லையினொளிபோன்றவன்றோள் *
பூசத்திருநீறெனவெளுத்தாங்கவன்பூங்கழல்யாம் *
பேசத்திருவார்த்தையிற்பெருநீளம்பெருங்கண்களே. (௱௯)

கண்ணிணை பிறழ்வ ன
வண்ண முரைத்த து.

(இ-ள்.) ஈசனிடத்து யான் வைத்த அன்புபோல அகன்று, அவனால் வாங்கப்பட்ட எனது பாசம்போலக் கறுத்து, அவனது தில்லையினொளியையொத்து, அவன்றோள்களிற்சாத்தும் அத்திருநீறுபோல வெளுத்து, அவனுடைய பூப்போலுந் திருவடிகளை யாம் பேசும் அத்திருவார்த்தைபோல மிகவுநெடியவாயிருக்கும் என்றாற் காணப்பட்டவளுடைய பெரிய கண்கள். எ-று.

அன்பினகன்றென்பதற்குப் பிறிதுரைப்பாருமுளர். தில்லையினொளிபோறல் - தில்லையினொளிபோலும் ஒளியையுடைத்தாதல். ஆகவே தில்லையே உவமையாம். பூசத்திருநீறு வெள்ளிதாய்த்தோன்றுமாறுபோல வெளுத்தென்றும், பேசத்திருவார்த்தைநெடியவாயினாற்போலப் பெருநீளமாமென்றும், வினையெச்சமாக்கி, சிலசொல் வருவித்துரைப்பினும் அமையும். பெருநீளமாமென ஆக்கம் வருவித்துத் தொழிற்படவுரைக்க. கண்களாற்பெரிது மிடர்ப்பட்டானாகலானும், தோழியைத்தனக்குக்காட்டின பேருதவியையுடையனவாகலானும், முன்னர்க்கண்மலர் செங்கழுநீரென்றும் அமையாது, பின்னும் இவ்வாறுகூறினான். கண்ணிற்குப் பிறிது வகையான் உவமங்கூறாது இங்ஙனம் அகலமுதலாயின கூறவேண்டியது எற்றிற்கெனின், அவை கண்ணிற்கிலக்கணமுங் காட்டியவாறும். என்னை இலக்கணமாமாறு? "கண்ணிற் கியல்பு கசடறக்

கிளப்பின், வெண்மை கருமை செம்மை பகல், நீள மொளியென நிகழ்த்துவர் புலவர்.,, ஆயின் இதனுட் செம்மை கண்டிலேமென்பார்க்குச் செம்மையுங் கூறிற்று. அவன்றோளிற்பூசத் திருநீறென்றதனால் சிவப்புஞ்சொல்லியதாயிற்று. அது செம்மையாற் றோன்றும் வரியெனவறிக. யான்பேசத்திருவார்த்தையென்னாது யாமென்றதென்னையெனின், திருவார்த்தை பேசுமன்பர் பலராகலான் யாமென்று பலராகக்கூறினார். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு- உவகையைச்சார்ந்தபெருமிதம். பயன்-ஐயமறுத்தல். (௱௯)

தழையெதிர்தல்.

தழையெதிர்தலென்பது-கண்ணயந்துரைப்பக்கேட்ட தோழி இவ்வாறு ஏற்றல் எங்குடிக்கேலாவாயினும் நீ செய்தவுதவிக்கும் நின்பேரன்புக்கும் ஏலாநின்றேனெனக் கூறித் தலைமகன்மாட்டுத் தழையெதிராநிற்றல். அதற்குச்செய்யுள்.

தோலாக்கரிவென்றதற்குந்துவள்விற்குமில்லின்றொன்மைக் *
கேலாப்பரிசுளவேயன்றியேலேமிருஞ்சிலம்ப *
மாலார்க்கரியமலர்க்கழலம்பலவன்மலையிற் *
கோலாப்பிரசமன்னாட்கையநீதந்தகொய்தழையே. (௱௰)

அகன்றவிடத் தாற்றாமைகண் டு
கவன்றதோழி கையுறையெதிர்ந்த து.

(இ-ள்.) இருஞ்சிலம்பா, எம்மையேதஞ்செய்யவருந் தோலாக்கரியை நீ வென்றதற்கும் யான் குறைமறுப்பவும் போகாது பேரன்பினையுடையையாய் நீவிடாது துவண்ட துவட்சிக்கும் எமது குடியின்பழமைக்கேலாத இயல்பையுடைய வென்று எம்மாற்செய்யப்படாதனவுளவே! ஐயனே, மாலார்க்குமரிய மலர்போலுங் கழலையுடைய அம்பலவனது மலையின்கண் வைக்கப்படாத தேனையொப்பாட்கு நீ தந்த கொய்தழையைப் பிறிதோராற்றானேலேம். எ-று.

உளவேயென்னுமேகாரம் எதிர்மறை. அஃதென்போலவெனின், "தூற்றாதே தூர விடல்,, என்றது தூற்றுமென்று பொருள்பட்டவாறுபோலவென்றறிக. அன்றியும், ஏலாப்பரிசுளவேயென்பதற்கு நாங்கள் இத்தழை வாங்குவதன்றென்றது கருத்து. எமது குடிப்பிறப்பின் பழமைபற்றி அது சுற்றத்தார்கூடி வாங்குவதொழிந்து நாங்களாக வாங்கினாற் குடிப்பிறப்புக்குப் பழிவருமென்பதனைப்பற்றியென்றவாறு. வழிபட்டுக்காணவாராமையின், மாலாரென இழித்துக்கூறினாரெனினுமமையும். உளவேலன்றியேலேமென்பது பாடமாயின், தழைவாங்குகின்றுழி என்பொருட்டால்நீர் எங்குடிக்கேலாதனவற்றைச் செய்யாநின்றீரென்று தலை

மகன்கூறியவழி, நீ செய்ததற்குக்கைம்மாறு செய்ய வேண்டுதுமாதலின் இற்பழியாங்குற்றம் இதற்குளவாயினல்லது இதனையேலேமென்று கூறினளாகவுரைக்க. என்றது-இற்பழியாங்குற்றம் இதற்குளவாகலான் ஏற்கின்றேம் நீ செய்தவுதவியைப்பற்றி அலலம்தலேமென்றவாறெனவறிக. கோலாற்பிரசமென்பது பாடமாயின், கோலிடத்துப்பிரசம் - என்றது - கோற்றேன். இது சுவைமிகுதியுடைமைகூறியவாறெனவுரைக்க. தோலாக்கரிவென்றது முதலாயின நிகழ்ச்சி செய்யுளின்கட் கண்டிலேமென்பார்க்கு இயற்கைப்புணர்ச்சிபது நீக்கத்தின்கண் நிகழ்ந்தனவெனவுரைக்க. அன்றியும்படைத்துமொழி வகுத்துரையென்பனவற்றானுமறிக. அகறல்-அவன்கருத்திற்ககறல். மெய்ப்பாடு-, அச்சத்தைச்சார்ந்தபெருமிதம். பயன்-குறைநேர்தல். (௱௰)

குறிப்பறிதல்.

குறிப்பறிதலென்பது - தலைமகன் மாட்டுத் தழை யெதிர்ந்த தோழி இவளுக்குத் தெற்றெனக் கூறுவேனாயின் இவள் மறுக்கவுங்கூடுமென உட்கொண்டு, இந்நாள்காறுந் தழையேலாமைக்குத் தக்க பொய்சொல்லி மறுத்தேன் இன்று அவனது நோக்கங்கண்டபின் பொய்சொல்லுநெறி அறிந்திலேன் இனியவனுக்குச் சொல்லுமாறென்னோவெனத் தழையேற்பித்தற்குத் தலைமகளது குறிப்பறியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கழைகாண்டலுஞ்சுளியுங்களியானையன்னான்கரத்திற் *
றழைகாண்டலும்பொய்தழைப்பமுன்காண்பனின்றம்பலத்தா *
னுழைகாண்டலுநினைப்பாகுமென்னோக்கிமன்னோக்கங்கண்டா *
விழைகாண்பணைமுலையாயறியேன்சொல்லுமீடவற்கே. (௱௰௧)

தழையெதிரா தொழிவதற்கோ ர்
சொல்லறியேனெனப் பல்வளைக்குரைத்த து.

(இ-ள்.) குத்துகோலைக் காண்டலும் வெகுளுங் களியானையையொப்பானுடைய கையிற் றழையைக்காண்டலும் அப்பொழுது சொல்லத்தகும் பொய்யை முன்பெருகக் காண்பேன், அம்பலத்தானுடைய கையி லுழைமானைக்காண்டலும் நினைவுண்டாம் மெல்லியநோக்கத்தையுடையாய், அம்மன்னனுடைய புன்கணோக்கத்தைக் கண்டால் இழை விரும்பிக் காணப்படும் பெரியமுலையையுடையாய், இன்று அவற்குப் பொய்சொல்லுநெறி யறிகின்றிலேன், இனி யாது செய்வாம்! எ-று.

குத்துகோல்வரைத்தன்றி யானை களிவரைத்தாயினாற்போலக் க

மூறுவார் சொல்வயத்தனன்றி வேட்கைவயத்தனாயினனென்பது
போதரக் கழைநாண்டலுங் களியுங்களியானை யன்றுனென்றாள்.
நண்டுக்கழறுவாரென்றது தோழிதன்னை. அஃதாவது கையுறைபல
வற்றையும் ஆகாவென்று தான் மறுத்ததனை நோக்கி. தலைமகளை மு
கங்கோடற்கு இழைகாண்பனைமூலையாயெனப் பின்னும் எதிர்மு
கமாக்கினாள். தழையெதிர்ந்தாளாயினும் தலைமகளது குறிப்பறி
யாமையின், அவனைக் கண்டிலள்போலக் கண்டாலென எதிர்கால
த்தாற்கூறினாள். இதனை முகம்புகவுரைத்தலெனினும் குறிப்பறித
லெனினுமொக்கும். (௱௰௧)

குறிப்பறிந்துகூறல்.

குறிப்பறிந்துகூறலென்பது-குறிப்பறிந்து முகங்கண்டு, அது
வழியாகநின்று, யானை கடிந்த பெருதவியார் கையிற்றழையுந்து
வளத்தகுமோ அது துவளாமல் யாம் அவரது குறைமுடிக்க வே
ண்டாவோவெனத் தோழி நயப்பக் கூறுநிற்றல். அதற்குச்செய்
யுள்.

தவளத்தநீறணியுங்கடந்தோளண்ணறன்னொருபா *
லவளத்தனு மகனுந்தில்லையானன் றுரித்ததன்ன *
கவளத்தயானைகடிந்தார்கரத்தகண்ணார்தழையுந் *
துவளத்தகுவனவோசுரும்பார்குழற்றூமொழியே. (௱௰௨)

ஏழைக் கிருந்த ழை
தோழிகொண் டுரைத்த து.

(இ-ள்.) சுரும்பார்ந்த குழலையுடைய தூமொழியாய்; வெண்
மையையுடைய நீற்றைச் சாத்தும் பெரிய தோள்களையுடைய அ
ண்ணல், தனதொரு பாகத்துளளாகிய அவட்குத் தந்தையுமாய் ம
கனுமாந் தில்லையான், அவன் அன்றுரித்த யானையையொக்குங் க
வளத்தையுடைய யானையை நம்மேல் வாராமற் கடிந்தவருடைய
கையவாகிய கண்ணிற்காருந் தழையும் வாடத்தகுவனவோ! தகா.
எ-று.

தவளத்தநீறு கவளத்தயானையென்பன பன்மையொருமைமய
க்கம். சிவதத்துவத்தினின்றுஞ் சத்திதத்துவந்தோன்றலின் அவள
த்தனுமென்றும், சத்திதத்துவத்தினின்றுஞ் சதாசிவதத்துவந்தோ
ன்றலின் மகனுமென்றும், கூறினார். "இமவான்மகட்குத் தன்னு
டைக் கேள்வன் மகன் றகப்பன்" என்பதூஉம் அப்பொருண்
மேல் வந்தது. கவளத்தயானையென்பதனால் தான்விரும்புங்கவள
முண்டு வளர்ந்த யானையென்பதூஉம் கூறப்பட்டதாம். அது ஒ
ருவராற்கட்டப்பட்டு பிடிபட்டதன்றாகலான், அதனை வெல்வதரி

து அப்படிப்பட்டயானையையும் வென்றவர், அங்ஙனம் யானையடித்த பெருந்தவியார்கையளவுந் துவளத்தருவனவோ வென்றதனால், அவருள்ளமுந் துவளாமற் குறைமுடிக்கவேண்டுமென்பது குறிப்பாற்கூறினாள். உம்மை-சிறப்பும்மை எனைக்குலாத்ததெனவியையும். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்-குறைநயப்பித்தல். (௱௰௨)

வகுத்துரைத்தல்.

வகுத்துரைத்தலென்பது- உதவிகூறவும் பெருநாணினளாதலின் தழை வாங்கமாட்டாது நிற்ப, அக்குறிப்பறிந்து, இருவகையானும் நமக்குப்பழியேறும் அதுகிடக்க நமக்குதவி செய்தாற்கு நாமுமுதவிசெய்யுமாறென்னோவெனத் தலைமகள் தழையேற்குமாறு வகுத்துக்கூறுநிற்றல் அதற்குச்செய்யுள்.

ஏறும்பழிதழையேற்பின்மற்றேலாவிடின்மடன்மா *
வேறுமவனிடபங்கொடியேற்றிவந்தம்பலத்து *
ளேறுமரன்மன்னுமீங்கோய்மலைநம்மிரும்புனங்காய்ந் *
தேறுமலைதொலைத்தாற்கென்னையாஞ்செய்வதேந்திழையே. ()

கடித்தழைகொணர்ந்த காதற்றோ ழி
மடக்கொடிமாதர்க்கு வகுத்துரைத்த து.

(இ-ள்.) ஏந்திழாய், தழையையேற்பின் தாமேயொரு நட்புச்செய்தாரொன்று பிறரிடத்து நமக்குப்பழியேறும், அதனையேலாதொழியின் பிறிதோருபாயமில்லையென்று அவன் மடலாகிய மாவையேறும். தருமவடிவாகிய இடபத்தைக் கொடியின்கண்வைத்து நமது பிறவித்துன்பத்தை நீக்க ஒருப்பட்டுவந்து அம்பலத்தின்கணேறும் அரன்றங்கும் ஈங்கோய்மலையின் நமதுபெரியபுனத்தையழித்து நம்மைநோக்கி வந்தேறும் மலைபோலும் யானையைத்தோற்பித்தவற்கு யாஞ்செய்வதென்னோ! அதனை யானறிகின்றிலேன். எ-று.

மற்று- வினைமாற்று. மடன்மாவேறுமவனென்று தழையேலாவிடினும் பழியேறுமென்பது படக்கூறினமையானும், ஏறுமலைதொலைத்தாற்கென அவன்செய்த உதவிகூறினமையானும், தழையேற்பதே கருமமென்பது படக்கூறினாளாம். அன்றியுந் தழையேற்றால் நமக்கேறும்பழியை அறத்தொடுநிலைமுதலாயினகொண்டு தீர்க்கலாமென்றும், ஏலாவிடின் அவன் மடன்மாவையேறுதலான் வரும்பழி ஒன்றானுந் தீர்க்கமுடியாதென்றும், கூறியவா

ருயிற்று. வருத்துணர்த்தல்-தழையேற்றலே கருமமென்று கூறுபடுத்துச்சொல்லுதல். (௱௰௧)

தழையேற்பித்தல்.

தழையேற்பித்தலென்பது - தழையேலாதொழியினும் பழியேறுமாயிற் றழையேற்பதே காரியமென உட்கொண்டுநிற்ப, அக்குறிப்பறிந்து, இத்தழை நமக்கெளியதொன்றன்று இதனை யேற்றுக்கொள்வாயாகவெனத் தோழி தலைமகளைத் தழையேற்பியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தெவ்வரைமெய்யெரிகாய்சிலையாண்டென்னையாண்டுகொண்ட *
செவ்வரைமேனியன்சிற்றம்பலவன்செழுங்கயிலை *
யவ்வரைமேலன்றியில்லைகண்டாயுள்ளவாறருளா *
லிவ்வரைமேற்சிலம்பன்னெளிதிற்றந்தவீர்ந்தழையே. (௱௰௨)

கருங்குழன்மடந்தைக் கரும்பெறற்றோழி
இருந்தழைகொள்கென விரும்பிக்கொடுத்தது.

(இ-ள்.) நம்மாட்டுண்டாகிய அருளான் இம்மலைக்கட் சிலம்பன் எளிதாகக்கொணர்ந்து தந்த வாடாத இத்தழை வளவிய கைலையாகிய அம்மலையிடத்தல்லது பிறிதோரிடத்தில்லை, இதனைக் கொள்வாயாக. எ-று. உள்ளவாறென்பது-யான் கூறிய இது மெய்ம்மையென்றவாறு. பகைவரை மெய்யெரித்த வரையாகிய காய்சிலையைப் பணிகொண்டுபின் என்னையடிமைக்கொண்ட செவ்வரைபோலுந் திருமேனியையுடையனாகிய சிற்றம்பலவனது செழுங்கைலையெனக்கூட்டுக.

மெய்யெரியென்பன ஒருசொல்லாய்த் தெவ்வரையென்னும் இரண்டாவதற்கு முடிபாயின. மெய்யெரித்த காய்சிலை மெய்யெரி காய்சிலையென வினைத்தொகையாயிற்று. காய்சிலை- சாதியடை. ஐகாரத்தை அசைநிலையாக்கித் தெவ்வர்மெய்யெரித்தற்குக் காரணமாஞ்சிலையெனினுமமையும். வலியனவற்றை வயமாக்கிப் பயின்று பின் என்னையாண்டானென்பது போதர, காய்சிலையாண்டென்னையாண்டுகொண்டவென்றார். என்னைத் தனக்கடிமைக்கொள்ளுதல் காரணமாகப் பிறிதொன்றின் மேலிட்டுக்கல்லை வளைத்தான் என்னெஞ்சைவளைத்தல் காரணமாக அல்லது தனக்கொரு பகையுண்டாய்ச் செய்ததன்றுபோலும் என்பதுகருத்து. "கல்லை மென்கனியாக்கும் விச்சைகொண் டென்னை நின்கழற் கன்பனாக்கினாய்" என்பதுமது. கைலைத்தழையை எளிதிற்றந்தானென்ற

னுன் வரைவு வேண்டியவழித் தமர் மறுப்பின் வரைந்துகொள்ளுந் தாளாண்மையனென்பது கூறினுளாம். கண்டாயென்பது முன்னிலையசைச்சொல். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-கையுறையேற்பித்தல். (௱௰௪)

தழைவிருப்புரைத்தல்.

தழைவிருப்புரைத்தலென்பது-தலைமகளைத் தழையேற்பித்துத் தலைமகனுழைச்சென்று, நீதந்த தழையை யான்சென்று கொடுத்தேன் அதுகொண்டு அவள் செய்தது சொல்லிற் பெருகுமெனத் தலைமகளது விருப்பங் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பாசத்தளையறுத்தாண்டுகொண்டோன்றில்லைம்பலஞ்சூழ் *
தேசத்தனசெம்மனிதந்தனசென்றியான்கொடுத்தேன் *
பேசிற்பெருகுஞ்சுருங்குமருங்குல்பெயர்ந்தரைத்துப் *
பூசிற்றிலளன்றிச்செய்யாதனவில்லைபூந்தழையே. (௱௰௫)

விருப்பவ டோ ழி
பொருப்பற் குரைத்த து.

(இ-ள்.) பாசமாகிய தளையிற்பட்டுக் கிடப்ப அத்தளையையறுத்துத் தனக்குக் குற்றேவல்செய்ய என்னை யடிமைக்கொண்டவனது தில்லையம்பலத்தைச் சூழ்ந்த தேசத்தின்கணுள்ளன, அச்சிறப்பேயன்றி, செம்மால், நின்னாற்றரப்பட்டன, அவற்றைச்சென்று யான் கொடுத்தேன், கொடுப்ப, ஆண்டு நிகழ்ந்தனவற்றைச் சொல்லுவேனாயிற் பெருகும், சுருங்கிய மருங்குலையுடையாள் அப்பூந்தழையை அரைத்துத் தன்மேனியெங்கும் பூசிற்றிலளல்லது பெயர்த்துச்செய்யாதனவில்லை. எ-று.

என்றது-இவை வாடுமென்று கருதாது அரைத்துப்பூசினாற்போலத் தன்மேனிமுழுதும் படுத்தாள். எ-று. பெயர்த்தென்பது பெயர்ந்தெனமெலிந்துநின்றது. மிசைந்தரைத்தென்று பாடமோதுவாருமுளர். மெய்ப்பாடு-உவகை. பயன்-தலைமகனையாற்றுவித்தல். (௱௰௬)

சேட்படைமுற்றிற்று.

பகற்குறி.

பகற்குறியென்பது-தலைமகளைத் தழையேற்பித்ததோழி தலைமகனுடன் அவளைப் பகற்குறிக்கட் டலைப்பெய்வியாநிற்றல்.

அதுவருமாறு,—சூத்திரம். குறியிடங் கூறலாடிடம் படர்தல், குறியிடைச் சேறலிடத்துய்த்து நீங்க, லுவந்துரைத்தலொடு

மருங்கணை தல்லே, பறிவறி வித்த லவனுண் மகிழ்ந்த, லாயத் துய்
த்த றோழிவந்து கூட,லாடிடம் புகுத றனிகண் டுரைத்த, றடமெ
ன் முலையாள் பருவங் கூறி, வரவு விலக்கன் வரைவுடம்ப
டாது, மிகுத்து ரைத்தலொடு மெய்ம்மை யுரைத்தல், வருத்தங் கூ
றறாயச்சங்கூற, லிற்செறி வறிவித்த றமர்நினை வுரைத்த, லெதிர்
கோள் கூற லேறுகோள் கூற, லேதிலார் தம்முரை கூற லவனொ
டு,கூறுவாள் போன்று தினைமுதிர் வுரைத்தல்,பகல்வரல் விலக்கல்
பையு ளெய்தித்,தினையொடு வெறுத்தல் சிறைப்புற மாக, வேங்
கையொடு வெறுத்தல் வெற்பமர் நாடற்குக், கழுமலுற் றிரங்கல்
கடிப்புனங் கையறக்,கொய்தமை கூறல் பிரிவருமை கூறன், ம
யிலொடு கூறல் வறும்புனங் காண்டல், பயில்பதி நோக்கிப் பதி
மிக வாடல்,சொன்னநா லெட்டுந் தோன்று மியற்கை, மன்னிய
பகற்குறி வகையா கும்மே.

(இ-ள்.) குறியிடங்கூறல்- ஆடிடம்படர்தல்-குறியிடத்துக்கொண்டுசேறல்- இடத்துய்த்துநீங்கல்-உவந்துரைத்தல்- மருங்கணைதல்-பாங்கியறிவுரைத்தல்-உண்மகிழ்ந்துரைத்தல்- ஆயத்துய்த்தல்-தோழிவந்துகூடல்-ஆடிடம்புகுதல்- தனிகண்டுரைத்தல்-பருவங்கூறிவரவுவிலக்கல் - வரைவுடம்படாதுமிகுத்துக்கூறல் - உண்மைகூறிவரைவுகடாதல் - வருத்தங்கூறிவரைவுகடாதல் - தாயச்சங்கூறிவரைவுகடாதல்- இற்செறிவறிவித்துவரைவுகடாதல்- தமர்நினைவுரைத்துவரைவுகடாதல் -எதிர்கோள்கூறிவரைவுகடாதல்-ஏறுகோள்கூறிவரைவுகடாதல்- அயலுரையுரைத்துவரைவுகடாதல்- தினைமுதிர்வுரைத்துவரைவுகடாதல்- பகல்வரல்விலக்கிவரைவுகடாதல்-தினையொடுவெறுத்துவரைவுகடாதல்- வேங்கையொடுவெறுத்துவரைவுகடாதல்- இரக்கமுற்றுவரைவுகடாதல்- கொய்தமைகூறிவரைவுகடாதல்-பிரிவருமைகூறிவரைவுகடாதல்-மயிலொடுகூறிவரைவுகடாதல்- வறும்புனங்கண்டுவருந்தல்- பதிநோக்கிவருந்தல் என விவைமுப்பத்திரண்டும் பகற்குறியாம். எ-று. அவற்றுள்,—

குறியிடங்கூறல்.

குறியிடங்கூறலென்பது - தழைவிருப்புரைத்த தோழி ஆங்கவள் விளையாடுமிடத்து ஒருசாரிய பொழில் கதிரவன் நுழையாவிருளாய் நடுவண் ஓர் பளிக்குப்பாறையையுடைத்தாயிருக்கும் அவ்விடத்து வருவாயாகவென்று தலைமகனுக்குக் குறியிடங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

வானுழைவாளம்பலத்தரன்குன்றென்றுவட்கிவெய்யோன் *
றானுழையாவிருளாய்ப்புறநாப்பண்வண்டாரகைபோற் *

றேனுழைநாகமலர்ந்துதிகழ்பளிங்கான்மதிபோன் *
கானுழைவாழ்வுபெற்றாங்கெழில்காட்டுமோர்கார்ப்பொழிலே.)

வாட்டடத்தண்ணல் வண்டழையெதிர்ந்தவ ள்
ஆடிடத்தின்னியல் பறியவுரைத்த து.

(இ-ள்.) ஒரு கரியபொழில், புறமெங்குங் கதிரோன்றான் சென்று நுழைபராதவிருளாய், நடுவண் வளவிய வான்மீன் போலத் தேன்கள் நுழையும் நாகப்பூ மலர்ந்து, திகழும் பளிங்காற் றிங்கட்கடவுள் வானிடத்துவாழ்வையொழிந்து கானிடத்து வாழ்தலைப் பெற்றாற்போலத் தனதெழிலைப் புலப்படுத்தும். எ-று. இருட்கு அப்பாலாகிய வானிடத்துண்டாகிய ஒளி, இவ்வண்ணஞ் சேயனாயினும் அணியனாய் அம்பலத்தின்கணுளனாகிய அரன், அவனதிமலையென்று கூசினாற்போல வெய்யவன் நுழையாவெனக் கூட்டுக.

"அண்ட மாரிருளூடு கடந்தும்ப-ருண்டு போலுமோரொண் சுடர்,, என்பதூஉம் அப்பொருண்மேல் வந்தது வட்கியென்பதனால் முன் பற்பறியுண்டானாதல் விளங்கும். வானுழைவாளென்பதற்குக் கற்பவிறுதிக்கண் தோன்றிய முறையானே வான் சென்றொடுங்கும் ஒளியென்றுரைப்பாருமுளர். புறம் இருளாயெனவும், நாகமலர்ந்தெனவும், சினைவினை முதன்மேலேறி நின்றன. புறம் இருளாயென்பது இடத்து நிகழ்பொருளின்வினை இடத்தின் மேலேறி நின்றது. இது குறிப்பெச்சமாதலான், ஆண்டு வாவென்பது கருத்து. மெய்ப்பாடு-உவகை. பயன்-குறியிடமுணர்த்துதல்.

ஆடிடம்படர்தல்.

ஆடிடம்படர்தலென்பது - தலைமகனுக்குக் குறியிடங் கூறின தோழி யாம் புனத்தின்கட்போய் ஊசலாடி அருவியேற்று விளையாடுவேம் போதுவாயாகவெனத் தலைமகளை ஆயத்தொடுங் கொண்டுசென்று ஆடிடம் படராநிற்றல். அதற்குச்செய்யுள்.

புயல்வளரூசன்முன்னாடிப்பொன்னேபின்னைப்போய்ப்பொலியு
மயல்வளர்குன்றினின்றேற்றருவிதிருவுருவிற் *
கயல்வளர்வாட்கண்ணிபோதருகாதரந்தீர்த்தருளுந் *
தயல்வளர்மேனியனம்பலத்தான்வரைத்தண்புனத்தே. (௱௰௭)

வண்டழையெதிர்ந்த வொண்டொடிப்பாங் கி
நீடமைத்தோளியொ டாடிடம்படர்ந்த து.

(இ-ள்.) பொன்னே, பிறவி காரணமாக வருமச்சத்தை நீக்கிய

ருள்செய்யுந் தையல் தங்குந்திருமேனியை யுடையவனாகிய அம்பலத்தானது மலையிற் குளிர்ந்த புனத்தின்கட் புயல் தங்குஞ்சோலை முன்றாடி, பின்போய், அதற்கயலாகிய பொலியும் உயர்ந்த குன்றின்கணின்று அருவியைய எற்போம்; திருப்போலும் உருவினையும் கயல்போலும் வாட்கண்ணையுமுடையாய், நீபோதுவாயாக. எ-று.

உயர்ந்தவழைமரத்திற் றொடுத்தலால், புயல்வளருஞ்சோலையென்றாள். வளர்கண்ணெனவியையும். கண்டு வளரென்பது உவமையு நடு. வரன்- உவமை. ஒளியெனினுமமையும். தண்புனத்துப் போதருகென இயைப்பினுமமையும். மெய்ப்பாடு- பெருமிதம், உவகையுமாம். பயன்-குறியிடத்துப்போதருதல். (௱௩௭)

குறியிடத்துக்கொண்டுசேறல்.

குறியிடத்துக்கொண்டுசேறலென்பது- ஆடிடம்படர்ந்த தோழி தலைமகனுக்குத் தான்சொன்ன குறியிடத்து இவளைக்கொண்டு சென்றுய்க்கும்பொழுது, ஆயத்தாரைத் தம்மிடத்தினின்று நீக்க வேண்டுதலின் தினைகாத்தல் முதலாகிய விளையாட்டுக்களைத் தான் கூறவே அவ்வவ்விளையாட்டிற்குரியார் தலைமகள் அவ்வவ்விடங்களிலே வருவளென்று கருதித் தோழி சொன்னவகையே அவ்வவ் விளையாட்டுவிருப்பினான் எல்லாரும் பிரிவர் அவ்வகை ஆயவெள்ளத்தைப் பிரிவித்து, தமியளாய் நின்ற தலைமகளையுங்கொண்டு, யாமும்போய் மயிலாட்டல்காண்பேமென அக்குறியிடத்துச் செல்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தினைவளங்காத்துச்சிலம்பெதிர்கூஉய்ச்சிற்றின்முற்றிழைத்துச் *
சுனைவளம்பாய்ந்து துணைமலர்கொய்துதொழுதெழுவார் *
வினைவளநீறெழநீறணியம்பலவன்றன்வெற்பிற் *
புனைவளர்கொம்பரன்னாயன்னகாண்டும்புனமயிலே. (௱௩௮)

அணிவளராடிடத் தாயவெள் ள
மணிவளர்கொங்கையை மருங்ககன் று.

(இ-ள்.) தொழாநின்று துயிலெழுவாருடைய வினையினது பெருக்கம் பொடியாகத் தன்றிருமேனிக்கண் நீற்றையணியும் அம்பலவனது வெற்பிற்கைபுனையப்பட்ட வளர்கொம்பையொப்பாய், தினையாகிய வளத்தைக் காத்து, சிலம்பிற் கெதிரழைத்து, சிற்றிலைமிகவுமிழைத்து, சுனைப்புனலிற் பாய்ந்து ஒத்தமலர்களைக்கொய்து, அத்தன்மையவாகிய புன மயிலைக் காண்பேம் யாம் எ-று.

மலைக்கு வளமாதனோக்கித் தினைவளமென்றாள். தினையினது மிகுதியெனினுமமையும். தொழுதெழுவாரென்றது துயிலெழுந்

காலத்தல்லது முன்னுணர்வின்மையான் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார். எ-று. நீறணிந்தகோலம் நெஞ்சம் பிணிக்குமெழிலுடைமையான் அக்கோலந்தொழுதெழுவாருள்ளத்து நீங்காது நிற்றலான் ஆண்டுள்ளவினை நீறுமென்னுங்கருத்தான், வினைவள நீறெழநீறணிஅம்பலவனென்றார். புதல்வனது பிணிக்குத் தாய் மருந்துண்டாற்போலத் தொழுதெழுவார் வினைக்குத் தானீறணிந்தானென்பாருமுளர். வெற்பினென்புழி வெற்பைத் தினைகாத்தல் முதலாகிய தொழிற்கு இடமாகவுரைப்பினுமமையும். அத்தன்மையவாகிய மயிலென்றது பொருளதிகாரத்திற்கூறப்பட்ட தலைமகள் தான் றமியளாய் நின்று கண்டமயிலை. இயற்கைப்புணர்ச்சிபதிறுதிக்கட்டோழி தனதுவாட்டத்தை வினவியபோது யானேரிளமயிலாலுவது கண்டேன் அதனை நீயுங்காணப் பெற்றிலையெனவாடினேனென்று உரைப்பக் கேட்டாளாதலான், அதனைப்பற்றி அம்மயிலைக் காண்டுமென்றாளாயிற்று. மெய்ப்பாடு - அது. பயன்-ஆயம்பிரிதல். (௱௰௮)

இடத்துய்த்துநீங்கல்.

இடத்துய்த்துநீங்கலென்பது - குறியிடைக் கொண்டுசென்ற தோழி யான் அவ்விடத்துச்சென்று நின்குழற்குப் பூக்கொய்து வருவேன் அவ்விடம் வேய் முத்துதிர்தலான் நினதுமெல்லடிக்குத் தகாதாதலான் நீ என்னோடு வாராது இங்கேநின்று பூக்கொய்வாயாகவெனத் தலைமகளைக் குறியிடத்துநிறுத்தித் தானீங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

நரல்வேயினநின தோட்குடைந்துக்கநன்முத்தஞ்சிந்திப் *
பரல்வேயறைபுறைக்கும்பஞ்சடிப்பரன்றில்லையன்னாய் *
வரல்வேய்தருவனிங்கேநிலுங்கேசென்றுன்வார்குழற்கேய் *
குரல்வேயளிமுரல்கொங்கார்தடமலர்கொண்டுவந்தே (௱௰௯)

மடத்தகைமாதரை யிடத்தகத்துய்த்து
நீங்கலுற்ற பாங்கிபகர்ந்தது.

(இ-ள்.) யான் உவ்விடத்தேசென்று தேனுனீரிய பூங்கொத்தை மூடிய அளிகள் முரலுந் தாதுநிறைந்த பெரியமலர்களைக் கொய்துகொண்டுவந்து நின்னுடைய நெடியகுழற்கண் வேய்வேன், பரனது தில்லையையொப்பாய், காற்றானொன்றோடொன்று தேய்த்து நரலும் வேய்த்திரள் உன்னுடைய தோள்கட்கஞ்சிப் பிளத்தலான் உக்கநல்ல முத்துக்கள் சிதறுதலாற் பரல் மூடிய பாறை

நினது பஞ்சடிக்கணுமுறங்கும், அதனான் என்னோடு ஆண்டு வரற்பாலையல்லை, ஈண்டு நிற்பாயாக. எ-று.

யான்றருமன் நீ வேயென்றும் பிறவாற்றானு முரைப்பாருமுளர். குரலென்றது பூங்கொத்தை. தடமலரென்பதற்குத் தடத்துமலரென்றுரைப்பாருமுளர். பரல்வேயறையுறைக்கும் வரல்வேய்தருவனிங்கேநில்லென்று தலைமகளைத் தோழி கூறி இவ்விடத்தேநில்லென்றாள். மெய்ப்பாடு- அது. பயன்-தலைமகளைக் குறியிடத்துய்த்துநீங்குதல். (௱௰௩)

உவந்துரைத்தல்.

உவந்துரைத்தலென்பது-தோழி தலைமகளைக் குறியிடைநிறுத்தி நீங்காநிற்பத் தலைமகன் சென்றெதிர்ப்பட்டு,இக்குவட்டை மாசுணப்பள்ளியாகவும் என்னைத் திருமாலாகவும் நினைந்தோ நீயிப்பொழிற்கண் வந்து நின்றதெனத் தலைமகளை உவந்துகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

படமாசுணப்பள்ளியிக்குவடாக்கியப்பங்கயக்க *
ணெடுமாலெனவென்னை நீநினைந்தோநெஞ்சத்தாமரையே *
யிடமாவிருக்கலுற்றோதில்லைநின்றவனீர்ங்கயிலை *
வடமார்முலைமடவாய்வந்துவைகிற்றிவ்வார்பொழிற்கே. (௱௰௪)

களிமயிற்சாயலை யொருசிறைக்கண்டு
ஒளிமலர்த்தாரோ னுவந்துரைத்தது.

(இ-ள்.) வடமார்ந்த முலையையுடையமடவாய், தில்லைக்கணின்றவனது குளிர்ந்த கைலைக்கண் நீண்ட இப்பொழிலிடத்துவந்து தங்கியது, இக்குவட்டைப் படத்தையுடைய மாசுணமாகியபள்ளியாக்கி என்னை அம்மாசுணப்பள்ளியிற் றங்கும் பங்கயம் போலுங் கண்ணையுடைய அந்நெடியமாலென்று நீநினைந்தோ! நெடுமாலின் மார்பினல்நித்தாமரையினுமிருத்தலான் யான் நீங்கினும் என்னெஞ்சமாகிய தாமரையே நினக்கிடமாக இருக்க நினைந்தோ? கூறுவாயாக. எ-று.

மாசுணப்பள்ளி- மாசுணத்தாணியன்ற பள்ளியெனினுமமையும். என்னெஞ்சத் தாமரைக்கணிருக்கலுற்றோவென்றதனான், இப்பொழிற்கண்வந்து நிற்றநிலை ஒருஞான்றும் என்னெஞ்சினின்று நீங்காதென உவந்துகூறினானும்; கைலைமடவாயென்றியைப்பினுமமையும். வான்பொழிலென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு- உவகை. பயன்-தலைமகளைக்கண்டு தன் காதன்மிகுதியாற் றோன்றிய பேருவகையை ஆற்றகில்லான் ஆற்றுதல், தலைமகளை மகிழ்வித்தலுமாம்.

(௱௰௪)

மருங்கணைதல்.

மருங்கணைத லென்பது - உவந்துரைப்பக் கேட்ட தலைமகள் பெருநாணினளாதலிற் கண்புதைத்து ஒருகொடியினொடுங்கி வருந்தாநிற்ப, சென்றுசார்தலாகாமையிற் றலைமகன் அவ்வருத்தந் தணிப்பான்போன்று, முலையொடுமுனிந்து அவளிருமருங்குருங் கி யணையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தொத்தீன்மலர்ப்பொழிற்றில்லைத்தொல்லோனருளென்னமுன்னி
முத்தீன்குவளைமென்காந்தளின்மூடித்தன்னேரளப்பா *
ளொத்தீர்ங்கொடியினொடுங்குகின்றாண்மருங்குன்னெருங்கப் *
பித்தீர்பணைமுலைகாளென்னுக்கின்னும்பெருக்கின்றதே. (௱௨௪)

வாணுதலரிவை நாணுதல்கண் டு
கோதைவேலவ னாதரவுரைத்தது.

(இ-ள்.) கொத்துக்களையீனு மலர்ப்பொழிலையுடையதில்லையிற் றொல்லோனதருள்போல வந்தெதிர்ப்பட்டு, கண்ணீர்த்துளியாகிய முத்தைவிடாநின்ற கண்ணாகிய குவளைகளைக் கையாகிய மெல்லிய காந்தட்பூவான்மூடி அதனோடுசார்த்தி, தன்னெழிலை யளவிடுவாள்போன்று, குளிர்ந்தகொடியின்கண் நாணி மறைகின்றவளது மருங்குலடர்ப்புண்ண, பித்தையுடையீர் பணைமுலைகாள், நம்பெருமைமேல்இன்னுநீர்பெருக்கின்றதெற்றிற்கு! இதுநன்றன்று. எ-று.

தமக்காதாரமென்று கருதாது அடர்க்கின்றமைநோக்கி, பித்தீரென்றான். பெருக்கின்றதெற்றிற்கு நீர்பித்தையுடையீரென வினைக்குறிப்பு முற்றாகவுரைப்பினுமமையும். இவ்வாறு தானாதரவுரைத்து இருமருங்குருங்குவானைச்சென்று சாருமென்பது. ஈன்கொடி ஈன்பணைமுலை யென்பனவும் பாடம். ஈன்கொடி - மலரீன்றகொடி. அரிவையையென்பது பாடமாயின் நாணுதல்கண்ட வென்பனவற்றை ஒருசொல்லாக்கிமுடிக்க. மெய்ப்பாடு-அது. பயன்-சார்தல். (௱௨௪)

பாங்கியறிவுரைத்தல்.

பாங்கியறிவுரைத்தலென்பது-மருங்கணைவிறுதிக்கட் டலைமகளை ளைதயந்தீர, அவனைக்கோலஞ்செய்து, இதுநின்றோழிசெய்தகோலமே நீகலங்காதொழியெனத் தலைமகன், தான்றோழியொடு தலைப்பெய்தமைதோன்றக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அளிநீடளகத்தினட்டியதாதுமணியணியு *
மொளிநீள்சுரிகுழற்சூழ்ந்தவொண்மாலையுந்தண்ணறவுண் *
களிநீயெனச்செய்தவன்கடற்றில்லையன்னாய்கலங்க *
றெளிநீயனையபொன்னேபன்னுகோலந்திருநுதலே. (௱௨௨)

நெறிகுழற் பாங் கி
யறிவறி வித்த து.

(இ-ள்.) நீ குளிர்ந்தநறவையுண்ணுங் களிமகனென்றுபிறர்சொல்லும்வண்ணம் ஓரின்பத்தை யெனக்குச்செய்தவனது கடலையுடைய தில்லையையொப்பாய், அளிகள் விடாதுதங்குமளகத்தின்கண் இட்டதாதும், அணிந்தவணிகளும், ஒளியையுடைய நீண்டசுரிகுழலிடத்துச்சுற்றியநல்லமாலையும், இவையெல்லாம்நின்னோடொருதன்மையளாகிய நின்றோழி யாராய்ந்து செய்யுங்கோலமே. திருநுதலாய், யான்பிறிதோர் கோலஞ்செய்தேனென்று கலங்கவேண்டா, தெளிவாயாக. எ-று.

தண்ணறவுண்களி நீயெனச்செய்தவனென்பதற்குப் பிறிதுரைப்பாருமுளர். பொன்னேயென்னுமேகாரம்- பிரிநிலையேகாரம். அணிமணியுமென்பதூஉம்பாடம். பாங்கியறிவு-பாங்கியவ்வொழுக்கத்தை யறிந்தவறிவு. மெய்ப்பாடு- பெருமிதம். பயன்- பாங்கியறிந்தமை தலைமகட்குணர்த்துதல். (௱௨௨)

உண்மகிழ்ந்துரைத்தல்.

உண்மகிழ்ந்துரைத்தலென்பது - பாங்கியறிவுணர்ப்பக்கேட்ட தலைமகள், இனிநமக்கொரு குறையில்லையென வுட்கொண்டு முகமலராநிற்ப, அம்முகமலர்ச்சிகண்டு, அவளைக் கழுநீர்மலராகவும், தான் அதனினறவைப்பருகும் வண்டாகவும்புனைந்து, தலைமகன்றன்னுண்மகிழ்ந்துகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

செழுநீர்மதிக்கண்ணிச்சிற்றம்பலவன்றிருக்கழலே *
கெழுநீர்மையிற்சென்றுகிண்கிணிவாய்க்கொள்ளுங்கள்ளகத்த *
கழுநீர்மலரிவள்யானதன்கண்மருவிப்பிரியாக் *
கொழுநீர்நறப்பருகும்பெருநீர்மையளிகுலமே. (௱௨௩)

தண்மலர்க் கோதை யை
யுண்மகிழ்ந் துரைத்த து.

(இ-ள்.) வளவியநீர்மையையுடையமதியாகிய கண்ணியையுடைய சிற்றம்பலவனது திருக்கழல்களையே பொருந்து நீர்மையான்

உண்மகிழ்ந்து முகமலர்வதுபோல, போதாகிய நிலைமையைவிட்டு மலராம் நிலைமையையடைந்து சிறிதே மலரத்தொடங்குந்தன்மையகத்துடைய கழுநீர்மலர் இவள், யான் அக்கழுநீர்மலர்க்கண் மருவி ஒருகாலும்பிரியாத கொழுவியநீர்மையையுடைய அந்நறவைப்பருகும் பெருந்தன்மையையுடையதோரளிசாதி. எ-று.

செழுநீர்மதிக்கண்ணி யென்பதற்கு வளவியநீருமதியாகிய கண்ணியுமென்பாருமுளர். திருக்கழலே யென்னுமேகாரம் பிரிநிலையேகாரம். செழுநீர்மையையுடைய கழுநீர்மலரென்றிலையைப்பினுமையும். சென்று இண்கிணிவாய்க்கொள்ளுமென்பதனால், பேதைப்பருவங்கடந்து இன்பப்பருவத்தளாயினளென்பது விளங்கும். கள்ளகத்தவென்பதனால், புலப்படா துண்ணிறைந்த காதலளென்பதுவிளங்கும். கள்ளகத்தகழுநீர் மலரென்பது - காலகுருகென்பதுபோலநின்றது. பெயரெச்சமெனினு மமையும். யான் மருவிப்பிரியாத அளிகுலமெனினுமமையும். நறு-குறுகிநின்றது. பெருநீர்மையளிகுலமென்றான், கழுநீர்மலரல்லதூதாமையின். அதனால், பிறிதோரிடத்துந் தன்னுள்ளஞ்செல்லாமை விளங்கும். மெய்ப்பாடு-உவகை. பயன்-நயப்புணர்த்துதல். (௰௧)

ஆயத்துய்த்தல்.

ஆயத்துய்த்தலென்பது-மலரளிமேல்வைத்து மகிழ்வுற்றுப்பிரியலுறுநின்றதலைமகன், யாமித்தன்மையேமாதலின், நமக்குப்பிரிவில்லை, இனியழகிய பொழிலிடத்து விளையாடும் ஆயம் பொலிவுபெறச்சென்று, அவரோடுசேர்ந்து விளையாடுவாயெனத் தலைமகளையாயத்துச்செலுத்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கொழுந்தாரகைமுகைகொண்டலம்பாசடைவிண்மடுவி *
லெழுந்தார்மதிக்கமலமெழிறந்தெனவிப்பிறப்பி *
லழுந்தாவகையெனையாண்டவன்சிற்றம்பலமனையாய் *
செழுந்தாதவிழ்பொழிலாயத்துச்சேர்கதிருந்தகவே. (௰௨)

கனைகடலன்ன கார்மயிற்கணத்துப்
புனைமடமானைப் புகவிட்டன்று.

(இ-ள்.) இப்பிறவியின்கணழுந்தாதவண்ணமென்னையடிமைக்கொண்டவனது சிற்றம்பலத்தை யொப்பாய், கொழுவியதாரகையாகிய முகையையுங் கொண்டலாகிய பசியவிலையையுமுடையவிண்ணாகிய மடுவின்கண் எழுந்துநிறைந்தமதியாகியவெண்டாமரைப்பூத் தனதெழிலைப் புலப்படுத்தினாற்போல, வளவியதாதவி

மூரநின்றபொழிற்கண் விளையாடுகின்ற ஆயத்தின்கட்பொலிவுதல் இனிச்சேர்வாயாக எ-று.

மூலையோடு தாரகைக்கொத்தபண்பு-வெண்மையும்வடிவும் பன்மையும். தாரகையோடாயத்தார்க்கொத்தபண்பு- பன்மையும் ஒன்றற்குச்சுற்றமாய் அதனிற்றாழ்ந்துநிற்றலும். கமலத்தோடு மதிக்கொத்தபண்பு-வெண்மையும்வடிவும்பொலிவும். மதியோடு தலைமகட்கொத்தபண்பு-கட்கினிமையும் சுற்றத்திடை அதனின் மிக்குப்பொலிதலும். இவ்வாறொத்தபண்பு வேறுபடுதலான் உவமைக்குவமை யகாமையறிந்துகொள்க. கொண்டலம் பாசடையென்புழி, அம்மூச்சாரியை யல்வழிக்கண்வந்தது. அம்-அழகெனினுமமையும். புனைமடமான்-கைபுனையப்பட்டமான். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-புறத்தாரறியாமைப்பிரிதல். (௱௨௪)

தோழிவந்துகூடல்.

தோழிவந்துகூடலென்பது-தலைமகனைப்பிரிந்த தலைமகடானும்பூக்கொய்யாநின்றாளாகப் பிரிவாற்றாமையானும் பெருநாணினானுந்தமொழி மொட்டுக்களைப்பறியாநிற்ப, யானின் குழற்காம்பூக்கொண்டுவந்தேன், நீ விரல்வருந்த மொட்டுக்களைப்பறிக்கவேண்டாவெனத் தோழிவந்துகூடாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொன்னனையான்றில்லைப்பொங்கரவம்புன்சடைமிடைந்த *
மின்னனையானருண்மேவலர்போன்மெல்விரல்வருந்த *
மென்னனையாய்மறியேபறியேல்வெறியார்மலர்க *
ளின்னனயான்கொணர்ந்தேன்மணந்தாழ்குழற்கேய்வனவே. ( )

நெறியுறுகுழலியை நின்றிடத்துய்த்துப்
பிறைநுதற்பாங்கி பெயர்ந்தவட்குரைத்தது.

(இ-ள்.) அசைந்தமான்மறிபோல்வாய், பொன்னையொப்பான், தில்லைக்கணுளனாகிய வெகுளாநின்ற வரவம் புல்லிய சடைக்கண்மிடைந்த மின்னையொப்பான், அவனதருளைப் பொருந்தாதாரைப்போல, மெல்லியவிரல்கள்வருந்த, மென்னனைகளைப் பறியாதொழிவாயாக, நின்மணந்தங்கியகுழற்குப் பொருந்துவனவாகிய நறுநாற்றநிறைந்தமலர்களித்தன்மையனவற்றை யான்கொணர்ந்தேன். எ-று.

மிடைந்தவென்னும்பெயரெச்சம் மின்னனையானென்னுநிலப்பெயர்கொண்டது. அரவஞ்சடைமிடை தலையின்மேலேற்றி, இ

ல்பொருளுவமையாகவுரைப்பாருமுளர். இல்பொருளுவமையெனினும் அபூதவுவமையெனினு மொக்கும். இவள்மலரைப்பறியாமல் மொட்டைப்பறிப்பானேனென்பதுகடா. அதற்குவிடை- இவள் சிலமகளிர்ப்பிசிர்ந்து அப்பிரிவாற்றாமையானும், தலைமகன்புணர்ச்சிநீக்கத்துக்கட் டன்னைக்கோலஞ்செய்த அக்கோலத்தைத்தோழிகாணநின்றாளென்னும் பெருநாணினானும் ஆற்றாளாய், மலரைப்பறிக்கின்றவள் மயங்கி மொட்டைப் பறித்தாளெனவறிக. மெல்லியமொட்டுக்களைப்பறியாதொழி, இத்தன்மைய நறுமலரை நின்குழற்கணிதற்கு யான்கொணர்ந்தேனென்பதனான், இவ்வொழுக்கம் யானறியப்பட்டதுகாணென் றுடம்பாடு கூறியவாறாயிற்று. என்னையாய் கொணர்ந்தே னென்பதூஉம்பாடம். நின்றிடத்துய்த்து-இடத்துய்த்து நீக்கிநின்று. பெயர்ந்து-மீண்டுசென்று. ()

ஆடிடப்புகுதல்.

ஆடிடம்புகுதலென்பது-கொய்துவர்தமலருங்குழற்கணிந்து, இனி நின்சிறுமருங்குல்வருந்தாமல் மெல்லச்செல்வாயாகவெனத் தோழி தலைமகளையுங்கொண்டு ஆடிடம்புகாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அறுகானிறைமலராம்பானிறையணிந்தேனணியார் *
அறுகான்மலர்த்தொத்துத்தோகைதொல்லாயமெல்லப்புகுக *
சிறுகான்மருங்குல்வருந்தாவகைமிகவென்சிரத்தி *
னுறுகாற்பிறர்க்கரியோன்புலியூரன்னவொண்ணுதலே. (௱௨௩)

தனிவிளையாடிய தாழ்குழற்றோ ழி
பனிமதிநுதலியொ டாடிடம்படர்ந்தது.

(இ-ள்.) என்றலைக்கணுற்றகால் பிறர்க்குமிகவரியவனது புலியூரையொக்குமொண்ணுதலாய், அழகார்ந்த நெருங்கிய நறுநாற்றத்தையுடையமலர்க்கொத்துக்களை வண்டுகணிறைந்தமலரையுடைய நின்னைம்பாற்கண் நிறையவணிந்தேன், தோகையையொப்பாய், சிறியவிடத்தையுடைய மருங்குல் வருந்தாதவண்ணம் பழையதாகிய ஆயத்தின்கண் மெல்லப்புகுவாயாக. எ-று.

அறுகானிறைமலரையணிந்தேனென்றும், மலர்க்கொத்துக்களையுடைய தோகாயென்றும், உரைப்பாருமுளர். நிறையவென்பது குறைந்துநின்றது. காலென்னுஞ்சினை- பிறர்க்கரியோனென்னத்தன்வினைக்கேலாவெழுத்துக்கொண்டது. இவையிரண்டற்குமெய்ப்பாடு- பெருமிதம். பயன்-தலைமகளையாற்றாமைநீக்குதல். ()

தனிகண்டுரைத்தல்.

தனிகண்டுரைத்தலென்பது: தலைமகளையாயத்துய்த்துத் தலைமகனுழைச்சென்று, இஃதெம்மூர், இதன்கண்யாமருந்துந் தேனையுங்கிழங்கையு நீயுமருந்தி, இன்றெம்மோடுதங்கி, நாளைநின்னூருக்குப்போவாயாமெனவுலகியல்கூறுவாள்போன்று, வரைவுபயப்பகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

தழங்குமருவியெஞ்சிறூர்பெருமவிதுமதுவுங் *
கிழங்குமருந்தியிருந்தெம்மொடின்றுகிளர்ந்துகுன்றர் *
முழங்குங்குரவையிரவிற்கண்டேகுகமுத்தன்முத்தி *
வழங்கும்பிரானெரியாடிதென்றில்லைமணிநகர்க்கே. (௱௨௭)

வேயொத்ததோளியை யாயத்துய்த்துக்
குனிசிலையண்ணலைத் தனிகண்டுரைத்தது.

(இ-ள்.) பெரும, தழங்காநின்றவருவியையுடைய விஃதெமது சீறூர், இதன்கண் யாமருந்துந் தேனையுங்கிழங்கையு நீயுமருந்தி, இன்றெம்மோடுதங்கி, குன்றவரெல்லாருமெழுந்து முழங்குமிந்நிலத்து விளையாட்டாகிய குரவையையிரவிற்கண்டு, நாளை நினது நல்லநகர்க்கேகுவாயாக. எ-று. இயல்பாகவே முத்தன், முத்தியை பெற்பார்க்கு வழங்குமுதல்வன், ஊழித்தீயின்கணாடுவான், அவனது தெற்கின்கட்டில்லையாகிய மணிநகரெனக்கூட்டுக.

ஏற்பார்மாட்டொன்றுங்கருதாதுகொடுத்தலின் வழங்குமென்றார். உலகியல் கூறுவாள்போன்று ஒருகாணீவந்துபோந்துணையாயிவளாற்றுந்தன்மையளல்லளென்பதுபயப்பக்கூறி, வரைவுகடாயவாறு. மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-குறிப்பினாற்பிரிவாற்றாமைகூறிவரைவுகடாதல். (௱௨௭)

பருவங்கூறிவரவுவிலக்கல்.

பருவங்கூறிவரவுவிலக்கலென்பது - உலகியல்கூறுவாள்போன்றுகுறிப்பால்வரைவுகடாவி, இனியிவ்வாறொழுகாது வரைவொடுவருவாயாகவெனத் தலைமகளதுபருவங்கூறி, தலைமகனைத் தோழிவரவுவிலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

தள்ளிமணிசந்தமுந்தித்தறுகட்கரிமருப்புத் *
தெள்ளிநறவந்திசைதிசைபாயுமலைச்சிலம்பா *
வெள்ளிமலையன்னமால்விடையோன்புலியூர்விளங்கும் *
வள்ளிமருங்குல்வருந்துவபோன்றவனமுலையே. (௱௨௮)

மாந்தளிர்மேனியை வரைந்தெய் — ரா
தேந்தலிவ்வா றியங்கலென்ற — று.

(இ-ள்.) மணிகளைத்தள்ளிச் சந்தனமரங்களை நூக்கித் தறுகண்மையையுடைய யானையின் மருப்புக்களைக்கொழித்துத் தென்றிசைதோறும் பரக்கும் மலையையுடையசிலம்பனே, தனதுவெள்ளிமலையாகிய கயிலையையொக்கும் பெரியவிடையையுடையவனது புலியூர்போல விளங்குங்கொடிச்சியது மருங்குலை, நல்லமுலைகள் வளராநின்றபடியால், வருத்துவனபோன்றன, இனிவரைந்தெய்துவாயாக. எ-று.

சிலம்பனென்பது அதனையுடையனென்னும் பொருளோக்காது ஈண்டுப்பெயராய்நின்றது. புலியூர்புரையுமென்பதூஉம்பாடம். யாவருமறியாவிவ்வரைக்கண்வைத்த தேன் முதிர்ந்துக்கு அருவிபோன்றெல்லாருங்காணத் திசைதிசை பரந்தாற்போல, கரந்தகாமம் இவள் கதிர்ப்புவேறுபாட்டாற் புறத்தார்க்குப்புலனாய் வெளிப்படாநின்றதென உள்ளுறையுவமையாயினவாறு கண்டுகொள்க. மெய்ப்பாடு-அச்சம். இவ்வொழுக்கம் புறத்தாரறியினிவளிறந்துபடும், இறந்துபடவிவனுமிறந்துபடுமென்னு நினைவினனாதலால், பயன்-வரைவுகடாதல். (௱௨௮)

வரைவுடம்படாதுமிகுத்துக்கூறல்.

வரைவுடம்படாதுமிகுத்துக்கூறலென்பது-பருவங்கூறிவரைவுகடாயதோழிக்கு, அமராவதிக்கண்ணும் இம்மாதர்க்கொப்பில்லையென நான்முகன்பயந்தபிள்ளையை யான்வரையுந்துணையெளியளாக நீகூறுகின்றதென்னேவெனத் தலைமகன் வரைவுடம்படாது தலைமகளைமிகுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மாடஞ்செய்பொன்னகருந்நிகரில்லையிம்மாதர்க்கென்னப் *
பீடஞ்செய்தாமரையோன்பெற்றபிள்ளையையுள்ளலரைக் *
ஈடஞ்செய்தென்பிறப்புக்கெடத்தில்லைநின்றோன்கயிலைக் *
கூடஞ்செய்சாரற்கொடிச்சியென்றேநின்றகூறுவதே. (௱௨௯)

வரைவுகடாய வாணுதற்றோழிக் — கு
விரைமலர்த்தாரோன் மிகுத்துரைத்த — து.

(இ-ள்.) மாடமாகச்செய்யப்பட்ட பொன்னகராகிய அமராவதிக்கண்ணும்இம்மாதர்க்கொப்பில்லையென்றுசொல்லும்வண்ணம் பீடமாகச்செய்யப்பட்ட தாமரையையுடைய நான்முகன்பயந்த பிள்ளையைக் கயிலைமலைக்கட் கூடஞ்செய்யப்பட்ட சாரலிடத்து

வாழுங்கொடிச்சியென்றோ நீ நின்றுசொல்லுவது, இவ்வாறுசொல்லற்பாலையல்லை எ-று. தன்னை நினையாதாரைப் புழுக்களாகச்செய்து யான்றன்னை நினைவேனாகச்செய்து என்பிறப்புக்கெடத் தில்லைக்கணின்றவனது கயிலையெனக்கூட்டுக.

கூடமென்றது மன்றாகச்செய்யப்பட்ட தேவகோட்டத்தை. கூடஞ்செய்சாரலென்பதற்கு மரத்திரளாற்கூடஞ்செய்தாற்போலுஞ் சாரலெனினுமமையும். கூடஞ்செய்தாற்போலு முழைகளையுடைய சாரலெனினுமமையும். வரைவுடம்படாது மிகுத்துக்கூறியது. மெய்ப்பாடு-இளிவரல். பயன்-தலைமகனதுவிருப்புணர்த்துதல். (௱௨௯)

உண்மைகூறிவரைவுகடாதல்.

உண்மைகூறிவரைவுகடாதலென்பது- வரைவுடம்படாது மிகுத்துக்கூறியதலைமகனுக்கு, எங்களுக்குத் தாயுந்தந்தையுங்கானவர், யாங்கள்புனங்காப்போஞ் சிலர். நீர்வரைவுவேண்டாமையி னெம்மைப்புணர்ந்து கூறல்வேண்டுவதில்லையெனத் தோழி தங்களுண்மைகூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வேய்தந்தவெண்முத்தஞ்சிந் துபைங்கார்வரைமீன்பரப்பிச் *
சேய்தந்தவானகமானுஞ்சிலம்பதன்சேவடிக்கே *
யாய்தந்தவன்புதந்தாட்கொண்டவம்பலவன்மலையிற் *
றாய்தந்தைகானவரேனலெங்காவலித்தாழ்வரையே. (௱௩௰)

கல்வரைநாட னில்லதுரைப் ப
ஆங்கவருண்மை பாங்கிபகர்ந் தது.

(இ-ள்.)வேயுண்டாக்கிய வெள்ளியமுத்துக்கள் சிந்திய சோலைகளாற் பசிய கரியதாழ்வரை மீன்களைத் தன்கட்பரப்பிச் சேய்மையைப் புலப்படுத்திய வானிடத்தையொக்குஞ் சிலம்பையுடையாய், எமக்குத் தாயுந்தந்தையுந் தன்னுடைய சிவந்த திருவடிக்கே ஆராயப்பட்டவன்பைத்தந்து என்னையடிமைக்கொண்ட அம்பலவனது மலையிற்கானவரே, இத்தாழ்வரையினுண்டாகிய தினையெமதுகாவலாயிருக்கும், அதனானீவரைவுவேண்டாமையிற்புணர்ந்துகூறவேண்டுவதில்லை எ-று.

வினைமுதலல்லாத கருவிமுதலாயின அவ்வினைமுதல் வினைக்குச்செய்விப்பனவாமாதலில், பரப்பியெனச்செய்விப்பதாகக்கூறினார். சேவடிக்கே யன்புதந்தெனவியையும். மெய்ப்பாடு- பெருமிதம். பயன்- வரைவுகடாதல். (௱௩௰)

வருத்தங்கூறிவரைவுகடாதல்.

வருத்தங்கூறிவரைவுகடாதலென்பது- உண்மையுணர்த்து வரைவுகடாயதோழி, வரையாமைநினைந்து அவள்வருந்தாநின்றாள், வரைவென்று நினைக்க நீயிர்வருந்தாநின்றீர், இவ்வாறு நும்முள்ளம் மாறுபடநிகழ்தலின் இருவர்க்குமிடையே யான்வருந்தாநின்றே னெனத் தலைமகனுக்கு வருத்தங்கூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மன்னுந்திருவருந்தும்வரையாவிடினீர்வரைவென் *
றுன்னுமதற்குத்தளர்ந்தொளிவாடுதிரும்பரெலாம் *
பன்னும்புகழ்ப்பரமன்பரஞ்சோதிசிற்றம்பலத்தான் *
பொன்னங்கழல்வழுத்தார்புலனென்னப்புலம்புவனே. (௱௯௪)

கனங்குழைமுகத்தவன் மனங்குழைவுணர்த் தி
நிரைவளைத்தோளி வரைவுகடாய து.

(இ-ள்.) வரையாதொழியிற் பெரும்பான்மையுந் திருவையொப்பாள்வருந்துவள், நீயிர் வரைவென்று நினைக்குமதற்குமனந்தளர்ந்து மேனியொளிவாடாநின்றீர், இவ்வாறு நும்முள்ளம் மாறுபடநிகழ்தலின், யான் பொன்னையொக்குங்கழலைவாழ்த்தமாட்டாதாரறிவுபோலத் தனிமையுற்று வருந்தாநின்றேன். எ-று. அதிதற்கருமையான் உம்பரெல்லாமாராயும்புகழையுடையபரமன், எல்லாப்பொருட்கும் அப்பாலாகியவொளி, ஆயினும் அன்பர்க்கு இப்பாலாய்ச் சிற்றம்பலத்தின்கண்ணுமவன், அவனுடையபொன்னங்கழலெனக்கூட்டுக.

மன்னுமென்பது-ஓரிடைச்சொல். நிலைபெறுந்திருவென்றுரைப்பாருமுளர். முன்னர் இவட்குத்திருவையுவமங்கூறுதல் தக்கதன்றென்று, ஈண்டுவமித்ததென்னையெனின், ஆண்டுத்தெளியாமையிற்கூறலாகாமைகூறி, மக்களுள்ளாளென்று தெளிந்தபின்னர்க்கூறலாமென்பதனாற் கூறியதெனவுணர்க. பொன்னங்கழலென்பதற்குப் பொன்னானியன்றகழலையுடையதென அன்மொழித்தொகைப்படவுரைப்பினுமமையும். புலனென்னவென்பதற்குச்சுவைமுதலாகிய தம்பொருள்பெறாது வழுத்தாதாரைம்பொறியும்புலம்புமாறுபோலவெனினுமமையும். இருவருள்ளநிகழ்ச்சியுங்கூறுவாள்போன்று, தலைமகளாற்றாமைகூறி வரைவுகடாயவாறு. மெய்ப்பாடு-அச்சம். பயன்-வரைவுகடாதல். (௱௯௪)

தாயச்சங்கூறிவரைவுகடாதல்.

தாயச்சங்கூறிவரைவுகடாதலென்பது - வருத்தங்கூறிவரைவுகடாயதோழி, எம்முடையவன்னை அவள்முலைமுதிர்வுகண்டு இவள் சிற்றிடைக்கு ஒருபற்றுக்கண்டிலேமென்று அஞ்சாநின்றாள், இனிமகட்பேசுவார்க்கு மறுத்துகொடுக்கவுங் கூடுமெனத் தாயச்சங் கூறிவரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பனித்துண்டஞ்சூடும்படர்சடையம்பலவன்னுலகந் *
தனித்துண்டவன்றொழுந்தாளோன்கயிலைப்பயில்சிலம்பா *
கனித்தொண்டைவாய்ச்சிகதிர்முலைப்பாரிப்புக்கண்டழிவுற் *
றினிக்கண்டிலம்பற்றுச்சிற்றிடைக்கென்றஞ்சுமெம்மனையே. ()

மடத்தகைமாதர்க் கடுப்பனவறி யா
வேற்கட்பாங்கி யேற்கவுரைத்த து.

(இ-ள்.) பனியையுடைய துண்டமாகியபிறையைச்சூடும் பரப்பியசடையையுடையவம்பலவன், எஞ்சுவான்றனேயாய்த் தானல்லாத உலகமுழுதையுமுண்டவன்றொழுந் தாளையுடையவன், அவனது கயிலைக்கட்பயிலுஞ்சிலம்பனே, தொண்டைக்கனிபோலும் வாயையுடையாளுடைய கதிர்முலைகளது ஒருப்பாட்டைக்கண்டு, நெஞ்சழிந்து,எம்மன்னை இவள்சிற்றிடைக்குஇனியொருபற்றுக்கண்டிலமென்று,அஞ்சாநின்றாள், இனியடுப்பனவறியேன். எ-று.

துண்டம்-ஒருபொருளினதுகூறு. பாரிப்பு- அடியிடுதலெனினுமமையும். இளமைப்பருவம்புகுந்தமையான் மகட்கூறுவார்க்கு அன்னைமறாதே கொடுக்கும் நீமுற்பட்டு வரைவாயாகவென்று தோழியேற்கக்கூறியவாறு. மெய்ப்பாடு-அச்சத்தைச்சார்ந்தபெருமிதம். பயன்-செறிப்பறிவுறுத்து வரைவுகடாதல். (௱௩௨)

இற்செறிவறிவித்துவரைவுகடாதல்.

இற்செறிவறிவித்துவரைவுகடாதலென்பது-தாயச்சங்கூறிவரைவுகடாயதோழி,எம்மன்னை அவளையுற்றுநோக்கி, திருமலைக்கட்புறம்போய் விளையாடவேண்டாவெனக்கூறினாள், இனி யிற்செறிப்பாள்போலுமென,இற்செறிவறிவித்து வரைவுகடாவாநிற்றல்.அதற்குச்செய்யுள்.

நவிளையாடநறவிளைவோர்ந்தெமர்மால்பியற்றும் *
வேய்விளையாடும்வெற்பாவுற்றுநோக்கியெம்மெல்லியலைப் *

போய்விளையாடலென் றாளன்னையம்பலத் தான்புரத்திற் *
றீவிளையாடநின் றேவிளையாடி திருமலைக்கே. (௱௯௩)

விற்செறி நுதலி யை
யிற்செறி வுரைத்த து.

(இ-ள்.) தேவீக்கள்பரந்துவிளையாட அவற்றினது விளையாட்டாற் றேனினதுவிளைவையோர்ந்தறிந்து எம்முடையதமர் கன்னேணியைச்செய்யும்வேய்விளையாடும் வெற்பையுடையாய்,குறித்துநோக்கி அன்னை எம்முடையமெல்லியலைத் திருமலைக்கட் புறம்போய் விளையாடவேண்டாவென் றுகூறினாள்,இனியிற்செறிக்கும்போலும். எ-று. அம்பலத்தின்கண்ணான், முப்புரத்தின்கட் டீவிளையாடநின்று * ஏத்தொழிலால் விளையாடுவான்,அவனது திருமலையெனக்கூட்டுக.

எமர்மால்பியற்றும் வெற்பாவென்றதனால், தாமந்நிலத்துமக்களாதலும் அவன்றலைவனாதலுங்கூறினாளாம். போய்விளையாடலென் றாளென்பது பாடமாயின்,உற்றுநோக்கி இன்றுபோய்விளையாடுகவென்றாள் அக்குறிப்பால் நாளையிற்செறிப்பாள் போலுமெனவுரைக்க. ஈவிளையாட்டாற் றேன்விளைவையோர்ந்து எமர்மால்பியற்றுமாறுபோல,கதிர்ப்புவேறுபாட்டால் இவளுள்ளத்துக்கரந்ததோமமுணர்ந்து மேற்செய்வனசெய்யக் கருதாநின்றாளென உள்ளுறைகாண்க. இற்செறிவித்ததென்பது பாடமாயின், இன்னார் கூற்றென்னாது துறைகூறிற்றாகவுரைக்க. (௱௯௩)

தமர்நினைவுரைத்துவரைவுகடாதல்.

தமர்நினைவுரைத்து வரைவுகடாதலென்பது - இற்செறிவறிவித்துவரைவுகடாயதோழி,அவன்முலைதாங்கமாட்டாதிடைவருந்தவதனைக்கண்டு எமரிற்செறிப்பாராக நினையாநின்றார், அயலவருமகட்பேசநினையாநின்றாரெனத் தமர்நினைவுரைத்து வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சுற்றுஞ்சடைக்கற்றைச்சிற்றம்பலவற்றொழாதுதொல்சீர் *
கற்றுமறியலரிற்சிலம்பாவிடைநைவதுகண் *
டெற்றுந்திரையின்னமிர்தையினித்தமரிற்செறிப்பார் *
மற்றுஞ்சிலபலசீறார்பகர்பெருவார்த்தைகளே. (௱௯௪)

---

* ஏ-அம்பு.

விற்செறிநுதலியை யிற்செறிவிப்பரெ ன்
றொளிவேலவற்கு வெளியேயுரைத்த து.

(இ-ள்.) சிலம்பா, சுற்றப்பட்ட சடைத்திரளையுடைய சிற்றம்பலவனை முற்பிறவியிற்றொழாமையால் நூல்களைக் கற்றவைத்தும் அவனதுபழையபுகழையறியாதாரைப்போல, முலைதாங்கலில்லாதிடைவருந்துவதனைக்கண்டு, எற்றுந்திரையையுடையகடலிற்பிறந்தஇனியவமிர்தத்தையொப்பாளை இப்பொழுது தமர் இற்செறிப்பார், அதுவுமன்றி இச்சீறூரார் பகரப்படும் பெரியவார்த்தைகள் சிலபலவுள. எ-று.

எற்றுந்திரையென்பது சினையாகிய் தன்பொருட்கேற்ற வடை. யடுத்துநின்றதோராகுபெயர். இற்செறிப்பாரென்பது ஆரீற்று முற்றுச்சொல். வினைப்பெயரென்பாருஞ் செறிப்பரென்றுபாடமோதுவாருமுளர். சிலபலவென்பது பத்தெட்டுளவென்பது போலத் துணிவின்மைக்கண்வந்தது-சீறூர்ப்பகரென்பதுஉம்பாடம்.இவற்றிற்கு மெய்ப்பாடும் பயனும்-அவை. இவற்றுண்மேலைப்பாட்டிற் குறிப்பினானே செறிப்பறிவுறுத்தாள். (௱௨௪)

எதிர்கோள்கூறிவரைவுகடாதல்.

எதிர்கோள்கூறிவரைவுகடாதலென்பது- தமர்நினைவுரைத்து வரைவுகடாயதோழி, நீவரைவொடுவரின், அன்னையும் ஐயன்மாரும் அயலவரும் நின்வரவெதிர்கொள்ளாநிற்பர், இனிப்பலநினையாது பலருமறியவரைவொடுவருவாயாகவென எதிர்கோள்கூறிவரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வழியுமதுவன்னையென்னின்மகிழும்வந்தெந்தையுநின் *
மொழியின்வழிநிற்குஞ்சுற்றமுன்னேவயமம்பலத்துக் *
குழியும்பரோத்துமெங்கூத்தன்குற்றாலமுற்றும்மறியக் *
கெழியும்மவேடணைத்தோள்பலவெண்ணேகிளக்கின்றதே.(௱௨௫)

எற்றிழைத்தோழி யேந்தலைமுன்னி க்
கடியாமாறு நொடிகென்ற து.

(இ-ள்.) இவளை நீயெய்துதற்கு முறைமையும் வரைவுவேண்டுதலே, இவணலத்திற்குத்தக்கானோர்கணவனைவேண்டுவாளாகலின் நீ வரைவுவேண்டுமிடத்து அன்னையென்னைப்போலமகிழும். உலகியலான்மறுத்தகன்றுநின்றானாயினுந் தகுதிநோக்கிவந்து எந்தையுநின்மொழியைக்கடவாது அதன்வழியேநிற்கும், இவளோடுநின்னி

டைநிகழ்ந்தது குறிப்பானறிந்ததாகலின், நீவரைவுவேண்டுவதன் முன்னே சுற்றம் நினக்குவயமாயிருக்கும். பலசொல்லுகின்றதென், இரண்டு உம்பரானேத்தப்படும் அம்பலத்தின்கணுளனாகிய எம்முடையகூத்தனது குற்றாலமுழுதுமறியப்பொருந்திய உப்பனை வேயனைத்தோள்கள், ஐயுறவேண்டா. எ-று.

வழியுமென்னுமும்மை எச்சவும்மை, உபாயமாதலேயன்றி எ-று. எந்தையுமென்பது இறந்ததுதழீஇய வெச்சவும்மை. முன்னே வயமெனவேறுபடுத்துக்கூறுதலால், சுற்றமுமென வும்மை கொடாதுகூறினார். நலமுங்குலமு முதலாயினவற்றானொராராயினும், வடுவஞ்சி மீநாவரென்பதுபயப்ப, குற்றாலமுற்று மறியக்கெழீஇயவென்றார். கெழீஇயவென்பது கெழியெனக் குறைந்துநின்றது. நின்மொழியென்று உம்மவே என்றது "என்னீரறியாதீர் போலவிவைகூற, னின்னீரவல்லநெடுந்தகாய்" என்பதுபோலவுண்டும்பன்மையு மொருமையுமயங்கிநின்றன. குற்றாலமுற்று மறியக்கெழியென்பதற்கு மறைந்தொழுகாதெல்லாருமறிய வரைவொடு வருவாயாகவென் றுரைப்பாருமுளர். இப்பொருட்குக் கெழுமு வென்பதுவிகாரவகையாற்கெழியெனநின்றது. மெய்ப்பாடும்பயனும் அவை. வரைவின்கட்டலைமகனையொற்றுமை கொளுவுதலுமாம்.

தழங்குமருவியென்னும் பாட்டுத்தொட்டு இதன்காறும்வர இப்பாட்டொன்பதுஞ்செறிப்பறிவுறுத்துவரைவுகடாயினவென்பது இவையெல்லாந்தோழியிற்கூட்டமுந்தோழியிற் கூட்டத்தின்விகற்பமுமெனவறிக. (௱௧௫)

ஏறுகோள்கூறிவரைவுகடாதல்.

ஏறுகோள்கூறிவரைவுகடாதலென்பது - எதிர்கோள்கூறிவரைவுகடாயதோழி, எம்முடைய வையன்மார் அவளுடையமுலையின் பெருமையும் இடையின்சிறுமையுங்கண்டு எம்மூர்க்கணவிடையின்மருப்பைத்திருத்திவிட்டார் இனியடுப்பன வறியேனென ஏறுகோள்கூறி வரைவுகடாவாநிற்றல். ஈண்டுக்கூறுவானுகின்றது முல்லைத்திணையாகலின், அம்முல்லைத்திணைக்குமரபாவது, ஒரிடத்தொருபெண்பிறந்தால் அப்பெண்ணைப்பெற்றவர்தந்தொழுவில் அன்றுபிறந்த சேங்கன்றுள்ளனவெல்லாந் தன்னூட்டியாகவிட்டுவளர்த்து அப்பரிசினால்வளர்ந்த வேற்றைத்தழுவினொருவனுக்கு அப்பெண்ணைக்கொடுத்தல் மரபென்ப. அதற்குச்செய்யுள்.

படையார்கருங்கண்ணிவண்ணப்பயோதரப்பாரமுநுண் *
ணிடையார்மெலிவுங்கண்டண்டர்களீர்முல்லைவேலியெம்மூர் *
விடையார்மருப்புத்திருத்திவிட்டார்வியன்றென்புலியூ *
ருடையார்கடவிவருவதுபோலுமுருவினதே. (௱௧௬)

என்னையர் அணி
வின்ன தென்றது.

(இ-ள்.) படைக்கலம்போலுங் கரியகண்ணையுடையாளுடைய நிறத்தையுடையமுலைகளின்பாரத்தையும் அப்பாரத்தைத்தாங்கலுறுகின்ற நுண்ணியவிடையாரது மெலிவையுங்கண்டு,என்னையராகியவாயர் கரியமுல்லையாகிய வேலியையுடைய எம்மூரின்கண்விடையினது நிரப்பியமருப்பைத் திருந்தச்செய்துவிட்டார்கள். அவ்விடை அகன்றதென்புலியூரையுடையவர் செலுத்திவரும் விடைபோலுமுருவினையுடைத்து. இனியென்னிகழும், எ-று.

இயல்வதுமேற்கொள்ளாமையின் இடையாரெனவிழித்துக்கூறினள். முல்லையையுடைய வேலியெனினுமமையும். அவ்வேறுகோள்நிகழ்வதன்முன் வரைந்தெய்துவாராகவென்றவாறு. விடையார்மருப்புத்திருத்திவிட்டார் நினக்குற்றதுசெய்யென்பதனைக்கேட்டநத் தலைமகனுள்ளம்வாடினான், அஃதெற்றிற்கெனின், ஏறுதழுவிதகோடல்தங்குலத்திற்குமரபாகலானும்,தமக்குப்பொருவர் பொருவிபரொன்றுபெயராகலானும், அவ்வேற்றைத்தன்னின்முற்பட்டாரொருவன்றழுவவுந்தகுமென்றுள்ளம்வாடினான். அதனைத்தோழிகண்டு அவ்வேறு புலியூருடையார் கடவி வருவதுபோலுமுருவினதென்றாள், என்றது அதன்வெம்மை சொன்னவாறன்று, இவ்வொழுக்கம் புலியூருடையாரதருளான்வந்ததாகலின் அவ்வேறுநினக்கேவயப்படுவதன்றி மற்றொருத்தராலணுகுதற்கரிது, நீகடிதுவிரைந்துசெய் அஞ்சவேண்டாவென்றுளாயிற்று. இதுமுல்லைத்திணை. மெய்ப்பாடு-அது. பயன் -ஏறுகோளுணர்த்திவரைவுகடாதல். (௱௧௬)

அயலுரையுரைத்துவரைவுகடாதல்.

அயலுரையுரைத்துவரைவுகடாதலென்பது - ஏறுகோள்கூறிவரைவுகடாயதோழி, அயலவர் நாளைப்பொன் புனையப்புகுதாநின்றார், இதற்குத்தீவினையேன்சொல்லுவதென்னோவெனத் தான்முன்னிலைப்புறமொழியாகஅயலுரையுரைத்துவரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்,

உருப்பனையன்னகைக்குன்றொன்றுரித்துரவூரெரித்த *
நெருப்பனையம்பலத்தாதியையும்பர்சென்றேத்திநிற்குந்
திருப்பனையூரனையாளைப்பொன்னாளைப்புனைதல்செப்பிப் *
பொருப்பனைமுன்னின்றென்னோவினையேன்யான்புகல்வதுவே.

கயல்புரை கண்ணி யை
யயலுரை யுரைத்த து.

(இ-ள்.) வடிவுபனையையொக்குங்கையையுடையகுன்றொன்றை யுரித்து வலியையுடையவூர்களையெரித்த நெருப்பையுடையானை, அம்பலத்தின்கண்ணுளனாகிய வெல்லாப்பொருட்கு முதலாயவனை, உம்பர்சென்றுவாழ்த்திநிற்றற்கிடமாந்திருப்பனையூரையொப்பாளை அயலார்நாளைப்பொன்புனைதலைச்சொல்லித்தீவினையேனாகிய யான்முன்னின்று பொருப்பனைச்சொல்லுவதெவனோ. எ-று.

உரவூரெரித்தநெருப்பின்மேலேற்றுக.எரித்தநெருப்பனென்றசொற்களினாற்றலான், எரித்தது நெருப்பாமென்பது போதரும். புகல்வதென்றது வரைந்தெய்துவாயாகவென்று பின்சொல்லப்படுங்காரியத்தை இது சிறைப்புறம்.பொருப்பனென்பது முன்னிலைக்கண்வந்ததென்று தலைமகன் முன்னிலையாகக் கூறினாளெனினுமமையும். அயலுரை- தலைமகட்கியாதுமியைபில்லாதவுரை. அயலாரொருப்பட்டவுரையெனினுமமையும். மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தபெருமிதம். பயன்-வரைவுகடாதல். (௱௯௭)

தினைமுதிர்வுரைத்துவரைவுகடாதல்.

தினைமுதிர்வுரைத்துவரைவுகடாதலென்பது- அயலுரையுரைத்து வரைவுகடாயதோழி, இவ்வேங்கை,தினைப்புனங்கொய்கவென்று சோதிடஞ்சொல்லுதலைப்பொருந்தி யெம்மைக்கெடுவித்தது, இனிநமக்கேனல் விளையாட்டில்லையெனச் சிறைப்புறமாகத் தலைமகளோடுகூறுவாள்போன்று,தினைமுதிர்வுரைத்து வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மாதிடங்கொண்டம்பலத்துநின்றோன்வடவான்கயிலைப் *
போதிடங்கொண்டபொன்வேங்கைதினைப்புனங்கொய்கவென்று
தாதிடங்கொண்டுபொன்வீசித்தன்கள்வாய்சொரியநின்று *
சோதிடங்கொண்டிதெம்மைக்கெடுவித்ததுதூமொழியே. ()

ஏனல்விளையாட் டினியில்லையெ ன
மானற்றோழிமடந்தைக்குரைத்தது.

(இ-ள்.) தூயமொழியையுடையாய், மாதையிடப்பக்கத்துக்

கொண் டெல்லாருங்காண அம்பலத்தின்கணின்றபொருந்தாவொழுக்கத்தையுடையவனது வடக்கின்கணுண்டாகிய பெரியவகைகலைமலைக்கணுளதாகிய பொருப்பிடங்கொண்ட பொன்போலு மலரையுடையவேங்கை, தினைப்புனத்தைக் கொய்கவென்று தாதையிடத்தேகொண்டு, பொன்போலுமலரையெல்லார்க்குங்கொடுத்து, தனதுதேனைப்பூத்தவிடஞ்சொரியநின்று, சோதிடஞ்சொல்லுதலைப்பொருந்தி, இஃதெம்மைக்கெடுத்தது, இனியென்செய்தும். எ-று.

பொன்னைக்கொடுத்துப்பிறர்க்கடிமையாதலைப்பொருந்தித்தாளிழிந்தசாதியாதலாற்றனக்குரியகள்ளை வாய்சொரியநின்றெனச்சிலேடைவகையா னிழித்துக்கூறினாளாகவுமுரைக்க. சோதிடங்கொண்டு தெம்மைக்கெடக்கொண்டதென்பது பாடமாயிற் கெடக்கொண்டதென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீரவாய்க் கெடுத்ததென்னும்பொருள்பட்டு, எம்மையென்னுமிரண்டாவதனை முடித்தனவாகவுரைக்க. மெய்ப்பாடு-அழுகை. பயன் - செறிப்பறிவுறுத்தல். (௱௫௰௮)

பகல்வரல்விலக்கிவரைவுகடாதல்.

பகல்வரல்விலக்கிவரைவுகடாதலென்பது - இறைப்புறமாகத்தினைமுதிர்வுரைத்துவரைவுகடாயதோழி, எதிர்ப்பட்டுநின்று, இப்பெருங்கணியார் நமக்குநோவுதகப்பருவஞ்சொல்லுவர்ராயிருந்தார், எம்மையன்மார் இவர்சொற்கேட்டு இத்தினையைத் தடிவாராயிருந்தார். எமக்குமினித்தினைப்புனங்காவலில்லை, நீரினிப்பகல்வரல்வேண்டாவெனப் பகல்வரல்விலக்கி வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வடிவார்வயற்றில்லையோன்மலயத்துநின்றும்வருதேன் *
கடிவார்களிவண்டுநின்றலர்தூற்றப்பெருங்கணியார் *
நொடிவார்நமக்கினிநோதகயானுமக்கென்னுரைக்கேன் *
தடிவார்தினையெமர்காவேம்பெருமவித்தண்புனமே. (௱௫௰௯)

அகல்வரை நாடனைப்
பகல்வர லென்றது.

(இ-ள்.) அழகார்ந்தவயல்சூழ்ந்த தில்லையையுடையவனது பொதியிற்கணின்றுவைத்தும், நறுநாற்றத்தால்வாராநின்றதேன்களும், நாற்றத்தைத்தேருதெடிய களிவண்டுகளும், நின்று அலர்களைக்குடைந்தூற்ற, வேங்கையாகிய பெருங்கணியார் இப்பொழுது நமக்குநோவுதகப்பருவஞ்சொல்லுவாராயிருந்தார், யானுமக்கெ

ன்சொல்லுவேன், கணியார்சொல்லுதலால் எமர்தினையைக் கடிவா ராயிருந்தார். அதனால், பெரும, இத்தண்புனத்தையாமினிக்காவே ம், நீபகல்வரவேண்டா. எ-று.

வடிவார்தில்லையென்றியைப்பினுமமையும். மலயத்துவாழ்வார் பிறர்க்குவருத்தஞ்செய்பாராதலின், மலயத்துநின்றுமென்றும் மைகொடுத்தார். மலயத்துநின்றும் வருந்தேனென்றுரைப்பாரு முளர். இப்பொருட்கு வேங்கைமலயத்தையணைந்ததோரிடத்து நின்றநாகவுரைக்க. கடி-புதுமையுமாம். வண்டொழுங்கினது நெடுமைபற்றி வார்கணிவண்டென்றாள். இதுவுமதுவாகலான், அலர்தூற்றுமென்பதற்குத் தன்னோடுபயின்றாரைக் கண்ணோட்டமின்றிவருந்தாநின்றதென்று புறங்கூறவென்றுமுரைக்க. மெய்ப்பாடு-அது. பயன்-பகற்குறிவிலக்கல். (௱௫௩)

தினையொடுவெறுத்துவரைவுகடாதல்.

தினையொடுவெறுத்துவரைவுகடாதலென்பது-பகல்வரல்விலக்கி வரைவுகடாயதோழி, இத்தினைக்காவலீடாக நாமவனையெதிர்ப்படலாமென்றுநினைந்துதினையைவித்திக்காத்தோம், அதுபோய்த் தீவினையைவித்திக்காத்து அதன்விளைவையுமுண்டதாகி முடிந்ததெனச் சிறைப்புறமாகத் தினையொடுவெறுத்து வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

நினைவித்துத்தன்னையென்னெஞ்சத்திருந்தம்பலத்துநின்று *
புனைவித்தவீசன்பொதியின்மலைப்பொருப்பன்விருப்பிற் *
றினைவித்திக்காத்துச்சிறந்துநின்றேமுக்குச்சென்றுசென்று *
வினைவித்திக்காத்துவிளைவுண்டதாகிவிளைந்ததுவே. (௱௫௪)

தண்புனத்தோடு தளர்வுற்று ப்.
பண்புனைமொழிப் பாங்கிபகர்ந்த து.

(இ-ள்.) தானேவந்திருந்து திருத்தவேண்டுதலின் என்னெஞ்சத்துப்புகுந்திருந்து தன்னை யானினையும் வண்ணஞ்செய்து அம்பலத்தின்கட்டன்றிருமேனிகாட்டிநின்று என்னாற்றன்னைப் புகழ்வித்துக்கொண்ட ஈசனது பொதியின் மலைக்கணுளனாகியபொருப்பன்மேல்வைத்த விருப்பினாற் றினையைவித்தி அதனைக்காத்து உள்ளமலிந்துநின்ற எங்கட்கு அத்தினையை வித்திக்காத்த காவல் போய்த்தீவினையைவித்தி அதனைக்காத்து அதன்விளைவையுமுண்டதாகிமுடிந்தது. எ-று.

நினைவித்துத்தன்னையென்னெஞ்சத்திருந்தென்பதற்கு ஒருகாற்றலைநினைவேனாகவுஞ்செய்து அந்நினைவேபற்றுக்கோடாகத்தான்புகுந்திருந்தெனினுமமையும். பொருப்பன் விருப்பென்பதனை நீர்வேட்கைபோலக்கொள்க. தினைவித்தியஞான்று இத்தினைக்காவல் கலிக்கீடாக அவனையெதிர்ப்படலாமென்று மகிழ்ந்து அதற்குடம்பட்டாராகலிற் றும்வித்தினார் போலக்கூறினாள். புனத்தோடுதளர்வுற்று-புனத்தாற்றளர்வுற்று. (௩௪௰)

வேங்கையொடுவெறுத்துவரைவுகடாதல்.

வேங்கையொடுவெறுத்துவரைவுகடாதலென்பது- தினையொடுவெறுத்துவரைவுகடாயதோழி, இவ்வேங்கையரும்பிய ஞான்றே அரும்பறக் கொய்தேமாயின் இவர் இன்றுநம்மைக் கெடுப்பான் வேண்டி இத்தினைகெட முயலுமாறுமுண்டோ யாமது செய்யப்பெற்றிலேமென வேங்கையொடு வெறுத்து வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கனைகடற்செய்தநஞ்சுண்டுகண்டார்க்கம்பலத்தமிழ்தாய் *
வினைகெடச்செய்தவன்விண்டோய்கயிலைமயிலனையாய் *
நனைகெடச்செய்தனமாயினமைக்கெடச்செய்திடுவான் *
தினைகெடச்செய்திடுமாறுமுண்டோவித்திருக்கணியே. (௩௪௧)

நீங்குகவினி நெடுந்தகையென
வேங்கைமேல்வைத்து விளம்பியது.

(இ-ள்.) ஒலியாநின்ற கடலின்கணுண்டாக்கப்பட்ட நஞ்சையுண்டுவைத்து, அம்பலத்தின்கணின்று கண்டார்க்கு அமிழ்தமாய் நம்வினைகெடும்வண்ணஞ்செய்தவனது விண்ணைத்தோயாநின்ற கைலையின்மயிலையொப்பாய், அரும்பியஞான்றே நனையைக்கெடும்வண்ணஞ்செய்தேமாயின், நம்மைக்கெடுப்பான்வேண்டி இத்திருவாகிய கணி தினைகெடமுயலுமாறுமுண்டோ, யாமது செய்யப்பெற்றிலேம். எ-று.

கனைகடற்செய்தவென்றதனான் நஞ்சின்பெருமைகூறினார். செய்யாதநஞ்சிற்செய்தநஞ்சுகொடிதாகலின், அதன்கொடுமைவிளங்க, செய்தநஞ்சென்றார். அமிழ்தாதல்-அமிழ்தின்காரியத்தைச்செய்தல். கண்டார்க்கென்றதனான், அல்லாதவமிழ்தோடு இவ்வமிழ்திற்குவேற்றுமைகூறியவாறும். கெடச்செய்திடுவானென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீரவாய், கெடுப்பானென்னும்பொருள்பட்டு, ந

ண்மையென்று மிரண்டாவதற்குமுடிபாயின. வினைகெடச்செய்தவனென்பது முதலாயினவற்றிற்கு மிவ்வாறுரைப்பினுமமையும். திரு-சாதிப்பெயர். கணி-தொழிற்பெயர். நல்லகணியென்றிழித்துக்கூறினாராகவுரைப்பாருமுளர். (௱௪௧)

இரக்கமுற்றுவரைவுகடாதல்.

இரக்கமுற்றுவரைவுகடாதலென்பது - வேங்கையொடுவெறுத்துவரைவுகடாயதோழி, யாமவனையெதிர்ப்படலாமென்றின்புற்றுவளர்த்ததினைத்திரள் இப்புனத்தின்கணில்லாவாயிருந்தன, இனிநாமவனையெதிர்ப்படுமாறென்றோவெனச் சிறைப்புறமாகத் தலைமகனுக்கிரக்கமுற்று வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வழுவாவியலெம்மலையர்விதைப்பமற்றியாம்வளர்த்த *
கொழுவார்தினையின்குழாங்களெல்லாமெங்குழாம்வணங்குஞ் *
செழுவார்கழற்றில்லைச்சிற்றம்பலவரைச்சென்றுநின்று *
தொழுவார்வினைநிற்கிலேநிற்பதாவதித்தொல்புனத்தே. (௱௪௨)

செழுமலை நாடற்கு க்
கழுமலுற் றிரங்கிய து.

(இ-ள்.) விதைக்கும்பருவத்துங் கொய்யும்பருவத்தும் வழுவாதுசெய்யுமியல்பையுடைய எந்தமராகிய மலையர் விதைப்ப யாம் வளர்த்தகொழுவிய நெடிய தினையின்றிரட்களெல்லாம், எமதுகுழாஞ்சென்றுவணங்கும் வளவியநெடியகழலையுடைய தில்லையிற் சிற்றம்பலத்தையுடையானைச்சென்றுநின்றுதொழுவாருடையவினை அவர்கண் நிற்கிலே, இப்பழையபுனத்தினிற்பதாவது, இனிநில்லா. எ-று.

குழாங்களெல்லாநிற்பதாவதெனக்கூட்டுக. நிற்பதென்பது- நிற்றலென்னும்பொருட்டு. நிற்பதாவவென்பதுபாடமாயின், ஆவவென்பதிரங்கற்குறிப்பாகவுரைக்க. நிற்பவென்பதூஉம்பாடம். குழூவார்தினையென்பதூஉம்பாடம். (௱௪௨)

கொய்தமைகூறிவரைவுகடாதல்.

கொய்தமைகூறிவரைவுகடாதலென்பது - இரக்கமுற்றுவரைவுகடாயதோழி எதிர்ப்பட்டுநின்று, இப்புனத்துத்தினையுள்ளது இன்றுதொடர்பறக்கொய்தற்றது, எமக்குமினிப்புனங்காவலில்லை, யாமுமக்கறிவுசொல்லுகின்றேமல்லேம், நீரேயறிவீரெனத் தினைகொய்தமைகூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொருப்பர்க்கியாமொன்றுமாட்டேம்புகலப்புகலெமக்காம் *
விருப்பர்க்கியாவர்க்குமேலர்க்குமேல்வருமூரெரித்த *
நெருப்பர்க்குநீடம்பலவருக்கன்பர்குலநிலத்துக் *
கருப்பற்றுவிட்டெனக்கொய்தற்றதின்றிக்கடிப்புனமே. (௱௪௫)

நீடிரும்புனத்தினி யாமேடமென்று
வரைவுதோன்ற வுரைசெய்தது.

(இ-ள்.) எமக்குப்புகலிடமாதற்குக்காரணமாகியவிருப்பத்தை புடையவர்க்கு, எல்லார்க்குமேலாயவர்க்கு, ஆகாயத்தின்கட்செல் லுமூர்களையெரித்த நெருப்பையுடையவர்க்கு, நிலைபெற்றவம்ப லத்தையுடையவர்க்கு அன்பராயினாருடையகுலங்கள் உலகத்துப் பிறவிக்காரணத்தைப்பற்றுவிட்டகன்றாற்போல, இக்காவலையுடை யபுனம் இப்பொழுதுதொடர்பறக்கொய்தற்றது, அதனாற்பொ ருப்பர்க்கியாமொன்றுஞ்சொல்லமாட்டேம். எ-று.

யாமொருகுறையுமிலேமாயினுந் தமதுவிருப்பினாலெமக் குப்புகலிடமாயினாரொன்றுங்கருத்தால், புகலெமக்காம்விருப்பர் க்கென்றார். எம்மால்விரும்பப்படுவார்க்கென்பாருமுளர். வீடெ னவென்பதூஉம்பாடம். (௱௪௫)

பிரிவருமைகூறிவரைவுகடாதல்.

பிரிவருமைகூறிவரைவுகடாதலென்பது- கொய்தமைகூறிவரை வுகடாயதோழி, இப்புனத்துப்பயின்றகிளிகள், தமக்குத்துப்பா காக்காலத்துந் தினைத்தாளைவிடாதிராநின்றன, நாம்போனால் நங்கா தலரிவ்விடத்தேவந்துநின்று நம்மைத்தேடுவர்கொல்லோவெனச் சிறைப்புறமாகப்பிரிவருமைகூறி வரைவுகடாவாநிற்றல். அதற்கு ச்செய்யுள்.

பரிவுசெய்தாண்டம்பலத்துப்பயில்வோன்பரங்குன்றின்வா *
யருவிசெய்தாழ்புனத்தைவணங்கொய்யவுமிவ்வனத்தே *
பிரிவுசெய்தாலரிதேகொள்கபேபொடுமென்னும்பெற்றி *
யிருவிசெய்தாளினிருந்தின்றுகாட்டுமிளங்கிளியே. (௱௪௬)

மறைப்புறக்கிளவியிற்
சிறைப்புறத்துரைத்தது.

(இ-ள்.) எம்மைப்பரிந்தாண்டு, அம்பலத்தின்கட்பயில்வானது பரங்குன்றினிடத்து அருவிநீராற்செய்யப்பட்ட தாழ்ந்தபுனத்தி ன்கணுண்டாகிய ஐவனத்தைக்கொய்யவும், இக்காட்டின்கண் இரு

வியாகச்செய்யப்பட்ட தாளிலேயிருந்து, நட்புச்செய்தாற் பேயோடாயினும் பிரிவரிது இதனையுள்ளத்துக்கொள்கவென்னுந்தன்மையை இளங்கிளிகள் இப்பொழுதுகாட்டாநின்றன எ-று.

பேயோடாயினும் பிரிவுசெய்தாலாற்றுதலரிதென் றனைப்பி னுமல்மயும். இருவியென்பது-கதிர்கொய்ததட்டை. தாளென்பது-கதிர்கொய்யாதமுன்னுஞ்சொல்வதோர்பெயர். இப்புனத்துப்பயின்றகிளிகள் தமக்குத் துப்பாகாக்காலத்து மிதனைவிடாதிராநின்றன இனிநங்காதலர் நம்மாட்டென் செய்வதொன்றுங் கருதான், மறைப்புறமாயித்து. சிறைப்படவுரைத்ததென்பதுபாடமாயின், சிறைக்கண்வந்துநிற்பவென்றுரைக்க. (௱௪௪)

மயிலொடுகூறிவரைவுகடாதல்.

மயிலொடுகூறிவரைவுகடாதலென்பது - பிரிவருமைகூறிவரைவுகடாயதோழி, பிரிவாற்றாமையோடு தலைமகளையுங்கொண்டு புனங்காவலேறிப்போகாநின்றாள், கணிபார்த்தினைவு இன்றுமுடிந்தது, பாங்கள்போகாநின்றேம், இப்புனத்தொருவர்வந்தால் இங்குநின்றும்போனவர்கள் துணிபாதன 'துணிந்துபோனாரென்று அவர்க்குச்சொல்லுமினென மயிலொடுகூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கணிபார்கருத்தின்றுமுற்றிற்றியாஞ்சென்றுங்கார்ப்புனமே *
மணியார்பொழில்காண் மறத்திர்கனைவூர்மன்னுமம்பலத்தோ *
ன்னணியார்கயிலைமயில்காளயில்வேலொருவர்வந்தாற் *
றுணியாதனதுணிந்தாரென்றுநீர்மைகள்சொல்லுமினே. (௱௪௫)

நீக்கருநம்புனம்விடு நீள்பெருந்துயர ம்
பாங்கிபகர்ந்து பருவாலுற்ற து.

(இ-ள்.) கணிபார்த்தநினைவு இன்றுமுடிந்தது, யாங்கள் போகாநின்றேம், காரிபுனமே, மணிகளார்ந்தபொழில்காள், வேங்கையொடுபயின்றீராகலின் நீரெம்மைமறப்பீர், நிலைபெறு மம்பலத்தையுடையவனது அழகார்ந்தகலையினின்றும்வந்தமயில்காள், அயில்வேல் துணைபாகத்தனிவருமவர் ஞன்றுவந்தால், அன்புடையார் துணிபாதனவற்றை அவர்துணிந்தாரென்றுநீர்மைகளை யவர்க்குச்சொல்லுமின். எ-று.

நீர்மை-நன்றுவியப்பு. நீரிவ்வாறுசொன்னால் அவராற்றுவாரென்பதுகருத்து. போருளினேன் கைலையினுள்ளீராகலின் நீர்கண்ணோட்டமுடையீரென்பதுகருத்து. கார்ப்புனமென்பதற்குக்கா

ர்காலத்துப்பொலியும் புனமெனினுமமையும். அணியாதனவாவன பிரிதலும், வரையுந்துணையுமாற்றியிருத்தலும். புனமே பொழில்காள் மயில்காள் என்றுகூட்டி, நீரெம்மைமறப்பீராயினும் மறவாதுசொல்லுமினென் றுரைப்பாருமுளர். இவையாறற்கும் மெய்ப்பாடும் பயனும்-அவை. (௱௪௫)

வறும்புனங்கண்டுவருந்தல்.

வறும்புனங்கண்டுவருந்தலென்பது-தலைமகளுந்தோழியும்புனங்காவலேறிப்போகாநிற்ப,தலைமகன்புனத்திடைச்சென்றுநின்று, இப்புனம் யாமுன்பயின்றதன்றோ, இஃதின்றிருக்கின்றவாறென்னோவென்று,அதன்பொலிவழிவுகூறித்தலைமகளைத்தேடிவருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொதுவினிற்றீர்த்தென்னையாண்டோன்புலியூரரன்பொருப்பே
யிதுவெனிலென்னின்றிருக்கின்றவாறெம்பிரும்பொழிலே *
யெதுநமக்கெய்தியதென்னுற்றனிரறையீண்டருவி *
மதுவினிற்கைப்புவைத்தாலொத்தவாமற்றிவ்வான்புனமே(௱௪௬)

மென்புனம்விடுத்து மெல்லியல்செல்ல
மின்பொலிவேலோன் மெலிவுற்றது.

(இ-ள்.) அதுவோவிதுவோவழியென்றுமயங்கிப் பொதுவாக நின்றநிலைமையைநீக்கி என்னையாண்டவன், புலியூரிலரன்' அவனது பொருப்பாய் யான்முன் பயின்றவிடமேயாயின் இஃதின்றிருக்கின்றவாறென், எம்முடையபெரியபொழிலே, நமக்குத்தான் இன்றுவந்ததியாது! நீரென்னுற்றீர்! இதுவேயுமன்றி இப்பெரிய புனம் ஒலியாநின்ற பெருகியவருவியாய்வீழும் மதுவின்கண் அதனின்சுவையைமாற்றிக்கைப்பாகியசுவையைவைத்தாலொத்தவாறென்! எ-று.

மற்றென்பதசைநிலை. எல்லாரையுமாளும் பொதுவாகியமுறைமையினின்றுநீக்கி என்னை யுளநெகிழ்விப்பதோருபாயத்தானாண்டவனென்றுரைப்பினுமமையும். இன்பஞ்செய்வதுந் துன்பஞ்செய்வது மொன்றாகமாட்டாதென்னுங் கருத்தாற் புலியூரரன் பொருப்பேயிதுவெனிலென்றான். அறையீண்டருவிகாள் நீரென்னுற்றீரென்றும், அறையீண்டருவிப்புனமென்றும், உரைப்பாருமுளர். (௱௪௭)

பதிநோக்கிவருந்தல்.

பதிநோக்கிவருந்தலென்பது-வறும்புனத்திடைவருந்தாநின்ற தலைமகன், இவ்வாறணித்தாயினும் நம்மாற்செய்பலாவதொன்றில் லையென்று அவளிருந்தபதியைநோக்கித் தன்னெஞ்சோடுசாவிவ ருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஆனந்தமாக்கடலாடுசிற்றம்பலமன்னபொன்னின் *
றேனுந்துமாமலைச்சீறூரிதுசெய்பலாவதில்லை *
வானுந்துமாமதிவேண்டியழுமழப்போலுமன்றே *
நானுந்தளர்ந்தனனீயுந்தளர்ந்தனை நன்னெஞ்சமே. (௱௬௭)

மதிநுதலரிவை பதிபுகலரிதெ ன
மதிநனிகலங்கிப் பதிமிசைவாடிய து.

(இ-ள்.) ஆனந்தமாகிய நீராணிறைந்ததோர் பெரியகடல் நின் றாடுஞ் சிற்றம்பலத்தையொக்கும் பொன்னினதுதேன்றத்திப்பா யும்பெரியமலைக்கணுண்டாகியசீறூரிது, இவ்வாறணித்தாயினுநம் மாற்செய்யலாவதொன்றில்லை. அதனால் வானின்கட்செல்லும்பெ ரியமதியைக்கொள்ளவேண்டி அதனருமையறியாதழுங்குழவி போல எய்துதற்கரியாளைவிரும்பி, நல்லநெஞ்சமே, நீயுந்தளர்ந் தாய், நீயவ்வரும்பொருள்விரும்புதலான்யானுந்தளர்ந்தேன்-எ-று

தேனையுமிழுமாமலையெனினு மமையும். மழவை நெஞ்சத்திற் கேயன்றித் தலைமகற்குவமையாக வுரைப்பினுமமையும். நெஞ்ச த்தைத்தன்னோடுபடுத்தற்கு நன்னெஞ்சமெனப் புனைந்துகூறினா ன். இதுதலைமகளை இற்செறிவிக்கின்றகாலத்து ஆற்றானாகியதலைம கன்றோழிகேட்பத் தன்னெஞ்சிற்குச்சொல்லியது. மன்னுமோ வுமசைநிலை. பதி-தலைமகன். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு- அ ழுகை. பயன்-ஆற்றாமைநீங்குதல். (௱௬௭)

பகற்குறிமுற்றிற்று.

இ ர வு க் கு றி.

இரவுக்குறிவருமாறு—பகற்குறிபுணர்ந்து விலக்கப்பட்டதலை மகன் தெருண்டுவரைதறலை. தெருளானாயிற்பின்னையுந்தோழியை த்தலைப்பட்டு இரவுக்குறிவேண்டிச்சென்று எய்துதன்முறைமை யென்ப. என்னை "களவினுட் டவிர்ச்சி கிழவோற் கில்லை" என்று ராகலின்,

சூத்திரம். இரவுக்குறிவேண்ட லாற்றருமைகூற, னின்றுநெஞ்சுடைத னிலைகண்டுநேர்த, லுட்கோள்வினுத லுட்கொண்டுவினுதல்,குறியிடங்கூறல் குறியேற்பித்த, லிரவரவுரைத்த லேதங்கூறல், குறைநேர்தலோடு குறைநயப்புரைத்தல்,பயின்மேவிசைத்துவரவுணர்ந்துரைத்த, றாய்துயிலறித றலைவிதுயிலெடுத்த,லிடத்துய்த்துநீங்க றளர்வகன்றுரைத்தல், மருங்கணைதலோடு முகங்கண்டுமகிழ்தல்,பள்ளியிடத்துய்த்தல் பள்ளியிடத்துய்த்து, வரைவுகடாவிவரவுவிலக்கல், வரைவுடம்படா தாற்றுதுரைத்த, லதரிடைச்செலவிற் கிரக்கங்கூற,லிருளறநிலவு வெளிப்படவருந்தல், வேற்றுக்குறிகூறல் கடலிடைவைத்துத், துயரறிவித்த லொழிபுயின்றித், தானேகிடந்து தனிமையுற்றுற்றுங், காமமிக்க கழிபடர்கிளவி,காப்புச்சிறைமிக்க கையறுகிளவி, யாறுபார்த்துற்ற வச்சக்கிளவி,தன்னுட்கையா றெய்திடுகிளவி, நிலைகண்டுரைத்த னெடுங்கடற்சேர்த்த,லலரறிவித்தலோ டாறைம்மூன்று,மிரவுக்குறியிவை யென்றிசினோரே.

(இ-ள்.) இரவுக்குறிவேண்டல்- வழியருமைகூறிமறுத்தல்-நின்றுநெஞ்சுடைதல்- இரவுக்குறிநேர்தல்- உட்கோள்வினுதல் - உட்கொண்டுவினுதல்-குறியிடங்கூறல்-இரவுக்குறியேற்பித்தல்- இரவரவுரைத்தல்-ஏதங்கூறிமறுத்தல்- குறைநேர்தல்-குறைநேர்ந்தமைகூறல்- வரவுணர்ந்துரைத்தல்- தாய்துயிலறிதல்- துயிலெடுத்துச்சேறல்-இடத்துய்த்துநீங்கல்-தளர்வகன்றுரைத்தல்-மருங்கணைதல்-முகங்கண்டுமகிழ்தல்-பள்ளியிடத்துய்த்தல்-வரவுவிலக்கல்-ஆற்றாதுரைத்தல்-இரக்கங்கூறிவரைவுகடாதல்- நிலவுவெளிப்படவருந்தல்-அல்லகுறியறிவித்தல்-கடலிடைவைத்துத்துயரறிவித்தல்-காமமிக்ககழிபடர்கிளவி- காப்புச்சிறைமிக்ககையறுகிளவி- ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி- தன்னுட்கையாறெய்திடுகிளவி - நிலைகண்டுரைத்தல்- இரவுறுதுயரங் கடலோடுசெர்த்தல் - அலரறிவுறுத்தல்-என விவை முப்பத்துமூன்றுமிரவுக்குறியாம். எ-று. அவற்றுள்,

இரவுக்குறிவேண்டல்.

இரவுக்குறிவேண்டலென்பது - பதிநோக்கிவருந்தா நின்றதலைமகன்,இற்றையிரவிற்கியானுங்கள்சீறூர்க்குவிருந்து என்னையேற்றுக்கொள்வாயாகவெனத் தோழியையிரவுக்குறி வேண்டாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மருந்துநம்மல்லற்பிறவிப்பிணிக்கம்பலத்தமிர்தா *
யிருந்தனர்குன்றினின்றேங்குமருவிசென்றேர்திகழப் *

பொருந்தினமேகம்புகைந்திருநேங்கும்புனையிறும்பின் *
விருந்தினன்யானுங்கள்சீறூர்தனுக்குவெள்வளையே. (௱௪௫)

நள்ளிருட்குறியை வள்ளனினைந் தது
வீங்குமென்முலைப் பாங்கிக்குரைத்த து.

(இ-ள்.) வெள்வளையையுடையாய், குன்றின்கணின்றொலிக்குமருவிகள் பாய்ந்தழகுவிளங்கும்வண்ணம்மேகம்வந்துபொருந்தின. அதனால் அம்மேகத்தின்கட்புகைந்திருள்செறியுஞ் செய்காட்டையுடைய நமதுசீறூர்தற்கியான்விருந்தினன்; எல்லையேற்றுக் கொள்வாயாக. எ-று. நம்முடையவல்லலைச் செய்யும்பிறவியாகிய பிணிக்கு அருந்துமருந்தாய்வைத்தும் அம்பலத்தின்கட் சுவையாரமிர்தமுமா யிருந்தவரது குன்றினெனக்கூட்டுக.

மேகம்வந்துபொருந்தினவென்றதனால், தன்னூர்க்குப் போதலருமைகூறுவான்போன்று இரவுக்குறிமாட்சிமைப்படுமென்றானும். இருநேங்கும் புனையிறும்பென்றதனால், யாவருங்காணாராகலினுண்டுவந்துநிற்கின்றேனென்றானும். மாலைவிருந்தினரை மாற்றுதலறனன்றென்பது தோன்ற விருந்தினனென்றான். குன்றினின்றோங்கு மருவியேர்திகழச்சென்றுபொருந்தினமேகமென்க. அருவியேர்பெற மேகம்பொருந்தினவூர் நின்னூராகலான் என்வினைப்பற்றுயானு மேர்பெற நின்னைவந்துசேர்ந்தேனென்பது போதரும். மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - இரவுக்குறிநேர்வித்தல். (௱௪௫)

வழியருமைகூறிமறுத்தல்.

வழியருமைகூறிமறுத்தலென்பது-தலைமகனிரவுக்குறிவேண்டிநிற்ப, யாங்கள்வாழும்பதி ஏற்றிழிவுடைத்தாகலின் அவ்விடத்துநினக்குச்சிந்தைக்கு மேறற்கரிதெனத் தோழி வழியருமைகூறி மறுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

விசும்பினுக்கேணிநெறியன்னசின்னெறிமேன்மழைதூங் *
கசும்பினிற்றுன்னியளைநுழைந்தாலொக்குமையமெய்ய *
யிசும்பினிற்சிந்தைக்குமேறற்கரிதெழிலம்பலத்துப் *
பசும்பனிக்கோடுமிலைந்தான்மலயத்தெம்வாழ்பதியே. (௱௪௬)

இரவரலேற்றல் கருதியுரைப்ப ப்
பருவரற்பாங்கி யருமையுரைத்த து.

(இ-ள்.) ஐயனே, விசும்பிற்கிட்டதோ ரேணிநெறிபோலுஞ்சி

றுநெறிமேல் மழையிடையறாதுநிற்றலான், இடையிடையுண்டாகிய அசும்பின்கட்சென்றுபொருந்தியேறுமிடத்து இட்டிமையால் அளறுமழைந்தாற்போன்றிருக்கும். அதுவேயுமன்றி எம்வாழ்பதியொழுக்கினான் மெய்யே சிந்தைக்குமேறுதற்கரிது. அதனாலான் மேவாத்தகாது. எ-று எழிலையுடைய வம்பலத்தின்கணுளனாகிய குளிர்ந்தபனிமையுடைத்தாகிய பிறையைச்சூடியவனது மலயத்தின்கணுண்டாகியவெம்வாழ்பதியெனக்கூட்டுக.

இசம்பு-எற்றிழிவுமுதலாயின குற்றமென்பாருமுளர். அசும்பு-சிறுதிவலை இசும்பினிற்சிந்தைக்குமேறற்கரிதென்றவதனான், எமதுவாழ்பதியிவ்வொழுக்கத்தைச் சிறிதறியுமாயிற்சிந்தையாலுநினைத்தற்கரிய துயரத்தைத்தருமாதலால், தாஞ்செத்துலகாள்வாரில்லை அதுபோல விவ்வொழுக்கமொழுகற்பாலீரல்லீரென்றுமறுத்துக்கூறியவாறாயிற்று. பசுமை-செவ்வியுமாம். அதனைக்கோட்டின்மேலேற்றுக. கோட்டையுடைமையாற்கோடெனப்பட்டது. மெய்ப்பாடு-இளிவரல். பயன்-இரவுக்குறிமறுத்தல். (௩௪௯)

நின்றுநெஞ்சுடைதல்.

நின்றுநெஞ்சுடைதலென்பது-வழிபருமைகூறக்கேட்டதலைமகன், எய்துதற்கரியாளைவிரும்பி நீமெலியாநின்றவிதற்கு யானாற்றேனெனக்கூறி, தனதிறந்துபாடுதோன்றநின்று தன்னெஞ்சுடைந்துவருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மாற்றேனெனவந்தகாலனையோலமிடவடர்த்த *
கோற்றேன்குளிர்தில்லைக்கூத்தன்கொடுங்குன்றினீள்குடுமி *
மேற்றேன்விரும்புமுடவனைப்போலமெலியுநெஞ்சே *
யாற்றேனரியவரிவைக்குநீவைத்தவன்பினுக்கே. (௩௫௰)

பாங்கிவிலக்கப் பருவரைநா ட
னீங்கிவிலங்காது நெஞ்சுடைந்த து.

(இ-ள்.) ஒருவரானு மாற்றப்படேனென்று வழிபடுவோனதுயிரைவௌவ வந்தகாலனை அவனோலமிடும்வண்ணமடர்த்த கோற்றேன், குளிர்ந்ததில்லைக்கணுளனாகிய கூத்தன், அவனுடைய கொடுங்குன்றினது நீண்டகுடுமியின்மேலுண்டாகிய தேனைவிரும்பு முடவனைப்போல எய்துதற்கருமையை நினையாது மெலிகின்றநெஞ்சமே, அரியளாகியவரிவையிடத்து நீயுண்டாக்கிய அன்பால் யானாற்றேன். எ-று.

மாற்றேனென்பது செயப்படுபொருட்கண்வந்தது. மாறேனென்பது விகாரவகையான் மாற்றேனென நின்றதெனினுமமையும். சுவைமிகுதியுடைமையிற் கோற்றேனென்றார். நீவன்கண்மையையாதலின் இவ்வாறுமெலிந்துமுயிர்வாழ்கி, யானத்தன்மையேனல்லேன் இறந்துபடுவேனென்னுங்கருத்தான், மெலியுநெஞ்சேயாற்றேனென்றான். நீங்கிவிலங்காது-நீங்கியுள்ளஞ் செல்கின்ற செலவினின்றும்விலங்காது மெய்ப்பாடு-இளிவரல். பயன்-இரவுக்குறிநயப்பித்தல். (௱௫௰)

இரவுக்குறிநேர்தல்.

இரவுக்குறிநேர்தலென்பது-தலைமகனெஞ்சுடைந்து வருந்தாநிற்பக்கண்டு, இவனிறந்துபடவுங்கூடுமெனவுட்கொண்டு, நீயாளிகணிரைத்துநின்றியானைகளைத்தேடுமிராவழியின்கண்வந்து மீள்வேனென்றுநின்றாய். இதற்குத்தீவினையேன்சொல்லுவதெவனோவென்றுமறுத்த வாய்பாட்டாற்றோழியிரவுக்குறிநேராநிற்றல். அதற்குச்செய்யுள்.

கூளிநிரைக்கநின்றம்பலத்தாடிகுரைகழற்கீழ்த் *
தூளிநிரைத்தசுடர்முடிபோயிவடோணசையா *
லாளிநிரைத்தடலானைகடேருமிரவில்வந்து *
மீளியுரைத்திவினையேனுரைப்பதென்மெல்லியற்கே. (௱௫௧)

தடவரைநாடன் றளர்வுதீர
மடநடைப்பாங்கி வகுத்துரைத்தது.

(இ-ள்.) கூத்தின்கட்சுவையாற் பேய்களும்போகாது நிரைத்து நிற்ப நின்று அம்பலத்தின்கணாடுவானது ஒலிக்குங்கழலையுடைய திருவடிக்கணுண்டாகிய தூளிமொய்த்த சுடர்முடியையுடையோய், இவடோண்மேலுண்டாகிய விருப்பினால் ஆளிகள் ஊடுபோக்கறநிரைத்துவலியையுடையயானைகளைத்தேடுமிரவின்கண் வந்துமீளுதலைச்சொல்லாநின்றாய். இனி மெல்லியற்குத் தீவினையேன்சொல்லுவதென்? உடம்படுவாயென்பேனோ மறுப்பாயென்பேனோ. எ-று.

இரவுக்குறியுடம்பட்டாளாகலின், தூளிநிரைத்த சுடர்முடியோயென்றதனால், அவ்வாயிருளின்வருதலான்வருமேதத்தை அத்தூளிகாக்குமென்றாகூறினாளாம். குரைகழல்-அன்மொழித்தொகை. மருடல்வெருடலென்பன-மருளி வெருளியெனநின்றாற்போல, மீடலென்பது மீளியெனநின்றது. வந்துமீளியென்பதற்கு, வந்து

மீடலைப்புணடப் பிரவுக்குறியென்றுரைப்பாருமுளர். உடம்படவு மறுக்கவுமாட்டாதிடைநின்று வருந்துதலின், வினையேனென்றுள். ஆளிநிரைக்குமாற்றின்கண் நீவருதற்குடம்படுதேறகாதாயினுந் தோணலசயாற்கூறுகின்ற விதனைமறுப்பின் நீ யாற்றாயென்பது றூலுடம்படாநின்றேனென்பதுபடக் கூறினமையால், வருத்துரைத்தலாயிற்று. மெய்ப்பாடு-அச்சம். பயன்-இரவுக்குறிநேர்தல். இறந்தகாலவுட்கோள் குறிப்புருட்பம். (௱௫௧)

உட்கோள்வினுதல்.

உட்கோள்வினுதலென்பது - இரவுக்குறிநேர்ந்ததோழி, தங்கணிலத்துமக்கள் கோலத்தனுய்வருதற்கு அவனுட்கொள்வது காரணமாக, நின்னூரிடத்தார் எம்மலர்சூடி எச்சாந்தணிந்து எம்மரநிழலின்கீழ் விளையாடுபவெனத் தலைமகனைவினுவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வரையன்றொருகாலிருகால்வளையநிமிர்த்துவட்கார் *
நிரையன்றழலெழவெய்துநின்றோன்றில்லையன்னநின்னூர் *
விரையென்னமென்னிழலென்னவெறியுறுதாதிவர்போ *
துரையென்னவோசிலம்பாநலம்பாவியொளிர்வனவே. (௱௫௨)

நெறிவிலக்குற்றவ னுறுதுயர்நோக் கி
யாங்கொருகுழல் பாங்கிபகர்ந்த து.

(இ-ள்.) சிலம்பா, நின்னூரின் நலம்பரந்து விளங்குவனவாகிய ஆண்டையார் பூசும்விரையெத்தன்மைய? அவர்விளையாடுமெல்லியநிழலெத்தன்மைய? அவர்சூடுநறுநாற்றம்பொருந்தியதாதுபரந்தபோதுகளெத்தன்மைய? உரைப்பாயாக. எ-று. அன்றொருகால்வரையையிரண்டுகாலும்வளையும்வண்ண மார்பையுந்தோளையுநிமிர்த்துப் பகைவரதுநிரையைபழலெழும்வகை யன்றெய்துநின்றவனது தில்லையையொக்குநின்னூரெனக்கூட்டுக.

மெல்லியநிலத்தையுடையநிழலைமென்னிழலென்றாள். நலம்பாவியொளிர்வனவென்பதனை யெல்லாவற்றோடுங்கூட்டுக. அன்றுநிமிர்த்தெனவும், அன்றெய்துநின்றோனெனவுமியையும். இது குறிப்பெச்சம். வன்றழலென்பது உம்பாடம். இவ்வாறுவினவத் தலைமகனென்றனையுட்கொள்ளுமென்றுகருதிக் கூறினமையால், ஆங்கொருகுழலென்றார். மெய்ப்பாடு-பெருமிதம். பயன் - தலைமகற்குக் குறியிடமுணர்த்துந் தோழி யவனுற்றன்னை விலைவுவித்தல். (௱௫௨)

உட்கொண்டுவினாதல்.

உட்கொண்டுவினாதலென்பது - கேட்டவினாவையுட்கொண்டு அந்நிலத்துமக்கள் கோலத்தனாய்ச்செல்வானைத், நின்னூரிடத்து இராப்பொழுதுநுமர் எம்மலரைச்சூடி எச்சாந்தையணிந் தெவன்னமரநிழலின்கீழ்விளையாடுபவெனத் தலைமகள் றோழியைவினாவா நிற்றல். அதற்குச்செய்யுள்.

செம்மலராயிரந்தூய்க்கருமாலிருக்கண்ணணியு *
மொய்ம்மலரீர்ங்கழலம்பலத்தோன்மன்னுதென்மலயத் *
தெம்மலர்சூடிநின்றெச்சாந்தணிந்தென்னநன்னிழல்வா *
யம்மலர்வாட்கணல்லாயெல்லிவாய்நுமராடுவதே. (௱௫௧)

தன்னைவினவத் தானவள்குறிப்பறி ந்
தென்னைநின்னூட் டியலணியென்ற து.

(இ-ள்.) அழகியமலர்போலுமொளியையுடையவாகிய கண்ணை யுடையநல்லாய், செய்யதாமரைமலர்களாயிரத்தைத்தூவி மூன்வ ழிபட்டு ஒருநான்று அவற்றுளொன்றுகுறைதலாற் கரியமால்அவ ற்றோடொக்குந் தனதுதிருக்கண்ணை யிடந்தணியும் பெரியமலர் போலுஞ்செய்த்தநிறத்தையுடையவாகிய திருவடியையுடையவம் பலத்தான்றங்குந்தென்மலயத்திடத்து இராப்பொழுதினின்னு மர்விளையாடுவது எம்மலரைச்சூடிநின்று எச்சாந்தையணிந்து எ ன்னநன்னிழற்கீழ்? கூறுவாயாக. எ-று.

• வாள் உவமையெனினுமமையும். நுமரென்றது அவரோடொ ருநிலத்தாராகியமக்களை. திருமாலென்பதுஉம்பாடம். நிழல் அ ணியன்றெனினும்,பன்மைபற்றியணியென்றார். மெய்ப்பாடு- அ து. பயன்-குறியிடமுணர்த்துதல். (௱௫௧)

குறியிடங்கூறல்.

குறியிடங்கூறலென்பது-உட்கொண்டுவினவியதலைமகனுக்கு, யாங்கள்சந்தனச்சாந்தணிந்து, சுனைக்காவிகள்சூடி, தோகைகடுயி ல்செய்யும்வேங்கைப்பொழிற்கண்விளையாடுவேம், அவ்விடத்து நின்வரவறியமயிலெழுப்புவாயாகவெனத் தோழி குறியிடங்கூறா நிற்றல். அதற்குச்செய்யுள்.

பணைவளர்கைம்மாப்படாத்தம்பலத்தரன்பாதம்விண்ணோர் *
புணைவளர்சாரற்பொதியின்மலைப்பொலிசந்தணிந்து *
சுனைவளர்காவிகள்சூடிப்பைந்தோகைதுயில்பயிலுஞ் *
சினைவளர்வேங்கைகள்யாங்கணின்றுஞ்செழும்பொழிலே. (௱௫௨

இரவுக்குறியிவ ளென்றுபாங் கி
யரவச்சுழலவற் கறியவுரைத்த து.

(இ-ள்.) பணைபோலுநெடியகையையுடையமாவினுரியாகியப் டாத்தையுடையவம்பலத்தான்பாதங்களை விண்ணோர்பரவுதற்கிடமாகிய வளருஞ்சாரலையுடையபொதியின்மலைக்கட் பொலியுஞ்சந்தனச்சாந்தையணிந்து, சுனைக்கண்வளருங்காவிகளைச்சூடி, யாங்கணின்றும்வளவியபொழில், பசியபயில்கள் துயில்செய்யுங்கோடுவளரும்வேங்கைப்பொழில். எ-று.

என்றது சந்தனச்சாந்தணிந்து சுனைக்காவிசூடி வேங்கைப் பொழிற்கண்ணீவந்துநின்று நின்வரவறிய மயிலெழுப்புவாயாக வென்றவாறு. மெய்ப்பாடு-அது. பயன் - இரவுக்குறியிடமுணர்த்துதல். (௱௫௪)

இரவுக்குறியேற்பித்தல்.

இரவுக்குறியேற்பித்தலென்பது- தலைமகனுக்குக்குறியிடங்கூறித் தலைமகளுழைச்சென்று, அந்திக்காலத்தோரலவன் றன்பெடையோடுபயிலக்கண்டு ஒருபெரியோன்வருத்தமிக்குச்சென்றான் அதற்குப்பின்அவன்சேர்துயிலறிந்திலேனெனத் தோழி அவனதாற்றாமைகூறித் தலைமகளையிரவுக்குறியேற்பியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மலவன்குரம்பையைமாற்றியம்மான்முதல்வானவர்க்கப்பாற் ✻
செலவும்பர்க்கோக்குஞ்சிவன்றில்லைக்கானலிற்சீர்ப்பெடையோ
டலவன்பயில்வதுகண்டவ்ருர்கூர்ந்தயில்வேலுரவோன் ✻
செலவுற்றிவாய்க்கண்டனனென்னதாங்கொன்மன்சேர்துயிலே (௱௫௫)

அரவக்கழலவ னாற்றாமை ன
விரவுக்குறி யேற்பித்த து.

(இ-ள்) மலங்களையுடையவலியயாக்கையாகியகுரம்பையைமாற்றி மான்முதலாகிய அவ்வானவர்க்கப்பாற்செல்லுஞ்செலவை அன்பராயினார்க்குக்கொடுக்குஞ்சிவனது தில்லையைச்சூழ்ந்த கானலிடத்து நல்லபெடையோடலவன்பயின்றுவிளையாடுவதனைக்கண்டுவருத்தமிக்கு அயில்வேலையுடையவுரவோன் அந்திப்பொழுதின்கட்செல்ல அவனைக்கண்டேன், பின் அம்மன்னனதுசேர் துயிலெத்தன்மைத்தாய்! அறியேன். எ-று.

அப்பாற்செலவு-மான்முதலாயினார்க்குமேலாகியபதங்கள். அன்பருட்போகவேட்கையுடையார் அவற்றைப்பெற்றுப்போகந்

துய்ப்பாராதலிற் செலவன்பர்க்கோக்குமென்றார். பெடையொடும்பயிலுமலவனைக்கண்டுமுயிர்தாங்கிச்சென்றானாதலின் ஊரவோனென்றாள். (௱௫௫)

இரவரவுரைத்தல்.

இரவரவுரைத்தலென்பது- அலவன்மேல்வைத்திரவுக்குறியேற்பித்து முகங்கொண்டு அதுவழிபாகநின்று, வேட்கைமிகவால் யானைகணடுங்கச் சிங்கந்திரியுமலைச்சரியிடத்துவரவேண்டிச் சொல்லாநின்றான் இதற்கியாஞ்செய்வதென்னோவெனத் தோழிதலைமகளுக்குத்தலைமகனிரவரவுகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மோட்டங்கதிர்முலைப்பங்குடைத்தில்லைமுன்னோன்கழற்கே *
கோட்டந்தருநங்குருமுடிவெற்பன்மழைகுழுமி *
நாட்டம்புதைத்தன்னநள்ளிருணாகநடுங்கச்சிங்கம் *
வேட்டந்திரிசரிவாய்வருவான்சொல்லுமெல்லியலே. (௱௫௬)

குரவரு குழலி க்
கிரவர வுரைத்த து.

(இ-ள்.) மெல்லியலாய், பெரியவழகிய கதிர்முலையையுடையதோர்கூற்றையுடையதில்லைக்கணுள்ளனாகிய எல்லாப்பொருட்குமுன்னாவனுடைய திருவடியொன்றற்குமே வணங்குதலைசெய்யுங்குருமுடியையுடையநம்வெற்பன், முகில்கள்திரளுதலான் நாட்டத்தைப்புதைத்தாற்போன்றிருக்குஞ்செறிந்தவிருட்கண் யானைக்கணடுங்கச் சிங்கம்வேட்டந்திரியுமலைச்சரியிடத்து வரவேண்டிச் சொல்லாநின்றான், இனியென்செயத்தகும் எ-று.

குறு-நிறம். முன்னோன்கழற்கல்லது பிறிதோரிடத்துந்!தாழ்ந்துநில்லாப்பெரியோன் தாழ்ந்து வேண்டுவதனைமறுத்த லரிதென்பதுபோதர,முன்னோன்கழற்கே கோட்டந்தருநங்குருமுடி வெற்பனென்றாள். ஆற்றின்கண் வருமேத மறியினும் அவனதுவேட்கைமிகுதியா லென்னாலொன்றுங்கூறுவதரிதாயிற்றென்பதுபோதர, நள்ளிருணாகநடுங்கச் சிங்கம்வேட்டந் திரிசரிவாயென்றாள். குரவெனவும் இரவெனவும்விகாரவகையாற்குறுகிநின்றது. இவையிரண்டற்கும்மெய்ப்பாடு- அச்சத்தைச்சார்ந்தவிளிவரல். பயன்- தலைமகளையிரவுக்குறிநேர்வித்தல். (௱௫௬)

ஏதங்கூறிமறுத்தல்.

ஏதங்கூறிமறுத்தலென்பது- தலைமகனிரவரவுகேட்டதலைமகள்

தனக்கவன்செய்த தலையளியுமுதவியுநினையாநின்றவுள்ளத்தளாய், அரிதிரண்டுநின்றியானைவேட்டஞ்செய்யும்வல்லிருட்கண்வள்ளலை வாவென்று சொல்லத்தகுமோவென ஏதங்கூறி மறுத்துரையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

செழுங்கார்முழவதிர்சிற்றம்பலத்துப்பெருந்திருமால் *
கொழுங்கான்மலரிடக்கூத்தயர்வோன்கழலேத்தலர்போன் *
முழங்காரரிமுரண்வாரணவேட்டைசெய்மொய்யிருள்வாய் *
வழங்காவதரின்வழங்கென்றுமோவின்றெம்வள்ளலையே. (௧௫௭)

இழுக்கம்பெரிதிரவரினென ன
அழுக்கமெய்தி யரிவையுரைத்த து.

(இ-ள்.) வளவியகார்போலக் குடமுழாமுழங்குஞ் சிற்றம்பலத்தின்கண்ணேபெரியதிருமால் நறுநாற்றத்தையுடைய கொழுவியமலரையிட்டுப் பரவக் கூத்தைவிரும்பிச்செய்வானுடைய கழல்களையேத்தாதாரைப்போலவருந்த முழங்காநின்றவிட்டுதற்கரிதாகியசீயம் முரணையுடையவாரணவேட்டையைச்செய்யும் வல்லிருட்கண் யாவரும்வழங்காதவழியிடத்து வழங்குவாயாகவென்று எம்முடையவள்ளலையின்றுசொல்லுதுமோ! இவ்வாறுசொல்லுதற்குமோ! எ-று.

ஏத்தலரை யானைக்குவமையாகவுரைக்க. ஏத்தலர்போல்வழங்கென்றுமோவென்று கூட்டியுரைப்பாருமுளர். முழங்காரரியென்பதற்கு முழங்குதலார்ந்த வரியென்பாருமுளர். தனக்கவன்செய்ததலையளியுமுதவியு நினையாநின்றவுள்ளத்தளாகலின், வள்ளலென்றாள். மைந்தனையென்பது பாடமாயின், ஆண்மைத்தன்மைதோன்றநின்றதாகவுரைப்பாருமுளர். அலங்காரம்- எதிர்காலக்கூற்றிடத்துக் காரியத்தின்கண்வந்த இரங்கல்விலக்கு, உபாயவிலக்கு. மெய்ப்பாடு - அச்சம். பயன்- இரவுக்குறிமறுத்தல். ஆற்றினேதமுணர்ந்துமறுத்தாள். அவருழை யாஞ்சேறலொழிந்து அவரைவரச்சொல்லக்கடவேமோவென்றவாறு. (௧௫௭)

குறைநேர்தல்.

குறைநேர்தலென்பது-ஏதங்கூறிமறுத்ததலைமகள், அவனாற்றாமையறிந்து ஆற்றாமைகேட்டு, யான்புனலிடைவீழ்ந்துகெடப்புகஎன்னுயிர்தந்தபெரியோர்க்குச் சிறியேன்சொல்லுவதறியேனென உடம்பட்டுநேராநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஓங்குமொருவிடமுண்டம்பலத்தும்பருய்யவன்று *
தாங்குமொருவன்றடவரைவாய்த்தழங்குமருவி *
வீங்குஞ்சுனைப்புனல்வீழ்ந்தன்றழுங்கப்பிடித்தெடுத்து *
வாங்குமவர்க்கறியேன்சிறியேன்சொல்லும்வாசகமே. (௩௫௮)

அலைவேலண்ண னிலைமைகேட்டுக்
கொலைவேற்கண்ணி குறைநயந்தது.

(இ-ள்.) உலகமுழுதையுஞ்சுடும்வண்ணம் மேன்மேலும்வளரா நின்றதோர்விடத்தைத்தானுண்டு உம்பரெல்லாமுய்ய அன்றுதாங் குமம்பலத்தொருவனது பெரியவரையிடத்து ஒலியாநின்றவருவி யாற்பெருகுகின்ற சுனைப்புனற்கண் அன்றியான்விழுந்துகெடப் புகப் பற்றியெடுத்துக் கரைக்கணுய்த்தபெரியோருக்குச் சிறியே னாகிய யான் சொல்லுவதோர்மாற்றமறியேன். எ-று.

ஒருதஞ்சென்பதற்கு ஒப்பில்லாதநஞ்செனினுமமையும். தடவ ரைவாய்வீழ்ந்தழுங்கவெனவியையும். சுனையென் றியையப்பினுமமை யும். சுனைப்புனல்வாய்வீழ்ந்தழுங்கவன்றுதாமேவந்தெடுத்து ய்வித்தாற்போல வழங்காதவதரிற்றும் வருதலான் எனக்கு வருமி டுக்கணையுந்தாமேநீக்கினல்லது யானறிவதொன்றில்லையென்னுங் கருத்தால், சுனைப்புனல்வீழ்ந்தன்றழுங்கப்பிடித்தெடுத்துவாங்கு மவர்க்கென்றாள். ஆற்றின்கணேதநினைந்திரவுக்குறிமறுத்ததலைமக ள் அவன்செய்தவுதவிநினைந்து பின்னுடம்பட்டாளாதல் பொருந் தாமையுமறிந்துகொள்க. இக்கருத்தேபற்றியுதவிநினைந்துகுறைநய ந்ததென்னாது அவனதாற்றாமைநிலைமைகேட்டுக்குறைநயந்ததெ ன்றார். அவன்செய்தபேருதவிசொல்லுகையால் அவன்செய்தவுத விக்குக்கைம்மாறுவதுநானவனுழைச்சேறலேயென்றுடம்பாடா யிற்று. பிறவிக்குட்டத்தியான்விழுந்துகெடப்புகத் தாமேவந்து பிடித்தெடுத்து அதனினின்றும்வாங்கியபேருதவியார்க்குச் சிறி யேனாகிய யான்சொல்லுவதறியேனென்று வேறுமொருபொரு டோன்றியவாறுகண்டுகொள்க. மெய்ப்பாடு- அழுகை. பயன்- இர வுக்குறிநேர்தல். (௩௫௮)

குறைநேர்ந்தமைகூறல்.

குறைநேர்ந்தமைகூறலென்பது - தலைமகளைக்குறைநயப்பித் துத் தலைமகனுழைச்சென்று, இற்றையாமத்தெல்லாம் நின்னருண் மேனிக்கவேண்டித்துன்பமுற்றேன், நீ கருதியதூஉமுடிந்ததெ

ணத்தோழி தலைமகனுக்கு அவள்குறைநேர்ந்தமைகூறுநிற்றல். அ
தற்குச்செய்யுள்.

ஏனற்பசுங்கதிரொன் றாங்கழியவெழிலியுன்னிக் *
கானக்குறவர்கள்கம்பலைசெய்யும்வம்பார்சிலம்பா *
யானிற்றையாமத்துநின்னருண்மேனிற்கவுற்றுச்சென்றேன் *
றேனக்ககொன்றையன்றில்லையுறார்செல்லுஞ்செல்லல்களே (௱௬௬)

குறைநயந்தனை ணெறிகுழலியெ ன
எறிவேலண்ணற் கறியவுரைத்த து.

(இ-ள்.) தினையினதுபசியகதிர் கோடையாலழிய அஃதழியாமை ன்மழைபெறக்கருதிக் கானத்துவாழுங்குறவர்கள் தெய்வத்திற்கு ப்பலிகொடுத்தாரவாரிக்கும் வம்பார்ந்தசிலம்பையுடையாய், இற் றையிரவின்கண் யான் நின்னேவன்மேனிற்கவேண்டித் தேனூ றுமலர்ந்த கொன்றையையுடையானது தில்லையைப்பொருந்தாதா ரடையுந்துன்பத்தையடைந்தேன். நீகருதியதூஉமுடிந்தது எ-று

வம்பு-காலமல்லாதகாலத்துமழை. யாமமூமென்பதுபாடமாயி ற் பகலேயன்றியிரவுமெனவுரைக்க. யாமமுநின்னருளே என்ப தூஉம்பாடம். கானக்குறவர்கள் தமக்குணவாகிய தினைக்கதிர்கோ டையாலழியத் தெய்வத்தைப்பராவி மழைபெய்விக்க முயல்கின் றாற்போல, நினக்குத் துப்பாகிய இவளைலம், அலர்முதலாயினவற் றாற்றொலையும்வழி அதுதொலையாமன் முயன்று பாதுகாப்பாயெ ன உள்ளுறையாமாறுகாண்க. மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-த லைமகற்குக்குறைநயந்தமையுணர்த்துதல். (௱௬௬)

வரவுணர்ந்துரைத்தல்.

வரவுணர்ந்துரைத்தலென்பது-தலைமகனுக்குக்குறைநயப்புக்கூ றியதோழி, யாம்விளையாடாநின்ற பொழிலிடத்து வேங்கைமேலு ண்டாகிய மயிலினமின்புற்றுத் துயில்பெயராநின்றன இதற்குக் காரணமென்னோவென அவன்வரவறிந்துகூறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

முன்னுமொருவரிரும்பொழின்மூன்றற்குமுற்றுமிற்றாற் *
பின்னுமொருவர்சிற்றம்பலத்தார்தரும்பேரருள்போற் [ன்
றுன்னுமொரின்பமென்றோகைதந்தோகைக்குச்சொல்லுவபோ
மன்னுமரவத்தவாய்த்துயில்பேருமயிலினமே. (௱௬௭)

வளமயிலெடுப்ப விளமயிற்பாங் கி
செருவேலண்ணல் வரவுரைத் தது.

(இ-ள்.) பெரியவுலகங்கண் மூன்று முளவாதற்கு முன்னுந்தா மொருவருமேயாகியுள்ளார், அவ்வுலகமுழுது மாய்ந்தாற் பின்னுந்தாமொருவருமேயாகியுள்ளார், சிற்றம்பலத்தின்கண்ணார், அவர் தரும்பெரியவருள்போல இவ்வில்லின்கண் ஓரின்பம்வந்துபொருந்துமென்று தம்முடையதோகைகட் கோகைசொல்லுவனபோல, இடைவிடாதுநிகழு மாரவாரத்தையுடையவாய் மயிலினந்துயில்பெயராநின்றன. இஃதென்னோ! எ-று.

சிற்றம்பலத்தாரென்பதற்கு, உலகங்களுளவாய்ச்செல்லுங்காலத்துச் சிற்றம்பலத்தின் கண்ணாரென்றுரைப்பினுமமையும். தன்றோகைக்கென்பதுபாடமாயிற் பன்மையொருமை மயக்கமாகக் கொள்க. ஒருகால்வெருவித் தாமேதுயிலெழுந்தனையன்று இஃதவன்செய்தகுறியென்பதுபோதர, மன்னுமாரவத்தவாயென்றாள். மெய்ப்பாடு-அது. பயன்-தலைமகன்வரவுணர்த்துதல். (௱௬௰)

தாய்துயிலறிதல்.

தாய்துயிலறிதலென்பது - தலைமகன்வரவுணர்ந்து தலைவியைக் கொண்டுசெல்லக்கருதாநின்றதோழி, யாம்விளையாடாநின்றபொழிலிடத்து ஓர்யானைநின்று ஊசலைத்தள்ளாநின்றது அதற்கியாஞ்செய்வதென்னோவெனத் தாயது துயிலறியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கூடாரரணெரிகூடக்கொடுஞ்சிலைகொண்டவண்டன் *
சேடார்மதின்மல்லற்றில்லையன்னாய்சிறுகட்பெருவெண் *
கோடார்கரிகுருமாமணியூசலைக்கோப்பழித்துத் *
தோடார்மதுமலர்நாகத்தைநூக்குநஞ்சூழ்பொழிற்கே. (௱௬௧)

ஊசன்மிசைவைத் தொள்ளமளியிற்
றாயதுதுயி றானறிந்த து.

(இ-ள்.) கூடாதாருடையவரண்களையெரிசென்றுகூட வளைந்த சிலையைக்கைக்கொண்ட அண்டனது பெருமையார்ந்த மதிலையும் வளத்தையுமுடைய தில்லையையொப்பாய், சிறியகண்ணையுடைய பெரியவெண்கோடுநிரம்பிய யானை நமதுசூழ்பொழிற்கண் நிறத்தையுடையவுயர்ந்தமணிகளாற்செய்யப்பட்ட வூசலைச்சீரழித்து

இதழார்ந்தம்துமலர்களையுடைய அவ்வூசலைத்தொடுத்த நாகமரத்தை நோக்காநின்றது. இதற்கென்செய்வேன்! எ-று.

சூழ்பொழிற்கென்னுநான்கனுருபு-ஏழாவதன்பொருட்கண்வந்தது. சூழ்பொழிலையென்பதூஉம்பாடம். இவ்வாறுகூறவும், வாளாகிடப்பிற்றாய்துயின்றாளென்றறிதல் பயன். அலங்காரம்- பரியாயம். மெய்ப்பாடு-அது. பயன்-இடையீடாராய்தல். (௱௬௧)

துயிலெடுத்துச்சேறல்.

துயிலெடுத்துச்சேறலென்பது - தாய்துயிலறிந்ததோழி, குவளைப்பூக்கண்மலராநின்றன அவைநின்கண்ணையொக்குமாயிற் காண்பாயாகவெனத் துயிலெடுத்துச்செல்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

விண்ணுக்குமேல்வியன்பாதலக்கீழ்விரிநீருடுத்த *
மண்ணுக்குநாப்பணயந்துதென்றில்லைநின்றோன்மிடற்றின் *
வண்ணக்குவளைமலர்கின்றனசினவாண்மிளிர்நின் *
கண்ணுக்குமேற்கண்டுகாண்வண்டுவாழுங்கருங்குழலே. (௱௬௨)

தாய்துயிலறிந் தாய்தருபவ ள்
மெல்லியற்குச் சொல்லிய து.

(இ-ள்.) வண்டுகள்வாழுங்கரியகுழலையுடையாய், எல்லாப்பொருட்குமேலாகிய விண்ணுக்கும்மேலாயவன், எல்லாப்பொருட்குங் கீழாகிய அகன்றபாதாலத்திற்குங்கீழாயவன், நடுவாகிய கடலையுடுத்த மண்ணிற்குநடுவாயவன், விரும்பித்தென்றில்லைக்கணின்றோன், அவனதுமிடற்றின் வண்ணத்தையுடைய குவளைப்பூக்கண்மலராநின்றன அவை சினவாண்மிளிருமாறுபோல்மிளிருநின்கண்களை யொக்குமாயிற் காண்பாயாக. எ-று.

பாதாலம் -பாதலமெனக்குறுகிநின்றது. மண்ணினுள்ளதூஉமுளவாதலின், மண்ணுக்குநாப்பணென்றார். மண்முழுதுக்குமிடைத் தில்லையைநயந்து அதன்கணின்றோனென்றுரைப்பாருமுளர். சினவாண்மிளிர்நின்கண்ணுக்குமேலென்புழிஒத்தபண்பு வேறுபட்டமையானுவமைக்குவமையன்றென்க. கண்டுகாணென்பதொருசொல். ஆய்தருபவள்-புறத்துக்கொடுபோமுபாயமாராய்பவள். மெய்ப்பாடு-அது. பயன்-தலைமகளைக் குறியிடத்துய்த்தல். அலங்காரம்-புகழுவமை. (௱௬௨)

இடத்துய்த்துநீங்கல்.

இடத்துய்த்துநீங்கலென்பது - தாயிலெடுத்துக்கொண்டுசென்று அக்குறியிடத்துநிறுத்தி, இவைநின்கண்கள்வென்றகுவளைமலர் இவற்றைக்காண்பாயாக, யானின்குழற்குச்சந்தனத்தழைகொய்யாநின்றேனெனத் தான்சிறிதகலாநிற்றல். அதற்குச்செய்யுள்.

நந்தீவரமென்னு நாரணனுண்மலர்க்கண்ணிற்கெழீஇச் *
தந்தீவரன்புலியூரனையாய்தடங்கண்கடந்த *
விந்தீவரமிவைகாணிந்நிருள்சேர்குழற்கெழில்சேர் *
சந்தீவரமுறியும்வெறிவீயுந்தருகுவனே. (௱௬௩)

மைத்தடங்கண்ணியை யுய்த்திடத்தொரு பா
ணிங்கனுற்ற பாங்கிபகர்ந்த து.

(இ-ள்.) கண்ணைபிடந்திட்டு, நந்தீ, வரந்தரவேண்டுமென்றுநாரணனது அந்நாண்மலர்போலுங்கண்ணிற்கு ஒளிகத்தைப்படைத்துக்கொடுத்ததலைவனதுபுலியூரையொப்பாய், இவைநின்பெரியகண்கள் கடந்தநீலங்கள், இவற்றைக்காண்பாயாக. நினதுகருமைசேர்ந்தகுழற்குச் சந்தனமரந்தரும் எழில்சேர்ந்த நல்லமுறிகளையும் நறுநாற்றத்தையுடைய மலர்களையும் யான்கொணர்ந்துதருவேன். நீ நீலப்பூக்களையுங்கண்டு ஒண்டுநிற்பாயாக. எ-று.

நந்தியென்பது ஒருதிருநாமம். அனையாயுடையதடங்கண்கள்ளென்றுரைப்பாருமுளர். இந்தீவரமிவைகாணெனபதற்கு நின்கண்களைவென்ற இந்தீவரமாவன விவைகாணென்றுரைப்பினுமமையும். இதுகுறிப்பெச்சம். உய்த்திடத்து- இடத்துய்த்து. மெய்ப்பாடு-அது. பயன்- தலைமகளைக்குறியிடத்து நிறீஇநீங்குதல். (௱௬௩)

தளர்வகன்றுரைத்தல்.

தளர்வகன்றுரைத்தலென்பது - தோழிகுறியிடைநிறுத்திநீங்காநிற்ப, தலைமகனெதிர்ப்பட்டு, நம்முடையகமலக்கோயில் கதிரவன்வருவதன்முன் நீரேதிறந்துகொண்டோபோந்தது இப்பெருழிலிடைவந்துநயந்ததென்னோவெனத் தலைமகளைப்பெரும்பான்மைகூறித் தன்றளர்வுநீங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

காமரைவென்றகண்ணோன்றில்லைப்பல்கதிரோனடைத்த *
தாமரையில்லினிதழ்க்கதவந்திறந்தோதயிலே *
பாமரைமேகலைபற்றிச்சிலம்பொதுக்கிப்பையவே *
தாமரையாமத்தென்னோவந்துவைகிநயந்ததுவே. (௱௬௪)

வடுவேகிரனைய வரிநெடுங்கண்ணியை த்
தடுவரியன்பொடு தளர்வகன்றுரைத்த து.

(இ-ள்.) திறைபழிக்கவர்த்தகாமனை வென்றகண்ணையுடையவனது தில்லைக்கட் பல்கதிரோனாகிய வாயிலோன் அடைத்துவைத்ததாமரையாகிய நம்மில்லின்கண் இதழாகியகதவத்தை அவ்வாயிலோன் வருவதன்முன் நீரே திறந்துகொண்டோபோந்தது? இதுகிடக்க, பரந்தவனாயின் மேகலையை யொலியாமற்பிடித்துச் சிலம்புகளை மேலேறக்கடுக்கித் தனியே பைய அனாயாமத்தின்கண் நாம் நுண்டுலர்ந்துதங்கிவிரும்பியதென்னோ? இதனைக்கூறுவீராமின். எ-று.

காமரென்னும் ஈகரவீறு - இழிவின்கண்வந்தது. தில்லைத்தாமரையெனவியையும். கதவந்திறந்தோவென்னு மோகாரத்தை அசைநிலையாக்கியுரைப்பாருமுளர். பாவுமென்னுமீற்றுமிசை உகரம் மெய்யோடுங்கெட்டுக் காலமயக்கமாய்நின்றது. எல்லாராலுந் திருமகளையக்கப்படினல்லது திருமகடன்னாலையக்கப்படுவதொன் றில்லையென்னுங்கருத்தான், நாம் நயந்ததென்னோவென்றான். நாமென்னுமுன்னிலை யுளப்பாட்டுத்தன்மை உயர்வுதோன்றமுன்னிலைக்கண்வந்தது. தடு-தடுத்தல். அரியன்பு-பரியனாபோலப்பண்புத்தொகையாய்நின்றது. தடையருமன்பென்றுபாடமோதுவாருமுளர். கண்ணியையுரைத்ததெனவியையும். மெய்ப்பாடு- உவகை. பயன்- தலைமகளைக்கண்டுதோன்றியவுவகையைப் பரிக்கலாற்றாத தலைமகனாற்றுதல். தலைமகளை மகிழ்வித்தலுமாம். (௱௯௪)

மருங்கணைதல்.

மருங்கணைதலென்பது- பெரும்பான்மைகூறக்கேட்டதலைமகள் பெருநாணினளாதலிற் றன்முன்னிற்கலாது நாணித் தலையிறைஞ்சிவருந்தாநிற்ப, சென்றுசார்தலாகாமையிற் றனதாதரவுமிகவால் அவ்வருத்தந்தணிப்பான்போன்று, முலையொடுமுனிந்து, அவளிறுமருங்குருங்கிச் சென்றணையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அகிலின்புகைவிம்மியாய்மலர்வேய்ந்தஞ்சனமெழுதத் ❋
தகிலுந்தனிவடம்பூட்டத்தகாள்சங்கரன்புலியூ ❋
ரிகலுமவரிற்றளருமித்தேம்பலிடைகொடியப் ❋
புகிலுமிகவிங்ஙனேயிறுமாக்கும்புணர்முலையே. (௱௯௫)

அன்புமிகுதியி னளவளாயவளை ப்
பொன்புனைவேலோன் புகழ்ந்துரைத்தது.

(இ-ள்.) குடநற்கனைகிற்புகைவிம்ம ஆராயப்பட்டமலர்களைவே

நீர்து கண்மலர்க்கஞ்சனமெழுதத்தருவளாயினும், ஒருதனிவடத்தைப்பூட்டத்தருவாளல்லள். அதனைப்பூட்டுதலையன்றி, சங்கரனதுபுலியூரின்பெருமையையுணராது அதனோடுமாறுபடுவானைப்போலத் தளராநின்ற இத்தேய்தலையுடைய இடைநெரிந்தொடியப்புகினும், அதனையுணராது இப்புணர்ந்தமுலைகள் இவ்வண்ணமே மிகவும் விம்மாநின்றன. இஃதென்னாய்முடியும்! எ-று.

தேம்பலிடை - இருபெயர்ப்பண்புத் தொகையெனினுமமையும் ஆய்மலராய்ந்தென்பது பாடமாயின், ஆராய்ந்து சூட்டியெனச் சூட்டுதலை ஆற்றலான் வருவித்துரைக்க. புகலுமென்பது பாடமாயிற் புகுதலுமெனவுரைக்க. பிறபாடமோதுவாருமுளர். அளவளாயென்பது மிகுதிக்கணிரட்டித்துவந்தது அளாயென்பதனைச் செய்தென்னும்பொருட்டாக்கி அளவுதலைச்செய்தென்றுரைப்பாருமுளர். மெய்ப்பாடு - அது. பயன் - தலைமகளைச்சார்தல். ()

முகங்கண்டுமகிழ்தல்.

முகங்கண்டுமகிழ்தலென்பது - மருங்கணைவிறுதிக்கட்டலைமகளதுமுகமகிழ்ச்சிகண்டு, இவளும்யானும் மலருமதியுமெனத் தலைமகன்றன்னைப்புணர்த்தி மகிழாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அழுந்தேனரகத்தியானென்றிருப்பவந்தாண்டுகொண்ட *
செழுந்தேன்றிகழ்பொழிற்றில்லைப்புறவிற்செறுவகத்த *
கொழுந்தேன்மலர்வாய்க்குமுதமிவள்யான் குளிருச்சுடர்கொண்,
டெழுந்தாங்கதுமலர்த்தும்முயர்வானத்திளமதியே. (௱௬௬)

முகையவிழ்குழலி முகமதிகண் டு
திகழ்வேலண்ணன் மகிழ்வுற்ற து.

(இ-ள்.) யானினிநரகத்திற்புக்கழுந்தேனென்று செம்மாந்திருக்கும்வண்ணந் தானேவந்தாண்டுகொண்ட செழுந்தேன்போல்வனது விளங்கும்பொழிலையுடைய தில்லையைச்சூழ்ந்த இளங்காட்டிற்செய்யின்கண்ணவாகிய கொழுவியதேனையும்மலராநின்றவாயையுமுடையகுமுதமலர் இவள், யான்றிறத்தையுடைய நிலாவைக்கொண்டெழுந்து அக்குமுதத்தைமலர்த்தும் உயர்ந்தவானத்தின்கட்டிகழும் முதிராமதி. எ-று.

நரகமென்றது - ஈண்டுப்பிறவியை. வீடுபெற்றின்பத்தோடுசார்ந்த நரகமுஞ்சுவர்க்கமுமொருதிறனவாகலின், நரகமென்றார். ஆண்டுகொண்டானென்பதுபாடமாயிற் செழுந்தேனைப்பொழி

வின்மேலேற்றுக. செறு- நீர்நிலையுமாம். வாய்-முகம். மலர்வாய்க் குமுதமென்றது- கிண்கிணிவாய்க்கொள்ளுநிலைமையை. அதனாலிவளதுபருவம்விளங்கும். குரூஉச்சுடர்கொண்டு மலர்த்துமெனக் கூட்டிக் குரூஉச்சுடரான் மலர்த்துமென் றுரைப்பினுமமையும். அதனால், தலைப்பெய்தமையானன்றிக் கண்டதுணையானவண்மகிழ்தலைக் கூறினானும். இவ்வின்பம்வழிமுறைபாற்பெருகுமென்பது போதர, இளமதியென்றான். மெய்ப்பாடு- அது. பயன்-நயப்புணர்த்துதல். (௱௬௬)

பள்ளியிடத்துய்த்தல்.

பள்ளியிடத்துய்த்தலென்பது- மலர்மதிமேல்வைத்துக்கூறிமகிழ்வுற்றுப்பிரியலுறுகின்றவன், இப்பொழிலிடையினித்தனியே நின்று நீலப்பூக்களைக்கொய்யாது, நின்னரியதோழியோடு ஆயத்திடைச்சென்று துயில்பயில்வாயெனத் தலைமகளைப்பள்ளியிடத்துச்செலுத்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சுரும்புறுநீலங்கொய்யற்றமிநின்று துயில்பயின்மோ
வரும்பெறற்றோழியொடாயத்துநாப்பணமரரொன்னா
ரிரும்புறுமாமதில்பொன்னிஞ்சிவெள்ளிப்புரிசையன்றோ
ரரும்புறச்செற்றகொற்றத்தெம்பிரான்றில்லைச்சூழ்பொழிற்கே

பிரிவதுகருதிய பெருவரைநாட
னொள்ளிழைப்பாங்கியொடுபள்ளிகொள்கென்றது.

(இ-ள்.) அமரர்க்குப்பகைவராயினாருடைய இரும்புபொருந்திய பெரியமதிலையுடையவூரும் பொன்னிஞ்சியையுடையவூரும் வெள்ளிப்புரிசையையுடையவூரும் அன்று ஓர் அரும்பின்றன்மையையுற எரித்த வெற்றியையுடைய வெம்பிரானது தில்லைக்கட் சூழ்ந்தபொழிலிடத்துத் தனியேநின்று, சுரும்புபொருந்து நீலப்பூக்களைக்கொய்யாதொழி. அரியபெறுதலையுடைய நின்றோழியோடு ஆயத்தினிடைத் துயிலைப்பயில்வாயாக. எ-று.

மோ-அசை. சுரும்புறுநீலம்-மேலாற்சுரும்புவந்துபொருந்து நீலமலர். எதிர்காலவினை. மென்னனையாய் மறியேபறியேலென்றதுபோலக்கொள்க. சூழ்பொழில் - தில்லையைச்சூழ்ந்தபொழில். பொழிற்கென்பது - வேற்றுமைமயக்கம். பொழிலேயென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு -பெருமிதம். பயன் - புறத்தாரறியாமைப்பிரிதல். (௱௬௭)

வரவுவிலக்கல்.

வரவுவிலக்கலென்பது-தோழி தலைமகளைப்பள்ளி யிடத்துச் சேர்த்திச்சென்று, இக்கல்லதர் இவள்காரணமாகநினக்கெளிதாயிற்று ஆயினும் இனியிவ்வாறொழுகற்பாலையல்லையென வரைவுபயப்பக்கூறித் தலைமகனைவரவுவிலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

நற்பகற்சோமனெரிதருநாட்டத்தன்றில்லையன்ன *
விற்பகைத்தோங்கும்புருவத்திவளின்மெய்யேயெளிதே *
வெற்பகச்சோலையின்வேய்வளர்தீச்சென்றுவிண்ணினின்ற *
கற்பகச்சோலைகதுவுங்கன்னாடவிக்கல்லதரே. (௱௯௮)

தெய்வமன்னனைத் திருந்தமளிசேர்த் தி
மைவரைநாடனை வரவுவிலக்கிய து.

(இ-ள்) வெற்பிடத்துச்சோலையின்கணுண்டாகியவேய்க்கட் பிறந்துவளருந்தீ விண்ணின்கணின்ற கற்பகச்சோலையைச்சென்று பற்றுமலைநாடனே, இக்கல்லையுடையசிறுநெறி, நல்லஞாயிறுந்திங்களுந்தீயுமுண்டாக்கியமூன்றுநாட்டத்தையுமுடையவனது தில்லையொக்கும் வில்லைப்பகைத்து அதனின்மிகும்புருவத்தையுடைய இவள்காரணமாக, மெய்யாகவெளிதாயிற்று. ஆயினும், இனிநீவரற்பாலையல்லை. எ-று.

• செவ்வெண்ணின்றொகை-விகாரவகையாற்றொக்குநின்றது. உம்மைத்தொகையெனினுமமையும். தில்லையன்னவிவளென விரியும். இவளின்மெய்யே யெளிதேயென்பதற்கு இவள்காரணமாக வெளிதாமோ எளிதன்றெனவெதிர்மறையாக்கியுரைப்பினுமமையும். வேயிற்பிறந்ததீ ஆண்டடங்காது சென்று தேவருலகத்தினின்றகற்பகச்சோலையைக் கதுவினாற்போல நின்வரவினால் அயலாரிடத்துப்பிறந்த அலர்பெருகி நின்னூருமறியப்பரந்து நின்பெருமையைச்சிதைக்குமென உள்ளுறைவகையான் அலரறிவுறுத்தவாறுகண்டுகொள்க. இவனுக்குப்பெருமையாவது இவன்வழியிற்பிதிர்கள்கொண்டாட்டம். சிதைத்தலாவது இகலோகபரலோகமிரண்டையுஞ்சிதைத்தல். மூங்கிலிற்பிறந்ததீத் தன்னையுஞ்சுட்டுத்தன்னுடைய சுற்றத்தையுஞ்சுட்டுக் கற்பகச்சோலையைக் கதுவினாற்போலவென்க. நற்பகற்சோமன்-விகாரவகையான்வலிந்துநின்றது. மெய்ப்பாடு-அச்சம். பயன்-வரவுவிலக்கிவரைவுகடாதல். (௱௯௮)

ஆற்றாதுரைத்தல்.

ஆற்றாதுரைத்தலென்பது-வரைவுகடாவிவரவுவிலக்கிலதோழி க்கு வரைவுடப்படாது, பின்னுங்களவொழுக்கம்வேண்டி, யான்மு ன்செய்த தவப்பயனால் எனக்கெய்தலாம்வண்ணந் திருமகளிவ்வா றுகொடிச்சியாயிருந்தாளெனக்கருதியே எனதின்னுயிர்நிற்பது இத்தன்மையாளை யான்வரையுந் துணையெளியளாக நீ கூறுகின்ற தென்னெனத் தலைமகன் றனதாற்றாமைதோன்றக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பைவாயரவரையம்பலத்தெம்பரன்பைங்கயிலைச் *
செவ்வாய்க்கருங்கட்பெரும்பணைத்தோட்சிற்றிடைக்கொடியை *
மொய்வார்கமலத்துமுற்றிழையின்றென்முன்னைத்தவத்தா *
லிவ்வாறிருக்குமென்றேநிற்பதென்றுமென்னின்னுயிரே (௱௬௬)

வரைவுடாய வானுதற்றோழிக்
கருவரைநாட னாற்றாதுரைத்தது.

(இ-ள்.) படத்தையும்பெரியவாயையுமுடைய அரவை யணிந்த வரையையுடைய அம்பலத்தின்கண்ணுளனாகிய எம்முடையபரன துசோலையாற்பசியகைலைக்கணுளளாகிய செய்யவாயையுங்கரியக ண்ணையும் பெரியபணைபோலுந் தோள்களையுஞ் சிறியவிடையை யுமுடையகொடிபோல்வாளை, பெரியதாகிப்தாளாநெடிய கமல த்துவாழுந்திருமகளாகியமுற்றிழை முற்பிறப்பின்கணுண்டாகிய னதுதவப்பயனால் எனக்கெய்தலாம்வண்ணம் இன்றிவ்வாறு கொ டிச்சியாயிருக்குமென்று, கருதியே என்னின்னுயிர் என்றும்நிற் பது. இத்தன்மையாளை யான்வரையுந்துணையெளியளாக நீகூறுகி ன்றதென்! எ-று.

எம்பரனென்பதற்கு முன்னுரைத்ததுரைக்க. கைலைக்கொடி யெனவிலையும். கொடியையென்னுமிரண்டாவது என்றுகருதி யேனவெஞ்சிநின்றவினையொடு முடியும். மெய்ப்பாடு - உவகை. பயன்-வலாவுடம்படாமை. (௱௬௬)

இரக்கங்கூறிவரைவுகடாதல்.

இரக்கங்கூறிவரைவுகடாதலென்பது-களவுவிரும்பிவரைவுடம்ப டாததலைமகனுக்கு, நீசெல்லுநெறிக்கண் நினக்கிடையூறுண்டா மென்னுமச்சத்தால் அவளுழிதிரங்காநின்றாளென்று, நீ சென்ற மையறிய நின்குறிகாட்டுவாயெனத் தலைமகளதிரக்கங்கூறி வரைவு கடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பைவாயரவுமறியுமழுவும்பயின்மலர்க்கை *
மொய்வார்சடைமுடிமுன்னவன்றில்லையின்முன்னினக்காற் *
செவ்வாய்கருவயிர்ச்சேர்த்திச்சிறியாள்பெருமலர்க்கண் *
மைவார்குவளைவிடுமன்னநீண்முத்தமாலைகளே. (௱௭௰)

அதிர்சழலவ னகன்றவ ழி
யெதிர்வதறியா திரங்கியுரைத்த து.

(இ-ள்.)மன்னனே,நீசெல்லுநெறிக்கண் நினக்கிடையூறுண்டா மென்னுமச்சத்தால்இச்சிறியாளுடையபெரியமலர்போலுங்கண் களாகிய கருமையையுடைய நெடியகுவளைகள் நீண்டமுத்தமாலை களைப்புறப்படவிடாநிற்கும். அதனான் நினக்கிடையூறின்மையை யிவளறிய, நின்பதியாகிய தில்லையெல்லையிற்சென்றுகிட்டினால், நி ன்செய்யவாயைக்கரியகொம்பின்கட்சேர்த்தியூதவேண்டும். எ-று. படத்தையும்பெரியவாயையுமுடைய அரவும்மான்மறியும்மழுவா ளும் விடாதுநிகழுமலர்போலுங்கையையும் நெருங்கியநெடியச டைகளானியன்றமுடியையுமுடைய எல்லாப்பொருட்குமுன்னு யவனது தில்லையெனக்கூட்டுக.

குறிஞ்சிநிலத்திற்குரியமக்கள் கோலத்தனாய்வருமாதலின், வயி ர்கூறப்பட்டது. மலர்க்கணென்பது உவமைகருதாது கண்ணெ ன்னுந்துணையாய்நின்றது. கண்ணாகிய குவளைப்பெருமலரென்று கூட்டுவாரும் மலர்தலையுடைய கண்ணென்பாருமுளர். மெய்ப்பா டு-அச்சம். பயன்-வரைவுகடாதல். (௱௭௰)

நிலவுவெளிப்படவருந்தல்.

நிலவுவெளிப்படவருந்தலென்பது-இரக்கங்கூறி வரைவுகடாய தோழி,பிற்றைஞான்று அவனிரவுக்குறியிடைவந்துநிற்ப, நிலவு வெளிப்பாட்டாற் சென்றெதிர்ப்படமாட்டாமற் றுங்கள்வருந்தா நின்றமை சிறைப்புறமாக மதியொடு புலந்துகூறாநிற்றல். அதற் குச்செய்யுள்.

நாகந்தொழவெழிலம்பலநண்ணிநடநவில்வோ *
னாகமிதுமதியேமதியேநவில்வேற்கையெங்க *
ணாகம்வரவெதிர்நாங்கொள்ளுநள்ளிருள்வாய்நறவார் *
நாகமலிபொழில்வாயெழில்வாய்த்தநின்னுயகமே. (௱௭௧)

தனிவேலவற்குத் தந்தலர்வறிய ப்
பனிமதிவிளக்கம் பாங்கியகர்த்த து.

(இ-ள்.) பயிலப்பட்டவேலையேந்தியகையையுடைய எங்கள்யா

னைவர நாங்களெதிர்கொள்ளுஞ்செறிந்தவிருளிடத்து, அவ்விருளை ச்சிதைத்துத்தேனூர்ந்தநாகமலர்மலிந்தபொழிலிடத்துநின்று நீ செய்கின்ற அழகுவாய்த்தநினதுருதன்மை, திங்காள், நினக்கறிவே! பதஞ்சலியாகியநாகந்தொழ எழிலையுடையவம்பலத்ததை நண்ணி க்கூத்தைப்பயில்வானது மலைகாணிஃது. இதனைக்கடைப்பிடிப்பா யாக. எ-று.

நாகத்தாலிவிழுங்கப்படுநீ நாகந்தொழுவம்பலத்து நடம்பயி ல்வோனது மலைக்கட்புகுந்து விளங்கிவீற்றிருத்தல் நினக்குநன்றி பயவாதென்பதுகருத்து. அறிவென்பது-ஈண்டறிந்துசெய்யப்ப டுங்காரியத்தை. தனிநாயகமென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு- வெகுளி. பயன்-இடையீடறிவித்தல். (௱௭௧)

அல்லகுறியறிவித்தல்.

அல்லகுறியறிவித்தலென்பது-குறியல்லாதகுறியெதிர்ப்பட்டு மீண்டமை, பிற்றைஞான்று தலைமகன் சிறைப்புறம் வந்துநிற்ப, தோழி தலைமகளுக்குக்கூறுவாள்போன்று, அன்னத்தின்மேல்வை த்து அறிவியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மின்னங்கலருஞ்சடைமுடியோன்வியன்றில்லையன்ன *
யென்னங்கலமரவெய்தியதோவெழின்முத்தந்தொத்திப் *
பொன்னங்கலர்புன்னைச்சேக்கையின்வாய்ப்புலம்புற்றுமுற்று *
மன்னம்புலருமளவுந்துயிலாதழுங்கினவே. (௱௭௨)

வல்லியன்னவ ளல்லகுறிப் பா
டறைப்புனற்றுறைவற்குச் சிறைப்புறத்துரைத்தது.

(இ-ள்.) ஒளியவ்விடத்துவிரியுஞ் சடையாணியன்ற முடியையு டையவனது அகன்றதில்லையையொப்பாய், எழிலையுடைய அரும் பாகியமுத்தந்தொத்தி அவ்விடத்துத் தாதாகியபொன்மலரும் பு ன்னைக்கணுண்டாகிய தஞ்சேக்கையிடத்து அன்னமெல்லாம்தனி புற்றுப் புலருமளவுந் துயிலாது ஆரவாரித்தன. அவ்விடத்தெய்தி யதாகிய அலமரலென்னை! அறிகின்றிலேன். எ-று.

மின்னங்கலருமென்பதற்கு மின்னவ்விடத்தலர்ந்தாற்போலுஞ் சடையெனினுமமையும். என்னங்கலமரலெய்தியதோ வென்பதற் கு என்னவலமரலாண்டெய்திற்றோ வென்று கூட்டியுரைப்பினுமமையும். இப்பொருட்கு என்னவென்பது கலக்குறைந்துநின்ற து. முத்தந்தொத்துதலும் பொன்மலர்தலுமாகிய உறுப்பின்று

ழீல் மூதன்மேலேறிநின்றன சேக்கையின்வா யழுங்கினவெனவி
னையயும். நெடும்பொழுது துயின்றிலவென்பாள் புலருமளவுமெ
ன்றாள். பிற்றைஞான்றுபகற்குறிவந்துநிற்பக் கூறினாளெனினுமமை
மையும். அழுங்கல்-இரக்கமெனினுமமையும். அறைப்புனல்-அறை
தலையுடையபுனல். மெய்ப்பாடு- அழுகை. பயன்-அல்லகுறிப்பட்
டமை தலைமகற்குணர்த்துதல். இனித்திணைநெய்தல். (௱௭௨)

கடலிடைவைத்துத்துயரறிவித்தல்.

கடலிடைவைத்துத்துயரறிவித்தலென்பது- தலைமகளிரவுறுது
யரம், தலைமகன்சிறைப்புறமாக, இவள்வாட நீயிளையாநின்றாய் இ
துநினக்குநன்றோவெனத் தோழி, கடலொடுபுலந்துகூறுநிற்றல்.
அதற்குச்செய்யுள்.

சோத்துன்னடியமென்றோர்க்குழுமித்தொல்வானவர்சூழ்ந் ✻
தேத்தும்படிநிற்பவன்றில்லையன்னாளிவடுவள ✻
வார்த்துன்னமிழ்துந்திருவுமதியுமிழந்தவநீ ✻
பேர்த்துமிரைப்பொழியாய்ப்பழிநோக்காய்பெருங்கடலே (௱௭௩)

எறிகடன்மேல்வைத் திரவருதுயர ம்
அறைகழலவற் கறியவுரைத்த து.

(இ-ள்) பெருங்கடலே, முற்காலத்துமிவ்வாறொலித்து உன்
னமிர்தத்தையுந்திருவையுந்திங்களையுமிழந் தவைத்தும், பெயர்த்து
மொருபயனின்றியே இவள்வாட இரையாநின்றாய். காரணமின்றி
ப்பிறரை வருத்துதலான் வரும்பழியையுநோக்குகின்றிலை. நினக்கி
துநன்றோ! எ-று. சோத்தம் உன்னடியமென்றோருகாற்சொன்னு
ரைப் பழையராகியவானவர் குழுமிப்பரிவாரமாய்ச் சூழ்ந்துநின்
றேத்தும்வண்ணம் நிற்குமவனது தில்லையன்னாளாகிய இவளெனவ
க்கூட்டுக.

சோத்தம்-இழிந்தார்செய்யுமஞ்சலி. அது சோத்தெனக்கடைக்
குறைந்துநின்றது. சோத்தமடியமென்பதூஉம் அடியமெனிற்
குழுமித்தொல்லைவானவரென்பதூஉம் குழீஇத்தொல்லை வானவர்
சூழ்ந்தேத்தும்படிவைப்பவனென்பதூஉம் பாடம். திருவுமதியு
மென்பது செல்வமுமறிவுமென வேறுமொருபொருடோன்ற
நின்றதென்பாருமுளர். இரா-குறுகிநின்றது. மெய்ப்பாடும் பய
னும்-அவை. (௱௭௩)

காமமிக்ககழிபடர்கிளவி.

காமமிக்ககழிபடர்கிளவியென்பது-தலைமகனைக்காணலுற்றுவ ருந்தாநின்றதலைமகள், தனதுவேட்கைமிகவாற்கேளாதனவற்றைக் கேட்பனவாக விளித்து, நீங்கள் என்னை ஏதுற்றழிகின்றாயென்று ஒருகால்வினவுகின்றிலீர் இதுவோ நுங்காதன்மையென அவற் றொடுபுலந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மாதுற்றமேனிவரையுற்றவில்லிதில்லைநகர்சூழ் *
போதுற்றபூம்பொழில்காள்கழிகாளெழிற்புள்ளினங்கா *
ளேதுற்றழிதியென்னீர்மன்னுமீர்ந்துறைவர்க்கிவளோ *
தீதுற்றதென்னுக்கென்னீரிதுவோநன்மைசெப்புமினே (௱௭௪)

தாமமிக்க தாழ்குழலே மை
காமமிக்க கழிபடர்கிள வி.

(இ-ள்.) மாதுபொருந்தியமேனியையுடையவரையாகிய மிக்க வில்லையுடையவனது தில்லைநகரைச்சூழ்ந்த போது பொருந்திய மலரினையுடையபொழில்காள், அப்பொழிலைச்சூழ்ந்தகழிகாள், அக்கழிகளிற்பயிலுமெழிலையுடையபுள்ளினங்காள், என்னை நீங்கள் யாதனையுற்றழிகின்றாயென்று ஒருகாற் கூறுகின்றிலீர், குளிர்ந்த துறைவர்க்கு இவள் தீதுற்றதெற்றிற்கென்று கூறுகின்றிலீர். இதுவோ நம்மாட்டுநுங்காதன்மை! சொல்லுமின். எ-று.

மாதுற்றமேனியென்பது ஆகுபெயராய் மேனியையுடையவ ன் மேனின்றதெனினுமமையும். வரையுற்றவில்லியென்பதற்கு வ ரைத்தன்மையைப்பொருந்தியவில்லையுடையானெனினுமமையும். வரைத்தன்மையைப்பொருந்துதல் - வரையாயிருத்தல். போது- பேரரும்பு. மன்னுமென்பதூஉம் இவளோவென்னுமோகாரமு ம் அசைநிலை. மன்னுந்தீதுற்றதெனக்கூட்டி மிகுதிக்கண்வந்ததெ ன்பாருமுளர். இதுவோ நன்மையென்பதற்குத் தில்லையைச்சூழ் ந்தவிடத்துள்ளீராகலின் உமக்குண்டாகிய சிறப்புடைமை யிது வோவெனினுமமையும். அழுதியென்பதூஉம்பாடம். ஏழையது கிளவியெனவியையும். (௱௭௪)

காப்புச்சிறைமிக்ககையறுகிளவி.

காப்புச்சிறைமிக்ககையறுகிளவியென்பது- காமமிக்கெதிர்ப் படவிரும்பாநின்றதலைமகள், இவ்விடையீடெல்லாநீத்து ஒருவழி யான் வந்தாராயினும் இஞ்ஞான்று குறைதாராநின்றமையின் யாமிவ

னாயெதிர்ப்படுதலரிதெனக் காப்புச்சிறைமிக்கு வருந்தாநிற்றல்.
அதற்குச்செய்யுள்.

இன்னறவார்பொழிற்றில்லைநகரிறைசீர்விழவிற் *
பன்னிறமாலைத்தொகைபகலாம்பல்விளக்கிருளின் *
றுன்னறவுக்குமில்லோருந்துயிலிற்றுறைவர்மிக்க *
கொன்னிறவேலொடுவந்திடினஞ்ஞான்றுமாறுகுறைதருமே. (௱௭௫)

மெய்யுறு காவலி ற்
கையறு கிள வி.

(இ-ள்.) இனியநறவார்ந்தபொழிலையுடைய தில்லைநகர்க்கிறைவனுடைய வளவாச் சீரையுடைய விழவின்கண் மாணிக்கமுதலாயினவற்றாற்பலநிறத்தையுடையவாகிய மாலைகளின்றொகைகளான் இராப்பொழுதும் பகலாகாநிற்கும். அதுவேயுமன்றிப் பலவாகியவிளக்கு இருளின்பொருந்துதலறத் துரக்கும். இவ்விடையீடே யன்றி ஒருபொழுதும் துயிலாத இல்லோருமொருகாற் றுயில்வராயின், துறைவர் அச்சத்தைச்செய்யுமிக்கதிறத்தையுடைய வேலோடொருகால்வருவராயின், அப்பொழுதுநாய்துஞ்சாயாநிற்கும். அதனால், அவனைநாமெதிர்ப்படுதலரிதுபோலும். எ-று.

மாலைத்தொகையும் இராப்பகலாகாநிற்கும் பலவிளக்கும் இருளைத்துரக்குமென்றுரைப்பினுமமையும். இல்லோருந்துயிலினென்றதனான், அதுவுமோரிடையீடுகூறப்பட்டதாம். மிக்கவேலென்றியைப்பினுமமையும். மெய்யுறுகாவல்-பிழையாதமிக்ககாவல். இவ்வியிரண்டற்கும் மெய்ப்பாடு - அழுகை. இவற்றைத்தலைமகன் கேட்பின்வரைவானும், தோழிகேட்பின்வரைவுகடாவுவாளாம், யாருங்கேட்பாரில்லையாயின் அயர்வுயிர்த்துத்தானே ஆற்றுதல்பயன்.

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி.

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவியென்பது- சிறைப்புறமாகத்தலைமகள் ஆற்றாமைகூறக்கேட்டதலைமகன், குறியிடைச்சென்று நிற்ப, தோழியெதிர்ப்பட்டு, நீகான்யாறுபலவுநீந்திக் கைவேல்துணையாக அஞ்சாதுவந்தால் யாங்களிச்சோலையிடத்துண்டாகியதெய்வத்துக்கஞ்சுவேம், அதனாலிவ்விருவிடை வரற்பாலையல்லையெனத்தங்களச்சங்கூறி வரவுவிலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

தாருறுகொன்றையன்றில்லைச்சடைமுடியோன்கயிலை *
நீருறுகான்யாறளவிலநீந்திவந்தானினது *

போருறுவேல்வயப்பொங்குருமஞ்சுகமஞ்சிவருஞ் *
சூருறுசோலையின்வாய்வரற்பாற்றன்றுதூங்கிருளே. (௱௭௬)

நாறுவார்குழ னவ்விநோக் கி
யாறுபார்த்துற்ற வச்சக்கிள வி.

(இ-ள்.) தாராகியமிக்ககொன்றையையுடையவன், தில்லைக்கணுளனாகியசடையானியன்றமுடியையுடையவன் அவனது கைலையின்நீரான்மிக்ககான்யாறுகளெண்ணிறந்தனவற்றை நீந்திவந்தால், அவ்விடத்துவலியையுடைய பொங்குமிடியேறு நினதுபோர்மிக்கவேலையஞ்சி நின்பால்வாராதொழிக. ஆயினும் மஞ்சுபரக்குந்தெய்வம்பொருந்துஞ்சோலையிடத்துச்செறிந்தவிருட்கண் வரும்பான்மைத்தன்று, அத்தெய்வங்களை யாமஞ்சுதும். எ-று.

தாருறைகொன்றையனென்பதுபாடமாயின், தார்தங்குகொன்றையனென முதலாகிய தன்பொருட்கேற்றவடையடுத்துநின்றதாகவுரைக்க. இப்பாடத்திற்கு ஏனைமூன்றடியும் உறுவென்றோதுப. வரற்பாற்றன்றென்பது வினைமேனின்றது நவ்விநோக்கியதுகிளவியெனவியையும். மெய்ப்பாடு-அச்சம். பயன்-வரைவுகடாதல். (௱௭௬)

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

தன்னுட்கையாறெய்திடுகிளவியென்பது- தலைமகனைக்காணுற்றுவருந்தாநின்றதலைமகள், இக்கண்டல்சான்றாகக்கொண்டு இப்புன்னையிடத்துக்கலந்த கள்வரை இவ்விடத்து வரக்கண்டிலையோ துணையில்லாதேற்கு ஒருசொல்லருளாயென்று, தன்னுட்கையாற்றை மதியொடுகூறிவினவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

விண்டலையாவர்க்கும்வேந்தர்வண்டில்லைமெல்லங்கழிசூழ் *
கண்டலையேகரியாக்கன்னிப்புன்னைக்கலந்தகள்வர் *
கண்டிலையேவரக்கங்குலெல்லாமங்குல்வாய்விளக்கு *
மண்டலமேபணியாய்தமியேற்கொருவாசகமே. (௱௭௭)

மின்னுப்புரையு மற்றுண்மருங் கு
றன்னுட்கையா றெய்திடுகிள வி.

(இ-ள்.) கங்குன்முழுதுமாகாயத்திடத்தைவிளக்குமண்டலமே, விண்ணிடத்துள்ளாராகிய வெல்லார்க்கும் வேந்தராயுள்ளாரது வளவியதில்லைவரைப்பின் மெல்லியகழிசூழ்ந்த கண்டலேசான்றாக, இளையபுன்னைக்கண் என்னைக்கலந்தகள்வர் ஒருகால் வரக்கண்டிலையோ! துணையில்லாதேற்கொருசொல்லருளாய். எ-று.

மெல்லங்கழியென்பதூஉமொருபண்புத்தொகைமுடிபு. மென்மை-நிலத்தின்மென்மை. கழிசூழ்புன்னையெனக்கூட்டுக. கண்டலையென்னுமைகாரம் அசைநிலை. சரியாகக்கொண்டெனவொருசொல்வருவித்து இரண்டாவதாக வுரைப்பினு மமையும். என்னான்றுமனத்ததொன்றாகத் தாமொன்றுமொழிந்தாரென்னுங் கருத்தாற் கள்வரொன்றுள் கள்வர்க்கண்டிலையேயென்பதுபாடமாயின் உருபுவிரிக்க. கங்குலெல்லாங்கண்டிலையேயென்று கூட்டியுரைப்பினுமமையும். கண்டேகூறுகின்றிலையென்னு முணர்வினளாகலின், எய்திடுகிளவியாயிற்று. அந்நுண்மருங்குல்கிளவியென்றியையும். மெய்ப்பாடு-அழுகை. பயன்-அயர்வுயிர்த்தல். (௱௭௭)

நிலைகண்டுரைத்தல்.

நிலைகண்டுரைத்தலென்பது - தலைமகள் தன்னுட்கையாற்றைமதியொடுகூடிவருந்தாநின்றமை சிறைப்புறமாகக்கேட்டதலைமகன், ஆற்றாமையான் இல்வரைப்பின்கட்புகுந்துநிற்ப, தோழியெதிர்ப்பட்டு, நீயிவ்வாறில்வரைப்பின்கட்புகுந்துநின்றாற் கண்டவர்நின்னைப்பெரும்பான்மைநினையாது மற்றொன்று நினைப்பராயின் அவளுயிர்வாழவல்லளோ இனியிவ்வாறொழுகற்பாலையல்லையென வரைவுதோன்றக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பற்றொன்றிலார்பற்றுந்தில்லைப்பரன்பரங்குன்றினின்ற *
புற்றொன்றரவன்புதல்வனெனநீபுகுந்துநின்றால் *
மற்றொன்றுமாமலரிட்டுன்னைவாழ்த்திவந்தித்தலன்றி *
மற்றொன்றுசிந்திப்பரோல்வல்லளோமங்கைவாழ்வகையே. (௱௭௮)

நின்னினழிந்தனள் மின்னிடைமாதென
வரைவுதோன்ற வுரைசெய்தது.

(இ-ள்.) துறக்கப்படுவனவற்றின்மேற்பற்றொன்றுமில்லாதவர்கள் அறிந்துபற்றுந்தில்லைக்கணுளனாகியபரனது பரங்குன்றின்கணின்ற அப்புற்றொன்றரவனுடைய புதல்வனாகிய முருகவேளைப்போல நீயிவ்வரைப்பிற்புகுந்துநின்றால், கண்டவர்கள் இந்நிலத்திற்குரியனாகிய முருகனென்றுகருதி வளத்தையுடைய நெருங்கிய பெரியமலர்களை யிட்டுவாழ்த்தி, நின்னை வணங்காதே பிறிதொன்றைநினைவாராயின், மங்கையுயிர்வாழும்வகைவல்லளோ? அதனாலிவ்வாறொழுகற்பாலையல்லை. எ-று.

பரந்துநின்றினின்றபுதல்வனெனவினையும். மல்லல் - கடைக்குறைந்துநின்றது. மற்றொன்றுசிந்தித்தல்- இவள்காரணமாகவந்தானென்றுகருதுதல். முருகனென்றமேல் பெரும்பான்மையாகலின், உண்மையுணர்தலைமற்றொன்றென்றாள் 'ஏதஞ்செய்யக்கருதுதலென்பாருமுளர். மெய்ப்பாடு-அச்சம். பயன்-வரைவுகடாதல். ()

இரவுறுதுயரங்கடலொடுசேர்த்தல்.

இரவுறுதுயரங்கடலொடுசேர்த்தலென்பது- தலைமகனையெதிர்ப்படமாட்டாதுவருந்தாநின்றதலைமகள், இற்றையிரவெல்லாம் என்னைப்போல நீயுந்துன்பமுற்றுக்கலங்கித்தெளிகின்றிலை இவ்விடத்து நின்னையுமகன்றுசென்றாருளரோவெனத் தானுறுதுயரங் கடலொடுசேர்த்திக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பூங்கணைவேளைப்பொடியாய்விழவிழித்தோன்புலியூ *
ரோங்கணைமேவிப்புரண்டுவிழுந்தெழுந்தோலமிட்டுத் *
தீங்கணைந்தோரல்லுந்தேறாய்கலங்கிச்செறிகடலே *
யாங்கணைந்தார்நின்னையும்முளரோசென்றகன்றவரே. (௱எகூ)

எறிவேற்கண்ணி யிரவுறுதுயரஞ்
செறிகடலிடைச் சேர்த்தியுரைத்தது.

(இ-ள்.) பூவாகியகணையையுடையவேளைப்பொடியாய்விழும்வண்ணம்விழித்தவனது புலியூர்வரைப்பிற்செறிந்தகடலே, நீயாங்கியணைந்தகரையைப்பொருந்திப் புரண்டுவிழுந்தெழுந்து கூப்பிட்டுத் துன்பமுற்று ஓரிரவுங்கலங்கித்தெளிகின்றிலை அதனால் அணைந்தவர் நின்னையுமகன்றுசென்றார் அவ்விடத்துளரோ? உரைப்பாயாக. எ-று.

பொடியாய்விழ விழித்தோனென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீரவாய்ப் பொடியாக்கினானென்னும்பொருளவாய், வேளையென்னுமிரண்டாவதற்குமுடிபாயின. புலியூர்க்கடலே கலங்கித்தேறாயென்றுகூட்டினுமமையும். செறிகடலென்புழிச் செறிவு - எல்லைகடவாநிலைமை. பிரிவாற்றாதார்க்குஅணைமேவுதல்- பஞ்சியணைமேவுதல். அணைந்தாரென்பதூஉம் சென்றகன்றவரென்பதூஉம் அடுக்காய் உளரோவென்னும்பயனிலைகொண்டன. ஆங்கு அசைநிலையுமாம். மெய்ப்பாடு-அழுகை. பயன்-அயர்வுயிர்த்தல் (௱எகூ

அலரறிவுறுத்தல்.

அலரறிவுறுத்தலென்பது - தலைமகளிரவுறுதுயரங் கடலொடுசேர்த்திவருந்தாநின்றமைசிறைப்புறமாகக்கேட்டதலைமகன், குறி

யிடைச்சென்றுநிற்ப,தோழியெதிர்ப்பட்டு, நின்னருளாய்நின்ற விது எங்களுக்கலராகாநின்றது இனி நீயிவ்வாறொழுகா தொழிய வேண்டுமென அலரறிவுறுத்திவரவு விலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

அலராயிரந்தந் தவந்தித்துமாலாயிரங்கரத்தா *
லலரார்கழல்வழிபாடுசெய்தாற்களவில்லொளிக *
ளலராவிருக்கும்படைகொடுத்தோன்றில்லையானருள்போன் *
றலராய்விளைகின்றதம்பல்கைம்மிக்கையமெய்யருளே. (௩௮௰)

அலைமேவலன்னனை மனமகிழரு ள்
பலராலறியப் பட்டதென்ற து.

(இ-ள்.) மால் தாமரைமலராயிரத்தைக் கொண்டுசென்றிட்டுவணங்கித்தன்னுயிரங்கையானுமலர்போலுங்கழலைவழிபடுதலைச்செய்தவற்கு அளவில்லாதவொளிகள்விரியாநிற்கும்ஆழியாகியபடையைக்கொடுத்தவன்,தில்லைக்கண்ணான், அவனதருள்போல,ஐயனே, நின்னுடையமெய்யாகியவருள், அம்பல்கைம்மிக்கலராய் விளையாநின்றது. இனித்தக்கதுசெய்வாயாக. எ-று.

அலராவிருக்குமென்பது ஓர்நிகழ்காலச்சொல். தில்லையானருள் பெற்றார் உலகியல்பினராய்நில்லாமையின், அவ்வருளுலகத்தார்க்கலராமென்பது கருத்து "நாடவர் நந்தம்மையார்ப்ப வார்ப்ப,, என்பதூஉ மக்கருத்தேபற்றிவந்தது. அம்பல்-பரவாதகளவு என்னை "அம்பலு மலருங் களவு,,என்றாராகலின். (௩௮௧)

இரவுக்குறிமுற்றிற்று.

ஒருவழித்தணத்தல்.

இவ்வாறிரவுக்குறிபுணர்ந்து, அலரெழுந்ததென்றுவிலக்கப்பட்டபின்னர்த் தெருண்டுவரைதறலை.தெருளானாயின்,அவ்வலரடங்கச் சிலநாளொருவழித்தணந்துறைதல், உடன்கொண்டுபோதல், தோழியான்வரைவுமுடுக்கப்பட்டு அருங்கலம்விடுத்து வரைந்துகோடல் இம்மூன்றினுளொன்றுமுறைமையென்ப அவற்றுள்,—

ஒருவழித்தணத்தல்வருமாறு.சூத்திரம்.அகன்றணைவுகூறலாழியொடுகேட்ட,லாழியொடுபுலத்த லன்னமோடாய்த,லாழிக்குரைத்த லாழியிழைத்தல், சுடரொடுபுலம்பல் பொழுதுகண்டுமயங்கல்,பையுளெய்தல் பரிவுற்றுரைத்த,லன்னமோடழிதல் வரவுணர்ந்

துரைத்தல், வருத்தங்கூறல் வருபதின்மூன்றாந், திருத்தியவொரு வழித்திறனுகும்மே.

(இ-ள்.) அகன்றணைவுகூறல்- கடலொடுவரவுகேட்டல்- கடலொடுபுலத்தல்- அன்னமோடாய்தல்- தேர்வழிநோக்கிக்கடலொடுகூறல்- கூடலிழைத்தல்- சுடரொடுபுலம்பல்- பொழுதுகண்டுமயங்கல்- பறவையொடுவருந்தல்- பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்- அன்னமோடழிதல்- வரவுணர்ந்துரைத்தல் - வருத்தமிகுதிகூறல் எனவிவைபதின்மூன்றுமொருவழித்தணத்தலாம். எ-று. அவற்றுள்,—

அகன்றவணவுகூறல்.

அகன்றணைவுகூறலென்பது - அலரறிவுறுத்ததோழி, இத்தன்மையை நினைந்து நீ சிலநாளகன்றணைவையாயின் அம்பலுமலருமடங்கி இப்பொழுதே அவளுக்குப்பழியில்லையாமெனத் தலைமகனுக்கிசைய அகன்றணைவுகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

புகழும்பழியும்பெருக்கிற்பெருகும்பெருகிநின்று *
நிகழுநிகழாநிகழ்த்தினல்லாலிது நீநினைப்பி *
னகழுமதிலுமணிதில்லையோனடிப்போதுசென்னித் *
திகழுமவர்செல்லல்போலில்லையாம்பழிசின்மொழிக்கே. (௱௮௧)

வழிவேறு படமன்னு ம்
பழிவேறு படுமென்ற து.

(இ-ள்.) காரணவசத்தாற்பிறந்தபுகழும், பழியும் அக்காரணங்களை மிகச்செய்தொருவன்வளர்க்குமாயிற்றாம்வளரும், அக்காரணங்களையிடையறாமற்செய்துநிகழ்த்துவனாயின் அவ்வாறுவளர்ந்துநின்று மாயாதனவாய்ச்செல்லும், இவ்வாறல்லது அவைதாமாக நிகழா, அதனான் இப்பெற்றியை நீகருதுவையாயின், அகழையுமதிலையுமணிந்ததில்லைக்கண்ணானுடைய அடியாகிய போதுகள் தஞ்சென்னிக்கண்விளங்கும்பெரியோரது பிறவித்துன்பம்போல இச்சின்மொழிக்குப்பழியிப்பொழுதேயில்லையாம். நீ நினையாமையிற் பழியாகாநின்றது. எ-று.

நிகழுநிகழாநிகழ்த்தினல்லாலென்புழி நிரனிறையாகக்கூட்டப்பட்டது. அகழுமதிலுமலங்காரநீர்மையவென்பதுபோதர, அணிதில்லையென்றார். அகழுமதிலுமழகுசெய்தவென எழுவாயாக்கியுரைப்பினுமமையும். வழிவேறுபடுதல்- இவளையெய்துமுபாயங்களவன்றிவரைவாய்வேறுபடுதல். மன்னும் - அசைநிலை. பழிவே

றுபடுதல்- பழித்தன்மைதிரிந்துகெடுதல். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-அச்சம். பயன்-அலரறிவுறீஇவரைவுகடாதல்(௩௮௧)

கடலொடுவரவுகேட்டல்.

கடலொடுவரவுகேட்டலென்பது-ஒருவழித்தணத்தற்காற்றாது வருந்தாநின்றதலைமகள், நம்மைவிட்டுப்போனவர் மீண்டுவரும் பரிசுனக்குரைத்தாரோவெனக் கடலொடுதலைமகன் வரவுகேளாநி ற்றல். அதற்குச்செய்யுள்.

ஆரம்பரந்துதிரைபொருநீர்முகின்மீன்பரப்பிச் *
சேரம்பரத்திற்றிகழ்ந்தொளிதோன்றுந் துறைவர்சென்றார் *
போரும்பரிசுபுகன்றனரோபுலியூர்ப்புனிதன் *
சீரம்பர்சுற்றியெற்றிச்சிறந்தார்க்குஞ்செறிகடலே. (௩௮௨)

மணந்தவரொருவழித் தணந்ததற்கிரங் கி
மறிதிரைசேரு மெறிகடற்கியம்பிய து.

(இ-ள்.) புலியூர்க்கணுளனாகிய தூயோனது புகழையுடைய அம்பரைச்சூழ்ந்து கரையைமோதி மிக்கொலிக்கும்வரையிகவாதகடலே, முத்துப்பரந்து திரைகடம்முட்பொருங்கடனீர் முகிலையு மீனையுந்தன்கட்பரப்பிச்சேர்த்தவாகாயமேபோல்விளங்கியொளி புலப்படுத்துந்துறையையுடையவர் நம்மைவிட்டுச்சென்றவர் மீண்டுவரும்பரிசு உனக்குக்கூறினரோ?உரை. எ-று.

பரப்பியென்னும்வினையெச்சம் சேரம்பரமென்னும்வினைத்தொகையின் முன்மொழியோடுமுடிந்தது. பரப்பிவிளங்குமென ஒருசொல்வருவித்துமுடிப்பினுமமையும். பரப்பியென்பதற்கு முன்மீன்பரப்பியென்பதற்குரைத்ததுரைக்க. திகழ்ந்தென்றது ஒன் ஒளிமிகுதிவிளங்கும். போதருமென்பது போருமென இடைக்குறைந்து நின்றது. கண்டேனுவமமுண்மையின், உள்ளுறையுவமமின்மையறிக. (௩௮௨)

கடலொடுபுலத்தல்.

கடலொடுபுலத்தலென்பது - கடலொடுவரவுகேட்டதலைமகள், அது தனக்குவாய்திறவாமையின் என்வலைகொண்டுபோனார்திறம் யான்கேட்க நீகூறுதொழிகின்றதென்னெனப் பின்னும் அக்கடலொடுபுலந்துகூறுநிற்றல. அதற்குச்செய்யுள்.

பாணிகர்வண்டினம்பாடப்பைம்பொன்றருவெண்கிழிதரு *
சேணிகர்காவின்வழங்கும்புன்னைத்துறைச்சேர்ப்பர்திங்கள் *

வாணிகர்வெள்வளைகொண்டகன்றார்திறம்வாய்திறவாய் *
பூணிகர்வாளரவன்புலியூர்சுற்றும்போர்க்கடலே. (௩௮௬)

செறிவளைச் சின்மொ ழி
யெறிகடற் கியம்பிய து.

(இ-ள்.) பூணையொக்குமொளியையுடைய அரவையணிந்தவன துபுலியூரைச்சூழ்ந்த கரைபொருதலையுடையகடலே, பாணரை யொக்கும்வண்டினங்கள்சென்றுபாடத் தாதாகியபசும்பொன்னை ப்புலப்படுத்தாநின்ற போதாகியவெண்கிழியைத் தமதுசெய்ம்மை க்கண் விளங்குங்காவினின்று அவற்றிற்குக்கொடுக்கும்புன்னைகளை யுடைய துறையையணைந்தசேர்ப்பை யுடையராகிய திங்களினொ ளிபோலுமொளியையுடைய என்வெள்வளையைத் தம்மொடுகொ ண்டுபோனவரது திறத்தை எமக்குக்கூறுகின்றிலை; நீகூறுதொழிலி ன்றதென்! எ-று.

கிழிதமென்று கிழிக்குப்பெயராகவுரைப்பாருமுளர். வாய்திற வாயென்பதற்குக் கூறுவாயாகவென்றுரைப்பினுமமையும். ()

அன்னமோடாய்தல்.

அன்னமோடாய்தலென்பது- கடலொடுபுலந்து கூறியதலைமக ள், புன்னையொடுபுலந்து, அகன்றவர் அகன்றேயொழிவரோ ய ன்றறிகின்றிலேன் நீயாயினுஞ்சொல்லுவாயாகவென அன்னமோ டாய்ந்துவரவுகேளாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பகன்றாமரைக்கண்கெடக்கடந்தோன்புலியூர்ப்பழனத் *
தகன்றாமரையன்னமேவண்டுநீலமணியணிந்து *
முகன்றாழ் குழைச்செம்பொன்முத்தணிபுன்னை யின்னுமுரையா
தகன்றாரகன்றேயொழிவர்கொல்லோநம்மகன்றுறையே. ()

மின்னிடை மடந் தை
யன்னமோ டாய்ந்த து.

(இ-ள்.) பகனென்னும் பெயரையுடைய வாதித்தனது தாமரை போலுங்கண்கெட அவனைவென்றவனதுபுலியூரைச்சூழ்ந்தபழன த்தின்கணுண்டாகிய அகன்றதாமரைக்கண்வாழும் அன்னமே, வ ண்டாகியநீலமணியையணிந்து தாதாகியசெம்பொன்னையும் அரு ம்பாகியமுத்தையுமணிந்தமுகத்துத் தாழ்ந்தகுழையையுடைய பு ன்னை இந்நிலைமைக்கண்ணுமொன்றுசொல்லுகின்றதில்லை. அகன் றவர் நமதகன்றதுறையை யகன்றேவிடுவரோ? அறியேன், நீயு ரை. எ-று.

முகன்றூழ்குழையென்பது இருபொருட்படநின்றது. யானித்தன்மையேனாகவும் மணியணிந்தின்புற்று நிற்கின்றபுன்னை எனக்கொன்றுசொல்லுமோ அன்னமே எனக்கு நீகூறென்பதுகருத்து. நண்டுநம்மோடுதாம்விளையாடும் விளையாட்டை மறந்தேவிடுவரோவென்னுங்கருத்தால், நம்மகன்றுறையையகன்றேயொழிவர்கொல்லோவென்றாள். (௱௮௪)

தேர்வழிநோக்கிக் கடலொடுகூறல்.

தேர்வழிநோக்கிக்கடலொடுகூறலென்பது- அன்னமொடுவரவு கேட்டதலைமகள், அதுவும்வாய்திறவாமையின், இனியவர்வருகின்றாரல்லர் எம்முயிர்க்குப் பற்றுக்கோடினியிதுவே இதனைநீயழியாதொழிவாயென அவன்சென்றதேர்வழிநோக்கிக் கடலொடுகூறுநிற்றல் அதற்குச்செய்யுள்.

உள்ளுருகியுரோமஞ்சிலிர்ப்பவுடையவனாட் *
கொள்ளுமவரிலொர்கூட்டந்தந்தான்குனிக்கும்புலியூர் *
விள்ளும்பரிசுசென்றார்வியன்றேர்வழிதூரற்கண்டாய் *
புள்ளுந்திரையும்பொரச்சங்கமார்க்கும்பொருகடலே. (௱௮௫)

மீன்றோய்த்துறைவர் மீளுமள வு
மான்றேர்வழியையழியேலென்றது.

(இ-ள்.) புள்ளுந்திரையுந்தம்முட்பொரச் சங்கொலிக்குங்கரைபொருங்கடலே, உள்ளுருகி மெய்ம்மயிர்சிலிர்ப்ப உடையவனாகியதாளுட்கொள்ளுமடியாருள் எமக்கோர்கூட்டத்தைத்தந்தவன் நின்று கூத்தாடும்புலியூரைநீங்கும்வண்ணஞ்சென்றவரதுபெரிய தேர் போனவழியை நின்றிரைகளாற்றூராதொழியவேண்டும். எம்முயிர்க்குப்பற்றுக்கோடினியிதுவே. எ-று.

உள்ளுமென்றவும்மையாற் புறத்துக்கண்ணீர்தழுவப்பட்டது. ஆட்கொள்ளுமவர்பெருமைதோன்ற உடையவனென்ன அவன்பெருமைவிளக்கும்பெயராண்டுக்கூறினார். விள்ளுதல் செலவான்வருங்காரியமாதலின், விள்ளும்பரிசுசென்றாரென்றாள். கண்டாயென்பது முன்னிலையசைச்சொல். குனிக்கும்புலியூர்நகர்ச்சியை நினையாது நீங்கிய வன்கண்மையார் இனிவருவரென்னு நசையிலம் அவர்தேர்ச்சுவடாயினும் யாங்காணநீயதனையழியாதொழியென்பதுகருத்து. விள்ளும்பரிசுசென்றாரென்பதற்குப் புலியூரைநீக்கினாற்போல யான்றன்புறம்வண்ணமெனினுமமையும். விள்ளுதல்- வாய்நிழத்தலென்று, அலர்கூறி நகும்வண்ணஞ்சென்றவரெனி

றுமமையும். பொரச்சங்கமார்க்குமென்புழிப்பொருஞ்சங்கெச்லியுமெனவொருபொருடோன்றியவாறுகண்டுகொள்க. கூட்டந்தந்தானென்றுபாடமோதி ஆட்கொள்ளுமவனைப்போலின்புறவமக்கோர்புணர்ச்சியைத் தந்தானெனத் தலைமகன்மேலேற வுரைப்பாருமுளர். அலங்காரம்-அல்பொருட்டற்குறிப்பேற்றம். (௱௮,௫)

கூடலிழைத்தல்

கூடலிழைத்தலென்பது - தேர்வழிநோக்கிக்கடலொடுகூறுநின்றதலைமகள், இம்மணற்குன்றின்கண் நீத்தகன்றவள்ளலை உள்ளத்தைநெகிழ்த்து இவ்விடத்தேதரவல்லையோவெனக் கூடற்றெய்வத்தைவாழ்த்திக்கூடலிழைத்துவருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஆழிதிருத்தம்புலியூருடையானருளினளித் *
தாழிதிருத்துமணற்குன்றினீத்தகன்றார்வருகென் *
றூழிதிருத்திச்சுழிக்கணக்கோதிநையாமலைய *
வாழிதிருத்தித்தரக்கிற்றியோவுள்ளம்வள்ளலையே. (௱௮௬)

நீடலந் துறையிற்
கூட லிழைத்தது.

(இ-ள்.) ஆழிசூழ்ந்தமண்முழுதையுந்திருத்தும்புலியூரனையுடையவனதருள்போல இன்புறவளித்துக்கடல்வந்து திருத்துமணற்குன்றின்கண் என்னை நீத்தகன்றவர்வரவேண்டுமென்று கூடலையிழைத்துச் சுழிக்கணக்கைச்சொல்லி யான்வருந்தாமல், ஐயனே, வாழ்வாயாக, அவனுள்ளத்தைநெகிழ்த்து வள்ளலைமீண்டுத்தரவல்லையாயின். யானிரக்கின்றேன். எ-று.

முதற்கணூழி ஆகுபெயர். ஆழிதிருத்தம்புலியூரென்பதற்குப் பிறவுமுரைப்ப. திரைவந்துபெயரும்பெருமணலடைகரையைப் பின்னையாதகொடியோர் இனிவருதல் யாண்டையதென்னுங்கருத்தான், ஆழிதிருத்துமணற்குன்றி னீத்தகன்றாரென்றாள். ஐயவென்றது-கூடற்றெய்வத்தை. நீடலந்துறையென்பதற்குக் கமழலந்துறைக்குரைத்ததுரைக்க. (௧௮௬)

சுடரொடுபுலம்பல்.

சுடரொடுபுலம்பலென்பது- கூடலிழைத்துவருந்தாநின்றதலைமகள், துறைவர்போக்கும் அவர்சூளறவும் என்னைவருத்தாநின்றன அதன்மேல் நீயுமேகாநின்றாய் யானினியுய்யுமாறென்னோவெனச் செல்லாநின்றசுடரொடுபுலம்பாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கரித்துரங்கந்திரைதோணிசுறுக்கடன்மீனெறிவோர் *
போர்த்தரங்கந்துறைமானுந்துறைவர்தம்போக்குமிக்க *
தீர்த்தரங்கன்றில்லைப்பல்பூம்பொழிற்செப்பும்வஞ்சினமு *
மார்த்தாரங்குஞ்செய்யுமாறுய்யுமாறென்கொலாஞ்சுடரே. (௱௮௭)

குணகடலெழுசுடர் குடக்கடற்குளிப் ப
மணமலிகுழலி மன்ம்புலம்பிய து.

(இ-ள்.)கரிபரியையும், திரையாகின்றதோணியும், சுறுவும், மீனெறிவோரும், கடலும், போரைத்தருமங்கங்களையும் அக்களத்தையுமொக்குந் துறையையுடையவரது பிரிவும், சிறந்ததூயோராகிய அரியயர்களுடையவென்பையணிந்தவனது தில்லைவரைப்பினுண்டாகிய பல்பூம்பொழிற்கண் நின்னிற்பிரியேனென்றுசொல்லும் வஞ்சினமும், என்மேனியை நோயுற்றார் மேனியாகச்செய்யாநின்றன. வீழாநிற்கசுடரே, யானுய்யுநெறியென்னே! கூறுவாயாக-எ-று.

குதிரைத்திரள் தரங்கத்திற்கும், தேர் தோணிக்கும், யானை சுறுவிற்கும், காலாள் மீனெறிவோர்க்கும், போர்க்களங் கடற்குமுவமையாகவுரைக்க. தரங்கமுதலாயினவற்றைப் போரைத்தருமங்கத்தையுடைய களத்தையொக்குந் துறையென மூன்றாவது விரித்துரைப்பாருமுளர். இதற்கு அங்கத்துறையென்றது மெலிந்துநின்றது. போரைத்தருமங்கமென்பதனைத் தொகுக்கும்வழித்தொகுத்தார். துறைவர்போக்கும் தில்லைவரைப்பிற்குளறவும் என்றுமென்னும்மெச்சத்தளாய், ஆர்த்தரங்கஞ்செய்யுமென்றார். (௱௮௭)

பொழுதுகண்டு மயங்கல்.

பொழுதுகண்டுமயங்கலென்பது-சுடரொடுபுலம்பாநின்றவள், கதிரவன்மறைந்தான், காப்பவர்சேயர், அதன்மேலிவ்விடத்து மீனுண்டவன்னங்களும்போய்த் தஞ்சேக்கைகளையடைந்தன இனியானுற்றுமாறென்னோவென மாலைப்பொழுதுகண்டு மயங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

பகலோன்கரந்தனன்காப்பவர்சேயர்பற்றற்றவர்க்குப் *
புகலோன்புகுநர்க்குப்போக்கரியோனெவரும்புகலத் *
தகலோன்பயிறில்லைப்பைம்பொழிற்சேக்கைகளேக்கினவா *
லகலோங்கிருங்கழிவாய்க்கொழுமீனுண்டவன்னங்களே. (௱௮௮)

மயறருமாலை வருவதுகண் டு
சயறருகண்ணி கவலையுற்ற து.

(இ-ள்.) கதிரவன்மறைந்தான், இம்மாலைக்காலத்துவருந்துன்பத்தைக் காத்தமைவர் சேயராயிருந்தார், அதுவேயுமன்றி இவ்வகலோங்கிருங்கழிபிடத்துக்கொழுமீனையுண்டவன்னங்களும்இவ்விடத்தைவிட்டுத் தஞ்சேக்கைகளைநோக்கின. இனியென்செய்வேன்! எ-று. புலன்களிற் பற்றற்றவர்க்குப் புகலிடமாயுள்ளான், தன்கட்புகுவார்க்குப்பின்போதரவரியவன், எல்லாருமேத்தத் தகுதலையுடையவன், அவன்பயிலுந்தில்லைவரைப்பிற்பைம்பொழில்களினுளவாகிய சேக்கைகளெனக்கூட்டுக.

ஓங்குதல்-ஓதமெறிநீருயர்தல். கொழுமீனென்பது ஓர்சாதி.()

பறவையொடுவருந்தல்.

பறவையொடுவருந்தலென்பது-பொழுதுகண்டுமயங்காநின்ற தலைமகள், இந்நிலைமைக்கண்ணும் என்னுண்ணோயறியாது கண்ணோட்டமின்றித் தம்வயிறோம்பாநின்றன இஃதென்னைபாவமென வண்டானப்பறவையொடுவருந்திக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொன்னுமணியும்பவளமும்போன்றுபொலிந்திலங்கி *
மின்னுஞ்சடையோன்புலியூர்விரவாதவரினுண்ணோ *
யின்னுமறிகில்வாலென்னைபாவமிருங்கழிவாய் *
மன்னும்பகலேமகிழ்ந்திரைதேரும்வண்டானங்களே. (௱௮௯)

செறிபிணிகைம்மிகச் சிற்றிடைப்பேதை
பறவைமேல்வைத்துப் பையுளெய்தியது.

(இ-ள்.) என்னாற்றாமைக்குப்பரிகாரமாவதியாதுஞ்சிந்தியாது இருங்கழியிடத்துப் பகலேபுகுந்து விரும்பித்தமக்குணவுதேடும்வண்டானங்களாகியகுருகுகள் என்னுண்ணோயையிந்நிலைமைக்கண்ணுமறிகின்றனவில்லை. இஃதென்னைபாவம்! எ-று. பொன்போலப்பொலிந்து மாணிக்கம்போலவிட்டுவிளங்கிப் பவளம்போலமின்னுஞ் சடையையுடையவனது புலியூரைக் கலவாதாரைப்போல யானுறுமுண்ணோயெனக்கூட்டுக.

உறுமெனவொருசொல் வருவித்துரைக்கப்பட்டது. முன்னறிந்தனவில்லையாயினும் இனியறியவேண்டுமென்பதுகருத்து. புலியூரைவிரவாதார்கண்ணோட்டமிலராகலிற் புலியூரைவிரவாதவரினின்னுமறிகிலவென்றியைத்துரைப்பினுமமையும். நிரனிறையாகக் கொள்ளாது எல்லாமெல்லாவற்றின்மேலுமேறவுரைப்பினுமமையும். மன்னும்-அசைநிலை. (௱௮௯)

பங்கயத்தோடுபரிவுற்றுரைத்தல்.

பங்கயத்தோடுபரிவுற்றுரைத்தலென்பது-பறவையோடுவருந் தாநின்றவள், இவையென்வருத்தங்கண்டு இவள்வருந்தாமல் விரை யவரவேண்டுமென்று ஞாயிற்றைநோக்கித்தங்கைகுவியாநின்றன வாதலால் என்மாட்டன்புடையனபோலுமெனப் பங்கயத்தோடு பரிவுற்றுக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கருங்கழிகாதற்பைங்கானலிற்றில்லையெங்கண்டர்விண்டா *
ரொருங்கழிகாதரமூவெயில்செற்றவொற்றைச்சிலைசூழ்ந் *
தருங்கழிகாதமகலுமென்றோமெழன்றலந்துகண்ணீர் *
வருங்கழிகாதல்வனசங்கள்கூப்புமலர்க்கைகளே. (௱௯௰)

முருகவிழ் கா ன
லொம்பரி வுற்ற து.

(இ-ள்) தில்லைக்கணுளராகிய எம்முடையகண்டர் பகைவரொ ருங்கேயழியுமச்சத்தையுடைய மூவெயிலைச்செற்ற தனிவில்லைச் சூழ்ந்து அரியவாகியமிக்ககாதங்களைப்போகாநின்றதுஎன்றாழ்இ னிபிவளெங்ஙனமாற்றுமென்றுவருந்திக் கருங்கழியின் கண்ணுங் காதலையுடையபைங்கானலின்கண்ணுமுளவாகித்துன்புற்றுக் கண் ணீர்வாராநின்றகழிகாதலையுடையதாமரைகள் விரைந்துவரவேண் டுமென்று அஞ்ஞாயிற்றைநோக்கி, தம்மலராகியகைகளைக்கூப்பி, பிரவாநின்றன. இவையென்மாட்டன்புடையனபோலும் எ-று.

கானலின்வனசங்களெனவும், தில்லையெங்கண்டர் செற்றவென வுங்கூட்டுக. கானலிற்கைகூப்புமெனவியைப்பினுமமையும். கான ற்பொய்கையின்வனசம் கானலின்வனசமெனப்பட்டன. அலந் து கண்ணீர்வருமென்பது இருபொருட்டாகலின், மலர்ந்துகள் ளாகியநீர்வருமென்றுரைக்க. இப்பொருட்கு அலர்ந்தென்பதிடை க்குறைந்துநின்றதாகக்கொள்க. கதிரோன்றம்மைப் பிரியவாற்று துகடிதுவரவேண்டுமென வனசங்கள் கைகூப்பாநின்றனவென்று அவற்றிற்கிரங்கினாளாகவுரைப்பினுமமையும். அலர்ந்தவென்பது பாடமாயின், அலர்ந்த வனசமெனவியையும். (௩௯௰)

அன்னமோடழிதல்.

அன்னமோடழிதலென்பது-பங்கயத்தைநோக்கிப்பரிவுறாநின் றவள், உலகமெல்லாந்துயிலாநின்றவிந்நிலைமைக்கண்ணும் யான் து யிலாமைக்குக்காரணமாகிய என்வருத்தத்தைச்சென்று அவர்க்

க்குச்சொல்லாது தான்றன் சேவலைப்பொருந்திக் கவற்சியின்றித் துயிலாநின்றதென அன்னத்தோடழிந்துகூறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

மூவறழீஇயவருண்முதல்வோன்றில்லைச்செல்வன்முந்நீர் *
நாவறழீஇயவிந்நானிலந்துஞ்சுநயந்தவின்பச் *
சேவறழீஇச்சென்றுதான்றுஞ்சும்யான்றுயிலாச்செயிரோங் *
காவறழீஇயவர்க்கோதாதளியகளியன்னமே. (௱௯௧)

இன்னகையவ ளிரவருதுய ர
மன்னத்தோ டழிந்துரைத்த து.

(இ-ள்.) மூவலைப்பொருந்திய அருளையுடையமுதல்வன், தில்லைக்கணுளனாகியசெல்வன், அவனுடைய கடலாற்சூழப்பட்ட நாவலைப்பொருந்திய இந்நானிலமுழுதுந் துஞ்சாநின்றது. இப்பொழுதினும் யான்றுயிலாமைக்குக் காரணமாகிய வருத்தத்தை எமது காவலைப்பொருந்தினவர்க்குரையாதே அளித்தாகிய களியன்னம் இவ்விடத்துநின்றும்போய்த் தானயந்தவின்பத்தைச் செய்யுஞ் சேவலைத்தழுவி ஒருகவற்சியின்றித் தான்றுயிலாநின்றது. இனியிது கூறுவார் யாவர்! எ-று.

மூவலென்பது ஒருதிருப்பதி. பாலைக்குநிலமின்மையின், நானிலமெனப்பட்டது. நயந்தசேவலைப்பொருந்திய களிப்பால் அன்னஞ்சென்றுரையாமையல்லது அவரெம்மைக்காவாது விடாரென்னுங்கருத்தான், எங்காவறழீஇயவர்க்கென்றாள். ஓதாதென்பதனை முற்றாகவுரைப்பினுமமையும். நெய்தற்றிணைகூறுவார் சேர்த்துன்னடியமென்பதுதொட்டுப் புகலும்பழிபுமென்னுங்காறும்வரப் பாட்டொன்பதும்இரங்கனிமித்தமாகக்கூறிஒருவழித்தணத்தற்றுறையிடத்து ஆரம்பரந்தென்பதுதொட்டு இதன்காறும்வர இப்பாட்டுப்பத்தும் இரங்கலேகூறுதலால்திணை-நெய்தல். என்னை-வாட்டம் உரிப்பொருளாதலின். கைகோள்-கற்பு. மெய்ப்பாடு-அழுகை. பயன்-அயர்வுயிர்த்தல். (௱௯௧)

வரவுணர்ந்துரைத்தல்.

வரவுணர்ந்துரைத்தலென்பது-தலைமகளன்னத்தோடழிந்து வருந்தாநிற்ப, தலைமகனொருவழித்தணந்துவந்தமை சிறைப்புறமாகவுணர்ந்ததோழி, வளைகள்நிறுத்தநிற்கின்றனவில்லை, நெஞ்சம்நெகிழ்ந்துருகாநின்றது, கண்கள் துயிலின்றிக்கலுழாநின்றன, இவையெல்லாம் யான்சொல்லவேண்டுவதில்லை, நீயேகண்டாய், இதனைச்

சென்று அவர்க்குச்சொல்லுவாயென மதியொடுகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

தில்லாவளைநெஞ்சநெக்குருகுநெடுங்கண்டுயிலக் *
கல்லாகதிர்முத்தங்காற்றுமெனக்கட்டுரைக்கதில்லைத் *
தொல்லோனருள்களில்லாரிற்சென்றார்சென்றசெல்லல்கண்ட *
ரெல்லாமதியேயிதுநின்னையானிரக்கின்றதே. (௩௯௨)

சென்றவர்வரவுணர்ந்து நின்றவணிலை . மை
சிறப்புடைப்பாங்கி சிறைப்புறத்துரைத்த து.

(இ-ள்) ஒளியார்தமதியே,தில்லைக்கணுளனாகிய தொல்லோனது அருளுடையாரல்லாதாரைப்போலக் கண்ணோட்டமின்றிப் போனவர் போதலானுண்டாகிய இன்னாமையை நீயேகண்டாய், யான்சொல்லவேண்டுவதில்லை. வளை நிறுத்த நிற்கின்றனவில்லை, நெஞ்சநெகிழ்ந்துருகாநின்றது,நெடிய்கண்கடுயிலாவாய்க்கணீர்த் துளியாகிய கதிர்முத்தங்களை விடாநிற்றனவென்று அவர்க்குச்சொல்வாயாக,நின்னை யானிரக்கின்றது. எ-று.

துயிலக்கல்லாவென்பது ஒருசொல் முத்தங்காலுமென்பதுமொம்பாடம். எல்லாமதியேயென்பதுபாடமாயிற் செல்லலெல்லாமென்றுகூட்டியுரைக்க. மெய்ப்பாடு - அச்சம். பயன் - வரைவுகடாதல். (௩௯௨)

வருத்தமிகுதிகூறல்.

வருத்தமிகுதிகூறலென்பது-சிறைப்புறமாக மதியொடுவருத்தங்கூறிச்சென்றெதிர்ப்பட்டுவலஞ்செய்துநின்று, நீ போய், அவள்படாநின்றவருத்தம் என்னாற்சொல்லு மளவல்லவென வரைவுதோன்றத் தலைமகளதுவருத்தமிகுதி தோழி கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

வளருங்கறிபறியாமந்திதின்றம்மர்க்கிடமாய்த் *
தளருந்தடவரைத்தண்சிலம்பாதனதங்கமெங்கும் *
விளரும்விழுமெழும்விம்முமெலியும்வெண்மாமதிநின் *
றொளிருஞ்சடைமுடிபோன்புலியூரன்னவொண்ணுதலே (௩௯௩)

நீங்கி யணைந்தவற்கு ப்
பாங்கி பகர்ந்த து.

(இ-ள்.) வளராநின்ற மிளகுகொடியைத் தமக்கேற்றவுணவென்றறியாத இளையமந்தி தின்று வருத்தத்திற்கிடமாய் நிலைதளரும்பெரியவரைகளையுடைய தண்சிலம்பையுடையாய், வெள்ளியபெரிய

மதிநின்றுவிளங்குஞ்சடையானியன்ற முடியையுடையவனது புவி பூவைபோக்குமொண்ணுதல் தன்மேனிமுழுதும்பசக்கும், அமளிக்கண்விழாநிற்கும், எழாநிற்கும், பொருமாநிற்கும், நின்வன்கண்மையைநினைந்து மெலியாநிற்கும், அவளின்னநிலைமையளென்றென்றுச்சொல்லப்படாது எ-று.

வளருமிளங்கறி கண்ணிற்கினிதாயிருத்தலின் இது நமக்குத் துய்க்கப்படாதென்றுணராத இளமந்தி அதனைத்தின்று வருந்துமாறுபோலக் கண்ணுமனமுமகிழுமுருவினையாகிய நின்னை நின்பெருமையுணராதெதிர்ப்பட்டுவருந்தாநின்றாளெனவுள்ளுறைகாண்க. மெய்ப்பாடும் பயனும் அவை

இவ்வாறொருவழித்தணந்துவந்து வரைவுமாட்சிமைப்படவும் பெறும். அன்றியுமுடன்போக்குநிகழப்படும். (௱௯௫)

ஒருவழித்தணத்தல் - முற்றிற்று.

உடன்போக்கு.

இவ்வாறொருவழித்தணத்தல் நிகழாதாயின், உடன்போக்கு நிகழும். அதுவருமாறு.

சூத்திரம். பருவங்கூறல் படைத்துமொழிதலொடு, மருவமர் கோதையை மகட்பேச்சுரைத்தல், பொன்னணிவுரைத்தல் பொருள்விலைகூறல், அன்னமென்னடையாளருமைகேட்டழிதல், தளர்வறிந்துரைத்தல் சூழ்குழலாட, னுளநினைவுரைத்த லுடன்கொண்டுசேறற்கருமையுரைத்த லாதரங்கூறன், மருவியதடங்கயல் வாழாளென்றல், பொருவருகற்பின் புனைநலனுரைத்த, றுணிந்ததைகூற றுணிவுகேட்ட, றுணிவறிவித்த றொல்லைநாண்விட, றுணிவெடுத்துரைத்தல்கொண் டகலெனவுரைத்த, லடிவழிநினைந்துநின் றவனுளம்வாடல், கொடியிடையாளைக் கொண்டுசென்றய்த்த, லோம்படுத்துரைத்தல் வழிப்படுத்துரைத்த, றேம்படுகோதையைத் திறலடுவேலோன், பையக்கொண்டேகல் பயங்கெடவுரைத்தன், மையமர்கண்ணியை வழிபடர்வகற்ற, னெறிவிலக்கலொடு நெறியிடைக்கண்டவர், செறிவெடுத்துரைத்தல் சேயிழையாளுடன், விழிவிளையாடல்வழி யெதிர்வருவோ, ரெழினகரணிமை யிதுவெனவுரைத்த, னகர்காட்டலொடு நகரிடைப்புக்குப், பதிபரிசுரைத்தல் பாங்கிழையுக்கிட்டி, மதிநுதலாளை வளர்த்தவள்கேட்ட, லறத்தொடுநிற்றல

துகேட்டழுங்க, திறப்பாடுன்னிச் செவிலிகவன்றுரைத்த, லடிநினைந்திரங்க லதுகாய்க்குரைத்தல், மடவரல்போக வாடியுரைத்தல், கிளிமொழிக்கிரங்கல் இளர்சுடர்ப்பராய்த, லனிபெறுபருவத்திற்கவல்கவன்றுரைத்த, நாடத்துணித னற்றாய்நயந்தவர், கூடக்கரையெனக்கொடிக்குறிபார்த்தல், சோதிடங்கேட்டல் சுவடுகண்டறித, லேதமுற்றவைகண் டிரங்கியுரைத்தல், வேட்டமாதரைக் கண்டுவினவல், புறவொடுபுலத்தல் குரவொடுவருந்த, திறலருந்தவத்தொடு செல்லாநின்ற, மாவிரதியரை வழியிடைவினவல், வேதியர்தம்மைவிரும்பிவினவல், புணர்ந்துடன்வருவோரைப் பொருந்திவினவல், மணந்தருகுழலாண் மன்னியநிலையொடு, வெங்கைபட்டது கண்டுவியத்த, லாங்கவரிவை பணிவவட்கெடுத்துரைத்தல், மீளவுரைத்தல்மீளாதவளுக், கூழ்முறையிதுவென வுலகியல்புரைத்த, லழுங்குதாய்க்குரைத்தலைம்பதோடாறு, முழுங்கொலைவேலோனுடன்போக்காகும்

(இ-ள்.) பருவங்கூறல்-மகட்பேச்சுரைத்தல்-பொன்னணிவுரைத்தல்-அருவிலையுரைத்தல்-அருமைகேட்டழிதல்-தளர்வறிந்துரைத்தல்-குறிப்புரைத்தல்-அருமையுரைத்தல்-ஆதரங்கூறல்-இறந்துபாடுரைத்தல்-கற்புநலனுரைத்தல்- துணிந்தமைகூறல்- துணிவொடுவினவல்-போக்கறிவித்தல்-நாணிழந்துவருந்தல்- துணிவெடுத்துரைத்தல் - குறியிடங்கூறல் - அடியொடுவழிநினைந்தவனுளம்வாடல்-கொண்டுசென்றுய்த்தல்-ஓம்படுத்துரைத்தல்- வழிப்படுத்துரைத்தல்-மெல்லக்கொண்டேகல்-அடலெடுத்துரைத்தல்-அ[illegible]ர்வகற்றல்-நெறிவிலக்கிக்கூறல்-கண்டவர்மகிழ்தல்-வழிவிளை[illegible]- நகரணிமைகூறல்-நகர்காட்டல்-பதிபரிசுரைத்தல்- செவிலி[illegible]டல்-அறத்தொடுநிற்றல்-கற்புநிலைக்கிரங்கல்-கவன்றுரைத்தல்- அடிநினைந்திரங்கல்-நற்றாய்க்குரைத்தல்-நற்றாய்வருந்தல்- கிளிமொழிக்கிரங்கல்-சுடரோடிரத்தல்-பருவநினைந்துகவறல்- நாடத்துணிதல்- கொடிக்குறிபார்த்தல்-சோதிடங்கேட்டல் -சுவடுகண்டறிதல்-சுவடுகண்டிரங்கல்-வேட்டமாதரைக்கேட்டல்- புறவொடுபுலத்தல்- குரவொடுவருந்தல்-விரதியரைவினவல்-வேதியரைவினவல்- புணர்ந்துடன்வருவோரைப்பொருந்திவினவல்-வியந்துரைத்தல்-இவையெடுத்துரைத்தல்-மீளவுரைத்தல்-உலகியல்புரைத்தல்-அழுங்குதாய்க்குரைத்தலெனவிவையைம்பத்தாறும் உடன்போக்காம் எ-று. அவற்றுள்,

பருவங்கூறல்.

பருவங்கூறலென்பது அலரறிவுறுத்ததோழி, இவண்முலைமு

திர்வுகண்டமையான் மகட்பேசுவார்க்குளமர் மாறுகொடுக்கவு
நகூடும் அதுபடாமனிற்ப நீமுற்பட்டுவரைவாயாகவெனத் தலை
மகனுக்குத் தலைமகளது பருவங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஓராகமிரண்டெழிலாயொளிர்வோன்றில்லையொண்ணுதலக் *
கீராகம்பயின்றமிழ்தம்பொதிந்தீர்ஞ்சுணங்காடகத்தின் *
பராகஞ்சிதர்ந்தபயோதரமிப்பரிசேபணைத்த *
விராகங்கண்டால்வள்ளலேயில்லையேயெமரொண்ணுவதே. (௱௯௪)

உருவது கண்ட வ
ளருமை யுரைத்தது.

(இ-ள்.) ஒருமேனி பெண்ணழகு மாணழகுமாகிய விரண்டழ
காய் விளங்குமவனது தில்லைக்கணுளளாகிய வொண்ணுதலுடைய
பூசப்படுவனயயின்று அமிர்தத்தைப் பொதிந்து நெய்த்தசுணங்
காகியசெம்பொன்னின்பொடியைச்சிதறினமுலைகள் இப்படியே
பெருத்தகதிர்ப்பைக்கண்டால், வள்ளலே, இவண்மாட்டெமர் நினை
ப்பதில்லையே சிலவுளவாய் எ-று.

இராகம் வடமொழிச்சிதைவு, ஈண்டுநிறமென்னும்பொருட்டு.
இராகம்-முடுகுதலென்பாருமுளர். தில்லையொண்ணுதலிராகமெ
னவியையும். மெய்ப்பாடும் பயனும்-அவை. (௱௯௪)

மகட்பேச்சுரைத்தல்

மகட்பேச்சுரைத்தலென்பது-பருவங்கூறியதோழி, படைத்து
மொழியான் அயலவர்பலரும் மேன்மேலும் பொன்னணியக்கரு
தாநின்றார் [illegible] விரைய வரைவொடு வருவாயாதல் அன்றியுடன்கொ
ண்டுபோவாயாதல் இரண்டினுளொன்று துணிந்துசெய்யக்கருது
வாய் அதனையின்றேசெய்வாயாகவெனத் தலைமகனுக்கு அயலவர்
வந்து மகட்பேசல்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மணியக்கணியுமரனஞ்சமஞ்சிமறுகிவிண்ணோர் *
பணியக்கருணைதரும்பரன்றில்லையன்னாடிறத்துத் *
துணியக்கருதுவதின்றேதுணிதுறைவாநிறைபொன் *
னணியக்கருதுகின்றார்பலர்மேன்மேலயலவரே. (௱௯௫)

படைத்துமொழிகிளவியிற்பணிமொழிப்பாங்கி
யடற்கதிர்வேலோற் கறியவுரைத்தது.

(இ-ள்.) துறைவா, தில்லையையொப்பாடிறத்து நீ துணிந்துசெ
ய்யக்கருதுவதனை இன்றே துணிந்துசெய்வாயாக. அயலவர் நிறை
ந்தபொன்னைமேன்மேலுமணியக்கருதுகின்றார் பலர். எ-று. மணி

யாகிய அக்கையணியுமரன், நஞ்சையஞ்சிக் கலங்கிச்சுழன்ற தே வர்சென்றுபணிய அந்நஞ்சான்வருமிடர்க்கு மருந்தாகத்தன்கரு ணையைக்கொடுக்கும்பரன், அவனதுதில்லையெனக்கூட்டுக.

அக்குமணியெனினுமமையும். அலங்காரம்- ஒற்றுமைக்கொளு வுதல். மெய்ப்பாடு-பெருமிதம் பயன்-அது. (௱௬௫)

பொன்னணிவுரைத்தல்.

பொன்னணிவுரைத்தலென்பது- படைத்துமொழியான் மகட் பேசல்கூறினதோழி, அறுதியாகமுன்றிற்கணின்றுமுரசொடுபணி லமுழங்கக் காப்பணிந்து பொன்னணியப் புகுதாநின்றார், இனி நின்கருத்தென்னேவெனத் தலைமகனுக்கு அயலவர் பொன்னணி வுரையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பாப்பணியோன்றில்லைப்பல்பூமருவுசில்லோதியைநற் *
காப்பணிந்தார்பொன்னணிவாரினிக்கமழ்பூந்துறைவ *
கோப்பணிவான்றோய்கொடிமுன்றினின்றிவையேர்குழுமி *
மாப்பணிலங்கண்முழங்கத்தழங்குமணமுரசே. (௱௬௬)

பலபரிசிறுவு மலர்நெடுங்கண்ணி யை
நன்னுதற்பாங்கி பொன்னணிவசென்றது.

(இ-ள்.) கமழ்பூந்துறைவனே, பாம்பாகியவணியையுடையவன துதில்லைக்கணுள்ளாகிய பலவாகிய பூக்கள்பொருந்திய நுண்ணி யவோதியையுடையாளை நல்லகாப்பையணிந்தார்கள். இனிப்பொ ன்னையணிவார். கலியாணத்துக்குப்பொருந்தியகோப்புக்களையணி ந்தவானைத்தோயுங்கொடிகளையுடைய முன்றிற்கணின்றுமணமுர சங்களிவை எழொடுகுழுமிப் பெரியசங்கங்கள் முழங்கத் தாமொ லியாநின்றன. இனியடுப்பது செய்வாயாக. எ-று.

தில்லைப்பல்பூவென்றியைப்பினுமமையும். காப்பென்றது-கா வலை. அணிவாரென்றது-முற்றுச்சொல். கோப்பணி முன்றிலெனி னுமமையும். மெய்ப்பாடும் பயனும்-அவை. (௱௬௬)

அருவிலையுரைத்தல்.

அருவிலையுரைத்தலென்பது - பொன்னணிவுரைப்பக்கேட்டத லைமகன், யான் வரைவொடுவருதற்கு நீ முலைப்பரிசங்கூறுவாயாக வென, எல்லாவுலகமுநல்கினும் எமர் அவளுடைய சிறியவிடைக்கு விலையாகச்செப்பலொட்டார் இனிப்பெரியமுலைக்கு நீ விலைகூறு

லதென்றோவெனத் தோழி, விலையருமைகூறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

எலும்பாலணிபிறையம்பலத்தோனெல்லைசெல்குறுவோர் *
நலம்பாவியமுற்றுநல்கினுங்கல்வரைநாடரம்ம *
சிலம்பாவடிக்கண்ணிசிற்றிடைக்கேவிலைசெப்பலொட்டார் *
கலம்பாவியமுலையின்விலையென்னீகருதுவதே. (௱௯௭)

பேதையறிவு பேதைமையுடைத்தென
வாதரத்தோழி யருவிலையுரைத்தது.

(இ-ள்.) சிலம்பா, எலும்புகளானலங்கரிக்குமிறைவன், அம்பலத்தின்கண்ணான், அவனெல்லைக்கட்செல்லக்கருதுவாரது நன்மை பரந்தவுலகமுழுதையும் நீ கொடுப்பினும், எம்முடைய தமராகிய கல்வரைநாடர் வடுவகிர்போலுங் கண்ணையுடையாளது சிறியவிடைக்கேவிலையாகச்சொல்லுதலிசையார், கலம்பரந்தமுலையின்விலையாக யாதனைநீகருதுவது! ஒன்றற்கும் அவருடம்படார். எ-று.

எலும்பாற்செய்த வணியென்று ஒருசொல் வருவித்துரைப்பாருமுளர். எல்லைசேறல்-அறிவாலவனையணுகுதல். இல்லையெல்லையெனினுமமையும். அவர்நலம்பாவாவிடமின்மையின் எஞ்சாமைமுழுதுமென்பார், நலம்பாவியமுற்றுமென்றார். என்றது-அவர்சீவன்முத்தராயிருத்தல். அஃதாவது சீவனுடனிருக்கும்போதேமுத்தியையடைந்திருத்தல். முத்தியாவது-எங்குமொக்கவியாத்தியையடைந்திருத்தல். இது அகண்டபரிபூரணரென்றபடி. அம்ம-கேளென்னுங்குறிப்பின்கண்வந்தது. சிற்றிடைக்கேயென்னுமேகாரம் பிரிநிலை. இவனுயர்ந்ததலைமகனாதலால், தன்றமரைக்கல்வரைநாடரென்றும், பேதையரென்றும், கூறினாள். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-தலைமகளதருமையுணர்த்தல். (௱௯௭)

அருமைகேட்டழிதல்.

அருமைகேட்டழிதலென்பது-அருவிலைகேட்டதலைமகன், நீயவளதருமைகருதாது அவளதவயவங்களிலுண்டாகிய நயத்தைப்பற்றிவிடாது நடுங்காநின்றாய் இனி மதியைப்பிடித்துத்தரவேண்டியழும் அறியாக்குழவியைப்போலக் கிடந்தரற்றுவாயாகவெனத்தன்னெஞ்சொடழிந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

விசும்புற்றதிங்கட்கழுமழப்போன்றினிவிம்மிவிம்மி *
பசும்புற்றகண்டேடலறாய்கிடந்தரன்றில்லையன்னாள் *

றுயம்புற்றரவிடைகூரெயிற்றூறல்குழன்மொழியி *
னையம்பற்றிநின்றுநடுங்கித்தளர்கின்றநன்னெஞ்சமே. (௱௯௮)

பெருமைநாட்டத்த வ
ளருமைகேட்டழிந்தது.

(இ-ள்.) அரனதுதில்லையை யொப்பாளுடையமுலை, புற்றின்கண்வாழும்பாம்புபோலுமிடை, கூரியவெயிற்றில்கணூறியநீர், குழலோசைபோலுமொழி, என விவற்றின்கட்கிடந்த இன்பத்தையேகருதி விடாது நின்று அவளதருமை கருதாயாய் நடுங்கிவருந்தாநின்றநல்லநெஞ்சமே, விசும்பைப்பொருந்திய திங்களைத்தரவேண்டியழுங் குழவியையொத்து, நீரருமையைப்பொருந்தியகண்ணையுடையையாய்ப் பொருமிப்பொருமி, இனிக்கிடந்தலறுவாயாக. எ-று.

குழன்மொழியினென்னும் இன் - பலபெயரும்மைத்தொகையிறுதிக்கண்வந்தசாரியை இன். மெய்ப்பாடு-அழுகை. பயன்-ஆற்றாமைநீங்குதல். (௱௯௮)

தளர்வறிந்துரைத்தல்.

தளர்வறிந்துரைத்தலென்பது-வரைவுமாட்சிமைப்படாதாயின் நீயவளையுடன்கொண்டு போவென்பது பயப்ப, கடலையுங்கானலையுநோக்கிக் கண்ணீர்கொண்டு தன்னாயத்தாரையெல்லாம் புல்லிக்கொண்டாள் அவள்கருதியதின்னதென்று தெரியாதெனத் தோழி தலைமகளதுவருத்தங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மைதயங்குந்திரைவாரியைநோக்கிமடலவிழ்பூங் *
கைதையங்கானலைநோக்கிக்கண்ணீர்கொண்டெங்கண்டர்தில்லைப் *
பொய்தயங்குந்நுண்மருங்குனல்லாரையெல்லாம்புல்லினாள் *
பைதயங்கும்மரவம்புரையும்மல்குற்பைந்தொடியே. (௱௯௯)

தண்டுறைவன் றளர்வறிந் து
கொண்டுநீங்கெனக்குறித்துரைத்தது.

(இ-ள்.) படம்விளங்கும் பாம்பையொக்கும் அல்குலையுடைய பைந்தொடி, கருமைவிளங்குந்திரையையுடையகடலையுநோக்கி, மடலவிழாநின்ற பூவையுடையவாகிய தாழையையுடைய கானலையுநோக்கி, கண்ணீரைக்கொண்டு, பின் எம்முடையகண்டரது தில்லைக்கணுள்ளாராகிய பொய்யாதல்விளங்கும் நுண்ணிய மருங்குலையுடையதன்னாயத்தாராகிய நல்லாரையெல்லாம் புல்லிக்கொண்டாள்.

அவள்கருதியதொன்றுண்டுபோலும். எ-று.

கண்ணீர்கொண்டென்றது - பெண்களுக்கியல்பானகுணமொன்று, நெடுங்காலங்கூடமருவினரைவிட்டுநீக்குகின்ற துயரத்தாற்றோன்றியதொன்று, இக்காலமெல்லாம் உங்களைச்சேர்ந்து போந்தபெருநலத்தான் இப்பெருநலம்பெற்றேனென்னு மூவகைக்கண்ணீரொன்று. இப்பெருநலமென்றது-உடன்போக்கை.|ஆதலான், நல்லாரையெல்லாம் புல்லிக்கொண்டு கண்ணீர்கொண்டாள் பொய்போலுமசையுமருங்குலெனினுமமையும். குறித்துரைத்தது-கொண்டுநீங்கென்பது பயப்பவுரைத்தது. (௱௯௯)

குறிப்புரைத்தல்.

குறிப்புரைத்தலென்பது - வருத்தங்கூறிப் போக்குணர்த்தி அதுவழியாகநின்று, என்னைப்புல்லிக்கொண்டு தன்னுடையபூவையையும் பந்தையும்,பாவையையுங் கிளியையும் இன்றென்கைத்தந்தாள் அதுநின்னோடுடன்போதலைக்கருதிப்போலுமெனத்தோழி தலைமகனுக்குத் தலைமகளது குறிப்புரையாநிற்றல்.அதற்குச்செய்யுள்.

மாவைவந்தாண்டமென்னோக்கிதன்பங்கர்வண்டில்லைமல்லற் *
கோவைவந்தாண்டசெவ்வாய்க்கருங்கண்ணிகுறிப்பறியேன் *
பூவைதந்தாள்பொன்னம்பந்துதந்தாளென்னைப்புல்லிக்கொண்டு.
பாவைதந்தாள்பைங்கிளியளித்தாளின்றென்பைந்தொடியே.(௨௱

நறைக்குழ வி

குறிப் புரைத்தது.

(இ-ள்.) என்னுடையபைந்தொடி, இன்றென்னைப்புல்லிக்கொண்டு தன்பூவையையென்கையிற்றந்தாள், பின்பொற்றகட்டாற்புனைந்தபந்தைத்தந்தாள், பின்றன்பாவையைத்தந்தாள், பைங்கிளியையுமளித்தாள்,மானைச்சென்றடிமைக்கொண்ட மெல்லியநோக்கையுடையாளது கூற்றையுடையவரது வளவியதில்லை வரைப்பினுண்டாகிய வளத்தையுடைய கொவ்வைக்கனியைச்சென்றாண்டசெவ்வாயையுடைய இக்கருங்கண்ணியது கருத்தறிகின்றிலேன்,நின்னுடன்செல்லப்போலும். எ-று.

புல்லிக்கொண்டுபாவையைத்தந்தாளென்றியைத்து, பாவைமேலுள்ளவன்பால் அதனைத்தருவுழிப் புல்லிக்கொண்டு தந்தாளென்றுரைப்பாருமுளர். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு - பெருமிதம். பயன்-உடன்போக்குணர்த்துதல். (௨௭)

அருமையுணர்த்தல்.

அருமையுணர்த்தலென்பது- குறிப்புணர்த்துப்போக்குடம்படுத்தியதோழிக்கு, கொங்கைபொருதுறநடுங்காநின்ற இடையினையுடையாளது மெல்லியவடிக்கு யான்செல்லும் வெஞ்சுரங்கொடிது அதன்மேலும் எம்பதியுஞ்சேய்த்து அதனால் நீகருதுகின்ற காரியமிகவுமருமையுடைத்தெனத் தலைமகன் போக்கருமைகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மெல்லியல்கொங்கைபெரியமின்னேரிடைமெல்லடிபூக் *
கல்லியல்வெம்மைக்கடங்கடுந்திக்கற்றுவானமெல்லாஞ் *
சொல்லியசீர்ச்சுடர்த்திங்களங்கண்ணித்தொல்லோன்புலியூர் *
அல்லியங்கோதைநல்லாயெல்லைசேய்த்தெம்மகனகரே. (௨௱௧)

காவின்கடுமையு மானின்மென்மையும்
பதியின்சேட்சியு மிதுவெனவுணர்த்தது.

(இ-ள்.) வானுலகெங்கும் ஆண்டையராற் கற்றுச்சொல்லப்பட்டபுகழையுஞ் சுடரையுடையதிங்களாகிய கண்ணியையுமுடைய பழையோனது புலியூரில் அல்லியங்கோதையையுடைய நல்லாய், மெல்லியலுடையகொங்கைகள் பெரிய, அவற்றைத்தாங்குமிடை நுடக்கத்தான் மின்னுக்குநேராயிருந்தது, மெல்லியவடிகள் பூவேயாயிருந்தன, கல்லின்கணுண்டாகிய வெம்மையையுடையகாடு அவ்வடிக்குத்தகாததாய்க் கடியதீயாயிருந்தது, அதன்மேல் எம்முடையவகன்றநகரும் எல்லைசேய்த்தாயிருந்தது, அதனான், நீகருதியது பெரிதுமரிது. எ-று.

கல்லானிபன்றகடமெனவியைப்பினுமமையும். எல்லைசேய்த்தென்பன ஒருசொன்னீர்மைப்பட்டு அகனகரென்னுமெழுவாய்க்குமுடிபாயின. வானெல்லாமென்பதூஉம்பாடம். இதுவென்பதனை எல்லாவற்றோடுங்கூட்டுக. மெய்ப்பாடு-இளிவரல். பயன்- தலைமகனிலைமையுணர்த்துதல். (௨௱௧)

ஆதரங்கூறல்.

ஆதரங்கூறலென்பது- போக்கருமைகூறியதலைமகனுக்கு, நின்னொடும்போகப்பெறின் அவளுக்குவெஞ்சுரமுந்தண்சுரமாம் நீயருமைகூறுது அவளைக்கொண்டுபோவெனத் தோழி தலைமகனுக்காதரங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பிணையுங்கலையும்வன்பேய்த்தேரினைப்பெருநீர்நசையா *
லணையுமுரம்புநிரம்பியவத்தமுமையமெய்யே *
யிணையுமளவுமில்லாவிறையோனுறைதில்லைத்தண்பூம் *
பணையுந்தடமுமன்றேநின்னொடேகினெம்பைந்தொடிக்கே. ()

அழற்றடம்புனையு மருஞ்சுரமது வு
நிழற்றடமவட்கு நின்னொடேகினென்றது.

(இ-ள்.) பிணையுங் கலையும் மிக்கநீர்வேட்கையாற் பெரியபேய்த்தேரினைச்சென்றணுகும் முரம்பானிரம்பியசுரமும், ஐயனே, நின்னோடுசெல்லின் மெய்யாக எம்பைந்தொடிக்கு ஒப்புமெல்லையுமில்லாத இறையோனுறைகின்றதில்லைவரைப்பிற்பூக்களையுடையகுளிர்ந்தமருதநிலமும் பொய்கையுமல்லவோ! நீ யிவ்வாறுகூறுவதென்! எ-று.

முரம்பு-கல்விரவியுயர்ந்திருக்குநிலம். ஏகினென்னும்வினையெச்சம் பணையுந்தடமுமாமெனவிரியுமாக்கத்தோடு முடிந்தது. அழற்றடம்-தீக்காய்கலம் விகாரவகையால் தடா-தடமெனநின்றது. அழலானிறைந்தபொய்கையெனினுமமையும். அலங்காரம் - புகழாப்புகழ்ச்சி. (௨௱௨)

இறந்துபாடுரைத்தல்.

இறந்துபாடுரைத்தலென்பது - ஆதரங்கூறியதோழி, நீயுடன்கொண்டுபோகாயாகில் அலராலுங் காவன்மிகுதியாலும் நின்னையெதிர்ப்படுதலரிதாகலின், தடந்துறந்த கயல்போல இறந்துபடுமெனத் தலைமகளிறந்துபாடு கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

இங்கயலென்னீபணிக்கின்றதேந்தலிணைப்பதில்லாக் *
கங்கையஞ்செஞ்சடைக்கண்ணுதலண்ணல்கடிகொடில்லைப் *
பங்கயப்பாசடைப்பாய்தடநீயப்படர்தடத்துச் *
செங்கயலன்றேகருங்கயற்கண்ணித்திருநுதலே. (௨௱௫)

கார்த்தடமுங் கயலும்போன்றீ ர்
வார்த்தடமுலையு மன்னனுமென்ற து.

(இ-ள்) இணைக்கப்படுவதொருபொருளுமில்லாத கங்கையையுடையவழகியசெஞ்சடையையுங் கண்ணையுடைய நுதலையுமுடையவண்ணலது காவலைப்பொருந்தியதில்லைவரைப்பிற் பங்கயத்தின் பசியவிலைகளையுடையபரந்தபொய்கை நீ; கருங்கயல்போலுங்கண்ணையுடைய இத்திருநுதல் அகன்றவப்பொய்கைக்கண் வாழுஞ்

செங்கயலன்றே! அதனால், எந்தால், நின்னொடேகுமிடத்து வேறொன்றொன்றொருதுன்பம்வருவதாக இவ்விடத்து நீயயன்மைகூறுகின்றதெல்! செங்கயற்குப்பங்கயத்தடமல்லதுவேறுவேண்டப்படுவதொன்றுண்டோ! எ-று.

கண்ணுகலாகியவண்ணலெனினுமமையும். உடன்கொண்டுபோகாயாயின், அலரானுங்காவன்மிகுதியானுநின்னைத்தலைப்படுதலரிதாகலிற் றடந்துறந்தகயல்போல இவளிறந்துபடுமென்பது கருத்து. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-பெருமிதம். பயன் - உடன்போக்குவற்புறுத்தல். (௨௱௧)

கற்புநலனுரைத்தல்.

கற்புநலனுரைத்தலென்பது- தலைமகனைப்போக்குடம்படுத்தியதோழி, தலைமகளுழைச்சென்று, மகளிர்க்குப் பாதுகாக்கப்படுவனவற்றுள் நாண்போலச்சிறந்ததுபிறிதில்லை அத்தன்மைத்தாகியநாணுங் கற்புப்போலச் சீரியதன்றென உலகியல் கூறுவாள் போன்று,அவள் உடன்போக்குத்துணியக் கற்புநலங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

தாயிற்சிறந்தன்றுநாண்டையலாருக்கந்நாண்டகைசால் *
வேயிற்சிறந்தமென்றோளிதிண்கற்பின்விழுமிதன்றீங் *
கோயிற்சிறந்துசிற்றம்பலத்தாடுமெங்கூத்தப்பிரான் *
வாயிற்சிறந்தமதியிற்சிறந்தமதிநுதலே. (௨௱௪)

• பொய்பொத்தவிடை போக்குத்துணி ய
வையத்திடை வழக்குரைத்த து.

(இ-ள்.) ஈங்கோயிடத்துப்பொலிந்துமேவிச் சிற்றம்பலத்தின்கணின்றாடும் எம்முடையகூத்தனாகிய பிரானது வாயின்கண் எப்பொழுதும்வந்து சிறத்தற்குக்காரணமாகிய அறிவாற்சிறப்பையுடையையாகிய மதிநுதால், மகளிர்க்குப்பழிநீக்கிப் பாதுகாத்தலில் நாண் தாய்போலச்சிறந்தது, அத்தன்மைத்தாகியநாண், அழகமைந்தவேய்போலச்சிறந்த மெல்லியதோள்களையுடையாய், இன்னியகற்புப்போலச் சீரிதன்று. எ-று.

தாயினுஞ்சிறந்தன்றுநாணென்றுரைப்பினுமமையும். நாணென்பது ஒருபொருட்குரிமையாகலிற்றாயெனவொருமை கூறினார். “ஏவலிளையர் தாய்வயிறு,, கரிப்ப என்பதும்போல அமையுமாறுமுடைத்து. அன்றியும், “உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று,,என்றாகலின்

வாயிற்சிறந்தமதியிற்சிறந்தவென்பதற்குத் தாய்போல நாண்சிற
த்தலும் நாணினுங்கற்புச்சிறத்தலுமாகிய இரண்டுங் கூத்தப்பிரா
ன்வாயிற்சிறந்த நூல்களிடத்துச்சிறப்புடையபொருளொன்றுரை
ப்பினுமமையும் இதுகுறிப்பெச்சம். போக்குத்துணிய - போக்
குத்துணியும்வண்ணம். மெய்ப்பாடு- அது. பயன் - தலைமகளையு
டன்போக்குநேர்வித்தல். (உ௱௪).

துணிந்தமைகூறல்.

துணிந்தமைகூறலென்பது-உலகியல்கூறுவாள்போன்றுகற்பு
வழிநிறுத்தி,எம்பெருமான் நின்னை நீரில்லாத வெய்யசுரத்தே உ
டன்கொண்டுபோவானாக நினையாநின்றான் இதற்கு நின்கருத்தெ
ன்னோவெனத் தோழி தலைமகளுக்குத் தலைமகனினைவு கூறாநிற்ற
ல். அதற்குச்செய்யுள்.

குறப்பாவைநின்குழல்வேங்கையம்போதொடுகோங்கம்விராய் *
நறப்பாடலம்புனைவார்நினைவார்தம்பிரான்புலியூர் *
மறப்பானடுப்பதொர்தீவினைவந்திடிற்சென்றுசென்று *
பிறப்பானடுப்பினும்பின்னுந்துன்னத்தகும்பெற்றியரே(உ௱௫)

பொருவேலண்ணல் போக்குத்துணிந்த மை
செருவேற்கண்ணிக்குச் சென்றுசெப்பிய து.

(இ-ள்.) குறப்பாவாய்,தம்பிரானதுபுலியூரை மறக்கக் கூடுவ
தொருதீவினைவிளைவுவருமாயிற் பலயோனிகளினுஞ்சென்றுசெ
ன்றுபிறக்கக்கூடினும் பின்னுஞ்சென்றுசேரத்தகுந்தன்மையை
யுடையவர் நின்குழலின்கணுண்டாகிய வேங்கைப்பூவோடு கோங்
கம்பூவைவிரவித் தேனையுடையபாதிரிமலரைப்புனைவாராக நினை
யாநின்றார். எ-று.

புனைவாரென்னுமுற்றுச்சொல்-செயவெனெச்சமாகத்திரித்து
ரைக்கப்பட்டது. புனைவாராயுடன்போதலை நினையாநின்றாரென்று
ரைப்பினுமமையும். நினைவாரென்னுமெதிர்காலத்துமுற்றுச்சொ
ல்-நிகழ்காலத்துக்கண்வந்தது. கோங்கம்விராய்ப்பாடலம்புனைவா
ர்நினைவாரென்றதனான், நீரிலாற்றிடைநின்னொடுசெல்லலுற்றாரெ
ன்பதுகூறினாளாம். புலியூரையுணர்ந்தார்க்குப் பின்னைமறத்தல
ரிதென்னுங்கருத்தான், மறப்பானடுப்பதொர்தீவினைவந்திடினெ
ன்றாள். புலியூரையொருகாலுணர்ந்ததனையானே பிறவிகெடுமெ
ன்றே அவ்வாறன்றியதனை மறந்தவாற்றானே பிறக்கக்கூடினுமெ

ன்னுங்கருத்தால், பிறப்பானடுப்பினுமென்றாள். அலர்நாணி உடன்போகாதாண்டிற்செறிக்கப்பட்டு அவனையெதிர்ப்படாதிருத்தல் அன்பன்றென்னுங்கருத்தால், பிறப்பானடுப்பினும்பின்னுந்துன்னத்தகும்பெற்றியளென்றாள். பெற்றியளென்பதனை விளைக்குறிப்பு முற்றாகவுரைப்பினு மமையும். உன்னத்தகும் பெற்றியளென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு-அது. பயன்-தலைமகன் உடன்போக்குநேர்ந்தமையுணர்த்துதல். (௨௱௫)

துணிவொடுவினாவல்.

துணிவொடுவினாவலென்பது- தலைமகனினைவுகேட்டதலைமகள் அவனினைவின்படியே துணிந்துநின்று, இந்நீரில்லாதவெய்யசுரத்தேயிப்பொழுதிவர் நம்மையுடன்கொண்டு போகைக்குக்காரணமென்னோவெனத் தோழியைவினாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

நிழற்றலைதீநெறிநீரில்லைகானகமோரிகத்து *
மழற்றலைவெம்பாற்றென்பரென்னோதில்லையம்பலத்தான் *
கழற்றலைவைத்துக்கைப்போதுகள்கூப்பக்கல்லாதவர்போற் *
குழற்றலைச்சொல்லிசெல்லக்குறிப்பாகுநங்கொற்றவர்க்கே. ()

சிலம்பன்றுணிவொடு செல்சாநினைந் து
கலம்புனைகொம்பர் கலக்கமுற்ற து.

(இ-ள்.) நிழலீடந்தீர்ந்தவழி நீருடைத்தன்று, இருமருங்குமுண்டாகிய ஓரிகூப்பிடுங்காடு அழனுதிபோலுநிலையையுடையவெய்யபாலையுடைத்தென்றுசொல்லுவர், தில்லையம்பலத்தின்கண்ணுளனதுகழல்களைத் தந்தலைமேல்வைத்துக் கையாகியபோதுகளைக்கூப்பப் பயிலாதவரைப்போல, இத்தன்மைத்தாகிய நெறிக்கண், குழலிடத்துச்சொற்போலுஞ்சொல்லையுடையாய், நங்கொற்றவர்க்குச்செல்லக்குறிப்புண்டாகின்ற இஃதென்னோ! எ-று.

நீரில்லையென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீரவாய் நெறியென்னுமெழுவாய்க்குப்பயனிலையாயின். நெறிக்கணீரில்லையெனவிரிப்பினுமமையும். நிழலிடந்தீயோடொக்குநெறி, அந்நெறிநீருடைத்தன்று, கானகமெங்குமோரிகூப்பிடும், அக்கானகம்அழற்றலைவெம்பாலையுமுடைத்து என்றுரைப்பினுமமையும். இப்பொருட்குக் கானகமோரிகத்துமென்பதற்கு நெறிநீரில்லையென்றதற்குரைத்தாங்குரைக்க. மெய்ப்பாடு- அழுகை. பயன்- ஆற்றாமைநீங்குதல். (௨௱௬)

போக்கறிவித்தல்.

போக்கறிவித்தலென்பது- இப்பொழுதவர்போகைக்குக்காரணமென்னென்றுகேட்டதலைமகளுக்குநீங்கள்உடம்புமுயிரும்போல ஒருவரையொருவரின்றியமையீராயினீர், இத்தன்மைத்தாகியநுங்காதலையறிந்துவைத்தும் அவற்குவருமேதம் நினைதென்றஞ்சி யானவனைவரவுவிலக்குவேன், அவனுமவ்வாறு வருதலையொழிந்து வரைவொடுவரிற் பொன்முதலாகியவெல்லாவற்றையு நினக்குமுலைப்பரிசப்பெறினும் நமர்நின்னைக்கொடார் சொல்லுமிடத்து இதுவல்லது நீருஞ்சுரம்போகைக்குக் காரணமென்றுதோழிதலைமகளது போக்கறிவியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

காயமுமாவியுநீங்கள்சிற்றம்பலவன்கயிலைச் *
சீயமுமாவும்வெரீஇவரலென்பல்செறிதிரைநீர்த் *
தேயமும்யாவும்பெறினுங்கொடார்நமரின்னசெப்பித் *
தூயமுநாடுமில்லாச்சுரம்போக்குத்துணிவித்தவே. (உ௱எ)

பொருசுடர்வேலவன் போக்குத்துணிந்த மை
யரிவைக்கவ ளறியவுரைத்த து.

(இ-ள்.) நீங்கள் உடம்புமுயிரும்போல ஒருவரையொருவரின்றியமையாதவன்மையுடையீர், இத்தன்மைத்தாகிய நுங்காதலை நினையாது, சிற்றம்பலத்தான் கைலையிற்சீயத்தையும் அல்லாதகொடுவிலங்கையுமஞ்சி யானவனைவரற்பாலையல்லையென்றுகூறுவேன். அவ்வாறுவருதலையொழிந்து வரைவுவேண்டின், நெருங்கியதிரைகளையுடைய கடலாற்சூழப்பட்ட இந்நிலத்தையும் பொன்முதலாகிய வெல்லாவற்றையும்பெறினும், நமர் நின்னைக்கொடார்கள். அதனால், நீருமக்கள்வாழுமிடமுமில்லாத சுரங்களைப்போதலைத்துணிவித்தன சொல்லுமிடத்து இத்தன்மையனவன்றே! எ-று.

நீங்கள்காயமுமாவியும்போல வின்றியமையாமையின் அவற்குவருமேதநினைதென்றஞ்சி அவன் வரவுவிலக்குவேனென்றுளாக வுரைப்பினுமமையும். துணிவித்ததென்பது பாடமாயின், துணிவித்ததனைச்செப்பினின்னவெனக்கூட்டியுரைக்க. அறிய- இன்னகாரணத்தானென்றறிய. மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-உடன்போக்குமாட்சிமைப்படுத்தல். (உ௱எ)

நாணிழந்துவருந்தல்.

நாணிழந்துவருந்தலென்பது-உடன்கொண்டுபோகைக்குக்கா

ரணங்கேட்டதலைமகள், ஒருநாளுமென்னைவிட்டுநீங்காது என்னுடனேவளர்ந்தபொலிவுடைத்தாகியநாண் கற்பினெதிர்நிற்கமாட்டாது தன்னைவிட்டுநீங்காத என்னைக்கழிவதாக மகளிர் எழுபிறப்பின்கண்ணுங்குடியிற்பிறவாதொழிகவெனத் தானதற்குப்பிரிவாற்றாமையான் வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மற்பாய்விடையோன்மகிழ்புலியூரென்னொடும்வளர்ந்த *
பொற்பார்திருநாண்பொருப்பர்விருப்புப்புகுந்துநுந்தக் *
கற்பார்கடுங்கால்கலக்கிப்பறித்தெறியக்கழிக *
விற்பாற்பிறவற்கவேழையர்வாழியெழுமையுமே. (௨௱௮)

கற்புநாணினு முற்சிறந்தமையி ற்
சேணெறிசெல்ல வாணுதறுணிந்த து.

(இ-ள்.) வளத்தையுடையபாயும் விடையையுடையவன்விரும்பும்புலியூரில் என்னோடுந்தோன்றி என்னோடொக்கவளர்ந்த பொலிவார்ந்ததிருவையுடையநாண், பொருப்பர்மேல் யான்வைத்தவிருப்பம் இடையேபுகுந்துதள்ள, நின்றநிலைகுலைந்து, கற்பாகியநிறைந்தகடியகாற்றலைத்துப்பிடுங்கியெல்லையிற்கிடவாமைப்புறத்தெறிய, என்னைக்கழிவதாக. இனிமகளிர் எழுபிறப்பின்கண்ணுங்குடியிற்பிறவாதொழிக. எ-று.

நாண்கழிகவெனவியையும். வாழி-அசைநிலை. கற்பாங்கடுங்காலென்பது உட்பாடம். முற்சிறந்தமையின் - முன்னென்னைச்சிறந்தமையின். மல்லல்-மல்லெனக்கடைக்குறைந்துநின்றது. மெய்ப்பாடு- அது. பயன்- உடன்போக்குவலித்தல். (௨௱௮)

துணிவெடுத்துரைத்தல்.

துணிவெடுத்துரைத்தலென்பது-தலைமகளைக்கற்புவழிநிறுத்திச்சென்று, நின்னோடுபோதுமிடத்து நீசெல்லுங்கற்சுரம் அவளது சிற்றடிக்கு நற்றளிராம்போலுமெனத் தோழி தலைமகனுக்கு அவடுணிவெடுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கம்பஞ்சிவந்தசலந்தரனாகங்கறுத்ததில்லை *
நம்பன்சிவநகர்நற்றளிர்கற்சுரமாகுநம்பா *
வம்பஞ்சியாவம்புகமிகநீண்டரிசிந்துகண்ணாள் *
செம்பஞ்சியின்மிதிக்கிற்பதைக்குமலர்ச்சீறடிக்கே. (௨௱௯)

செல்வமாதர் செல்லத்துணிந்த மை
தொல்வரைநாடற்குத்தோழிசொல்லியது.

(இ-ள்.) நம்பா, அம்புகளஞ்சித்துணியிற்புக்கொளிப்ப மிகநீண்டு செவ்வரிசிதறியகண்களையுடையாளுடைய செம்பஞ்சியின் மிதிப்பினுநடுங்கும் மலர்போலுஞ்சிறியவடிக்கு நீசெல்லுங்கலையுடையசுரம் நல்லதளிராம்போலும் இவளது துணிவிருந்தவாற்றன். எ-று. அச்சத்தால்வருநடுக்கத்தைவெகுண்ட சலந்தரனாகத்தைமுனிந்த தில்லையினம்பனது சிவநகரின்நற்றளிரொணக் கூட்டுக.

சிவநகரென்பது ஒருதிருப்பதி. செம்பஞ்சியின் மிதிக்கிற்பதைக்கும்மலர்ச்சீறடியென்பன ஒருசொன்னீர்மைப்பட்டுநின்றன, இதனையதிகாரப்புறனடையாற்கொள்க. அரிசிந்துகண்ணாளது என்னுமாறனுருபு தொகச்சொல்லாதவிடத்துத் தொக்குநின்றதெனினுமமையும். அரிசிந்துகண்ணாள்மலர்ச்சீறடியென்றுகூட்டுவாருமுளர். தொல்வரை-பெரியவரை. மெய்ப்பாடு- அது. பயன்- உடன்போக்குவற்புறுத்தல். (உ௱௯)

குறியிடங்கூறல்.

குறியிடங்கூறலென்பது- துணிவெடுத்துரைத்ததோழி, தாழாது இவ்விருட்காலத்துக் கொண்டுபோவாயாக யானவளைக்கொண்டுவாராநின்றேன் நீமுன்புவந்தெதிர்ப்பட்ட அக்குறியிடத்து வந்து நில்லெனத் தலைமகனுக்குக் குறியிடங் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

முன்னோன்மணிகண்டமொத்தவனம்பலந்தம்முடிதாழ்த் *
துன்னாதவர்வினைபோற்பரந்தோங்குமெனதுயிரோ *
யன்னாளரும்பெறலாவியன்னாயருளாசையினாற் *
பொன்னார்மணிமகிழ்ப்பூவிழயாம்விழைபொங்கிருளே. (உ௱௰)

மன்னியவிருளிற் றுன்னியகுறியிற்
கோங்கிவர்கொங்கையை நீங்குகொண்டென்றது.

(இ-ள்.) எனதுயிரையொப்பாளது அரியபெறுதலையுடைய ஆவியையொப்பாய், நினைதருண்மேலுள்ளவாசையாற் பொன்போலும் நிறைந்தநல்லமகிழின்பூவிழ அவைவிழுகின்றவோசையைநீ செய்யுங்குறியாகவோர்ந்து யாம்விரும்புமிக்கவிருள் இக்காலத்துக்கருமையால்எல்லார்க்குமுன்னாயவனதழகியமிடற்றையொத்து அவனதம்பலத்தைத் தம்முடிகளைத்தாழ்த்து நினையாதவரது தீவினைபோலக் கருமையோடுபரந்துமிகும். எ-று.

ஆவியன்னபதருளென்றுரைப்பாருமுளர். மணிமகிழ்ப்பூவிழ

வென்பதுபாடமாயிற் பூவிழவென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீர்மைப்பட்டு மணிமகிழென்னுமெழுவாயையவமைத்தனவாகவுணர்க்க. இனித்தாழாதிவ்விருட்காலத்துப்போகவேண்டுமென்றும் இரவுக்குறிக்கண்வரும் அரையிருட்கண்வந்து அக்குறிபிடத்துநில்லென்றுங்கூறினளாம். துன்னியகுறி நீமுன்புவந்திவளையெதிர்ப்பட்டகுறியிடம். மெய்ப்பாடு-அது பயன்-குறியிடமுணர்த்துதல்

அடியொடுவழிநினைந்தவனுளம்வாடல்

அடியொடுவழிநினைந்தவனுளம்வாடலென்பது-தோழிகுறியிடைநிறுத்திப்போகாநிற்ப, தலைமகன் அவ்விடத்தேநின்று, அனிச்சப்பூப்போலும் அழகியவடிகள் அழற்கடம்போதுமென்றால் இதற்கென்னதுன்பம் வந்தெய்துங்கொல்லோவெனத் தலைமகளடியொடு தான்செல்லாநின்றவழிநினைந்து, தன்னுள்ளம்வாடாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பனிச்சந்திரனொடுபாய்புனல்சூடும்பரன்புலியூ *
ரனிச்சந்திகழுமஞ்சீறடியாவவழல்பழுத்த *
கனிச்செந்திரளன்னகற்கடம்போந்துகடக்குமென்றா *
லினிச்சந்தமேகலையாட்கென்கொலாம்புகுந்தெய்துவதே. ()

நெறியுறுகுழலியொடு நீங்கத்துணிந் த
உறுசுடர்வேலோ னுள்ளம்வாடிய து.

(இ-ள்.) குளிர்ச்சியையுடையமதியோடு பரந்தபுனலையுடைய கங்கையைச்சூடும் பரனதுபுலியூரில் அனிச்சப்பூப்போலு மழகியசிறியவடிகள், அன்னே, தீப்பழுத்த பழத்தினது சிவந்ததிரள்போலுங்கற்றிரளையுடையகாட்டை இக்குநின்றும் போந்துகடக்குமாயின், நிறத்தையுடைய மேகலையையுடையாட்கு இனியென்காரணமாகவந்தெய்துந்துன்பம் வேறென்! எ-று.

ஆவ- இரங்கற்குறிப்பு. மெய்ப்பாடு - அழுகை. பயன் - நெஞ்சொடுசாவுதல். (௨௱௰௧)

கொண்டுசென்றுய்த்தல்.

கொண்டுசென்றுய்த்தலென்பது-தலைமகன் குறியிடைநின்று, அடியொடுவழிநினைந்து, தன்னுள்ளம்வாடாநிற்ப, அந்நிலைமைக்கண், நின்னுள்ளத்துக்கருதியதனை இப்பொழுதுநினக்குத்தெய்வந்தாராநின்றது என்றுதோழியையுங்கொண்டுவந்து தன் நீயிவளைக்கை

க்கொள்ளெனத்தோழி தலைமகளைக்கொண்டுசென்று, அவனொடு கூட்டாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வைவந்தவேலவர்சூழ்வரத்தேர்வரும்வள்ளலுள்ளந் *
தெய்வந்தருமிருணேங்குழுதுஞ்செழுமிடற்றின் *
மைவந்தகோன்றில்லைவாழ்த்தார்மனதினெழுத்துநர்போன் *
மொய்வந்தவாவிதெளியுந்துயிலுமிம்மூதெயிலே. (௨௱௰௨)

வண்டமர் குழலியை க்
கண்டுகொள் கென்ற து.

(இ-ள்.) வளவியமிடற்றின்கட்கருமையுண்டாகிய கோனதுதில்லையை வாழ்த்தாதாருடைய மனம்போல உலகமுழுதும் இருள்செறியாநின்றது, அத்தில்லையைவாழ்த்துவாருடைய மனம்போலப்பெருமையுண்டாகியபொய்கைகள் கலக்கமற்றுத்தெளியாநின்றன, இம்முதியவூர் துயிலாநின்றது, அதனால், கூர்மையுண்டாகியவேலையுடையவிளையர்சூழத் தேரின்கண்வரும்வள்ளலே, நினதுள்ளத்துக்கருதியதனைத் தெய்வம் இப்பொழுதேநினக்குத்தரும், என்றோழியையுங்கொணர்ந்தேன், காண்பாயாக. எ-று.

வள்ளலென்பது ஈண்டுமுன்னிலைக்கண் வந்ததெனக்கொண்டு, வள்ளலதுள்ளமென்றுவிரித்துரைப்பினுமமையும் சூழ்வரத்தேர்வருமென்றுபாடமோதி ஊர்காக்குமிளையர் ஊரைச்சூழ்வரும்வரவு மினியொழியுமென்றுரைப்பாருமுளர். மெய்ப்பாடு- பெருமிதம். பயன்-தலைமகளைத்தலைமகனுடன்படுத்தல். (௨௱௰௨)

ஓம்படுத்துரைத்தல்.

ஓம்படுத்துரைத்தலென்பது - கொண்டுசென்றுய்த்து இருவரையும்வலஞ்செய்துநின்று, மறைநிலைதிரியினுங் கடன்முழுதும்வற்றினும், இவளிடத்துநின்னருடிரியாமற் பாதுகாப்பாயெனத்தோழி தலைமகளைத் தலைமகனுக்கோம்படுத்துரையாநிற்றல். அதற்குசசெய்யுள்.

பறந்திருந்தும்பர்பதைப்பப்படரும்புரங்கரப்பச் *
சிறந்தெரியாடிதென்றில்லையன்னாடிறத்துச்சிலம்ப *
மறந்திருந்துன்னருளும்பிறிதாயினருமறையின் *
றிறந்திரிந்தார்கலியுமுற்றும்வற்றுமிச்சேணிலத்தே. (௨௱௰௩)

தேம்படு ங்கோதை யை
யோம்படுத்த து.

(இ-ள்.) சிலம்பா, இருந்து உம்பரிடை விடாது நடுங்கப் பறந்துசெல்லும்புரங்கள் கெடப் பொலிந்து எரியான் விளையாடுமலனது தெற்கின்கணுண்டாகிய தில்லையையொப்பாளிடத்து அறந்திருந்ததற்குக்காரணமாகிய உனதருளும் வேறுபடுமாயின், இவ்வகன்றநிலத்து அரியமறைகளின்முறைமைபிறழக் கடலுமெஞ்சாது வற்றும் எ-று.

அறந்திரிந்தென்பதுபாடமாயின், அறந்திரிந்தருமறையின்றிறந்திரிந்தெனமாற்றியுரைக்க. அறந்திரிந்தாற்போல நின்னருளும்பிறிதாயினெனவொருசொல் வருவித்துரைப்பினுமமையும். அருமறையுமென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - ஓம்படுத்தல். (௨௱௰௫)

வழிப்படுத்துரைத்தல்.

வழிப்படுத்துரைத்தலென்பது-ஓம்படுத்துரைத்ததோழி, ஆயமுமன்னையும்பின்வாராமல் இவ்விடத்தேநிறுத்தி இவ்வூரிடத்துள்ள அலரையுமொருவாற்றானீக்கி யானும்வந்து நுங்களைக்காண்பேனாக, நீயிருந் திருவொடுசென்று நும்பதியிடைச் சேர்வீராமினென இருவரையும்வழிப்படுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஈண்டொல்லையாயமுமௌவையுநீங்கவிவ்வூர்க்கௌவைதீர்த் *
தாண்டொல்லைகண்டிடக்கூடுக நும்மையெம்மைப்பிடித்தின் *
றாண்டெல்லைதீரின்பந்தந்தவன்சிற்றம்பலநிலவு *
சேண்டில்லைமாநகர்வாய்ச்சென்றுசேர்கதிருத்தகவே. (௨௱௰௬)

மதிநுதலியை வழிப்படுத்துப்
பதிவயிற்பெயரும் பாங்கிபகர்ந்தது.

(இ-ள்.) எம்மைவலிந்துபிடித்தாண்டு இன்று எல்லையைநீக்கிய வின்பத்தைத்தந்தவனது சிற்றம்பலம் நிலைபெற்ற சேய்த்தாகிய தில்லையாகிய பெரியநகரிடத்து நீர் பொலிவுதகச் சென்று சேர்வீராமின், ஆயமுமன்னையும்பின்வாராது இவ்விடத்தேநீங்க இவ்வூரின்கணுண்டாகிய அலரையொருவாற்றான் விரையநீக்கி, யானுண்டுவந்து நும்மைவிரையக் காணக்கூடுவதாக. எ-று.

சேண்டில்லையென்பதற்கு மதின்முதலாயினவற்றானுயர்ந்ததில்லையெனினுமமையும். ஒல்லைகண்டிடவென விகாரவகையான் வல்லெழுத்துப்பெறாதுநின்றது. மெய்ப்பாடு - அழுகை. பயன் - அச்சந்தவிர்த்தல். (௨௱௰௬)

மெல்லக்கொண்டேகல்.

மெல்லக்கொண்டேகலென்பது- தோழியைவிட்டு உடன்கொண்டுபோகாநின்றதலைமகன் நின்னோடுசேறலான் இன்று இக்காடு திருந்தச்செய்யப்பட்டாற்போலக் குளிர்ச்சியையுடைத்தாயிருந்தது, இனி நின்சீறடிவருந்தாமற் பையச் செல்வாயாகவெனத் தன்னுயவெள்ளத்தோடும் விளையாடுமாறுபோலத் தலைமகளைமெல்லக்கொண்டுசெல்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பேணத்திருத்தியசீறடிமெல்லச்செல்பேரரவம் *
பூணத்திருத்தியபொங்கொளியோன்புலியூர்புரையு *
மாணத்திருத்தியவான்பதிசேருமிருமருங்கும் *
காணத்திருத்தியபோலுமுன்னுமன்னுகானங்களே. (௨௱௰௮)

பஞ்சிமெல்லடிப் பணைத்தோளி யை
வெஞ்சுரத்திடை மெலிவகற்றியது.

(இ-ள்) பெரியவரவங்களைப்பூணும்வண்ணம் அவற்றின்றீத்தொழிலைநீக்கிய பெருகுமொளியையுடையவனது புலியூரையொக்குமாட்சிமைப்படக் குற்றங்கடிந்துசெய்யப்பட்டபெரியவூர்கள் நாஞ்செல்லுநெறியி னிருபக்கமுமொன்றோடொன்றுசேர்ந்திருக்கும்,முன்னுளவாகியகாடுகள் நாஞ்சென்றுகாணும் வண்ணந்திருந்தச்செய்யப்பட்டனபோலும். அதனால்,யான்விரும்பும்வண்ணங் கைபுனையப்பட்ட சிறியவடியையுடையாய், பையச்செல்வாயாக. எ-று.

பேணத்திருத்தியசீறடியென்பது- சினையாகிய தன் பொருட்கேற்றவடையடுத்துநின்றது. அரவந்திருத்தியவென வியையும். வான்பதிசேருமென்பதற்குப் பதி நெறியைச்சேர்ந்திருக்குமென்றுரைப்பினுமமையும். மெய்ப்பாடு- உவகை, பயன்-தலைமகளையயர்வகற்றுதல்.

(௨௱௰௯)

அடலெடுத்துரைத்தல்.

அடலெடுத்துரைத்தலென்பது - மெல்லக்கொண்டு செல்லாநின்றவன்,சேய்த்தாகச்சிலரைவரக்கண்டு தலைமகளஞ்சாநிற்ப, நின்னையன்மாராயின் அஞ்சுவேன் அல்லது நால்வகைத்தானையுந் திரண்டுவரினும் என்கையில் வடித்திலங்காநின்ற எஃகின்வாய்க்கிரைபோதாது இதனையிவ்விடத்தே காண்பாயாகவென்று, அவளச்சந்தீரத்தன்னடலெடுத்துரையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கொடித்தேர்மறவர்குழாம்வெங்கரிநிரைகூடினென்கை *
வடித்தேரிலங்கெஃகின்வாய்க்குதவாமன்னுமம்பலத்தோ *
னடித்தேரலரென்னவஞ்சுவனின்னையரென்னின்மன்னுங் *
கடித்தேர்குழன்மங்கைகண்டிடிவ்விண்டோய்கனவரையே. ()

வரிசிலையவர் வருகுவரெனப்
புரிதருகுழலிக் கருள்வனுரைத்தது.

(இ-ள்.) நின்னையன்மாராயின், நிலைபெறுமம்பலத்தின்கண்ணானுடைய அடிகளை யாராய்ந்துணராதாரைப்போல அஞ்சுவேன், அல்லது கொடியையுடையதேரும், வீரர் திரளும், வெய்யகரிநிரையும் அனைத்துந்திரண்டுவரினும் என்கையில்வடிக்கப்பட் டழகுவிளங்காநின்றவெஃகினதுவாய்க்கு இரையுதவமாட்டா, நிலைபெற்றநறுநாற்றத்தை வண்டுகளாராய்ந்துவருங் குழலையுடையமங்காய், விண்ணினைத்தோயாநின்ற இப்பெரியவரையிடத்தியான்செய்வதனைக் காண்பாயாக. எ-று.

கூடினென்பதற்கு என்னைக்கிட்டினென்றுரைப்பினுமமையும். அடித்தேர்பவரென்பது பாடமாயின், என்னவென்பதனை உவமவுருபாக்காது இவரையடித்தேர்பவரென்று பிறர்கருதவென்றுரைக்க. கண்டிடுவென்பதூஉம்பாடம். மன்னுங்கடியென்பதற்கு வண்டெனவொருசொல் வருவித்துரைக்க. வரிசிலையவர்வருகுவரென-வரிசிலையவர்வாராநின்றார் இவர்யாவரென. மெய்ப்பாடு - பெருமிதம். பயன்-தன்வலியுணர்த்தியாற்றுவித்தல்.

இடைச்சுரத்து அவடமரெதிர்படைதொடர்ந்துநிற்பவழிவருவார் விலக்கி வரைவித்துக்கொடுப்ப. என்னை. "இடைச்சுர மருங்கி னவடம ரெய்திக் - கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞ ரெய்திக் - கற்பொடு புணர்ந்த கௌவை யுளப்பட - வப்பாற்பட்ட வொருதிறத் தானும்" என்றார் தொல்காப்பியனார். (௨௱௰௬)

அயர்வகற்றல்.

அயர்வகற்றலென்பது-அடலெடுத்துரைத்து அச்சந்தீர்த்துக் கொண்டு போகாநின்றவன், இத்துன்பக்கடறு கடந்துசென்று இப்பொழுதே நம்மின்பப்பதிகாணப்புகாநின்றேம், இனிநமக்கொருகுறைவில்லையெனத் தலைமகளதுவழிவருத்தந்தீரக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மூன்றேனொன்றுண்மூன்றுமூன்றுவினையின்மூன்கர்துன்று *
பின்றுக்கடறிதிப்போழ்தேகடந்தின்றுகாண்டுஞ்சென்று *

பொன்றோரணிமணி மாளிகைத்தென்புலியூர்ப்புகழ்வார் *
தென்றேவெனவுடையானடமாடுசிற்றம்பலமே. (௨௱௰௭)

இன்னல்வெங்கடத் தெறிவேல வ
னன்னமன்னவ ளயர்வகற்றிய து.

(இ-ள்.) எல்லார்க்கும் முன்றோயவனதருளை மூற்பிறப்பின்கண்ணு நினையாத தீவினையையுடைய நீசர்சேருந் துன்பத்தைச் செய்யும்பாலை நிலமிதனை யிப்பொழுதேகடந்து, பொன்னிறைந்தவ மூசையுடையமணியால்விளங்கும் மாளிகைகளையுடைய தெல்புலியூர்க்கட்புகழ்ந் துரைப்பார் தென்னனேயென்றுபுகழ என்னையுடையான் நின்றுகூத்தாடுஞ்சிற்றம்பலத்தை இன்றுசென்றுகாண்பேம்,இதுவன்றோ நமக்குவருகின்றவின்பம்! எ-று.

தென்புலியூர்ச்சிற்றம்பலமெனவியையும். உடையானென்பது பாடமாயின், தென்னனேயென்றுபுகழ வொருசிறப்புடையானென்றுரைப்பினுமமையும். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-தலைமகளையயர்வகற்றுதல். அலங்காரம்-கூற்றிடத் திருபொருட்கண்வந்தவுயர்ச்சிவேற்றுமை. (௨௱௰௭)

நெறிவிலக்கிக்கூறல்.

நெறிவிலக்கிக்கூறலென்பது - அயர்வகற்றிக்கொண்டுசெல்லாநின்றதலைமகனை,இனிச்செல்லு நெறிக்கண் நன்மக்களில்லை நீதனியை இவள்வாடினாள் பொழுதுஞ்சென்றது ஈண்டுத்தங்கிப் போவாயாகவென, அவ்விடத்துள்ளோர் வழிவிலக்கிக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்

விடலையுற்றோரில்லைவெம்முனைவேடர்தமியைமென்பூ *
மடலையுற்றோர்குழல்வாடினண்மன்னுசிற்றம்பலவர்க் *
கடலையுற்றோரினெறிப்பொழிந்தாங்கருக்கன் சுருக்கிக் *
கடலையுற்றான்கடப்பாரிலையின்றிக்கடுஞ்சுரமே. (௨௱௰௮)

சுரத்திடைக்கண்டவர் சுடர்க்குழைமாதொ டு
சரத்தணிவில்லோய் தங்குகென்ற து.

(இ-ள்) விடலாய்,இனிச்செல்லுநெறிக்கண் நன்மக்களில்லை, உள்ளார் வெய்யமுனையிடத்துவேடரே, நீதனியை, மெல்லியபூவினிதழைப்பொருந்தி நிறைந்தகுழலையுடையாள் வழிவந்தவருத்தத்தால்வாடினாள், நிலைபெற்றசிற்றம்பலத்தையுடையவர்க்காட்படுநீதன்மையைப் பொருந்தினவர்களல்லாரைப்போலவிளக்கமொழிந்து அவ்விடத்து அருக்கன்றன்கதிர்களைச்சுருக்கிக் கடலைச்செ

ன்றாற்றான், இக்கடியசுரத்தையிப்பொழுது கடப்பாருமில்லை, அதனாலீண்டுத்தங்குவாயாக. எ-று.

வேடரொடுசோராதநன்மக்கள் இவர்க்கணியராதலின், அவரை உற்றாரென்றார். வேடரிலுற்றாரில்லையென்று நன்றிசெய்யாரென்பதுபயப்பவுரைப்பினுமமையும். மடலென்றது - தாழம்பூமடலையென்பாருமுளர். சிற்றம்பலவர்க்கென்னுநான்கனுருபு பகைப்பொருட்கண்வந்தது. அருக்கன்பெருக்கியென்றும் பெருகியென்றும் பாடமாயின், கெடுதலை மங்கலமாயிற்கூறிற்றென்க. ()

கண்டவர்மகிழ்தல்.

கண்டவர்மகிழ்தலென்பது-நெறிவிலக்குற்று வழிவருத்தந்தீர்ந்து ஒருவரையொருவர்காணலுற்று இன்புற்றுச்செல்லாநின்றஇருவரையுங்கண்டு, இவர்கள் செயலிருந்தவாற்றான் இப்பெருஞ்சுரஞ்செல்வதன்றுபோலும், அதுகிடக்க இதுதானின்புறவுடைத்தாகியதோர் நாடகச்சுவையுடைத்தாயிருந்ததென எதிர்வருவார் இன்புற்றுமகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அன்பணைந்தஞ்சொல்லிபின்செல்லுமாடவனீடவன்றன் *
பின்பணைத்தோளிவருமிப்பெருஞ்சுரஞ்செல்வதன்று *
பொன்பணைத்தன்னவிறையுறைதில்லைப்பொலிமலர்மே *
லன்பணைந்தண்ணறவுண்ணளிபோன்றொளிர்நாடகமே(உராயக்
மண்டழற் கடத்துக்
கண்டவருரைத்தது.

(இ-ள்.) சிறுபுறமும் அசைநடையுங்காண்டற்கு அன்பானணைந்து அழகியசொல்லையுடையாளதுபின்னே ஆடவனொருகாற்செல்லாநின்றான், முன்செல்லநாணிப் புறக்கொடையும் வலிச்செலவுங்காண அவனதுபின்னே வேய்போலுந்தோள்களையுடையாள் நெடும்பொழுது செல்லாநின்றாள், இருந்தவாற்றான் இவரது செயல் இப்பெரியசுரத்தைச்செல்கையன்று, பொன்னொருவடிவுகொண்டுபெருத்தாற்போலு மிறையுறைகின்ற தில்லைவரைப்பின் நல்லபணையிற்பொலிந்தமலரிடத்துக் குளிர்ந்த நறவையுண்ட வண்டுகளையொத்து இன்பக்களியான்மயங்கிவிளங்குவதொரு நாடகம். எ-று.

பெருஞ்சுரஞ்செல்வதன்றென்பதற்குப் பெருஞ் சுரந்தொலைவதன்றெனினுமமையும். பொன்பணைத்தாற்போலு மிறையென்பாருமுளர். கண்டார்க்கின்பஞ்செய்தலின், நாடகமென்றார். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-அழுகை. பயன்-நெறிவிலக்குதல்.

வழிவிளையாடல்.

வழிவிளையாடலென்பது - கண்டவர்மகிழக் கொண்டுசெல்லாநின்றவன், நெறிசெல் வருத்தத்தினெகிழ்ந்த மேனியையுடையநின்னைக் கண்டு கண்கடம்மாற்கொள்ளும்பயன்கொண்டனம், இனிச்சிறிதிருந்து இக்கடுங்கானகந் தண்ணெனுமளவுஞ் செவிநிறைய நின்மொழிபருக வருவாயாகவெனத் தலைமகளுடன் விளையாடாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கண்கடம்மாற்பயன்கொண்டனங்கண்டினிக்காரிகைநின் *
பண்கடமென்மொழிபாரப்பருகவருகவின்னே *
விண்கடநாயகன்றில்லையின்மெல்லியல்பங்கனெங்கோன் *
றண்கடம்பைத்தடம்போற்கடுங்கானகந்தண்ணெனவே. (௨௨௰)

வன்றழற்கடத்து வடிவேலன்ன ல்
மின்றங்கிடையொடு விளையாடிய து.

(இ-ள்.) நெறிசெல்வருத்தத்தினெகிழ்ந்தமேனியையாகிய நின்னைக்கண்டு, கண்களாற்கொள்ளும்பயன்கொண்டனம். காரிகை நீர்மையாய், இனிச்சிறிதிருந்து நினதுபண்ணினதுமுறைமையையுடைய மெல்லியமொழியைச் செவிநிறையப் பருகுவான் இவ்விடத்துவருவாயாக, விண்ணுலகங்கடம்முடையதலைவன், தில்லைக்கணுளனாகிய மெல்லியல்கூற்றையுடையான், எம்முடையவிறைவன், அவனதுகுளிர்ந்தகடம்பையித்பொய்கைபோலக் கடியகானகங்குளிருமளவும். எ-று.

தண்ணெனவின்னேவருகவெனவினையும். கடம்பையென்பது ஒருதிருப்பதி. கடம்பைத்தடம்போற்கடுங்கானகங் குளிரும்வண்ணம் நின்மொழியைப்பருகவென்று கூட்டினுமமையும். மெய்ப்பாடு-உவகை. பயன்-மகிழ்தல். (௨௨௰)

நகரணிமைகூறல்.

நகரணிமைகூறலென்பது-இருவருந்தம்முளின்புற்றுச்செல்லாநின்றமைகண்டு, இனிச்சிறிதுநெறிசென்று அக்குன்றத்தைக்கடந்தால் நும்பதியாகிய நகர்விளங்கித்தோன்றாநிற்கும் அத்துணையுங்கடிதுசெல்வீராமினென எதிர்வருவார் அவர்நகரணிமை கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மின்றங்கிடையொடுநீவியன்றில்லைச்சிற்றம்பலவர் *
குன்றங்கடந்துசென்றானின்றுதோன்றுங்குருஉக்கமலந் *

துன்றங்கிடங்குந் துறைதுறைவள்ளைவெள்ளைநகையார் *
சென்றங்கடைதடமும்புடைசூழ்தருசேணகரே. (உ௨க)

வண்டமர் குழலியொ டு
கண்டவ ருரைத்த து.

(இ-ள்.) மின்போலுமிடையையுடையாளோடு நீயகன்றதில்லையிற்சிற்றம்பலத்தையுடையவரது குன்றத்தைக்கடந்து அப்பாற்சிறிதுநெறியைச்சென்றால், நிறத்தையுடையதாமரைப்பூநெருங்கிய அழகியகிடங்கும் வள்ளைப்பாடலைப்பாடும் வெள்ளை முறுவலையுடையமகளிர் துறைதொறுந்துறைதொறுஞ்சென்று அவ்விடத்துச்சேரும்பொய்கைகளும் பக்கத்துச்சூழ்ந்த அத்தில்லையாகியவுயர்ந்தநகர் இடையறாதுதோன்றும், அத்துணையுங்கடிதுசெல்வாயாக எ-று.

குழலியொடுகண்டவர்-குழலியொடுதலைமகனைக்கண்டவர். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-இடமணித்தென்றல். (உ௨க)

நகர்காட்டல்.

நகர்காட்டலென்பது- நகரணிமைகூறக்கேட்டு இன்புறக்கொண்டுசெல்லாநின்றதலைமகன், அன்னந்துன்னிப் பிறையணிந்து சூலத்தையுடைத்தாகிய மாளிகைமேற் கொடிநுடங்கமதில் தோன்றுநின்ற அப்பெரியநகர்தான் நம்முடையநகராவதெனத் தலைமகளுக்குத் தன்னுடையநகர் காட்டாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மின்போல்கொடிநெடுவானக்கடலுட்டிரைவிரிப்பப் *
பொன்போல்புரிசைவடவரைகாட்டப்பொலிபுலியூர் *
மன்போற்பிறையணிமாளிகைசூலத்தவாய்மடவாய் *
நின்போனடையன்னந்துன்னிமுன்றோன்றுநன்னீணகரே. ()

கொடுங்கடங்கடந்த குழைமுகமாதர்க்குத்
தடங்கிடக்குஞ்சூழ் தன்னகர்காட்டிய து.

(இ-ள்.) நின்னடைபோலு நடையையுடைய அன்னங்கடுன்னி மன்னனைப்போலப்பிறையையணிந்தமாளிகைகள் அவனைப்போலச் சூலத்தவுமாய் முன்றோன்றுகின்ற நல்லபெரியநகர், மடவாய் ஒளியானும் நுடக்கத்தானும் மின்னைப்பொக்குங்கொடிகள் பெரியவானமாகியகடலுட்டிரையைப்பரப்பப் பொன்னானியன்றபுரிசைமேருவைக்காட்டப் பொலியும்புலியூர்தான், தொழுவாயாக-எ-று.

போலென்பது-அசைநிலை. நிறத்தாற்பொன்போலும் புரிசையென்பாருமுளர். சூலத்தவாயென்னுஞ்சினைவினையெச்சம்முன்

றேன்றுமென்னுமுதல்வினையோடுமுடிந்தது. அன்றியென இடத்துநிகழ்பொருளின்வினை இடத்தின்மேலேறிநின்றது.(௨௨௪

பதிபரிசுரைத்தல்.

பதிபரிசுரைத்தலென்பது- நகர்காட்டிக்கொண்டுசென்று அந்நகரிடைப்புக்கு அவ்விடத்துள்ளகுன்றுகள், வாவிகள், பொழில்கள், மாளிகைகள், தெய்வப்பதி, இவையெல்லாந்தனித்தனிகாட்டி, இதுகாண் நம்பதியாவதெனத் தலைமகளுக்குத் தலைமகன் பதிபரிசு காட்டாநிற்றல். அதற்குச்செய்யுள்.

செய்குன் றுவையிவை சீர்மலர்வாவிவிசும்பியங்கி *
நைகின்றதிங்களெய்ப்பாறும்பொழிலவைஞாங்கரொக்கும் *
பொய்குன்றவேதியரோதிடமுந்திடமிந்திடமு *
மெய்குன்றவார்சிலையம்பலவற்கிடமேந்திழையே. (௨௨௫)

கன்னிவர்வளநகர் கண்டுசென்றடைந்து
பண்ணிவர்மொழிக்குப் பதிபரிசுரைத்தது.

(இ-ள்.) உவை செய்குன்றுகள், இவை நல்லமலரையுடையவாவிகள், அவை விசும்பின்கணியங்குதலான்வருந்துந்திங்கள் அயர்வுயிர்க்குமபொழில்கள், உவ்விடம் மிசையெங்குமுலகத்திற்பொய்முதலாகியகுற்றங்கெட மறையவர்மறைசொல்லுமிடம், ஏந்திழாய், இவ்விடமும் எய்தற்குக் கருவியாகிய குன்றமாகிய நீண்டவில்லையுடைய அம்பலவற்கிருப்பிடம், இத்தன்மைத்திவ்வூர். எ-று.

இவையென்பது-தன்முன்னுள்ளவற்றை. உவையென்பது-முன்னின்றவற்றிற்சிறிதுசேயவற்றை. அவையென்பது- அவற்றினுஞ்சேயவற்றை. முன்சொல்லப்பட்டவையேயன்றி இதனையுங் கூறுகின்றேனென்பதுகருத்தாகலின், இந்திடமுமென்னு மும்மை இறந்தது தழீஇயவெச்சவும்மை. உந்திடம் இந்திடமெனச் சுட்டுத்திரிந்துநின்றன. பண்ணிவர்மொழி-பண்போலுமொழி. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-பெருமிதம். பயன் - இடங்காட்டுதல்.
(௨௨௫)

செவிலிதேடல்.

செவிலிதேடலென்பது- இருவரையும்வழிப்படுத்திவந்து பிரிவாற்றுதுசவலாநின்றதோழியை, எம்பிள்ளையெங்குற்றது நீசவலாநின்றாய் இதற்குக்காரணமென்னேவென்று வினவிச் செவிலி தலைமகளைத்தேடாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மயிலெனப்பேர்ந்திளவல்லியினொல்கிமென்மான்விழித்துக் *
குயிலெனப்பேசுமெங்குட்டனெங்குற்றதென்னெஞ்சகத்தே *
பயிலெனப்பேர்ந்தறியாதவன்றில்லைப்பல்பூங்குழலா *
மயிலெனப்பேருங்கண்ணாயென்கொலாமின்றயர்கின்றதே. ()

கவலையுற்ற காதற்றோழியை ச்
செவிலியுற்றுத் தெரிந்துவினவ ஞ.

(இ-ள்.) மயில்போலப்புடைபெயர்ந்து இளையகொடிபோல நுடங்கி மெல்லியமான்போலவிழித்துக்குயில்போலச்சொல்லும் எமதுபிள்ளை யாண்டையது?என்னெஞ்சின்கண்ணே தனக்குப்பயிற்சியென்றுபலர்சொல்லும்வண்ணம் என்னெஞ்சினின்றுநீங்கியறியாதவனது தில்லையிற்பலவாகிய பூக்களையுடைய குழலையுடையாய், வேல்போலப்பிறழுங் கண்ணையுடையாய், நீயின்றுவருந்துகின்றதென்னோ! எ-று.

எங்குற்றதென்பது ஒருசொல். என்னெஞ்சகத்தே பயிலெனப்பேர்ந்தறியாதவனென்பதற்கு என்னெஞ்சின்கண்ணே நீபயிலவேண்டுமென்றொருகால்யான்கூறப் பின்னீங்கியறியாதவனென்றுரைப்பினுமமையும். கண்ணிக்கென்பதுபாடமாயின், அவள்காரணமாகப்போலும் இவள் வருந்துகின்றதென்று உய்த்துணர்ந்து அவட்குநீ வருந்துகின்றதென்னென வினவிற்றாகவுரைக்க. மெய்ப்பாடு-மருட்கை. பயன்-தலைமகட்குற்றதுணர்தல். (௨௨௬)

அறத்தொடுநிற்றல்.

அறத்தொடுநிற்றலென்பது- தேடாநின்றசெவிலிக்கு, நீபோய்விளையாடச்சொல்ல யாங்கள்போய்த் தெய்வக் குன்றிடத்தேயெல்லாருமொருங்கு விளையாடாநின்றேமாக அவ்விடத்தொரு பெரியோன் வழியேதார்சூடிப்போயினான் அதனைக்கண்டுநின்மகள் இத்தாரையென்பாவைக்குத்தாருமென்றாள், அவனும் வேண்டியதுமறாதுகொடுப்பானாகலிற் பிறிதொன்றுசிந்தியாதுகொடுத்து நீங்கினான். அஃதறியாப்பருவத்து நிகழ்ந்ததனை "உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர், கொண்டார்க்குரியர் கொடுத்தார்" என்பதனையின்றுட்கொண்டாள்போலும் யானித்துணையுமறிவேனென்று உடன்போக்குத்தோன்றக்கூறி, தோழி அறத்தொடுநில்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஆளரிக்கும்மரிதாய்த்தில்லையாவருக்கும்மெளிதாந் ❀
தாளரிக்குன்றிற்றன்பாவைக்குமேவித்தழைசெய்தேத் ❀

கோளரிக்குன்றிசான்றொன்றொருவர்க்குதவுமலர்க்கார் *
வாளரிக்கண்ணிகொண்டாள்வண்டலாயத்தெம்வாணுதலே (௨௨௫)

சுடர்க்குழைப்பாங்கி படைத்துமொழிகிளவியி ற்
சிறப்புடைச்செவிலிக் கறத்தொடுநின் று.

(இ-ள்.) ஆட்செய்தல் அரிக்குமரிதாய் அவ்வாட்செய்தல் தில்லைக்கணெல்லார்க்குமெளிதாந்தாளையுடையவரது இம்மலையிடத்துத் தழல்விளங்கும் வேலையுடைய கோள்வல்ல அரிமாவிற்கு மறுதலைபோல்வாரொருவரது நிறத்தையுடைய மலரானியன்ற தாரை வாள்போலுஞ்செவ்வரிபரந்த கண்ணையுடையளாகிய எம்முடையவாணுதல் வண்டலைச்செய்யுமாயத்தின்கண்ணே தன்பாவைக்கென்று அமர்ந்துகொண்டாள். இத்துணையுமறிவேன் எ-று.

ஆளரி-ஒருகால் நரசிங்கமாகிய மாலெனினுமமையும். கோளரிக்குன்றிசான்றொன்பதற்குக் கோளரிக்கொப்பாகிய அத்தன்மையரெனினுமமையும். இக்குன்றின்கண்வண்டலாயத்துமேவிக்கொண்டாளெனவினையும் தாளரிக்குன்றினென்றதனான், இது தெய்வந்தரவந்ததென்றும், பாவைக்கென்றதனான் அறியாப்பருவமென்றும், கோளரிக்குன்றிசான்றொன்றதனான் இவட்குத்தக்காரென்றும், மேவியென்றதனாற் பயிர்ப்புநீங்கிற்றென்றும், தாரென்றதனான் மெய்யுற்றதனோடொக்குமென்றுங்கூறினாளாம். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-உடன்போக்குணர்த்துதல். (௨௨௫)

கற்புநிலைக்கிரங்கல்.

கற்புநிலைக்கிரங்கலென்பது-தோழியறத்தொடுநிற்பக்கேட்ட செவிலி இஃதறமாயினும் இவள்பருவத்திற்குத்தகாது அதுகிடக்க, இனியவளுக்குநன்மையாவது அவனைவழிபடுவதல்லது பிறிதில்லையெனக் கற்புநிலைக்கிரங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

வடுத்தான்வகிர்மலர்கண்ணிக்குத்தக்கின்றுதக்கன்முத்தீக் *
கெடுத்தான்கெடவிருள்லோன்றில்லைப்பன்மலர்கேழ்கிளர *
மடுத்தான்குடைந்தன்றழுங்கவழுங்கித்தழீஇமகிழ்வுற் *
றெடுத்தாற்கினியனவேயினியாவனவெம்மனைக்கே. (௨௨௬)

விற்புரைநுதலி கற்புநிலைகேட்டு க்
கோடாயுள்ள நீடாயழுங்கிய து.

(இ-ள்.) அறமேயாயினும் வடுத்தான்வகிரப்பட்டாற்போலும் மலர்ந்தகண்ணையுடையாட்கு இம்முதுக்குறைவுதகாது, ஆயினும் எம்மனைக்கு இனிநம்மாற்செய்யத்தருவன எடுத்தாற்கினியனவே

வேறில்லை. எ-று. தக்கனது முத்தீயைக் கெடுத்தவன், ஒருஞான்றுங் கேடில்லாத பழமையோன், அவனது திருவிலைக்கட் பலவாகிய மலர் நிறங்கிளர மடுவைத்தான்குடைந்து அன்று கெடப்புக அது கண்டிரங்கியணைத்து இவ்வாறுதவிசெய்யப் பெறுதலான் மகிழ்ந்தெடுத்தாற்றெனக்கூட்டுக.

இல்லைக்கணெடுத்தாற்றென்வினையும் வகிர்மலர்க்கண்ணியென் புழிச் செயப்படுபொருளைச் செய்ததுபோலக்கூறினார். வகிரென்னுமுவமவினை ஒற்றுமைநயத்தால் உவமிக்கப்படும் பொருண்மேலேறிநின்றது. தானென்பதனை அசைநிலையாக்கி வடுவகிர்போலுங் கண்ணென்றுரைப்பாருமுளர். நீடாயழுங்கல் - நெடிதாயழுங்கல். மெய்ப்பாடு- உவகையைச்சார்ந்த அழுகை. பயன்-தலைமகளது கற்பினைப்பாராட்டி ஆற்றாமைநீங்குதல். (௨௨௬)

கவன்றுரைத்தல்.

கவன்றுரைத்தலென்பது-கற்புநிலைக்கிரங்காநின்றசெவிலி, நெருநலைநாள் முறுவலைத்தந்து முலைமுழுவித்தழுவி நீசிறியவிரகுகள்செய்தவெல்லாம் இன்றவ்வழிபகாட்டைச்செல்லவேண்டிப்போலும் இதனையப்பொழுதேயறியப்பெற்றிலேனென்று அவணிலை நினைந்து கவலாநிற்றல். அதற்குச்செய்யுள்.

முறுவலக்காறந்துவந்தென்முலைமுழுவித்தழுவிச் *
சிறுவலக்காரங்கள்செய்தவெல்லாமுழுதுஞ்சிதையத் *
தெறுவலக்காலனைச்செற்றவன்சிற்றம்பலஞ்சிந்தியா *
ருறுவலக்கானகந்தான்படர்வாளொளியிழையே. (௨௨௭)

அவணிலை நினைந்து
செவிலி கவன்றது.

(இ-ள்.) ஒளியிழை உள்ளத்தொன்றுடையளாதலின், அக்காலத்து முறுவலையெனக்குத்தந்துவந்து, எனது முலையைமுழுக்கிக்கொண்டு, என்னைப்புல்லி, அவ்வாறுசிறியவிரகுகள்செய்தவெல்லாம், எல்லாப்பொருளுமழிய வெகுளுதல்வல்ல அக்காலனைவெகுண்டவனது சிற்றம்பலத்தைக் கருதாதார்சேரும் வலியகாட்டைத் தான் செல்லவேண்டிப்போலும். அக்காலத்திஃதறிந்திலேன். எ-று.

எனக்குவெளிப்படாமற் பிரிவார்செய்வனசெய்தாளென்னுங்கருத்தான் வலக்காரமென்றாள். குறித்துணர்வார்க்குவெளிப்படுமென்னுங்கருத்தாற் சிறுமைப்படுத்தாள். தெறும்வெற்றியையுடைய காலனெனினுமமையும். (௨௨௭)

அடிநினைந்திரங்கல்.

அடிநினைந்திரங்கலென்பது- நிலைமைநினைந்து கவலாநின்றசெவிலி, அனிச்சப்பூமேல் மிதிப்பினும் ஆற்றாதுபதைத்துப்பொங்காநின்றவடிகள் இன்று செறிந்தபரலையுடைய காட்டின்கட்பாவியவாறென்னோவென அவளடிநினைந்திரங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

தாமேதமக்கொப்புமற்றில்லவர்தில்லைத்தண்ணணிச்சப் *
பூமேன்மிதிக்கிற்பதைத்தடிபொங்குநங்காயெரியுந் *
தீமேலயில்போற்செறிபரற்கானிற்சிலம்படிபா *
யாமேநடக்கவருவினையேன்பெற்றவம்மனைக்கே. (௨௨௮)

வெஞ்சுரமும்மவள் பஞ்சிமெல்லடியுஞ்.
செவிலிநினைந்து கவலையுற்றது.

(இ-ள்.) தாமேதமக்கொப்பாக வேறொப்பில்லாதவரது தில்லையிற் குளிர்ந்தவனிச்சப்பூவின்மேன் மிதிப்பினும் நடுங்கித் தன்னடிகள்பண்டு கொப்புட்கொள்ளும். நங்காய், எரியாநின்றதீயின்மேற்பதித்த வேல்போலச் செறிந்தபரலையுடைய காட்டின்கட் சிலம்பையுடைய அவ்வடியைப்பாவி அரியவினையையுடையேன் பெற்ற அன்னைக்கு இன்றுநடக்கவியலுமோ! ஆண்டென்செய்கின்றாள்! எ-று.

செறிவு - ஒத்தபண்பன்று. நிலத்தைச்செறிந்தபரலெனினுமமையும். அயில்போல்செறிபரலென்பதுபாடமாயின், அயில்போலுஞ்செறிபரலென்றுரைக்க. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு- அழுகை. பயன்- ஆற்றாமைநீங்குதல். (௨௨௮)

நற்றாய்க்குரைத்தல்.

நற்றாய்க்குரைத்தலென்பது- அடிநினைந்திரங்காநின்றசெவிலி, கற்புமுதிர்வுதோன்றநின்று என்னை யிடைவிடாமற்றேடியழாநின்றபேதையதறிவு இன்றென்னைத்தேய்வியாநின்றதென்று அவள் உடன்போனமை ஆற்றாது நற்றாய்க்குக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தழுவினகையிறைசோரிற்றமியமென்றேதளர்வுற் *
றழுவினைசெய்யுநையாவஞ்சொற்பேதையறிவுவிண்ணோர் *
குழுவினையுய்ப்பநஞ்சுண்டம்பலத்துக்குனிக்கும்பிரான் *
செழுவினதாள்பணியார்பிணியாளுற்றுத்தேய்வித்ததே. (௨௨௯)

முகிழ்முலைமடந்தைக்கு முன்னியத்திய த்
திகழ்மனைக்கிழத்திக்குச் செவிலிசெப்பிய து.

(இ-ள்.) தன்னைத்தழுவினை என்கைசிறிதுசோருமாயின், நாந்தப்பியமென்றேகருதி நைந்து உள்ளந்தளர்ந்து அழுந்தொழிலைச் செய்யும் அழகியசொல்லையுடைய பேதையதறிவு விண்ணோரது திரள் பிழைக்கத் தானஞ்சையுண்டு அம்பலத்தினின்றுகூத்தாடுமிறைவனுடைய வளவியதாள்களைப் பணியாதார்பிணிபோலும் பிணியான்மிக்கு என்னைக்குறைவித்தது எ-று.

உய்யறஞ்சுண்டென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீர்மைப்பட்டு உய்வித்து என்னும்பொருளவாய், குழுவினையென்னு மீண்டாவதற்குமுடிபாயின. அறிவைக்கருத்தாவாகவும் பிணியைக்கருவியாகவுங்கொள்க. முன்னியது-வந்தது. மெய்ப்பாடும்பயனும்-அவை. (௨௨௪)

நற்றாய்வருந்தல்.

நற்றாய்வருந்தலென்பது-உடன்போனமைகேட்டு உண்மகிழ்வோடுநின்று, ஒரேதிலன்பின்னே தன்றோழியைவிட்டு, என்னையு முன்னே துறந்து, சேராதார்முன்னே ஊர் அலர்தூற்ற அருஞ்சுரம்போயினாள், இனி யானெங்ஙனமாற்றுவேனென நற்றாய் மிகவாற்றாதுவருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

யாழியன்மென்மொழிவன்மனப்பேதையொரேதிலன்பின் *
றோழியைநீத்தென்னைமுன்னேதுறந்துதுன்னார்கண்முன்னே *
வாழியிம்மூதூர்மறுகச்சென்றாளன்றுமால்வணங்க *
வாழிதந்தானம்பலம்பணியாரினருஞ்சுரமே. (௨௨௫)

கோடாய் கூ று
நீடாய் வாடிய து.

(இ-ள்.) யாழோசையினியல்புபோலும் இயல்பையுடையமெல்லியமொழியையும் வலியமனத்தையுமுடையபேதை ஒருநொதுமலன்பின்னே தன்றோழியைவிட்டு, என்னைமுற்காலத்தேநீக்கி, இம்மூதூரிலுள்ளார் அலரெடுத்துக்கலங்கச் சேராதார்முன்னே, திருமால்வணங்குதலால் அன்றாழியைக்கொடுத்தவனது அம்பலத்தைப்பணியாதாரைப்போல அரியசுரத்தைச்சென்றாள். இனியெங்ஙனமாற்றுகேன்! எ-று.

இற்செறிக்கப்பட்டபின்னர்ப் பராமுகத்தளென்பதனை உடன்போனபின்னருணர்ந்தாளாகலின், என்னைமுன்னே துறந்தென்றாள். வாழி-அசைநிலை. மெய்ப்பாடும் பயனும்-அவை. (௨௨௬)

கிளிமொழிக்கிரங்கல்.

கிளிமொழிக்கிரங்கலென்பது- பிரிவாற்றாது வருந்தாநின்றவள், அவன்போனபோக்கன்றி, இக்கிள்ளை என்னெஞ்சையீராநின்றதெனத் தன்றாய்செலவுணர்ந்து வருந்தாநின்ற கிளியினது மொழிகேட்டிரங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

கொன்னுனைவேலம்பலவற்றொழாரிற்குன்றங்கொடியோ *
ளென்னணஞ்சென்றனளென்னணஞ்சேருமெனவயரா *
வென்னனைபோயினள்யாண்டையளென்னைப்பருந்தடுமென் *
றென்னனைபோக்கன்றிக்கிள்ளையென்னுள்ளத்தையீர்கின்றதே. ()

மெய்த்தலைமாது வெஞ்சுரஞ்செல்லத்
தத்தையைநோக்கித் தாப்புலம்பியது.

(இ-ள்.) கொற்றொழிலமைந்த நுனையையுடைத்தாகிய சூலவேலையுடைய அம்பலவனை வணங்காதாரைப்போல, கொடியாள் மலைநெறியையெவ்வண்ணஞ்சென்றாள் ஆண்டெவ்வண்ணந்தங்குமென்றியான்கூற, தன்றாய்செலவுணர்ந்துமயங்கி என்னுடைய அன்னைபோயினாள் அவளெவ்விடத்தாள் இனியென்னைப்பருந்துகொல்லுமென்றுசொல்லி, என்னுடையவன்னைபோக்கொழிய அவள் கிளியென்னெஞ்சையீராநின்றது. எ-று.

என்னணஞ்சென்றனள் என்னணஞ்சேருமென்று நினைந்தயராவெனக் கிளிமேலேறவுரைப்பினுமமையும். என்னன்னைபோக்கன்று ஈர்கின்றதிக்கிள்ளையென மறுத்துரைப்பினுமமையும். மெய்த்தலை-மெய்யாகியகற்பு, புனையாவழகுமாம். மெய்ப்பாடும் பயனும்-அவை.

(௨௧௧)

சுடரோடிரத்தல்.

சுடரோடிரத்தலென்பது- கிளிமொழிகேட்டிரங்காநின்றவள், பெற்றவென்னோடு தன்கிளியிருந்துவருந்த இதனையுந்துறந்து அறிவுமுதிர்ந்து, அழற்கடஞ்சென்றாள்முகத்தை நின்கதிர்களான்வாட்டாது தாமரைமலர்போல மலர்த்துவாயாகவெனச் சுடரோடிரந்துகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பெற்றேனொடுங்கிள்ளைவாடமுதுக்குறைபெற்றியிக்கு *
நற்றேன்மொழியழற்கானடந்தாண்முகநாணுகப் *
பெற்றேன்பிறவிபெருமற்செய்தோன்றில்லைத்தேன்பிறங்கு *
மற்றேன்மலரின்மலர்த்திரந்தேன்சுடர்வானவனே. (௨௧௨)

வெஞ்சுரந் தணிக்கெனச் செஞ்சுடரவற்கு
வேயமர்தோளி தாயர்பராய து.

(இ-ள்.) சுடராகியவானவனே, பெற்றவென்றோடுந்தன் கிளியிருந்துவருந்த இதனையுந்துறந்து அறிவுமுதிர்ந்தவியல்புமிக்கு நல்லதேன்போலு மொழியையுடையாள் அழலையுடைய காட்டின்கணடர்தவளது முகத்தை நின்வெங்கதிர்களான்வாட்டாது, வளவிய வண்டையுடைய தாமரைமலர்போல மலர்த்துவாயாக, நின்னை யானிரந்தேனிதனை. எ-று. ஒருவாற்றானுந்தன்னையணுகப் பெற்றேனாகிய யான் பின்பிறவியைப்பெறாதவண்ணஞ் செய்தவனது தில்லையின் மதுமிகுமற்றேன்மலரெனக்கூட்டுக.

பெற்றேனொடுமென்பது-எண்ணொடுவுமாம். தணிக்கவென்னு மிறுதியகரங்குறைந்துநின்றது. மெய்ப்பாடும் பயனும்- அவை.

பருவநினைந்து கவறல்.

பருவநினைந்து கவறலென்பது- சுடரோடிரந்து வருந்தாநின்றவள், கற்பிக்குமுதுபெண்டருமின்றித் தானவனுக்குச் செய்யத்தகுங்குற்றேவல் செய்யவல்லள்கொல்லோவென்று அவளதுபருவ நினைந்து கவலாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வைம்மலர்வாட்படையூரற்குச்செய்யுங்குற்றேவன்மற்றென் *
மைம்மலர்வாட்கண்ணிவல்லள்கொல்லாந்தில்லையான்மலைவாய் *
மொய்ம்மலர்க்காந்தளைப்பாந்தளென்றெண்ணித்துண்ணென்றொளித்துக் *
கைம்மலராற்கண்புதைத்துப்பதைக்குமெங்கார்மயிலே. (உகரு)

முற்று மூலைக் கு
நற்றாய் கவன்றது

(இ-ள்.) தில்லையானுடைய இம்மலையிடத்து மொய்ம்மலர்க்காந்தளதுபூவினைப் பெரும்பாம்பென்றுகருதித் துண்ணென்றுமறைந்து கைம்மலர்களாற்கண்புதைத்துநடுங்கும் எம்முடைய கார்மயிலாகிய என்னுடைய மையழகுபெற்ற வாள்போலுங்கண்ணையுடையாள் கூர்மையையுடைய மலரணிந்த வாளாகியபடைக்கலத்தையுடையவூரனுக்குத் தான்செய்யத்தகுங்குற்றேவல்களைக் கற்பிக்குமுதுபெண்டருமின்றித் தானேசெய்யவல்லளாமோ! ஆண்டென்செய்கின்றாள். எ-று.

மற்றென்பதுஅசை. மொய்ம்மலர்க்காந்தள்-முதலாகிய தன்பொருட்கேற்றவடையடுத்துநின்றது. பிரிவின்றன் மகண்மேற்செல்லுங்கழிபெருங்காதலளாதலின், எங்கார்மயிலென்றும், என்வாட்

கன்னியென்றும், பல்காற்றன்னோடடுத்துக்கூறினாள். தில்லையாள் மலைவாய்ப் பதைக்குமெனவினையும். நோக்கென்னுமலங்காரமாய்ப் பாம்பிற்கஞ்சுமயிலென இல்குணமடுத்துவந்ததென்பாருமுளர். மெய்ப்பாடும் பயனும்-அவை. (௨௩௫)

நாடத்துணிதல்.

நாடத்துணிதலென்பது - பருவநினைந்து கவலாநின்றதாய்க்கு, நீ கவன்றுமெலியவேண்டா, யான் அவள்புக்கவிடம்புக்குத் தேடுவேனெனக்கூறி, செவிலி அவளை நாடத்துணியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வேயினதோளிமெலியல்விண்ணோர்தக்கன்வேள்வியின்வாய்ப் *
பாயினசீர்த்தியனம்பலத்தானைப்பழித்துமும்மைத் *
தீயினதாற்றல்சிரங்கண்ணிழந்துதிசைதிசைதாம் *
போயினவெல்லையெல்லாம்புக்குநாடுவன்பொன்னினையே. ()

கோடாய் மடந்தை யை
நாடத் துணிந்த து

(இ-ள்.) விண்ணவர் தக்கனதுவேள்வியின்கட் பரந்தபுகழையுடையனாகிய அம்பலத்தானை யிகழ்ந்துகூறி மூன்றன்றொகுதியாகிய தீயினதுவலியையுந் தலையையுங் கண்ணையுமிழந்து திசைதிசைதோறுந் தாம்போயின வெல்லையெல்லாம் புக்குப் பொன்னினைத்தேடுவேன், வேயின்றன்மையவாகிய தோள்களை யுடையாய், நீ மெலியவேண்டா. எ-று.

தொக்கபொருட்குந் தொகுதிக்கு மொற்றுமையுண்மையின், ஆற்றன்முதலாயினவற்றையிழத்தலை விண்ணோர்மேலேற்றினார். திசைதிசையென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தபெருமிதம். பயன்- நற்றாயையாற்றுவித்தல். "எமப் பேரூர்ச் சேரியுஞ்சாத்துந்-தாமே செல்லுந் தாயருமுளரே," என்றாகலிற்செவிலிதேடப்பெறும். அலங்காரம்-முயற்சிவிலக்கு. ()

கொடிக்குறிபார்த்தல்.

கொடிக்குறிபார்த்தலென்பது - செவிலிநாடத்துணியாநிற்ப, அவ்விருவரையு மிப்பொழுதேவரும்வண்ணம் நீகரைந்தாய், நினக்கு உணங்கலையஞ்சாதிருந்துண்ணலாம் அதுவன்றித் தெய்வத்திற்குவைத்தநிணத்தையுடையபலியையும் நினக்கேவரைந்துவைப்பேன் அவ்வாறுகரைவாயாகவென நற்றாய் கொடிக்குறிபாராநிற்றல். அதற்குச்செய்யுள்.

பணங்களஞ்சாலும்பருவரவார்த்தவன்றில்லையன்ன *
மணங்கொளஞ்சாயலுமன்னனுமின்னேவரக்கரந்தா *
லுணங்கலஞ்சாதுண்ணலாமொண்ணிணப்பலியொக்குவன்மாக் *
குணங்கலஞ்சாற்பொலியுந்நலசேட்டைக்குலக்கொடியே. ( )

நற்றாய் நயந்து
சொற்புட் பராயது.

(இ-ள்.) பெரியகுணங்களைந்தான் விளங்கும் நல்லசேட்டையையுடைய சீரியகொடியே, படத்களைந்து ஆடாநிற்கும் பரியவரவைச்சாத்தியவனது தில்லையைப்போலும் நறுநாற்றம்பொருந்திய அழகியமென்மையையுடையாளும்மன்னனும் இப்பொழுதேவரும்வண்ணம் நீயழைத்தால், யாமோப்பாமையின் உணங்கலைப்பஞ்சாதிருந்து நினக்குண்ணலாம். தெய்வத்திற்குக்கொடுத்த நல்லதிணைத்தையுடையபலியையும் நினக்கேவனாந்துவைப்பேன். அவ்வாறு கரைவாயாக. எ-று.

ஒக்குவலென்பதற்குத் தருவேனென்றுரைப்பினுமமையும். குணங்களைந்தாவன- மறைந்தபுணர்ச்சித்தாதலும், கலங்காமையும், பொழுதிறவாதிடம்புகுதலும், நெடுகக்காண்டலும், மடியின்மையும். சேட்டை - உறப்பைப்புடைபெயர்த்தல். கொடி-காக்கை. நலசேட்டை குலக்கொடியேயென்றுபாடமோதி, சேட்டையாகியதெய்வத்தின் நல்லகொடியேயென் றுரைப்பாருமுளர். சொற்புட்பராயது - வருவதுசொல்லுதலையுடைய புள்ளை வேண்டிக்கொண்டது. (௨௱௫)

சோதிடங்கேட்டல்.

சோதிடங்கேட்டலென்பது-கொடிநிமித்தம்பெற்று இக்காவன்மனையின்கண்ணே யாங்கள்மணஞ்செய்ய அவ்விருவரையும் இன்னும்பெறுமாறுண்டாயின், ஆராய்ந்துசொல்லுமினென அறிவாளரைக்கிட்டிச் செவிலி சோதிடங்கேளாநிற்றல். அதற்குச் செய்யுள்.

மூன்னுங்கடுவிடமுண்டதென்றில்லைமுன்னோனருளா *
வின்னுங்கடியிக்கடிமனைக்கேமற்றியாமயர *
மன்னுங்கடிமலர்க்கூந்தலைத்தான்பெறுமாறுமுண்டே *
லுன்னுங்கடனின்றியோதுங்கலுழன்மறையுத்தமரே. (௨௱௬)

சித்தந்தளர்ந்து தேடுங்கோடாய்
உய்த்துணர்வோரை யுணர்மினென்றது.

(இ-ள்.) பாந்துசெல்லும் கடியவிடத்தையுண்ட தென்றில்லைக் கண்ணனாகிய எல்லார்க்குமுன்னுபவனதருளால் இக்காவலையுடைய மனையின்கண் மணத்தை யாஞ்செய்ப நிலைபெற்றகடிமலரை யுடைய கூந்தலையுடையாளை இன்னுத்தான் பெறுமாறுமுண்டாயின், நான்மறையையுடையதலைவீர், நும்முள்ளத்தாராய்மின்கள், ஆராய்ந்து கூற்றந்தீரச்சொல்லுமின்கள். எ-று.

அருளாற்பெறுமாறுமுண்டேலெனவிலையும். தேவர்சென்றிரப்ப நஞ்சைநினைத்தலுங் கைம்மலர்க்கண் வந்திருந்ததாகலின், கருதப்படும் வெவ்விடமெனினுமமையும். யாங்கடியயாத் தான்கடிமலர்க்கூந்தலைப் பெறுமாறுமுண்டேலென் றுரைப்பினுமமையும். இப்பொருட்குத் தாமென்றது தலைமகனை. தீதின்றியுன்னுங்களெனினுமமையும். உய்த்துணர்வோரை - வெளிப்படாதபொருளைப்பேதுக்களாலுணர்வோரை. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-மருட்கை. பயன்-எதிர்காலச்செய்கையுணர்தல். (உகா)

சுவடுகண்டறிதல்.

சுவடுகண்டறிதலென்பது-சோதிடம்பெற்றுச்செல்லாநின்றவள், இம்முரம்பின்கட்கிடந்த இவை தீவினையேனெடுத்துவளர்த்த மாணிழைசிறடி, உவை அக்கள்வனடியாமெனச் சுவடுகண்டறியா நிற்றல். அதற்குச்செய்யுள்.

தெள்வன்புனற்சென்னியோனம்பலஞ்சிந்தியாரினஞ்சேர் *
முள்வன்பரன்முரம்பத்தின்முன்செய்வினையேனெடுத்த *
வொள்வன்படைக்கண்ணிசிறடியிக்கிவையுக்குவையக் *
கள்வன்பகட்டுரவோனடியென்றுகருதுவனே. (உகள)

சுவடுபடு கடத்துச்
செவிலிகண் டறிந்தது.

(இ-ள்.) தெள்ளியபெரியபுனலையுடைத்தாகிய சென்னியையுடையவனதம்பலத்தைக் கருதாதாரது இனஞ்சேரும் முள்ளையும்வலியபாலையுமுடைய இம்முரம்பின்கட்கிடந்த இவை முற்காலத்துச்செய்யப்பட்ட தீவினையையுடைய யானெடுத்துவளர்த்த ஒள்ளியவலியபடைபோலுங்கண்ணினையுடையாளுடைய சிறியவடிச்சுவடாம். இனி உவற்றை அக்கள்வனாகிய பகடுபோலும் வலியையுடையானுடைய அடிச்சுவடென்றுய்த்துணராநின்றேன்-எ-று.

இங்கிவை உங்குவையென்பன ஒருசொல். (உகள)

சுவடுகண்டிரங்கல்.

சுவடுகண்டிரங்கலென்பது-சுவடுகண்டறிந்து அவ்விடத்தேநின்று தவிசின்மேன்மிதிப்பினும் பதைத்துக்கொப்புட்கொள்ளாநின்ற இக்கான்மலர், இன்றொருவிடலைபின்னேபோதற்குத்தகுங்காலை எவ்வாறொத்தனவென அடிச்சுவடுகண் டிரங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

பாலொத்தநீற்றம்பலவன்கழல்பணியார்பிணிவாய்ச் *
கோலத்தவிசின்மிதிக்கிற்பதைத்தடிகொப்புள்கொள்ளும் *
வேலொத்தவெம்பரற்கானத்தினின்றோர்விடலைபின்போங் *
காலொத்தனவினையேன்பெற்றமாணிழைகான்மலரே. (௨௬௭)

கடத்திடைக்காரிகை யடித்தலங்கண் டு
மன்னருட்கோடா யின்னலெய்திய து.

(இ-ள்.) கோலத்தையுடைய தவிசின்மேன்மிதிப்பினும் பாலொத்தநீற்றையுடைய அம்பலவனது கழல்களைப்பணியாதார் துன்பம்போலும்வருத்தம்வாய்ப்பநடுங்கி அவ்வடிகள்பண்டு கொப்புளங்கொள்ளும்,தீவினையேன்பெற்ற மாணிழையுடைய அத்தன்மையவாகிய காலாகியமலர்கள் இன்று வேலையொத்த வெய்யபரலையுடைய காட்டின்கண் ஒருவிடலைபின் போதற்குத் தகுங்காலையொத்தன, இதனையெவ்வாறு ஆற்றவல்லவாயின எ-று.

தவிசு - தடுக்குமுதலாயின. கான்மலரென அவற்றை மலராகக்கூறினமையாற் காலொத்தனவெனவுவமித்தாள். பிணியாரென்றும், பிணிபோலென்றும், காலொத்திராவென்றும், பாடமோதுவாருமுளர். காலென்றது-அடியை. (௨௬௮)

வேட்டமாதரைக்கேட்டல்.

வேட்டமாதரைக்கேட்டலென்பது-சுவடுகண்டிரங்காநின்று, அதுவழியாகச் செல்லாநிற்றவள்,இவ்வாறு அறிபாப்பருவத்தளாய்த் தனக்கிலையில்லாதசுரத்தின்கண் அபலாளொருவனுடன் போயினாள் அவளை நீகண்டாயோவென வேட்டமாதரைக்கேளாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பேதைப்பருவம்பின்சென்றதுமுன்றில்வெண்ணைப்பிரிந்த *
லூதைக்கலமரும்வல்லிபொப்பாண்முத்தன்றில்லையன்ன *
மாதைக்கரத்தபலாளொடுங்கடிதேகினள்கண்டனையே *
போதிற்பொலியுந்தொழிற்புலிப்பற்குரற்பொற்றொடியே. ()

மென்மலர்கொய்யும் வேட்டமாதரைப்
பின்வருசெவிலி பெற்றிவினாயது.

(இ-ள்) பூவின்கட்பொலியுந்தொழிலினையும், புலிப்பல்லையுடையகழுத்தினையுமுடைய பொற்றொடியாய், பேதையாகியபருவக்கழிந்தது சரம்போந்தபின், இவ்வாறறியாப்பருவத்தளாய்முன்றிற்கணென்னைச்சிறிதுநீங்கிற்றரியளாய், நமேங்குதலான் உணவையாற்சுழலும் வல்லியையொப்பாள், முத்தனது தில்லையையொப்பாள், அவள் வெம்மைமுதலாயினவற்றாற்றனக்கென்றுமியல்பில்லாசுரத்தின்கண் அயலானொருவனோடு இன்றுபோயினாள், அவளை நீகண்டாயோ? அவளெவ்வண்ணம்போயினாள்? எ-று.

தில்லையூன்றாவென்பதூஉம்பாடம். பெற்றுவினாயதென்பதூஉம்பாடம். (௨௱௧௧)

புறவொடுபுலத்தல்.

புறவொடுபுலத்தலென்பது - வேட்டமாதரைக்கேட்டு அதுவழியாகச்செல்லாநின்றவள், ஏதிலனுமாய்த் தமியனுமாயவன்சொற்றுணையாக வெய்யசுரத்தே மாதர் சென்றால் இல்லையுடையபுறவே, இது நினக்குத்தகுதியன்றென்று கூறிற்றிலை நீ வாழ்வாயாகவெனப் புறவொடுபுலந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

புயலன்றலர்சடையேற்றவன்றில்லைப்பொருப்பரசி *
பயலன்றனைப்பணியாதவர்போன்மிகுபாவஞ்செய்தேற் *
கயலன்றமியனஞ்சொற்றுணைவெஞ்சுரமாதர்சென்றா *
லியலன்றெனக்கிற்றிலைமற்றுவாழியெழிற்புறவே. (௨௱௧௨)

காட்டுப் புறவொடு
வாட்ட முரைத்தது.

(இ-ள்.) நீராஅன்றுவிரிந்த சடையின்கணேற்றவன் தில்லைக்கணுள்ளாகிய பொருப்பிற்கரசியது கூற்றையுடையான், அவன்றன்னைப் பணியாதாரைப்போல மிக்கபாவத்தைச்செய்தேற்கு ஏதிலனுமாய்த் தமியனுமாயவனது அழகியசொல்லே துணையாகமாதர் வெய்யசுரத்தைச்சென்றால், எழிலையுடையபுறவே, இது தகுதியன்றென்றுகூறிற்றிலை, வாழ்வாயாக. எ-று.

இது கூறிற்றாயின் அவள்செல்லாளென்பது கருத்து. பொருப்பரையன் மகளாதலிற் பொருப்பரசியெனத் தந்தைகிழமை மகட்குக்கூறப்பட்டது. பாவஞ்செய்தேற்கியலன்றெனக்கிற்றிலையெனக்கூட்டுக. வெஞ்சுரமாதல்கண்டாலென்பது பாடமாயின்;

ஆதலென்பதனை எல்லாவற்றோடுங்கூட்டுக. வெஞ்சுரம்போதல்கண்டாலென்பதூஉம்பாடம். (௨௱௪௰)

குரவொடுவருந்தல்.

குரவொடுவருந்தலென்பது - புறவொடுபுலந்துபோகாநின்றவள், என்னுடையபாவை நின்னுடையமுன்னே இக்கொதிக்குங்கடத்தைக் கடப்பக்கண்டுநின்றும், இன்னவாறுபோனாளென்று எனக்குவாயந்திறக்கின்றிலை, இது நினக்குநன்றோவெனக் குரவொடு வாடியுரையாநிற்றல்: அதற்குச்செய்யுள்.

பாயும்விடையோன்புலியூரனையவென்பாவைமுன்னே *
காயுங்கடத்திடையாடிக்கடப்பவுங்கண்டுநின்று *
வாயுந்திறவாய்குழையெழில்வீசவண்டோலுறுத்த *
நீயுநின்பாவையுநின்றுநிலாவிடுநீள்குரவே. (௨௪௧)

தேடிச்சென்ற செவிலித்தாய ர்
ஆடற்குரவொடு வாடியுரைத்த து.

(இ-ள்.) குழை எழிலைச்செய்ய வண்டுகள் நின்பாவையையேயுறுத்த அப்பாவையுநீயும் நின்றுநிலாவும் பெருங்குரவே, பாய்ந்துசெல்லும்விடையையுடையவனது புலியூரையொக்கும் என்னுடையபாவை நின்முன்னே கொதிக்குங்கடத்திற்கண் அசைந்து அதனைக்கடப்பவும் விலக்காதுகண்டுநின்று, அத்துணையேயன்றி இன்னவாறு நிகழ்ந்ததென்று எனக்குவாயுந் திறக்கின்றிலை, இது நினக்குத்தகுமோ! எ-று.

நிலாவினையென்பதுபாடமாயின், வழிச்சுரஞ்செல்லக்கண்டும் வாய்திறந்து ஒன்றுங்கூறாது குழையெழிலைவீச வண்டோலுறுத்தநின்று விளங்கினையென்று கூட்டியுரைக்க. குழையெழில்வீச வண்டோலுறுத்தவென்பன - அணியாகியகுழைவிளங்கவென்பதூஉஞ் செவிலியரோலாட்டவென்பதூஉந் தோன்ற நின்றன. இப்பாட்டைந்திற்கும் மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமைநீங்குதல். (௨௪௧)

விரதியரைவினாவல்.

விரதியரைவினாவலென்பது - குரவொடுவருந்திச்செல்லாநின்றவள், பத்தியர்போல ஒருமித்தி தன்பின்னேவர ஒருபெருந்தகை முன்னேசெல்லக் கண்டீரோவென விரதியரைவினாவாநிற்றல், அதற்குச்செய்யுள்.

சுத்தியபொக்கணத்தென்பணிகட்டங்கஞ்சூழ்சடைவெண் *
பொத்தியகோலத்தினீர்புலியூரம்பலவர்க்குற்ற *
பத்தியர்போலப்பணைத்திறுமாந்தபயோதரத்தோர் *
பித்திதற்பின்வரமுன்வருமோவோர்பெருந்தகையே. (௨௪௨)

வழிவருகின்ற மாவிரதியரை
மொழியின்களென்று முன்னிமொழிந்தது.

(இ-ள்.) சுத்தியையுடைத்தாகிய பொக்கணத்தையும், என்பாகியவணியையும், கட்டங்கமென்னும் படைக்கலத்தையும்,சூழ்ந்தசடையினையும்,மெய்ம்முழுதும்மூடியவெண்கோலத்தையுமுடையீர்,புலியூர்க்கணுண்டாகிய அம்பலத்தையுடையவர்கண் மிக்கபத்தியையுடையர்களைப்போலப்பெருத்திறுமாந்த முலைகளையுடையாளொருபேதை தனக்குப்பின்வர ஒருபெருந்தகை முன்னேவருமோவுரையின். எ-று.

சுத்தி - பிறர்க்குத்திருநீறுகொடுத்தற்கு இப்பிவடிவாகத் தலையோட்டானமைக்கப்படுவதொன்று. என்பணியென்புழி இயல்பும்,கட்டங்கமென்புழித் திரிபும், விகாரவகையாற்கொள்க. கடங்கமென்பது-மழு. இது கட்டங்கமெனநின்றது. வெண்கோலம்-நீறணிந்தகோலம். பத்தியர்க்குப் பணைத்தல்-உள்ளத்துநிகழும் இன்புறவால்மேனிக்கண்வருமொளியும்,ஒடுங்காமையும். இறுமாத்தல்-தாழாதவுள்ளத்தராய்ச் செம்மாத்தல். முலைக்குப்பணைத்தல்- பெருத்தல். இறுமாத்தல்-ஏந்துதல். வெண்பத்திய கோலத்தினீரென்றபாடத்திற்கு வெண்ணீற்றுற்பத்திபடவிட்ட முண்டத்தையுடையகோலமென்றுரைக்க. (௨௪௨)

வேதியனைவினவல்.

வேதியனைவினவலென்பது-விரதியனைவினவி, அதுவழியாகச்செல்லாநின்றவள்,மான்போலுநோக்கினையும், மயில்போலுஞ்சாயலையுமுடையமான் ஓரேந்தலோடு நம்மெதிரேவரக்கண்டீரோவென வேதியனைவினவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வெதிரேய்கரத்துமென்றோலேய்சுவல்வெள்ளைநூலிற்கொண்மூ
வதிரேய்மறையினிவ்வாறுசெல்வீர்தில்லையம்பலத்துக் *
கதிரேய்சடையோன்கரமானெனவொருமான்மயில்போ *
லெதிரேவருமேசுரமேவெறுப்பவொரேந்தலொடே. (௨௪௩)

மாதின்பின் வருஞ்செவிலி
வேதியனை விரும்பிவினவ து.

(இ-ள்.) மூங்கிற்றண்டுபொருந்தியகையினையும், மெல்லியகலைத்தோலினையந்தசுவலினையும், வெள்ளைநூலினையும், கொண்மூவினதுமுழக்கம்போலுமறையொலியினையுமுடைய இந்நெறிச்செல்வீர், ஒருமான், தில்லையம்பலத்தின்கணுள்ளனாகிய மதிசேர்ந்தசடையையுடையவனதுகரத்தின்மான்போல மருண்டநோக்கத்தளாய், மயில்போலவசைந்த சாயலளாய், வருத்துஞ்சுரந்தானேகண்டுதுன்புற ஓரேந்தலோடு நும்மெதிரேவந்தாளோ, உரைமின். எ-று.

தோலேய்ந்தசுவலின்கணுண்டாகிய வெள்ளைநூலினையுமெனினுமமையும். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு - அது. பயன் - தலைமகளைக்காண்டல். (உசகூ)

புணர்ந்துடன்வருவோரைப்

பொருந்திவினவல்.

புணர்ந்துடன்வருவோரைப்பொருந்திவினவலென்பது - வேதியரைவினவி, அதுவழியாகச்செல்லாநின்றவள், நும்மைக்கண்டு, என்னாற்றேடப்படுகின்றார் மீண்டார்களென்றுகருதி மகிழ்ந்தேன், அதுகிடக்க, இவ்வாறுநும்மோடொத்தவொழுக்கத்தினராய் முன்னேயிருவரைப்போகக்கண்டீரோவெனப் புணர்ந்துடன்வருவோரைப்பொருந்திவினவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மீண்டாரெனவுவந்தேன்கண்டுநும்மையிம்மேதகவே *
பூண்டாரிருவர்முன்போயினரேபுலியூரெனைநின் *
றாண்டானருவரையாளியன்னானைக்கண்டேனயலே *
தூண்டாவிளக்கனையாயென்னையோவன்னைசொல்லியதே. (உசஅ)

புணர்ந்துடன்வரும் புரவலனொருபா ல்
அணங்கமர்கோதையை யாராய்ந்த து.

(இ-ள்.) மீண்டாரென-போயினரே. என்பது நும்மைக்கண்டு என்னாற்றேடப்படுகின்றார் மீண்டாரென்றுகருதி மகிழ்ந்தேன், இவ்வாறுநும்மோடொத்தமேதகவையுடைத்தாகிய இவ்வொழுக்கத்தையேபூண்டார் இருவர் முன்னேபோயினரோ? உரைமின். எ-று. புலியூர்-சொல்லியதே. என்பது. புலியூர்க்கண் ஒருபொருளாகமதித்து என்னைநின்றாண்டவனது கிட்டுதற்கரியமலையில் ஆளியையொப்பானை யான்கண்டேன், தூண்டவேண்டாத விளக்கையொப்பாய், அவனதயல் அன்னைசொல்லியதியாது? அதனையெட்குச்சொல்லுவாயாக. எ-று.

[௬௫]

அருவரைக்கட்கண்டேனெனக் கூட்டினுமமையும். ஆளியன்னானென்றதனால், நின்மகட்குவருவதோரிடையூறில்லையெனக்கூறினும். ஆண்டாவிளக்கு- இல்பொருளுவமை. மணிவிளக்கெனினுமமையும். அணங்கமர்கோதையை-தெய்வநாற்றமமர்ந்தகோதையையுடையாளை. ஆராய்ந்தது-வினவியது. மெய்ப்பாடு-அழுகையைச்சார்ந்தவுவகை. பயன்-அது. (௨௪௪)

வியந்துரைத்தல்.

வியந்துரைத்தலென்பது- புணர்ந்துடன் வருவோரைவினவி, அதுவழியாகப்போகாநின்றவள், தன்மகணின்ற நிலையையும், அவன்கையின்வேலினான் வேங்கைபட்டுக்கிடந்த கிடையையுங்கண்டு, வியந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பூங்கயிலாயப்பொருப்பன்றிருப்புலியூரதென்னத் *
தீங்கையிலாச்சிறியாணின்றதிவ்விடஞ்சென்றெதிர்ந்த *
வேங்கையின்வாயின்வியன்கைம்மடுத்துக்கிடந்தலற *
வாங்கயிலாற்பணிகொண்டதுதிண்டிறலாண்டகையே. (௨௪௫)

வேங்கைபட்டதும் பூங்கொடிநிலையும்
நாடாவருங் கோடாய்கூறியது.

(இ-ள்.) பொலிவினையுடையகைலாயமாகியபொருப்பையுடையவனது திருப்புலியூரதனைப்போலக் குற்றத்தையுடையவளல்லாத என்சிறியாள் நின்றது இவ்விடத்து, சென்று தன்னோடெதிர்ந்தபுலியின்வாயின்கட் பெரியகையைமடுத்துவிழுந்துகிடந்தலறும்வண்ணந் திண்ணியதிறலையுடைய ஆண்டகைவேலாற்பணிகொண்டது அவ்விடத்து, அதனால், அவர்போயினநெறியிதுவே. எ-று.

தீங்கையிலாவென்புழி இன்மை- உடைமைக்குமறுதலையாகிய வின்மை. மகளடிச்சுவடுகிடந்தவழிச் சென்று நின்றனளாதலின், அதனை இவ்விடமென்றும், வேங்கைபட்டவிடத்தையவ்விடமென்றுங்கூறினாள். வேங்கை தன்காதலியையணுகாமல் அதுவரும்வழிச்சென்றேற்றனாதலிற் சென்றென்றாள். சென்றுபணிகொண்டதெனவியையும். மெய்ப்பாடு- அது. பயன்- ஆற்றாமை நீங்குதல்.

இயைபெடுத்துரைத்தல்.

இயைபெடுத்துரைத்தலென்பது - வேங்கைபட்டதுகண்டுவியந்து, அதுவழியாகச்செல்லாநின்றவள், எதிர்வருவாரைவினவ, அவர் நீ கூறுநின்றவரைக் குன்றத்திடைக்கண்டோம், அவ்விருவருந் தம்முளியைந்துசெல்லாநின்றமைகண்டு, எல்லாவற்றையுமுடைய

னாகிய தன்காதலியோடு ஒருவடிவாய்விளையாடும் புலியூரனென்றேகருதி, யாங்களெல்லாமொத்து, மிகவும் அவ்வெழிலைத் தொழுதினைந்தோம், அந்நன்மைசொல்லலாவதொன்றன்றென எதிர்வருவார் அவரியைபெடுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மின்றொத்திடுகழனூபுரம்வெள்ளைசெம்பட்டுமின்ன ✻
வொன்றொத்திடவுடையாளொடொன்றும்புலியூரனென்றே ✻
நன்றொத்தெழிலைத்தொழவுற்றனமென்னதோர்நன்மைதான் ✻
குன்றத்திடைக்கண்டனமன்னை நீசொன்னகொள்கையரே (௨௪௫)

சேயிழையோடு செம்மல்போத
ஆயிழைபங்கனென் றயிர்த்தேமென்றது.

(இ-ள்.) அன்னாய், நீகூறியகோட்பாட்டையுடையாரைக் குன்றத்திடைக்கண்டேம், அவ்விருவருமியைந்துசேறலின், மின்றிரளுண்டாகாநின்ற அவனதுகழலும் அவளதுசிலம்பும், அவனது வெண்பட்டும் அவளதுசெம்பட்டும், விளங்க, ஒருவடிவையொத்தலான், எல்லாவற்றையுமுடையளாகிய தன்காதலியோடொருவடிவாய்விளையாடும்புலியூரனென்றேகருதி, யாங்களெல்லாமொத்துப் பெரிதுமவ்வழகைத்தொழநினைந்தேம், அந்நன்மையெத்தன்மையதோர்நன்மைதான்! அதுசொல்லலாவதொன்றன்று. எ-று.

என்னதோர்நன்மையென்றதனான், அஃதறமாதலுங்கூறப்பட்டதாம். தானென்பது-அசைநிலை. கொள்கையரையென்னுமுருபு-விகாரவகையாற்றொக்கது. என்னநன்மையதாமென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-உவகை. பயன்-செவிலியை யெதிர்வருவார் ஆற்றுவித்தல். (௨௪௫)

மீளவுரைத்தல்.

மீளவுரைத்தலென்பது- இடைபெடுத்துரைத்தவர், அவ்விருவரும் ஒரிடுக்கணின்றிப்போய்த் தில்லையினெல்லையைச்சென்றணைவர், இனிநீ செல்வதன்று, மீள்வதேகாரியமெனத் தேடிச்செல்லாநின்றசெவிலியை, மீளக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மீள்வதுசெல்வதன்றன்னையிவ்வெங்கடத்தக்கடமாக் ✻
கீள்வதுசெய்தகிழவோனொடுங்கிளர்கெண்டையன்ன ✻
நீள்வதுசெய்தகண்ணாளிற்நெடுஞ்சுரநீந்தியெம்மை ✻
யாள்வதுசெய்தவன்றில்லையினெல்லையணுகுவரே. (௨௪௬)

கடுங்கடங்கடந்தமை கைத்தாய்க்குரைத்
தடுங்கல்மின்மீண்டு நடவினென்றது.

(இ-ள்.) புடைபெயராநின்றகெண்டைபோலும் நீடலைச்செய்தகண்ணையுடையாள், வெய்யவிச்சுரத்தின்கண், அத்தன்மைத்தாகியகடமாவைப்பிளத்தலைச்செய்த கிழவோனோடும் இந்நெடியசுரத்தைநீந்தி, அவ்விருவரும் ஓரிடுக்கணின்றிப்போய், எம்மையாளுதலைச்செய்தவனது தில்லையினெல்லையைச்சென்றணைவர், அதனால், அன்னாய், செயற்பாலது மீள்வதே, சேறலன்று. எ-று.

சுரங்கடத்தல் இருவர்க்குமொக்குமெனினும், நீள்வதுசெய்தகண்ணை நீந்தியெனத்தலைமகண்மேற்கூறினார், வெஞ்சுரத்திற்கவள்பஞ்சிக் மெல்லடிதகாவாகலின். அனுகுவவொன்றழித் தலைமகள்தொழிவுமுண்மையின், நீந்தியென்னுமெச்சம், வினைமுதல்வினைகொண்டதாம், * திரித்துரைப்பாருமுளர். கிழவோனொடுமென்றதனால், அவன்பற்றுக்கோடாக நீந்தினளென்பது விளக்கினார். இனியொழிவை-எண்ணொடுவாக்கியுரைப்பினுமமையும் உம்மை-அசைநிலை. (௨௱௪௭)

உலகியல்புரைத்தல்.

உலகியல்புரைத்தலென்பது-மீளக்கூறவும் மீளாதுகவலாநின்றசெவிலிக்கு, சந்தனமுமுத்துஞ் சங்குந் தாம்பிறந்தவிடங்கட்கு யாதும்பயன்படாது, தம்மைவிரும்பியணிவாரிடத்தேசென்று பயன்படாநிற்கும், அதுபோலமகளிருந் தாம்பிறந்தவிடத்துப்பயன்படார், நீகவலவேண்டாவென, உலகியல்புகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

சுரும்பிவர்சந்துந்தொடுகடன்முத்தும்வெண்சங்குமெங்கும் *
விரும்பினர்பாற்சென்று மெய்க்கணியாம்வியன் கங்கையென்னு
பெரும்புனல்சூடும்பிரான்சிவன்சிற்றம்பலமனைய [ம்
கரும்பனமென்மொழியாருமந்நீர்மையர்காணுநர்க்கே (௨௪௮)

செவிலியது கவலைதீ ர
மன்னியவுலகியன் முன்னியுரைத்த து.

(இ-ள்.) நறுநாற்றத்தாற்சுரும்புசென்று பரக்குஞ்சந்தனமுந் தொட்கப்பட்டகடலின்முத்தும் வெண்சங்கும் எத்தேயத்துந் தாம்பிறந்தவிடங்கட்கு யாதும்பயன்படாது, தம்மைவிரும்பியணிவாரிடத்தே சென்று அவர்மெய்க்கு அணியாகாநிற்கும். அகன்றக

* "முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின.,, என்புழிப் பொதுவாகாது வினைமுதற்கே வினையாதல்வேண்டுமென்னும் வரையறையின்றி வினைமுதல் வினையென்னுந் திணையேயாய்நிற்றலின், இவ்வாறுமுடித்தார். இது சேனாவரையருரையானுமுணர்க, எவியாக்கம், உம் சூத்திரம், ஆடுஉவறிசொல்.

ங்கையென்றுநின்ற பெருமபுனலைச்சூடிம்பிரான், சிவன், அவனது சிற்றம்பலத்தையொக்குங் கரும்புபோலும் மெல்லிய மொழியினையுடையமகளிரும், ஆராய்வார்க்கத்தன்மையர், நீ கவலவேண்டா. எ-று.

சங்கு-மணியாயும் வளையாயும் அணியாம். எங்குமணியாமெனவியையும். சிற்றம்பலத்துமன்னுங் கரும்பனமென்மொழியாரென்பதுபாடமாயின், சிற்றம்பலத்தையுடைய தில்லையினுளதாங் கரும்புபோலு மென்மொழியையுடையாரென்றுரைக்க. (௨௪௮)

அழுங்குதாய்க்குரைத்தல்.

அழுங்குதாய்க்குரைத்தலென்பது-உலகியல்புகூறவும் மீளாதுநின்று, தாமெடுத்துவளர்த்தமை சொல்லிக் கவலாநின்ற செவிலியை, முன்னிலைப்புறமொழியாக, இவர்தாம் இல்லின்கணெடுத்துவளர்த்தவர்போலும், அவர்போய்த் தம்மையிருவரையுங் கூட்டுவித்த தெய்வப்பதியாகிய தில்லையிடத்துப் பழனங்களைச்சென்றணைவரெனத் தம்முட்கூறுவார்போன்று கூறி, மீட்டுக்கொண்டுபோகாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஆண்டிலெடுத்தவராமிவர்தாமவரல்குவர்போய்த் *
தீண்டிலெடுத்தவர்தீவினைதீர்ப்பவன்றில்லையின்வாய்த் *
தூண்டிலெடுத்தவராறெங்கொடெற்றப்பழம்விழுந்து *
பாண்டிலெடுத்தபஃறாமரைகீழும்பழனங்களே. (௨௪௯)

செழும்பணையணைந்தமை
அழுங்குதாய்க்குரைத்தது.

(இ-ள்.) இவர்தாம் அவ்விடத்து இல்லின்கணெடுத்து வளர்த்தவர்போலும், யாவராயினுந் தம்மையுணுகில் அவர் நரகத்தழுந்தாமலெடுத்து அவரது தீவினையைத்தீர்ப்பவனது தில்லையின்கண், தூண்டிலை விழுங்கியவரால் தெங்கைமோத, அதன்பழம் விழுந்து கிண்ணம்போலும் பூக்களையுயர்த்திய பலவாகிய தாமரையைக்கிழிக்கும் பழனங்களை அவர் சென்றுசேர்வர். இனியோரிடரில்லை. எ-று.

தில்லையின்வாய்ப்பழனங்களெனவியையும். ஆண்டிலெடுத்தவராமிவர்தாமென்று தம்முட்கூறியபின் செவிலிக்குக் கூறினாராகவுரைக்க. இவ்வாறுபகராது, செவிலிகேட்ப முழுவதூஉந் தம்முட்கூறினாராகவுரைப்பினமையும். தூண்டிலானெடுக்கப்பட்ட

அருவரைக்கட்கண்டேனெனக் கூட்டினுமமையும். ஆளியன்றென்றகனல்,நின்மகட்குவருவதோரிடையூறில்லையெனக்கூறினும். தூண்டாவிளக்கு- இல்பொருளுவமை. மணிவிளக்கெனினுமமையும். அணங்கமர்கோதையை-தெய்வநாற்றமமர்ந்தகோதையையுடையாளை. ஆராய்ந்தது-வினாயது. மெய்ப்பாடு-அழுகையைச்சார்ந்தவுவகை. பயன்-அது. (உ௪௪)

வியந்துரைத்தல்.

வியந்துரைத்தலென்பது- புணர்ந்துடன் வருவோரைவினாவி, அதுவழியாகப்போகாநின்றவள், தன்மகணின்றநிலையையும், அவன்கையின்வேலினான் வேங்கைபட்டுக்கிடந்த கிடையையுங்கண்டு, வியந்துகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பூங்கயிலாயப்பொருப்பன்றிருப்புலியூரதென்னத் *
தீங்கையிலாச்சிறியாணின்றநிவ்விடஞ்சென்றெதிர்ந்த *
வேங்கையின்வாயின்வியன்கைம்மடுத்துக்கிடந்தலற *
வாங்கயிலாற்பணிகொண்டதுதிண்டிறலாண்டகையே. (உ௪௫)

வேங்கைபட்டதும் பூங்கொடிநிலையும்
நாடாவருங் கோடாய்கூறியது.

(இ-ள்.) பொலிவினையுடையகைலாயமாகியபொருப்பையுடையவனது திருப்புலியூரதனைப்போலக் குற்றத்தையுடையவளல்லாத என்சிறியாள் நின்றது இவ்விடத்து, சென்று தன்னோடெதிர்ந்தபுலியின்வாயின்கட் பெரியகையையடுத்துவிழுந்துகிடந்தலறும்வண்ணந் திண்ணியதிறலையுடைய ஆண்டகைவேலாற்பணிகொண்டது அவ்விடத்து, அதனால், அவர்போயினநெறியிதுவே. எ-று

தீங்கையிலாவென்புழி இன்மை- உடைமைக்குமறுதலையாகியவின்மை. மகளடிச்சுவடுகிடந்தவழிச் சென்று நின்றனளாதலின், அதனை இவ்விடமென்றும், வேங்கைபட்டவிடத்தையவ்விடமென்றுங்கூறினாள். வேங்கை தன்காதலியையணுகாமல் அதுவரும்வழிச்சென்றேற்றாதலிற் சென்றென்றாள். சென்றுபணிகொண்டதெனவினையுப். மெய்ப்பாடு- அது. பயன்-ஆற்றாமை நீங்குதல்.

இனைபெடுத்துரைத்தல்.

இனைபெடுத்துரைத்தலென்பது - வேங்கைபட்டதுகண்டுவியந்து, அதுவழியாகச்செல்லாநின்றவள், எதிர்வருவாரைவினாவ, அவர் நீ கூறுநின்றவரைக் குன்றத்திடைக்கண்டோம், அவ்விருவருந் தம்முளியைந்துசெல்லாநின்றமைகண்டு, எல்லாவற்றையுமுடைய

னாகிய தன்காதலியோடு ஒருவடிவாய்விளையாடும் புலியூரனென் றேகருதி,யாங்களெல்லாமொத்து,மிகவும் அவ்வெழிலைத் தொழு தினைந்தேம், அந்நன்மைசொல்லலாவதொன்றன்றென எதிர்வரு வார் அவரியைப்படுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பின்றொத்திகழனூபுரம்வெள்ளைசெம்பட்டுமின்ன *
வொன்றொத்திடவுடையாளொடொன்றாம்புலியூரனென்றே *
தன்றொத்தெழிலைத்தொழவுற்றனமென்னதோர்நன்மைதான் *
குன்றத்திடைக்கண்டனமன்னைநீசொன்னகொள்கையரே (௨௪௬)

சேயிழையோடு செம்மல்போத ர
ஆயிழைபங்கனென் றயிர்த்தேமென்றது.

(இ-ள்.) அன்னாய்,நீகூறியகோட்பாட்டையுடையாளைக் குன்ற த்திடைக்கண்டேம்,அவ்விருவருமியைந்துசேறலின், மின்றிரளு ண்டாகநின்ற அவனதுகழலும் அவளதுசிலம்பும், அவனது வெண்பட்டும் அவளதுசெம்பட்டும், விளங்க, ஒருவடிவையொத் தலான், எல்லாவற்றையுமுடையளாகிய தன்காதலியோடொருவ டிவாய்விளையாடும்புலியூரனென்றேகருதி,யாங்களெல்லாமொத் துப் பெரிதுமவ்வழகைத்தொழுதினைந்தேம், அந்நன்மையெத்த ன்மையதோர்நன்மைதான்! அதுசொல்லலாவதொன்றன்று.எ-று

என்னதோர்நன்மையென்றதனன், அஃதறமாதலுங்கூறப்பட் டதாம். தானென்பது-அசைநிலை. கொள்கையரை யென்னுமுரு பு-விகாரவகையாற்றொக்கது. என்னநன்மையதா மென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-உவகை. பயன்-செவிலியை யெதிர்வருவார் ஆற்றுவித்தல். (௨௪௬)

மீளவுரைத்தல்.

மீளவுரைத்தலென்பது- இயைபெடுத்துரைத்தவர், அவ்விருவ ரும் ஒரிடுக்கணின்றிப்போய்த் தில்லையினெல்லையைச்சென்றணை வர்,இனிநீ செல்வதன்று,மீள்வதேகாரியமெனத் தேடிச்செல்லா நின்றசெவிலியை,மீளக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மீள்வதுசெல்வதன்றன்னையிவ்வெங்கடத்தக்கடமாக் *
கீள்வதுசெய்தகிழவோனெடுங்கிளர்கெண்டையன்ன *
நீள்வதுசெய்தகண்ணாளிற்நெடுஞ்சுரநீந்தியெம்மை *
யாள்வதுசெய்தவன்றில்லையினெல்லையணுகுவரே. (௨௪௭)

கடுங்கடங்கடந்தமை கைத்தாய்க்குரைத் து
நடுங்கன்மின்மீண்டு நடமினென்ற து.

(இ-ள்.) படைபெயராநின்றகெண்டைபோலும் நீடலைச்செய்தகண்ணையுடையாள், வெய்யவிச்சுரத்தின்கண், அத்தன்மைத்தாகியகடமாவைப்பிளத்தலைச்செய்த கிழவோனொடும் இந்நெடியசுரத்தைநீந்தி, அவ்விருவரும் ஓரிடுக்கணின்றிப்போய், எம்மையாளுதலைச்செய்தவனது தில்லையினெல்லையைச்சென்றணைவர், அதனால், அன்னாய், செயற்பாலது மீள்வதே, சேறலன்று. எ-று.

சுரங்கடத்தல் இருவர்க்குமொக்குமெனினும், நீள்வது செய்தகண்ணாணீந்தியெனத்தலைமகண்மேற்கூறினார், வெஞ்சுரத்திற்கவள் பஞ்சின் மெல்லடிதகாவாகலின். அனுகுவலொண்டழித் தலைமகள் தொழிலுமுண்மையின், நீந்தியென்னுமெச்சம், வினைமுதல்வினைகொண்டதாம், *திரித்துரைப்பாருமுளர். கிழவோனொடுமென்றதனால், அவன்பற்றுக்கோடாக நீந்திநாளென்பது விளக்கினார். இனிஒடு-வை-எண்ணொடுவாக்கியுரைப்பினுமமையும் உம்மை-அசைநிலை. (௨௱௪௭)

உலகியல்புரைத்தல்.

உலகியல்புரைத்தலென்பது - மீளக்கூறவும் மீளாதுகவலாநின்றசெவிலிக்கு, சந்தனமுமுத்துஞ் சங்குந் தாம்பிறந்தவிடங்கட்கு யாதும்பயன்படாது, தம்மைவிரும்பியணிவாரிடத்தேசென்று பயன்படாநிற்கும், அதுபோலமகளிருந் தாம்பிறந்தவிடத்துப்பயன்படார், நீகவலவேண்டாவென, உலகியல்புகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சுரும்பிவர்சந்துந்தொடுகடன்முத்தும்வெண்சங்குமெங்கும் *
விரும்பினர்பாற்சென்று மெய்க்கணியாம்வியன் கங்கையென்னும்
பெரும்புனல்சூடும்பிரான்சிவன்சிற்றம்பலமனைய [ம்
கரும்பனமென்மொழியாருமந்நீர்மையர்காணுநர்க்கே (௨௪௮)

செவிலியது கவலைதீர
மன்னியவுலகியன் முன்னியுரைத்தது.

(இ-ள்.) நறுநாற்றத்தாற்சுரும்புசென்று பரக்குஞ்சந்தனமுந் தொட்கப்பட்டகடலின்முத்தும் வெண்சங்கும் எத்தேயத்துந்தாம்பிறந்தவிடங்கட்கு யாதும்பயன்படாது, தம்மைவிரும்பியணிவாரிடத்தே சென்று அவர்மெய்க்கு அணியாகாநிற்கும். அகன்றக

* "முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின.,, என்புழிப் பொதுவாகாது வினைமுதற்கே வினையாதல்வேண்டுமென்னும் வரையறையின்றி வினைமுதல் வினையென்னுந் துணையேயாய்நிற்றலின், இவ்வாறுமுடித்தார். இது சேனாவரையருரையானுணர்க, கிளவியாக்கம், ௨ம் சூத்திரம், ஆடூஉவறிசொல்.

ங்கையென்றுநின்றபெரும்புனலைச்சூடிம்பிரான், சிவன், அவனது சிற்றம்பலத்தையொக்குங் கரும்புபோலும் மெல்லிய மொழியினையுடையமகளிரும், ஆராய்வார்க்கத்தன்மையர், நீ கவலவேண்டா. எ-று.

சங்கு-மணியாயும் வளையாயும் அணியாம். எங்குமணியாமென வியையும். சிற்றம்பலத்துமன்னுங் கரும்பனமென்மொழியாவென்பதுபாடமாயின், சிற்றம்பலத்தையுடைய தில்லையினுளதாங்கரும்புபோலு மென்மொழியையுடையாரென்றுரைக்க. (௨௪௮)

அழுங்குதாய்க்குரைத்தல்.

அழுங்குதாய்க்குரைத்தலென்பது-உலகியல்புகூறவும் மீளாது நின்று, தாயெடுத்துவளர்த்தமைசொல்லிக் கவலாநின்ற செவிலியை, முன்னிலைப்புறமொழியாக, இவர்தாம்இல்லின்கணெடுத்துவளர்த்தவர்போலும், அவர்போய்த் தம்மையிருவரையுங் கூட்டுவித்த தெய்வப்பதியாகிய தில்லையிடத்துப் பழனங்களைச்சென்றணைவரெனத் தம்முட்கூறுவார்போன்று கூறி, மீட்டுக்கொண்டுபோகாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஆண்டிலெடுத்தவராமிவர்தாமவரல்குவர்போய்த் *
ஈண்டிலெடுத்தவர்தீவினைதீர்ப்பவன்றில்லையின்வாய்த் *
தூண்டிலெடுத்தவராறெங்கொடேற்றப்பழம்விழுந்து *
பாண்டிலெடுத்தபஃறாமரைகீழும்பழனங்களே. (௨௪௯)

செழும்பணையணைந்த மை
அழுங்குதாய்க்குரைத்த து.

(இ-ள்.) இவர்தாம் அவ்விடத்து இல்லின்கணெடுத்து வளர்த்தவர்போலும், யாவராயினுந் தம்மையுள்ளில் அவர் நரகத்தழுந்தாமலெடுத்து அலாது தீவினையைத்தீர்ப்பவனது தில்லையின்கண், தூண்டிலைவிழுங்கியவரால் தெங்கொடுமோத, அதன்பழம்விழுந்து கிண்ணம்போலும்பூக்களையுயர்த்தியபலவாகிய தாமரையைக்கிழிக்கும்பழனங்களை அவர்சென்றுசேர்வர். இனியோரிடரில்லை. எ-று.

தில்லையின்வாய்ப்பழனங்களெனவியையும். ஆண்டிலெடுத்தவராமிவர்தாமென்று தம்முட்கூறியபின்செவிலிக்குக் கூறினாளாகவுரைக்க. இவ்வாறுபகராது, செவிலிகேட்ப முழுவதூஉந் தம்முட்கூறினாளாகவுரைப்பினுமமையும். தூண்டிலானெடுக்கப்பட்ட

வராலெனினுமமையும். இவைமூன்றற்கும் மெய்ப்பாடு -பெருமிதம். பயன்-செவிலிக்குலகியல்புகூறி அவளைமீள்வித்தல். தில்லைவளைதொட்டு இதுகாறும்வரப் பாலைத்திணைகூறியவாறறிக. ௨௱௩௰

உடன்போக்கு முற்றிற்று.

வரைவுமுடுக்கம்.

இவ்வாறுடன்போக்கு நிகழாதாயின், வரைந்துகோடனிகழும்: அதுநிகழுமிடத்துத் தோழியான் வரைவுமுடுக்கப்பட்டும் வரைபொருட்பிரிந்துவந்தும் நிகழுமென்ப. அவற்றுள்,

வரைவுமுடுக்கம்வருமாறு, சூத்திரம். வருத்தங்கூற லவன்மறுத்துரைத்த, லுள்ளதுகூற லேதங்கூறல், பகல்வரலென்ற லொழுகிரந்துரைத்தல், சிறைப்புறங்கூறன் மந்திமேல்வைத்தல், கண்டுயிலாமை கண்டாருரைத்தல், பகலுடம்பட்டாள்போ னிரவரலென்ற, லிரவுடம்பட்டாள்போன்று பகல்வரலென்ற, லிரவும்பகலும் வரவொழிகென்றல், காலங்கூறல் கூறுவிக்குற்றல், செலவுகூறல் பொலிவழிவுரைத்தலென், றீரொண்கிளவியு மியம்புங்காலை, வாரணிமுலையாய் வரைவுமுடுக்கம்.

(இ-ள்.) வருத்தமிகுதிகூறி வரைவுகடாதல் - பெரும்பான்மைகூறி மறுத்தல்- உள்ளதுகூறிவரைவுகடாதல்-ஏதங்கூறியிரவரவுவிலக்கல்-பழிவரவுரைத்துப்பகல்வரவுவிலக்கல்-தொழுதிரந்துகூறல்-தாயறிவுகூறல்-மந்திமேல்வைத்துவரைவுகடாதல்- காவன்மேல்வைத்துக்கண்டுயிலாமைகூறல் - பகலுடம்பட்டாள்போன் றிரவரவுவிலக்கல்-இரவுடம்பட்டாள்போன்று பகல்வரவுவிலக்கல்- இரவும்பகலும்வரவுவிலக்கல்- காலங்கூறிவரைவுகடாதல்-கூறுவிக்குற்றல்-செலவுநினைந்துரைத்தல்- பொலிவழிவுரைத்து வரைவுகடாதல் எனவிவைபதினெட்டும் வரைவுமுடுக்கமாம். எ-று. அவற்றுள்,

வருத்தமிகுதிகூறிவரைவுகடாதல்.

வருத்தமிகுதிகூறிவரைவுகடாதலென்பது-அலரறிவுறுத்ததோழி, அலரானுங்காவன்மிகுதியானும் நின்னையெதிர்ப்படமாட்டாது வருந்தாநின்றவளிடத்து நின்னருளிருக்கின்றவாறென்னோ வெனத் தலைமகளது வருத்தமிகுதிகூறித் தலைமகனை வரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

எழுங்குலைவாழையினின்கனிதின்றிளமந்தியந்தண் *
செழுங்குலைவாழைநிழலிற்றுயிற்சிலம்பாமுனைமே *
வழுங்கொலைவேற்றிருச்சிற்றம்பலவனையுன்னலர்போ *
லழுங்குலைவேலன்னகண்ணிக்கென்னோநின்னருள்வகையே. ()

இரவுக்குறியிடத்தேந்திழைப்பாங் கி
வரைவுவேண்டுதல் வரவுரைத்த து.

(இ-ள்.) எழாநின்ற குலைகளையுடைய வாழைத் திரளின்கணுண்டாகிய இனியகனிகளைத்தின்று இளையமந்தி வளவியகுலையை யுடைய அவ்வாழைத்திரளினது நல்லகுளிர்ந்தநிழற்கண் வெருவுதலின்றித்துஞ்சுஞ் சிலம்பையுடையாய், பொரியத்தழுங் கொலைவேலையுடைய திருச்சிற்றம்பலவனை நினையாதாரைப்போல வருந்தாநின்ற உலைத்தொழிலமைந்த வேல்போலுங்கண்ணையுடையாட்கு நினதருட்கூறியாதோ! இவளதாற்றாமைக்குமருந்தன்று.எ-று.

நின்னருள்வகையென்னோவென்பதற்கு இவ்வாறுவருந்துமிவளிறத்து இனிநீசெய்யக்கருதியவகை யாதோவெனினுமமையும். அழுங்கொலைவேலென்பது பாடமாயின், அழாநின்றகொலைவேல் போலுங்கண்ணையுடையாட்கென்றுரைக்க. எழுங்குலை-இளங்குலை. செழுங்குலை-முதிர்ந்தகுலை. எழுங்குலையு முதிர்ந்தகுலையு முடைமையான் இடையறாதுபழுக்கும் வாழைத்திரளின்கணுண்டாகிய கனியைநுகர்ந்து, மந்தி வேறொன்றான் வெருவாது அவ்வாழை நிழலிற்கீழின்புற்றுத்துயிலுமாறுபோல, ஆராவின்பமிடையிட்டு நுகராது நீவரைந்துகோடலான் இடையறாப்பேரின்பந்துய்த்து, அன்னைசொல்லானுண்ணடுங்காது நின்றுணிழற்கீழ் இவளின்புற்றுவாழ்தல்வேண்டுமெனை உள்ளுறைகாண்க. மெய்ப்பாடு-அச்சம். பயன்-வரைவுகடாதல். (உ௫௰)

பெரும்பான்மைகூறிமறுத்தல்.

பெரும்பான்மைகூறிமறுத்தலென்பது-வரைவுகடாவியதோழிக்கு, யானவளைத்தெய்வமானுடமென்றறிந்து வரைந்துகோடற்கு இக்குன்றிடத்துத் தோன்றுநின்றவிடம் தெய்வமகளிரதிடமோ, அன்றிக் குறத்தியரிடமோ, கூறுவாயாகவெனத் தலைமகன் றலைமகளைப்பெரும்பான்மைகூறி மறுத்துரையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பரம்பயன்றன்னடியேனுக்குப்பார்விசும்பூடுருவி *
வரம்பயன்மாலறியாத்தில்லைவானவன்வானகஞ்சே *

ராம்பையர்தம்மிடமோவன்றிவேழத்தினென்புநட்ட *
குரம்பையர்தம்மிடமோவிடந்தோன்றுமிக்குன்றிடத்தே. ()

குலம்புரி கொம்பர்க்கு ச்
சிலம்பன் செப்பிய து.

(இ-ள்.) இக்குன்றிடத்துத்தோன்றுமிடம் தில்லையின்வானவனது வானகத்தைச்சேர்ந்த தெய்வமகளிர்தமதிடமோ? அன்றி யானையினென்பை வேலியாகநட்ட குரம்பைகளையுடைய குறத்தியரிடமோ? நீ கூறுவாயாக. எ-று. எல்லாப்பொருட்கும் அப்பாலாயவன், ஆயினுந் தன்னடியேற்குப் பெறும்பயனாயுள்ளான், பாராயும்விசும்பையுமூடுருவிநிற்றலாற் றன்னெல்லையை அயனுமாலுமறியாத தில்லையின்வானவனெனக்கூட்டுக.

என்றது- அவளை யெட்டவுஞ் சுட்டவும்படாத தெய்வமென்றிருத்தலான், அவள்வாழுமிடத்தை அரம்பையரிடமென்றே கருதுவல், அன்றாயினாளையென வரைவுடம்படாது கூறியவாறு. மெய்ப்பாடு- மருட்சி. பயன்- இரவுக்குறியிடமுணர்த்துதல். (௨௫௪)

உள்ளதுகூறிவரைவுகடாதல்.

உள்ளதுகூறிவரைவுகடாதலென்பது- பெரும்பான்மைகூறிமறுத்த தலைமகனுக்கு,இவ்விடம் எந்தையதுமுற்றூட்டு, எமக்குற்றார் குறவரே, எம்மைப்பெற்றாளுங்கொடிச்சியே,யாங்களும் புனங்காப்போஞ்சிலர்,நீவரைவுவேண்டாமையின் எம்மைப்புணர்துலாக்கவேண்டுவதில்லையெனப் பின்னும்வரைவுதோன்றத் தோழி தங்களுண்மைகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

சிறார்கவண்வாய்த்தமணியிற்சிதைபெருந்தேனிழுமென் *
றிறால்கழிவுற்றெஞ்சிறுகுடிலுந்துமிடமெந்தை *
யுறாவரையுற்றார்குறவர்பெற்றாளுங்கொடிச்சியும்பர் *
பெறாவருளம்பலவன்மலைக்காத்தும்பெரும்புனமே. (௨௫௫)

இன்மையுரைத்த மன்னனுக் கு
மாழைநோக்கி தோழியுரைத்த து.

(இ-ள்.) சிறார்கையிற்கவண்தப்பாமல் அதுவிட்டமணியாற் சிதைந்தபெருந்தேன், இழுமென்னுமோசையையுடைத்தாய்,இறாலினின்றுங்கழிதலையுற்று எமதுசிறுகுடிலைத்தள்ளுமிவ்விடம் எந்தையதுமுற்றூட்டு, எமக்குற்றார் குறவர், எம்மைப்பெற்றாளுங் கொடிச்சியே,யாமும் தன்னன்பரல்லது உம்பர்பெறாதவருளையு

ளுடைய அம்பலவனதுமலைக்கட்பெரும்புனத்தைக்காத்துப், அதனா
ல்,நீயிர் வரைவுவேண்டாமையினெம்மைப்புனைந்துரைக்கவேண்
டுவதில்லை. எ-று.

“கோவையுந் தொகையு மாவயின் வரையார்.,,என்பதனான்,இ
துதொடர்நிலைச்செய்யுளாதலிற் குரம்பையர் தம்மிடமோவென்
றுவினாவப்பட்டவிடம் எஞ்சிறுகுடிவூர்துமிடமெனவும் ஒருபு
னத்தைச்சுட்டி இதெந்தையுருவரை யெனவுங்கூறினாளாக வுரை
ப்பினுமமையும். சிறுமொறிந்தமணிபாற் பெருந்தேன் சிதைந்து
அவ்விறாலைவிட்டுக்கழிந்து,சிறுகுடியிற்பரந்தாற்போல, அயலா
ர்கூறும் அலரான் நமதுமறைந்தவொழுக்கம் நம்வயினடங்கா
து பலருமறியவெளிப்படாநின்றதென உள்ளுறைகாண்க. மெய்
ப்பாடு-மருட்சி. பயன்-குறியிடமுணர்த்துதல். (உ௫௨)

ஏதங்கூறியிரவரவுவிலக்கல்.

ஏதங்கூறியிரவரவுவிலக்கலென்பது-உண்மையுரைத்துவரைவு
கடாயதோழி,நீவரைவொடுவாராயாயிற் சிங்கந்திரண்டு தனக்கிரை
யாகியவுணவுகளைத்தேடுமிருளின்கண், நினதுகைவேல் துணை
யாக நீவந்தருளாநின்றவிஃதே எங்களுக்குத்துன்பமாகத் தோன்
றாநின்றது இனியிவ்விருளிடைவாராதொழிவாயென ஏதங்கூறித்
தலைமகனையிரவரவுவிலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

கடந்தொறும்வாரணவல்சியினாடிப்பல்சீயங்கங்கு *
லிடந்தொறும்பார்க்குமியவொருநீயெழில்வேலின்வந்தாற் *
படந்தொறுந்தீயரவன்னம்பலம்பணியாரினெம்மைத் *
தொடர்ந்தொறுந்துன்பென்பதேயன்பநின்னருடோன்றுவதே.

இரவருதுயர மேந்தலுக்கெண்ணி ப்
பருவரலெய்திப் பாங்கிபகர்ந்த து.

(இ-ள்.) பலவாகியசீயம் வாரணமாகியவல்சிகாரணமாகத்தேடி
க் கங்குற்பொழுதின்கட் காடுதோறுங்காட்டினிடந்தோறுஞ்
சென்று,பார்க்கு நெறியின்கட் டனியையாகிய நீ எழிலையுடைய
வேல் துணையாக வந்தால், அன்பனே, எம்மிடத்துண்டாகியநின்
னருள் எம்மைவிடாதே தொடர்ந்தொறுந்துன்பமென்னுமு
ணர்வே எமக்குத்தோன்றுவது. எ-று. படந்தொறுமுண்டாகியதீ
யையுடைய அரவையணிந்தவனதம்பலத்தைப் பணியாதாரைப்
போலவருந்த எம்மையொறுக்குமெனக்கூட்டுக.

என்றது,எமக்கு நீ செய்யுந்தலையளியை யாங்கள் அன்பமாக வேயுணராநின்றோம் எ-று. நாடுதல்- மனத்தாலாராய்தல். பார்த்தல்- கண்ணனோக்குதல். வேலினென்னுமைந்தாவது ஏதுவின்கண்வந்தது. ஓறுக்குமென்பது-ஒறுமெனவிடைக்குறைந்துநின்றது. எம்மைநீவிடாதுதொடருந்தொறுமெனினுமமையும். இதற்குத்தொடருமென்பது இடைக்குறைந்துநின்றது. நின்னருளென்னுமெழுவாய்-துன்பமென்னும்பயனிலைகொண்டது. மெய்ப்பாடு-அச்சம். பயன்-இரவுக்குறியதேதங்காட்டிவலாவுகடாதல்.()

பழிவரவுரைத்துப்பகல்வரவுவிலக்கல்.

பழிவரவுரைத்துப்பகல்வரவுவிலக்கலென்பது-இவ்விருளிடைவாராதொழிகென்றது பகல்வரச்சொன்னவாறெனவுட்கொண்டு,பகற்குறிச்சென்றுநிற்ப,தோழியெதிர்ப்பட்டுப்பகல்வந்து எமக்குச்செய்யாநின்றமெய்யாகியவருள் புறத்தாரறிந்து வெளிப்பட்டுப்பழியாகப்புகுதாநின்றது, இனிப்பகல்வரவொழிவாயாகவெனப் பழிவருதல்கூறிப் பகல்வரவுவிலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்.

களிறுற்றசெல்லல்களைவயிற்பெண்மரங்கைஞ்ஞெமிர்த்துப் *
பிளிறுற்றவானப்பெருவரைநாடபெடைநடையோ *
டொளிறுற்றமேனியன்சிற்றம்பலநெஞ்சுறாதவர்போல் *
வெளிறுற்றவான்பழியாம்பகனீசெய்யுமெய்யருளே. (௨௫௪)

ஆங்ஙனமொழுகு மடல்வேலண்ணலைப்
பாங்கியைய பகல்வரலென்றது.

(இ-ள்.) அசும்பின்கட்பட்டுக் களிறுற்றவருத்தத்தைப்பிடி தீர்க்கின்றவிடத்து மரத்தைக்கையான்முறித்துப் பிளிறுதலையுற்றவானத்தைத்தோயும் பெரியவரையையுடையநாடனே, அன்னப்பெடையினது நடைபோலு நடையையுடையாளொடுகூடி விளங்குதலையுற்ற மேனியையுடையவனது சிற்றம்பலத்தை நெஞ்சாலுறாதாரைப்போல யாமிடர்ப்பட வெளிப்படுதலையுற்ற பெரியபழியாகாநின்றது நீ பகல்வந்து எமக்குச்செய்யும் மெய்யாகியவருள். எ-று.

மெய்யருளென்றது-மெய்யாகவருளுகின்றாயேனுமென்றவாறு. வழியல்லாவழிச்சேறலான் அசும்பிற்பட்டகளிற்றினை வாங்குதற்குப் பிடிமுயல்கின்றாற்போல, இவளையெய்துதற்குபாயமல்லாதவிவ்வொழுக்கத்தினைவிரும்புதின்னை இதனினின்று மாற்றுத

ற்கு யான்முயலாநின்றேனென உள்ளுறைகாண்க. மெய்ப்பாடு- அது. பயன்- பகற்குறிவிலக்கிவரைவுகடாதல். (௨௫௪)

தொழுதிரந்துகூறல்.

தொழுதிரந்துகூறலென்பது-பகல்வரவுவிலக்கினதோழி, இவளிரவுவரவுங்கூடுமெனவுட்கொண்டு, நின்னையெதிர்ப்படவேண்டி அழுதுவருந்தாநின்ற இவள்காரணமாக, அரிக்கும் யாளிக்கும் வெருவி யானைகள் திரண்டு புடைபெயராத மிக்கவிருளின்கண் வாராதொழிவாயாகவென்று, நின்கழல்களைக்கையாற்றொழுது, நின்னையிரந்தேனென வரைவுதோன்றத் தலைமகனைத் தொழுதிரந்து கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கழிகட்டலைமலைவோன்புலியூர்கருதாதவர்போற் *
குழிகட்களிறுவெரீஇயரியாளிகுழீஇவழங்காக் *
கழிகட்டிரவின்வரல்கழல்கைதொழுதேயிரந்தேன் *
பொழிகட்புயலின்மயிலிற்றுவளுமிவள்பொருட்டே. (௨௫௫)

இரவரவினேதமஞ்சிச்
சுரிதருகுழற்றோழிசொல்லியது.

(இ-ள்.) பொழியாநின்றகண்ணீர்ப்புனலையுடையதோர்மயில்போலத் துவளாநின்றவிவள்காரணமாக, அரியையும் யாளியையும் வெருவிக் குழிந்தகண்ணையுடையவாகிய யானைகள், ஓரிடத்தே திரண்டுநின்று, அவ்விடத்துநின்றும் புடைபெயராத சிறந்தவச்சத்தைச்செய்யுமிரவின்கண் வாராதொழிவாயாக, நின்கழல்களைக் கையாற்றொழுது, நின்னையிரந்தேனிதனை. எ-று. கழிந்தகண்ணையுடையதலைமாலையைச்சூடுவோனது புலியூரைக் கருதாதாரைப் போல வெருவியெனக்கூட்டுக.

குழீஇவழங்காவென்றுபாடமோதி, அரியையும் யாளியையுங் குழியையும்வெருவி வழங்காவென்றுரைப்பாருமுளர். கழி- அச்சத்தைச்செய்யுமியல்பாற் சிறத்தல். கழிகட்டிரவியென்பதற்குக்கழி சிறப்பின்கண்வந்து அளாயிரவின்கணென்பது படநின்றதெனினுமமையும். பொழிகட்புயலின்மயிலிற்றுவளுமென்றதனால், இவ்வாறிவளாற்றாளெனினும் நீ வரற்பாலையல்லையென்றுகூறி வரைவுகடாவினளாம். வழியிடைவருமேதங்குறித்து இவ்வாறின்றி இவள்பொருட்டென்றுரைப்பினுமமையும். கருகார்மனையம்பாலென்பது பாடமாயின், மனம்போலுங் கழிகட்டிரவெனவுரையாயு மெய்ப்பாடு-அது. பயன்-இரவுக்குறிவிலக்கிவரைவுகடாதல். ( )

தாயறிவுகூறல்.

தாயறிவுகூறலென்பது - தோழிதிரந்துகூறவும், வேட்கைமிகவாற் பின்னுங்குறியிடைச்சென்றுநிற்ப, அக்குறிப்பறிந்து, நங்கானலிடத்து அணையிரவின்கண் ஒருதேர்வந்ததுண்டாகக்கூடுமெனவுட்கொண்டு, அன்னை சிறிதேகண்ணுஞ்சிவந்து என்னையும்பார்த்தாள், இருந்தவாற்றான் இவ்வொழுக்கத்தையறிந்தாள்போலுமெனத் தோழி தலைமகளுக்குக்கூறுவாள்போன்று சிறைப்புறமாகத் தலைமகனுக்கு வரைவுதோன்றத் தாயறிவுகூறாநிற்றல். அதற்குச் செய்யுள்.

விண்ணுஞ்செலவறியாவெறியார்கழல்வீழ்சடைத்தீ *
வண்ணன்சிவன்றில்லைமல்லெழிற்கானலரையிரவி *
னண்ணன்மணிநெடுந்தேர்வந்ததுண்டாமெனச்சிறிது *
கண்ணுஞ்சிவந்தன்னையென்னையுநோக்கினள்கார்மயிலே (உ௫௬)

சிறைப்புறத்துச் செம்மல்கேட் ப
வெறிக்குழற்பாங்கி மெல்லியற்குரைத்த து.

(இ-ள்.) கார்காலத்துமயிலையொப்பாய், தில்லையில்வளவியவெழிலையுடையகானலிடத்து அரையிரவின்கண் மணிகளையுடையதலையாயதொருநெடுந்தேர் வந்ததுண்டாகக்கூடுமென வுட்கொண்டு, அன்னை சிறிதேகண்ணுஞ்சிவந்து, என்னையும்பார்த்தனள், இருந்தவாற்றான், இவ்வொழுக்கத்தினையறிந்தாள்போலும். எ-று. விண்ணுளாராலும் எல்லாப்பொருளையுங்கடந்தப்பாற்சென்ற செலவையறியப்படாத நறுநாற்றமார்ந்தகழலினையுந் தாழ்ந்தசடையினையுமுடையதீவண்ணன், சிவன், அவனதுதில்லையெனக்கூட்டுக.

எல்லாப்பொருளையுங்கடந்து நின்றனவாயினும், அன்பர்க்கணியவாய் அவரிட்டநறுமலரான் வெறிகமழுமென்பது போதரவெறியார்கழலென்றார். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-படைத்துமொழியால்வரைவுகடாதல். (உ௫௬)

மந்திமேல்வைத்துவரைவுகடாதல்.

மந்திமேல்வைத்துவரைவுகடாதலென்பது - சிறைப்புறமாகத் தாயறிவுகூறிச் சென்றெதிர்ப்பட்டு, ஒருகடுவன் றன்மந்திக்குமாங்கனியைத் தேனின்கட்டோய்த்துக்கொடுத்து, நுகர்வித்துத் தம்முளின்புறவதுகண்டு, இது நங்காதலர்க்கு நம்மாட்டரிதாயிற்றென நீவரையாமையை நினைந்தாற்றாளாயினளென மந்திமேல்வைத்துத் தலைமகள தவருத்தங்கூறிவரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கான்றேய்பொழிலெழின்மாங்கனிமந்தியின்வாய்க்கடுவன் *
றேன்றோய்த்தருத்திமகிழ்வகண்டாடிருநீண்முடிமேன் *
மீன்றோய்புனற்பெண்ணைவைத்துடையாளையுமேனிவைத்தான் *
வான்றோய்மதிற்றில்லைமாநகர்போலும்வரிவளையே. (௨௫௭)

வரிவளையை வரைவுகடா வி
யரிவைதோழி யுரைபகர்ந்த து.

(இ-ள்.) நீண்டதிருமுடிக்கண் மீனைப்பொருந்திய புனலாகிய பெண்ணைவைத்து எல்லாவற்றையு முடையவளையுந் திருமேனிக் கண்வைத்தவனது வானைத்தோயுமதிலையுடைய தில்லையாகிய பெரியநகரையொக்கும் வரிவளை, வானைத்தோயும் பொழிலின்கணுண் டாகிய நல்லமாங்கனியைக் கடுவன் தேனின்கட்டோய்த்து மந்தியின்வாய்க்கொடுத்து நுகர்வித்துத் தம்முளின்புறுமவற்றைக் கண்டான். எ-று.

என்றதனால், தன்னைப்புறங்காக்குங்கடுவனைக்கண்டு, விலங்குகளுமிவ்வாறுசெய்யாநின்றன, இதுநங்காதலர்க்குநம்மாட்டறிதாயிற்றென நீவரையாமையைநினைந்தாற்றாளாயினாளென்றவாறாம். அருத்தியென்பதற்கு-நெடுஞ்சுரநீந்தியென்றதற்குரைத்ததுரைக்க. கான்றோய்பொழிலென்பதூஉம்பாடம். வரிவளையைவரைவு- வரிவளையைவரைதல். மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்தபெருமிதம். பயன்- வரைவுகடாதல். (௨௫௭)

காவன்மேல்வைத்துக் கண்டுயிலாமைகூறல்.

காவன்மேல்வைத்துக்கண்டுயிலாமைகூறலென்பது-மந்திமேல்வைத்துவரைவுகடாவப்பட்டதலைமகன், இது நங்காதலியிடத்து நமக்கரிதாயிற்றெனத் தானுமாற்றானாய், இரவுக்குறிச்சென்றுநிற்ப, அந்நிலைமைக்கண் இவ்விடத்துள்ளார், இவள் காவற்பறைகேட்குந்தோறுங் கண்டுயிலாமைக்குக்காரணமென்னெனத் தம்முட்கூறாநிற்றல். இதுவுஞ்சிறைப்புறமாகவரைவுகடாதலைப்பயக்கும். அதற்குச்செய்யுள்.

நறைக்கண்மலிகொன்றையோனின்றுநாடகமாடுதில்லைச் *
சிறைக்கண்மலிபுனற்சீர்நகர்காக்குஞ்செவ்வேலிளைஞர் *
பறைக்கண்படும்படுந்தோறும்படாமுலைப்பைந்தொடியாள் *
கறைக்கண்மலிகதிர்வேற்கண்படாதுகலங்கினவே. (௨௫௮)

நகர் காவலின்
மிகுதி கூறுதல்.

(இ-ள்) நறுநாற்றத்தையுடைய தேன்மலிந்தகொன்றையையுடையவன் நின்றுகூத்தாடுந்தில்லையாகிய சிறையிடத்து அதுபெருமையன் மிகும்புனலையுடைய சீரியநகரை இராப்பொழுதின்கட் காக்குஞ்செவ்வேலையுடைய இளைஞராதுபறைக்கண் படுந்தோறும்படுந்தோறும், படக்கடவவல்லாத முலையையுடைய பைந்தொடியாளுடைய கறை தன்கண்மிக்க கதிர்வேல்போலுங்கண்கள் ஒருகாலும்படாவாய் வருந்தின எ-று.

நாடகமென்றது-கண்டுக்கூத்தென்னூர் துணையாய்நின்றது. கலங்கினவென்பதற்குத் துயிலாமையான் நிறம்பெயர்ந்தனவென்றும் அழுதுகலங்கினவென்றுமுரைப்பாருமுளர். காவன்மிகுதியும் அவளாற்றாமையுங்கூறி வரைவுகடாயவாறு இஃதின்னூர்கூற்றென்றது துறைகூறியகருத்து. மெய்ப்பாடு- அழுகை. பயன்- வரைவுகடாதல். (உ௫அ)

பகலுடம்பட்டாள்போன்

இரவரவுவிலக்கல்.

பகலுடம்பட்டாள்போன்றிரவரவுவிலக்கலென்பது-சிறைப்புறமாகக்கண்டுயிலாமைகேட்ட தலைமகன், ஆதரவுமிகவாலெதிர்ப்படலுற்றுநிற்பத் தோழியெதிர்ப்பட்டு,நீவந்தொழுகாநின்ற இப்புலராவிரவும் பொழிபாமழையும் புண்ணிற்கணுழையும்வேல் மலராம்படி யெங்களைவருத்தாநின்றன, இதற்கொரு மருந்தில்லையோ நும்வரையிடத்தெனப் பகலுடம்பட்டாள்போன்றிரவரவு விலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

கலராயினர்நினையாத்தில்லையம்பலத்தான்கழற்கன் *
பிலராயினர்வினைபோலிருடூங்கிமுழங்கிமின்னிப் *
புலராவிரவும்பொழிபாமழையும்புண்ணிற்நுழைவேன் *
மலராவருமருந்தும்மில்லையோநும்வரையிடத்தே. (உ௫௯)

விரைதரு தா   ரோ
யிரவர லென்ற   து.

(இ-ள்.) நீமக்களாயுள்ளார்கருதாத தில்லையம்பலத்தானுடைய திருவடிகட்கு அன்புடையரல்லாதாரது தீவினைபோல இருள் செறிந்துபுலராதவிரவும், மின்னிமுழங்கிப்பொழிவதும்போன்று பொழியாதமழையும், எமக்குப்புண்ணின்கணுழையும்வேல் மல

ராம்வண்ணங்கொடியவாய் வாரா நின்றன, இதற்கொருமருந்துமி
ல்லையோ நம்வரையிடத்து! எ-று.

மருந்தென்றமையான் வரையிடத்தென்றாள் ஒருநிலத்துத்தலை
மகளாதலின், நம்வரையாகிய இவ்விடத்திதற்கோர்மருந்தில்லை
யோவென ஒருவழக்காகவுரைப்பினுமமையும். வருத்துதலே
யன்றித் தணிக்கலுமுண்டோவென்பதுபடநின்றமையின், மருந்
துமென்னுமும்மை- எச்சவும்மை. இரவின்கண்வரதொழுகாநிற்
பவும், இரவுறதுயரந்தீர்க்கு மருந்தில்லையோவென்றகூறினமை
யான், வரைவல்லதுஇவ்வாறொழுகுதல் அதற்குமருந்தன்றென்று
கூறினளாம். மெய்ப்பாடு- அழுகை. பயல்- இரவுக்குறிவிலக்குதல்.

இரவுடம்பட்டாள்போன்று

பகல்வரவுவிலக்கல்.

இரவுடம்பட்டாள்போன்றுபகல்வரவுவிலக்கலென்பது - இவ
ள் மருந்தில்லையோவென்றது யான் இரவுக்குறிச்செல்லின் மழை
க்காவிருளாமெனநிர்ப்படலருமையான் வேட்கையுற்றுப்பகற்குறி
யுடம்பட்டாளெனவுட்கொண்டு, பகற்குறிச்செல்லாநிற்ப, தோழி
யெதிர்ப்பட்டு, பகல்வந்தருளாநின்றது அலளுக்குவருத்தமுறாம்
படிபாக மிக்கவலராகாநின்றது, அதனாற் பகற்குறிவரற்பாலைபல்
லையென, இரவுக்குறியுடம்பட்டாள்போன்று பகற்குறிவிலக்காநி
ற்றல். அதற்குச்செய்யுள்.

இறவரையும்பர்க்கடவுட்பராய்நின்றெழிலியுன்னிக் *
குறவரையார்க்குங்குளிர்வரைநாடகொழும்பவள *
நிறவரைமேனிபன்சிற்றம்பலநெஞ்சுறாதவர்போ *
லுறவரைமேகலையாட்கலராம்பகலுன்னருளே. (௨௩௰)

இகலடு வேலோ ய்

பகல்வர லென்ற று.

(இ-ள்.) தொடர்ந்துபெய்யாநிற்றலான் எழிலிபெய்தலைநினை
ந்து மலைமேலுறையுந்தெய்வங்களைப்பராவிக்குறவர்நின்றார்ப்ப
ரவஞ்செய்யுங்குளிர்ந்தவரைமேலுண்டாகிய நாட்டையுடையாய்,
கொழுவியபவளமாகிய நிறத்தையுடைய வரைபோலுந் திருமே
னியையுடையவனது சிற்றம்பலத்தை நினையாதவரைப்போலவரு
ந்த, அரைக்கணிந்தமேகலையையுடையாட்குப் பகலுண்டாமுனத
ருள் மிக்கவலராகாநின்றது, அதனானீவாரல். எ-று.

குறவரையென்புழி ஐகாரம்- அசைநிலை. அசைநிலையென்றுதி

குறமலையென்றனைப்பாருமுளர். வரையையுடையநாடெனினுமமையும். குறவர் பரவும்பருவத்துத்தெய்வத்தைப்பரவாது, பின்மழைமறுத்தலானிடர்ப்பட்டு அதனைமுயல்கின்றாற்போல, நீயும் வரையுங்காலத்துவரையாது, இவளெய்துதற்கரிதாகியவிடத்துத் துன்புற்றுவரையமுயல்வையென உள்ளுறைகொள்க. "உள்ளுறை தெய்வ மொழிந்தவை நிலனெனக்- கொள்ளு மென்ப குறியறிந் தோரே,, என்பவாகலிற் றெய்வத்தைநீக்கியுவமைகொள்க. மெய்ப்பாடு-அது. பயன்-பகற்குறிவிலக்குதல். (௨௬௰)

இரவும்பகலும்வரவுவிலக்கல்.

இரவும்பகலும்வரவுவிலக்கலென்பது-இரவுடம்பட்டாள்போன்று பகல்வரவுவிலக்கினதோழி, நீபகல்வரின் அலர்மிகுதியானெங்களுக்குமிக்கபழிவந்தெய்தும் இராவரின் எவ்வாற்றானு நின்னையெதிர்ப்படுதலருமையாற் சிறிதும்பயனில்லை அதனால் நீ யிருபொழுதும்வரற்பாலையல்லையென இரவும்பகலும் வரவுவிலக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

சுழியாவருபெருநீர்சென்னிவைத்தென்னைத்தன்றொழும்பிற் *
கழியாவருள்வைத்தசிற்றம்பலவன்கரத்தருமான் *
விழியாவரும்புரிமென்குழலாடிறத்தையமெய்யே *
பழியாம்பகல்வரினீயிரவேதும்பயனில்லையே. (௨௬௧)

இரவும்பகலும்
வரவொழிகென்றது.

(இ-ள்.) ஐயனே, நீபகல்வரிற் சுருண்டமெல்லியகுழலையுடையாடிறத்து மெய்யாகவே அலருண்டாம். இராவரின் எதிர்ப்படுதலருமையாற் சிறிதும்பயனில்லை, அதனான் நீயிருபொழுதும்வாரல். எ-று. சுழியாநின்றுவரும் பெரியநீரைச்சென்னியின்கண்வைத்துத் தனக்குத்தொண்டுபடுதற்கண் என்னை நீங்காத தன்னருளான்வைத்த சிற்றம்பலவனது கரத்தின்கண்வைக்கப்பட்டமான்போலவிழித்துவரும் புரிமென்குழலாளெனக்கூட்டுக.

பாய்ந்துவரும்பெரும்புனலை வேகந்தணித்துத் தன்சென்னியின்கண்வைத்தாற்போல நில்லாதுபாக்கு நெஞ்சையுடையேனைத் தன்னருட்கணடக்கினனென்பது கருத்து. தன்றொழும்பினின்றும் யானீங்காமைக்குக்காரணமாகிய அருட்கண்ணென்னைவைத்தவனெனினுமமையும். மெய்ப்பாடு-அது. பயன்-இரவுக்குறியும்பகற்குறியும்விலக்கி வரைவுகடாதல். (௨௬௧)

காலங்கூறிவரைவுகடாதல்.

காலங்கூறிவரைவுகடாதலென்பது- இருபொழுதும்வரவுவிலக்கினதோழி, மதி நிரம்பாநின்றது, வேங்கை பூவாநின்றன, இனிதிணைக்குவரைவொடுவருதற்குக் காலமிதுவெனக் காலங்கூறிவரைவுகடாவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மையார்கதலிவனத்துவருக்கைப்பழம்விழுதே *
னெப்பாதயின்றிளமந்திகள்சோருமிருஞ்சிலம்பா *
மெய்ப்பாவரியதெனம்பலத்தான்மதியூர்கொள்வெற்பின் *
மொய்யார்வளரிளவேங்கைபொன்மாலையின்முன்னினவே ௨௬௨

மூர்த்தியபொருளைச் சிந்தையில்வைத்து
வரைதருகிளவியிற் றெரியவுரைத்தது.

(இ-ள்.) இருளார்ந்தவாழைக்காட்டின்கண் வருக்கைப்பலாவின்பழம்விழுதலானுண்டாகியதேனை இளையமந்திகளறியாதேயுண்டு பின்களியாற்சோரும் பெரியசிலம்பையுடையாய், மதி நிரம்பாநின்றது, அம்பலத்தானுடைய இவ்வெற்பின்கட்செறிவார்ந்து வளராநின்றவிளையவேங்கைகள் பூத்துப் பொன்மாலைபோலத் தோன்றின, இனி மெய்யாகவுனக்கரியதியாது! எ-று.

கதலிவனத்துண்டாகியதேனென்றகனாற் கதலிக்கனியொடுகூடுதல்பெற்றாம். ஊர்கோடல்- குறைவின்றி மண்டலமாகவெளிபரத்தல். அல்லதூஉம் பரிவேடித்தலெனினுமமையும். திண்மலைக்கண் விலங்குகளுமித்தன்மைத்தாகிய தேனைக்குறியாதுண்டு இன்புறாநின்றனவாகலிற் குறித்தவற்றினினக்கரியதியாது இதுவன்றேபருவமுமெனவரைவுபயப்பக்கூறியவாறாயிற்று. மந்திகடேருமென்பது பாடமாயின், தேனையறியாதுண்டு அதன்சுவைமிகுதியாற் பின்னதனைத்தேர்ந்துணருமென்றுரைக்க. வேட்டபொருள் உள்ளத்துமுற்பட்டுத்தோன்றுதலின், வரைவைமூர்த்தியபொருளென்றார். வரைதருகிளவி - வரையுங்கிளவி. மெய்ப்பாடு- பெருமிதம். பயன்-வரைவுகடாதல். (௨௬௨)

கூறுவிக்குற்றல்.

கூறுவிக்குற்றலென்பது - காலங்கூறிவரைவுகடாவவும் வரைவுடம்படாமையின் அவடன்னைக்கொண்டே கூறுவிப்பாளாக, அலரான்வருநாணினையுங்காணாமையான்வருமாற்றாமையையும் பற்றிக்கிடந்த நம்மல்லலை நம்மாற் றலையளிக்கப்படுவோர் இவ்வாறுவரு

ந்துதறகாதெனத் தாமாகவறிகின்றிலராயின் நாஞ்சொல்லுந்தன்மைகளென்னேனெனப் புலந்து, நீயாகிலுஞ்சென்றுகூறென்பது குறிப்பாற்றோன்றத் தலைமகன் வரைவுடம்படாமையைத் தோழி தலைமகட்குக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தேமாம்பொழிற்றில்லைச்சிற்றம்பலத்துவிண்ணோர்வணங்க *
நாமாதரிக்கநடம்பயில்வோனை நண்ணாதவரின் *
வாமான்கலைசெல்லநின்றார்கிடந்தநம்மல்லல்கண்டாற் *
றாமாவறிகிலராயினென்னாஞ்சொல்லுந்தன்மைகளே. (௨௱௫)

ஒத்ததொவ்வா துரைத்ததோ ழி
கொத்தவிழ்கோதையாற் கூறுவிக்குற்ற து.

(இ-ள்.) தேமாம்பொழிலையுடையதில்லைச் சிற்றம்பலத்தின்கண் விண்ணோர்வணங்கவும் நாம்விரும்பவுங் கூத்தைச்செய்வானைச் சேராதாரைப்போல வருந்த, அழகுமாட்சிமைப்பட்ட மேகலைகழலும்வண்ணங்கண்டு தலையளிசெய்யாது நின்றவர் பெருகிக் கிடந்தநம்மல்லலைக்கண்டால், நம்மாற் றலையளிக்கப்படுவார் இவ்வாறுவருந்துதறகாதென்று தாமாகவறிகின்றிலராயின், நாஞ்சொல்லுமியல்புகளென்! எ-று.

வாமம் - வாமெனவிடைக்குறைந்துநின்றது. அல்சான்வருநாணிலையுங் காணாமையான்வருமாற்றாமையையும் பற்றிக் கிடந்த நம்மல்லலென்றாள். ஒத்ததொவ்வாதென்பதனை ஒத்துமொவ்வாமலெனத்திரிக்க. அஃதாவது - இராவருதலுடம்பட்டாள்போன்று பகல்வாரலென்றலும், பகல்வருதலுடம்பட்டாள்போன்று இராவாரலென்றலும், பின் இருபொழுதையுமறுத்தலும். (௨௱௫)

செலவுநினைந்துரைத்தல்.

செலவுநினைந்துரைத்தலென்பது-வரைவுடம்படாமையிற்றோழி தலைமகளோடுபுலந்துகூறக்கேட்டு, அக்குறிப்பறிந்து, இக்கல்லதரின்கணீர்வந்தவாறென்னோவென்று வினவுவாரைப்பெற்றேமாயின் இத்தன்மையையுடைத்தாகிய மிக்கவிருளின்கண் யாமவருழைச்சேறலரிதன்று, சென்றேமாயினும் அவ்வாறுசொல்லுவாரில்லையெனத் தலைமகள் செலவுநினைந்துகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வல்சியினெண்குவளர்புற்றகழமல்குமிருள்வாய்ச் *
செல்வரிதன்றுமன்சிற்றம்பலவரைச்சேரலர்போற் *
கொல்கரிசீயங்குறுகாவகைபிடிதானிடைச்செல் *
கல்லதரென்வந்தவாறென்பவர்ப்பெறிற்கார்மயிலே. (௨௱௬).

பாங்கிநெருக்கப் பணிமொழிமொழிந் து
தேங்கமழ்சிலம்பற்குச் சிறைப்புறக்கிள வி.

(இ-ள்.) கார்காலத்துமயிலையொப்பாய், சிற்றம்பலவரைச் சேராதாரைப்போல வருந்தச் சீயங்கொல்கரியைச்சென்றணையாதவண்ணம் பிடி தானிரண்டற்குமிடையேசென்று புருக்கல்லதரின்கண் நீர்வந்தவாறெங்ஙனேயென்று சொல்லுவாரைப் பெற்றேமாயிற் குரும்பியாகியவுணவுகாரணமாகக் கரடி உயர்ந்தபுற்றையகழாநிற்ப மிகாநின்றவிருளின்கண் அவரிருந்தவழிச்சேறலரிதன்று,சென்றேமாயினும் அவ்வாறுசொல்லுவாரில்லை. எ-று.

செல்வரிதென்பது- செல்வுழிக்கணென்பதுபோல மெய்யீற்றுடம்படுமெய். *செல்லவென்பதுகடைக்குறைந்துநின்றதெனினுமமையும். மன்- ஒழியிசைக்கண்வந்தது. கல்லதர்-கற்கண்ணதர்.நல்லதரினென்பது பாடமாயின்,வந்தவாறென்னென ஒருசொல்வருவித்துரைக்க. பணிமொழி மொழிந்தென்பதனை மொழியவெனத்திரித்து,சிறைப்புறக்கிளவியாயிற்றென வொருசொல்வருவித்துரைக்க சிறைப்புறக்கிளவியாயிற்றெனவே, சிறைப்புறமாதல் குறித்தாளல்லளென்பதுபெற்றாம். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தவிளிவரல்.பயன்-அது. (௨௧௪)

பொலிவழிவுரைத்துவரைவுகடாதல்.

பொலிவழிவுரைத்துவரைவுகடாதலென்பது- தலைமகள் தன்னையெதிர்ப்படலுற்றுவருந்தாநின்றமை சிறைப்புறமாகக்கேட்டதலைமகன் குறியிடைவந்துநிற்ப,தோழியெதிர்ப்பட்டு, என்னையாது காவலை நீவிநின்வயத்தளாய்நின்று பொலிவழிந்து வருந்தாநின்றவளை நீவரைந்துகொள்ளாது இவ்வாறிகழ்ந்து மதித்தற்குக்காரணமென்னோவெனத் தலைமகளதுபொலிவழிவுகூறி வரைவுக

---

* ‘‘உயிரீற்றின்முன் உயிர்முதல்வரின் உயிரோடுயிர்க்கு மயக்கமின்மையிற் புணர்ச்சியின்றி விட்டிசைத்து நிற்குமாதலின்,உடம்படாதவவ்விரண்டு முடம்படுதற்பொருட்டு இடையேவருமெய்யை உடம்படுமெய்யென்பவாகலின், வருமுயிரோதியொற்றுமைப்பட்டுப் புணர்தற்குரிய மெய்யீற்றின்வழித்தோன்றுமெய்யை உடம்படுமெய்யென்பது பொருந்தாது.,, நன்னூல்விருத்தி ௱௬௨-சூ-ம்.

‘‘வின்வத்துக்கொட்கும். எம். செல்வுழிச்செல்க. எம். சார்வுழிச்சார்ந்ததகையன். எம். மெய்யீற்றுமுன் உயிர்வருங்கால்,இங்ஙனமுடம்படு மெய்யுண்டெனக்கூறும் வகரந்தோன்றின.,, ௱௬௩ம்-சூத்திரம்.

‘‘வின்வத்துக்கொட்கும்வண்ணத்தமரா எல்புழி வகரம் உடம்படாதவற்றை உடம்படுத்த வந்ததல்லாமையின், இன்னோரன்னவை உடம்படுமெய்யெனப் பெயர்பெறுமாறில்லையென்பது.,, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி.

டாவா நிற்றல். அதற்குச்செய்யுள்.

வாரிக்களிற்றின்மருப்புகுழுத்தம்வளைமகளிர் *
வேரிக்களிக்கும்விழுமலைநாடவிரிதிரையி *
னாரிக்களிக்கமர்தன்மாச்சடைமுடிநம்பர்தில்லை *
யேரிக்களிக்கருமஞ்ஞையிந்நீர்மையெய்துவதே. (உ௬௫)

வரைவுவிரும்பு மன்னுயிர்ப்பாங் கி
விரைதருகுழலி மெலிவுரைத்த து.

(இ-ள்.)களிற்றின்மருப்புக்களினின்றுமுக்க முத்துக்களைவரையின்வாழுமகளிர் வேரிக்குவிலையாக முகந்துகொடுக்குஞ் சிறந்த மலைக்கணுண்டாகிய நாட்டையுடையாய்,விரியுந்திரையையுடைய யாறாகியபெண்ணிற்குக்கொடுத்தற்குப் பொருந்திய நல்லபெரியசடைமுடியையுடைய நம்பரது தில்லையினூரளாகிய எமையுடைய இக்களிக்கருமஞ்ஞையைபொப்பாள் தன்றன்மையையிழந்து இத்தன்மையையெய்துவதென்!நீயுரை. எ-று.

மலையையுடையநாடெனினுமமையும். விரிதிரையினென்பது அல்வழிச்சாரியை. விரிதிரையையுடைய நாரியெனினு மமையும். நாரிக்களித்தமரென்பது பாடமாயின்,நாரிக்களித்தலான் அவளமருஞ்சடையென்றுரைக்க. களிக்கருமஞ்ஞை- களியையுடைய கரியமஞ்ஞை. அணைதற்கரியகளிற்றின்மருப்பினின்றுமுக்க முத்தத்தினதருமையைக்கருதாது தமக்கின்பஞ்செய்யும் வேரிக்குக் கொடுத்தாற்போல,என்னையரது காவலைநீவி,நின்வயத்தளாகியவிவளதருமைகருதாது நினக்கின்பஞ்செய்யுங் களவொழுக்கங்காரணமாக இகழ்ந்து மதித்தாயென உள்ளுறைகாண்க. மெய்ப்பாடும் பயனும்-அவை. (உ௬௫)

வரைவுமுடுக்க முற்றிற்று.

வரைபொருட்பிரிதல்.

வரைபொருட்பிரிதல்வருமாறு-சூத்திரம்.-முலைவிலைகூறல்வரைவுடம்படுத்தல், வரைபொருட்கேகலை புரையவட்கென்ற,னீகூறென்றல் சொல்லாதேகல்,பிரிந்தமைகூற னெஞ்சொடுகூற, னெஞ்சொடுவருந்தல் வருத்தங்கண்டுரைத்தல்,வற்புறுத்தல்லொடுவன்பொறையழிதல், வாய்மைகூறன் மன்னவன்மெய்யுரை,தேறாதுபுலம்பல் காலமறைத்துரைத்த, லாறுவரவுரைத்த லாறுகண்டழுங்கல்,

மெலிவுகண்டு செவிலிபுணர்த்தன், மேவியசெவிலி கட்டுவைப்பித்தல்,கலக்குற்றுநிற்றல் கட்டுவித்திகூறல், வேலனையழைத்த வின்ன லெய்தல், விலக்கநினைத்த விலைமையுணர்த்த,லறத்தொடுநிற்றலையந்தீர்த்த, லவன்வெறிவிலக்கல் செவிலிக்குத்தோழி,யறத்தொடுநிற்ற னற்றாய்க்குச்செவிலி, யறத்தொடுநிற்ற றேர்வரவுணர்த்தன், மணமுரசுகேட்டுமகிழ்ந்துணர்த்த, லையுற்றுக்கலங்க லவனிதிகாட்ட, லாறைந்துடனேகூறியமூன்றும், விளர்மலர்க்குழலாய் வரைபொருட்பிரிதல்.

(இ-ள்.) முலைவிலைகூறல்- வருமதுகூறிவரைவுடம்படுத்தல்- வரைபொருட்பிரிவையுணர்வெனக்கூறல்-நீயேகூறென்றல்- சொல்லாதேகல்-பிரிந்தமைகூறல்- நெஞ்சொடுகூறல்- நெஞ்சொடுவருந்தல்- வருத்தங்கண்டுரைத்தல் - வழியொழுகிவற்புறுத்தல் - வன்புறையெதிரழிந்திரங்கல் - வாய்மைகூறிவருத்தந்தணித்தல் - தேறாதுபுலம்பல்-காலமறைத்துரைத்தல்-தூதுவரவுரைத்தல்-தூதுகண்டழுங்கல்-மெலிவுகண்டுசெவிலிகூறல்- கட்டுவைப்பித்தல்- கலக்கமுற்றுநிற்றல்- கட்டுவித்திகூறல்- வேலனையழைத்தல்- இன்னலெய்தல்- வெறிவிலக்குவிக்கநினைத்தல்- அறத்தொடுநிற்றலைபுணர்த்தல்-அறத்தொடுநிற்றல்-ஐயந்தீரக்கூறல்- வெறிவிலக்கல்- செவிலிக்குத்தோழியறத்தொடுநிற்றல்- நற்றாய்க்குச்செவிலியறத்தொடுநிற்றல்-தேர்வரவுகூறல்-மணமுரசுகேட்டுமகிழ்ந்துரைத்தல்-ஐயுற்றுக்கலங்கல்- நிதிவரவுகூறுநிற்றல் என விவைமுப்பத்துமூன்றும் வரைபொருட்பிரிதலாம் எ-று. அவற்றுள்,

முலைவிலைகூறல்.

முலைவிலைகூறலென்பது-வரைவுமுடுக்கப்பட்டதலைமகன், யான்வரைவொடுவருதற்கு நீசென்று அவளையன்மாரமுலைவிலைகேட்பாயாகவென, எல்லாவற்றானுநின்வரைவையெமரேற்றுக்கேளினல்லது விலைகூறுவராயின் அவளுக்கேழுலகும் விலைபோதாதெனத் தோழி முலைவிலைகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

குறைவிற்குங்கல்விக்குஞ்செல்விற்குநின்குலத்திற்கும்வந்தோர் *
நிறைவிற்குமேதகுநீதிக்குமேற்பினல்லாலினையி *
னிறைவிற்குலாவரையேந்திவண்டில்லையனேழ்பொழிலு *
முறைவிற்குலாநுதலாள்விலையோமெய்ம்மையோதுநர்க்கே. ()

கொலைவேற் கண்ணிக்கு
விலையிலை யென்றது.

(இ-ள்.) வரைவுவேண்டி நீயெம்மாட்டுக் குறையுடையையாய் நிற்குமதனானும், கல்விமிகுதியானும், செல்வானும், தங்குலத்தின்மேற்றநின் குலத்தானும், நீவிடுக்கவந்தசான்றோரது நிறைவானும், மேவுதற்குத்தகு நீதியானும், நின்வரவையெமரேற்றுக்கொளினல்லது விலைகூறுவராயின், ஆராயுமிடத்து மெய்ம்மைசொல்லுவார்க்கு விற்போலவளைந்த நுதலையுடையாட்கு ஏழுலகும்விலையாமோ! விலைக்குறைபாம். எ-று. எல்லாப்பொருட்குமிறைவன், வில்லாகியவளைதலையுடைய வரையையேந்துவான், வளவியதில்லைக்கண்ணான், அவனுடைய எம்பொழிலுமெனக்கூட்டுக.

செல்வு- இருமுதுகுரவரால்கொண்டாடப்படுதல். நிறைவு- அறிவொடுகூடியவொழுக்கம். நீதி- உள்ளப்பொருத்தமுறைமையின் மறாதுகொடுத்தல். உறைவிலென்பதற்கு - உறையையுடைய வில்லென்னுமமையும். (௨௬௬)

வருமதுகூறிவரைவுடம்படுத்தல்.

வருமதுகூறிவரைவுடம்படுத்தலென்பது- முலைவிலைகூறியதோழி, நீவரைவொடுவாராது இரவருள்செய்யாநின்றவிது செர்ப்பத்திக்கேதுவானால் நம்மெல்லார்க்கும் பொல்லாதாம், அதுபடாமல் எமராற்றொடுக்கப்பட்ட அருங்கலங்களை விரையவரவிட்டு அவளைவரைந்தெய்துவாயாகவென மேல்வருமிடுக்கண்கூறித் தலைமகனைவரைவுடம்படுத்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வடுத்தனநீள்வகிர்க்கண்ணிவெண்ணித்திலவாணகைக்குத் *
தொடுத்தனநீவிடுத்தெய்தத்துணியென்னைத்தன்றொழும்பிற் *
படுத்தநன்னீள்கழலீசர்சிற்றம்பலந்தாம்பணியார்க் *
கடுத்தனதாம்வரிற்பொல்லாதிரவினின்னாருருளே. (௨௬௭)

தொடுத்தனவிடுத்துத் தோகைந்தாவெனு ய்
இடுக்கண்பெரி திரவரினென்ற து.

(இ-ள்.) என்னைத் தன்னடிமைக்கட்படுவித்த நல்லநீண்டகழலையுடையவீசரது சிற்றம்பலத்தைத் தாம்பணியாதார்க்குத் தக்கனவாகிய தீதுகள் உனக்குவரக்கூடுமாயின், இரவின்கணுண்டாகிய நின்னாருள் எமக்குப்பொல்லாது, அதனான் வடுவனவாகிய நீண்ட வகிர்போலுங்கண்ணையுடையாளது ஆயமுத்துப்போலுமொளியையுடைய முறுவலுக்கு எமராற்றொடுக்கப்பட்டனவாகிய பொருள்களை நீவரவிட்டு வரைந்தெய்தத் துணிவாயாக. எ-று.

நீள்வகிர்க்கண்ணியாகிய வெண்ணித்திலவாணகைக்கென்றுரை

ப்பிறழுமமையும். தொடுத்தன - பலவாகவகுக்கப்பட்டன. படுத்தனை நீள்கழலென்பதூஉம்பாடம். சிற்றம்பலந்தாம்பணியார்க்கடுத்தன தாழ்வருவகையாவது கெர்ப்பம்வருகை. அடுத்தனதாம்வரினென்பதற்கு நீவரினெமக்கடுத்தனதாமுளவாமென்று பொருளுரைப்பாருமுளர். அடுத்தனதான்வரினென்பது பாடமாயின், தானென்பது அசைநிலை. இவையிரண்டற்கும் மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - அது. (உகூஎ)

வரைபொருட்பிரிவையுரையெனக்கூறல்.

வரைபொருட்பிரிவையுரையெனக்கூறலென்பது - மேல்வருமது கூறி வரைவுடம்படுத்தினதோழிக்கு, யான்போய் நமர்கூறு நிதியமுந்தேடிக்கொண்டு நம்மையும்வந்துமேவுவேன், நீசென்று அவள்வாடாதவண்ணம் யான்பிரிந்தமைகூறி ஆற்றுவித்துக்கொண்டிருப்பாயாகவெனத் தலைமகன் றன்வரைபொருட்குப் பிரிகின்றமை கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

குன்றங்கிடையுங்கடந்துமர்கூறுநிதிகொணர்ந்து ✻
மின்றங்கிடைநும்மையும்வந்துமேவுவனம்பலஞ்சேர் ✻
மன்றங்கிடைமருதேகம்பம்வாஞ்சியமன்னபொன்னைச் ✻
சென்றங்கிடைகொண்டுவாடாவகைசெப்புதேமொழியே. உகூஅ

ஆங்கவள்வயி னீங்கலுற்றவன்
இன்னுயிர்த்தோழிக்கு முன்னிமொழிந்தது.

(இ-ள்.) மின்போலுமிடையையுடையாய், இனிக்குன்றங்கிடைப்புக்களையுடைய சுரத்தையுங்கடந்துபோய், நமர்கொள்ளுநிதியத்தைத்தேடிக்கொணர்ந்து, நம்மையும்வந்துமேவுவேன், மதுமொழியினையுடையாய், நீசென்று அம்பலத்தைச்சேர்ந்த மன்னன்றங்கும் இடமருது, ஏகம்பம், வாஞ்சியமாகிய இவற்றையொக்கும் பொன்னை, இடைகொண்டுவாடாதவண்ணம், அவ்விடத்துச் சொல்லவேண்டுவன சொல்லுவாயாக. எ-று.

குன்றக்கிடையென்பது - மெலிந்துநின்றசெலினுமமையும். நும்வயினென்பதூஉம்பாடம். எண்ணப்பட்டவற்றொடுபடாது அம்பலஞ்சேர்மன்னனெனக்கூறியவதனால், அம்பலமேயவர்க்கிடமாதல்கூறினார். இடைகொண்டென்புழி இடை - காலம். மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்தபெருமிதம். பயன் - வரைபொருட்பிரியுந்தலைமகன் ஆற்றுவித்தல். (உகூஅ)

நீயேகூறென்றல்.

நீயேகூறென்றலென்பது - பிரிவறிவிப்பக்கூறினதலைமகனுக்கு, நீயிரவுவரினும் பகற்பிரிந்துசெல்வையெனவுட்கொண்டு நின்னோடுகூடியவப்பொழுதும் யானுயிர்வாழேனென்றுநினைந்திருப்பாளுக்குத் தாழேனென்னுமுரைமுன்னாக நின்பிரிவை நீயே சொல்லிப் போவாயாகவென அவன் விரையவருவது காரணமாகத்தோழி தலைமகளதுபிரிவாற்றாமை கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

கேழேவரையுமில்லோன்புலியூர்ப்பயில்கிள்ளையன்ன *
யாழேர்மொழியாளிரவரினும்பகற்சேறியென்று *
வாழேனெனவிருக்கும்வரிக்கண்ணியைநீவருட்டித் *
தாழேனெனவிடைக்கட்சொல்லியேகுதனிவள்ளலே. (உ௬௯)

காய்கதிர்வேலோய் கனங்குழையவட் கு
நீயேயுரை நின்செலவென்ற து.

(இ-ள்.) ஒப்பில்லாதவள்ளலே, தனக்குவமையாக யாவரையுமுடையனல்லாதவனது புலியூர்க்கட் பயிலுங்கிளியையொக்கும் யாழோசைபோலுமொழியையுடையாள், இரவினீவரினும் பகற்பிரிந்துசெல்வையென்று அதனையேயுட்கொண்டு நின்னொடுகூடியவப்பொழுதும் யானுயிர்வாழேனென்றுநினைந்திருக்கும் வரிக்கண்ணினையுடையாளை வசமாக்கிப் பெற்றதோர்செவ்வியில் தாழேனென்னும் உரைமுன்னாக நின்பிரிவை நீயேசொல்லியேகுவாயாக. எ-று.

கிளி மென்மையும் மென்மொழியுடைமையும்பற்றி, மென்மொழியையுடையாட்குவமையாய்வந்தது. யாழோசை செவிக்கினிதாதல்பற்றி மொழிக்குவமையாய்வந்தது. புலியூர்ப்பயிலுமொழியாளெனவினையும். வாழேனெனவிருக்குமென்பதனைமுற்றாக்கி மொழியாளிவ்வாறுசெய்யும் அவ்வரிக்கண்ணியையென ஒருசுட்டுவருவித்துரைப்பினுமமையும். வருடி-வருட்டியெனமிக்குநின்றது. வாழேனெனவிருக்குமென்றதனான், இத்தன்மைத்தாகியவிவளது பிரிவாற்றாமையை மறவாதொழியவேண்டுமென்றாளாம். இடைக்கணென்றது - இவ்வொழுக்கத்தால் நினக்குவருமேதநினைந்து ஆற்றாளாஞ் செவ்விபெற்றென்றவாறு வடிக்கண்ணியையென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு-அச்சம். பயன்-தலைமகளதாற்றாமையுணர்த்துதல். (உ௬௯)

சொல்லாதேகல்.

சொல்லாதேகலென்பது-நீயேகூறென்றதோழிக்கு, யானெவ்வாறுகூறினும் அவள்பிரிவுடம்படாளாதலின் ஒருகாலும் வரைந்துகொள்கையில்லை யான்விரைந்துவருவேன் அவ்வளவும் நீயாற்றுவித்துக்கொண்டிருப்பாயாகவெனக் கூறித் தலைமகன் றலைமகளுக்குச் சொல்லாதுபிரியாநிற்றல்: அதற்குச்செய்யுள்.

வருட்டிற்றிகைக்கும்வசிக்கிற்றுளங்குமனமகிழ்ந்து ✽
தெருட்டிற்றெளியலள்செப்பும்வகையில்லைசீரருக்கன் ✽
குருட்டிற்புகச்செற்றகோன்புலியூர்குறுகார்மனம்போன் ✽
றிருட்டிற்புரிகுழலாட்கெங்ஙனேசொல்லிப்போகுவனே. (௨௭௰)

நிரைவளை வா ட
வுரையா தகன்ற து.

(இ-ள்.) நகவுந்தோளுமுதலாயினவற்றைத்தைவந்து ஒன்று சொல்லக்குறிப்பேனாயின், இஃதென்கருதிச் செய்கின்றானென்று மயங்காநிற்கும்; இன்சொல்லினவசித்து ஒன்று சொல்லலுறுவேனாயின், அக்குறிப்பறிந்து உண்ணடுங்காநிற்கும்; இனிவெளிப்படப்பிரிவுணர்த்திப் பொருண்முடித்துக் கடிதின்வருவலென்று கூறுற்றுத்தெளிவிப்பேனாயின், மனமகிழ்ந்து அதனைத்தேறாள், இவ்வாறொழிய அறிவிக்கும்வகை வேறில்லை, அதனாற் சுருண்டகுழலையுடையாட்குப்பிரிவை எவ்வண்ணஞ் சொல்லிப்போவேன்! ஒருவாற்றானுமரிது. எ-று: பெருமையையுடைய அருக்கன் குருடாகிய இழிபிறப்பிற் புகும்வண்ணம் அவனை வெகுண்டதலைவனது புலியூரையணுகாதார்மனம்போன்று இருட்டுதலையுடைய புரிகுழலெனக்கூட்டுக.

வருடியென்பது - வருட்டியென நின்றது. ஏகுவதேயென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு-அழுகை. பயன் - வரைவுமாட்சிமைப்படுத்துதற்குப்பிரிதல். (௨௭௰)

பிரிந்தமைகூறல்.

பிரிந்தமைகூறலென்பது-தலைமகன், முன்னின்று பிரிவுணர்த்துமாட்டாமையிற் சொல்லாது பிரியாநிற்ப, தோழிசென்று, நமராற்றொடுக்கப்பட்ட வெள்ளாநிதியத்தையும் ஒருங்குவரவிட்டுநின்னைவரைந்துகொள்வானாக அழற்கடநெறியே பொருள்தேடப்போனான், அப்போக்கு, அழற்கடஞ்சென்றமையான் நமக்குத்

துன்பமென்பேனோ வரைவுகாரணமாகப் பிரிந்தாராதலின் நமக்கின்பமென்பேனோவெனப் பொதுப்படக்கூறி, வரைவுகாரணமாகப் பிரிந்தாராதலின், இது நமக்கின்பமேயெனத் தலைமகள் வருந்தாமல் அவன்பிரிந்தமைகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

நல்லாய்நமக்குற்றதென்னென்றுரைக்கேனமர்தொடுத்த *
வெல்லாதிதியுமுடன்விடுப்பானிமையோரிறைஞ்சு *
மல்லார்கழலழல்வண்ணர்வண்டில்லைதொழார்களல்லாற் *
செல்லாவழற்கடமின்றுசென்றார்நஞ்சிறந்தவரே. (௨௭௧)

தேங்கமழ் குழலிக்குப்
பாங்கி பகர்ந்தது.

(இ-ள்.) நமக்குச்சிறந்த அவர், நமராற்றொடுக்கப்பட்ட வெல்லாதிதியத்தையும் ஒருங்கேவரவிடுவான்வேண்டி, இமையோர்சென்றுவணங்கும் வளமார்ந்த கழலையுடைய அழல்வண்ணரது வளவியதில்லையைத்தொழாதாரல்லது நம்போல்வார்செல்லாத அழலையுடையசுரத்தை இன்றுசென்றார். அதனான், நல்லாய், நமக்குவந்ததனை யாதென்றுசொல்லுவேன்! எ-று.

என்னென்றுரைக்கேனென்றதனான், தொடுத்ததுவிடுப்பச்சென்றாராகலின் இன்பமென்பேனோ, அழற்கடஞ்சென்றமையாற் றுன்பமென்பேனோவெனப் பொதுப்படக்கூறுவாள்போன்று, வரைவுகாரணமாகப் பிரிந்தாராகலின் இது நமக்கின்பமேயென்றுற்றுவித்தாளாம். தொழார்களல்லார்செல்லாவென்றுபாடமோதுவாருமுளர். மெய்ப்பாடு-அழுகை. பயன் - வரைவுநீட்டியாமையுணர்த்துதல். (௨௭௧)

நெஞ்சொடுகூறல்.

நெஞ்சொடுகூறலென்பது-பிரிந்தமைகூறக்கேட்டுவருந்தாநின்றநெஞ்சிற்கு, நமக்கேதம்பயக்குமொழுக்கமொழிந்து குற்றந்தீர்ந்தமுறைமையாகியவொழுக்கத்துப் பிரிந்தவிது நம்மைக்கெடுக்குமென்று நீகருதின் இதுவொழிய நமக்கின்புற்றுவாழுமுபாயம் வேறுளதோவெனத் தலைமகள் அந்நெஞ்சினதுவருத்தந்தீரக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

அருந்தும்விடமணியாமணிகண்டன்மற்றண்டர்க்கெல்லா *
மருந்துமமிர்தமுமாகுமுன்னோன்றில்லைவாழ்த்தும்வள்ள *
திருந்துங்கடனெறிசெல்லுமிவ்வாறுசிதைக்குமென்றால் *
வருந்தும்மடநெஞ்சமேயென்னையாமினிவாழ்வகையே. (௨௭௨)

கல்வரைநாடன் சொல்லாதக   ல்
மின்றொளிமருங்குறல்றொளிதளர்ந்தது.

(இ-ள்.) உண்ணப்பட்டநஞ்சநின்று அலங்காரமாய நீலமணி போலுங்கண்டத்தையுடையவன், தேவர்க்கெல்லாமுறுதிபயக்கு மருந்தும் இன்சுவையையுடையவமிர்தமுமாகாநிற்குமுன்றோன், அவனதுதில்லையைவாழ்த்தும் நம்வள்ளல் நமக்கேதம்பயக்கு மொழுக்கமொழிந்து குற்றந்தீர்ந்திருக்குமுறைமையாகிய இந் நெறியைச்செல்கின்ற இந்தநீதி நம்மைக்கெடுக்குமென்று நீகரு தி,வருந்துகின்றவறிவில்லாதநெஞ்சமே, பாமின்புற்றவாழுமு பாயம் வேறியாது! எ-று.

அருந்துமென்பது-காலமயக்கம். அருந்துதற்றொழின்முடிவ தன்முன் நஞ்சங்கண்டத்து நிறுத்தப்பட்டணியாயிற்றாகலின், நி கழ்காலத்தாற்கூறப்பட்டதெனினுமமையும். மற்று-அசைநிலை. தி ருந்துங்கடனெறியென்பது- தித்திக்குந்தேனென்பதுபோல இ த்தன்மைத்தென்னுநிகழ்காலம்படநின்றது. திருந்துங்கடனெ றியைச்செல்லுமென்றும், களவாகியவிவ்வாற்றைச் சிதைக்குமெ ன்றும்,முற்றாக அறுத்துவாப்பாருமுளர். (உஎஉ)

நெஞ்சொடுவருந்தல்.

நெஞ்சொடுவருந்தலென்பது-பிரிந்தமைகூறக்கேட்ட தலைம கள்,அன்றவரைவிடாது என்னைவிட்டு அவரதுதேர்ப்பின் சென் றநெஞ்சம் இன்றுமவ்வாறுசெய்யாது என்னைவருத்தாநின்றதெ னத் தன்னெஞ்சொடுவருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஏர்ப்பின்னைதோண்முன்மணந்தவனேத்தவெழிறிகழுஞ் *
சீர்ப்பொன்னைவென்றசெறிகழலோன்றில்லைச் சூழ்பொழில்வாய்க்
கார்ப்புன்னைபொன்னவிழ்முத்தமலைலிற்கலந்தகன்றார் *
தேர்ப்பின்னைச்சென்றவென்னெஞ்சென்கொலாமின்றசெய்கின்றதே

வெற்ப னீக்க   ப்
பொற்பு வாடிய   து.

(இ-ள்.) அழகையுடைய பின்னையென்கின்றதேவியுடையதோ ள்களை முற்காலத்துக் கலந்தமாயோனின்றுபரவஎழில்விளங்கு ஞ்செம்பொன்னைவென்ற திருவடிகளையுடையவனது தில்லைக்கட் சூழ்ந்தபொழிலிடத்துக் கரியபுன்னை பொன்போல மலராநின் றமுத்துப்போலு மணலையுடையதோரிடத்துக் கூடி நீங்கினவர

று தேர்ப்பின்சென்றஎன்னெஞ்சம் இவ்விடத்தின்றுசெய்கின்றதென்னோ! அறிகின்றிலேன். எ-று.

எத்தவெழிறிகழுமெனவினையும் என்னோடுநில்லாது அவர் தேர்ப்பின்போனநெஞ்சம் இன்றென்னைவருத்துகின்ற விஃதென்னென்று நெஞ்சொடுநொந்துகூறினாளாகவுரைப் பினுமமையும். செறிகழலும்,மூத்தமணையும், அன்மொழித்தொகை. தேய்கின்றதேயென்பதுபாடமாயின், அன்றவளைவிடாதுசென்றநெஞ்சம் செல்லாது ஈண்டிருக்குமென்னைப்போல் இன்றுதேய்கின்றதென்னென்று கூறினாளாகவுரைக்க. இவையிரண்டற்கும்மெய்ப்பாடு-அழுகை. பயன்-ஆற்றாமைநீக்குதல். (உ௭௧)

வருத்தங்கண்டுரைத்தல்.

வருத்தங்கண்டுரைத்தலென்பது-தலைமகள் தன்னெஞ்சொடு வருந்தாநிற்பக் கண்டதோழி,இத்தன்மைத்தாகிய வெற்பராகலிற் றாழாதுவிரையவரைவொடுவருவர், ஆதலால் நீயின்னாமையையடையாதொழிவாயாகவென்று அவள்வருத்தந்தீரக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கானமர்குன்றர்செவியுறவாங்குகணைதுணையா *
மானமர்நோக்கியர்நோக்கெனமானற்றொடைமடக்கும் *
வானமர்வெற்பர்வண்டில்லையின்மன்னைவணங்கலர்போற் *
றேனமர்சொல்லிசெல்லார்செல்லல்செல்லதிருநுதலே. (உ௭௨)

அழலுறுகோதையின் விழுமுறுபேதை யை.
நீங்கலரெனப் பாங்கிபகர்ந்த து.

(இ-ள்.) தேனைப்பொருந்துஞ்சொல்லையுடையாய்,கானின்கணமருங்குன்றவர் செவியுறும்வண்ணம் வளைத்த கணையைத் தாமெய்யக்குறித்தவற்றினுக்குந் தந்துணைவியராகிய மானைப்பொருந்திய நோக்கத்தையுடையவரது நோக்கோடொக்குமென்று கருதி அம்மானைக்குறித்த நல்லதொடையைமடக்கும்முகிறங்கும் வெற்பர் செல்கின்றாரல்லர்,வளவியதில்லையின்மன்னனை வணங்காதாரைப்போல,திருநுதால்;இன்னாமையையடையாதொழிவாய். எ-று

தொடைமடக்குமென்னுஞ்சொற்கள் இயைந்து ஒருசொல்லாய்க் குன்றவரென்னுமெழுவாய்க்குங் கணையையென்னுமிரண்டாவதற்கும்முடிபாயின. துணையாமென்பது "ஏவலிளையர்தாய்,, என்பதுபோல மயக்கமாய்நின்றது. மானமர்நோக்கியர் நோக்கென்பதனை உறழ்வாலுவமைப்பாற்படுக்க. கொலைத்தொழிலாளருந் அ

ந்துணைவியரோடொப்பனவற்றிற்கு மிடர்செய்யாதவெற்பராத லின், நீயிவ்வாறுவருந்த நீட்டியாரென்பது கருத்து. (உஎச)

வழியொழுகிவற்புறுத்தல்.

வழியொழுகிவற்புறுத்தலென்பது- தலைமகளது வருத்தங்கண் டதோழி, அவளைவழியொழுகியாற்றுவிக்கவேண்டுமளவாகலின், ஆற்றுமைக்குக்காரணமாகியவற்றைக்கூறித் தானும் அவளோடு வருத்தமுற்று, அதுகிடக்க இம்மலர்ப்பாவையன்னாட்கு இவ் வேறுபாடுவந்தவாறென்னோவென்று அயலவர் ஐயுறுநிற்பராத லான் நீயாற்றவேண்டுமென்று அவள்வழியொழுகிவற்புறுத்தாநி ற்றல். அதற்குச்செய்யுள்.

மதுமலர்ச்சோலையும்வாய்மையுமன்புமருவிவெங்கான் *
கதுமெனப்போக்குநிதியினருக்குமுன்னிக்கலுழ்ந்தா *
ரெதுமலர்நோக்கமொர்மூன்றுடையோன்றில்லைநோக்கலர்போ
லிதுமலர்ப்பாவைக்கென்னோவந்தவாறென்பரேந்திழையே. ()

சூழிருங் கூந்தலை த்
தோழி தெருட்டிய து.

(இ-ள்.) அவனைப்புறவதுகண்ணுற்ற மதுமலரையுடையசோ லையையும், அன்று நின்னிற்பிரியேன் பிரியினாற்றேனென்றுகூறி ய வஞ்சினத்தினது மெய்ம்மையையும், வழிமுறைபெருகியவன் பையும், நம்மோடுமருவிவைத்துப் பின்கதுமென வெங்கானிற் போகியபோக்கையும், போய்த்தேடுநிதியினது செய்தற்கருமை யையும், நினைந்து நீகலுழ்ந்தால், ஏந்திழாய், ஏதிலர், மலர்ப்பாவை யன்னாட்கு இவ்வேறுபாடுவந்தவாறென்னோவென்றையுறுவர், அ தனானீயாற்றுவாயாக. எ-று. கண்களொருமூன்றையுடையவன தி தில்லையைக்கருதாதார்போல வந்தவாறென்னோவெனக்கூட்டுக.

அன்பு-வழிமுறையாற்சுருங்காது கடிதுசுருங்கிற்றென்னுங்க ருத்தாற் கதுமெனப்போக்குமென்றாள். அருக்குமென்றதனால் நீ ட்டித்தல்கருதினாம். வழியொழுகியாற்றுவிக்கவேண்டுமளவாக லின், ஆற்றுமைக்குக்காரணமாகியவற்றை மிகுத்துக்கூறினாம். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-இளிவரலைச்சார்ந்தபெருமிதம். பயன்-தலைமகளையாற்றுவித்தல். (உஎரு)

வன்புறையெதிரழிந்திரங்கல்.

வன்புறையெதிரழிந்திரங்கலென்பது, வழியொழுகிவற்புறுத் தினதோழியோடு, தலைமகன்வரைவுநீடுதலாற் றமக்கோர்பற்றுக்

கோடின்றிவருந் துந் திருவினையுடையார்க்கு அவன்வரைவுமிகவு மினிது யானுற்றேனெனத் தலைமகள் வன்புறையெதிரழிந்திரங் காநிற்றல். அதற்குச் செய்யுள்.

வந்தாய்பவரையில்லாமயின் முட்டையிளையமந்தி *
பந்தாடிரும்பொழிற்பல்வரைநாடன்பண்போவினிதே *
கொந்தார்தருங்கொன்றைக் கூத்தன்றென்றில்லை தொழார்குழூப்
போற்,சிந்தாகுலமுற்றுப்பற்றின்றிநையுந்திருவினர்க்கே. உஎசு

வன்கறைவேலோன் வரைவுநீட
வன்புறையழிந்தவண் மனமழுங்கியது.

(இ-ள்.) கொத்தார்ந்த நறியகொன்றையையணிந்தகூத்தனது தெற்கின்கணுண்டாகிய தில்லையைவணங்காதாரதுதிரள்போல மனக்கலக்கத்தையுற்றுத் தமக்கோர்பற்றுக்கோடின்றிவருந்துந் திருவினையுடையவர்க்கு, சென்றாராய்வாரையுடைத்தல்லாத மயிலின்முட்டையை இளையமந்தி பந்தாடிவிளையாடும் பெரியபொழிலையுடையபலவாகிய வரைகளையுடைய நாட்டையுடைய வனதியல்போ,இனிது. எ-று.

நையுந்திருவினர்க்கென்றது நையுந்துணையாயிறந்துபடாதிருந்து அவனைப்பெற்றஞான்று இன்புறவெய்தும் நல்வினையாட்டியர்க்கென்றவாறு. எனவே, யானதுபெறுமாறில்லையென்றுளாம். உற்றதாராய்ந்தோம்புவாரில்லாத மயிலினது முட்டையால் ஈன்றவருத்தமறியாதவிளமந்தி, மயிலின்வருத்தமும் முட்டையின்மென்மையும் பாராது பந்தாடுகின்றாற்போலக் காதலரான்வினவப்படாத என்காமத்தை நீயிஃதுற்றறியாமையான் எனதுவருத்தமுங் காமத்தினது மென்மையும் பாராது, இவ்வாறுரைக்கின்றாயென உள்ளுறைவகையாற் றோழியைநெருங்கி வன்புறையெதிரழிந்தவாறுகண்டுகொள்க. அல்லதூஉம், வந்தாய்பவர்தோழியாகவும், இளமந்தி தலைமகனாகவும், பந்தாடுதல் தலைமகளதுவருத்தம்பாராது தான்வேண்டியவாறொழுகுமவனதொழுக்கமாகவும்,உரைப்பினுமமையும். திருவினர்க்கேயென்பதுபாடமாயின், இவ்வாறு வன்கண்மையேனாய் வாழுந்திருவையுடையேற்கெனவுரைக்க. இதற்குத்திரு-ஆகுபெயர். மெய்ப்பாடு-அழுகையைச்சார்ந்தபெருமிதம். பயன்-அது. (உஎசு)

வாய்மைகூறிவருத்தந்தணித்தல்.

வாய்மைகூறிவருத்தந்தணித்தலென்பது- வரைவுநீடுதலான் வ

ண்புறையெதிரழிந்துவருந்தாநின்றதலைமகளுக்கு, அவர்சொன்ன வார்த்தை நினக்குப்பொய்யென்பதேகருத்தாயின், இவ்வுலகத்து மெய்யென்பது சிறிதுமில்லையெனத் தோழி தலைமகனது வாய்மைகூறி, அவள்வருத்தந்தணியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மொய்யென்பதேயிழைகொண்டவனென்னைத்தன்மொய்கழற்காட்
செய்யென்பதேசெய்தவன்றில்லைச்சூழ்கடற்சேர்ப்பர்சொல்லும்
பொய்யென்பதேகருத்தாயிற்புரிகுழற்பொற்றொடியாய் *
மெய்யென்பதேதுமற்றில்லைகொலாமிவ்வியலிடத்தே. (௨௭௭)

வேற்றடங் கண்ணி   யை
யாற்று வித்த   து.

(இ-ள்.) வலிமையையுடைய என்பதனையே தனக்கணியாகக் கொண்டவன், என்னைத் தன்னுடைய வலியதிருவடிகட்காட்செய் யென்று வெளிப்பட்டுநின்று சொல்லுதலையேசெய்தவன், அவனது தில்லைவரைப்பினுண்டாகிய சூழ்ந்தகடலையுடைத்தாகிய சேர்ப் பையுடையவரது சொல்லும் பொய்யென்பதே நினக்குக்கருத் தாயின், சுருண்டகுழலையுடையபொற்றொடியாய், இவ்வுலகத்து மெய்யென்பது சிறிதுமில்லைபோலும். எ-று.

அரிமுதலாயினாரென்பாகலின், மொய்யென்பென்றார். இழிந் தன கைக்கொள்வானாகலின், என்பையணியாகவும் என்னையடிமை யாகவுங்கொண்டானென்பது கருத்து. மெய்ப்பாடும் பயனும் அவை. (௨௭௭)

தேறாதுபுலம்பல்.

தேறாதுபுலம்பலென்பது- தலைமகனது வாய்மைகூறிவருத்தந் தணியாநின்றதோழிக்கு, யானவர்கூறியமொழியின்படியே மெ ய்ம்மையைக்கண்டுவைத்தும், என்னெஞ்சமுநிறையும் என்வயமா ய்நிற்கின்றனவில்லை, அதுவுமன்றி, என்னுயிரும் பொறுத்தற் கரிதாகாநின்றது, இவையிவ்வாறாதற்குக்காரணம் யாதென்றறிகி ன்றிலேனெனத் தான்றேறாமைகூறிப்புலம்பாநிற்றல். அதற்குச் செய்யுள்.

மன்செய்தமுன்னாண்மொழிவழியேயன்னவாய்மைகண்டு *
மென்செய்தநெஞ்சுநிறையுநில்லாவெனதின்னுயிரும் *
பொன்செய்தமேனியன்றில்லையுறாரிற்பொறையரிதா *
முன்செய்ததீங்குகொல்காலத்துநீர்மைகொன்மொய்குழலே. ()

நிறைகன்னி தேற்றத்தேறா து
போதுறுகுழலி புலம்பிய து.

(இ-ள்.) மொய்த்தகுழலையுடையாய், முற்காலத்து மன்னன் நம்க்குகவியமொழிபின்படியே அத்தன்மைத்தாகிய மெய்ம்மையைக்கண்டிலைக்கும், என்னெஞ்சமு நிறையு மென்வசமாயவாய் நிற்கின்றில, இவையென்செய்தன! அதுவேயுமன்றி, எனதினியவுயிரும் பொன்னையொத்த மேனியையுடையவன து தில்லையையுறாதாரைப்போல வருத்தம்பொறுத்தலரிதாகாநின்றது; இவையிவ்வாறாதற்குக்காரணம் யான்முன்செய்ததீவினையோ? அன்றிப் பிரியுங்காலமல்லாதவிக்காலத்தினியல்போ? அறிகின்றிலன். எ-று.

மொழிவழியேகண்டுமெனவிலையும். நெஞ்சநில்லாமையாவது-நம்மாட்டு அவரதன்பு எத்தன்மைத்தோவென்றையப்படுதல். நிறைநில்லாமையாவது-பொறுத்தலருமையான் அந்நோய் புறத்தார்க்குப்புலனாதல். நில்லாதென்பது பாடமாயிற் றனித்தனிகூட்டுக. பொன்செய்தவென்புழிச்செய்தவென்பது-உவமச்சொல். உயிர்த்துன்பமுழத்தற்குக் காரணமாதலின், அதனையுந் துன்பமாகநினைந்து இன்னுயிரும்பொறையரிதாமென்றாள். மெய்ப்பாடு-மருட்கை. பயன்-ஆற்றுதல். (உஎஅ)

காலமறைத்துரைத்தல்.

காலமறைத்துரைத்தலென்பது- தேறாமைகூறிப்புலம்பாநின்றதலைமகள், காந்தள்கருவுறக்கண்டு, இஃதவர்வரவுகுறித்தகாலமென்று கலங்காநிற்ப, நம்முடையவையன்மார் தினைக்கதிர்காரணமாகக் கடவுளைப்பராவ, அக்கடவுளதாணையாற் காலமன்றியுங் கார்நீரைச்சொரிய, அதனையறியாது, காலமென்று இக்காந்தள்மலர்ந்தன நீயதனைக்காலமென்று கலங்கவேண்டாவெனத் தோழி, அவளையாற்றுவித்தற்குக்காலமறைத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கருந்தினையோம்பக்கடவுட்பராவிநமர்கலிப்பச் *
சொரிந்தனகொண்மூச்சுரந்ததன்பேரருளாற்றொழும்பிற் *
பரிந்தெனையாண்டசிற்றம்பலத்தான்பரங்குன்றிற்றுன்றி *
விரிந்தனகாந்தள்வெருவரல்காரெனவெள்வளையே. (உஎகூ)

காந்தள்கருவுறக் கடவுண்மழைக்கெ ன்
றேந்திழைப்பாங்கி யினிதியம்பிய து.

(இ-ள்.) வெள்வளையையுடையாய், கரியதினையையோம்பவேண்டிக் கடவுளைப்பராவி நமராரவாரிப்ப, அக்கடவுளாணையாற்கொ

வீழ்த்திக்கண் காலமன்றிபுதிதாய்ச்சொரிந்தன, அதனைக்கார்செய்தாகரு
தி, இப்பரங்குன்றின்கட்காந்தளொருங்கியலர்ந்தன, அதனால் நீயா
சொன்றஞ்சவேண்டா. எ-று. பொறுத்தற்கரிதாகச்சுரந்த தனது
பெரியவருளான் அடிமைக்குத் தகாதவென்னைத் தன்னடிமைக்க
ண்ணேகூட்டி நிலவுதில்லையின்றிப் பரிந்தாண்டசிற்றம்பலத்தா
னது பரங்குன்றினெனக்கூட்டுக.

கடவுண்மழை-கடவுளாற்றரப்பட்டமழை. மெய்ப்பாடு பெரு
மிதம். பயன்-ஆற்றுவித்தல். (உஎக)

தூதுவரவுரைத்தல்.

தூதுவரவுரைத்தலென்பது - காலமறைத்தசோழி, ஒருதூதுவ
ந்துதோன்றுநின்றது, அஃதின்னார் தூதென்று தெரியாதெனத்
தானிப்புறவோடுநின்று அவள் மனமகிழும்படி தலைமகளுக்குத்
தூதுவரவுரையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வென்றவர்முப்புரஞ்சிற்றம்பலத்துணின்றுநம்வெள்ளிக் ❀
குன்றவர்குன்றுவருடராக்கூடினர்நம்மகன்று ❀
சென்றவர்தூதுகொல்லோவிருந்தேமையுஞ்செல்லல்செப்பா ❀
நின்றவர்தூதுகொல்லோவந்துதோன்றுநிலாவவளையே. (உஎஉ)

ஆங்கொரு தூதுவரப்
பாங்கிகண் டுரைத்தது.

(இ-ள்.) நிலவளையைப்புடைப்பாய், ஒருதூதுவந்துதோன்றுநின்
றது, இது குன்றுத அருள்கொண்ணர்ந்துகர வந்துகூடிப் பின்னம்
மைப்பிரிந்துசென்றவர் தூதோ? அன்றி அவர்பிரியவிருந்தேமை
யிடத்தும் இன்னாமையைச் சொல்லாநின்றவேதிலார்தூதோ? அ
றியேன் எ-று. முப்புரத்தைவென்றவர், சிற்றம்பலத்தின்கணின்
றுநம்வெள்ளிக்குன்றையுடையவர்; அவரது குன்றுதவருவெனக்
கூட்டுக.

கூடினரென்பது- பொருள்படநின்றதெனினுமமையும். இருந்
தேமையென்னுமிரண்டாவது ஏழாவதன் பொருட்கண்வந்தது.
இரண்டாவதாயேநின்று இன்னாமையைச் சொல்லாநின்றவரென
வத்தொழித்துப்பெயரோடுமுடித்தெனபாருமுளர். ஆங்கொரு
தூது - ஏதிலார்தூது. மெய்ப்பாடு - அச்சத்தைச்சார்ந்தமருட்
கை. பயன்- ஐயந்தீர்தல். (உஎஉ)

தூதுகண்டழுங்கல்.

தூதுகண்டழுங்கலென்பது-தூதுவரவுணர்ப்பக்கேட்ட தலைமகள் மனமகிழ்வோடுநின்று, இஃதயலார்தூதாகலான் இவைவருவனசெல்வனவாகாநின்றன, காதலர்தூது இன்றுவாராதிருக்கின்றது என்செய்யக்கருதியென்றறிகின்றிலேனென்று ஏதிலார்தூதுகண்டழுங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

வருவனசெல்வன தூதுகளேதிலவான்புலியூ *
ரொருவனதன்பரினின்பக்கலவிகளுள்ளுருகத் *
தருவனசெய்தெனதாவிகொண்டேகியென்னெஞ்சிற்றம்மை *
யிருவினகாதலரேதுசெய்வானின்றிருக்கின்றதே. (௨௮௧)

அயலுற்ற தூதுவர க்
கயலுற்றகண்ணி மயலுற்றது.

(இ-ள்.) ஏதிலவாகிய தூதுகள் வருவன போவனவாயிராநின்றன, வாலியபுலியூர்க்கணுள்ளாகிய ஒப்பிலாதானது அன்பையுடையவரைப்போல யானின்புறவுள்ளுருகும்வண்ணந் தரப்படுவனவாகிய இன்பக்கலவிகளை முன்செய்து, பின்னெனதாவியைத் தாங்கொண்டுபோய் என்னெஞ்சத்தின்கட் டம்மையிருத்தினகாதலர், இன்றுவாராவிருக்கின்றது ஏதுசெய்யக்கருதி? எ-று.

ஒருவனதன்பு- ஒருவன்கணன்பு. உள்ளுருகத்தருவனவென்பதற்கு உள்ளுருகும்வண்ணஞ்சிலவற்றைத்தருவனவாகியகல்வியென்றுரைப்பினுமமையும். தன்மெய்யன்பர்போல யானுமின்புறவுள்ளுருகுங்கலவிகளை முன்செய்து பின்னெனதாவிபோயினாற்போலத் தாம்பிரிந்துபோய் ஒருஞான்றுங்கட்புலனாகாது யானினைந்து வருந்தச்செய்காதலர் இன்று ஏதுசெய்யவிருக்கின்றாரென வேறுமொருபொருடோன்றியவாறுகண்டுகொள்க. அயல்- அயன்மை. மெய்ப்பாடும் பயனும்-அவை. (௨௮௧)

மெலிவுகண்டுசெவிலிகூறல

மெலிவுகண்டுசெவிலிகூறலென்பது-ஏதிலார்தூதுகண்டழுங்காநின்றதலைமகளைச் செவிலியெதிர்ப்பட்டு, அடியிற்கொண்டு முடிகாறநோக்கி, இவள்பண்டைத்தன்மையளல்லள், இவ்வாறு மெலிதற்குச் சேயினதாட்சியிற்பட்டனள்போலுமென்றறிகின்றிலேனென்று அவளதுமெலிவுகண்டுகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வேயினமென்றோண்மெலிந்தொளிவாடிவிழிபிறிதாய் ❋
பாயினமேகலைபண்டையளல்லள்பவளச்செவ்வி ❋
வாயினவீசனமார்க்கமரன்சிற்றம்பலத்தான் ❋
சேயினதாட்சியிற்பட்டனளாமித்திருந்திழையே. (உ௮உ)

வண்டமர்புரிகுழ லொண்டொடி மெலிய
வாடாநின்ற கோடாய்கூறிய　　ஆ.

(இ-ள்) வேய்க்கினமாகிய மென்றோண்மெலிந்து கதிர்ப்புவாடி விழி தன்னியல்பிழந்து வேருப் பரந்தமேகலையையுடையாள் பண்டைத்தன்மையளல்லளாயினள், அதனால் இத்திருந்திழை சேயினதாட்சிபாகியவிடத்துப்பட்டாள்போலும். எ-று. திருமேனி பவளத்தினது செவ்வியாகியவீசன், தேவர்க்குத்தேவன், சிற்றம்பலத்தின் கண்ணான், அவனுடையசேயெனக்கூட்டுக.

ஒளிவாடியென்பதூஉம், விழிபிறிதாயென்பதூஉம், சினைவினைப்பாற்படும். பாயினமேகலையென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீர்மைப்படுதலின், ஆகுபெயரெனப்படும். செவ்வி-கருகுதலும்வெளுக்குதலுமில்லாதநிறம். ஆட்சி - அவனதாணையான் மக்களுக்கணைபலாகாதவிடம். (உ௮உ)

கட்டுவைப்பித்தல்.

கட்டுவைப்பித்தலென்பது-மெலிவுகண்டசெவிலி, அவளதுபருவங்கூறி, இவ்வணங்குற்றநோயைத் தெரியவறிந்துசொல்லுமினெனக் கட்டுவித்திக்குரைத்துக் கட்டுவைப்பியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அணங்குற்றகொங்கைகள்கூதிற்றிலசொற்றெளிவுற்றில ❋
குணங்குற்றங்கொள்ளும்பருவமுறாள்குறுகாவசுரர் ❋
நிணங்குற்றவேற்சிவன்சிற்றம்பலநெஞ்சுறாதவர்போ ❋
லணங்குற்றநோயறிவுற்றுரையாடுமின்னன்னையரே. (உ௮௩)

மால்கொண்ட கட்டு　　ச.
கால் கொண்ட　　ஆ.

(இ-ள்) சுணங்கைப்பொருந்தியகொங்கைகள் கூதின்றன்மையையுற்றனவில்லை, சொற்கள் குதலைமைநீங்கி விளங்குதலையுற்றனவில்லை, நன்மையுந்தீமையுமறியும் பெதும்பைப் பருவத்தையிப்பொழுதடைக்குறாள். இவளிளமை இதுவாயிருந்தது. அன்னையீர், இவ்வணங்குற்றநோயைத் தெளியவறிந்துசொல்லுவீராமின்.

தூதுகண்டழுங்கல்.

தூதுகண்டழுங்கலென்பது-தூதுவரவுரைப்பக்கேட்ட தலைமகள் மனமகிழ்வோடுநின்று, இஃதயலார்தூதாகலான் இவைவருவனசெல்வனவாகாநின்றன, காதலர்தூது இன்றுவாராதிருக்கின்றது என்செய்யக்கருதியென்றறிகின்றிலேனென்று ஏதிலார்தூதுகண்டழுங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

வருவனசெல்வன தூதுகளேதிலவான்புலியூ *
ரொருவனதன்பரினின்பக்கலவிகளுள்ளுருகத் *
தருவனசெய்தெனதாவிகொண்டேகியென்னெஞ்சிற்றம்மை *
யிருவினைகாதலரேதுசெய்வானின்றிருக்கின்றதே. (உஅக)

அயலுற்ற தூதுவர க்
கயலுற்றகண்ணி மயலுற்றது.

(இ-ள்.) ஏதிலவாகிய தூதுகள் வருவன போவனவாயிராநின்றன, வாலியபுலியூர்க்கணுளனாகிய ஒப்பிலாதானது அன்பையுடையவரைப்போல யானின்புறவுள்ளுருகும்வண்ணந் தரப்படுவனவாகிய இன்பக்கலவிகளை முன்செய்து, பின்னெனதாவியைத் தாங்கொண்டுபோய் என்னெஞ்சத்தின்கட் டம்மையிருத்தினகாதலர், இன்றுவாளாவிருக்கின்றது ஏதுசெய்யக்கருதி? எ-று.

ஒருவனதன்பு- ஒருவன்கணன்பு. உள்ளுருகத்தருவனவென்பதற்கு உள்ளுருகும்வண்ணஞ்சிலவற்றைத்தருவனவாகியகலவியென்றுரைப்பினுமமையும். தன்மெய்யன்பர்போல யானுமின்புறவுள்ளுருகுங்கலவிகளை முன்செய்து பின்னெனதாவி போயினாற்போலத் தாம்பிரிந்துபோய் ஒருநான்றுங்கட்புலனாகாது யானினைந்து வருந்தச் செய்காதலர் இன்று ஏதுசெய்யவிருக்கின்றாரென வேறுமொருபொருடோன்றியவாறுகண்டுகொள்க. அயல்- அயன்மை. மெய்ப்பாடும் பயனும்-அவை. (உஅக)

மெலிவுகண்டுசெவிலிகூறல

மெலிவுகண்டுசெவிலிகூறலென்பது-ஏதிலார்தூதுகண்டழுங்காநின்றதலைமகளைச் செவிலியெதிர்ப்பட்டு, அடியிற்கொண்டு முடிகாறநோக்கி, இவள்பண்டைத்தன்மையளல்லள், இவ்வாறு மெலிதற்குச் சேயினதாட்சியிற்பட்டவள்போலு மென்றறிகின்றிலேனென்று அவளதுமெலிவுகண்டுகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வேயின மென்றோண் மெலிந் தொளிவாடி விழிபிறிதாய்ப்
பாயினமேகலைபண்டையளல்லள்பவளச்செவ்வி
யாயினவீசனமரர்க்கமரன்சிற்றம்பலத்தான்
சேயினதாட்சியிற்பட்டனளாமித்திருந்திழையே. (௨அ௨)

வண்டமர்புரிகுழ லொண்டொடி மெலிய
வாடா நின்ற கோடாய்கூறிய து.

(இ-ள்) வேய்க்கிணையாகிய மென்றோண்மெலிந்து கதிர்ப்புவாடி விழி தன்னியல்பிழந்து வேறுப்பப் பரந்தமேகலையையுடையாள் பண்டைத்தன்மையளல்லளாயினாள், அதனால் இத்திருந்திழை சேயினதாட்சியாகியவிடத்துப்பட்டாள்போலும். எ-று. திருமேனி பவளத்தினது செவ்வியாகியவீசன், தேவர்க்குத்தேவன், சிற்றம்பலத்தின்கண்ணான், அவனுடையசேயெனக்கூட்டுக.

ஒளிவாடியென்பதூஉம், விழிபிறிதாயென்பதூஉம், சினைவினைப்பாற்படும். பாயினமேகலையென்னுஞ்சொற்கள் ஒருசொன்னீர்மைப்படுதலின், ஆகுபெயரெனப்படும். செவ்வி-கருகுதலும் வெளுத்தலுமில்லாதநிறம். ஆட்சி - அவனதாணையான் மக்களுக்கணையலாகாதவிடம். (௨அ௨)

கட்டுவைப்பித்தல்.

கட்டுவைப்பித்தலென்பது-மெலிவுகண்டசெவிலி, அவளதுபருவங்கூறி, இவ்வணங்குற்றநோயைத் தெரியவறிந்துசொல்லுமினெனக் கட்டுவித்திக்குரைத்துக் கட்டுவைப்பியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அணங்குற்றகொங்கைகள்கூடுற்றிலசொற்றெளிவுற்றில
குணங்குற்றங்கொள்ளும்பருவமுறாள்குறுகாவசுரர்
நிணங்குற்றவேற்சிவன்சிற்றம்பலநெஞ்சுறாதவர்போ
லணங்குற்றநோயறிவுற்றுரையாடுமினன்னையரே. (௨அ௩)

மால்கொண்ட கட்டு
கால் கொண்ட து.

(இ-ள்) கணங்கைப்பொருந்தியகொங்கைகள் கூடின்றன்மையையுற்றனவில்லை, சொற்கள் குதலைமைநீங்கி விளங்குதலையுற்றனவில்லை, நன்மையுந்தீமையுமறியும் பெதும்பைப் பருவத்தையிப் பொழுதுறக்குறாள். இவளிளமை இதுவாயிருந்தது. அன்னையீர், இவ்வணங்குற்றநோயைத் தெளியவறிந்துசொல்லுவீராயின்.

எ-று. சென்றுசேராதவசாருடைய நிணத்தைக்குற்றநுலவேலையுடையசிவனது சிற்றம்பலத்தை நெஞ்சாலுறாதாரைப்போல அணைக்குற்றவெனக்கூட்டுக.

இளமைகூறியவதனாற் பிறிதொன்றுசிந்திக்கப்பட்டாளென்பதுகூறினாளாம். இவையிரண்டற்கும் மெய்ப்பாடு-மருட்கை. பயன்-தலைமகட்குற்றதுணர்த்தல். (உ௮௩)

கலக்கமுற்றுநிற்றல்.

கலக்கமுற்றுநிற்றலென்பது - செவிலிகட்டுவைப்பியாநிற்ப, இவளுள்ளமோடியவாறுமுழுதையும் புலப்படுத்தி,நம்மை வருத்தி,அயலார் அன்று மொழியாத பழியையும் வெளிப்படச்சொல்லி,எம்மிடத்துண்டாகிய நாணினையுந்தள்ளி; எங்குடியினையுங் குற்றப்படுத்தியல்லவே இக்கட்டுவித்தி நிற்கப்புகுகின்றதெனத் தோழி கலக்கமுற்று நில்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மாட்டியன்றேயெம்வயிற்பெருநாணினிமாக்குடிமா *
சூட்டியன்றேநிற்பதோடியவாறிவளுள்ளமெல்லாங் *
காட்டியன்றேநின்றதில்லைத்தொல்லோனைக்கல்லாதவர்போல் *
வாட்டியன்றோர்குழலார்மொழியாதனவாய்திறந்தே. (உ௮௪)

தெய்வத்திற் றெரியுமெ ன
எவ்வத்தின் மெலிவுற்ற து.

(இ-ள்.) இவளுள்ளமோடியவாறு முழுதையும்புலப்படுத்தி; அன்றுதொட்டுநின்ற தில்லைக்கணுளனாகிய பழையோனைக் குருமுகத்தாலறியாதாரைப்போல வருந்த நம்மைவாட்டி, அலர்தூற்றி அவ்வேர்குழலாராகியவயலார் அன்றுமொழியாத பழியையும் வெளிப்படச்சொல்லி,இப்பொழுதெம்மிடத்துண்டாகியபெருநாணினை மாள்வித்தல்லவே,எம்பெருங்குடியைக் குற்றப்படுத்தியல்லவே இக்கட்டுவித்திநிற்பது,இனியென்செய்தும்! எ-று.

மூள்வித்ததற்கன் றூட்டியெனநின்றவாறுபோல மாள்வித்தற்கன் மாட்டியெனநின்றது. தள்ளியென்னும்பொருள் படநின்றதென்பாருமுளர். நிற்பதென்றதனை முன்னையதனோடுங் கூட்டுக. இவளென்றது கட்டுவித்தியையென்று,இவணிற்பதெனக்கூட்டித் தலைமகள்கூற்றாகவுரைப்பினுமமையும். தில்லைக்கணின்றநாள் இந்நாளென்றுணரலாகாமையின்,அன்றேநின்றவென்றார். தெய்வம்-கட்டுக்குரியதெய்வம். மெய்ப்பாடு- இளிவரல். பயன் - அறத்தொடுநிற்றற்கொருப்படுத்தல். (உ௮௫)

கட்டுவித்திகூறல்.

கட்டுவித்திகூறலென்பது:-தோழிகலக்கமுற்றறிவில்லாதிருப்ப, இருவரையுந்தன்மையாகக்கூட்டுவித்ததெய்வம் புறத்தார்க்கிவ்வொழுக்கம்புலப்படாமல் தானிட்டநெல்லின்கண் முருகனைக்காட்ட, இதனைநெல்லிருங்காண்மின்; இவளுக்குமுருகனையொழியப்பிறிதொன்றுமில்லையெனக் கட்டுவித்தி நெற்குறி காட்டிக் கூறுவித்தல். அதற்குச்செய்யுள்.

குயிலிதன்றேயென்னலாஞ்சொல்லிகூறன்சிற்றம்பலத்த ✻
னியலிதன்றேயென்னலாகாவிறைவிறற்சேய்கடவு ✻
மயிலிதன்றேகொடிவாரணங்காண்கவன்சூர்தடிந்த ✻
வயிலிதன்றேயிதன்றேநெல்லிற்றோன்றுமவன்வடிவே. (உஅ௫)

கட்டுவித்தி
விட்டுரைத்தது.

(இ-ள்.) இது குயிலோசையாமென்று சொல்லலாகுஞ் சொல்லையுடையவளது கூற்றையுடையான், சிற்றம்பலத்தின்கண்ணான், அவனது தன்மையிதுவாமென்றுகூறமுடியாதவிறைவன்; அவனுடைய விறலையுடையசேயூருமயிலிதுவல்லவே; அதுவேயுமன்றி, அவன்கொடிக்கணுளதாகிய கோழியையும் எல்லீருங்காண்க, அதுவேயுமன்றி; வலிபொருந்திய சூரைக்குறைத்த அயில்தானிதுவல்லவே, இவையெல்லாஞ்சொல்லுகின்றதென்! இப்பரப்பிய நெல்லின்கண்வந்து தோன்றுகின்றது அவனதுருவமாம், இதுவல்லவே காண்மின். எ-று.

முருகனென்னவே; முருகனங்கின்றுளனென்றுகூறினளாம். சூர் மாமரமாய்நின்றமையாற்றடிந்தவென்றாள். மெய்ப்பாடு:- பெருமிதம். பயன்:- தன்கருமமுற்றுதல். கட்டுவித்தியை வினவ, அவளறியாதாள்போல இக்கருமமுடித்தற்பொருட்டிவ்வகைசொன்னாள். என்னை; வரைபொருட்குத்தலைமகன்போக, அவன்வரவுநீட்டித்தலான், இவள்தாற்றாமையானுண்டாகியநோயை முருகனால்வந்ததென்றிவள்கூறலாமோ, இஃதெங்ஙனமாயிற் குறியென்பதனைத் தம்பொய்யேயாமென்பது கடா. அதற்குவிடை; குறியும்பொய்யன்று; இவளும்பொய்கூறினாளல்லள், அஃதெங்ஙனமெனின் - குறிபார்க்கச்சென்றிருக்கும்பொழுதே தெய்வமுன்னிலையாகக் கொண்டிருத்தலான், அத்தெய்வத்தின்வெளிப்பாட்டானே தலைமகளுடன்புணர்ச்சியுண்மையையறிந்தாள், இவளிங்ஙனமறிந்தாளெ

ஸ்பகனை நாமறிந்தவாறியாதினாலெனின், இக்களவொழுக்கந்தெய்வமிடை நிற்பப்பான்மை வழியோடு நடக்குமொழுக்கமாதலானும், சிற்றம்பலத்தானியல்பு தெரிந்திராதேயென் றிவள் சொல்லுதலானும், அறிந்தாம். இப்படிவருமொழுக்கம் அகத்தமிழொழுக்கமென்பதனை முதுபெண்டிருமறிந்து போதுகையானும், இவளுரைக்கின்றழி முதுபெண்டிரை முகநோக்கியே சிற்றம்பலத்தானியல்புதெரியாதெனவுரைத்தாள், அவருமக்கருத்தே பற்றியும் அதனையுணர்ந்தார், இக்கருத்தினானு நாமறியப்பட்டது. இனியயலாரையுஞ் சுற்றத்தாரையு நீக்கவேண்டுகையாலும், இக்களவொழுக்கமுடியுமிடத்து வேலனைக்கூவுகையும், வெறித்தொழில் கொள்கையும், அவ்வெறித்தொழிலைபறத்தொடுநின்றுவிலக்குகையும், அகத்தமிழிலக்கணமாகையின், முருகனைக்கென்றே கூறப்பட்டது. கூறியவாறுவது-குறிக்கிலக்கணம் நெல்மூன்றுமிரண்டுமொன்றும்படுகை. அஃதாவது- அடியுங்கொடியுமுவகையும். இதனில், அடியாவது மயில், கொடியாவது கோழி, உவகையாவது வேல். ஆதலான் முருகனைக்கெனவே கூறப்பட்டதெனவறிக. ()

வேலனையழைத்தல்.

வேலனையழைத்தலென்பது- சட்டுவித்திமுருகனைக்கென்று கூறக்கேட்டு, இப்பாலனிக்குடியின்கட்பிறந்து நம்மையிவ்வாறு நிற்பித்தபண்பினுக்கு வேலன்புகுந்து வெறியுமாடுக, அதன்மேன் மறியுமறுக்கவெனத் தாயர் வேலனையழையாநிற்றல். அதற்குச் செய்யுள்.

வேலன்புகுந்து வெறியாடுக வெண்மறியறுக்க *
காலன்புகுந்தவியக்கழல்வைத்தெழிற்றில்லைநின்ற *
மேலன்புகுந்தென்கணின்றனிருந்தவெண்காடனையு *
பாலன்புகுந்திப்பரிசினினிற்பித்தபண்பினுக்கே. (உஅக)

வெறியாடிய வேலனைக்கூஉய்
செறியார்குழலி தாயர்நின்றது.

(இ-ள்.) தன்னையடைந்தவற்கணனை எதஞ்செய்யக்குறித்து அவ்விடத்துப்புகுந்தகாலன்வலிகெட ஒருகழலைவைத்து எழிலையுடையதில்லைக்கணின்ற எல்லாப்பொருட்குமேலாயுள்ளான், புகுந்தணியனுமென்னிடத்துநின்றவன், அவனிருந்த வெண்காட்டையொக்கும் இப்பிள்ளையிக்குடியிற்பிறந்து வெறியாடுவித்தல் இய இம்முறைமைக்கணெம்மை நிற்பித்தபண்பால், வேலனீண்டுப்புகுந்துவெறியாடுவானாக, பலியாகவெள்ளியமறியையுமறுக்க.எ-று

வெறியாடுதலேயன்றி இதுவுந்தகாதென் றுங்கருத்தால், மறைய றக்கவெனப் பிரித்துக்கூறினளாம். கழல்வைத்தென்றாள், எளிதாகச்செய்தலான். பாலனென்னும்பான்மயக்கம் அதிகாரப்புறனடையாற்கொள்க. பரிசினினிற்பித்தவென்புழி ஐந்தாவது ஏழாவதன்பொருட்கண்வந்து, சிறுபான்மை இன்சாரியைபெற்றுநின்றது. ஏழாவதற்கு இன்னென்பதோருருபு புறனடையாற்கொள்ளினுமமையும். மெய்ப்பாடு- இளிவரல். பயன் - தலைமகளது வேறுபாடுநீக்குதல்.

இன்னலெய்தல்.

இன்னலெய்தலென்பது - வெறியாடுதற்குத்தாயர்வேலனையுழைப்பக் கேட்டதலைமகள், இருவாற்றானும் நமக்குயிர்வாழ்நெறியில்லையெனத் தன்னுள்ளேகூறி, இன்னலெய்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அயர்ந்தும்வெறிமறியாவிசெகுத்தும்விளர்ப்பயலார் *
பெயர்த்துமொழியாவிடினென்னைபேசுவபேர்ந்திருவ *
ருயர்ந்தும்பணிந்துமுணராவம்பலமுன்னலரிற் *
றுயர்ந்தும்பிறிதின்றொழியினென்னாந்துறைவனுக்கே. (௨௮௭)

ஆடியவெறியிற் கூடுவதறியா து
தன்னறங்கோதை யின்னலெய்திய து.

(இ-ள்) வெறியைவிரும்பியாடியும் மறியினதாவியைக்கெடுத்தும் பின்னுநிறவேறுபாடொழியாதாயின், அயலார்கூறுவனவென்னும்! வெறியாட்டாகியபிறிதினால், இவ்விளர்ப்பொழியுமாயின், துயரமுற்றும், அத்துறைவனுக்குநாமென்னாதும்! இருவாற்றானுமுயிர்வாழ்தலரிது எ-று. யான்றலைவன் யான்றலைவனென்றகம்முன்மாறுபட்ட பிரமனுமாலுமாகியவிருவர் அந்நிலைமையினின்றும் பெயர்ந்து தழற்பிழம்பாகியதன்வடிவையறியலுற்று ஆகாயத்தின்மேற்சென்றுயர்ந்தும் நிலத்தின்கீழ்ப்புக்குத்தாழ்ந்தும், அறியப்படாதவனதம்பலத்தை நினையாதாரைப்போலத் துயரமுற்றுமெனக்கூட்டுக.

மறிபறத்தற்கு முன்னுரைத்ததுரைக்க. பெயர்த்துமெனமெலிந்துநின்றது. உணராவென்றது செயப்படுபொருட்கண்வந்தது. தன்னைப்பிரிதல் துன்பமாய் இன்றியமையாதயாம்இத்தன்மையமாகவும், அளிக்கின்றிலனெனவுட்கொண்டு, அவனை நாமுன்னநெருங்க முயக்குமன்பராமாறெல்லாம் இன்றென்றுமென்னுங்க

ருக்கரல்; என்னதுமென்றாள். பிறிதுமொழியினென்பது. பாட்டாயின், வெறியினாற்றணியாதாதலின் இந்நோய்பிறிதென்று பிறர்மொழியினென்றுரைக்க. மெய்ப்பாடு- அச்சத்தைச்சார்ந்தமருட்கை. பயன்-தலைமகள் தன்னெஞ்சொடுசொல்லியாற்றுதல். ()

வெறிவிலக்குவிக்கநினைதல்.

வெறிவிலக்குவிக்கநினைதலென்பது- இருவராற்றானுநமக்குயிர்வாழுநெறியில்லையாதலாற் றுறைவற்குற்றநோயைப் பிறர்சிதைக்கப்படின்; நாண்டுறந்தும் வெறிவிலக்குவிப்பனென்றுதலைமகள் தோழியைக்கொண்டு வெறிவிலக்குவிக்க நினையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சென்றார்திருத்தியசெல்லினின்றார்கள்சிதைப்பவொன்றா *
நன்றாவழிதன்றேயிறைதில்லைதொழாரினைந்து *
மொன்றாயிவட்குமொழிதலில்லேன்மொழியாதுமுய்யேன் *
குன்றார்துறைவர்க்குறவேனையாப்பினிக்கூர்மறையே. (உஅஅ)

அயறருவெறியின் மயறருமென
விலக்கலுற்ற குலக்கொடிநினைந்தது.

(இ-ள்.) இறைவனதுதில்லையைத்தொழாதாரைப்போலவருந்தி யுய்; நாணினாலென்னோடொன்றாயிருக்கும் என்றோழியாகியவிவட்கு மொழியமாட்டுகிலேன், மொழியாதொழிந்தாலும் வேறோராற்றானுயிர்வாழேன்; ஆயினும், இனிமணற்குன்றுகளார்ந்த துறையையுடையவர்க்குச்சிறந்தயான் இம்மிக்கமறையை யிவட்குரைப்பேன், புணர்ந்துபோயினார் மிகவுமுண்டாக்கிய இந்நோயைத்தீர்ப்பார் முருகனைப் பிறராக; இதற்கியாதுமியையிலாதார்சிலராயின், இதுபெரிதுமழகிது. எ-று.

நன்றுவழிதன்றேயென்பது குறிப்புநிலை. குன்றார்துறைவர்க்குறவேனென்றவதனால், நாண்டுறந்தும்மறையுரைத்தற்குக் காரணங்கூறினாளாம். இந்நோயையேதிலார்சிதைப்பவிடேன், மறையுரைத்தாயினும் வெறிவிலக்குவேனென்னுங்கருத்தால், நன்றுவழிதன்றேயென்றாள். மயறருமென-வருத்தநமக்குண்டாமென. மெய்ப்பாடு- இளிவரலைச்சார்ந்தநகை. பயன் - வெறிவிலக்குதற்கொருப்படுதல். (உஅஅ)

அறத்தொடுநிற்றலையுணர்த்தல்.

அறத்தொடுநிற்றலையுணர்த்தலென்பது-நாண்டுறந்தும் மறையுரைத்தும் வெறிவிலக்குவிக்கநினையாநின்றதலைமகள், மேலறத்

தொடுநிற்பாளாக, அயலாரேசுக, ஊர்நகுக, அதுவேயுமன்றி, பச
யும்வெகுள்வளாக, அதன்மேல்நீயுமென்னைமுனிவாயாக, நீதெரு
யாகிற் சூளுற்றுத்தருவேன், யான்சொல்லுகின்றவிதனைக் கேட்
பாயாகவெனத் தோழிக்குக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

யாயுந்தெறுகவயலவரேசுகவூர்நகுக　*
நீயுமுனிகநிகழ்ந்ததுகூறுவலெஞ்ஞுடைய　*
வாயுமனமும்பிரியாவிறைதில்லைவாழ்த்துநர்போற்　*
றூயநினக்குக்கடுஞ்சூடருவன்சுடர்க்குழையே.　(உஅக)

வெறித்தலைவெரீஇ வெருவருதோழிக்
கறத்தொடுநின்ற வாயிழையுரைத்தது.

(இ-ள்.) சுடர்க்குழையையுடையாய், எனதுவாயையுமனத்தையும் பிரியாதவிறைவனது தில்லையைவாழ்த்துவாரைப்போலத் தூயேன், நீதெருயாயின் நினக்குக்கடிய சூளுறவையுந் தருவேன், அயலாரேசுக, ஊர்நகுவதாக, அவற்றின்மேலே யாயும்வெகுளுவாளாக, அதுவேயுமன்றி, நீயுமென்னைமுனிவாயாக, புகுந்ததனை யான்கூறுவேன், கேட்பாயாக. எ-று.

தூயேனென்றது-நிங்குகரந்தவுள்ளத்தேனல்லேனென்றவாறு. தூயனெனக்கென்பது பாடமாயின், எனக்கியான் றூயனென்றுரைக்க. அறத்தொடுநின்ற-அறத்தொடுகூடிநின்ற. வெரீஇயுரைத்ததெனவியையும். பரியாயம், பொருண்முரணுமாம். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-அறத்தொடுநிற்றல்.　(உஅக)

அறத்தொடுநிற்றல்.

அறத்தொடுநிற்றலென்பது-அறத்தொடுநிற்பாளாக முன்றோற்றுவாய்செய்து எம்பெருமாற்குப் பழிவருங்கொல்லோவென்னுமையத்தோடுநின்று, யாமுன்பொருநாள் கடற்கரையிடத்தே வண்டல்செய்துவிளையாடாநின்றேமாக, அந்நேரத்தொருதோன்றல், நும்வண்டல்மனைக்கு யாம்விருந்தென்றுவந்துநின்றபொழுது, நீ பூக்கொய்யச் சிறிதுபுடைபெயர்ந்தாய், அந்நிலைமைக்கட்கிழ்காற்றுமிகுதலாற் கரைமேலேறுங்கடல் மேல்வந்துற்றது, உற, யான்றோழியோ தோழியோவென்று நின்னைவிளித்தேன், அதுகண்டிரங்கி, அவனருளொடுவந்து தன்கையைத்தந்தான், யானுமயக்கத்தாலே யதனைநின்கையென்றுதொட்டேன், அவனும் பிறிதொன்றுஞ்சிந்தியாது, என்னுயிர்கொண்டுதந்து, என்னைக்கரைக்கணுய்த்துப்போயினான், அன்று என்னுயிரால் நினைக்கதனைச்

சொல்மாட்டிற்றிலேன், இன்றிவ்வாறுபினபின் இதுகூறினேன், இனிநினக்கடுப்பது செய்வாயாகவெனத் தோழிக்குத்தலைமகள் அறத்தொடுநில்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வண்டலுற்றேமெங்கண்வந்தொருதோன்றல்வரிவளையீ *
ருண்டலுற்றேமென்றுநின்றதோர்போழ்துடையாள் புலியூர்க் *
கொண்டலுற்றேறுங்கடல்வரவெம்முயிர்கொண்டுதந்து *
கண்டலுற்றேர்நின்றசேரிச்சென்றானோர்கழலவனே. (உகூய)

செய்தவெறியி னெய்துவதறியா து
நிறத்தொடித்தோழிக் கறத்தொடுநின்றது.

(இ-ள்.) விளையாட்டையைப்பொருந்தினேமாகிய வெம்மிடத்து, ஒருதோன்றல், வரிவளையையுடையீர் நும்வண்டல்மனைக்கு விருந்தாய் நாமுண்ணக்கருதினேமென்று சொல்லிவந்து நின்றதோர் பொழுதின்கண், உடையானது புலியூர்வரைப்பிற் கீழ்காற்றமிகுதலாற் கரைமேலேவந்தேறுங்கடல் எம்மேல்வர, அதன்கணழுந்தாமல் எம்முயிரைக்கைக்கொண்டு எமக்குத்தந்து, அவ்வொருகழலவன் கண்டலாகியமரமிக்கு அழகுநின்ற அச்சேரியின்கட்சென்றான், இனித் தக்கதுசெய்வாயாக. எ-று.

வண்டலுற்றேமங்கணென்பதுபாடமாயின், அங்கணென்பதனை ஏழாம்வேற்றுமைப்பொருள்படநின்றதோரிடைச்சொல்லாகவுரைக்க. புலியூர்க்கடலெனவியையும். தேரிற்சென்றானென்பதுபாடமாயின், நம்மைக்காண்டல்விரும்பித் தேர்மேலேறிச்சென்றானென்றுரைக்க. தேரியென்பது-கருவிப்பொருட்கண்வந்தவைந்தாமுருபெனினுமமையும் இதற்குக் காண்டலுற்றென்பது குறைகின்றது. தோன்றல் கழலவன் என்றதனால், அவனதுபெருமையும், எம்முயிர்கொண்டு தந்தென்றதனால் மெய்யுறவுங்கூறினாளாம். மெய்ப்பாடும் பயனும்-அவை. (உகூய)

ஐயந்திரக்கூறல்.

ஐயந்திரக்கூறலென்பது- எம்பெருமாற்குப் பழிவருங்கொல்லோவென்றையுற்று அறத்தொடுநின்றதலைமகளது குறிப்பறிந்த தோழி, அவளையந்தீர, நங்குடிக்குப்பழிவரினும், அவற்குப்பழிவாராமல் மறைத்துக்கூறுமாறென்றேனெனத் தான் றலைமகளைப்பாதுகாத்தல் தோன்றக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

குடிக்கலர்கூறினுங்கூறுவியன்றில்லைக்கூத்தனதாள் *
முடிக்கலராக்குமொய்ம்பூந்துறைவற்குமுரிபுருவ *

வடிக்கலர்வேற்கண்ணிவந்தனசென்றுநம்யாயறியும் *
படிக்கலராமிவையென்னு மறைக்கும்பரிசுகளே. (௨௬௧)

விலக்குதல்விரும்பு மேதகுதோ ழி
யலங்கற்குழலிக் கறியவுரைத்த து.

(இ-ள்.) மூரிந்தபுருவத்தையுடைய வடுவகிரிற்பரந்த வேல்போ லுங்கண்ணையுடையாய், கூறலாகாத அகன்றதில்லையிற்கூத்தனுடை ய தாள்களைத் தன்முடிக்குப்பூவாக்கும் மொய்த்தபூவையுடைய து றையையுடையவனுக்குவந்தபழிகளை, அவைபோய்ப்பரத்தலான் நம்முடைய யாயுமறியும். அதுவேயுமன்றி, உலகத்திற்கெல்லாம லராம், அதனான் நங்குடிக்கலர்கூறினமாயினும் இவற்றைநாமம றைத்துச்சொல்லும்பரிசுகளென்னே! எ-று.

கூறுத்தாளெனவினையும். வடுவகிரோடு பிறபண்பா லொக்கு மாயினும், பெருமையானொவ்வாதென்னுங்கருத்தான், வடிக்கலர் கண்ணென்றார். வடிக்கென்னுநான்காவது - ஐந்தாவதன்பொரு ட்கண்வந்தது. வடித்தலான்விளங்கும் வேலெனினுமமையும். அ றத்தொடுநிற்குமிடத்து எம்பெருமாற்குப் பழிபடக்கூறுமோ வென்றையுறுந்தலைமகட்கு, நங்குடிக்கலர்கூறினுந்துறைவற்குப் பழிபடக்கூறேனென்பதுபடக்கூறித் தோழி யறத்தொடுநிற்ற லையுடம்படுவித்தவாறு. கூறுவென்பதற்குக் கூத்தனதாள் தனக் குக்கூறாகவென்றும், யாயறியும்படிக்கலராமென்பதற்கு யாயும றியும்படியாகச் சென்றலராமென்றும் உரைப்பாருமுளர். மெய் ப்பாடு-பெருமிதம். பயன்-தலைமகளையாற்றுவித்தல். (௨௬௧)

வெறிவிலக்கல்.

வெறிவிலக்கலென்பது - தலைமகளை ஐயந்தீர்த்து, வெறிக்களத் தேசென்று, வேலனைநோக்கி, புனலிடைவீழ்ந்துகெடப்புக வந் தெடுத்துய்த்த கதிர்த்தோணிற்க, இந்நோய்தீர்த்தற்குப்பிறிதோ ருபாயத்தைக்கருதாநின்னைப்போல, இவ்வுலகத்தின்கண் அறிவு டையாரில்லையென, மேலறத்தொடுநிற்பாளாகத் தோழி வெறிவி லக்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

விதியுடையாருண்கவேரிவிலக்கலமம்பலத்துப் *
பதியுடையான்பரங்குன்றினிற்பாய்புனல்யாமொழுகக் *
கதியுடையான்கதிர்த்தோணிற்கவேறுகருதினின் *
மதியுடையார்தெய்வமேயில்லைகொல்லினிவையகத்தே. (௨௬௨)

அறத்தொடுநின்ற திறத்தினிற்பாங் கி
வெறிவிலக்கிப் பிறிதுரைத்த து.

(இ-ள்.) இவ்வெறியாட்டுவிழாவின் வேரிபுன்னை விதியுடையவர்கள் வேரியுண்ணவமையும், யாமதனைவிலக்கேம், அதுகிடக்க, அம்பலமாகியவிருப்பிடத்தையுடையானது பரங்குன்றினிடத்துப் பரந்தபுனலோடே யாமொழுக, எடுத்தற்பொருட்டு ஆண்டுவரவையுடையவனாயவனுடைய ஒளியையுடையதோள்கணிற்க, இந்நோய்தீர்த்தற்கு வேறோருபாயத்தைக்கருதுநின்னைப்போல்அறிவுடையார், தெய்வமே, இவ்வுலகத்து இப்போழ்தில்லைபோலும். எ-று

இவ்வாறுகூறவே, நீ கூறியதென்னென்றுகேட்ப அறத்தொடுநிற்பாளாவதுபயன். அம்பலத்தென அத்துச்சாரியை அல்வழிக்கண்வந்தது. ஓரிடத்தானொதுக்கப்படாமையிற் பதியுடையவனென்றுசொல்லப்படாதவன் அம்பலத்தின்கண்வந்து பதியுடையனாயினானென்பதுபடவுரைப்பினுமமையும். பரங்குன்றினென்பதற்குப் பாலன்புகுந்திப் பரிசினினிற்பித்தவென்றதற்குரைத்ததுரைக்க. ஒழுகவென்னும்வினையெச்சம் கதியையுடையானென்னுமாக்கத்தையுட்கொண்டவினைக்குறிப்புப்பெயரோடுமுடியும். கதி-ஆண்டுச்சென்றசெலவு. கதிர்த்தோணிற்கவென்பதற்கு எடுத்தற்பொருட்டு அவன்றோள்வந்து நிற்கவென்று பொருளுரைத்து, அவ்வெச்சத்திற்கு முடிபாக்கினுமமையும். மதியுடையாரில்லைகொல்லென்பது-குறிப்புநிலை. அறத்தொடுநின்ற திறத்தினில்-அறத்தொடுநின்றதன்மைத்தாக. பிறிது-புனலிடையவன்வந்துத வினவுதவி. மெய்ப்பாடு-பெருமிதத்தைச்சார்ந்தநகை. பயன்-குறிப்பினால்வெறிவிலக்குதல். (௨௯௨)

செவிலிக்குத்தோழியறத்தொடுநிற்றல்.

செவிலிக்குத்தோழியறத்தொடுநிற்றலென்பது-வெறிவிலக்கிநிற்ப, நீவெறிவிலக்குதற்குக்காரணமென்னென்றுகேட்டசெவிலிக்கு, நீபோய்ப் புனங்காக்கச்சொல்ல, யாங்கள்போய்த்தினைக்கிளிகடியாநின்றேம், அவ்விடத்தொருயானைவந்துநின்மகளைவதஞ்செய்யப்புக்கது, அதுகண்டு அருளுடையானொருவன் ஓடிவந்தணைத்துப் பிறிதொன்றுஞ்சிந்தியாமல் யானையைக்கடிந்து அவளதுயிர்கொடுத்துப் போயினான், அறியாப்பருவத்து நிகழ்ந்ததனை இன்றறியும்பருவமாதலான், "உற்றார்க்குரியர் பொற்றொடிமகளிர்" என்பதனையுட்கொண்டு, இவ்வாறுண்மெலியாநின்றாள்,

இனிபடுப்பது செய்வாயாகவெனத் தோழி அறத்தொடுநில்லாநி
ற்றல். அதற்குச்செய்யுள்.

மனக்களியாயின்றியான்மகிழ்தூங்கத்தன்வார்கழல்க *
ளெனக்களியாநிற்குமம்பலத்தோனிருந்தண் கயிலைச் *
சினக்களியானைகடிந்தாரொருவர்செவ்வாய்ப்பசிய *
புனக்கிளியாங்கடியும்வரைச்சாரற்பொருப்பிடத்தே. (௨௱௫)

சிறப்புடைச் செவிலி க்
கறத்தொடு நின்ற து.

(இ-ள்.) உள்ளக்களிப்புண்டாய் இன்றியான் மகிழ்தூங்கும்வ
ண்ணம் எனக்குத்தன்னுடைய நீண்டகழலையுடைய திருவடிகளை
யளியாநிற்கும் அம்பலத்தானது பெரிதாகிய குளிர்ந்தகயிலைக்
கண் எம்புனத்தின்கண்வருஞ் செவ்வாயையுடைய பசியகிளிகளை
யாங்கடியும் வரையடியினுண்டாகிய பொருப்பிடத்தின்கண் வர்
து,ஒருவர் எம்மேல்வருஞ் சினத்தையுடைய களியானையைமாற்றி
னூர், இனியடுப்பதுசெய்வாயாக. எ-று.

கயிலையென்றது-கயிலையையணைந்தவிடத்தை, கடியும்பொரு
ப்பெனவியையும். வரை-உயர்ந்தவரை. பொருப்பு-பக்கமலை. கி
ளிகடியும்பருவமென்றதனாற் களவொழுக்கமாறுகொள்ளாமை நூ
தலாயினகூறினாளாம். மெய்ப்பாடு-அது. பயன்-வெளிப்படையா
லறத்தொடுநிற்றல். (௨௱௫)

நற்றாய்க்குச்செவிலியறத்தொடு நிற்றல்.

நற்றாய்க்குச்செவிலியறத்தொடுநிற்றலென்பது- தோழியறத்
தொடுநிற்பக்கேட்டசெவிலி, இளையளாகிய இல்வாழ்க்கைச்செ
ல்வத்தையுடையவிவளை என்சொல்லிப்புகழுவோம், முன்னொழு
கிரண்டெயிறு முளையாதவிளமைப்பருவத்தே அறிவுமுதிர்ந்தா
ளெனத் தலைமகளது கற்புமிகுதிதோன்ற நற்றாய்க்கறத்தொடுநில்
லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

இளையாளிவளையென்சொல்லிப்பரவுதுமீரெயிறு *
முளையாவளவின்முதுக்குறைந்தாண்முடிசாய்த்திமையோர் *
வளையாவழுத்தாவருந்திருச்சிற்றம்பலத்துமன்னன் *
றிளையாவருமருவிக்கயிலைப்பயில்செல்வியையே. (௨௱௬)

கற்பினிவ்வழாமை நிற்பித்தெடுத்தோ ள்
குலக்கொடிதாயர்க் கறத்தொடுநின்ற து.

(இ-ள்) இமையோர் தம்முடியைச்சாய்த்துவணங்கியும் வாழ்த்தியும் வருந்திருச்சிற்றம்பலத்தின்கண் உளனாகியமன்னனது திளைத்துவருமருவியையுடைய கயிலைக்கட்பயிலுந்திருவாட்டியை, இளையளாகியவிவளை, என்சொல்லிப்புகழ்வோம்! முன்னெழுமிசண்டெயிறுமுளையாதவிளமைக்கண் அறிவுமுதிர்ந்தாள். எ-று.

திளைத்தல்-ஒண்டிடைவிடாதுஅவ்விடத்தோடுபயிறல். கற்பினின்வழாமைநிற்பித்தெடுத்தோள்-கற்பினின்வழுவாமலறிவுகொளுத்திவளர்த்தவள். மெய்ப்பாடு உவகை. பயன் - நற்றாய்க்கறத்தொடுநிற்றல். (௨௯௪)

தேர்வரவுகூறல்.

தேர்வரவுகூறலென்பது- நற்றாய்க்குச்செவிலியறத்தொடுநில்லாநிற்ப, அந்நிலைமைக்கட்டலைமகனது தேரொலிகேட்டதோழி, உவகையோடுசென்று, தலைமகளுக்கு அதன்வரவெடுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கள்ளினமார்த்துண்ணும்வண்கொன்றையோன்றில்லைக்கார்க்கடல்வாய்ப் *
புள்ளினமார்ப்பப்பொருதிரையார்ப்பப்புலவர்கடம் *
வள்ளினமார்ப்பமதுகரமார்ப்பவலம்புரியின் *
வெள்ளினமார்ப்பவரும்பெருந்தேரின்றுமெல்லியலே. (௨௯௫)

மணிநெடுந்தேரோ னணிதினின்வருமென
யாழியன்மொழிக்குத் தோழிசொல்லியது.

(இ-ள்.) மெல்லியால், கள்ளை வண்டினங்களார்த்துண்ணும் வளவியகொன்றைப்பூவையுடையவனது தில்லையையணைந்தகரியகடலிடத்து ஆண்டுப்படியும் புள்ளினங்களார்ப்பக் கரையைப்பொருந்திரைகளார்ப்ப, அவ்வாரவாரத்தோடு மங்கலங்கூறும்புலவர்கடமது வள்ளியவினமார்ப்ப, நறுவிரையால் வண்டுகளார்ப்ப, வலம்புரியினது வெள்ளியவினமார்ப்ப, இன்று நங்காதலர் பெருந்தேர்வாராநின்றது. எ-று.

கரந்தவொழுக்கத்து மணியொலியவித்துவந்ததேர், வரைந்தெய்த இவ்வரவத்தோடும்வருமென மகிழ்ந்துகூறியவாறு. கள்ளென்பது-வண்டினுளொருசாதியென்பாருமுளர். புள்ளினத்தையும் பொருதிரையையும் அவன்வரவிற்கு உவந்தார்ப்பனபோலக்கூறினாள். இதனை மிகைமொழிப்பாற்படுத்திக்கொள்க. முன்னர்த்தலைமகன்பிரிந்தகாலத்துத் தலைமகளதாற்றாமையைத் தாயாற்றுவிக்கமாட்டாது பொறுத்துக்கண்டிருந்த புள்ளினமுங் கடலும் அ

வனது தேர்வரவுகண்டு, இனிப்பிரிவும்பிரிவாற்றாமையுமில்லையெ ன்று மகிழ்வதற்றூர்த்தனவென்றறிக. அணிதினின்வரும்-அணித்தாகவரும். மெய்ப்பாடு-பெருமிதம் பயன்- தலைமகளையாற்றுவித்த ல், வரைவுமலிந்தமையுணர்த்துதலுமாம். (௨௬௫)

மணமுரசுகேட்டுமகிழ்ந்துரைத்தல்.

மணமுரசுக்கேட்டுமகிழ்ந்துரைத்தலென்பது - தோழி தலைமக ளுக்குத்தேர்வரவுகூறுநின்ற அந்நிலைமைக்கண் மணமுரசுகேட் டு மனையிலுள்ளார், இஃதிவளைநோக்கியொலியாநின்றது மணமு ரசெனவுட்கொண்டு, யாம் பூரணபொற்குடந்தோரணமுதலாயி னவற்றான் மனையையலங்கரிப்போமென மகிழ்வொடுகூறுநிற்ற ல். அதற்குச்செய்யுள்.

பூரணபொற்குடம்வைக்கமணிமுத்தம்பொன்பொதிந்த *
தோரணநீடுகதூரியமார்க்கதொன்மாலயற்கும் *
காரணனேரணிகண்ணுதலோன்கடற்றில்லையன்ன *
வாரணவும்முலைமன்றலென்றேங்குமணமுரசே. (௨௬௬)

நிலங்காவலர் நீண்மணத் தி
னலங்கண்டவர் நயந்துரைத்த து.

(இ-ள்) பழையபராகிய அரியயனுக்குங்காரணனாயுள்ளான், அழகுண்டாகியகண்ணையுடைய நுதலையுடையான், அவனது கடலையடைந்ததில்லையையொக்கும் வாராற்கட்டப்படு மளவைசசென்ற ணவும் முலையையுடையாளது மணமென்று மணமுரசேங்காநி ன்றது, அதனால், வாயில்கடோறும் நீரானிறைக்கப்பட்ட பொற் குடத்தை வைக்க, மணியுமுத்தும் பொன்னின்கணழுத்திய தோர ணம் எங்குமோங்குவதாக, தூரியங்கணின்றார்ப்பனவாக. எ-று.

வாரணவுமுலையென்பதற்கு வாரைப்பொருதமுலையெனினு மமையும். மெய்ப்பாடு-உவகை. பயன்-நகரியலங்கரித்தல். (௨௬௭)

ஐயுற்றுக்கலங்கல.

ஐயுற்றுக்கலங்கலென்பது- மணமுரசுகேட்டவள் மகிழ்வொடு நின்று மனையையலங்கரியாநிற்ப, மிகவுங்களிப்பையுடைத்தாய நமதுசிறந்தநகரின்கண் முழங்காநின்ற இப்பெரியமுரசம், யா னெவற்கோ அறிகின்றிலேனெனத் தலைமகள் கலக்கமுற்றுக்கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்.

அடற்களியாவர்க்குமன்பர்க்களிப்பவன்றுன்பவின்பம் *
படக்களியாவண்டறைபொழிற்றில்லைப்பரமன்வெற்பிற் *

கடக்களியானைகடிந்தவர்க்கோவன்றிநின்றவர்க்கோ *
விடக்களியாநம்விழுநகரார்க்கும்வியன்முரசே. (உகூஎ)

நல்வரவுரைக்குமத் நல்லவர்முரசொலி
தெரிவரிதென வரிவைகலங்கியது.

(இ-ள்.) மிகவுங்களிப்புண்டாய நமது சிறந்தவில்லின்கண் முழங்காநின்ற இப்பெரியமுரசம், வெற்பின்கண் மதத்தையுடையகளியானையை நம்மேல்வாராமல் மாற்றினவர்க்கோ! அன்றி யாதுமியையில்லாதவர்க்கோ? அறிகின்றிலேன். எ-று பிறவியான்வருந்துன்பமுமின்பமுங்கெட இயல்பாகிய பேரின்பத்தை யாவராயினுமன்பராயினார்க்கு வரையாதுகொடுப்போன், களித்துவண்டுகளொலிக்கும் பொழிலையுடையதில்லைக்கணுள்ளானாகிய பரமன், அவனது வெற்பினெனக்கூட்டுக.

அடற்களி- அடுதல்செய்யாதபேரின்பம். அடக்களியென்பது பாடமாயின், பேரின்பம் யாமென்னுமுணர்வினைக் கெடுப்பவென்றுரைக்க. மெய்ப்பாடு- அச்சத்தைச்சார்ந்தமருட்கை. பயன்-ஐயந்தீர்தல். (உகூஎ)

நிதிவரவுகூறுநிற்றல்.

நிதிவரவுகூறுநிற்றலென்பது- முரசொலிகேட்டு ஐயுற்றுக்கலங்காநின்றதலைமகளுக்கு, நமர்வேண்டினபடியே அருங்கலங்கொடுத்து நின்னைவரைந்துகொள்வாராக, யானைகடிந்தார், நமதுகடைமுன்கொணர்ந்திறுத்தார் குறைவில்லாதநிதி, இதனைநீகாண்பாயாகவெனத் தோழி மகிழ்ந்தருமனத்தொடுநின்று நிதிவரவுகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

என்கடைக்கண்ணினும்யான்பிறவேத்தாவகையிரங்கித் *
தன்கடைக்கண்வைத்ததண்டில்லைச்சங்கரன்றாழ்கயிலைக் *
கொன்கடைக்கண்டரும்யானைகடிந்தார்கொணர்ந்திறுத்தார் *
முன்கடைக்கண்ணிதுகாண்வந்துதோன்றுமுழுநிதியே. (உகூஅ)

மகிழ்தருமனத்தொடு வண்புகழ்த்தோழி
திகழ்நிதிமடந்தைக்குத் தெரியவுரைத்தது.

(இ-ள்.) கடையாகியவென்னிடத்தும், யான்பிறதெய்வங்களையேத்தாதவண்ணமிரங்கித் தனதுகடைக்கண்ணைவைத்த குளிர்ந்ததில்லைக்கணுள்ளானாகிய சங்கரன் மேவுங்கயிலையிடத்துத் தமக்கொருபயன்கருதாது நமக்கிறுதியைப்பயக்கும் யானையையன்றுக

டிந்தவர், கொணர்ந்துவிட்டார், விட, நங்கடைமுன்வந்து தோன்றும் குறைவில்லாதநிதி, இனைக்கான்பாயாக எ-று.

என்கடைக்கண்ணினுமென்பதற்கு மொழிமாற்றாது எனதுகடையாகியநிலைமைக்கண்ணுமென்றுரைப்பினுமமையும். கண்ணகன்ஞாலமென்புழிப்போலக் கண்ணென்பது ஈண்டுப்பெயராகலின் ஏழனுருபுவிரித்துரைக்க. கடைக்கண்ணினுமென்னும்வேற்றுமைச்சொல்லும், ஏத்தாவகையென்னும்வினையெச்சமுங் கடைக்கண்ணவத்தவென்னும் வினைகொண்டன. கடைக்கணென்பதனை முடிவாக்கி, என்முடிவுகாலத்தும் பிறவேத்தாவகையென்றுரைப்பாருமுளர். கொன்கடைக்கண்டரும்யானையென்பதற்கு, அச்சத்தைக்கடைக்கண்டரும்யானையென்றுரைப்பாருமுளர். வண்புகழ்-அறத்தொடுநின்று கற்புக்காத்தலால்வந்தபுகழ். மெய்ப்பாடு-உவகை. பயன்-ஐயந்தீர்த்தல். (௨௯௮)

வரைபொருட்பிரிதல் முற்றிற்று.

மணஞ்சிறப்புரைத்தல்.

மணஞ்சிறப்புரைத்தலென்பது- வரைந்தபின்னர் மணஞ்சிறப்புக்கூறுநிற்றல்.

அதுவருமாறு. சூத்திரம். மணமுரசுகூறன் மகிழ்ந்துரைத்தலொடு, வழிபாடுகூறல் வாழ்க்கைநலங்கூறல், காதல்கட்டுரைத்தல் கற்பறிவித்தல், கற்புப்பயப்புரைத்தல் காதன்மருவுரைத்தல், கலவியுரைத்தல் கருதியவொன்பது, நலமிகுமணமிவை நாடுங்காலே.

(இ-ள்.) மணமுரசுகூறல்-மகிழ்ந்துரைத்தல்- வழிபாடுகூறல்- வாழ்க்கைநலங்கூறல்-காதல்கட்டுரைத்தல்-கற்பறிவித்தல்- கற்புப்பயப்புரைத்தல்- மருவுதலுரைத்தல்- கலவியின்பங்கூறல் என விவையொன்பதும் மணஞ்சிறப்புரைத்தலாம். எ-று. அவற்றுள்,

மணமுரசுகூறல்.

மணமுரசுகூறலென்பது - வரைபொருட்பிரிந்துவந்தபின்னர் அருங்கலம்விடுத்தற்கு முன்றிற்கணின்று தலைமகனதுமுரசமுழங்காநிற்பக்கண்டு மகிழ்வுறுநின்றதோழி, நாந்துயர்தீர நம்மில்லின்கட்புகுந்துநின்று யாவைகடிந்தார்முரச முழங்காநின்றது, இனியென்னகுறையுடையேமென வரைவுதோன்றநின்று, தலைமகளுக்கு மணமுரசுகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பிரசந்திகழும்வரைபுரையானையின்பீடழித்தார் *
முரசந்திகழுமுருகியநீங்குமெவர்க்குமுன்னா *
மரசம்பலத்துநின்றாடும்பிரானருள்பெற்றவரிற் *
புரைசந்தமேகலையாய்துயர்தீரப்புகுந்துநின்றே. (௨௯௯)

வரைவுதோன்ற மகிழ்வுறுதோ ழி
நிரைவளைக்கு நின்றுரைத்த து.

(இ-ள்.) நிறத்தையுடையவுயர்ந்தமேகலையையுடையாய், அரியயன்முதலாகிய யாவர்க்கும் முன்னாயிருக்குமரசு, இவ்வாறுபெரியனாயினும் எளியனாய் அம்பலத்தின்கண் எல்லாருங்காணநின்றாடுமுதல்வன், அவனதருளுடையவரைப்போல நாந்துயர்தீர, நம்மில்லின்கட்புகுந்துநின்று, பெருந்தேன்றிகழுமலைக்கண்வரைபோலும் யானையினதுவலியை நங்காரணமாக வழித்தவரதுமுரசு முழங்கிவிளங்காநின்றது, அதுவேயுமன்றி, வெறிகாரணமாகவொலிக்கும் முருகியமும் நீங்காநின்றது, இனியென்னகுறை யுடையேம். எ-று.

புகுந்துநின்றுதிகழுமெனக்கூட்டுக. வரையுயர்யானையென்பதூஉம்பாடம். முருகுங்கமழுமென்றுபாடமோதி, கலியாணத்திற்குறுப்பாம் நறுவிரை நாறுநின்றனவென் றுரைப்பாருமுளர். மெய்ப்பாடு-அது. பயன்-தலைமகளைமகிழ்வித்தல். (௨௯௯)

மகிழ்ந்துரைத்தல்.

மகிழ்ந்துரைத்தலென்பது- மணமுரசொலிகேட்டதோழி, சிலம்பன்றந்த பெறுதற்கரிய தழைகளை வாடாமல்வைத்து, அத்தழையே பற்றுக்கோடாக ஆற்றியிருந்தாளெனத் தலைமகளைத் தன்னுள்ளே மகிழ்ந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

இருந்துதியென்வயிற்கொண்டவன்யாவெனப்பொழுதுமுன்னு *
மருந்துதிசைமுகன்மாற்கரியோன்றில்லைவாழ்த்தினர்போ *
லிருந்துதிவண்டனவாலெரிமுன்வலஞ்செய்திடப்பா *
லருந்துதிகாணுமளவுஞ்சிலம்பனருந்தழையே. (௩00)

மன்னிபகடியிற் பொன்னறுங்கோதை யை
நன்னுதற்றோழி தன்னின்மகிழ்ந்த து.

(இ-ள்.) சிலம்பன்றந்தபெறுதற்கரியதழைகள், இப்பொழுதுமுன்றீயைவலங்கொண்டு பின் வசிட்டனிடப்பக்கத்துத்தோன்றும் அருந்ததியைக்காணுமளவுந் தில்லையை வாழ்த்தினரைப்போல வாடாதிருந்து விளங்கின. எ-று. அன்பர்துதிப்ப அவர்வயிற்றுன்

கொள்ளும்பெருந்துதியை என்வயினுண்டாக்கிக்கொண்டவன், யானெப்பொழுதுமுன்னும்வண்ணஞ்சுவையுடைத்தாயதோர்மருந்து, இவ்வாறெனக்கெளியனாயினுந் திசைமுகற்கும் மாற்குமரியான், அவனதுதில்லையெனக்கூட்டுக.

என்றது - தழைகளைவாடாமல்வைத்து, அத்தழையேபற்றுக்கோடாக ஆற்றியிருந்தாளெனத் தலைமகளைமகிழ்ந்துகூறியவாறு. இவண்டனவென்பதற்கு வாடாதிருந்து இவளைத்தீண்டியின்புறுத்தினவென்றுரைப்பினுமமையும். தழைவாடாதிருந்தனவென்றது-முன்னர்த்தான் அவன்றந்ததழையையேற்ற முகூர்த்தத்தைக் கொண்டாடியவாறு. மெய்ப்பாடு-உவகை. பயன்-மகிழ்தல். வேயினமென்றோளென்னுமதுதொட்டு இதுகாறும்வர இப்பாட்டுப்பத்தொன்பதும் அறத்தொடுநிலையினையும், அதன்பின்னர் வரைதலையுறுதலினையென்பது. (௯௭)

அகத்திணையின்மிகத்திகழுமின்பக்கலவியின்பக்களவுமுற்றிற்று எண்பத்தொராம்பாட்டுமுதல் இப்பாட்டீறாகத் தோழியாலாயகூட்டம்.

வழிபாடுகூறல்.

வழிபாடுகூறலென்பது - மணஞ்செய்தபின்னர் மணமனைகாணவந்தசெவிலிக்கு, காவலர் உடம்புமுயிரும்போல ஒருவரையொருவர் இன்றியமையாமையால் இவள்கருத்தைக்கடவார், கமலங்கலந்ததேனுஞ்சந்தனமாறும்போலவிளைந்து இவள்கற்புவழிநிற்றலையுடையராய் இவள்வழியே நின்றொழுகாநின்றாரெனத் தோழி தலைமகன்றலைமகள் வழியொழுகாநின்றமை கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

சீரியலாவியும்யாக்கையுமென்னச்சிறந்தமையாற் *
காரியல்வாட்கண்ணியெண்ணகலார்கமலங்கலந்த *
வேரியுஞ்சந்தும்வியறந்தெனக்கற்பினிற்பரன்னே *
காரியல்கண்டர்வண்டில்லைவணங்குமெங்காவலரே. (௯௮)

மணமனைகாண வந்தசெவிலிக்குத்
தணிமலர்க்குழலி தோழிசொல்லியது.

(இ-ள்.) அன்னாய், கார்போலுங்கண்டத்தையுடையவரது வளவியதில்லையைவணங்குமெம்முடைய காவலர், சீர்மையியலுமுயிருமுடம்பும்போல ஒருவரையொருவர் இன்றியமையாமையால், காரியவியல்பையுடைய வாள்போலுங் கண்ணையுடையாளது கருத்

தைக்கடவார், தாமரைப்பூவைச்சேர்ந்த தேனுஞ்சந்தனமரமும் இடத்துநிகழ்பொருளுமிடமுமாய் இயைந்து தம்பெருமையைப்புலப்படுத்தினாற்போல இயைந்து,இவளது வழிபாட்டில்கண்ணேநிற்பர் எ-று.

எண்ணைகலாமென்றதனாற் காதலியாதலும், கற்பினிற்பமென்றதனால் வாழ்க்கைத்துணையாதலுங்கூறப்பட்டன. ஆவியும்வேரியும் தலைமகட்குவமையாகவும், யாக்கையுஞ்சந்தும் தலைமகற்குவமையாகவுமுரைக்க. பிரித்துவமையாக்காது, இவரதுகூட்டத்திற்கு அவற்றதுகூட்டமுவமையாகவுரைப்பினுமமையும். காரியல்கண்டர்வண்டில்லைவணங்குமென்றதனான், இவரதில்வாழ்க்கை இன்றுபோல என்றும் நிகழுமென்பதுகூறினாளாம். இன்னேயென்பது பாட்டமாயின்,இப்பொழுதேயென்றுரைக்க. மெய்ப்பாடு- உவகை. பயன்-மகிழ்வித்தல். (௫௱௧)

வாழ்க்கைநலங்கூறல்.

வாழ்க்கைநலங்கூறலென்பது- மணமனைகண்டசெவிலி, மகிழ்வோடுசென்று,நின்மகளுடையவில்வாழ்க்கைநலத்திற்கு உவமைகூறில், நின்னுடையவில்வாழ்க்கைநலமல்லது வேறுவமையில்லையென நற்றாய்க்குத் தலைமகளது வாழ்க்கைநலங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

தொண்டினமேவுஞ்சுடர்க்கழலோன்றில்லைத்தொன்னகரிற் *
கண்டினமேவுமினியவனின்கொழுநன்செழுமென் *
றண்டினமேவுதிண்டோளவன்யானவடற்பணிவோள் *
வண்டினமேவுங்குழலாளயன்மன்னுமிவ்வயலே. (௫௱௨)

மணமனைச்சென்று மகிழ்தருசெவி லி
யணிமனைக்கிழத்திக் கதன்சிறப்புரைத்த து.

(இ-ள்.) தொண்டாதினத்தைப்பொருந்துஞ்சுடர்க்கழலையுடையவனது தில்லையாகிய பழையநகரிடத்தியான்கண்ட அவளதில்லம் மேவப்படு நமதில்லத்தோடொக்கும்,அவள் நின்னோடொக்கும், தண்டாகியவினத்தையொக்கும்வளவியவாய் மெல்லியவாகிய திண்ணியதோள்களையுடையான் நின்கொழுநனோடொக்கும், அவடன்னைப்பணிந்து குற்றேவல்செய்வாள் என்னோடொக்கும், வண்டினம்பொருந்துங்குழலையுடையாளதயல் இவ்வயலோடொக்கும்,வேறுசொல்லலாவதில்லை. எ-று.

கண்டவென்பது-கடைக்குறைந்துநின்றது.பெண்டிர்க்கு உள

நீணிதாதனோக்கித் தோளிற்குமென்மைகூறினார். தண்டினமெ
ன்புழி இனமென்றது-சாதியை. மன்னும் அசைநிலை. பெரும்பா
ன்மையுமென்பது படநின்றதெனினுமமையும். கண்டேனென்பத
னைத் தன்மைவினையென்று, அவளில்வாழ்க்கையேர்கண்டேனென
முன் பொருவகையாற்கூறிப் பின்சிறப்புவகையாற் கூறிற்றாகவு
ரைப்பாருமுளர். மெய்ப்பாடும் பயனும்-அவை. (௯௱௨)

காதல்கட்டுரைத்தல்.

காதல்கட்டுரைத்தலென்பது- அவளில்வாழ்க்கைநலங்கிடக்க அவன் அவண்மேல்வைத்தகாதலான் இவைபெயன்றிப் பொறையாமென்றுகருதி நுதலின்கண் இன்றியமையாத காப்பாகியபொட்டையுமணியான், இஃதவன்காதலெனத் தலைமகனதுகாதன்மிகுதி கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொட்டணியானுதல்போயிறும்பொய்போலிடையெனப்பூ *
ணிட்டணியான்றவிசின்மலரன்றிமிதிப்பக்கொடான் *
மட்டணிவார்குழல்வையான்மலர்வண்டுறுதலஞ்சிக் *
கட்டணிவார்சடையோன்றில்லைபோலிதன்காதலனே. (௯௱௩)

சோதி வேலவன்
காதல்கட்டுரைத்தது.

(இ-ள்.) மகுடமாகக் கட்டப்பட்ட அழகிய நீண்டசடையையுடையவனது தில்லையையொப்பாடன்னுடைய காதலன், பொய்போலுமிடைபோயிறுமென்றுகருதிப்பூணைப்பூட்டியணியான், மெல்லடிநோதலஞ்சித் தவிசின் மிதிப்புழியும் மலரினன்றி மிதிப்பவிடான், வண்டுற்றுமொய்த்தலஞ்சித் தேனையுடையவழகியவார்குழலிடத்துமலர்களைவையான், இவைசொல்லுகின்றதென்! பொறையாமென்றுநுதலின்கட்பொட்டையுமிடான். எ-று.

கட்டணிவார்சடையென்பதற்கு மிக்க அழகையுடைய சடையெனினுமமையும். தவிசின் மிசையென்று பாடமோதுவாருமுளர். (௯௱௫)

கற்பறிவித்தல்.

கற்பறிவித்தலென்பது-தலைமகனதுகாதன்மிகுதிகூறியசெவிலி, அதுகிடக்க, அவளவனையொழிய வேறொருதெய்வத்தைத் தெய்வமாகக்கருதாளாதலான், அவன்றன்னைவணங்காத பகைவரைச் சென்றுகிட்டித் திறைகொள்ளச்சென்றாலுந் திறைகொண்டுவந்து அவளில்லத்தல்லது ஆண்டுத்தங்கியறியான், இஃதவளதியல்

பெணக்கூறி நற்றாய்க்குத் தலைமகளது கற்பறிவியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தெய்வம்பணிகழலோன்றில்லைச்சிற்றம்பலமனையா *
டெய்வம்பணிந்தறியாளென்றுநின்றுதிறைவழங்காத் *
தெவ்வம்பணியச்சென்றாலுமன்வந்தன்றிச்சேர்ந்தறியான் *
பௌவம்பணிமணியன்னார்பரிசின்னபான்மைகளே. (௩௱௪)

விற்பொலி நுதலி
கற்பறி வித்தது.

(இ-ள்.) பிறரான்வழிபடப்படுந் தெய்வங்கள்வணங்குந் திருவடிகளையுடையவனது தில்லையிற்சிற்றம்பலத்தையொப்பாள், எஞ்ஞான்றும் வேறொருதெய்வத்தைப்பணிந்தறியாள், முன்னின்று திறைகொடாத பகைவர் வந்து பணியும்வண்ணம் வினைவயிற்சென்றாலும், அம்மன்னவன் அவளதில்லத்து வந்தல்லது ஆண்டுத்தங்கியறியான், பௌவந்தந்தமணிபோலப் பெருங்குலத்துப்பிறந்தாரியல்பு இன்னமுறைமைகளையுடைய. எ-று.

தெவ்வு-தெவ்வமென விரிக்கும்வழிவிரித்துநின்றது. தெவ்வம்பணியச்சென்றாலுமென்பதற்குத் தெவ்வர் அம்மையையணியவென்றும், பௌவம்பணி மணியென்பதற்குக் கடலிடத்தும் பாம்பிடத்துமுளவாகிய முத்தும் மாணிக்கமுமென்று முரைப்பாருமுளர். விற்பொலிநுதலி-விற்போலுநுதலி. (௩௱௪)

கற்புப்பயப்புரைத்தல்.

கற்புப்பயப்புரைத்தலென்பது- கற்பறிவித்தசெவிலி, அவள் அவனொழிபவணங்காமையின் அவனூருங்களிறும் வினைவயிற்சென்றால் அவ்வினைமுடித்துக் கொடுத்துவந்து தன்பந்தியிடத்தல்லது ஆண்டுத்தங்காதாதலான், அவளதுகற்பு, அந்திக்காலத்துவடமீனையும்வெல்லுமென அவளதுகற்புப்பயந்தமை நற்றாய்க்குக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சிற்பந்திகழ்தருதிண்மதிற்றில்லைச்சிற்றம்பலத்துப் *
பொற்பந்தியன்னசடையவன்பூவணமன்னபொன்னின் *
கற்பந்திவாய்வடமீனுங்கடக்கும்படிகடந்து *
மிற்பந்திவாயன்றிவைகல்செல்லாதவனீர்ங்களிறே. (௩௱௫)

கற்புப் பயந்த
அற்புத முரைத்தது.

(இ-ள்.) நற்றொழில் விளங்குந் திண்ணியமதிலையுடைய தில்லையிற்சிற்றம்பலத்தின்கணுள்ளனாகிய பொற்றகட்டுநிரைபோலுஞ்

சடையையுடையவனது பூவரைத்தையொக்கும்பொன்னினது கற்பு அந்திக்காலத்துளதாகிய வடமீனையும்வெல்லும், அதனானமைத்துக்கொண்டவினையையிடையூறின்றி யினிதின்முடித்து அவனூரும் மதத்தானீரியகளிறு நிலத்தைக்கடந்தும் இல்லின்கட்டன்புத்தியிடத்தல்லது தங்காது- எ-று.

பொற்பந்தியன்ன சடையென்பதற்கு அழகிய அந்திவானம்போலுஞ்சடையென்பாருமுளர். அந்திக்காலத்துக் கற்புடைமகளிரால்தொழப்படுதலின், அந்திவாய்வடமீனென்றாள். கற்புப்பயத்தவற்புதமாவது- படிகடந்துங் கடிதுவருமவண்ணம் எடுத்துக்கொண்டவினையையிடையூறின்றியினிதுமுடித்தல். (௯௰௫)

மருவுதலுரைத்தல்.

மருவுதலுரைத்தலென்பது-கற்புப்பயப்புரைத்தசெவிலி, வேந்தற்குற்றுழிப்பிரியினும் அவனூருந்தேரும் வினைமுடித்துத் தன்னிலையினல்லதுபுறத்துத்தங்காது, அவளும் அவனையொழியமற்றோர்தெய்வமும் மனத்தானினைந்தறியாள், இஃதிவர்காதலென அவ்விருவர்காதலுமருவுதல்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மன்னவன்றெம்முனைமேற்செல்லுமாயினுமாலரியே *
றன்னவன்றேர்புறத்தல்கல்செல்லாதுவரகுணனாந் *
தென்னவனேத்துசிற்றம்பலத்தான்மற்றைத்தேவர்க்கெல்லா *
முன்னவன்மூவலனாளுமற்றோர்தெய்வமுன்னலளே. (௯௰௬)

இருவர்காத லு
மருவுதலுரைத்த து.

(இ-ள்.) மன்னவனது பகைமுனைமேலேவப்பட்டுப்போமாயினும் பெரியவரியேற்றையொப்பானூருந்தேர் தன்னில்லையினல்லது புறத்துத்தங்காது, வரகுணனாகிய தென்னவனாலேத்தப்படுஞ் சிற்றம்பலத்தின்கண்ணான், தானல்லாதவரியயன்முதலாகியதேவர்க்கெல்லாம் முன்னேயுள்ளான், அவனது மூவலையொப்பாளும் வேறொருதெய்வத்தைத்தெய்வமாகக்கருதாள். எ-று.

மற்றைத்தேவர்கட்குமென்பதூஉம்பாடம். (௯௰௭)

கலவியின்பங்கூறல்.

கலவியின்பங்கூறலென்பது - இருவர்காதலுமருவுதல்கூறின செவிலி, இவ்விருவருடைய காதலுங்களிப்பும், இன்பவெள்ளத்திடையழுந்தப்புகுகின்றதோருயிர் ஓருடம்பாற்றுய்த்தலானுடை

யான் இரண்டுடம்பைக்கொண்டு, அவ்வின்பவெள்ளத்திடைக்கிடந்து, திளைத்ததனோடொக்கும், அதுவன்றி அவ்வின்பவெள்ளம் ஒருகாலத்தும் வற்றுவதும் முற்றுவதுஞ்செய்யாதென நற்றாய்க்கு அவரது கலவியின்பங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஆனந்தவெள்ளத்தழுந்துமொராருயிரீருருக்கொண் *
டானந்தவெள்ளத்திடைத்திளைத்தாலொக்குமம்பலஞ்சே *
ரானந்தவெள்ளத்தறைகழலோனருள்பெற்றவரி *
னானந்தவெள்ளம்வற்றாதுமுற்றாதிவ்வணிநலமே. (௩௱௭)

நன்னுதன்மடந்தை தன்னலங்கண் டு
மகிழ்ந்தாங்குளத்தோ டிகுளைகூறிய து.

(இ-ள்.) இருவரதுகாதலுங்களிப்பும், இன்பவெள்ளத்திடையழுந்தப்புகுகின்றதோருயிர் ஒருடம்பாற்றுய்த்தலாராமையின் இரண்டுடம்பைக்கொண்டு அவ்வின்ப வெள்ளத்திடைக்கிடந்து திளைத்ததனோடொக்கும், அதுவேயு மன்றி, அம்பலத்தைச்சேர்ந்த வின்பவெள்ளத்தைச்செய்யு மொலிக்குங்கழலையுடைத்தாகிய திருவடியையுடையவனதருளைப்பெற்றவரின்பம்போல இவ்வின்ப வெள்ளமும் ஒருகாலத்துங்குறைவுபடாது, இவ்வணிநலமுமுதிராது. எ-று.

இவையைந்திற்கும்மெய்ப்பாடு-உவகை. பயன்-மகிழ்தல். ௩௱௭
மணஞ்சிறப்புரைத்தல் முற்றிற்று.

ஓதற்பிரிவு.

இனி ஓதற்பிரிவென்பது-வரைந்துகொண்டபின்னர்த் தலைமகனுக்குமுதற்பிரிவு ஓதலாதலாற் கல்வியின்மிகுதிகூறி நீங்காநிற்றல். என்னை. "ஓதல் காவல் பகைதணி வினையே, வேந்தற் குற்றுழி பொருட்பிணி பரத்தையென், றாங்கவ் வாறே யவ்வயிற் பிரிவே," என்றோதப்படுதலின், ஓதற்பிரிவோதலாயிற்று. என்னை, இவ்வண்ணம் முன்னரோதலின்றி இவளைவரைந்தபின்னர் ஓதநின்றானோவெனின், அல்லன், முன்னறிவனைப் பொருவிறந்தானென்று கூறப்படுதலால் ஓதிமுடித்தானென்பது. இவன்றானோதியபுருடார்த்தமாகிய தருமார்த்த காமங்களையொழிய வேறும்புருடார்த்தமாகக் கூறப்படுவன உளவோவென்பதனை யாராயவேண்டுங்கருத்தினனாதலானும், கல்வியாற் றன்னிற்றாழ்ந்தாரைத் தனதுகல்விமிகுதிகாட்டி அவர்களையறிவித்தல் தருமநூல்விதியாதலானும், பிரியுமென்பவாகலின்.

அதுவருமாறு - சூத்திரம். கல்விநலங்கூறல் பிரிவுநினைவுரைத்தல்,கலக்கங்கண்டுரைத்தல் காதலர்தமது,வாய்மொழிகூறல் வருவனநான்குந்,தீமையில் கல்வி தேருங்காலே.

(இ-ள்.) கல்விநலங்கூறல்- பிரிவுநினைவுரைத்தல்-கலக்கங்கண்டுரைத்தல்- வாய்மொழிகூறித்தலைமகள்வருந்தல் எனவிவைநான்கும் ஓதற்பிரிவாம். எ-று. அவற்றுள்,

கல்விநலங்கூறல்.

கல்விநலங்கூறலென்பது - வரைந்துகொண்டபின்னர் ஓதற்குப்பிரிபவனாகிநின்றதலைமகன்,தலைமகளுக்குப் பிரிவுணர்த்துவானாக மிகவுங்கூற்றாற் கற்றோர் நன்மைக்கெல்லையில்லாத தன்மையராவரெனத் தோழிக்குக் கல்விநலங்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஈரளவில்லாத்திகழ்தருகல்விச்செம்பொன்வரையி *
னாரளவில்லாவளவுசென்றாரம்பலத்துணின்ற *
வோரளவில்லாவொருவனிருங்கழலுன்னினர்போ *
லேரளவில்லாவளவினராகுவரேந்திழையே. (கூஅ)

கல்விக்ககல்வர் செல்வத்தவரெனச்
செறிகுழற்பாங்கிக் கறிவறிவித்தது.

(இ-ள்.) ஏந்திழாய், நன்மைக்கெல்லையில்லாத விளங்குங்கல்வியாகிய மேருக்குன்றத்தினது மிக்கவளவில்லாதவெல்லையையடைந்தவர்கள் அம்பலத்தின்கணின்ற ஓரளவையுமில்லாதவொப்பில்லாதானுடைய பெரியதிருவடிகளையறிந்து நினைந்தவரைப்போல நன்மைக்கெல்லையில்லாத தன்மையராவர். எ-று.

செம்பொன்வரையென்றான், தூய்மையும் பெருமையுங் கலங்காமையுமுடைமையால். கற்றதின்மேலுங் கற்கநினைக்கின்றானாதலான்,ஆரளவில்லாவளவுசென்றாரென்றான். ஆரளவு-காதமும் புனையுமுதலாயின அளவு. ஓரளவென்பது-காட்சியும் அனுமானமுமுதலாயினவளவு. இது குறிப்பெச்சம். செல்வத்தவர்-இல்வாழ்க்கைச்செல்வத்தவர். அறிவறிவித்தது- அறியப்படுவதனையறிவித்தது. பாங்கியறிவறிவித்ததென்பது பாடமாயின்,தலைமகனதுகுறிப்பைக்கண்டு தோழி தலைமகட்குக் குறிப்பினாற்கூறினாளாகவுரைக்க. மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-பிரிவுணர்த்தல். (கூஅ)

பிரிவுநினைவுரைத்தல்.

பிரிவுநினைவுரைத்தலென்பது-கல்விநலங்கேட்டதோழி, அவன்

பிரிதற்குறிப்பறிந்து, மிகவுங்கற்றோர் நன்மைக்கெதிரில்லாத தன்மையராவரென்பதனையுட்கொண்டு, நின்புணர்முலையுற்ற புரவலர், அழற்கானத்தேபோய்க்கல்வியான்மிக்காரைக்கிட்டி அவரோடுசாவித் தங்கல்விமிகுதிபுலப்படுத்தப் பிரியாநின்றாரெனத் தலைமகன் ஓதற்குப் பிரிவுநினைந்தமை தலைமகளுக்குக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்

வீதலுற்றார்தலைமாலையன்றில்லைமிக்கோன்கழற்கே *
காதலுற்றார்நன்மைகல்விசெல்வீதருமென்பதுகொண் *
டோதலுற்றாருற்றுணர்தலுற்றார்செல்லன்மல்லழற்கான் *
போதலுற்றார்நின்புணர்முலையுற்றபுரவலரே. (௩௱௬)

கல்விக்ககல்வர் செல்வத்தவரெனப்
பூங்குழன்மடந்தைக்குப் பாங்கிபகர்ந்தது.

(இ-ள்.) செல்வீ, கெடுதலையடைந்தவர் தலையானியன்றமாலையையுடையான், தில்லைக்கணுளனாகிய பெரியோன், அவனுடைய திருவடிக்கேயன்புற்றாரது நன்மையைக் கல்வி தருமென்பதனைக் கருதி, ஓதுதலான் மிக்காரைக்கிடைத்து, எல்லா நூல்களையுமுணர்தலுற்று, நின்புணர்முலையைச்சேர்ந்தபுரவலர், இன்னாமையைச்செய்யும் மிக்கவழலையுடைய கானகத்தைப் போகநினைந்தார்-எ-று.

ஓத்தான் உயர்ந்தாரைக்கிடைத்து அவரோடுசாவித் தமதுகல்விமிகுதியையறியலுற்றாரென்றுரைப்பாருமுளர். உணர்தலுற்றாரென்பதனை முற்றாகவுரைப்பினுமமையும். நின்புணர்முலையுற்றவென்றதனான், முலையிடத்துத்துயிலைநினைந்து நீட்டியாது வருவரென்றும், புரவலரென்றதனான், நின்னலந்தொலையாமற் காப்பரென்றுங்கூறிப் பிரிவுடம்படுத்தாளாம். செல்வத்தவரென்றது-மீண்டுத்தலைமகனை. மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தபெருமிதம். பயன்-பிரிவுணர்த்துதல். (௩௱௬)

கலக்கங்கண்டுரைத்தல்.

கலக்கங்கண்டுரைத்தலென்பது-பிரிவுநினைவுரைப்பக்கேட்டதலைமகளது கலக்கங்கண்டதோழி, அன்பர் சொற்பாவிரும்பினரென்ன, அச்சொல் இவள்செவிக்கட் காய்ந்தவேல்போலச் சென்றெய்திற்று, இனி மற்றுள்ளபிரிவை எங்ஙனமாற்றுவளெனத் தன்னுள்ளேகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கற்பாமதிற்றில்லைச்சிற்றம்பலமதுகாதல்செய்த *
விற்பாவிலங்கலெங்கோனைவிரும்பலர்போலவன்பர் *

சொற்பாவிரும்பினரென்னமெல்லோதிசெவிப்புறத்துக் *
கொற்பாவிலங்கிலைவேல்குளித்தாங்குக்குறுகியதே. (௩௱௰)

ஓதற்ககல்வர் மேதக்கவென ப்
பூங்கொடிகலக்கம் பாங்கிகண்டுரைத்தது.

(இ-ள்.) கல்லாற்செய்யப்பட்ட பரந்தமதிலையுடைய தில்லைக்கட்சிற்றம்பலமதனைக்காதலித்த வில்லாகச்செய்யப்பட்ட பாந்தமலையையுடைய எம்முடையகோனை விரும்பாதாரைப்போல, நம்மன்பர் சொல்லானியன்ற பாவாகியநூல்களைக் கற்கவிரும்பினாரென்றுசொல்ல, அச்சொல் மெல்லோதியையுடையாளது செவிக்கட் கொற்றொழில்பரந்த விளங்குமிலையையுடைய வேல்சென்று மூழ்கினாற்போலச் சென்றெய்திற்று, இனிப்பிரிவையெங்ஙனமாற்றுமோ! எ-று.

பொருப்புவில்லிமேல்விருப்புடையார் கல்விக்கடனீந்திவருந்தாமையின் விரும்பலர்போலச்சொற்பாவிரும்பினரென்றாள். இனி வருந்தவென்பதோர்சொல்லைவிரித்து விரும்பலர்போல வருந்த அச்சொற்குறுகியதென்றுரைப்பினுமமையும். பூங்கொடிகலக்கம் பாங்கி தன்னுள்ளேசொல்லியது, தலைமகற்குக்கூறியதென்றுரைப்பாருமுளர். மெய்ப்பாடு - அழுகை. பயன் - செலவழுங்குவித்தல். (௩௱௰)

வாய்மொழிகூறித்தலைமகள்வருந்தல்.

வாய்மொழிகூறித்தலைமகள்வருந்தலென்பது - கலக்கங்கண்டுரைத்ததோழிக்கு, முன்னிலைப்புறமொழியாக நின்னிற்பிரியேன் பிரிவுமாற்றேனென்று சொன்னவர்தாமே பிரிவராயின், இதற்கு நாஞ்சொல்லுவதென்னோவெனத் தலைமகனது வாய்மொழிகூறித் தலைமகள்வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பிரியாமையுமுயிரொன்றாவதும்பிரியிற்பெரிதுந் *
தரியாமையுமொருங்கேநின்றுசாற்றினர்தையன்மெய்யிற் *
பிரியாமைசெய்துநின்றோன்றில்லைப்பேரியலூரரன்ன *
புரியாமையுமிதுவேயினியென்னாம்புகல்வதுவே. (௩௱௰௧)

தீதறுகல்விக்குச்செல்வன்செல்லுமெனப்
போதுறுகுழலி புலம்பியது.

(இ-ள்.) தையலாடனது திருமேனியினின்றும் பிரியாமையைச்செய்து நின்றவனது தில்லையிற் பெருந்தன்மையையுடைய ஊரர் நம்மிற்பிரியாமையையும், இருவருக்குமுயிரொன்றாதலையும்,

பிரியிற்பெரிதுமாற்றாமையையும் ஒருங்கே அக்காலத்து நம்மு ன்னின்று கூறினார், இப்பொழுது அவற்றாட் பிரியாமை பொய் யாகக்கண்டனமையின், உயிர்வேறுபடக்கருதுதலும் பிரிவாற்றாத லுமாகிய அன்னவற்றைச் செய்யாமையும் இப்பிரியாமையோ டொக்கும், இனிநாஞ்சொல்லுவதென்! எ-று.

தையன்மெய்யிற்பிரியாத பேரன்பினானது தில்லைக்கட்பயின் றும் அன்புபெறாது பிரிதல் எங்ஙனம்வல்லராயினாரொன்றுங்கரு த்தால், பிரியாமைசெய்துநின்றோன்றில்லைப்பேரியலூரனொன்றா ள். பிரிவுகாணப்பட்டமையின், அன்னவென்றது ஒழிந்தவிரண் டையும்மையாம். அன்னபுரியாமையுமிதுவேயென்பதற்குப் பிரி வுமுதலாகிய நமக்கின்னாதவற்றைத் தாம் செய்யாமையுமிதுவே யாயிருந்ததெனினுமமையும். இன்னல்புரியாமையு மிதுவேயெ ன்று பாடமோதுவாருமுளர். மெய்ப்பாடும் பயனும்- அவை.()

ஓதற்பிரிவு முற்றிற்று.

காவற்பிரிவு.

இனிக்காவற்பிரிவென்பது எல்லாவுயிர்களையும் அரசன் பாது காக்கவென்னுந்தருமநூல்விதியான் அக்காவற்குப் பிரிதல்.

அதுவருமாறு- சூத்திரம். பிரிவறிவித்தல் பிரிவுகேட்டிரங்கல், வருபவையிரண்டும் வையங்காவல்.

(இ-ள்.) பிரிவறிவித்தல்- பிரிவுகேட்டிரங்கல் எனவிவையிரண் டுங் காவற்பிரிவாம். எ-று. அவற்றுள்,

பிரிவறிவித்தல்.

பிரிவறிவித்தலென்பது-தருமநூல்விதியால் நமர்உலகத்தைப் பாதுகாப்பான்பிரியக் கருதாநின்றாரெனத் தலைமகன் காவலுக்கு ப்பிரியக்கருதாநின்றமை தோழி தலைமகளுக்கறிவியாநிற்றல். அ தற்குச்செய்யுள்.

மூப்பானிளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள் *
வீப்பான் வியன்றில்லையானருளால் விரிநீருலகங் *
காப்பான் பிரியக்கருதுகின்றார் நமர் கார்க்கயற்கட் *
பூப்பானலமொளிரும்புரிதாழ்குழற்பூங்கொடியே. (ருஎஉ)

இருநிலங்காவற் கேகுவர்நமரெனப்
பெருஞ்சுடர்வேலோன் போக்கறிவித்தது.

(இ-ள்.) கரியகயல்போலுங்கண்ணிணையும், பூவின்கண் நறுநா
ற்றமுடைமையாகிய நன்மைவிளங்குஞ் சுருண்டதாழ்ந்தகுழலையு
முடைய பூங்கொடியையொப்பாய், எல்லார் யாக்கைக்கும்முன்
னே தனதிச்சையாற்கொள்ளப்பட்டதிருமேனியையுடையனாதலி
னெல்லார்க்குந்தான்மூப்பான், பின்றோன்றியயாக்கையையுடை
யாரெல்லாரும் மூப்பவும் தான் நிலைபெற்றவிளமையையுடைய
னாதலினெல்லார்க்குமிளையான், உலகத்திற்குமுன்னுள்ளோன், அ
தற்குப்பின்னுமுள்ளோன், மூன்றுபுரங்களையுங்கெடுப்பான், அக
ன்றநிலைக்கண்ணான், அவனேவலால் நமர்விரிந்தநீராற் சூழப்ப
ட்டவுலகத்தைக் காக்கவேண்டிப் பிரியக்கருதாநின்றார் எ-று.

இல்லையானேவலாவது-எல்லாவுயிர்களையுமரசன் காக்கவென்னு
ந்தருமநூலவிதி. காத்தலாவது-தன்வினைசெய்வாரானுங் கள்வரா
னும் பகைவரானும் உயிர்கட்குவருமச்சத்தை நீக்குதல். இல்லையா
னருளாலென்பதற்கு அவனதருளானுலகத்தைக்காக்குந் தன்மை
யையெய்தினானாதலின் அக்காவற்குப்பிரிகின்றானென் றுரைப்பி
னுமமையும். மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்த பெருமிதம்.
பயன்-காவற்குப்பிரியும்பிரிவுணர்த்துதல். (௩௱௰௨)

பிரிவுகேட்டிரங்கல்.

பிரிவுகேட்டிரங்கலென்பது-பிரிவறிவித்ததோழிக்கு, முற்கால
த்துக் குரவர்களாற் பாதுகாக்கப்படு நம்மைவந்து யானையெ
றப்புக், அதனைவிலக்கி நம்முயிர்தந்தவர், இன்று தம்மல்லதில்
லாத இக்காலத்துத் தாம் நினைந்திருக்கின்றதிதுவோ, இது தமக்கு
த்தகுமோவெனத் தலைமகனதுபிரிவுகேட்டுத் தலைமகளிரங்கோதி
ற்றல். அதற்குச்செய்யுள்.

சிறுகட்பெருங்கைத்திண்கோட்டுக்குழைசெவிச்செம்முகமாத் *
தெறுகட்டழியமுன்னுய்யச்செய்தோர்க்குருப்புச்சிலையோ *
னுறுகட்டழலுடையோனுறையம்பலமன்னலரிற் *
றுறுகட்புரிகுழலாயிதுவோவின்றுசூழ்கின்றதே. (௩௱௰௩)

மன்னவன்பிரிவு நன்னுதலறிந் து
பழங்கணெய்தி யழுங்கல்சென்ற து.

(இ-ள்.) பூவிற்றேனையுடைய நெருங்கியசுருண்டகுழலையுடை
யாய், சிறியகண்ணிணையும், பெரியகையிணையும், திண்ணியகோட்டி
னையும், குழைந்தசெவியினையும், சிவந்தமுகத்தினையுமுடைய யா

ணையினது வருத்தும்வளைப்புக்கெடக் குரவராற்பாதுகாக்கப்படு நூற்காலத்து நம்மையுய்வித்தவர், கருப்புவில்லையுடை யவனைச் சென்றுற்ற கண்ணீற்றீயையுடையவனுறையும் அம்பலத்தையுண் டாரைப்போலக் கண்ணோட்டமின்றித் தம்மலதில்லாத இக் காலத்து நினைக்கின்றதிலுமோ! இதுதகுமோ! எ-று.

கருப்புச்சிலையோனென்பதனை எழுவாயாக்கியுரைப்பினுமமையும். தெறுகட்டழீஇமுன்னமுய்யச்செய்தோனென்பது பாடமாயின், தெறுகின்றவிடத்துத் தழுவி முன்னம்மையுய்வித்தவனென்றுரைக்க. மெய்ப்பாடு-அழுகை. பயன்-செலவழுங்குவித்தல். ()

காவற்பிரிவு முற்றிற்று.

பகைதணிவினைப்பிரிவு.

இனிப் பகைதணிவினைப்பிரிவென்பது- தம்மிற்பகைத்தவேந்தரைப் பகையைத்தணித்து இருவரையும்பொருந்தப்பண்ணுதல்.

அதுவருமாறு-சூத்திரம். பிரிவுகூறல் வருத்தந்தணித்தல், இருபகை தணித்தற்கேகலென்ப.

(இ-ள்.) பிரிவுகூறல் - வருத்தந்தணித்தல் எனவிவையிரண்டும், பகைதணிவினைப்பிரிவாம். எ-று. அவற்றுள்,

பிரிவுகூறல்.

பிரிவுகூறலென்பது- ஒருவரதுள்ளமிகுதியை ஒருவர்தணித்தற்கரிதாகிய இருவேந்தர் தம்முட்பகைத்து உடன்மடியப்புகுதாநின்றாரெனக்கேட்டு, அவ்விருவரையுமடக்கவல்ல திறலுடையராதலின், அவரைப்பகைதணித்து அவர் தம்மிலொன்றுபடவேண்டி நின்னைப்பிரியக்கருதாநின்றாரெனத் தலைமகன் பகைதணிக்கப்பிரியலுறாநின்றமை தோழி தலைமகளுக்குக்கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்.

மிகைதணித்தற்கரிதாமிருவேந்தர்வெம்போர்மிடைந்த *
பகைதணித்தற்குப்படர்தலுற்றார்நமர்பல்பிறவித் *
தொகைதணித்தற்கென்னையாண்டுகொண்டோன்றில்லைச்சூழ்பொழில்வாய் *
முகைதணித்தற்கரிதாம்புரிதாழ்தருமொய்குழலே. (௩௱௰௪)

துன்னுபகைதணிப்ப மன்னவன்பிரிவு
நன்னறுங்கோதைக்கு முன்னிமொழிந்தது.

(இ-ள்.) பொருளினாதலின் தாமளிக்குமிடத்துப் பலபிறவித்தொகையான்வருங்கழிபெருந்துன்ப முடையாரையேவேண்டு

தலின் என்னையடிமைக்கொண்டவனது தில்லைக்கட்சூழ்ந்தபொழிலிடத்துள்ளவாகிய போதுகளாற்றனது நறுநாற்றமாந்துதற்கரிதாஞ் சுருண்ட தாழ்ந்த நெநங்கிய குழலையுடையாய், ஒருவருள்ளமிகுதியை ஒருவர்தணித்தற்கரிதாகாநின்ற இருவேந்தரது வெய்யபோர் நெருங்கிய பகையை மாற்றுதற்கு, நமர் போகநினைந்தார் எ-று.

எளிதினிற்சந்துசெய்வித்துக் கடிதின்மீள்வரென்பது பயப்ப, மிகைதணித்தற்கரிதாமிருவேந்தரென்றதனால் ஒத்தவலியினராதலும், வெம்போர்மிடைந்தவென்றதனால் ஒத்ததொலைவினராதலுங்கூறினாளாம். மிகைதணித்தற்கரிதாம்பகையெனவியையும். மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தபெருமிதம். பயன் - பகைதணிவினையிடைப்பிரிவுணர்த்துதல். (கூ௱௰௪)

வருத்தந்தணித்தல்.

வருத்தந்தணித்தலென்பது-தலைமகனதுபிரிவுகேட்டு உள்ளுடைந்து தனிமையுற்றுவருந்தாநின்றதலைமகளை, நின்னைவிட்டு அவர்பிரியார், நீ நெருப்பையுற்றவெண்ணெயும் நீரையுற்றவுப்பும் போல இவ்வாறுருகித் தனிமையுற்று வருந்தாதொழியெனத் தோழி அவளதுவருத்தந்தணியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

நெருப்புறுவெண்ணெயுநீருறுமுப்புமெனவிங்ஙனே *
பொருப்புறுதோகைபுலம்புறல்பொய்யன்பர்போக்குமிக்க *
விருப்புறுவோரைவிண்ணோரின்மிகுத்துநன்னூர்கழியத் *
திருப்புறுசூலத்தினோன்றில்லைபோலுந்திருநுதலே. (கூ௱௰௫)

மணிப்பூண்மன்னவன் றணப்பதில் லை
அஞ்சல்பொய்யென வஞ்சியைத்தணித்த து.

(இ-ள்.) தன்கண் மிக்கவிருப்புறுமவரை விண்ணோரினு மிகச்செய்து பகைவர் மாய விதிர்க்கப்படுஞ்சூலவேலையுடையவனது தில்லையையொக்குந் திருநுதால், பொருப்பைச்சேர்ந்த மயில்போல்வாய், தீயையுற்றவெண்ணெயும் நீரையுற்றவுப்பும்போல இவ்வாறுருகித் தனிமையுறு தொழி, அன்பர்போக்குப்பொய். எ-று.

மிகுத்தென்னும் வினையெச்சம்-திருப்புறுசூலமென்புழித் திருப்பென்பதனோடுமுடிந்தது. மெய்ப்பாடு - பெருமிதம். பயன்-தலைமகளையாற்றுவித்தல். (கூ௱௰௫)

பகைதணிவினைப்பிரிவுமுற்றிற்று.

வேந்தற்குற்றுழிப்பிரிவு.

இனி வேந்தற்குற்றுழிப்பிரிவென்பது-ஒருவேந்தனுக்கோரு வேந்தன்றொலைந்துவந்தடைந்தால் அவனுக்குதவிசெய்யப்பிரியாநிற்றல்.

அதுவருமாறு- சூத்திரம்- பிரிந்தமைகூறல் பிரிவாற்றாமை, கார்மிசைவைத்தல் காரைநோக்கி, வருந்தியுரைத்தன் மலர்க்குழலிவை, கூதிர்கண்டுகவறல் குளிர்முன்பனிக்கவ, ணொந்துகூற நோக்கிப்பின்பனிக், இரங்கியுரைத்த இளவேனில்கண்டவ, ளின்னலெய்த விதுவவர்குறித்த, பருவமாமென வரவுகூறல், பருவமறைத்துரைத்தன் மறுத்துரைத்தலொடு, தேர்வரவுகூறல் வினைமுற்றிநினைத, னில்லைமைநினைந்துரைத்தன் முகிலொடுகூறல், வரவெடுத்துரைத்தன் மறவாமைகூறன்; மற்றிவையீரெட்டுமுற்றுழிப்பிரிவாம்.

(இ-ள்.) பிரிந்தமைகூறல்- பிரிவாற்றாமை கார்மிசைவைத்தல்- வரநோக்கிவருந்தல்- கூதிர்கண்டுகவறல்- முன்பனிக்குநொந்துரைத்தல்- பின்பனிநினைந்திரங்கல் - இளவேனில்கண்டின்னலெய்தல்- பருவங்காட்டிவற்புறுத்தல்- பருவமன்றென்றுகூறல்- மறுத்துக்கூறல்- தேர்வரவுகூறல்- வினைமுற்றிநினைதல்- நிலைமைநினைந்துகூறல்- முகிலொடுகூறல்- வரவெடுத்துரைத்தல்- மறவாமைகூறல் எனவிவைபதினாறும் வேந்தற்குற்றுழிப்பிரிவாம். எ-று. அவற்றுள்,

பிரிந்தமைகூறல்.

பிரிந்தமைகூறலென்பது- தம்மைவந்தடைந்தவேந்தனுக்குத் தாமுதவிசெய்வாராக வெய்யபோரையுடையபாசறைமேல் நமர் சென்றார், இனியவ்வேந்தன் பகைவரானிடப்பட்டமதில் இன்றென்றுமுடியுமோவெனத் தலைமகன் வேந்தற்குற்றுழிப்பிரிந்தமை தோழி தலைமகளுக்குக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

போதுகுலாயபுனைமுடிவேந்தர்தம்போர்முனைமேன் *
மாதுகுலாயமென்னோக்கிசென்றார்நமர்வண்புலியூர்க் *
காதுகுலாயகுழையெழிலோனைக்கருதலர்போ *
லேதுகொலாய்விளைகின்றதின்றொன்னார்மதிலே. (௩௱௰௩)

விறல்வேந்தர் வெம்முனைக்க ட்
டிறல்வேந்தர் செல்வவொன்ற து.

(இ-ள்.) மடவழகுபெற்ற மெல்லியநோக்கத்தையுடையாய், பூவழகுபெற்ற பேணிச்செய்யப்பட்ட முடியையுடையவேந்தர்

தமது போராயுடைய பாசறைமேல், நமர் சென்றார். வளவியபுலியூரிற் காதழகுபெற்றகுழையா னுண்டாகிய எழிலையுடையவனைக் கருதாதாரைப்போல ஒன்னாரால்விடப்பட்ட மதில் இன்றியாதாய்முடியுமோ! எ-று.

வினைமுடித்துக்கடிது மீள்வனென்பது பயப்ப,ஒன்னார்மதிலின்றேயழியுமென்று கூறினாளாம். கொல்லென்பது அசைநிலை. சென்றாரென்றது துணிவுபற்றி இறந்தகாலத்தாற்கூறினாள். திறல்வேந்தனென்றது,சாதிபற்றியன்று தலைமைபற்றி. மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தபெருமிதம். பயன்- வேந்தற்குற்றுழிப்பிரிவுணர்த்துதல். (ருஅயசு)

பிரிவாற்றாமைகார்மிசைவைத்தல்.

பிரிவாற்றாமைகார்மிசைவைத்தலென்பது-பிரிவுகேட்டதலைமகள்,தனதுவருத்தங்கண்டு காதலர்வினைவயிற்பிரிய நீவருந்தினால் வினைமுடியுமாறென்னேயென்றதோழிக்கு,யானவர்பிரிந்ததற்கு வருந்துகின்றேனல்லேன், இக்கார்முகில்சென்று அப்பாசறைக்கண்ணே தோன்றுமாயின்,நம்மைநினைந்தாற்றாராய், அவ்வினைமுடிக்கமாட்டாரென்று அதற்குவருந்துகின்றேனெனக் கார்மிசைவைத்துத் தனதுவருத்தங்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொன்னிவளைத்தபுனல்சூழ்நிலவிப்பொலிபுலியூர் *
வன்னிவளைத்தவளர்சடையோனைவணங்கலர்போற் *
றுன்னிவளைத்தநந்தோன்றற்குப்பாசறைத்தோன்றுங்கொலோ *
மின்னிவளைத்துவிரிநீர்கவரும்வியன்முகிலே. (ருஅயஎ)

வேந்தற்குற்றுழி விறலோன்பிரி யு
ஏந்திழைபாங்கிக் கெடுத்துரைத்த து.

(இ-ள்.) பொன்னி சுற்றுதலா னுண்டாகிய புனலாற்சூழப்பட்டு நிலைபெற்றுப்பொலிகின்றபுலியூரில் வன்னித்தளிராற் சூழப்பட்ட நெடியசடையையுடையவனை வணங்காதாரைப்போல இடர்ப்படப் பகைவரைக்கிட்டிச் சூழ்போகிய நம்முடையதோன்றற்கு மின்னிபுலகத்தைவந்துவளைத்துப் பரந்தகடலைப்பருகும் பெரியமுகில் பாசறைக்கண்ணே சென்றுதோன்றுமோ! எ-று.

வளைத்தலை விரிநீர்மேலேற்றினுமமையும். தோன்றுமாயின் அவர் ஆற்றாராவரென யானாற்றேனாகின்றேனென்பது கருத்து. பொன்னிவளைத்தபுனலென்பதற்குப் பொன்னியாற்றகைப்பட்டபுனலென்றும், வன்னிவளைத்தவென்பதற்குத் தீயைவளைத்தா

ந்போலுஞ்சடையென்றுமுரைப்பாருமுளர். மெய்ப்பாடு- அழுகை. பயன்-ஆற்றுவித்தல். (௩௱௰௭)

வானோக்கிவருந்தல்.

வானோக்கிவருந்தலென்பது-உற்றுழிப்பிரிந்த தலைமகன், பார்ப்புக்களோடு பெடைக்குருகைச்சேவல் தன்சிறகானொடுக்கிப் பனியான்வரும் மிக்ககுளிரைப்பாதுகாக்கின்ற இராவின்கண் எனது போதரவு அவளுக்கென்னுங்கொல்லோவெனத் தலைமகளது வடிவைநினைந்து வானைநோக்கி வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கோலித்திகழ்சிறகொன்றினொடுக்கிப்பெடைக்குருகு *
பாலித்திரும்பனிபார்ப்பொடுசேவல்பயிலிரவின் *
மாலித்தனையறியாமறைபோனுறையம்பலமே *
போலித்திருநுதலாட்கென்னதாங்கொலென்போதரவே.௩௱௰௮

மானோக்கி வடிவுநினைந்தோன்
வானோக்கி வருந்தியது.

(இ-ள்.) பார்ப்புக்களோடு பெடைக்குருகை விளங்காநின்றசிறகொன்றினாற்கோலியொடுக்கிப் பாதுகாத்துக் கொண்டற்றுவலையால்வரும் மிக்ககுளிரைச் சேவல் தானுழக்குமிரவின்கண், மாலாற்சிறிதுமறியாதஅந்தணனுறையும் அம்பலத்தைப்போல்வாளாகிய திருநுதலாட்குஎனதுபோதரவுஎத்தன்மையதாகுமோ! எ-று.

இரவினெனலாதாமெனவியையும். நாம் இக்காலத்து நங்காதலிக்குப் பனிமருந்தாயிற்றிலேமென்னும் உள்ளத்தானாகலின், பெடையொடுக்கிய சிறகைத் திகழ்சிறகெனப் புனைந்துகூறினான். போலித்திருநுதலாட்கென்பதற்கு அம்பலம்போலும் இத்திருநுதலாட்கென்றுரைப்பினுமமையும், இத்திருநுதலாளென்றான், தன்னெஞ்சத்துளாகலின். மெய்ப்பாடு-அச்சம். பயன்-மீடற்கொருப்படுதல். (௩௱௰௮)

கூதிர்கண்டுகவறல்.

கூதிர்கண்டுகவறலென்பது-விழாநின்றபனியிடத்து எல்லாரும் நெருப்புத்திரளைமேவாநிற்ப மலைத்திரளையேறித் துணையில்லாதாரைத்தேடும் புயலினம் நமக்கேயன்றித் தம்மையடைந்தார்க்குதவிசெய்யச்சென்றார்க்குஞ் சென்றுபொருந்துமோ, பொருந்துமாயின், நம்மைநினைந்து ஆற்றாராய், அவ்வினைமுடிக்கமாட்டாரெனத்தலைமகள் கூதிர்கண்டுகவலாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கருப்பினமேவும்பொழிற்றில்லைமன்னன்கண்ணாரருளால் [ய்
விருப்பினமேவச்சென்றார்க்குஞ்சென்றல்குக்கொல்வீழ்பனிவா
நெருப்பினமேநெடுமாலெழிற்றோன்றச்சென்றாங்குநின்ற *
பொருப்பினமேறித்தமியரைப்பார்க்கும்புயலினமே. (௩௱௰௯)

இருங்கூதி ரெதிர்வுகண் டு
கருங்குழலி கவலையுற்ற து.

(இ-ள்.) விழாநின்றபனியிடத்து எல்லாரும் நெருப்புத்திரளை மேவாநிற்ப நெடியமாயவனதெழில் கண்டார்க்குப்புலப்படச்சென்று அவ்விடத்துநின்ற மலைத்திரளையேறித் துணையில்லாதாரைத்தேடும் புயலினங்கள், கருப்புத்திரள்பொருந்தும்பொழிலையுடைய தில்லையின்மன்னவன்கண்ணுண்டாகிய மிக்கவருளான் விருப்பையுடைய தம்மினந் தம்மாலுதவிபெற்றுப் பொருந்துமவண்ணஞ் சென்றார்க்குஞ் சென்றுதங்குமோ! எ-று.

அல்குதலான்வருந்துயருறுதனோக்கிச் சென்றார்க்குமென நான்காவதனாற்கூறினாள். நெருப்பினமேயென்பதனைப் புயன்மேலேற்றி இடிநெருப்பென்றும், சென்றென்பதனை மலைமேலேற்றி உயர்ந்தென்றும், உரைப்பினுமமையும். மெய்ப்பாடு - அழுகை. பயன் - தோழியையாற்றுவித்தல். (௩௱௰௯)

முன்பனிக்குநொந்துரைத்தல்.

முன்பனிக்குநொந்துரைத்தலென்பது - மக்களேயன்றிப் புள்ளுந்தம்பெடையைச் சிறகாலொடுக்கிப் பிள்ளைகளையுந்தழுவி இனஞ்சூழ வெருவாது துயிலப்பெறுகின்ற இம்மயக்கிருட்கண், இடையறாது விழாநின்ற பனியிடைக்கிடந்து வாடித் துயர்வாயாக வென்று என்னைப்பெற்றவளை நோவதல்லது யான் யாரைநோவேனென முன்பனிக்காற்றாது தாயொடுநொந்துகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சுற்றினவீழ்பனிதாங்கத்துவண்டுதுயர்கவென்று *
பெற்றவளேயெனைப்பெற்றாள்பெடைசிறகாலொடுக்கிப் *
புற்றிலவாளரவன்றில்லைப்புள்ளுந்தம்பிள்ளைதழீஇ *
மற்றினஞ்சூழ்ந்துதுயிலப்பெறுமிம்மயங்கிருளே. (௩௱௨௰)

ஆன்றபனிக்காற்றாதழி ந்
தீன்றவளை யேழைநொந்தது.

(இ-ள்.) புற்றையுடையவல்லாத ஒளியையுடையபாம்பையணிந்தவனது தில்லையின் மக்களேயன்றிப் புள்ளும் பெடையைச்சி

றகாலொடுக்கித் தமதுபிள்ளைகளையுந் தழுவி இன்றுஞ்சூழ்ந்து வெருவாது துயிலப்பெறுகின்ற இச்செறிந்தவிருட்கண்ணே மேனியெக்குஞ்சுற்றி வீழாநின்ற பனி இடையறாதுநிற்ப, அதற்கோர்மருந்தின்றித் துயர்வாயாகவென்று, என்னையீன்றவளே ஈன்றுள், இனி யான் யாரைநோவது! எ-று.

சுற்றின தூங்க வெனவினையையும். மயங்கிருட்கட்டுயர்வாயாகவெனக் கூட்டுக. சுற்றினவென்பது பெயரெச்சமுமாம். மற்று - அசைநிலை. புற்றிலவாளரவனென்பதற்கு முன்னுரைத்ததுரைக்க. மெய்ப்பாடு- அது. பயன்- ஆற்றாமைநீக்குதல். (௩௨௰)

பின்பனிநினைந்திரங்கல்.

பின்பனிநினைந்திரங்கலென்பது- இப்பெரியபனி வையமெங்கும்பரந்து துவலைகளைப்பரப்பியவாறு அவள்பொறுக்குமளவன்று, அவளைச்சொல்லுகின்றதென், எனக்குமாற்றதலரிதென்பதுபோதர, மிக்கதனிமையையுடையார்க்கு இப்பனி, வான் சரத்தைத்தருமாயின், அதனோடொக்குமெனத் தலைமகன் தலைமகள் துயரநினைந்திரங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

புரமன்றயரப்பொருப்புவில்லேந்திப்புத்தேளிர்நாப்பட் *
சிரமன்றயனைச்செற்றோன்றில்லைச்சிற்றம்பலமனையாள் *
பரமன்றிரும்பனிபாரித்தவாபரந்தெங்கும்வையகஞ் *
சரமன்றிவான்றருமேலொக்குமிக்கதமியருக்கே. (௩௨௧)

இரும்பனியி னெதிர்வுகண் டு
சுரும்பிவர்குழலி துயரநினைந்த து.

(இ-ள்.) பெரியபனி வையமெங்கும்பரந்து துவலைகளைப்பரப்பியவாறு தில்லையிற்சிற்றம்பலத்தையொப்பாளதளவன்று, மிக்கதனிமையையுடையார்க்கு இப்பனி, உயிர்கவரவெகுண்டு, வான்சரத்தைத்தருமாயின், அதனோடொக்கும். எ-று. புரம்வருந்த அன்று பொருப்பாகியவில்லையேந்தித் தேவர்நடுவே அவர்க்குத்தலைவனாகிய அயனையன்றுசிரமரிந்தவனது தில்லைச்சிற்றம்பலமெனக்கூட்டுக.

பரந்தெங்குந்தருமேலென்றியைப்பினுமமையும். இக்காலத்து அவளாற்றாமை சொல்லவேண்டுமோ எனக்குமாற்றதலரிதென்பது போதரத் தமியருக்கெனப்பொதுமையாற்கூறினான். இதனைத் தோழிகூற்றாகவுரைப்பாருமுளர். மெய்ப்பாடு- அது. பயன் தலைமகளையாற்றுவித்தல்.
(௩௨௨)

இளவேனில்கண்டின்னலெய்தல்.

இளவேனில்கண்டின்னலெய்தலென்பது-மேன்மேலுந்திறம் பெற்றிருளாநின்ற இக்குயில்கள், மாம்பொழிலைச் சுற்றும்வந்து பற்றின, இனியுயிர்வாழுமாறென்னென்று இளவேனிலைக்கண்டு தலைமகள் இளவேனில்கண்டின்னலெய்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வாழும்படியொன்றுங்கண்டிலம்வாழியிம்மாம்பொழிற்றேன் *
சூழுமுகச்சுற்றும்பற்றினவாற்றொண்டையங்கனிவா *
யாழின்மொழி மங்கைபங்கன்சிற்றம்பலமாதரியாக் *
கூழின்மலிமனம்போன்றிருளாநின்றகோகிலமே. (௯௨)

இன்னிளவேனின் முன்னுவதுகண் டு
மென்னகைப்பேதை யின்னலெய்தி து.

(இ-ள்.) அழகியதொண்டைக்கனிபோலும் வாயினையும், யாழோசைபோலுமினிய மொழியினையுமுடைய மங்கையது கூற்றையுடையானது சிற்றம்பலத்தைவிரும்பாத உணவாற்செருக்கு மனம்போல, ஒருகாலைக்கொருகால் திறம்பெற்றிருளாநின்ற குயில்கள், இம்மாம்பொழிற்கட்டுடைதலாற் றேன்சுற்றுமுகமெங்கும்வந்துபற்றின, இனியுயிர்வாழுமாறொன்றுங்கண்டிலேம். எ-று.

வாழியென்றது-வாழ்வாயாகவென்னும்பொருட்டாய் எதிர்முகமாக்கிநின்றது தேன்சூழுமுகைச்சுற்றும்பற்றினவென்பதுபாடமாயின், மலருமளவுங்காலம்பார்த்துத் தேன்கள்சூழுமுகையெங்க. மெய்ப்பாடு-அது. பயன்-ஆற்றாமைநீங்குதல். (௯௨)

"கிழவி நிலையே வினையிடத் துரையார்-வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்." என்பதனான், இக்கிளவியைய்ந்தும் காலங்காட்டவேண்டி இத்துறையுட் கூறினாரென்பது கருத்தாகக்கொள்க.

பருவங்காட்டிவற்புறுத்தல்.

பருவங்காட்டிவற்புறுத்தலென்பது-தலைமகன் தான்வருதற்குக் குறித்துப்போகிய கார்ப்பருவத்தின துவரவுகண்டு கலங்காநின்ற தலைமகளுக்கு, இக்கார்வந்து வானிடத்துப்பாந்தமையால், நம்மைமகலந்தவாதுதேர் இன்றாக நாளையாக இங்கேவாராநிற்பக்காணப்படுவதே இனியுள்ளதெனத் தோழி அப்பருவந்தன்னையே காட்டி, அவளைவற்புறுத்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பூண்பதென்றேகொண்டபாம்பன்புலியூரன்மிடற்றின் *
மாண்பதென்றேபெணவானின்மலருமணந்தவர்தேர் *
காண்பதன்றேயின்றுநாளையிங்கேவரக்கார்மலர்த்தேன் *
பாண்பதன்றேர்குழலாயெழில்வாய்த்தபனிமுகிலே. (௩௨௩)

கார்வருமெனக்கலங்குமாதனைத்
தேர்வருமெனத் தெளிவித்தது.

(இ-ள்.) கார்காலத்து மலர்வாயூறுந்தேன் பாட்டினதுசெவ்வி யையாராயுங் குழலையுடையாய், பூணப்படுமணியென்றேகொள்ள ப்பட்ட பாம்பினையுடையான், புலியூரான், அவனதுமிடற்றினழ கதாமென்றுகருதும்வண்ணம் எழில்வாய்த்தலையுடையவாகிய ப னிமுகில்கள்வானிடத்துப்பரவாநின்றன, அதனான், நம்மைக்கல ந்தவரதுதேர் இன்றாக நாளையாக இங்கேவாராநிற்பக்காணப்படு வதல்லவே, இனியாற்றாயாகற்பாலையல்லை எ-று.

தேரிங்கேவருவதனைக்கா ணுபதல்லவே இனியுள்ளதெனமொ ழிமாற்றிபுணாப்பினுமமையும். காண்பதென்பதூஉம், எழிலாய வென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தபெரு மிதம். பயன்-தலைமகளைவற்புறுத்தல். (௩௨௩)

பருவமன்றென்றுகூறல்.

பருவமன்றென்றுகூறலென்பது-காரும் வந்தது காந்தளும்ம லராநின்றன காதலர் வாராதிருந்ததென்னோவென்று கலங்காநின் றதலைமகளுக்கு, சிற்றம்பலத்தின்கண்ணே குடமுழாமுழங்க அ தனையறியாது காரென்றுகொண்டு இக்காந்தண்மலர்ந்தன, நீயித னைப்பருவமென்றுகலங்காதொழியெனத் தலைமகன் வரவுநீட்டித் தலால் தோழி அவள்கலக்கந்தீரப் பருவத்தைப் பருவமன்றென் றுகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தெளிதரற்காரெனச்சீரனஞ்சிற்றம்பலத்தடியேன் *
களிதரக்கார்மிடற்றோனடமாடக்கண்ணார்முழவந் *
துளிதரற்காரெனவார்த்தனவார்ப்பத்தொக்குல்குழல்போன் *
றளிதரக்காந்தளும்பாந்தளைப்பாரித்தலர்ந்தனவே. (௩௨௪)

காரெனக்கலங்கு மேமொழிற்கண்ணி
இன்றனைத்தோழியன்றென்றுமறுத்தது.

(இ-ள்.) அடியேன் களிப்பையுண்டாக்கச் சிற்றம்பலத்தின்கண் ணே கரியமிடற்றையுடையவன் கூத்தாடாநிற்ப, முகமமைந்தமு

பூவந்திகள் துளியைத்தருதலையுடையமுகில்போல் முழங்கின, முழங்க, அவற்றை முழவமென்றுணராது காந்தளுந்திரண்டு உங்குழலையொத்து நறுநாற்றமலர்களைக்கொணர்தரப் பாம்புபோலுந் துடிப்புக்களைப்பரப்பி அலர்ந்தன, அதனால், சீரையுடைய அன்னமே, இதனைக்காரென்றுதெளியற்பாலையல்லை. எ-று.

களித்தரவென்பது - களிதரவென்றுநின்றதெனினுமமையும். பாரித்தென்பது உவமச்சொல்லெனினுமமையும். மெய்ப்பாடு. பெருமிதம். பயன் - தலைமகளைவற்புறுத்தல். (௩௨௪)

மறுத்துக்கூறல்.

மறுத்துக்கூறலென்பது - பருவமன்றென்றதோழிக்கு, காந்தளேயன்றி இதுவும் பொய்யோவெனத் தோன்றியினதுமலரைக் காட்டி, இதுபருவமேயென்று அவளோடு தலைமகள் மறுத்துக்கூறிற்றல். அதற்குச்செய்யுள்.

தேன்றிக்கிலங்குகழலழல்வண்ணன்சிற்றம்பலத்தெங் [ஙீ
கோன்றிக்கிலங்குதிண்டோட்கொண்டற்கண்டன் குழையெழிலு
போன்றிக்கடிமலர்க்காந்தளும்போந்தவன் கையனல்போற் *
றோன்றிக்கடிமலரும்பொய்ம்மையோமெய்யிற்றோன்றுவதே. ()

பருவமன்றென்று பாங்கிபகர
மருவமர்கோதை மறுத்துரைத்தது.

(இ-ள்.) தேனையொப்பான், திசைகளிலேவிளங்காநின்ற வீரக்கழலையுடைய அழல்வண்ணன், சிற்றம்பலத்தின்கணுள்ளாகிய வெங்கோன், திசைகளிலேவிளங்காநின்ற திண்ணியதோள்களையுங் கொண்டல்போலுங் கண்டத்தையுமுடையான், அவனுடைய குழையும் எழிலையுடையநாணுமாகிய பாம்பையொத்து, இக்கடிமலர்க்காந்தளினது துடிப்புக்களும் புறப்பட்டு, அவனதுகையிற்றீயைப்போலத் தோன்றியினது புதுமலரும் மெய்யாகத்தோன்றுகின்றவிது பொய்யோ! எ-று.

கடியென்பது - நாற்றம். கடிமலர் - முதலாகியதன்பொருட்கேற்றவடை. மெய்யிற்றோன்றுவதென்பதற்கு மெய்போலத்தோன்றுவதெனினுமமையும். காந்தளுமின்றென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு - அழுகை. பயன் - ஆற்றாமைநீங்குதல். (௩௨௫)

தேர்வரவுகூறல்.

தேர்வரவுகூறலென்பது-மறுத்துக்கூறின தலைமகளுக்கு, கொண்டல்கள் எட்டுத்திசைக்கண்ணும்வாராநின்றமையின், இதுபருவமே, இனியுடன்றமன்னர் தம்முட்பொருந்துதலான் நம்மைமக்கலந்தவர்தேர் நம்மில்லின்கணின்றுவந்து தோன்றுமென்று அவள் கலக்கந்தீரத் தோழி தலைமகனது தேர்வரவுகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

திருமாலறியாச்செறிகழற்றில்லைச்சிற்றம்பலத்தெம் [பெம்
கருமால்விடையுடையோன்கண்டம்போற்கொண்டலெண்டிசை
வருமாலுடன்மன்பொருந்தப்பிருந்தமணந்தவர்தேர் *
பொருமாலயிற்கண்ணல்லாயின்றுதோன்றுநம்பொன்னகர்க்கே. ()

பூங்கொடிமருள் ப்
பாங்கிதெருட்டியது.

(இ-ள்.) திருமாலாலறியப்படாத செறிந்தவீரக்கழலையுடைய திருவடியையுடைய தில்லையிற்சிற்றம்பலத்தின்கணுளளாகிய எம்முடையகரிய மாலாகியவிடையையுடையவனது கண்டம்போல விருண்டு கொண்டல்கள் எட்டுத்திசைக்கண்ணும் வாராநின்றன, அதனால், தம்மிற்பொரும் பெரியவேல்போலுங்கண்ணையுடைய நல்லாய், நம்மைமக்கலந்தவரது தேர், உடன்றமன்னர் தம்முட்பொருந்துதல் திருந்துதலால், நம்பொன்னையுடையவில்லின்கண் இன்றுவந்துதோன்றும். எ-று.

உடன்மன்பொருந்தத்திருந்த மணந்தவரென்பதற்கு மன்னர் பொருந்தும்வண்ணம் அவரைச்சென்றுகூடினவரொன்றுரைப்பாருமுளர். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-தலைமகளையாற்றுவித்தல்.

(௩௨௩)

வினைமுற்றிநினைதல்.

வினைமுற்றிநினைதலென்பது- வேந்தற்குற்றுழிப்பிரிந்ததலைமகன், வினைமுற்றியபின்னர், கயலையும்வில்லையுங்கொண்டு மன்கோபமுங்காட்டி ஒருதிருமுகம் வாராநின்றது, இனிக்கடிதுபோதுமெனத் தேர்ப்பாகன்கேட்பத் தலைமகளதுமுகநினைந்து கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

புயலோங்கலர்சடையேற்றவன்சிற்றம்பலம்புகழு *
மயலோங்கிருங்களியானைவாகுணன்வெற்பின்வைத்த *

கயலோங்கிருஞ்சிலைகொண்டுமன்கோபமுங்காட்டிவருஞ் *
செயலோங்கெயிலெரிசெய்தபினின்றோர்திருமுகமே. (ரூஉஎ)

பாசறைமுற்றிப் படைப்போர்வேந்தனே
மாசறுபூண்முலை மதிமுகநினைந்த து.

(இ-ள்.) செய்தலைப்புடைப் உயர்ந்தமதிலை எரியாக்கியபின் இன்று திருவையுடையதொருமுகம், கயல்போலுங்கண்ணையும், மிகப் பெரியவிற்போலும் புருவத்தையுமுடைத்தாய்த் தங்கியவிந்திரகோபம்போலும் வாயையுங்காட்டி வாராநின்றது, இனிக்கடிது போதும். எ-று. நீரா உயர்ந்தவிரிசடையின்கணேற்றவனது சிற்றம்பலத்தையே பரவும் மயக்கத்தையுடைய உயர்ந்தபெரிய களியானையையுடைய வரகுணன் இமயத்தின்கண்வைத்த கயலெனக் கூட்டுக.

இன்று ஓராணைபோலே அரசன்பொறியாகியகயலையும் வில்லையுமுடைத்தாய் மன்னன்முனிவையுங்காட்டி வாராநின்றதெனச் சிலேடைவகையான் ஒருபொருடோன்றியவாறறிக. மெய்ப்பாடு-அச்சம். பயன்-தேர்ப்பாகன்கேட்டுக்கடிதூர்தல். (ரூஉஎ)

நிலைமைநினைந்துகூறல்.

நிலைமைநினைந்துகூறலென்பது- வினைமுற்றியபின்னர் அவள் முகங்கண்டுவாராநின்றவன், புறாக்கள் தந்துணையோடு துயின்று முன்றிற்கண்விளையாடுவகண்டு இதுநமக்கரிதாயிற்றென்று என்னிலைமைநினைந்தாற்றகில்லாளவள், நீவிரைந்தேரைச்செலுத்துவாயாகவெனத் தலைமகளது நிலைமைநினைந்து தேர்ப்பாகனுக்குக் கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சிறப்பிற்றிகழ்சிவன்சிற்றம்பலஞ்சென்றுசேர்ந்தவர்தம் *
பிறப்பிற்றுனைந்துபெருகுகதேர்பிறங்கும்மொளியார் *
நிறப்பொற்புரிசைமறுகினிற்றுன்னிமடநடைப்புள் *
இறப்பிற்றுயின்றுமுற்றத்திரைதேருமெழினகர்க்கே. (ரூஉஅ)

பொற்றொடிநிலைமை மற்றவனினைந் து
திருந்துதேர்ப்பாகற்கு வருந்திப்புகன்ற து.

(இ-ள்.) மிக்கவொளியார்ந்தநிறத்தையுடைய செம்பொன்னாலியன்ற உயர்ந்தமதிலையுடையவூரின்றெருவின்கட்சேர்ந்து விளையாடும் மென்னடையையுடைய மடப்புறாக்கள், இறப்பின்கட்டுயின்று முற்றத்தின்கணிரைதேர்ந்துண்ணும் அவளிருந்தவெ

மிலையுடைய இல்லத்திற்குச் சிறப்புக்களாற்பொலியுஞ்சிவனது சிற்றம்பலத்தைச் சென்றடைந்தவர்கடம் பிறவிபோல விரைந்து முடுகுவதாக இத்தேர் எ-று.

புறுக்கள் துணையோடுதுயின்று மூன்றிலின்கண்விளையாடுவனகண்டு ஆற்றகில்லாளென்பதுபோதர, இறப்பிற்றுயின்றுமுற்றத்திரைதேருமென்றான். சிற்றம்பலஞ்சென்றுசேர்ந்தவர் பிறவியிறுதிக்கட்பேரின்பமெய்துமாறுபோல யானுஞ்சுரஞ்செலவிறுதிக்கட் பெருந்தோண் முயங்குவலென்னுங்கருத்தாற் பிறப்பிற்றுனைந்துபெருகுகதேரென்றான். துன்னுமென்பதூஉம்பாடம். மெய்ப்பாடு - உவகை. பயன் - கேட்டபாகன்விரைந்து தேர்பண்ணுவானாதல். (கூஉஅ)

முகிலொடுகூறல்.

முகிலொடுகூறலென்பது-காரோட்டங்கண்டபாகன் அதனோடுவிரையத்தேரோட்டாநிற்பான், பிரிதலால் திருந்தியவழகெல்லாம் அழிந்து துன்புறுநின்றவளது சீரியநகரின்கண், வாராநின்றவெனதுதேரின்முற்பட்டுச் சென்றியங்காதொழியவேண்டும், இயங்கினும், அத்தமியாள்கேட்ப முழங்காதொழியவேண்டுமெனத்தலைமகன், முந்துற்றுச் செல்லாநின்றமுகிலொடு கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

அருந்தேரழிந்தனமாலமென்றோலமிடுமிமையோர் ✱
மருந்தோணியம்பலத்தோன்மலர்த்தாள்வணங்கலர்போற் ✱
திருந்தேரழிந்துபழங்கண்டருஞ்செல்விசீர்நகர்க்கென் ✱
வருந்தேரிதன்முன்வழங்கேன்முழங்கேல்வளமுகிலே. (கூஉகூ)

முன்னவற்குற்றுழி வினைமுற்றிவருவோன்
கன்மமலெய்திச் செழுமுகிற்குரைத்தது.

(இ-ள்.) நஞ்சையருந்தவேண்டும், இதனானழசழிந்தோமென்று முறையிடுந்தேவர்க்கு அந்நஞ்சால்வரும் இடர்க்குமருந்தாயவன், அழகையுடைய அம்பலத்தின்கண்ணான், அவனதுமலர்போலுந்தாளைவணங்காதாரைப்போலத் திருந்தியவழகெல்லாயழிந்து துன்பத்தையுண்டாக்கும் இல்வாழ்க்கைச் செல்வத்தையுடையவளது அழகையுடையவூரின்கண், வளமுகிலே, வாராநின்றவெனது தேரிதனின் முற்பட்டுச்சென்றியங்காதொழியவேண்டும், இயங்கினும் அத்தமியள்கேட்ப முழங்காதொழியவேண்டும். எ-று.

ஏணியென்பதற்கு மிக்கவழகென்றும், பழங்கண்டருமென்பதற்குத் துன்பத்தையெனக்குத் தருமென்று முரைப்பினுமமையும். வழங்கேலென்பதற்குப் பெய்யவேண்டாமென் றுரைப்பாருமுளர். நகர்- இல்லெனினுமமையும். முனைவன்- இறைவன். மெய்ப்பாடு- அது. பயன்- கேட்டபாகன்றேர்விரைந்துகடாவுதல்.

வரவெடுத்துரைத்தல்.

வரவெடுத்துரைத்தலென்பது- தலைமகன்முகிலொடுவாராநிற்பக்கண்டதோழி, வணங்குவாராகவுடம்பட்டவர் கொடுத்ததிறையையும் வணங்காது மாறுபட்டவரடையாளங்களையும் தமதுதேருக்கு முன்னாகக்கொண்டு, வீரமுரசார்ப்ப, ஆலியாநின்ற மாவினோடும்வந்தணுகினார், இனிநமக்கொருகுறையில்லையெனத் தலைமகளுக்கு அவன்வரவெடுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பணிவார்குழையெழிலோன்றில்லைச்சிற்றம்பலமனைய *
மணிவார்குழன்மடமாதேபொலிகநம்மன்னர்முன்னாப் *
பணிவார்திறையும்பகைத்தவர்சின்னமுங்கொண்டுவண்டே *
ரணிவார்முரசினொடாலிக்குமாவோடணுகினரே. (௩௩௰)

வினைமுற்றிய வேந்தன்வர வு
புனையிழைத்தோழி பொற்றொடிக்குரைத்த து.

(இ-ள்.) பணியாகிய நீண்டகுழையாலுண்டாகிய அழகையுடையவனது தில்லைச்சிற்றம்பலத்தையொக்கும் நீலமணிபோலுநீண்டகுழலையுடைய மடப்பத்தையுடையமாதே, பொலிக, நம்முடைய மன்னர், வந்துவணங்குவாராகவுடம்பட்டவர்கொடுத்ததிறையையும், பணியாது மாறுபட்டவரதடையாளங்களையும் தமதுவண்டேர்க்குமுன்னாகக் கொண்டு, அணியப்பட்ட வாரையுடைய வீரமுரசினோடும், ஆலியாநிற்குமாவினோடும், வந்தணுகினார். எ-று.

வண்டேரொடென்பதனைத் தொகுக்கும்வழித்தொகுத்துக்கூறினாரெனினுமமையும். இப்பொருட்கு முன்னாகவந்துபணிவாரென்றுரைக்க. மெய்ப்பாடு- உவகை. பயன்- தலைமகளைமகிழ்வித்தல்.

மறவாமைகூறல்.

மறவாமைகூறலென்பது- வினைமுற்றிவந்து தலைமகளோடுபள்ளியிடத்தானாகிய தலைமகன், நீயிர் வினையிடத்தெம்மைமறந்தீரோவென்றதோழிக்கு, யான் பாசறைக்கட்டாழ்த்தவிடத்துப், கண்முத்திலங்கநின்று, இவள் என்னுடைய நெஞ்சைவிட்டுநீங்கிற்றிலள் ஆதலால், யான்மறக்குமாறென்னோவெனத் தானவளை மறவா

மைகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

கருங்குவளைக்கடிமாமலர்முத்தங்கலந்திலங்க *
நெருங்குவளைக்கிள்ளை நீங்கிற்றிலளின்றுநான்முகனோ *
டொருங்குவளைக்கரத்தானுணராதவன்றில்லையொப்பாய் *
மருங்குவளைத்துமன்பாசறைநீடியவைகலுமே. (௩௱௧)

பாசறைமுற்றிப் பைந்தொடியோடிருந் த
மாசறுதோழிக்கு வள்ளலுரைத்த து.

(இ-ள்) நான்முகனோடுங்கூடச் சங்கையேந்திய கையையுடையவனுமறியாதவனது தில்லையையொப்பாய், முனைமருங்குசூழ்ந்து மன்னனதுபாசறைக்கண் யான்சூழ்ந்தவைகற்கண்ணும், கண்ணாகிய கருங்குவளையது புதியபெரியமலர் கண்ணீராகிய முத்தத்தைக்கலந்துவிளங்க நின்று நெருங்கினவளையையுடைய இக்கிளியையொப்பாள் ஒருகாலமுமென்னைவிட்டுநீங்கிற்றிலள்; அதனாற்பிரிவில்லை. எ-று.

வைகலுமென்பதற்கு வைகறோறுமென்றுரைப்பாருமுளர்.
மெய்ப்பாடும் பயனும்- அவை. (௩௱௧)

வேந்தற்குற்றுழிப்பிரிவு முற்றிற்று.

பொருள்வயிற்பிரிவு.

இனிப்பொருள்வயிற்பிரிதலென்பது-குரவர்களாற்படைக்கப்பட்டபொருள்கொண்டு இல்லறஞ்செய்தால் அதனான்வரும்பயன் அவர்க்காமத்துணையல்லது தமக்காகாமையால் தமதுபொருள்கொண்டில்லறஞ்செய்தற்குப் பொருடேடப் பிரியாநிற்றல்.

அதுவருமாறு-சூத்திரம். வாட்டங்கூறல் பிரிவுநினைவுரைத்த,லழுதுபுலம்ப லாற்றாமைகூற, பிணைபெயர்த்துரைத்தல் பொருத்தமறிந்துணர்த்தல்,பிரிந்தமைகூறல் பிரிவாற்றாமையா,னிரவுறுதுயரத்திற் கிரங்கியுரைத்த,லிகழ்ச்சிநினைந்தழித லுருவுவெளிப்படுத,னெஞ்சொடுநோத னெஞ்சொடுபுலத்த,னெஞ்சொடுமறுத்த லுளெண்ணிவருந்த,லேறுவரவுகண் டிரங்கியுரைத்தல்,பருவங்கண்டிரங்கன் முகிலொடுகூற,றேர்வரவுகூற லிளையரெதிர்கோட,லுண்மகிழ்ந்துரைத்த லோதியவிருபது மாமதிநுதலாய் வான் பொருட்பிரிதல்.

(இ-ள்.) வாட்டங்கூறல்-பிரிவுநினைவுரைத்தல்- ஆற்றாதுபுலம்ப
ல்-ஆற்றாமைகூறல்-இணைபெயர்த்துரைத்தல்- பொருத்தமறிந்து
ரைத்தல்-பிரிந்தமைகூறல்-இரவுறுதுயரத்திற்கிரங்கியுரைத்தல்-இ
கழ்ச்சிநினைந்தழிதல் - உருவுவெளிப்பட்டுநிற்றல் - நெஞ்சொடு
நோதல்-நெஞ்சொடுபுலத்தல்- நெஞ்சொடுமறுத்தல்- நாளெண்
ணிவருந்தல்-ஏறுவரவுகண்டிரங்கியுரைத்தல்-பருவங்கண்டிரங்கல்-
முகிலொடுகூறல்-தேர்வரவுகூறல்-இளையரெதிர்கோடல்-உண்மகி
ழ்ந்துரைத்தல் எனவிவையிருபதும் பொருள்வயிற்பிரிவாம்.
எ-று. அவற்றுள்,

வாட்டங்கூறல்.

வாட்டங்கூறலென்பது- பொருள்வயிற்பிரியலுறுகின்றதலைம
கன், இருமையும் பொருளானே முற்றப்பெறுமென்று யான்
பொதுவகையாற்கூற, அக்குறிப்பறிந்து கண்பனிவர, இத்தன்
மையளாய் வாடினாள், இனியென்னாற்பிரிவுரைத்தலரிது, நீயுணர்த்
துமாற்றானுணர்த்தெனத் தோழிக்குத் தலைமகளது வாட்டங்கூ
றுநிற்றல். அதற்குச்செய்யுள்.

முனிவருமன்னருமுன்னுவபொன்னான்முடியுமெனப் *
பனிவருங்கண்பரமன்றிருச்சிற்றம்பலமனையாய் *
துனிவருநீர்மையிதென்னென்றுதூநீர்தெளித்தளிப்ப *
நனிவருநாளிதுவேவரவென்றுவந்திக்குநன்னுதலே. (௩௩௨)

பிரிவுகேட்ட வரிவைவாட்டம்
நீக்கலுற்றவன் பாங்கிக்குரைத்தது.

(இ-ள்) துறந்தாருமரசரும் கருதுவனவாகிய மறுமையுமிம்
மையும் பொருளான் முற்றப்பெறுமென்று பொதுவகையாற்
கூற, அக்குறிப்பறிந்து, கண்கள் பனிவாராநின்றன, இவ்வாறுப
னிவருங்கண்ணோடு அறிவழிந்து வருந்தியவிடத்து, பரமனது
திருச்சிற்றம்பலத்தையொப்பாய், நீதுன்பம்வருந்தன்மை இஃ
தென்னகாரணத்தான்வந்தது யான்பிரியேனென்று தூயநீரைத்
தெளித்துத் தலையளிசெய்ய, அறிவுபெற்று, அறிவழிந்தகாலத்தை
ப்பிரிந்தகாலமாகவே கருதி, நீர் நனிதாழ்த்துவருநாளிதுவோ
வென்று நன்னுதலாள் வணங்காநின்றாள், இனிநீயுணர்த்துமாற்றா
னுணர்த்து. எ-று.

பரமன்றிருச்சிற்றம்பலமனையாளென்று பாடமோதுவாருமு
ளர். நீயெனவுந்தாழ்த்தெனவுமொருசொல்வருவித்துரைக்கப்ப

மைகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

கருங்குவளைக்கடிமாமலர்முத்தங்கலந்திலங்க *
நெருங்குவளைக்கிள்ளை நீங்கிற்றிலணின்றுநான்முகனே *
டொருங்குவளைக்கரத்தானுணராதவன்றில்லையொப்பாய் *
மருங்குவளைத்துமன்பாசறைநீடியவைகலுமே. (௩௧௧)

பாசறைமுற்றிப் பைந்தொடியோடிருந் து
மாசறுதோழிக்கு வள்ளலுரைத்த து.

(இ-ள்) நான்முகனேடுங்கூடச் சங்கையேந்திய கையையுடை யவனுமறியாதவனது தில்லையையொப்பாய், முனைமருங்குசூழ்ந் து மன்னனது பாசறைக்கண் யான்றங்கியவைகற்கண்ணும், கண் ணாகியகருங்குவளையது புதியபெரியமலர் கண்ணீராகிய முத்தத் தைக்கலந்து விளங்க நின்று நெருங்கினவளையையுடைய இக்கிளி யையொப்பாள் ஒருகாலமுமென்னைவிட்டுநீங்கிற்றிலள்; அதனாற் பிரிவில்லை. எ-று.

வைகலுமென்பதற்கு வைகறோறுமென்றுரைப்பாருமுளர். மெய்ப்பாடும் பயனும்- அவை. (௩௧௧)

வேந்தற்குற்றுழிப்பிரிவு முற்றிற்று.

பொருள்வயிற்பிரிவு.

இனிப்பொருள்வயிற்பிரிதலென்பது- குரவர்களாற்படைக்கப் பட்டபொருள்கொண்டு இல்லறஞ்செய்தால் அதனான்வரும்பய ன் அவர்க்காமத்துணையல்லது தமக்காகாமையால் தமதுபொரு ள்கொண்டில்லறஞ்செய்தற்குப் பொருடேடப் பிரியாநிற்றல்.

அதுவருமாறு- சூத்திரம். வாட்டங்கூறல் பிரிவுநினைவுரைத்தலா ற்றுதுபுலம்ப லாற்றாமைகூற, நீணெபெயர்த்துரைத்தல் பொரு த்தமறிந்துரைத்தல்,பிரிந்தமைகூறல் பிரிவாற்றாமையா,விரவுற் றுயரத்திற் கிரங்கியுரைத்த, விகழ்ச்சிநினைந்தழித லுருவுவெளிப் படுத, னெஞ்சொடுநோத னெஞ்சொடுபுலத்த, னெஞ்சொடுமறு த்த லொண்ணிவருந்த,லேறுவரவுகண் டிரங்கியுரைத்தல்,பருவ ங்கண்டிரங்கன் முகிலொடுகூற,றேர்வரவுகூற லிளையரெதிர்கோ ட,லுண்மகிழ்ந்துரைத்த லோதியவிருபதுமாமதிறதலாய் வான் பொருட்பிரிதல்.

(இ-ள்.) வாட்டங்கூறல்-பிரிவுநினைவுரைத்தல்- ஆற்றாதுபுலம்பல்-ஆற்றாமைகூறல்-இணைபெயர்த்துரைத்தல்- பொருத்தமறிந்துரைத்தல்-பிரிந்தமைகூறல்-இரவுறுதுயரத்திற்கிரங்கியுரைத்தல்-இகழ்ச்சிநினைந்தழிதல் - உருவுவெளிப்பட்டுநிற்றல் - நெஞ்சொடுநோதல்-நெஞ்சொடுபுலத்தல்- நெஞ்சொடுமறுத்தல்- நாளெண்ணிவருந்தல்-ஏறுவரவுகண்டிரங்கியுரைத்தல்-பருவங்கண்டிரங்கல்-முகிலொடுகூறல்-தேர்வரவுகூறல்-இளையரெதிர்கோடல்-உண்மகிழ்ந்துரைத்தல் எனவிவையிருபதும் பொருள்வயிற்பிரிவாம். எ-று அவற்றுள்,

வாட்டங்கூறல்.

வாட்டங்கூறலென்பது- பொருள்வயிற்பிரியலுறாநின்றதலைமகன், இருமையும் பொருளானே முற்றுப்பெறுமென்று யான் பொதுவகையாற்கூற, அக்குறிப்பறிந்து கண்பனிவர, இத்தன்மையளாய் வாடினாள், இனியென்னாற்பிரிவுரைத்தலரிது, நீயுணர்த்துமாற்றானுணர்த்தெனத் தோழிக்குத் தலைமகளது வாட்டங்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

முனிவருமன்னருமுன்னுவபொன்னான்முடியுமெனப் *
பனிவருங்கண்பரமன்றிருச்சிற்றம்பலமனையாய் *
துனிவருநீர்மையிதென்னென்றுதாநீர்தெளித்தளிப்ப *
நனிவருநாளிதுவேவென்றுவந்திக்குறனுதலே. (கூகூஉ)

பிரிவுகேட்ட வரிவைவாட்டம்
நீங்கலுற்றவன் பாங்கிக்குரைத்தது.

(இ-ள்) துறந்தாருமரசரும் கருதுவனவாகிய மறுமையுமிம்மையும் பொருளான் முற்றுப்பெறுமென்று பொதுவகையாற்கூற, அக்குறிப்பறிந்து, கண்கள் பனிவாராநின்றன, இவ்வாறுபனிவருங்கண்ணோடு அறிவழிந்து வருந்தியவிடத்து, பரமனது திருச்சிற்றம்பலத்தையொப்பாய், நீதுன்பம்வருந்தன்மை இஃதென்னகாரணத்தான்வந்தது யான்பிரியேனென்று துயரநீரைத் தெளித்துத்தலையளிசெய்ய, அறிவுபெற்று, அறிவழிந்தகாலத்தைப்பிரிந்தகாலமாகவேகருதி, நீர் நனிதாழ்த்துவருநாளிதுவோவென்று நன்னுதலாள் வணங்கிநின்றாள், இனிநீயுணர்த்துமாற்றானுணர்த்து. எ-று.

பரமன்றிருச்சிற்றம்பலமனையாளென்று பாடமோதுவாருமுளர். நீயெனவுந்தாழ்த்தெனவுமொருசொல்வருவித்துரைக்கப்ப

ட்டது. நனிவந்திக்குமெனினுமமையும். துறந்தார்கருதுவதாகிய மறுமையின்பமும், அரசர்கருதுவதாகிய விம்மையின்பமுமென்று, நிரனிறையாகக்கொண்டு, அவரிருவருங்கருதுவனவாகிய இப்பொருளிரண்டனையும் பொருண்முடிக்குமென்று பொதுவகையாற்கூறினானெனக்கொள்க. மெய்ப்பாடு-இளிவரலைச்சார்ந்தபெருமிதம். பயன்- பிரிவுணர்த்துதல். (௩௩௨)

பிரிவுநினைவுரைத்தல்.

பிரிவுநினைவுரைத்தலென்பது-வாட்டங்கேட்டதோழி, பொருளில்லாதார் இருமையின்கண்வருமின்பமும் அறியாரெனவுட்கொண்டு, அருஞ்சுரம்போய், நமர் பொருடேடநினையாநின்றாரெனத் தலைமகளுக்குத் தலைமகனது பிரிவுநினைவுரையாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வறியாரிருமையறியாரெனமன்னுமாநிதிக்கு *
நெறியாருஞ்சுரஞ்செல்லலுற்றார்நமர்நீண்டிருவ *
ரறியாவளவுநின்றோன்றில்லைச்சிற்றம்பலமனைய *
செறிவார்கருங்குழல்வெண்ணகைச்செவ்வாய்த்திருநுதலே. ()

பொருள்வயிற்பிரியும் பொருவேலவனெனச்
சுருளுறுகுழலிக்குத் தோழிசொல்லியது.

(இ-ள்.) மாலும்பிரமனுமாகியவிருவர் அடியமுடியுமறியாதவெல்லையின்கண் நீண்டுநின்றவனது திருச்சிற்றம்பலத்தையொக்குஞ் செறிந்த நீண்டகரியகுழலினையும் வெள்ளியநகையினையுஞ் செய்யவாயினையுமுடையதிருநுதால், பொருளில்லாதார், இம்மையுமறுமையுமாகிய இருமையின்கண்வரும் இன்பமுமறியாரென்றுகருதித் தொலையாதநிலைபெறும் பெரியவரும்பொருடேடுதற்குவழிபறிதற்கரிய அருஞ்சுரத்தை நமர் போகலுற்றார் எ-று.

செறியாரென்பதூஉம் பாடம். சிறுகானெறிபலவாகியவருஞ்சுரமெனினுமமையும். மெய்ப்பாடு-அழுகையைச்சார்ந்தபெருமிதம். பயன்-பிரிவுடம்படுத்தல். (௩௩௩)

ஆற்றாதுபுலய்பல்.

ஆற்றாதுபுலம்பலென்பது-பிரிவுநினைவுரைப்பக்கேட்டதலைமகள், இத்தோழியாகியகொடியவள், இத்தன்மையையறிந்திருந்தும், அன்பர் பிரிவரெனக் குவளைப்பூவெறிதற்கு வாளுறைகழித்தாற்போலக் கூறினாள், இதற்கியான்கூறுவதுண்டோவென ஆற்றாது புலம்பாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சிறுவாளுகிருற்றுறாமுன்னஞ்சின்னப்படுங்குவளைக் *
கெறிவாள்கழித்தனைதோழியெழுதிற்கரப்பதற்கே *
பறிவாளொழிகுவதஞ்சனமம்பலவர்ப்பணியார் *
குறிவாழ்நெறிசெல்வரன்பரென்றம்மகொடியவளே. (௩௨௩)

பொருட்டாப்பிரியு மருட்டருபவனை ப்
பாங்கிப்கரப் பூங்கொடிபுலம்பிய து.

(இ-ள்.) தோழியாகியகொடியவள், அஞ்சனமெழுதில் எழுதா நின்றகாலமத்துணையுங் காதலர்தோன்றாமையான் அவ்வஞ்சனத் தையொழிவதறிவாள், அம்பலவனைவணங்காதார் அவ்வணங்காமை க்குக் குறியாக வாழுந்தீயநெறியை அன்பர் செல்வரென்று, ஒளி யையுடையசிறியவுகிர்சிறிதுற்றுச் சிறிதுறுமுன்னம்பொடிபடுங் குவளைப்பூவிற்கு எறிதற்குக்கருவியாகிய வாளையுறைகழித்தாள், யான்கூறுவதுண்டோ. எ-று.

கொடியவளேயென்பதுபாடமாயிற் கொடியாளாகியவன்பரெ னக்கூட்டுக. அம்ம-அசைநிலை. மெய்ப்பாடு-அழுகை. பயன்-செ லவழுங்குவித்தல். (௩௨௪)

ஆற்றாமைகூறல்.

ஆற்றாமைகூறலென்பது- தலைமகளதுவருத்தங்கண்டதோழி, காதலர் கானகத்தையுடைய சுரத்தைப்போய்ப் பொருட்டேடநினையாநின்றாரென்று யான்சொல்லுமளவில், அவளதுமுலையுங் கண்ணும் பொன்னும் முத்துந்தாராநின்றன, இனிநீசேட்சென்று தேடும்பொருள் யாதோவெனத் தோழி தலைமகனுக்கு அவளது பிரிவாற்றாமை கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வானக்கடிமதிற்றில்லையெங்கூத்தனையேத்தலர்போற் *
கானக்கடஞ்செல்வர்காதலரென்னக்கதிர்முலைகண் *
மானக்கனகந்தருமலர்க்கண்ணன்முத்தம்வளர்க்குந் *
தேனக்கதார்மன்னனென்னோவினிச்சென்றுதேர்பொருளே. ()

எனை யழுங்க த்
தோழி சொல்லிய து.

(இ-ள்.) முகில்களையுடைத்தாகிய காவலையுடைய மதிலாற்சூழப்பட்டதில்லையில் எங்கூத்தனை வாழ்த்தாதார்போலக் காதலர் கானகத்தையுடைய சுரத்தைச் செல்வரென்றுசொல்ல, ஒளியையுடைய முலைகள் கொண்டாடப்படும்பொன்னைத்தாராநின்றன, மலர்போலுங்கண்கள் முத்தத்தைப் பெருகவுண்டாக்காநின்றன, அதனால்,

நேனெடு மலர்ந்த தாளையுடைய மன்னன் இவிச்சேட்சென்று தேடும்பொருள் யாது! எ-று.

மானமென்றது-அளவை. அளவையென்றது- பிரமாணம். மாத்திரைப்பொருளென்றுரைப்பினுமமையும். மன்னனெனப்படர்க்கை முன்னிலைக்கண்வந்தது; இயல்புவிளியென்பாருமுளர். மெய்ப்பாடு-இளிவரலைச்சார்ந்தபெருமிதம். பயன்- அது. (௯௫)

திணைபெயர்த்துரைத்தல்.

திணைபெயர்த்துரைத்தலென்பது- யான் அவர்க்கு நினதாற்றாமைகூறினேன், இனியவர் நினைவறியேனென்ற தோழிக்கு, தாம் எனக்கருளைப்புலப்படுத்திய சொற்களத்தனையு மறந்தோ, காவலர் தீவினையேற்குப் பொருளைத்தரத்தொடங்குகின்றதெனப் பிரிவுள்ளிப் பாலைநிலத்தகுகியதலைமகளை மருதநிலத்தணுக்கித் தலைமகள் புலந்துகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அருடருசெஞ்சடைவெண்சுடரம்பலவன்மலயத்
திருடருபூம்பொழிலின்னுயிர்போலக்கலந்திசைத்த
வருடருமின்சொற்களத்தனையும்மறந்தத்தஞ்சென்றோ
பொருடரக்கிற்கின்றதுவினையேற்குப்புரவலரே. (௯௬)

துணைவன்பிரியத் துயருறுமன்றொடு
திணைபெயர்த்திட்டுத் தீமொழிமொழிந்தது.

(இ-ள்.) சுருண்டசெஞ்சடைக்கணணிந்த வெண்சுடரையுடைத்தாகிய மதியையுடையவம்பலவனது பொதியின்மலைக்கண் இருண்டபூவையுடையபொழிலிடத்து,இன்னுயிர்போல இனியராய் ஒன்றுபட்டுவந்துகூடி, நமக்குச்சொன்ன அருளைப்புலப்படுத்தும் இனியசொற்களெல்லாவற்றையுமறந்து தாம் அருஞ்சுரஞ்சென்றோ, காவலர் தீவினையேற்குப் பொருளைத்தரத்தொடங்குகின்றது! இது தகுமோ! எ-று.

இருளைத்தருமென்றுரைப்பினுமமையும். உடம்போடுயிர்கலக்குமாறுபோலக் கலந்தெனினுமமையும். திணைபெயர்த்திடுதல்-பிரிவுள்ளிப்பாலைநிலத்தகுகியாளை மருதநிலத்தணுக்குதல். மெய்ப்பாடு-அழுகை. பயன்-செலவழுங்குவித்தல். (௯௬)

பொருத்தமறிந்துரைத்தல்.

பொருத்தமறிந்துரைத்தலென்பது-திணைபெயர்த்துக்கூறின தலைமகளுக்கு, யாமெல்லாஞ்சொன்னேமாயினுங் காதலர்க்குறி

னைவு பொருண்மேலேயாயிருந்தது, இனி யாஞ்சொல்லுவதென்னோவெனத் தோழி தலைமகளது பொருத்தமறிந்து, தானதற்கு நொந்து கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மூவர்நின்றேத்தமுதல்வனுடைமுப்பத்துமும்மைத் *
தேவர்சென்றேத்துஞ்சிவன்றில்லையம்பலஞ்சீர்வழுத்தாப் *
பாவர்சென்றல்குநரகமனையபுனையழற்கான் *
போவர்நங்காதலரென்னுமுனைப்பதுபூங்கொடியே. (௩௱௭)

பொருள்வயிற்பிரிவோன் பொருத்தநினைந் து
சுருளுறுகுழலிக்குத் தோழிசொல்லிய து.

(இ-ள்.) நான்முகனும் மாலும் இந்திரனு மாகியமூவர்நின்று பரவ, எல்லாப்பொருட்குங்காரணமாகியவனுடா நிற்ப, முப்பத்துமும்மையாகியவெண்ணையுடைய தேவர்கள்சென்று வழுத்துஞ் சிவனது தில்லையம்பலத்தை நன்மைபுகழாத தீவினையார் சென்றுதங்குநரகத்தையொக்குஞ் செய்தாற்போலு மழலையுடைய காட்டைப்போவார்போன்றிருந்தார் நங்காதலர், பூங்கொடிபோல்வாய், இனிநாஞ்சொல்லுவதுண்டோ! எ-று.

முப்பத்துமும்மை- முப்பத்துமூவரது தொகுதியெனினுமமையும். சீர்வழுத்தாவென்பன ஒருசொன்னீர்மைப்பட்டு, அம்பலத்தையென்னுமிரண்டாவதற்குமுடிபாயின. பொருத்தம்-உள்ளத்துநிகழ்ச்சி. சொல்லாது பொருள்வயிற்பிரிவோன்கருத்தறிந்து தோழி சொல்லியது. மெய்ப்பாடும் பயனும்-அவை. (௩௱௭)

பிரிந்தமைகூறல்.

பிரிந்தமைகூறலென்பது- பொதுவகையானுணர்த்தினேமாயின், இனித்தீபநாயிற்காண்கின்றேமெனத் தலைமகனுணர்ந்ததாகு பிரியாநிற்ப, நின்முன்னின்றுபிரிவுணர்த்தினால் நீமேனிபொலிவாடுவையெனவுட்கொண்டு, பொருண்முடித்துக் கடிதின்மீள்வாராக நால்வகைத்தானையோடு நம்மன்னர் வினைவயிற்சென்றாரெனத் தோழி, தலைமகளுக்குத் தலைமகன்பிரிந்தமை கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

சென்மாத்திறைவகைதீர்தரத்தில்லைச்சிற்றம்பலத்து *
மன்மாத்தலைக்கழல்வைத்தெரியாடிமறைநிகழும் *
பொன்மாப்புரிசைப்பொழிற்றிருப்பூவணமன்னபொன்னே *
வன்மாக்களிற்றொடுசென்றனரின்றுநம்மன்னவரே. (௩௱௮)

எதிர்நின்றுபிரியிற் கதிர்நீவாடுத நீ
குணர்த்தாதகன்றான் மணித்தேரோனென்றது.

(இ-ள்.) தெற்காகியபெரியதிசை குற்றநீங்க எனதுகருந்தலைக் கட் கழல்களைவைத்துத் தில்லைச்சிற்றம்பலத்தின்கணெரிமேயாடாநிற்குமிறைவனது விளங்கும்பொன்றுணியன்ற பெரியபதிலாற்சூழப்பட்ட பொழிலையுடைய திருப்பூவணத்தையொக்கும் பொன்னே, தம்மன்னர் வலியபெரியகளிறுகளோடும் வினைகுறித்து இன்றுசென்றார். எ-று.

நால்வகைத்தானையோடுஞ் சென்றாலினுமமையும். மதிற்கால்சாய்த்தற்குக்களிறுசிறந்தமையின் அதனையேகூறினார். வினையிற்பிரிவுழித் தான் சிறந்தமையின், ஒடு உயர்பின்வழிவந்ததாம். வேறுவினையொடுவாய்க் களிற்றையுடையாராய்ச் சென்றாரென்பதுபட நின்றதெனினுமமையும். ஊர்ந்தகளிறென்று ஒடு கருவிப்பொருட்கண்வந்ததெனினுமமையும். செல்வரொன்றது சென்றாரென்றமையான், சொல்லாதுபிரிந்தானும். மாவென்பது விலங்கென்று நாய்த்தலையென்றுரைப்பாருமுளர். வாடுதற்கு-வாடுதலால். மெய்ப்பாடு-அழுகை. பயன்-பிரிவுணர்த்துதல். (ருருஅ)

இரவுறுதுயரத்திற்கிரங்கியுரைத்தல்.

இரவுறுதுயரத்திற்கிரங்கியுரைத்தலென்பது-பிரிவுகேட்டதலைமகளதாற்றாமைகண்டதோழி, இவ்வுறுப்புக்குறையோடெங்குந்திரிந்திளைத்து, அருக்கனதுதேர்வருதல் யாண்டையது, இவளாற்றுதல் யாண்டையதென, அவளிரவுறுதுயரத்திற்குத் தானிரக்கமுற்றுக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஆழியொன்றீரடியும்மிலன்பாகன்முக்கட்டில்லையே ✱
ஞாழிபொன்றுதனநான்குமைம்பூதமுமாறொடுங்கு ✱
பேழியன்றாழ்கடலும்மென்றிசையுந்திரிந்திளைத்து ✱
வாழியன்றோவருக்கன்பெருந்தேர்வந்துவைகுவதே. (ருருகூ)

அயிறருகண்ணியைப் பயிறருமிரவினுட்
டாங்குவதரிதெனப் பாங்கிபகர்ந்த து.

(இ-ள்.) காலுள்ளதொன்று, பாகன் இரண்டடியமுடையனல்லன், இவ்வுறுப்புக்குறையோடு, ஐந்துபூதமுந்தோன்றிபவாறொடுங்கும் மூன்றுகண்ணையுடையதில்லையானுடைய ஊழியுமோவாத பெருமையையுடைய நான்கியாமத்தின்கண்ணும், எழாயியன்ற ஆழ்ந்தகடல்களையும் எட்டுத்திசைகளையுந் திரிந்திளைத்தன்

ரோ அருக்கனது பெருந்தேர் நண்டுவந்து தங்குவது, அதனான் அதன்வரவு யாண்டையது! இவளாற்றுதல் யாண்டையது? எ-று.

ஈரடியுமென்பதனை எழுவாயாக்கினுமமையும். நான்குந்திரிந்தெனவியையும். இயன்றவென்பது கடைக்குறைந்துநின்றது. வாழி- அசைநிலை. ஒன்றுதனவென்பதனை நான்குமென்னுமெழுவாய்க்குப் பயனிலையாக்கியுரைப்பினுமமையும். ஐம்பூதமும் ஆறுகளொன்றாடுக்கும் எழ்கடலுமென்றெண்ணிக்கடலேழுடருக்கற்கில்லயபுண்மையான், ஐம்பூதத்திற்பிரித்துக் கூறினுமென்பாருமுளர். இரவும்பகலுமொப்பவருமாயினும் இரவுநீடுதுயரத்திற்காற்றாமையான், இராப்பொழுது பலகால்வருவதுபோலப் பயிறருமிரவென்றாள். மெய்ப்பாடு- அழுகை. பயன்- செலவழுங்குவித்தல். ()

இகழ்ச்சிநினைந்தழிதல்

இகழ்ச்சிநினைந்தழிதலென்பது- தோழி இரக்கமுற்றுக்கூறுநிற்ப, முற்காலத்து அவருலகின்மேல் வைததுணர்த்துயவழி நீட்டித்துப்பிரிவாராயினும், இப்பொழுதைக்கிவர்பிரியாரென யான் அவர்பிரிவிகழ்ந்திருந்தேன், முன்னின்றுபிரிவுணர்த்தின் இவளுயிர்தரியாளென்று அவருணர்த்துதலையிகழ்ந்துபோனார், அத்தன்மையவாகிய இரண்டிகழ்ச்சியும், என்னையித்தன்மைத்தாக வழிவியாநின்றனவெனத் தலைமகள் இகழ்ச்சிநினைந்தழியாநிற்றல். அதற்குச்செய்யுள்.

பிரியாரெனவிகழ்ந்தேன்முன்னம்யான்பின்னையெற்பிரியிற் ❋
றரியாளெனவிகழ்ந்தார்மன்னர்தாந்தங்கண்வேள்விமிக்க ❋
வெரியார்பொழிலழிக்குமெழிலம்பலத்தோனெவர்க்கு ❋
மரியானருளிலர்போலன்னவென்னையழிவித்தவே. (௩௱௰)

உணர்த்தாது பிரிந்தாரென
மணித்தாழ்குழலி வாடியது.

(இ-ள்.) முற்காலத்து அவருலகின்மேல்வைத்துக்கூறியவழி நீட்டித்துப் பிரிவராயினும் இப்பொழுது பிரியாரென யானிகழ்ந்திருந்தேன், என்னைத்தாம்பிரிகின்றாராகவுணரின் இவளுயிர்தாங்காளென, மன்னர், தாம்பின்னுணர்த்துதலையிகழ்ந்தார், அத்தன்மையவாகிய இரண்டிகழ்ச்சியும், தங்கணதுவேள்வியின் முத்தீ நிறைந்த மிக்கவழலையழித்த எழிலையுடைய அம்பலத்தான், யாவர்க்குமரியவன், அவனதருளில்லாதாரைப்போல வருந்த என்னையழிவித்தன. எ-று.

உண்மையாற்காரணமாவனவும், உணரப்பட்டாற்காரணமாவனவும் எனக் காரணமிருதிறத்தன, அவற்றுட் பிரிவு தரியாமைக்கு உணரப்பட்டாற்காரணமாமாகலின் பிரியினென்புழிப் பிரிகின்றாராகவுணரினென்பது ஆற்றலாற்பெற்றும், புலிவரினஞ்சுமென்புழிப்போல. எரியகொழிலழிக்குமென்பதற்கு எரியினதெழிலழிக்குமென்பார், ஆனைக்கிளவிகொடுத் திழித்துக்கூறினாரெனினுமமையும். அழிக்குமென்பது- காலமயக்கம். கற்பந்தோறும் அவ்வாறுசெய்தலின் நிகழ்காலத்தாற் கூறினாரெனினுமமையும். உணர்த்தாதுபிரியினும் ஒருவாற்றானுணர்ந்து பின்னுமாற்றாளாவளாமெனில், தீயதுபிறகாணப்படுமென்பதாகலானும், முன்னின்றுணர்த்தல் வல்லனல்லாமையானும் அவ்வாறுபிரியுமென்க.
மெய்ப்பாடு- அது. பயன்- ஆற்றாமைநீக்குதல். (௩௪௰)

உருவுவெளிப்பட்டுநிற்றல்.

உருவுவெளிப்பட்டுநிற்றலென்பது- தலைமகள் இகழ்ச்சிநினைந்தழியாநிற்ப, தானுணர்த்தாதுபிரிந்தமையுட்கொண்டுபொருள்வலித்தநெஞ்சோடு செல்லாநின்றதலைமகன், காணுந்திசைதோறுங்கயலையும் வில்லையுஞ் சிவந்தகனியையும் முலையையுங்கொண்டு ஒருபூங்கொடி தோன்றாநின்றதெனத் தலைமகளதுருவை நினைந்தம்மேற்போகமாட்டாது மீளலுற்றுச் சுரத்திடைநில்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சேணுந்திகழ்மதிற்சிற்றம்பலவன்றெண்ணீர்க்கடனஞ் *
சூணுந்திருத்துமொருவன்றிருத்துமுலகினெல்லாங் *
காணுந்திசைதொறுங்கார்க்கயலுஞ்செங்கனியொடுபைம் *
பூணும்புணர்முலையுங்கொண்டுதோன்றுமொர்பூங்கொடியே. ()

பொருள்வயிற்பிரிந்த வொளியுறுவேலவன்
ஓங்கெழிற்கடத்துப்பூங்கொடியைநினைந்தது.

(இ-ள்.) சேய்மைக்கண்ணும்விளங்கும் மதிலையுடையசிற்றம்பலத்தையுடையான் தெளிந்தநீரையுடையகடலின்நஞ்சை உணவாகவுஞ்செய்யுமொப்பிலாதான், அவனாற்செய்யப்பட்ட வுலகினெங்கும் பார்க்குந் திசைதோறுங் கண்ணாகியகரியகயல்களையும் வாயாகியசெய்யகனியோடும் பசும்பொன்னானியன்றபூணையுந் தம்முட்புணர்ந்தமுலைகளையுமுடைத்தாய் ஒருபூங்கொடி தோன்றாநின்றது. எ-று.

நஞ்சுண்டலையுங்குற்றநீக்குமென வுரைப்பினுமமையும். ஊணுந்திருத்துமென்பது அதுசெய்யுந்தன்மையனென்னும்பொருட்டாகலின், நிகழ்காலத்தாற்கூறினார். (௩௪௧)

நெஞ்சொடுநோதல்.

நெஞ்சொடுநோதலென்பது-மீளநினைந்ததலைமகன், பின்னும் பொருண்மேற்செல்லாநின்ற வுள்ளத்தனாய் நின்று மீளமாட்டாது, இவ்விரண்டனுள் இப்பொழுது நீயேதுக்குப்போகமுயல்கின்றாயெனத் தன்னெஞ்சொடுநொந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பொன்னணியீட்டியவோட்டருநெஞ்சமிப்பொங்குவெங்கா *
னின்னணிநிற்குமிதென்னென்பதேயிமையோரிறைஞ்சு *
மன்னணிதில்லைவளநகரன்னவன்னநடையாள் *
மின்னணிநுண்ணிடைக்கோ பொருட்கோநீவிரைகின்றதே. ()

வல்லழற்கடத்து மெல்லியலைநினைந் து
வெஞ்சுடர்வேலோ னெஞ்சொடுநொந்த து.

(இ-ள்.) பொற்றிரளையீட்டுவாமென்றோட்டந்தருநெஞ்சமே, இப்பொழுது நீவிரைகின்றது, இமையோர்சென்று வணங்குமன்னனது அழகியதில்லையாகிய வளநகரையொக்கும் அன்னத்தினடை போலு நடையையுடையாளது மின்போலும்நுண்ணியவிடைக்கோ, ஈட்டிக்கொண்டபொருட்கோ, இரண்டற்குமல்லவோ, இவ்வழல்பொங்கு வெங்கானத்தைச்சேர்ந்து போவதும் மீள்வதுஞ் செய்யாது நிற்கின்றவிஃதியாதென்றுசொல்லப்படுவது! எ-று.

நண்ணியென்பது நணியெனவிடைக்குறைந்துநின்றது. அணியென்றுபிரித்து வெங்கானின்கணணித்தாக நிற்பதென்றுரைப்பினுமமையும். இமையோரிறைஞ்சுந்தில்லைவளநகரென்னிலையும்.

நெஞ்சொடுபுலத்தல்.

நெஞ்சொடுபுலத்தலென்பது-நெஞ்சொடுநொந்துகூறுநின்றவன், பேயிடத்துஞ்செய்தலரிதாம்பிரிவை இவளிடத்தேயெளிதாக்குவித்துச் செய்த்தாகிய இவ்விடத்துப்போந்த நின்னுசிக்கனவுக்கஞ்சத்தக்கதெனப் பின்னும் அந்நெஞ்சொடு புலந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

நாய்வயினுள்ளகுணமுமில்லேனைநற்றொண்டுகொண்ட *
தீவயின்மேனியன்சிற்றம்பலமன்னசின்மொழியைப் *
பேய்வயினும்மரிதாகும்பிரிவெளிதாக்குவித்துச் *
சேய்வயிற்போந்தநெஞ்சேயஞ்சத்தக்கதுன்சிக்கனவே. (௩௬௩)

அழற்கடத் தழுக்கமிக் கு
நிழற்கதிர்வேலோ னினைவொடிய து.

(இ-ள்.) நாயினிடத்துள்ள நன்மையுமில்லாத வெள்ளை நல்ல தொண்டாகக்கொண்ட தீயிடத்துநிறம்போலு நிறத்தையுடையவனது சிற்றம்பலத்தையொக்குஞ் சிலவாகியமொழியையுடையாளிடத்துப் பேயினிடத்துஞ் செய்தலரிதாம்பிழைவ ளெதாக்குவித்துச் சேய்த்தாகிய இவ்விடத்துப்போந்த நெஞ்சமே, உனதுநின்னைவு அஞ்சத்தக்கது. எ-று.

நற்றொண்டென்புழி நன்மை சாதியடை. சின்மொழியையென்னுமிரண்டாவது ஏழாவதன்பொருட்கண்வந்தது. (௩௪௩

நெஞ்சொடுமெறுத்தல்.

நெஞ்சொடுமெறுத்தலென்பது- நெஞ்சொடுபுலர்ந்துகூறிப் பின்னும் பொருண்மேற்செல்லாநின்றவுள்ளத்தோடு தலைமகளை நினைந்து, இத்தன்மைத்தாகிய பொன்னைவிட்டு வேறுபொன்றேடியோ, எம்மைவாழச்செய்வது, இதற்கியாமுடம்படேம் நாமேநடக்கவெனச் செலவுடம்படாது பொருள்வலித்தநெஞ்சொடுமறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

தீமேவியநிருத்தன்றிருச்சிற்றம்பலமனைய *
பூமேவியபொன்னைவிட்டுப்பொன்றேடியிப்பொங்குவெங்கா *
னாமேநடக்கவொழிந்தனம்யாநெஞ்சம்வஞ்சியன்ன *
வாமேகலையைவிட்டோபொருடேர்ந்தெம்மைவாழ்விப்பதே.()

நீணெறிசென்ற நாறிணர்த்தாரோ ன்
சேணெறியஞ்சி மீணெறிசென்ற து.

(இ-ள்.) நெஞ்சமே, தீயைப்பொருந்திய நிருத்தத்தையுடையவனதுதிருச்சிற்றம்பலத்தையொக்கும் பூவின்கண்மேவியபொன்னைவிட்டு வேறுபொன்னைத்தேடாநின்று இவ்வழல்பொங்கும் வெங்கானின் நாமே நடப்பீராயின், யாமொழிந்தேம், பொருடேடியெம்மைவாழச்செய்வது வஞ்சியையொக்கு மழகியமேகலையையுடையாளை விட்டோ, யாமிதற்குடம்படேம். எ-று.

இதுவும்பெருந்திணைப்பாற்படும். மீளநினைந்த துணையல்லது மீண்டிலனென்பார் மீணெறியையுள்ளத்தாற்சென்றதென்றுரைப்ப. இப்பாட்டு நான்கிற்கும் மெய்ப்பாடு - அச்சம். பயன்-செலவழுங்குவித்தல். (௩௪௪)

நாளெண்ணிவருந்தல்.

நாளெண்ணிவருந்தலென்பது - தலைமகனதுவரவுநீட்டநினைந்துவருந்தாநின்ற தலைமகளதுவருத்தங்கண்டதோழி, இவளைநோ

ம்பொருந்தச்சென்றவர்சென்றநாளை எண்ணுந்தன்மையாற் பலகாலிடுதலின் நிலனுங்குழிந்து விரலுந்தேய்ந்ததெனை, அவன்சென்றநாளெண்ணி வருந்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தெண்ணீரணிசிவன்சிற்றம்பலஞ்சிந்தியாதவரிற் *
பண்ணீர்மொழியிவளைப்பையுளெய்தப்பனித்தடங்க *
ணுண்ணீருகவொளிவாடநீடுசென்றார்சென்றநா *
ளெண்ணீர்மையினிலனுங்குழியும்விரல்விட்டறவே. (௩௪௫)

சென்றவர்திறத்து நின்றுநனிவாடுஞ்
சூழிருங்கூந்தற்குத்தோழிநனிவாடியது.

(இ-ள்.) தெண்ணீரைச்சூடியசிவனது சிற்றம்பலத்தைச்சிந்தியாதவரைப்போல வருந்தப் பண்ணீர்மையையுடைய மொழியையுடையவிவளை நோய்பொருந்தக் குளிர்ச்சியையுடையபெரியகண்ணகத்து நீர்வார, மேனியொளிவாட, காலநீடப் பிரிந்தவர் பிரிந்தநாளை எண்ணுந்தன்மையாற் பலகாலிடுதலின் விரல்தேய நிலனுங்குழியும், இனியெங்ஙனமாற்றும்! எ-று.

ஒளிவாடினவென்பது பாடமாயின், விரலிட்டென்பதனைத் தோழிமேலேற்றுக. மெய்ப்பாடு- அழுகை. பயன் - தலைமகளை யாற்றுவித்தல். (௩௪௫)

ஏறுவரவுகண்டிரங்கியுரைத்தல்.

ஏறுவரவுகண்டிரங்கியுரைத்தலென்பது- பொருண்முற்றிமீளலுறாநின்றதலைமகன், மாலைக்காலத்து நாகொடுவாராநின்ற ஏறுவரவுகண்டு, இச்சிறந்தசெக்கர்மாலை அவள் பொறுக்குமளவன்றென இரங்கிக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சுற்றம்பலமின்மைகாட்டித்தன்றொல்கழறந்ததொல்லோன் *
சிற்றம்பலமனையாள்பரமன்றுதில்லைக்கோட்டின்வண்ணப் *
புற்றங்குதர்ந்தநன்றுகொடும்பொன்ஞார்மணிபுலம்பக் *
கொற்றமருவுகொல்லேறுசெல்லாநின்றகூர்ஞ்செக்கரே. (௩௪௬)

நீடியபொன்னி னெஞ்சநெகிழ்ந் தனி
வாடியவன் வரவுற்றது.

(இ-ள்.) திண்ணியகோட்டான் திறத்தையுடையபுற்றையிடந்து இரும்பார்ந்தமணியொலிப்ப வெற்றியைப்பொருந்தின கொல்லவல்ல ஆனேறு நல்லநாவோடும் ஊர்வயிற்செல்லாநின்றன, சிறக்குஞ்செக்கர்வானையுடையமாலை, சுற்றத்தார்ப்பற்றின்மையையறிவித்துப் பிறவிமருந்தாதற்குப் பழையவாய்வருகின்ற தன்கழ

க்களையெனக்குத்தந்த பழையோனது சிற்றம்பலத்தையொப்பா ளாதளவன்று, இனியென்னாகுவள்! எ-று.

சுற்றம்பயனையுடைத்தன்மையெனினுமமையும். மன்னைப்பு ற்றென்பதூஉம் பாடம். நேடியபொன்னிமெனஃபது பாடமா யின், நேடுதல்-தேடுதல். மெய்ப்பாடு-அச்சம். பயன்-தேர்ப்பா கன் மீள்வதற்கொருப்படுதல். (௩௪௬)

பருவங்கண்டிரங்கல்.

பருவங்கண்டிரங்கலென்பது-ஏறுவரவுகண்டிரக்கமுற்றுவாரா நின்ற தலைமகன், இம்முகில்கள் ஒன்றோடொன்று தம்மில்விரவு தலாற் பொழில்கடோறும் மயில்கள் திரண்டாடாநின்ற இக்கார் காலத்து, அவளென்னை நினைந்தாற்றாளாங்கொல்லோவென அப்ப ருவங்கண்டிரங்காநிற்றல். அதற்குச்செய்யுள்.

கண்ணுழையாதுவிண்மேகங்கலந்துகணமயிலொக் ✱
கெண்ணுழையாத்தழைகோலிநின்றாலுமினமலர்வாய் ✱
மண்ணுழையாவுமறிதில்லைமன்னனதின்னருள்போற் ✱
பண்ணுழையாமொழியாளென்னளாங்கொன்மன்பாவியற்கே. ()

மன்னியபருவ முன்னியசெலவின்
இன்னலெய்தி மன்னனேகியது.

(இ-ள்) விண்ணிடத்து முகில்கள் ஒன்றோடொன்றுவிரவுதலா ற் கண்சென்றுநுழையமாட்டாது இனமலரையுடையவிடமெங் கும் மயிலினங்கள் திரண்டு எண்சென்றுபுகாத பீலியைவிரித்து நின்றாடாநிற்கும், மண்ணிடத்தெல்லாவுயிர்களுமறியுந்தில்லையின் மன்னனது இனியவருள்போலும் பண்ணையொத்தமொழியை யுடையாள், தீவினையேற்கு எத்தன்மையளாமோ! அறிகின்றி லேன். எ-று.

எண்ணென்பது- உணவாகியவெண்ணென்பாருமுளர். பண் ணுழையாமொழியென்பதற்குப் பண்ணைப்பட்டவுழையாகிய ந ரம்புபோலும் மொழியாளெனினுமமையும். மன் - அசைநிலை. மன்னியபருவமுன்னியசெலவி னின்னலெய்தி- நிலைபெற்றபருவ த்து முற்பட்டசெலவினான் வருத்தமெய்தி. மெய்ப்பாடும்பய னும்-அவை. (௩௪௭)

முகிலொடுகூறல்.

முகிலொடுகூறலென்பது- பருவங்கண்டிரங்கி விரைவோடுவா ராநின்றதலைமகன், இவ்விடத்தெல்லாம் முற்பட்டாயாயினும் மு

றுபெண்டிர் திரண்டு அவளின்னாமையைநீக்கற்கு இல்லுறைகட வுட்குப் பூசனைசெய்யாநிற்கும் நீணகரத்திற்கு என்னின்முற்ப டாதொழிவாயாகவென, முந்துற்றுச்செல்லாநின்ற முகிலொடு கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

அற்படுகாட்டினின்றாடிசிற்றம்பலத்தான்மிடற்றின் *
முற்படுநீண்முகிலென்னின்முன்னேன்முதுவோர்குழுமி *
விற்படுவாணுதலாள்செல்லறீர்ப்பான்விரைமலர்தூய் *
நெற்படுவான்பலிசெய்தயராநிற்குநீணகர்க்கே. (௩௪௮)

எனைப்பலதுயரமோடேகாநின்றவன்
றுணைக்காதற்குத் துணிந்துசொல்லியது.

(இ-ள்.) மாலைக்காலத்து இருளுண்டாகாநின்றபுறங்காட்டின்க ண் நின்றாடுவான், சிற்றம்பலத்தின்கண்ணுளான், அவனது மிட றுபோலவிருண்டு முற்படாநின்ற நீண்டமுகிலே, இவ்விடத்தெ ல்லாம் முற்பட்டாயாயினும், முதுபெண்டிர் திரண்டு விற்போலு மொளிநுதலாளது இன்னாமையை நீக்கவேண்டி நறுநாற்றத்தை யுடைய மலர்களைத் தூவி நெல்விரவிய தூயபலியைக்கொடுத்து இல்லுறைகடவுட்குப் பூசனைசெய்யாநிற்கும் பெரியவில்லத்திற் கு என்னின்முற்படாதொழி. எ-று.

வான்பலிசெய்தயராநிற்குமென்பதற்குப் பலிகொடுத்து விரிஞ் சியபராநிற்குமெனினுமமையும். ஆடுசிற்றம்பலவனென்பதூஉம் பாடம். துணைக்கார்-விரைவையுடையகார். துணைக்காரென்பது பா டமாயின், இனத்தையுடையமுகிலென்றுரைக்க. மெய்ப்பாடு- அ து. பயன்-பாகன்றேரைவிரையக்கடாவுதல். (௩௪௮)

தேர்வரவுகூறல்.

தேர்வரவுகூறலென்பது - பொருள்வயிற்பிரிந்ததலைமகன் மு கிலொடுவந்துபுகாநிற்ப, இம்முகில் இவளதாவியைவெகுளாநின் றகாலத்து ஒருதேர்வந்து காத்தமையான் இனிவரக்கடவதனை வெல்லுமாறில்லையெனத் தோழி தலைமகளுக்குத் தேர்வரவு கூறு நிற்றல். அதற்குச்செய்யுள்.

பாவியைவெல்லும்பரிசில்லையேமுகில்பாவையஞ்சீ *
றாவியைவெல்லக்கருக்கின்றபோழ்தத்தினம்பலத்துக் *
காவியைவெல்லுமிடற்றோனருளிற்கதுமெனப்போய் *
மேவியமாநிதியோடன்பர்தேர்வந்துமேவினதே. (௩௪௯)

வேந்தன்பொருளொடு விரும்பிவருமெ ன
ஏந்திழைப்பாங்கி யினிதியம்பிய து.

(இ-ள்.) முகில் பாவையதழகியசீர்மையையுடையவுயிரைச் செகுப்பான்கருதுநின்றபொழுதின்கண், அம்பலத்தின்கணுளனாகிய நீலப்பூணவல்லவமிடற்றையுடையவனதருள்போலப்போய்த்தேடிய பெருநிதியோடு அன்பர்தேர் கதுமெனவந்துபொருந்திற்று, அதனால வரக்கடவதனைவெல்லுமாறில்லையேபோலும். எ-று.

இனி ஒருவாற்றானும் இவளுயிர்வாழ்தலரிதென்றிருந்தனம் இதுபாவியாதலின் இற்றைப்பொழுதிகவாது தேர்வந்ததென்னுங்கருத்தாற் பாவியைவெல்லும்பரிசில்லையேயென்றாள். தமியரா அற்றம்பார்த்துவெல்லக்கருதிச் சிலர்வெகுள்கின்றகாலத்து அத்தமியார்க்குத் துணையாயொருதேர்வந்துகாத்ததென வேறுமொருபொருள் விளங்கினவாறறிக. அருளின்மேவியதெனவியையும். அருளான்வந்துமேவிற்றெனினுமமையும். மெய்ப்பாடு - பெருமிதம். பயன்-ஆற்றுவித்தல். (௩௪௯)

இளையரெதிர்கோடல்.

இளையரெதிர்கோடலென்பது- தோழி தலைமகட்குத் தேர்வரவுகூறாநிற்ப, இந்நிலைமைக்கண், இவளாவிசெல்வதற்குமுன்னே, சூழுந்தொகுநிதியோடு அன்பர்தேர் வந்துதோன்றிற்று, இனியூழின்வலியது வேறொன்றுமில்லையெனப் பொருண்முடித்துவாராநின்ற தலைமகனைச் சென்று இளையர் எதிர்கொள்ளாநிற்றல். அதற்குச்செய்யுள்.

யாழின்மொழிமங்கைபங்கன்சிற்றம்பலத்தானமைத்த *
ஊழின்வலியதொன்றென்னையொளிமேகலையுகளும் *
வீழும்வரிவளைமெல்லியலாவிசெல்லாதமுன்னே *
சூழுந்தொகுநிதியோடன்பர்தேர்வந்துதோன்றியதே. (௩௫௦)

செறிகழலவன் றிருநகர்புகுத ர
எறிவேலிளைஞ ரெதிர்கொண்ட து.

(இ-ள்.) ஒளியையுடையமேகலை தன்னிலையினின்றும்போகாநின்றது, வரியையுடையவளைகள் கழன்றுவீழாநின்றன, இந்நிலைமைக்கண் மெல்லியலுயிர்செல்வதற்குமுன்னே சூழ்ந்துவருந்திரண்டநிதியோடு அன்பரதுதேர் வந்துதோன்றிற்று, அதனான் யாழோசைபோலுமினியமொழியையுடையமங்கையது கூற்றையுடையான், சிற்றம்பலத்தின்கண்ணான், அவனாலமைக்கப்பட்டன ஊ

றின்வலியதோன்றியாது! எ-று.

மெய்ப்பாடு-உவகை. பயன்-மெய்ம்மகிழ்தல். (௯௰)

உண்மகிழ்ந்துரைத்தல்.

உண்மகிழ்ந்துரைத்தலென்பது- பொருண்முடித்து இனிதாக வெதிர்கொள்ளவந்து புகுந்ததலைமகன், தலைமகளுடன் பள்ளியிடத்தனாயிருந்து, இம்மானைப்பிரிந்து பொருள்தேட யான்வெய்யசுரஞ்சென்றதுன்பமெல்லாம் இவள்கொங்கைகள் என்னுறுப்புக்களிடைமூழ்க இப்பூவணைமேலணைபாமுன்னம் தவள்வுற்றதெனத் தன்னுள்ளே மகிழ்ந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மயின்மன்னுசாயலிம்மானைப்பிரிந்துபொருள்வளர்ப்பான் ✻
வெயின்மன்னுவெஞ்சுரஞ்சென்றதெல்லாம் விடையோன்புலியூர்க்
குயின்மன்னுசொல்லிமென்கொங்கையென்னங்கத்திடை.குளிப்பத்
துயின்மன்னுபூவணைமேலணைபாமுன்றுவளுற்றதே. (௯௧)

பெருநிதியோடு திருமனைபுகுந்தவன்
வளமனைக்கிழத்தியோ டுளமகிழ்ந்துரைத்தது.

(இ-ள்.) மயில்போலுமென்மையையுடைய இம்மானைப்பிரிந்து பொருளையீட்டுவான் வெயினிலைபெற்ற வெய்யசுரத்தைச்சென்ற துன்பமெல்லாம் விடையையுடையவனது புலியூரிடத்துளவாகிய குயிலோசைபோலுஞ்சொல்லையுடையாளுடைய மென்மையவாகிய கொங்கைகள் என்னுறுப்புக்களினிடை மூழ்கும்வகை துயினிலைபெறும் பூவணையிடத்தணைவதன்முன்னம் மாய்ந்தது. எ-று.

இம்மாவென்றது, பிரிதற்கரியவித்தன்மையவென்றவாறு. எல்லாமென்பது முழுதுமென்னும்பொருள்பட நிற்பதோருரிச்சொல். பன்மையொருமை மயக்கமென்பாருமுளர். மெய்ப்பாடும்பயனும்-அவை. பயன் மகிழ்வித்தலுமாம். (௯௧)

பொருள்வயிற்பிரிவு முற்றிற்று.

பரத்தையிற்பிரிவு.

இனிப் பரத்தையிற்பிரிதலென்பது-தலைமகளைவரைந்தெய்தியபின்னர், வைகலும் பாலேநுகர்வாரொருவன் இடைமேய டளிங்காடியுநுகர்ந்து அதனினிமையறிந்தாற்போல, அலனுகர்ச்சியினிமையறிதற்குப் புறப்பெண்டிர்மாட்டுப் பிரியாநிற்றல். அவ்வதூஉம், பண்ணும்பாட்டுமுதலாயின காட்டிப் புறப்பெண்டி

ர் தன்னைக்காதலித்தாற்றுனெல்லார்க்குந் தலைவனாகலின் அவர்க்குமின்பஞ்செய்யப் பிரியானிற்றலென்றவாம். அல்லதூஉம், தலைமகளோடூடலறிவித்தற்குப் பிரிதலென்றுமாம். இவ்வாறொழிந்து தனக்கின்பம்வேண்டிப்பிரிவனாயின், "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு- மொண்டொடி கண்ணே யுள" என்பதனால், இவனுக்குத் தலைமகளென்னும்பெயரோடுமாறுபட்டுத் தனது பெருமையோடு மாறுபடாநிற்கும்.

அதுவருமாறு- சூத்திரம். கண்டவர்கூறல் காதற்றோழி, பொறையுவந் துரைத்தல் பொதுப்படக்கூறி, வாடியபழுங்கண் மாறுகொண்டவனொடு, கனவிழந் துரைத்தல் விளக்கொடுவெறுத்தல், வாரம்பகர்ந்து வாயின்மறுத்தல், பள்ளியிடத்தூடல் பணிமொழியாடன், செவ்வணிவிடுக்கவில்லோர்கூறல், அயலறிவுரைத்தவளழுக்கமெய்தல், செவ்வணிகண்ட வாயிலவர்கூறல், மனைபுகல்கண்ட வாயிலவர்கூறல், முகமலர்ச்சிகூறன் முனிவதென்னெனக், காலநிகழ்வுரைத்தல் கலவியெய்தலை, யெடுத்துரைத்தலொடுகலவிகருதிப், புலத்தல்குறிப்பறிந்து புலந்தமைகூறல், வாயிலவர்வாழ்த்தல் புனல்வரவுரைத்த, றேர்கண்டுமகிழ்தல் சேடியர்விழவித், தம்முனுரைத்த றன்னைவியத்த, னகைத்துரைத்தலொடு நாண்கண்டுரைத்தல், பாணன்வரவுரைத்தல் பாங்கியிற்பழிக்க, லிழையரிபற்பழித்த லொண்ணுதலாளவற், கியற்படமொழித வியப்புனைந்துரைத்தல், வாயில்பெறுது மகன்றிறநினைதல், வாயிற்கணின்று தோழிக்குரைத்தல், வாயில்வேண்டத் தோழிகூறன், மன்னியதோழி வாயில்வேண்டன், மனையவர்மகிழ்தல் வாயின்மறுத்தல், பாணனொடுவெகுடல் பாணன்புலத்தல், விருந்தொடுசெல்லத் துணிந்தமைகூற, லூடறணிவித்த லணைந்தவழிகூடல், புனலாட்டுவித்தமை கூறிப்புலத்தல், கலவிகருதிப் புலவிபுகறன், மிகுத்துரைத்தூடல் விறல்வேற்காளை, யூடனீட வாடியுரைத்த, றனிமொழிந்துரைத்த றகவொன்றில்லாப், புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல், கலவியிடத்தூடன் முன்னிகழ்வுரைத்தல், பரத்தையைக்கண்டமை பயன்படக்கூற, லூதியமெடுத்துரைத் தூடறீர்த்த, லென்னுமொன்றிவை பரத்தையிற்பிரிவெனப், பண்ணார்மொழியாய் பகர்ந்திசினோரே.

(இ-ள்.) கண்டவர்கூறல்- பொறையுவந்துரைத்தல்- பொதுப்படக்கூறிவாடியபழங்கல்-, கனவிழந் துரைத்தல்- விளக்கொடுவெறுத்தல்- வாரம்பகர்ந்து வாயின்மறுத்துரைத்தல்- பள்ளியிடத்தூடல்

செவ்வணிவிடுக்க வில்லோர்கூறல் - அயலறிவுரைத்தவளழுக்கமெய்தல் - செவ்வணிகண்டவாயிலவர்கூறல் - மனைபுகல்கண்டவாயிலவர்கூறல் - மூகமலர்ச்சிகூறல் - காலநிகழ்வுரைத்தல் - எய்தலெடுத்துரைத்தல் - கலவிகருதிப்புலத்தல் - குறிப்பறிந்துபுலந்தமைகூறல் - வாயிலவர்வாழ்த்தல் - புனல்வரவுரைத்தல் - தேர்வரவுகண்டுமகிழ்ந்துகூறல் - புனல்விளையாட்டிற் றம்முளுரைத்தல் - தன்னைவியந்துரைத்தல் - நகைத்துரைத்தல் - நாணுதல்கண்டுமிகுத்துரைததல் - பாணன்வரவுரைத்தல் - தோழிபியற்பழித்தல் - உழையரியற்பழித்தல் - இயற்படமொழிதல் - நினைந்துவியந்துரைத்தல் - வாயில்பெறாதுமகன்றிறநினைதல் - வாயிற்கணின்றுதோழிக்குரைத்தல் - வாயில்வேண்டத்தோழிகூறல் - தோழிவாயில்வேண்டல் - மனையவர்மகிழ்தல் வாயின்மறுத்துரைத்தல் - பாணனொடுவெகுடல் - பாணன்புலந்துரைத்தல் - விருந்தொடுசெல்லத்துணிந்தமைகூறல் - ஊடறணிவித்தல் - அணைந்தவழியூடல் - புனலாட்டுவித்தமைகூறிப்புலத்தல் - கலவிகருதிப்புலத்தல் - மிகுத்துரைத்தூடல் - ஊடனீடவாடியுரைத்தல் - துனிமொழிந்துரைத்தல் - புதல்வன்மேல்வைத்துப்புலவிதீர்தல் - கலவியிடத்தூடல் - முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தல் - பரத்தையைக்கண்டமைகூறிப்புலத்தல் - ஊடியமெடுத்துரைத்தூடறீர்த்தல் என விவை நாற்பத்தொன்பதும் பரத்தையிற்பிரிவாம். எ-று.

அவற்றுள்,—

கண்டவர்கூறல்.

கண்டவர்கூறலென்பது - தலைமகன் பரத்தையர் சேரிக்கட்செல்லாநிற்ப, அப்பரத்தையர் அவனை யொருங்கெதிர்கொண்டு சுற்றும்பற்றிப்போர்செய்யாநின்றமையின், இஃதிவன்காதலிமாட்டென்றுமென அவ்விடத்துக், கண்டவர் தம்முட்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

உடுத்தணிவாளரவன்றில்லையூரன்வரவொருங்கே *
யெடுத்தணிகையேறினவளையார்ப்பவிளமயிலேர் *
கடுத்தணிகாமர்கரும்புருவச்சிலைகண்மலரம் *
படுத்தணிவாளிளையோர்சுற்றும்பற்றின்ர்மாதிரமே. (௯௫௨)

ஊரத்தருவேலோன் பரத்தையிற்பிரிய த்
திண்டேர்வீதியிற் கண்டோருரைத்த து.

(இ-ள்.) கச்சாகவும் உடுத்தணியாகவுமணிந்த வாளரவையுடையவனது தில்லைக்கணுள்ளதாகியவூரன் இவ்வீதிக்கண்வர, தெரிந்த

ணியப்பட்ட கைக்கணுள்ளவாகிய இனவளைகளொலிப்ப, இளமயிலெழிலையொத்து, மிக்கவழகையுடைய கரியபுருவமாகியவில்லோடு கண்மலராகியவம்பைச்சேர்த்தி, அணிகளுண்டாகியவொளியையுடைய மகளிர் ஒருங்கே சுற்றுந்திசைகளைப்பற்றினர், இனித்திவன்காதலிமாட்டென்னும்! எ-று.

அணி காமர் என்பன ஒருபொருட்கிளவியாய், மிகுதிதோன்ற நின்றன. ஒன்றாகவெழுந்து அணியினுங் கையினுமுளவாகிய சங்கொலிப்ப இளமைக்கணுண்டாகிய வுள்ளவெழுச்சிமிக்கு வில்லோடம்பையெடுத்துப் பற்றி அரைக்கணியப்பட்டவுடைவாளையுடைய இளையோர் திசைமுழுதுஞ்சூழ்ந்து பற்றினரெனப் பிறிதுமோர்பொருடோன்றி நிற்றவாறுகண்டுகொள்க. கருப்புருவச்சிலையென்பது பாடமாயின், புருவமாகியகாமனது உட்கையுடையகருப்புச்சிலையோடு கண்ணாகிய கள்ளையுடையமலரம்பையெடுத்தென்றுரைக்க. சுற்றம்பற்றியமாதிரமென்பது பாடமாயின், சுற்றம்பற்றி மேவாதிற்ப, அவ்விடத்து நகைக்குறிப்பாலெடுக்கப்பட்டு இவர்கைகள் வளையொலிப்பத் தலைமேலேறினவெனக் கூட்டியுரைக்க. இதற்குச் சுற்றம்பற்றிப் போர்செய்யாதிற்பப் படைக்கலமெடுத்துச் சங்கொலிப்ப அணியுங்கையுமொருங்கெழுந்தனவெனப் பிறிதுமொருபொருளாகக்கொள்க. இதற்குப் பிறவுரைப்பாருமுளர். ஊரத்தகுவேல் - ஊரத்தாற்றக்கவேல். மெய்ப்பாடு-மருட்கை, வியப்பாகலின். பயன்-பிரிவுணர்த்துதல்.

பொறையுவந்துரைத்தல்.

பொறையுவந்துரைத்தலென்பது - தலைமகனைப்பரத்தையரெதிர்கொண்டமைகேட்டதலைமகள் நெஞ்சுடைந்து புறத்துவெளிப்படாமற்பொறுத்தமைகண்டதோழி, யானிவ்வாறாகவும் கலங்காதுநின்றபெரும்பொறையாட்டியை யான் இன்றுபேசவன் என்னென்று அவளையுவந்துகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சுரும்புறுகொன்றையன்றொல்புலியூர்ச்சுருங்குமருங்குற் *
பெரும்பொறையாட்டியையென்னின்றுபேசுவபேரொலிநீர்க் *
கரும்புறையூரன்கலந்தகன்றனென்றுகண்மணியு *
மரும்பொறையாகுமென்னாவியுந்தேய்வுற்றழிகின்றதே. (௩௫௩)

கள்ளவிழ்கோதையைக் காதற்றோழி
உள்ளவிழ்பொறைகண் டுவந்துரைத்தது.

(இ-ள்.) பெரியவொலிக்குநீரையுடைய கரும்புதங்குமூரையுடையவன் கலந்துவைத்துநீங்கினனென்று கருதுதலான் என்க

ண்மணியும் பயனின்மையாற் றுஞ்சுதற்கரிய பாரமாகாநின்றன, எனதுயிருந் தேய்ந்தழியாநின்றது, யானிவ்வாறாகவுங் கலங்காது நின்ற பெரும்பொறையையுடையவளே யான் இன்றுபேசுவன வென்! எ-று. சுரும்புகள்வாழுங்கொன்றைப்பூவினையுடையானது பழையதாகியபுலியூரிற் சுருங்கினமருங்குலையுடையபெரும்பொறையாட்டியையெனக்கூட்டுக.

என்கண்மணியுந்தேய்வுற்றழியாநின்றது ஆவியுமரும்பொறையாகாநின்றதென்று கூட்டுவாருமுளர். உள்ளவிழ்பொறை- நெஞ்சுடைந்துபுறத்துவெளிப்படாதபொறை. மெய்ப்பாடு- அழுகையைச்சார்ந்தவுவகை. பயன்-தலைமகளைவியத்தல். (௩௱௩)

பொதுப்படக்கூறிவாடியழுங்கல்.

பொதுப்படக்கூறிவாடியழுங்கலென்பது - பொறையுவந்துரைத்ததோழிக்கு, முன்னிலைப்புறமொழியாக, தமது நலங்கவரக் கொடுத்து வேறு துணையின்மையிற் றமதணையையே தமக்குத்துணையாகக்கொண்டுகிடந்து என்னைப்போலவுயிர்தேய்வார் இனி யாவரோவெனப் பொதுப்படப் பரத்தையர்க் கிரங்குவாள்போன்று, தலைமகனது கொடுமைநினைந்துவாடாநிற்றல். அதற்குச்செய்யுள்.

அப்புற்றசென்னியன் றில்லையுறாரினவருறுநோ *
யொப்புற்றெழினலமூரன்கவரவுள்ளும்புறம்பும் *
வெப்புற்றுவெய்துயிர்ப்புற்றுத்தம்மெல்லணையே துணையாச் *
செப்புற்றகொங்கையர்யாவர்கொலாருயிர்தேய்பவரே. (௩௱௪)

பொற்றிகழரவன் மற்றிகழ்தில்லை ப்
பிரிந்தவூரனோ டிருந்துவாடிய து.

(இ-ள்.) நீரடைந்தசென்னியையுடையவனது தில்லையை மனமொழிமெய்களாலணுகாதாரைப்போலக் கண்ணோட்டமின்றி எழிலையுடைய நலத்தை ஊரன்கவர்ந்துகொள்ள, அத்தில்லையையுறுகாருறுநோயையொத்து அகத்தும்புறத்தும் வெப்பத்தையுற்று, வெய்தாகவுயிர்த்தலையுற்று, வேறு துணையின்மையிற் றமது மெல்லணையே தமக்குத்துணையாகச் செப்புப்போலுங்கொங்கையையுடையமகளிர் ஆருயிர்தேய்வார் பிறர்யாரோ யானல்லது. எ-று.

இத்தன்மையராய் என்போல இனி யாருயிர்தேய்வார் யாரோவெனப் பரத்தையர்க்கிரங்குவாள்போன்று, தலைமகனதுகொடுமைகூறினாளாகவுரைக்க. தில்லையுறாதவருறுநோயென்பதுபாட

மாயின், எழினலமூரன்கவரத் தில்லையையுறாத அத்தீவினையாருறு நோயையொத்தென்றுரைக்க. ஊரனோடிருந்து வாடியது- ஊரன்குறைகளை நினைந்து அதனோடிருந்துவாடியது. மெய்ப்பாடு- அழுகை. பயன்-ஆற்றாமைநீங்குதல். (௩௫௪)

கனவிழந்துரைத்தல்.

கனவிழந்துரைத்தலென்பது-தலைமகனது கொடுமைநினைந்து கிடந்து வாடாநின்றதலைமகள், கனவிடைவந்து அவன்மார்புதரத் தானதனை நனவென்றுமயங்கிப் புலந்து அவனோடுபுணராதிழந்தமையைத் தோழிக்குச்சொல்லாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தேவாசுரரிறைஞ்சுங்கழலோன்றில்லைசேரலர்போ *
லாவாகனவுமிழந்தேனனவென்றமளியின்மேற் *
பூவாரகலம்வந்தூரன்றரப்புலம்பாய்நலம்பாய் *
பாவாய்தழுவிற்றிலேன்விழித்தேனரும்பாவியனே. (௩௫௫)

சினவிற்றடக்கைத் தீம்புனலூரனைக்
கனவிற்கண்ட காரிகையுரைத்தது.

(இ-ள்.) நலம்பரந்தபாவாய், அமளியின்கண் மாலையையுடைய மார்பை ஊரன்வந்துதர, அவனோடுமேவாமையிற் பின்னுந்தனிமையாய், நனவென்றுமயங்கித் தவறுநினைந்து புல்லிற்றிலேன், அத்துணையேயன்றிப் பொறுத்தற்கரிய தீவினையையுடையேன் விழிப்பதுஞ்செய்தேன், அதனால், தேவருமசுரருமிறைஞ்சுங்கழலையுடையவனது தில்லையைச்சேராதாரைப்போல, ஐயோ! கனவானுவருமின்பத்தையுமிழந்தேன். எ-று.

தில்லைசேரலர்போலென்புழி ஒத்தபண்பு-துன்பமுறுதலும் இன்பமிழத்தலுமாம். (௩௫௫)

விளக்கொடுவெறுத்தல்.

விளக்கொடுவெறுத்தலென்பது-கனவிழந்தமைகூறி வருந்தாநின்ற தலைமகள், நீயாயினுங் கலந்தவர்க்குப்பொய்ம்முகங்காட்டிக் கரத்தல் பொருத்தமன்றென்றிலையேயென விளக்கொடு வெறுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

செம்முகநீலமலர்தில்லைச்சிற்றம்பலத்தாற்குக் *
கைம்முகங்கூம்பக்கழல்பணியாரிற்கலந்தவர்க்குப் *
பொய்ம்முகங்காட்டிக்கரத்தல்பொருத்தமன்றென்றிலையே *
நெய்ம்முகமாந்தியிருண்முகங்கிழிநெடுஞ்சுடரே. (௩௫௬)

பஞ்சணைத்துயின்ற பஞ்சிமெல்ல டி
அஞ்சனேடமூங்கிச் செஞ்சுடர்க்குரைத்த து.

(இ-ள்.) நெய்ம்முகத்தைப்பருகி இருண்முகத்தைக்கிழிக்கும் நெடியசுடரோ, எம்மைக்கலந்தவர்க்குப் பொய்மையுடையமுகத்தைக்காட்டித் தெளிந்தாரைவஞ்சித்தல் தகுதியன்றென் றுகூறிற்றிலையே, வேறுகூறுவார் யாவர். எ-று. செய்ம்முகத்துள்ளவாகிய நீலப்பூ மலராநின்ற தில்லையிற்சிற்றம்பலத்தின்கணுளனாகிய அரனுக்குக் கைம்முகங்குவியக் கழலைப்பணியாதாரைப்போலக் கண்ணோட்டமும் மெய்ம்மையுமின்றிக் கரத்தலெனக்கூட்டுக.

செய்ம்முகம்-செய்ம்முன். கைம்முகம்-கைத்தலம். கரத்தல்-மறைத்தலெனினுமமையும். நெய்ம்முகம்- சுடராயணைந்தவிடம். நெய்ம்முகமாந்தி யிருண்முகங்கீழு நெடுஞ்சுடரோ என்றது உணவாகியநெய்யை மாந்தி மேனியொளியை யுடையையாய்ப் பகைசெகுக்கும் பெருமையையுடையையாதலின் அக்களிப்பினாற்கண்டதுகூறிற்றிலை. எ-று. இவையிரண்டற்கும் மெய்ப்பாடும் பயனும்-அவை. (௩௯௬)

வாரம்பகர்ந்துவாயின்மறுத்துரைத்தல்.

வாரம்பகர்ந்துவாயின்மறுத்துரைத்தலென்பது- விளக்கொடுவெறுத்துவருந்தாநின்றதலைமகள், தலைமகன் பரத்தையிற்பிரிந்துவந்து வாயிற்கணிற்ப, வண்டோரணையர் ஆடவர், பூவோரணையர் மகளிராதலால், நாமும் அவன்றலையளிபெற்றபொழுது ஏற்றுக்கொள்வதன்றோ நமக்குக்காரியம், நாம் அவனோடுபுலக்கற்பாலமல்லேமென்று வாயினேர்வித்தார்க்கு, ஊரனது மாலையுந்தோளும் அவ்விடத்துவளைத்துவைத்து வேண்டினூர்கொள்ளவமையும் யான் மன்னனைப் பரத்தையர்க்கு உறுவனையாகக்கொடுத்தேனென மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

பூங்குவளைப்பொலி மாலையுமூரன்பொற்றோளிணையு *
மாங்குவளைத்துவைத்தாரேனுங்கொள்கநள்ளாரரணந் *
தீங்குவளைத்தவில்லோன்றில்லைச்சிற்றம்பலத்தயல்வா *
யோங்குவளைக்கரத்தார்க்கடுத்தோமன்னுறுவனையே. (௩௯௭)

வார்புனலூர னேர்திகழ்தோள்வயி ற்
கார்புரைகுழலி வாரம்பகர்ந்த து.

(இ-ள்.) பொலிவையுடைய குவளைப்பூவானியன்ற பெரியமாலையையும் ஊரனது பொன்போலுந்தோளிணையையுந் தம்மில்லத்துவளைத்துவைத்து வேண்டியார்கொள்வாராக, பகைவரதரணந்

தீங்கெய்த வளைக்கப்பட்டவில்லையுடையவனது தில்லையிற்சிற்றம்பலத்துக்கயலாகியவிடத்துவாழும் உயர்ந்த வளையையுடைய கையையுடையார்க்கு மன்னனை உருவரையாகக்கொடுத்தோம், எ-று.

உருவரை- முற்றூட்டு. தீங்குவளைத்தவில்லோனென்பதற்குத் தீங்கெய்தவென ஒருசொல்வருவியாது அரணத்தைத்தீங்குவளைத்தற்குக்காரணமாகியவில்லென்றுரைப்பினுமமையும். ஓங்குவளைக்கரத்தாரென்புழி- ஓங்குதலை வளைக்கரத்தார்மேலேற்றுக. விலையாயுயர்ந்தவளையெனினுமமையும். அடுத்தோமென்றதனால், தனது நிலைமை கூறினாளாம். மன்- அசைநிலைபாக்கி, மாலையையுந்தோளையுமடுத்தோமெனினுமமையும். மெய்ப்பாடும் பயனும்-அவை. ()

பள்ளியிடத்தூடல.

பள்ளியிடத்தூடலென்பது- வாயின்மறுத்ததலைமகள், ஆற்றாமையே வாயிலாகப் புக்குப் பள்ளியிடத்தானாகிய தலைமகனோடு, நின்னையிடைவிடாதநுகர்தற்கு முற்காலத்துத் தவத்தைச்செய்யாத தீவினையேனை நோவாது, இன்றிவ்வாறாகிய நின்னை நோவதென்னோ, அதுகிடக்க, நின்காதலிமார் பறம்பகற்ற நினக்குப்புதிதாகச்செய்த அப்புல்லுதலை யாஞ்செய்யமாட்டேம், அதனையெம்மைத்தொடாதே, எங்கலையைவிடுவாயாகவெனக் கலவிகருதிப் புலவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

தவஞ்செய்திலாதவெந்தீவினையேம்புன்மைத்தன்மைக்கெள்ளா *
தெவஞ்செய்துநிற்பினின்றுனைநோவதெனத்தன்மூத்தன் *
சிவன்செய்தசீரருளார்தில்லையூரநின்சேயிழையார் *
நவஞ்செய்தபுல்லங்கண்மாட்டேந்தொடல்விடுநற்கலையே (௩௨௮)

பீடிவர்கற்பிற் றேடிவர்கோ தை
ஆடவன்றன்னோடூடியுரைத்த து.

(இ-ள்.) உலகத்துள்ளாரெல்லார்க்குந் தந்தை, இயல்பாகவே பாசங்களினீங்கியவன், எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன், அவனாற்செய்யப்பட்ட சீரியவருணிறைந்த தில்லையிலூரனே, முற்காலத்துத் தவத்தைச்செய்யாத வெய்யதீவினையையுடைய யாம் நின்னாலாதரிக்கப்படாத எமதுபுன்மைத்தன்மைகாரணமாக எம்மையேயிகழாது, நினக்குத்துன்பத்தைச் செய்யாநின்று இப்பொழுது இனிநின்னை நோதலென்னாம்! அதுகிடக்க, நின்னுடைய சேயிழையார் நினக்குப்புதிதாகச்செய்தபுல்லுதல்களை யாமாட்டேம், அதனால் எமது நல்லமேகலையைத் தொடாதொழி, விடுவாயாக. எ-று.

எவ்வம்- எவமெனநின்றது. காதலில்லையாயினுங் கண்ணோட்டமுடைமையான் இகழ்ந்தவாளாவிருப்பமாட்டாமையின், எம்புலவியான் நினக்குத்துன்பமாந்துணையே யுள்ளதென்னுங்கருத்தான், எவஞ்செய்தநின்றென்றாள். இனியென்பது- நீயிவ்வாறுயினையின்னென்னும்பொருட்டாய் நின்றது. இவன்செய்தசிறருளாரில்லையூரவென்றதனான், நின்னாற்காயப்பட்டாராயினுங் காதலிக்கப்படாநின்றாயெனவும், தவஞ்செய்நிலாதவெந்தீவினையேமென்றதனான்; எம்மாற்காதலிக்கப்பட்டாராயினுங் காயப்படாநின்றேமெனவுங் கூறியவாறும். புல்லென்பது புல்லமெனவிரிந்து நின்றது. புல்லமென்பதனைப் புன்மையென்று நின்சேயினழைபார் பதிதாகச்செய்தகுறிகளைப் பொறுக்கமாட்டேமென் றுரைப்பினுமமையும். எவன்செய்துநின்றெனப்பாடமோதி, தவஞ்செய்திலாத வெந்தீவினையேம் இன்றுன்னைநோவது என்செய்துநின்றென்றும் ஈன்னத்தனென் றுமுரைப்பாருமுளர். எள்காதென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-வெகுளி: பயன்-புணர்தல். (௩௰௮)

செவ்வணிவிடுக்கவில்லோர்கூறல்.

செவ்வணிவிடுக்கவில்லோர்கூறலென்பது-இக்கொங்கைகள் தாங்கித் தளராநின்ற மருங்குலையுடைய இவள் வருந்த, இவ்வாயத்தார் முன்னே, அப்பரத்தையர்மனைக்கண் இப்பேதை இக்குறியறிவிக்கச்செல்லாநின்றவிது நமக்குமிகவுமிளிவரவுடைத்தெனச் செவ்வணிவிடுக்கவினையாநின்றவில்லோர் தம்முட்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

தணிபுறப்பொங்குமிக்கொங்கைகடாங்கித்தளர்மருங்குல் ✻
பிணிபுறப்பேதைசென்றின்றெய்துமாலரவும்பிறையு ✻
மணிபுறக்கொண்டவன்றில்லைத்தொல்லாயநல்லார்கண்முன்னே ✻
பணிபுறத்தோன்றுநுடங்கிடையார்கள்பயின்மனைக்கே. (௩௰௯)

பாற்செலுமொழிபார் மேற்செலவிருப்ப ல்
பொல்லாதென்ன வில்லோர்புகன்ற து.

(இ-ள்.) பிறைக்குப்பகையாகிய அரவையும் பிறையையும் அழகுறத் தனக்கணியாகக்கொண்டவனது தில்லையிற் பழைய இளையத்தினுள்ளாராகிய நல்லார்கண்முன்னே அரவுபோலத் தோன்றும் நுடங்குமிடையையுடையார்கள் நெருங்கும் பரத்தையர்மனைக்கண், தணிதலுறும்வண்ணம் வளராநின்ற இக்கொங்கைகளைத் தாங்கித் தளராநின்ற மருங்குலையுடைய இவள் வருந்த இப்

பேதை இன்றுசென்றெய்துமாயிற் பெரிதும் இஃதிளிவரவுடைத்து. எ-று.

இதற்குப் பிறிதுரைப்பாருமுளர். பாற்செலு மொழியார்- புகன்றது - கேட்டார்க்குப் பாலின்கணுணர்வுசெல்லுமொழியையுடைய மகளிர்மேற்சென்று தூதுவிடவிரும்பல் பொல்லாதென இல்லோர்கூறியது. பால்போலுமொழியெனினுமமையும். ஈண்டுச்செல்லுமென்பது உவமைச்சொல். பேதையென்றது-செவ்வணியணிந்துசெல்கின்றமாதரை. மெய்பாடு-நகை; எள்ளற்பொருட்டாகலின். பயன்- தலைமகளைச்செலவழுங்குவித்தல். சிறைப்புறத்தானாக, இல்லோர்சொல்லியது. (௩௱௪)

அயலறிவுரைத்தவளழுங்கமெய்தல்.

அயலறிவுரைத்தவளழுங்கமெய்தலென்பது- இல்லோர் செவ்வணிவிடுக்கநினையாநிற்ப, அயலார்முன்னே இவளால் இகுறிபறிந்துவிடத்து ஒருத்தி நமக்குத்தூர நாமவனையெய்தும்படியாயிற்று நம்முடையபெண்டன்மையென அயலறிவுரைத்துத் தலைமகள் அழுக்கமுற்றுக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

இரவணையும்மதிபோர்நுதலார்நுதிக்கோலஞ்செய்து *
குரவணையுங்குழலிங்கிவளாலிக்குறியறிவித் *
தரவணையுஞ்சடையோன்றில்லையூரனையாங்கொருத்தி *
தாவணையும்படிசாயின்வாறுநந்தன்மைகளே. (௩௱௫)

உலகியலறியச் செலவிடலுற் ற.
விழுத்தகைமாதர்க் கழுக்கஞ்சென்ற து.

(இ-ள்.) இரவைச்சேரும்பிறைபோலுநுதலையுடையாரதுமுன் செவ்வணியாகியகோலத்தைச்செய்து, குரவம்பூச்சேருங்குழலையுடைய இவளால் இக்குறியையறிவித்து, பாம்புசேருஞ்சடையையுடையவனது தில்லையிலூரனைப் பின் அவ்விடத்து ஒருத்தி நமக்குத்தூர, நாமவனையெய்தும்படியாயினவாறென் நம்முடையபெண்டன்மைகள். எ-று.

நுதலார்நுதியறிவித்தெனவியையும். குறி-பூப்புநிகழ்ந்தகுறி. மெய்ப்பாடு-அழுகை. பயன்-ஆற்றாமைநீங்குதல். (௩௱௫)

செவ்வணிகண்டவாயிலவர்கூறல்.

செவ்வணிகண்டவாயிலவர்கூறலென்பது- தலைமகளிடத்துநின்றுஞ் செவ்வணிசெல்லக்கண்டு, நம்மூரற்கு உலகியலாறுரைப்பா

ன்வேண்டி, செம்மலருஞ் செம்பட்டுஞ் செஞ்சாந்தும் நமதுதி ருவையுடையமனையின்கண் வந்துதோன்றினவெனப் பரத்தை வாயிலவர் தம்முண்மதித்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

சிவந்தபொன்மேனிமணிதிருச்சிற்றம்பலமுடையான் *
சிவந்தவந்தாளணியூரற்குலகியலாறுரைப்பான் *
சிவந்தபைம்போதுமஞ்செம்மலர்ப்பட்டுங்கட்டார்முலைமேற் *
சிவந்தவஞ்சாந்தமுந்தோன்றினவந்துதிருமனைக்கே. (௩௱௬௧)

மணிக்குழைபூப்பிய லுணர்த்தவற் று
ஆயிழையைக்கண்ட வாயிலவருரைத்தது.

(இ-ள்.) செம்பொன்போலுமேனியையுடையமணி,திருச்சிற் றம்பலத்தையுடையான்,அவனது சிவந்தவழகியதாள்களைமுடிக் கணிபாக்கும் ஊரற்கு,உலகியநெறியையறிவிப்பான்வேண்டி,ந மது திருவையுடையமனைக்கட் சிவந்தசெவ்விப்பூவும், அழகியசெ ய்யபூத்தொழிற்பட்டும், கட்டுதலார்ந்தமுலைமேலுண்டாகியவழ கியசெய்யசாந்தமும்,வந்துதோன்றின,இனித் தருமக்குறைவாரா மல் ஊரற்கும் எகல்வேண்டும். எ-று.

உலகியலாறு-பூப்பு. உரைத்தாற்போலச் செவ்வணியாலறிவித் தலின் உரைப்பானென்றார். தாளிணையூரற்கென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-பூப்புணர்த்துதல். (௩௱௬௧)

மனைபுகல்கண்டவாயிலவர்கூறல்.

மனைபுகல்கண்டவாயிலவர்கூறலென்பது - செவ்வணிகண்டத லைமகன் பரத்தையிடத்தினின்றும் வந்து தடையின்றி மனைவயி ற்புகுதாநிற்ப, பண்டிரவும்பகலும் வாயில்பெறாது நின்றுணங் கும் இக்காவலையுடையகடையை இத்துணைக்காலத்திற்கழிந்துவா யிலின்றிப் புகுதாநின்றான், மனைக்கடன்பூண்டலான் இனிப்புலந் து அடங்காதார் ஒருவருமில்லையெனத் தலைமகள்வாயிலவர் தம் முட் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

குராப்பயில்கூழைபிவளின்மிக்கம்பலத்தான்குழையா *
மராப்பயிறுண்ணிடையாரடங்காரெவரோயினிப்பண் *
டிராப்பகனின்றுணங்கீர்ங்கடையித்துணைப்போழ்திற்சென்று *
காரப்பயில்பூம்புனலூரன்புகுமிக்கடிமனைக்கே. (௩௱௬௨)

கடனறிந்தூரன் கடிமனைபுகுத ர
வாய்ந்தவாயிலவ ராய்ந்துரைத்தது.

(இ-ள்.) முற்காலத்து இரவும்பகலுந் தான் வாயில்பெறாது நின்று வாடும் இக்குளிர்ச்சியையுடையசடையை நீட்டியாது இத்துணைக்காலத்திற்கழிந்து காரம்பயில்கின்ற பூம்புனலையுடையவூரையுடையான் இக்காவலையுடையமனைக்கட் புகாநின்றான், அதனாற் குராப்பூப்பயின்றகுழலையுடைய இவளினும் மேம்பட்டு அம்பலத்தான் குழையாகிய அரவுபோலும் நுண்ணியவிடையினையுடையார் புலந்தடங்காதார் இனி யாவர்! மனைக்கடன் பூண்டலான் எல்லாருமடங்குவர். எ-று. (௩௬௨)

காரம்பயிலென்பது காரப்பயிலென்னவலிந்துநின்றது. மெய்ப்பாடு-உவகை. பயன்-மெய்ம்மகிழ்தல்.

முகமலர்ச்சிகூறல்.

முகமலர்ச்சிகூறலென்பது-பரத்தையிற்பிரிந்ததலைமகன் செவ்வணிகண்டுவந்தானென்றுசொல்லுமளவில், தலைமகளது கண்கள்சிவந்தன, அப்புலவிநோக்கத்தெதிர் காதலனோக்க, அச்சிவப்பாறி முகமலர்ந்தமையை அவ்விடத்துக்கண்டவர் தம்முட்கூறி நிற்றல். அதற்குச்செய்யுள்.

வந்தான் வயலணியூரனெனச்சினவாண்மலர்க்கண் *
செந்தாமரைச்செவ்விசென்றசிற்றம்பலவன்னருளான் *
முந்தாயினவியனோக்கெதிர்நோக்கமுகமடுவிற் *
பைந்தாட்குவளைகள்பூத்திருள்சூழ்ந்துபயின்றனவே. (௩௬௩)

பூம்புனலூரன் புகமுகமலர்ந்
தேம்புனைகோதை திறம்பிறருரைத்தது.

(இ-ள்.) வந்தான் வயலணிந்தவூரனென்றுசொல்லுமளவில் சினவாள்போலுமலர்க்கண்கள் சிவந்ததாமரைப்பூவினது செவ்வியையடைந்தன, சிற்றம்பலவனதருளான் முன்னுண்டாகிய பெரிய அப்புலவிநோக்கெதிர் காதலனோக்க, கதுமெனப் பின் முகமாகிய மடுவிற் பைந்தாளையுடையகுவளைப்பூக்கள் மலர்ந்திருண்டு நெருங்கின, என்னவில்லறக்கிழத்தியோ! எ-று.

இயனோக்கென்றுபிரித்து முன்னுண்டாகிய தனித்தலியல்பையுடைய நோக்கென்றுரைப்பினுமமையும். கண்கள தமிழ்ச்சிப்பன்மையாற் குவளைப்பூக்கள் பல கூடினாற்போன்றிருந்தனவென்பது போதர, பயின்றனவென்றார். காதலனோடு பழகினவெனினுமமையும். தலைமகற்குப் புலவிக்காலத்துவருந் துன்பமிகுதியும் புலவிநீக்கத்துவருமின்பமிகுதியும் நோக்கி, சிற்றம்பல

வனருளாலெனக்காரணத்தை மிகுத்துக்கூறினர். மெய்ப்பாடும் பயனும்-அவை. (௧௱௧)

காலநிகழ்வுரைத்தல்.

காலநிகழ்வுரைத்தலென்பது-பரத்தையிற்பிரிந்து வந்ததலைமகனது ஆற்றாமையைத் தலைமகள் நீக்காதிருப்ப, வண்டூதுமல்லிகைப்போதாலும் அந்திப்பிறையாலுஞ் சங்குற்பொழுதாலும் ஆற்றானாய்ப்புகுதராநின்றான் இனி நீபுலக்கற் பாலையலலையென உழையர் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

வில்லிகைப்போதின்விரும்பாவரும்பாவியர்களன்பிற் *
செல்விகைப்போதினெரியுடையோன்றில்லையம்பலஞ்சூழ் *
மல்லிகைப்போதின்வெண் சங்கம்வண்டூதவிண்டோய்பிறையோ
டெல்லிகைப்போதியல்வேல்வயலூரற்கெதிர்கொண்டதே. ௧௱௨

இகழ்வதெவன்கொ னிகழ்வதிவ்வாறெனச்
செழுமலர்க்கோதை யுழையருரைத்தது.

(இ-ள்.) காமன்கையிலம்பாகியபூக்களில் ஆதரமில்லாத அரிய குறிப்பையுடையவர்கள் தனக்குச்செய்த அன்பின்கண் வேட்டுச்செல்வோன், கையாகியபூவின்கணுளதாகிய எரியையுடையான், அவனது தில்லையம்பலத்தைச் சூழ்ந்த மல்லிகையின்போதாகிய வெண்சங்கை வண்டுகளூத விண்ணையடைந்த பிறையோடு இராப்பொழுது கைபாகிப்பூவின்கணியலும் வேலையுடைய வயலூரற்கு மாறுகொண்டது. எ-று.

என்றது-வண்டூதுமல்லிகைப்போதாலும் அந்திப்பிறையாலுஞ் சங்குற்பொழுதாலும் ஆற்றானாய்ப் புகுதராநின்றான் இனி நீ புலக்கற்பாலையல்லையென வாயிலோர்வித்தவாறு. வில்லிகைப்போதாற் புலன்களைவிரும்பாத அரும்பாவியரெனினுமமையும். கைப்போதின்கண்ணேயெரியையுடையானெனினுமமையும். இகழ்தல்- தலைமகனாற்றாமைநீக்காதிருத்தல். எல்லி ஊரற்குவாயிலாக வேற்றுக்கொண்டது புலவாதுண்ணெகிழ்ந்தாளென்றிவளோநாமிகழ்கின்றதென் இதுவன்றோ பொழுதெனவுழையர் தம்முட்புறங்கூறினாராகவுரைப்பினுமமையும். மெய்ப்பாடு- பெருமிதம். பயன்-தலைமகளைச்சிவப்பாற்றுவித்தல். (௧௱௨)

எய்தவெடுத்துரைத்தல்.

எய்தலெடுத்துரைத்தலென்பது-பரத்தையிற்பிரிந்துவந்ததலைமகன், பூப்புநிகழ்ந்தகிழத்தியைப் புலவிதீர்த்து இன்புறப்பண்

ணி எய்தலுற்றுமகிழ்ந்தமையை அவ்விடத்துள்ளார் எடுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

புலவித்திரைபொரச்சீறடிப்பூங்கலஞ்சென்னியுய்ப்பக் *
கலவிக்கடலுட்கலிங்கஞ்சென்றெய்திக்கதிர்கொண்முத்த *
நிலவிநிறைமதுவார்ந்தம்பலத்துநின்றோனருள்போன் *
றுலவியலாத்தனஞ்சென்றெய்தலாயினவூரனுக்கே. (௩௱௫)

சீரியவுலகிற் றிகழ்தரக்கூடி
வார்புனலூரன் மகிழ்வுற்றது.

(இ-ள்.) புலவியாகியதிரை வந்துமாறுபடக் காதலி சிற்றடியாகிய பொலிவினையுடையவணியைத் தன்சென்னியிலுய்த்தலான் அப்புலவிநீங்க, கலவியாகியகடலுள் துகிலைச்சென்று பற்றி, எயிறாகியவொளிபொருந்தின முத்தின்கட் பொருந்தி நிறைந்த நீராகியமதுவைப் பருகி, அம்பலத்துநின்றவனதருளையொத்து ஒருஞான்றுந் தளர்தலில்லாதமுலைகள் ஊரற்குச் சென்றுபெறலாயின. எ-று.

புலவுநாறித்திரைகள்வந்துமோதச் சிறியவடிவையுடையபொலிவையுடையமரக்கலத்தைக் கடலின்சென்னியிலேசெலுத்தக் கடலுட்கலந்து கலிங்கமாகியதேயத்தைச்சென்றெய்தி ஒளிபொருந்தியமுத்துக்கள் தன்கண்வந்துநிலைபெற அவ்விடத்துள்ளமதுக்களைநுகர்ந்து அம்பலத்துநின்றவனதருளையொத்து ஒருஞான்றுங்கேடில்லாதபொருள் சென்றெய்தலாயினவென வேறுமொருபொருள்விளங்கியவாறறிக. சீரியவுலகிற்றிகழ்தரக்கூடி - சீர்மையியன்றவுலகினுள்ளவின்பமெல்லாவற்றினும் விளங்கக்கூடி. சீரியவுலகு-தேவருலகுமாம் இதுவுந்துறைகூறியகருத்து. மகிழ்வுற்றதென இன்னோர் கூற்றென்னாது துறைகூறினார். மெய்ப்பாடு-உவகை. பயன்-மெய்ம்மகிழ்தல். (௩௱௫)

கலவிகருதிப்புலத்தல்.

கலவிகருதிப்புலத்தலென்பது - புலவிதீர்த்து இன்புறப்புணரப்பட்டு மயங்காநின்ற தலைமகள், தனக்கவன்செய்ததலையளியை நினைந்து, இவ்வாறருளுமருள் ஒருஞான்று பிறர்க்குமாமெனவுட்கொண்டு பொருமியழுது, பின்னுமவனோடு கலவிகருதிப் புலவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

செவ்வாய்துடிப்பக்கருங்கண்பிறழச்சிற்றம்பலத்தெம் *
மொய்வார்சடையோனருளின்முயங்கிமயங்குகின்றாள் *

வெவ்வாயுயிர்ப்பொடுவிம்மிக்கலுழ்ந்துபுலந்துறைந்தா *
ளிவ்வாறருள்பிறர்க்காகுமெனநினைந்தின்னகையே. (௩௩௬)
மன்னியவுலகிற் றுன்னியவன்பொடு
கலவிகருதிப் புலவியெய்திய து.

(இ-ள்.) இன்னகையையுடையாள், செய்யவாய்துடிப்பக் கரிய கண்கள்பிறழச் சிற்றம்பலத்தின்கணுள்ளனாகிய எம்முடைய நெருங்கிய நீண்டசடையையுடையவனதருள்பெற்றவர்போல முயங்கி இன்பக்களியின்மயங்குகின்றவள், இவ்வாறு நமக்கருளுமருள் ஒருஞான்று பிறர்க்குமாமென ஒன்றனையுட்கொண்டு, வெய்யவிடத்தையுடைய நெட்டுயிர்ப்போடும்பொருமியழுது, புலந்து வருந்தினாள். எ-று.

அருளின்மயங்குகின்றாளென்புழி அருள்பெற்றவர் உவமையாதல் ஆற்றலான்வந்தது. அருளான் முயங்கியென்பாருமுளர். வெவ்வாயுயிர்ப்பென்பது-கலுழ்கட்கின்னீரான்பதுபோல நின்றது தவறுபற்றிப்புலப்பளென்றுநீகூறுதி இதுவன்றோ இவள் புலக்கின்றவாறெனத் தோழிக்குத்தலைமகன் கூறியது மன்னியவுலகிற் றுன்னியவன்பொடு- நிலைபெற்றவுலகத்தின்வைத்துச்செறிந்தவன்போடு. இதுவுந்துறைகூறியகருத்து. மெய்ப்பாடு-உவகையைச்சார்ந்தவெகுளி. பெருமிதமுமாம் பயன்- அது.

குறிப்பறிந்துபுலந்தமைகூறல்.

குறிப்பறிந்துபுலந்தமைகூறலென்பது- புலவிதீர்ந்து கலுழ்ந்துபுணர்ந்து தானுமவனுமேயாய்ப் பள்ளியிடத்தாளாகிய தலைமகள், பின்னுமொருகுறிப்புவேறுபாடுகண்டு புலந்து, இப்பள்ளி பலவைப்பொருதென்றிழிய, இப்பொழுது இவளிவ்வாறிழிதற்குக் கருதியகுறிப்பென்னைகொல்லோவென உழையர் தம்முட்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மலரைப்பொருவடிமானுந்தமியன்மன்னன்றொருவன் *
பலவைப்பொருதென்றிழிந்துநின்றாள்பள்ளிகாமனெய்த *
வலரைப்பொருதன்றழல்விழித்தோனம்பலம்வணங்காக் *
கலரைப்பொருச்சிறியாளென்னைகொல்லோகருதியதே. (௩௩௭)
குறிப்பினிற்குறிப்பு நெறிப்படநோக் கி
மலர்நெடுங்கண்ணி புலவியுற்ற து.

(இ-ள்.) மன்னன் ஒருவன், மென்மையான்மலரையும் பொருதுவடிவையுடையமானுந்தமியளே, ஆயினும், இப்பள்ளிபலவைத்தா

ங்கர்தென்றுகூறிப் பள்ளியினின்றுமிழிந்துநின்றாள், காமனைப் த அலரம்பைவெகுண்டு அன்றழலாகியகண்ணை விழித்தவனதம்ப லத்தை வணங்காத தீயமக்களைப்பொருத சிறியவள் இந்நிலைமை க்கட்கருதியதென்னோ! எ-று.

இழிந்துநின்றாளென்பது விரையவிழிந்தாளென்பது படநி ன்றது. கலைப்பொருச்சிறியாளென்றது- தீமக்களென்றுசொல் லுமவர்த்தையையும் பொருதவள் தீமக்கள்செய்யுங் காரியத்தை ச்செய்தாளென்றவாறு. குறிப்பினிற்குறிப்பென்றது- இவ்வாறரு ள் பிறர்க்காகுமெனநினைந்து இன்னகைபுலர்ந்தாளென்று தலைமக ன்கூறியகூற்றையே தவறாகநினைந்து நம்மையொழிந்து பிறருமு ண்டாகக்கூறினனாகலான் இத்தவமலி பலரைப் பொருதெனப்பு லர்ந்தாள் குறிப்பாலே தலைமகனது குறிப்பையறிந்து. இவ்வகைத் தலைமகள்புலம்ப வாயில்கடும்மூட்சொல்லியது. இதுவுமது. மெய் ப்பாடு-மருட்சி. பயன்- ஐயந்தீர்தல். பள்ளியிடத்தாளாகிய தலை மகள் நுண்ணிதாகியதோர்காரணம்பற்றி இவ்வகையுரைத்து ஊடக்கண்டதோழி தன்னெஞ்சொடுசாவினளென்பது. தலைமக ன் றன்னெஞ்சொடுசாவினனெனின், அதுபொருந்தாது. (௩௱௭)

வாயிலவர்வாழ்த்தல்.

வாயிலவர்வாழ்த்தலென்பது-செவ்வணிவிடுக்கப் பூப்பியற்செ வ்விகெடாமல் மெலிவறிந்து இவளதுபொலிவோடு வந்தமையா ன் இவன் மெய்யே தக்கவாய்மையனெனத் தலைமகனை வாயிலவர் வாழ்த்தாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வில்லைப்பொலிநுதல்வேற்பொலிகண்ணிமெலிவறிந்து *
வல்லைப்பொலிவொடுவந்தமையானின்றுவான்வழுத்துந் *
தில்லைப்பொலிசிவன்சிற்றம்பலஞ்சிந்தைசெய்பவரின் *
மல்லைப்பொலிவயலூரன்மெய்யேதக்கவாய்மையனே. (௩௱௮)

தலைமகனது தகவுடைமை
நிலைதருவாயிலின்றோருரைத்தது.

(இ-ள்.) விற்போலுநுதலையும் வேல்போலுங்கண்களையுமுடை யாளது வாட்டமறிந்து விரைய இவளதுபொலிவோடு வந்தமை யால், வானத்துள்ளார் நின்றுவழுத்துந் தில்லைக்கட்பொலியுஞ்சிவ னது சிற்றம்பலத்தைக்கருதுவாரைப்போல வளத்தாற்பொலியும் வயலையுடையவூரையுடையவன் மெய்யாக நல்லமெய்ம்மையன்; எ-று.

வில்லையென்னுமைகாரம் இசைநிறையாய்வந்தது. காதலன்வர இவள் இடையின்றிப்பொலிந்தமையாற் பொலிவொடென ஒடுக்கொடுத்துக் கூறினார். பொலிசிற்றம்பலமெனவினையும். மல்லல் கடைக்குறைந்து ஐகாரம்விரிந்துநின்றது. மல்லற் பொலிவென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-உவகை. பயன்-மகிழ்தல். (௧௬௮)

புனல்வரவுரைத்தல்.

புனல்வரவுரைத்தலென்பது- தலைமகளுடன் மனைவயிற்றங்கியின்புறுநின்றவனது தோள்களைப் பரத்தையர்பொருந்திமகிழப்புதுப்புனல்வந்துபரந்தது, இனிப்புனலாட்டினால் இவன்காதலிபுலக்கும்போலுமென, வையத்தார் தம்முட்புனல்வரவுகூறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

சூன்முதிர் துள்ளுநடைப்பெடைக்கிற் றுணைச்சேவல்செய்வான் *
தேன்முதிர் வேழத்தின் மென்பூக்குதர் செம்மலூரன்றிண்டோண்
மான்முதிர் நோக்கினல்லார்மகிழத்தில்லையானருளே *
போன்முதிர் பொய்கையிற்பாய்ந்ததுவாய்ந்தபுதுப்புனலே. ()

புனலாடுகவெனப் புணர்ந்துகொண் டு
மனைபுகுந்தவனை வையமுரைத்த து.

(இ-ள்.) சூன்முதிர்ந்த துள்ளுநடையை யுடைத்தாகிய பெடைக்கு ஈனுமில்லைச்செய்யவேண்டித் துணையாகியசேவல், தேன்போலுஞ்சாறுமுதிர்ந்தகரும்பினது மெல்லியபூவைக்கோதுந் தலைமையையுடையவூரனது திண்ணியதோள்களை மானினது நோக்கம்போலுநோக்கினையுடைய நல்லார்கூடி இன்புற, தில்லையானதருளையொத்து நீர் முதிர்ந்தபொய்கையுள் நல்லபுதுப்புனல் பாய்ந்தது, இனிப்புனலாட்டினாற் றன்காதலியைச் சிவப்பிக்கும் போலும். எ-று.

சூன்முதிர்தலாற் குறுகவடியிடுதலிற் றுள்ளு நடையென்றார். தில்லையானருள்பெற்றவர்போல நல்லார்மகிழவென் றுரைப்பாருமுளர். சேவலன்னந் தன்சூன்முதிர்ந்தபெடைக்கு ஈனில்லிழைத்துப் பாதுகாக்கின்றாற்போல இவனுந்தன்காதலிக்கு வேண்டுவனசெய்து மனைவயிற்றங்கியின்புறுகின்றானென உள்ளுறைகாண்க. துன்னுநடையென்றுபாடமோதி, சூன்முதிர்தலாற்பயில அடியிடுநடையென்றுரைப்பாருமுளர். வெண்பூவென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-பிரிவுணர்த்துதல். ()

தேர்வரவுகண்டுமகிழ்ந்துகூறல்.

தேர்வரவுகண்டுமகிழ்ந்துகூறலென்பது- புனல்வரவுகேட்டத்

லைமகன் புனலாட்டுவிழவிற்குப் பரத்தையர் சேரிக்கட்செல்லாநி
ற்ப, இவனைப் புணர்தற்குத்தக்க தவத்தினை முற்காலத்தே செய்தீ
ர்கள், தேர்வந்துதோன்றிற்று, இனிச்சென்று இவனதுதோளிணை
யைத் தோய்மினென்கத தேர்வரவுகண்டு பரத்தையர் தம்முண் மகி
ழ்ந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

சேயேயென மன்னுதீம்புன லூரன்றிண் டோளிணைக *
டோயீர்புணர்தவந் தொன்மைசெய்தீர்சுடர்கின்ற கோலந்
தீயேயெனமன்னு சிற்றம்பலவர்தில்லைநகர்வாய் *
வீயேயெனவடியீர் நெடுந்தேர்வந்து மேவினதே. (௩௭௰)

பயின்மணித்தேர்செலப் பரத்தையர்சேரிக்
கயன்மணிக்கண்ணியர் கட்டுரைத்தது.

(இ-ள். சுடராநின்றவடிவு தீயேயென்றுசொல்ல நிலைபெற்ற
சிற்றம்பலவரது தில்லைநகரிடத்துள்ளீராகிய பூவையொக்குமடி
யையுடையீர், நெடியதேர் கண்டுவந்துமேவிற்று, இவனைப்புணர்
தற்குத் தக்கதவத்தை முற்காலத்துச்செய்தீர்கள், வடிவு முருகவே
ளேயென்றுசொல்ல நிலைபெறுநின்ற இனியபுனலையுடைத்தாகிய
ஊரையுடையவனது திண்ணியதோளிணைகளை யினிப்பணைமின். எ-று

ஒன்றற்கொன்றிணையாயிருத்தலின் இணையெனத் தனித்தனிகூ
றப்பட்டன இதுவும் ஊடனிமித்தம். கோலமெனற்பாலது கோ
லமெனக்குறுகிநின்றது. கயல்மணிக்கண்ணியென்பது பாடமா
யின், பரத்தையர்சேரிக்கட்டலைமகனது தேர்செல்லத் தலைமக
ளுணர்ந்துரைத்ததாம். இப்பொருட்கு நெடுந்தேர் நமதுசேரிக்க
ண்வந்து தங்கிற்றென்றுரைக்க. மெய்ப்பாடு - உவகை. பயன் - தலை
மகன்வரவு சேரிப்பரத்தையர்க்குப் பாங்காயினார் அவர்க்குணர்த்
தல். (௩௭௰)

புனல்விளையாட்டிற்றம்முளுரைத்தல்.

புனல்விளையாட்டிற்றம்முளுரைத்தலென்பது - தலைமகனுடன்
புனலாடாநின்றபரத்தையர் சேடிமார் அரமங்கையரைப்போல
ப்புனலாடாநின்ற அவ்வவரேயென்று வியந்து, நாமெல்லாமித்த
ன்மைபேமாக வானரமங்கையரென்றுசொல்லும்வண்ணம் மற்
றொருத்திவந்து இவனைத்திரித்துக்கொள்ளக்கொடுத்துப் பின்வரு
ந்காது முன்னுறக்காப்போமெனத் தம்முட்கூறுநிற்றல். அதற்கு
ச்செய்யுள்.

அரமங்கைப்போனவந்துவிழாப்புகுமவ்வவர்வா *
னரமங்கையபோனவந்தணுகு நம்மவள்ன்றுகிராற் *
சிரமங்கையனைச்செற்றோன் றில்லைச்சிற்றம்பலம்வழுத்தாப் *
புரமங்கையரினபாகைவகாத்துநம் பொற்பனையே. (கஎச)

தீம்புனல்வாயிற் சேயிழைவருமெனக்
காம்பனதோளியர் கலந்துகட்டுரைத்தது.

(இ-ள்.) அரமங்கையரைப்போலவந்து புன்லாட்டுவிழவின்கட் புகாநின்ற அவரவரோ, நாமெல்லாம் இத்தன்மையேமாக வானிடத்தரமங்கையரொன்றாகருதும்வண்ணம் அவள் வந்தணுகாநின்றாள், அணுகித் தன்னிடத்திவரைத்திரிப்ப, அன்றே அவ்விடத்து உயிரால் அயனைச் சிரந்தடிந்தவனது தில்லையிற்சிற்றம்பலத்தை வழுத்தாத புரங்களில் மங்கையரைப்போலப் பின்வருந்தாது,நம்பொற்பனை விப்பழுன்னுடைத்தாகக் காப்பேம். எ-று.

அரமங்கையர்-தேவப்பெண்களுக்குப்பொதுப்பெயர். வானரமங்கையரொன்றது அவரின்மேலாகிய உருப்பசி திலோத்தமை முதலாயினாரை. வானரமங்கையரொன்றது சாதியை நோக்கிநின்றது ஐயபொற்பனையெனக்கூட்டிஞுமமையும். அவளென்றதும் சேயிழையென்றதும் பரத்தையரிற்றலைவியாகிய இற்பரத்தையை. "பரத்தைவாயி லெனவிரு வீற்றுங் - கிழவோட் சுட்டாக் கிளப்புப்பய னிலவே" என்பதனால் இது கிழவோட்சுட்டாக்கிளப் பாயினும், இப்பரத்தையரது மாறுபாடு தலைமகளுடைத்தற்குறிப்பித்தமாகலிற் பயனுடைத்தாம். மெய்ப்பாடு - அச்சம். பயன்- தலைமகனைத்தங்கட்டாழ்வித்தல். (கஎச)

தன்னைவியந்துரைத்தல்.

தன்னைவியந்துரைத்தலென்பது-சேடிமார் பின்வருந்தாது முன்னுறக்காப்பேமென்று தம்முட் கூறுவதனைக்கேட்டு, இவனை அமரப்புல்லும்பரத்தையர்மாட்டு இவனருள்செல்லாமல் விலக்கேனாயின் என் மாட்டிவனைத்தந்தமாநின்ற இவன்மனைக்கிழத்தியாகின்றேனெனப் பரத்தைத்தலைவி தன்னைவியந்து கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

கனலூர்கணையனையூர்செட்டச்செற்றசிற்றம்பலத்தெம் *
மனலூர்சடையோனருள்பெற்றவரினமரப்புல்லு *
மினலூர்நகையவர்தம்பாலருள்விலக்காவிடின்யான் *
புனலூரனைப்பிரியும்புனலூர்கணைப்பூங்கொடியே. (கஎரு)

அரத்தத்துறவர்வாய்ப் பரத்தைத்தலை வி
மூவிவுதோன்ற நனிபுகன்ற து.

(இ-ள்.) கனல்பரந்தகணையான் ஒத்தவூர்கெட வெகுண்டசிற்றம்பலத்தின்கணுளனாகிய எம்முடைய அனலையொக்குஞ்சடையையுடையவனதருளைப்பெற்றவர்போலச் செம்மாந்து அவனைச்செறியப்புல்லாநின்ற ஒளிபரந்தநகையையுடையவர் தம்மிடத்து அவனருள்செல்லாமை விலக்கேனாயின், யான் புனலூரனைப்பிரிந்திருக்கும் புனல்பரக்குங்கண்ணையுடைய அவன்மனைக்கிழத்தியாகிய அப்பூங்கொடியாகின்றேன். எ-று.

கணைதுணையெனச் செய்யுளின்பநோக்கி மிகாதுநின்றது. கணையென்பதனை யெழுவாயாக்கி யுரைப்பாருமுளர். "பரத்தையிற்பிரிவே நிலத்திரி பின்றே,, என்பதனால், இவரதில்லந் தம்மில்வேறுபாடில்லாமையறிக. மெய்ப்பாடு- வெகுளி. பயன்- தனதுமீடுணர்த்தல். (௩௭௨)

நகைத்துரைத்தல்.

நகைத்துரைத்தலென்பது-பரத்தைத்தலைவி தன்னைவியர்த்துக்கூறினாளென்று கேட்டதலைமகள்; எங்கைச்சியார்தமக்கும் ஒருதங்கைச்சியார்தோன்றினபொழுதே தம்மிறுமாப்பொழியத் தம்முடைய இணைமுலைகளினதிறுமாப்பும் ஒழியப்புகாநின்றன, இதனையறியாது தம்மைத்தாம் வியக்கின்றதென்னோவெனப் பரத்தையைநோக்கி நகைத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

இறுமாப்பொழியுமன்றேதங்கைதோன்றிலென்னெ னங்கையஞ்
சிறுமான்றரித்தசிற்றம்பலத்தான்றில்லையூரன்றிண்டோள் [கைச்
பெறுமாத்தொடுந்தன்னபேரணுக்குப்பெற்றபெற்றியினோ *
டிறுமாப்பொழியவிறுமாப்பொழிந்தவிணைமுலையே. (௩௭௩)

வேந்தன்பிரிய வேந்திழைமடந் தை
பரத்தையைநோக்கி விரித்துரைத்த து.

(இ-ள்.) அங்கைக்கண்ணே சிறியமானைத்தரித்தசிற்றம்பலத்தானது தில்லைக்கணுளனாகிய ஊரனுடைய திண்ணியதோள்களைப்பெறுதலானுண்டாகிய பெருமையோடுந் தன்னவாகிய அவற்றானுண்டாகிய பெரிய அணுக்கைப்பெற்ற தன்மைகளோடுந் தான் செம்மாத்தலையொழிய, இணைமுலைகள் எந்துதலையொழியப்புகாநின்றன, இனித் தனக்கொருதங்கைதோன்றின், என்னுடையவெங்கையும் செம்மாத்தலையொழியுமன்றே, அதனான் வருவதறியாது தன்னைப்புகழ்கின்றாள். எ-று.

எங்கையென்றது- என்றங்கையென்றவாறாயினும், என்னெங்கையென இயைபுமிகுதிகூறி நகையாடினாள். மாத்து- தலைமகற்குரியளாய்நிற்றலான் உண்டாகியவரிசை. பெற்றி- அணுக்காற்றன்னை மதித்தல். தன்னைபெற்றியெனவியையும் பெற்றியினோடு மென்னுமும்மை தொக்குநின்றது. ஒழிந்தவென்னுமிறந்தகாலம் விரைவுபற்றிவந்தது. மெய்ப்பாடு- வெகுளியைச்சார்ந்தவழுகை. பயன்- பரத்தையதுசிறுமையுணர்த்துதல். அவ்வகை பரத்தைகூறியவஞ்சினம் தன்பாங்காயினாரற்கேட்டதலைமகள் பரத்தைக்குப்பாங்காயினார்கேட்ப இவ்வகைசொன்னாளென்பது. ()

நாணுதல்கண்டுமிகுத்துரைத்தல்.

நாணுதல்கண்டுமிகுத்துரைத்தலென்பது- தலைமகனைப் பரத்தையர்வசம் புனலாடவிட்டுச் சூடுவாரின்றிச் செப்பின்கணிட்டடைத்துத் தமியேவைகும்பூப்போல்வாள் இஃதவனுக்குத் தகாதபழியாமெனக்கருதி நாணி அதனைமறைத்திருந்தமைகண்டதோழி, இவளதுகற்பும்நலனும் 'நல்லபகுதியையுடையனவாயிருந்தனவென' அவள் நலத்தை மிகுத்துக்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

வேயாதுசெப்பினடைத்துத்தமிவைகும்வீயினன்ன *
தீயாடிசிற்றம்பலமனையாடில்லையூரனுக்கின் *
றேயாப்பழியெனநாணியென்கண்ணிங்ஙனேமறைத்தாள் *
யாயாமியல்பிவள்கற்புநற்பாலவியல்புகளே. (௩௭௪)

மன்னவன்பிரிய நன்மனைக்கிழத்தியை
நாணுதல்கண்ட வாணுதலுரைத்தது.

(இ-ள்.) சூடாது செப்பின்கணிட்டடைப்பத் தனியேவைகும் பூவைப்போலுந் தீயின்கணாடுவானது சிற்றம்பலத்தையொப்பாள், தில்லையூரனுக்கு இன்று தகாதபழியாமெனக்கருதி நாணித் தனதாற்றாமையை என்னிடத்துப் இவ்வண்ணமே மறைத்தாள், அதனால் இவளதுகற்பு நமக்குத் தாயாமியல்பையுடைத்து, இவளுடையநாணமுதலாகியவியல்புகள் நல்லகூற்றன. எ-று.

தமிவைகும்வீ- அக்காலத்தினிகழ்ந்த வேறுபாட்டிற்குவமை. அம்பலம் - இயற்கைநலத்திற்குவமை. 'பாணனுரைத்ததென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு- அழுகை. பயன்-தலைமகளதுபெருமையுணர்த்துதல். (௩௭௪)

பாணன்வரவுரைத்தல்.

பாணன்வரவுரைத்தலென்பது-நாணொடுதனியிருந்துவருந்தா நின்றதலைமகளுக்கு, இராப்பொழுதின்கட்சென்று திசையைக்கடக்கும் வாவல் இரைதேருங்காலமன்மையாற்பகற்பொழுதின்கணுறையும் மரம்போலுந் தமியேமாமையறியாது விறலியும்பாணனும் நம்வேந்தற்குத் துயிலெழுமங்கலம் பாடவந்து நின்றாரெனத்தோழி பாணன்வரவு கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

விறலியும்பாணனும்வேந்தற்குத்தில்லையிறையமைத்த *
திறலியல்யாழ்கொண்டுவந்துநின்றார்சென்றிராத்திசைபோம் *
பறலியல்வாவல்பகலுறைமாமரம்போலுமன்றோ *
வறலியல்கூழைநல்லாய்தமியோமையறிந்திலரே. (௩௭௫)

இல்வேலவனகல் வறியாப்பாணனைப்
பூங்குழன்மாதர்க்குப் பாங்கிபகர்ந்தது.

(இ-ள்.) விறலியும்பாணனும் தில்லையிறையாலமைக்கப்பட்ட வெற்றியியலும்யாழை நம்வேந்தற்குத் துயிலெழுமங்கலம்பாடக் கொண்டுவந்துநின்றார்கள், அறல்போலுங்கூழையையுடைய நல்லாய், இராப்பொழுதின்கட் சென்று திசையைக்கடக்கும் பறத்தலாகிய வியல்பினையுடைய வாவல் இரைதேருங்காலமன்மையாற் பகற்பொழுதின்கணுறையும் பெரியமரம்போலும் இராப்பொழுதிற்றுணையில்லாதோமை இவரறிந்திலர்போலும் எ-று.

வெற்றி-வினைகளுட்டலையாதல். "எம்மிறைநல்வீணைவாசிக்குமே,,என்பவாகலின் இறையமைத்தயாழென்றார். சென்றுபகலுறைமாமரமென்றியைப்பினுமமையும். பறத்தல் - பறலென இடைக்குறைந்துநின்றது. போலவென்பது பாடமாயின், பகலுறையுமாமரம்போலத் தமியேமாகிய நம்மையெனவுரைக்க. மன்னும்-ஓவும் அசைநிலை. மெய்ப்பாடு-அது. பயன்- பாணனும்விறலியும் வரவுணர்த்திச் சிவப்பாற்றுவித்தல். என்னை, இவர் வந்து நின்றதற்குத் தலைவி நம்மை இவர்நகையாடியவந்தாரென்று முனிந்தாளாகத் தோழி இவரவன்செயலையறிந்தாரல்லரென்றும், தலைவர்க்கியல்பு நம்மிடத்துவருதலும் அவரிடத்துச்சேறலுமெனவும் இயல்புசொல்லுதலாற் சிவப்பாற்றுவித்தாளாம். (௩௭௫)

தோழியியற்பழித்தல்.

தோழியியற்பழித்தலென்பது-பாணன்வரவுரைத்ததோழி, இ

வள்வருந்த அயலாரிடத்து நல்குதலால் எம்முடையவள்ளல் இன்றுதக்கிருந்திலனெனத் தலைமகனையியற்பழித்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

திக்கினிலங்குதிண்டோளிறைதில்லைச்சிற்றம்பலத்துக் *
கொக்கினிறகதணிந்துநின்றாடிதென்கூடலன்ன *
வக்கின்னகையிவள்வருந்தவயல்வயினல்குதலாற் *
றக்கின்றிருந்திலனின்றசெவ்வேலெந்தனிவள்ளலே. (௩௭௬)

தலைமகனைத் தகவிலனென்னச்
சிலைநுதற்பாங்கி தீங்குசெப்பியது.

(இ-ள்.) திக்கின்கண் விளங்காநின்ற திண்ணியதோள்களையுடையவிறைவன், தில்லையிற்சிற்றம்பலத்தின்கட் கொக்கினிறகதனையணிந்துநின்றாடுவான், அவனது தெற்கின்கணுள்ளதாகிய கூடலையொக்கும் அக்குமணிபோலும் இனியநகையையுடைய இவள் வருந்த அயலாரிடத்து நல்குதலால், எல்லாராலுமறியப்பட்டுநின்ற செவ்வேலையுடைய எம்முடையவொப்பில்லாதவள்ளல் இன்றுதக்கிருந்திலன். எ-று.

அயல்வயினென்பதற்குப் பொருணசையுள்ளத்தராகலிற் காமத்திற்கயலென்றுரைப்பினுமமையும். தலைமகனது தகவின்மையென்பதூஉம்பாடம். (௩௭௬)

உழையரியற்பழித்தல்.

உழையரியற்பழித்தலென்பது-தோழி தலைமகனையியற்பழித்துக்கூறுநிற்பக்கேட்டு, தன்மாட்டன்புடைநெஞ்சத்தலையுடையவிவள்பேதுற இதற்குப்பிரியாமையின் வயலூரன் வரம்பிலனென உழையர் அவனையியற்பழித்துக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

அன்புடைநெஞ்சத்திவள்பேதுறவம்பலத்தடியா *
ரென்பிடைவந்தமிழ்துறநின்றாடியிருஞ்சுழியத் *
றன்பெடைநையத்தகவழிந்தன்னஞ்சலஞ்சலத்தின் *
வன்பெடைமேற்றுயிலும்வயலூரன்வரம்பிலனே. (௩௭௭)

ஆரத்தவேலண்ணல் பரத்தையிற்பிரியக்
குழைமுகத்தவளுக் குழையருரைத்தது.

(இ-ள்.) அடியவரென்புகளிடையே அமிழ்தம்வந்தூற அம்பலத்தின்கண்ணே நின்றாடுவானது பெரியசுழியலின்கண் தன்

பெடைவருந்தத் தருதிகெட்டு அன்னஞ் சலஞ்சலத்தினதுவலியு
பெடைமேற்கிடந் துறங்கும் வயலாற்சூழப்பட்ட ஊரையுடைய
வன் தன்மாட்டன்பையுடையநெஞ்சத்தையுடைய இவள் மயங்கா
நிற்ப இதற்குப்பிரியாமையிற் றகவிலன். எ-று.

அன்புடைநெஞ்சத்திவளென்றதனால், பரத்தையரதன்மைம
கூறப்பட்டதாம். இருஞ்சுழிபலூரெனவியையும். சுழிபலென்ப
து-ஒருதிருப்பதி. வன்பெடையென்றதனாற் பரத்தையரது வன்
கண்மை விளக்கும் ஒருசொல்வருவியாதும்பெறுதலான் வரம்
பிலனென்றுரைப்பாருமுளர் உள்ளுறையுவமம் வெளிப்படநின்
றது. இவையிரண்டற்கும்மெய்ப்பாடு - அழுகையைச்சார்ந்தந
கை. பயன்-தலைமகனையியற்பழித்துத் தலைமகளையாற்றுவித்தல்.()

இயற்படமொழிதல்.

இயற்படமொழிதலென்பது- தலைமகனையியற்பழித்தவர்க்கு,
அன்றுநம்பொருட்டாக நம்புனத்தின்கண்ணே மாந்தழையேந்
திவந்தார் இன்று என்னெஞ்சத்தின்கண்ணார், அதுகிடக்க, மறந்
துறங்கினேனாயின் அமளியிடத்துவந்து என்பயோதரத்தை தப்
பிரியாதார், இத்தன்மையாரை நீங்கள்கொடுமைகூறுகின்றதென்
னேவெனத் தலைமகள் அவனையியற்படமொழியாநிற்றல். அதற்
குச்செய்யுள்.

அஞ்சார்புரஞ்செற்றசிற்றம்பலவர்தங்கயிலை *
மஞ்சார்புனத்தன்றுமாந்தழையேந்திவந்தாரவரென் *
னெஞ்சார்விலக்கினுநீங்கார்நனவுகனவுமுண்டேற் *
பஞ்சாரமளிப்பிரிதலுண்டோவெம்பயோதரமே. (௧௭௮)

வரிசிலையூரன் பரிசுபழித் து
உழையர்க்கட்ப வெழினகையுரைத்த து.

(இ-ள்.) இறைவனென்று உட்காதாருடைய புரங்களைக்கெடுத்
த சிற்றம்பலவரது அழகியகுளிர்ந்தகயிலைக்கண் மஞ்சார்ந்தபு
னத்தின்கண் அன்று மாந்தழையையேந்திவந்தாராகிய அவர் இ
ன்று நனவின் என்னெஞ்சத்தின்கண்ணார், யான்றடுப்பினும் அவ்
விடத்தினின்று நீங்கார், துயிலுமுண்டாயிற் பஞ்சார்ந்தவமளிக்
கண் எம்பயோதரத்தைப் பிரிதலுண்டோ! நீர் கொடுமைகூறுகி
ன்றதென்! எ-று.

அஞ்சார்-தறுகண்மையெனினுமமையும். தழையேந்திவந்தாரெ
ன்பதனை முற்றென்று, இளிவந்தனசெய்து நம்மைப்பாதுகாத்

தார் இன்றிவ்வாறொழுகுவவொன்றுரைப்பினுமமையும். கனவுமூ ண்டேலெலன்பதற்குத் துயில்பெற்றுக் கனுக்காணினென்றுரைப் பினு மமையும். எனது நெஞ்சாரொன்பதூஉம் ஊராணப்பரிசபழி த்தவென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-பெருமிதம். பயன் - தலை மகளையியற்படமொழிந்தாற்றுதல். (கஎஅ)

நினைந்துவியந்துரைத்தல்.

நினைந்துவியந்துரைத்தலென்பது - புனலாடப்பிரிந்து பரத் தையிடத்தொழுகாநின்ற தலைமகன், யான்றன்னை நினையாது வே றொன்றன்மேல உள்ளத்தைச்செலுத்தும்வழியும் தானென்னை நி னைந்து என்னுள்ளம்புகாநின்றாள், அவ்வாறன்றி யான்றன்னை நினை யுந்தோறும் பள்ளத்துப்புகும்புனல்போல நிறுத்தநில்லாது எ ன்மனத்தாளாகாநின்றாள், ஆதலாற் பிரிந்து நீண்டிருத்தல் மிகவு மரிதெனத் தலைமகளை நினைந்து வியந்துகூறாநிற்றல். அதற்குச் செய்யுள்.

தெள்ளம்புனற்கங்கைதங்குஞ்சடையன்சிற்றம்பலத்தான் *
கள்ளம்புகுநெஞ்சர்காணுவிறையுறைகாழியன்னா *
ளுள்ளம்புகுமொருகாற்பிரியாதுள்ளியுள்ளுதொறும் *
பள்ளம்புகும்புனல்போன்றகத்தேவரும்பான்மையளே. (கஎகூ)

மெல்லியற்பரத்தையை விரும்பிமேவினோன்
அல்லியங்கோதையை யகமர்ந்துரைத்தது.

(இ-ள்.) தெள்ளிய நல்லபுனலையுடையகங்கைதங்குஞ் சடை யையுடையவன், சிற்றம்பலத்தின்கண்ணான், பொய்ந்நிறையுநெஞ் சத்தையுடையவர் ஒருஞான்றுங்காணாதவிறைவன், அவனுறைகின் ற காழியையொப்பாள் யான்றன்னை நினையாது வேறொன்றன் மேலுள்ளத்தைச்செலுத்தும்வழியும் தானென்னை நினைந்து ஒரு காலும்பிரியாது என்னுள்ளம்புகாநின்றாள், அவ்வாறன்றி யான்ற ன்னை நினையுந்தோறும் உயர்ந்தவிடத்தினின்றும் பள்ளத்திற்பு கும்புனலையொத்துத் தடுப்பரியளாய் என்மனத்தின்கண்வருமு றைமையளாகாநின்றாள். அதனாற்பிரிந்தீண்டிருத்தல் அரிதுபோ லும். எ-று.

தெள்ளம்புனல்- மெல்லம்புலம்புபோல்வதோர் பண்புத்தொ கை. மெய்ப்பாடு- மருட்கை. பயன் - பரத்தையினீங்கித்தலைமக ளிடத்தணுகல். (கஎகூ)

வாயில்பெறாதுமகன்றிறநினைந்தல்.

வாயில்பெறாதுமகன்றிறநினைதலென்பது - பரத்தையிற்பிரிந்து நினைவோடுவந்ததலைமகன் வாயிற்கணின்று, இத்தன்மையான் என்னைவந்தணைகின்றிலன்,யான் இனிவண்டுறையுங் கொங்கையை எவ்வாறுநண்ணுவதென்று வாயில்பெறாது மகன்றிறநினையாநிற்றல். அதற்குச்செய்யுள்:

தேனிவண்டுறைதருகொன்றையன்சிற்றம்பலம்வழுத்தும் ✻
வான்வண்டுறைதருவாய்மையன்மன்னுகுதலையின்வா ✻
யான்வண்டுறைதருமாலமுதன்னவன்வந்தணையா ✻
னுன்வண்டுறைதருகொங்கையெவ்வாறுகொணர்வதே. (௩௮௰)

பொற்றொடிமாதர் நற்கடைகுறுகி
நீடியவாயிலின் வாடினன்மொழிந்தது.

(இ-ள்.) தேனும்வண்டுமுறையுங் கொன்றைப்பூவையணிந்தவனது சிற்றம்பலத்தைவழுத்தும் வானிடத்துள்ளவாகிய வளவியவிடங்களை எனக்குத்தருமெய்ம்மையையுடையான், நிலைபெற்றகுதலையையுடைய இனியவாயையுடையான்,வளவியகடல் தந்த பெருமையையுடைய அமிர்தத்தையொப்பான், அவன் என்னைவந்தணைகின்றிலன், நறுநாற்றத்தால் வண்டுகளுறையுங் கொங்கையையுடையாளை யான்பொருந்துவது இனியெவ்வாறோ! எ-று.

தேனைநுகரும்வண்டெனினுமமையும். வழுத்துவார்பெறும்வானென்பது வழுத்தும்வானென்ன இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்துமேலேறிற்று. இப்பொழுது குதலையையுடைத்தாகிய வாயான் மேல்வளவிய நாற்றுறைகளைச்சொல்லி எனக்கின்பத்தைச்செய்யும் அமிர்தன்னவனென்றுரைப்பினுமமையும். வாயிலின்-வாயிலால். மெய்ப்பாடு-அழுகை. பயன்-வாயில்கோடல். நெஞ்சொடுசொல்லியது.

வாயிற்கணின்றுதோழிக்குரைத்தல்.

வாயிற்கணின்றுதோழிக்குரைத்தலென்பது-வாயில்பெறாதுமகன்றிறநினையாநின்றதலைமகன், நல்லநாட்டுப்பொலியும்மகளிர்தங்கண்ணிணையான்வந்த அச்சத்தால்வந்த மயக்கத்தால்உண்டாகிய வாட்டத்தை நீக்காத இவ்விரதம் யாதாமென வாயில்வேண்டித் தோழிக்குக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

கயல்வந்தகண்ணியர்கண்ணிணையான்மிகுகாதரத்தான் ✻
மயல்வந்தவாட்டமகற்றுவிரதமென்மாமதியி ✻

னயல்வந்தவாடரவாடவைத்தோனம்பலநிலவு *
புயல்வந்தமாமதிற்றில்லைநன்னாட்டுப்பொலிபவரே. (௩௮௪)

பெருந்தகைவாயில் பெறாதுநின்
றருந்தகைப்பாங்கிக் கறியவுணர்த்தது.

(இ-ள்.) எதங்குறித்துவந்த ஆடரவைப் பெருமையையுடைய பிறையின்பக்கத்து அதனைவருந்தாமற்செய்து ஆடவைத்தவனது அம்பலம் நிலைபெற்ற புயல்தங்கிய பெரியமதிலையுடைய தில்லையைச்சூழ்ந்த நல்லநாட்டிற்பொலியும் மகளிர், கயல்போலுங்கண்ணையுடையவர்கண்ணிணையால் ஒருகாலைக்கொருகால் மிகாநின்ற அச்சத்தால்வந்த மயக்கத்தாலுண்டாகிய வாட்டத்தை நீக்காத இவ்விரதம் யாதாம்! எ-று.

தில்லைநன்னாட்டுப்பொலிபவர் அகற்றாதவெனவியையும். பொலிபவர்க்கு என்னுநான்கனுருபு விகாரவகையாற்றொக்கதெனினுமமையும். இது முன்னிலைப்புறமொழி. இதனுள் கயலவந்தகண்ணியவொன்றது தலைமகளை, தில்லைநன்னாட்டுப்பொலிபவரொன்றது தோழியை. இனி மதிக்குவமை தலைமகளும் அரவிற்குவமை தலைமகனும் ஈசனுக்குவமை தோழியுமென்றாக்கி, அவ்வகைத்தாகிய பாம்பையும் மதியையும் தம்மிற்பகையறுத்து ஓரிடத்தேவிளங்க வைத்தாற்போல என்னுடன் அவட்குண்டாகிய வெறுப்பைத் தீர்த்து விளங்கவைத்தல் உனக்குங்கடனென்றானாயிற்றென உள்ளுறைகாண்க. மதியையரவேதங்குறித்துவந்தாற்போலத் தலைமகளைத் தலைமகனேதங்குறித்துவருதலாவது தலைமகளுக்கு ஊடல்புலவி துனியென்னும் வெறுப்புத்தோன்றுதற்குத் தக்ககாரணங்களைத்தலைமகன் உண்டாக்கிக்கொண்டுவருதல். அரவைக்கண்டு மதிக்கச்சந்தோன்றினாற்போலத் தலைமகனைக்கண்டு தலைமகளுக்கும் ஊடல் புலவி துனியென்னும் வெறுப்புத்தோன்றிற்று, ஆதலால் அத்தலைமகனையும் தலைமகளையும் மதிக்குமரவுக்குமொப்பச் சிலேடித்தசிலேடைக்கு மறுதலையாகாது, "தேவரனையர் கயவர்" என்றாற்போலவாமெனக். கயல்வந்தகண்ணியர்கண்ணிணையால் வந்த அச்சத்தால் வந்த மயக்கத்தால்வந்தவாட்டம் இவனுக்கு வருதற்குக்காரணம் தலைவி பராமுகஞ்செய்யும்படி தான்வருந்தல். இதனைத்தீர்த்தல் தில்லைநன்னாட்டுப் பொலியுமகளிர்க்குக் கடனென்றானெனக். அது "பிணிக்குமருந்து பிறமன் அணியிழை-தன்னோய்க்குத்தானே மருந்து" என்றும், "துறைமெய்வலம்புரிதோய்த்து மணலுழுததோற்றமாட்வான் - பொறைமலிபூம்பு

ன்னைப் பூவுதிர் நண்டாது போர்க்குங்கான-னிறைமதி வாண்முகத்து நீள்கயற்கண் செய்த-வுறைபலியுய்யாநோயூர்சுணங்குமென்முலையே தீர்க்கும்போலும்.,, என்றும், சொலலியவாறுபோலக் கண்ணாலுண்டாகிய நோய்க்குக் கண்ணே மருந்தாமென்று சொல்லியவாறுமெனக்கொள்க. மெய்ப்பாடும் பயனும்-அவை. தோழியைவாயில்கோடற்கிவ்வகைசொன்னானென்பது. (௩௮௧)

வாயில்வேண்டத்தோழிகூறல்.

வாயில்வேண்டத்தோழிகூறலென்பது- வாயில்வேண்டியதலைமகனுக்கு, பண்டு நீர் வரும் வழியிடை வருமேதமும் இருளுமெண்ணாதுகன்றைபகன்ற நற்றாவையொத்து எம்மாட்டுவருதிர், இன்று எம்பொருந்தாதார்தெருவே அன்று எம்மாட்டூர்ந்துவந்ததேர்மேலேறிப்போகாநின்றீர், இதுவன்றோ எம்மாட்டு நமதருளெனத் தோழி அவன்செய்திகூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

கூற்றாயினசினவாளியெண்ணீர்கண்கள்கோளிழித்தாற் *
போற்றான்செறியிருட்பொக்கமெண்ணீர்கன்றகன்றபுனிற் *
றாற்றாவெனநீர்வருவதுபண்டின்றெம்மீசர்தில்லைத் *
தேற்றார்கொடிநெடுவீதியிற்போதிர்த்தேர்மிசையே. (௩௮௨)

வைவேலண்ணல் வாயில்வேண்டப்
பையரவல்குற் பாங்கிபகர்ந்தது.

(இ-ள்.) கூற்றம்போலக் கொடியவாகிய சினத்தையுடைய யாளிகளை ஊறுசெய்வனவாகக் கருதாது கண்களைக்கோளிழித்தாற்போலச் செறிந்தவிருளின் மிகுதியைத்தான் இடையூறாகநினையாது கன்றைபகன்ற ஈன்றணிமையையுடைய நற்றாவையொத்துப்பண்டுநீர் எம்மாட்டுவருவது, இன்று எம்முடையவீசரது தில்லையிலே எமதுபொருந்தாதாரது கொடியையுடைய நெடியவீதியில் எம்மாட்டூர்ந்துவந்ததேர்மேலேறிப் போதாநின்றீர், இதுவன்றோ எம்மாட்டு நும்மருளாயினவாறு. எ-று.

ஆளியெண்ணீர் பொக்கமெண்ணீர் என்பனவற்றை முற்றாகவுரைப்பினுமமையும். கண்களுக்குக் கோளென்றது பார்வை. இதனையிழித்தலென்பது கண்மணியைவாங்குதல். தானென்பது அதுவன்றி இதுவொன்றென்பதுபட நின்றதோரிடைச்சொல். அசைநிலையெனினுமமையும். நற்றாவென்றது கடுஞ்சூல் நாகன்றிப்பலகாலீன்றஆவை. மெய்ப்பாடு- வெகுளி. பயன்-வாயின்மறுத்தல்.

(௩௮௨)

ள் துனித்தநோக்கங்கண்டு, ஓலைகொண்டு செல்லவேண்டிக் காதலன்வந்தானென்று சொல்லுமளவில் இவளுடையகாவியங்கண்கள் கழுநீர்ச்செவ்வியைவெளவுதல்கற்றனவென மனையவர் தம்முண்மகிழ்ந்துகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

தேவியங்கண்டிகழ்மேனியன்சிற்றம்பலத்தெழுது *
மோவியங்கண்டன்னவொண்ணுதலாடனக்கோலைகையுய்ப்பான் *
மேவியங்கண்டனையோவந்தனனெனவெய்துயிர்த்துக் *
காவியங்கண்கழுநீர்ச்செவ்விவெளவுதல்கற்றனவே. (௩௮௪)

கன்னிமானோக்கி கனன்றுநோக் கு
மன்னியமனையவர் மகிழ்ந்துரைத்த து.

(இ-ள்.) தேவியவ்விடத்துவிளங்குமேனியையுடையவனது சிற்றம்பலத்தின்கண் எழுதப்பட்ட ஓவியத்தைக்கண்டாற்போலும் ஒண்ணுதலையுடையாள் தனக்கு ஓலைகொண்டுசெல்லவேண்டிக் காதலன்வந்தான் வந்துபொருந்துகின்ற இயவொலிகேட்டனையோவென்று கண்டார் வந்துசொல்லக்கேட்டு, வெய்தாகவுயிர்த்துக் குவளைப்பூப்போலுங்கண்கள் கழுநீர்மலர்ச்செவ்வியை வெளவுதல்வல்லவாயின, இனியென்னிகழும்! எ-று.

அங்கட்டிகழ்மேனியென்பது மெலிந்துநின்றது. தேவியுடையவழகியகண்மலர்கள் சென்றுவிளங்குமேனியையுடையவனெனினுமமையும். மேவியங்கண்டனையோவந்தனனெனவென்பதற்கு, அழகியகண்டன்வந்தானென்று மேவியுரைப்பவெனினுமமையும். ஐயோவென்றது-உவகைக்கண்வந்தது. வெய்துயிர்த்தற்குவினைமுதல் உயிர்த்தற்குக்கருவியாகியபொறியெனினுமமையும். மெய்ப்பாடு-அழுகை. பயன்- தலைமகள் வாயினேரா மையுணர்த்துதல்.
(௩௮௪)

வாயின்மறுத்துரைத்தல்.

வாயின்மறுத்துரைத்தலென்பது-மனையவர் துனிகண்டுமகிழாநிற்ப, இவனை நமக்குத்தந்தபின்னர் நம்முடையவாயத்தார்முன்னே நங்காதலர் இன்றுநங்கடையைக்கண்டார், இதுவன்றோ நம்மாட்டு அவரருளெனத் தோழிக்குத் தலைமகள் வாயின்மறுத்துக்கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

உடைமணிகட்டிச்சிறுதேருருட்டியுலாத்தருமிந் *
நடைமணியைத்தந்தபின்னர்முன்னான்முகன்மாலறியா *
விடைமணிகண்டர்வண்டில்லைமென்றோகையன்னார்கண்முன்னங்
கடைமணிவாளையாயின்றுகண்டனர்காதலரே. (௩௮௫)

மடவரற்றோழி வாயில்வேண் ட
அடல்வேலவ னருளுரைத்த து.

(இ-ள்.) முத்துப்போலுமொளியையுடைய நகையையுடையாய், உடைமணியையணியிற்கட்டிச் சிறுதேராயுருட்டி உலாவும் இவ்வியக்குதலையுடைய இந்தமணியை நமக்குத்தந்தபின், முற்காலத்து நான்முகனுமாலுந்தேடியுமறியாத விடையையுடையமணிகண்டரது வளவியதில்லையின் மெல்லியமயிலையொப்பார்கண்முன்னே நங்கடையைக் காதலர் இன்றுகண்டார், இதுவன்றோ நம்மாட்டு அவரருள். எ-று.

கட்டியென்பது ஈண்டுத் தங்கியென்னும்பொருட்டாய்நின்றது. நடைமணியென்றது புதல்வனை. விடமணிகண்டரென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-வெகுளி. பயன்-வாயின்மறுத்தல். (௩௮௫)

பாணனொடுவெகுளுதல்.

பாணனொடுவெகுளுதலென்பது, தோழிக்குவாயின்மறுத்த தலைமகள், நின்னிடத்து அவர்நீங்காதவருள்பெரியரென்று நீசொல்லவேண்டுமோ, அதுகிடக்க, கொற்சேரியிலூசிவிற்றுப் புலையா எம்மில்லத்து நின்னுடைய நல்லநல்ல பொய்யைப்பொருந்தி நிற்கலுற்றோ நீபோந்ததெனவாயில்வேண்டியபாணனொடு வெகுண்டுகூறுநிற்றல். அதற்குச்செய்யுள்.

மைகொண்டகண்டர்வயல்கொண்டதில்லைமல்லூரர்நின்வாய் *
மெய்கொண்டவன்பினரென்பதென்விள்ளாவருள்பெரியர் *
வைகொண்டவூசிகொற்சேரியின்விற்றெம்மில்வண்ணவண்ணப் *
பொய்கொண்டுநிற்கலுற்றோபுலையாதினிபோந்ததுவே. ()

மன்னியாழ்ப்பாணன் வாயில்வேண் ட
மின்னிடைமடந்தை வெகுண்டுரைத்த து.

(இ-ள்.) கருமையைப்பொருந்தியகண்டத்தையுடையவரது வயலைப்பொருந்திய தில்லைக்கண்ணுளராகிய வளமல்கியவூரையுடையவர் நின்கண்மெய்ம்மையைப்பொருந்திய வன்பையுடையரென்று நீசொல்லவேண்டுமோ! அவர் எம்மிடத்துநீங்காதவருள்பெரியரன்றோ, அதுகிடக்க, கூர்மையைப்பொருந்திய ஊசியைக் கொற்சேரியின்கண்விற்று எம்மில்லத்து நின்னுடையநல்லநல்லபொய்ம்மையைப்பொருந்திநிற்கலுற்றோ, புலையனாகிய நீயினி, ஈண்டுநீ போந்தது! இது சாலநன்று! எ-று.

மெய்கொண்டவன்பினென்று சொல்லுகின்றதென் நின்வாயிலவர் விள்ளாவருள்பெரியானென்றுரைப்பினுமமையும். ஊசிகொற்சேரியின்விற்றென உவமவினை உவமிக்கப்படும்பொருண்மேலேறிநின்றது. அடுக்கு- பன்மைக்கண்வந்தது. ஆத்தின் வியென்பதனை முன்னிலைக்கண்வந்ததாகவுரைப்பினுமமையும். விற்குநின்னெனென்பதூஉம் பாடம். மெய்ப்பாடும்பயனும்-அவை. ()

பாணன்புலந்துரைத்தல்.

பாணன்புலந்துரைத்தலென்பது- தலைமகள்வெகுண்டுரையாநிற்ப, நின்புருவநெறிய வாய்துடிப்ப என்னையெறிதற்குக் கல்லெடுக்கவேண்டா, நினதுகரியகண்களின் சிவப்பாற்றுவாயாக, நீவெகுளப்படுவதன்று, நினக்குப் பல்லாண்டுசெல்வதாக, யான்வேண்டியவிடத்துப்போக நின்னடியைவலங்கொள்ளாநின்றேனென வாயில்பெறுமையிற் பாணன் புலந்துகூறுநிற்றல். அதற்குச் செய்யுள்.

கொல்லாண் டிலங்குமழுப்படையோன்குளிர்தில்லையன்னாய் *
வில்லாண் டிலங்குபுருவநெரியச்செவ்வாய்துடிப்பக் *
கல்லாண்டெடேல்கருங்கண்சிவப்பாற்றுகறுப்பதன்று *
பல்லாண்டடியேனடிவலங்கொள்வன்பணிமொழியே. (௩௮௭)

கருமலர்க்கண்ணி கனன்றுகட்டுரைப்பப்
புரிபாழ்ப்பாணன் புறப்பட்ட து.

(இ-ள்.) கொற்றொழில் அவ்விடத்துவிளங்கும் மழுவாகியபடையையுடையவனது குளிர்ந்ததில்லையையொப்பாய், வில்லையடியமைக்கொண்டுவிளங்காநின்ற புருவநெரியச் செவ்வாய்துடிப்ப எறிதற்குக்கல்லை அவ்விடத்தெடுக்கவேண்டா, கரியகண்களைச்சிவப்பாற்றுவாயாக, வெகுளப்படுவதன்று, நினக்குப் பல்லாண்டுகள் உளவாகவேண்டும், பணிமொழியையுடையாய், யான்வேண்டியதேயத்துக்குப்போக அடியேன் நின்னடியை வலங்கொள்ளாநின்றேன் எ-று.

கருங்கண்ணினதுசிவப்பெனினுமமையும். பல்லாண்டென்றது-தலைமகனுடனுண்டாகியவெறுப்புத்தீர்ந்து கூடியிருமென்று சொல்லியது நமக்குத்தலைமுயிற்றுயின் பல்லாண்டும் இப்படியிருப்பீரென்றான். இப்படியிருப்பீரென்றது-பல்லாண்டுமிப்படித்தனித்திருப்பீரென்று வளமாகத் தன்பாணவார்த்தைசொல்லியுவாறென்றறிக. புருவநெறிக்கவென்பதூஉம் வெவ்வாயென்ப

துஉம் பாடம். புரி-நரம்பு. மெய்ப்பாடு-அச்சம். பயன்-சிவப்பா
ற்றுவித்தல். (௩௮௭)

விருந்தொடுசெல்லத் துணிந்தமைகூறல்.

விருந்தொடுசெல்லத்துணிந்தமைகூறலென்பது-வாயில்பெறா
து பாணன் புலந்துநீங்காநிற்ப, யாவர்க்கும் வாயில்நேராது வெ
குண்டுரைத்தலாற் றழல்வேல்போலமிளிர்ந்து முத்தம்பயக்குமி
வளுடையகண்கள் விருந்தொடுவந்தானென்று சொல்லுமளவிற்
பண்டைநிறமாகிய கருங்குவளையதுசெவ்விபரந்த, என்னமனைய
றக்கிழத்தியோவென இல்லோர் தம்முட்கூறாநிற்றல். அதற்குச்
செய்யுள்.

மத்தக்கரியுரியோன்றில்லையூரன்வரவெனலுந் *
தத்தைக்கிளவிமுகத்தாமரைத்தழல்வேன்மிளிர்ந்து *
முத்தம்பயக்குங்கழுநீர்விருந்தொடென்றோமுன்னந் *
தித்தக்கருங்குவளைச்செவ்விபோடிக்கெழுமினவே. (௩௮௮)

பல்வளை பரிசுக ண்
டில்லோ ரியம்பிய து.

(இ-ள்.) களிப்பையுடைத்தாகிய யானையின்றோலையுடையவனது
தில்லையூரனது வரவென்று சொல்லத்தொடங்குதலும் கிளியின்
மொழிபோலும் மொழியையுடையாளது முகமாகியதாமரைக்க
ண்ணே தழலையுடையவேல்போலப்பிறழ்ந்து நீர்த்துளியாகியமு
த்தத்தையுண்டாக்காநின்ற கண்ணாகியசெங்கழுநீர்மலர், விருந்
தோடென்று சொல்லுவதற்குமுன், விளாயப்பண்டைநிறமாகியக
ரியகுவளைச்செவ்விபரந்துமேவின, என்னமனையறக்கிழத்தியோ.
எ-று.

மத்தம்-மதமென்பாருமுளர். ஊரன்வரவென வினையெச்சமா
கப்பிரிப்பினுமமையும். கித்தமென்பதனைச் செய்யப்பட்டதென்
னும்பொருளதோர் வடமொழித்திரிபென்பாருமுளர். விருந்து
வாயிலாகப் புக்கவழி இல்லோர் சொல்லியது. மெய்ப்பாடு- உவ
கை. பயன்-மெய்ம்மகிழ்தல். (௩௮௯)

ஊடறணிவித்தல்.

ஊடறணிவித்தலென்பது-விருந்தேற்றுக்கொண்டுதலைமகளு
ழைச்சென்று, நம்முடையதோன்றலைத் தனக்குத்துணையாகக்கொ
ண்டுவந்து தோன்றுதலான் நினதுளத்துக்கவற்சியையொழிந்து
இனிநம்மரசற்குக் குற்றேவல்செய்வாயாகவெனத் தோழி அவளை
யூடறணிவியாநிற்றல், அதற்குச்செய்யுள்.

கவலங்கொள்பேய்த்தொகைபாய்தரக்காட்டிடையாட்டுவந்த *
நவலங்கிலாச்சிவன்றில்லையன்னாய்தழுவிம்முழுவிச் *
சுவலங்கிருந்தநந்தோன்றற்றுணையெனத்தோன்றுதலர *
லவலங்களோர்ந்துபணிசெயற்பாலையரசனுக்கே. (௩௮௯)

தோன்றலைத்துணையொடு தோழிகண் டு
வான்றகைமடந்தையை வருத்தந்தணித்த து.

(இ-ள்.) கவற்சிகொள்ளுதற்கேதுவாகியபேய்த்திரள் காணங் கவைப்பாயாநிற்பப்புறங்காட்டின்கண் ஆடுதலைவிரும்பிய கேடங் கில்லாதசிவனது தில்லையையொப்பாய், தழுவிமுத்தங்கொண்டு சுவலிடத்தேறியிருந்த நம்முடையதோன்றலைத் தமக்குத்துணையெனக்கருதி வந்து தோன்றுதலான், நினதுள்ளத்துக் கவற்சியைநீக்கி இனியரசற்குக் குற்றேவல்செயற்பாலை. எ-று.

தழுவிமுழுவித்தோன்றுதலாலெனவினையும். சுவற்கணங்கிருந்தவெனினுமமையும். மெய்ப்பாடு- பெருமிதம். பயன்-தலைமகளைச்சிவப்பாற்றுவித்தல். (௩௮௯)

அணைந்தவழியூடல்.

அணைந்தவழியூடலென்பது- தோழியாலூடல்தணிவிக்கப்பட்டுப் பள்ளியிடத்தாளாகியதலைமகள், நீசெய்கின்றவிதனையறியின் நின்காதலிமார் நின்னைவெகுள்வர், அதுகிடக்க, யாம் மேனிமுழுதுஞ்சிறுவனாலுண்டாக்கப்பட்ட பால்புலப்படுந் தன்மையையுடையேம், அதன்மேல் யாமும் நீசெய்கின்றவிக்கள்ளத்தைவிரும்பேம், அதனால் எங்காலைத்தொடாதொழி, எங்கையைவிடுவாயாக எனத் தலைமகன்றன்னையணைந்தவழி ஊடாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சேரூன்றிகழ்வயற்சிற்றம்பலவர்தில்லைநகர்வாய் *
வேரூன்றிகழ்கண்ணிளையார்வெகுள்வர்மெய்ப்பாலன்செய்த *
பாரூன்றிகழும்பரிசினமேவும்படிறுவவேந் *
காரூன்றொடுதொடேல்விடுதீண்டலெங்கைத்தலமே. (௩௯௰)

தெளிபுனலூரன் சென்றணைந்தவ ழி
ஒளிமதிநுதலி யூடியுரைத்த து.

(இ-ள்.) சேல்விளங்கும் வயலையுடையசிற்றம்பலவரது தில்லை நகரிடத்தாராகிய வேல்போலுங்கண்ணையுடைய நின்காதலிமாராகியவிளையவர் நீசெய்கின்றவிதனையறியின் நின்னைவெகுள்வர், அதுவேயுமன்றி, மேனி சிறுவனாலுண்டாக்கப்பட்ட பால்புல

ப்படுந்தன்மையையுடையேமாதலின் நினக்குத் தகேம், இதன் மேலே யாமும் நீயும் மேவுநாணின்மையோடுகூடிய கள்ளத்தை விரும்பேம், அதனால் எங்காலைத்தொடாதொழி, எம்மைத்தொடாவேண்டா, எங்கைத்தலத்தைத்தீண்டற்பாலையல்லை, விடுவாயாக. எ-று.

திகழ்வயற்றில்லையெனவியையும். பால் திகழுமென்னும் இடத்துநிகழ்பொருளின்வினை மெய்யாகியவிடத்து மேலேறிநின்றது.நான்கிடத்தும் தாமென்பது அசைநிலை. பரிசினமேனுமென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-வெகுளி. பயன்-ஊடனீங்குதல்.)

புனலாட்டுவித்தமைகூறிப்புலத்தல்.

புனலாட்டுவித்தமைகூறிப்புலத்தலென்பது - அணைந்தவழியூடாநின்றதலைமகள் ஊடறீராநின்ற தலைமகனோடு, இவர்செய்த பிழையெல்லாம் பொறுக்கலாம், பலருமறியவொருத்தியைப்புனலாட்டுவித்து அதுசெய்யாதார்போல என்மனையின்கணிவர்வந்துநிற்கின்றவிது எனக்குப்பொறுத்தலரிதெனத் தணிக்கத் தணியாதுபரத்தையைப் புனலாட்டுவித்தமைகூறிப் புலவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

செந்தார்நறுங்கொன்றைச்சிற்றம்பலவர்தில்லைநகரோர் *
பந்தார்விரலியைப்பாய்புனலாட்டிமன்பாவியெற்கு *
வந்தார்பரிசுமன்றுப்நிற்குமாறென்வளமனையிற் *
கொந்தார்தடந்தோள்விடங்காலயிற்படைக்கொற்றவரே. (௩௱௧௧)

ஆங்கதனுக் கழுக்கமெய் தி
வீங்குமென்முலை விட்டுணாத்த து.

(இ-ள்.) கொத்துமாலைநிறைந்த பெரியதோளினையும் நஞ்சைக்காலுங்கூரியபடையினையுமுடைய கொற்றவர் தீவினையேற்கு எனது வளமனையில்வந்து நிற்கின்றபடி, பந்துபயின்றவிரலாளொருத்தியைப் பாய்ந்தபுனலையாட்டுவித்து வெளிப்படத்தவறுசெய்து வந்தார் சிலர் நிற்கும்பரிசுமன்றாய் மனத்தவறுசெய்யாதார் வந்துநிற்குமாறு வந்து நின்றாராயின், அதுபொறுத்தலரிது. எ-று. செய்ய தாராகிய நறியகொன்றைப்பூவினையுடையசிற்றம்பலவரது தில்லையாகியநகர்வரைப்பிற் பாயும் புனலையாட்டியெனக்கூட்டுக.

தில்லைநகரோர்புந்தார்விரலியெனவியைப்பினுமமையும். மன்-ஒழியிசைக்கண்வந்தது, அசைநிலையெனினுமமையும். ஒருத்தியைப்புனலாட்டிவந்தார்பரிசுமன்றாய்க் கொற்றவர் மனைக்கண்வந்துநிற்குமாறென்னென்று கூட்டியுரைப்பினுமமையும். கொத்துமாலை-பலவாயொன்றாகியமாலை. ஆங்கதனுக்கு- அப்படிநின்றநிலையால். விட்டுரைத்தது-வெளிப்படவுரைத்தது. மெய்ப்பாடும் பயனும்-அவை. (௩௯௧)

கலவிகருதிப்புலத்தல்.

கலவிகருதிப்புலத்தலென்பது-புனலாட்டுவித்தமைகூறிப் புலவாநின்றதலைமகள், ஊடறீர்க்க நுதலுந்தோளுமுதலாயினவற்றைத் தைவந்துவருடித் தலையளிசெய்யாநின்றதலைமகனோடு,எம்முடைய சிறியவில்லின்கண்வந்து அன்று நீயிர்செய்ததலையளி எங்கட்கு அன்றுவேண்டுதுமாயினும் இன்று உமதுதிருவருள் எங்கட்கு நீயிர்வந்த இத்துணையுமமையும் வேறு நீயிர் தலையளி செய்யவேண்டுவதில்லையெனக் கலவிகருதிப் புலவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

மின்றுன்னியசெஞ்சடைவெண்மதியன்விதியுடையோர் *
சென்றுன்னியகழற்சிற்றம்பலவன்றென்னம்பொதியி *
னன்றுஞ்சிறியவரில்லெமதில்லநல்லூரமன்னே *
வின்றுன்றிருவருளித்துணைசாலுமன்னெங்களுக்கே. (௩௯௨)

கலைவளரல்குறலை மகன்றன்னொடு
கலவிகருதிப் புலவிபுகன்றது.

(இ-ள்.) மின்னையொத்தசெஞ்சடைக்கண்வைத்த வெண்பிறையையுடையான், நற்பாலையுடையோர் சிற்றின்பத்திற்குக்காரணமானபுலன்களைவிட்டுச்சென்று நினைந்தகழலையுடைய சிற்றம்பலவன், அவனதுதெற்கின்கணுண்டாகியபொதியிலிடத்து எமது குடி பெரிதுஞ்சிறியவரதுகுடி, அதனான், நல்லவூரையுடையாய், முற்காலத்து நின்றலையளிவேண்டுதுமாயினும், இப்பொழுது உனதுதிருவருள் எங்கட்குநீவந்தவித்துணையுமமையும், நீ தலையளி செய்யவேண்டுவதுண்டோ. எ-று.

மன்னும் ஓவும் அசைநிலை. சாலுமன்னென்புழி மன்னும் அசைநிலைபோலும். மெய்ப்பாடு-வெகுளி. பயன்-புலத்தல், புலவி நீங்கியதூஉமாம். (௩௯௨)

மிகுத்துரைத்தூடல்.

மிகுத்துரைத்தூடலென்பது-கலவிகருதிப்புலவாநின்றதலைமகள், புணர்தலுறுநின்ற தலைமகனுடன் நீர் விழுமியநாட்டு விழுமியநல்லூர் விழுமியகுடியிலுள்ளீர், எம்போல்வாரிடத்து இவ்வாறுபுணர்தல் விரும்புதல்நுமக்குவிழுமியவல்லவெனமிகுத்துரைத்தூடாநிற்றல். அதற்குச்செய்யுள்.

செழுமியமாளிகைச்சிற்றம்பலவர்சென்றன்பர்சிந்தைக் *
கழுமியகூத்தர்கடிபொழிலேழினும்வாழிபரோ *
விழுமியநாட்டுவிழுமியநல்லூர்விழுக்குடியீர் *
விழுமியவல்லகொல்லோவின்னவாறுவிரும்புவதே. (௩௯௩)

நாடுமூரு மில்லுஞ்சுட் டி
ஆடற்பூங்கொடி யூடியுரைத்த து.

(இ-ள்.) வளவியமாளிகைகளாற்சூழப்பட்டசிற்றம்பலத்தையுடையார், அன்பர்சிந்தைக்கட்சென்றுபொருந்தியகூத்தர், அவரது காவலையுடையவுலகமேழினுள்ளுஞ் சிறந்தநாட்டின்கட் சிறந்தநல்லூரிற் சிறந்தகுடியிலுள்ளீர், எம்போல்வாரிடத்து இத்தன்மையவாகிய நெறியைவிரும்புதல் உமக்குச்சிறந்தனவல்லபோலும். எ-று.

வாழியும் அரோவும் அசைநிலை. விரும்புவதென்புழி, இன்னவாறுவிரும்புவபோல்வனவென்பது கருத்தாகலின்,ஒருமைப்பன்மைமயக்கம் அமையுமாறு முடைத்து. இன்னவாறென்பதற்கு இன்னவண்ணம்விரும்புதலெனினுமமையும். விரும்புதலென்பது உம் பாடம். ஆடல்-நடக்கம். மெய்ப்பாடும் பயனும்-அவை.

ஊடனீடவாடியுரைத்தல்.

ஊடனீடவாடியுரைத்தலென்பது- தணிக்கத்தணியாது மிகுத்துரைத்துத் தலைமகள் மேன்மேலுமூடாநிற்ப, அன்று அம்மலையிடத்துத் தன்னையெய்துதற்கோருபாயமின்றிவருந்தாநிற்ப யானுய்யும்வண்ணந் தன்னிணை மலர்க்கண்ணினது இனியநோக்கத்தைத்தந்தருளி என்னைத்தன்வயமாக்கிய நம்பெண்ணமுதம் அதுவன்று, இது நம்மைவருத்துவதோர் மாயமாமெனத் தன்னெஞ்சிற்குச்சொல்லி ஊடனீடத் தலைமகன் வாடாநிற்றல். அதற்குச்செய்யுள்.

திருந்தேனுயநின்றசிற்றம்பலவர்தென்னம்பொதியி *
லிருந்தேனுயவந்திணைமலர்க்கண்ணினின்றோக்கருளிப் *

பெருந்தேனென நெஞ்சுகப்பிடித்தாண்ட நம் பெண்ணமிழ்தம்
வருந்தேலதுவன்றிதுவோவருவதொர்வஞ்சனையே. (௩௯௪)

வாடா வூ ட
னீடா வாடிய து.

(இ-ள்.) ஒருவாற்றானுந்திருந்தாத யான் பிறவித்துன்பத்திற் பிழைக்கவந்து நின்றசிற்றம்பலவரது தெற்கின்கணுளதாகியபொதியிலிடத்து ஒருமுயற்சியுமின்றியிருந்த யானுய்யும்வண்ணம் வந்து, தன்னுடைய இணைந்தமலர்போலுங்கண்களினது உள்ளக்கருத்தை வெளிப்படுத்தும் நாணோடுகூடியநோக்கமாகிய இனிய கடைக்கணோக்கத்தை முன்னெனக்குத்தந்து, பெருந்தேன்போலவினிதாய், என்னெஞ்சமுருக, என்னைப்பிடித்துத் தன்வயமாக்கிய நமது பெண்வடிவையுடைய அமிழ்தமாகிய அது இதுவன்று, இதும்வா வருவதொருமாயம், அதனான் நீவருந்தாதொழி. எ-று.

ஓகாரம்- ஒழிபிசைக்கண்வந்தது. தன்னைநோக்கியொருமுயற்சியுமில்லாதயான் பிறவித்துன்பத்திற்பிழைக்கத் தானேவந்து தன்னை மலர்க்கண்ணினதினியகடைக்கணோக்கத்தைத்தந்து பெருந்தேன்போன்றினிதாய், என் வன்மனநெகிழ என்னைவலிந்து பிடித்தடிமைக்கொண்ட பெண்ணமிழ்தமென வேறுமொரு பொருள்விளங்கியவாறுகண்டுகொள்க. மெய்ப்பாடு-அழுகை பயன்-தலைமகளைச்சிவப்பாற்றுவித்தல். (௩௯௪)

துனியொழிந்துரைத்தல்.

துனியொழிந்துரைத்தலென்பது- ஊடனீடலால் தலைமகனைதாற்றுவாயில்கண்டதலைமகள், அன்று நங்குன்றிடத்து மிக்கவிருளின்கண்ணே அரிதிரண்டு யானைவேட்டஞ்செய்யும் அதரகத்துத் தமதுவேலே துணையாகவந்து இயல்பைப்பொருந்தியவன்பை நமக்குத்தந்தவர்க்கு இன்றுநாமுடம்படாது நிற்குமிந்நிலைமை என்னாமெனத் துனியொழிந்து அவனோடு புணர்ச்சிக்குடம்படாநிற்றல். அதற்குச்செய்யுள்.

இயன்மன்னுமன்புதந்தார்க்கென்னிலையிமையோரிறைஞ்சுஞ் *
செயன்மன்னுஞ்சீர்க்கழற்சிற்றம்பலவர்தென்னம்பொதியிற் *
புயன்மன்னுகுன்றிற்பொருவேறனையாப் பொம்மென்னிருள்
வாய், யன்மன்னுப்யானைதுரந்தரிதேருமதரகத்தே. (௩௯௫)

தருகியினாரன் மிருபதநோக்கி ப்
பனிமலர்க்கோதை துனியொழிந்த து.

யையுடையவீசரது இமையோரால்வணங்கப்படும் வளவியதில்லையிலுள்ளராகிய நல்லோரெல்லார்க்கும் பொதுவாகியதம்பலத்தைக் கொண்டுவந்தோ, புதல்வா, நீயெம்மைக்கொண்டாடுவது? அதுநிற்க, இது நினக்குத்தருகின்றவிடத்து நின்றந்தை, ஒளிவிட்ட முறுவல்பொருந்திய நின்சிறியவன்னைமாரைக் கண்ணைத்தப்புவித்து அவர்காணாதவண்ணம் ஒருவாற்றானின்னையெதிர்ப்பட்டு, எவ்விடத்து நின்று, எவ்வண்ணம்மிதனை நினக்குத்தந்தான்? நீயிது சொல்லவேண்டும். எ-று.

மெய்ப்பாடு-இளிவரலைச்சார்ந்தநகை. பயன்-ஊட னீங்குதல்.

கலவியிடத்தூடல்.

கலவியிடத்தூடலென்பது- புதல்வனைவாயிலாகப்புக்குப் புலவிதீர்த்துப் புணர்தலுற்றுநின்ற தலைமகனைத் தலைமகள் ஒருகாரணத்தால்வெகுண்டு, அவன்மார்பகத்துதைப்ப, அவ்வெகுடல் தீரவேண்டி அவனவள்காலைத் தன்றலைமேலேற்றுக்கொள்ள, அது குறையாக அவள் புலந்தழாநின்றமையை அவ்விடத்து உழையர் தம்முட்கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்.

சிலைமலிவாணுதலெங்கையதாகமெனச்செழும்பூண் *
மலைமலிமார்பினுதைப்பத்தந்தான்றலைமன்னர்தில்லை *
யுலைமலிவேற்படையூரனிற்கள்வரில்லென்னவுன்னிக் *
கலைமலிகாரிகைகண்முத்தமாலைகலுழ்ந்தனவே. (௩௯௭)

சீறடிக்குடைந்த நாறிணர்த்தாரவன்
றன்மைகண்டு பின்னுந்தளர்ந்தது.

(இ-ள்.) யான்வெகுண்டு மலைபோலும்வளவியபூணையுடைய தன்மார்பகத்துமிதிப்ப, அவ்வாகத்தைச் சிலைபோலும் வாணுதலையுடைய எங்கையதென்றேகருதித் தன்சென்னியைத்தந்தனன், அதனான் மன்னனது தில்லையில் உலையிடத்துண்டாகிய தொழிலான் மிக்க வேலாகியபடையையுடையவூரனைப்போலக் கள்வரில்லையென்று கருதி, மகளிர்க்குத் தக்க யாழ்முதலாகிய கலைகளான் மிக்ககாரிகைநீர்மையையுடையாளுடைய கண்கள் கண்ணீர்த்துளித்தாரையாகிய முத்தமாலையைப் பொருந்தின, அதனான், இவள் புலத்தற்குக்காரணம் வேண்டுவதில்லைபோலும். எ-று.

இதுவுந்துறைகூறியகருத்து. மெய்ப்பாடு- இளிவரலைச்சார்ந்தநகை. பயன்-தலைமகனைச்சிவப்பாற்றுவித்தல். பிள்ளைவாயிலாகப்புக்க தலைமகனையேற்றுக்கொண்டு பள்ளியிடத்தாளாக மேற்

சொன்னவகையே உண்ணின்றெழுந்தபொறாமை காரணம்பெ
ற்றுத் தோன்றியது, தோன்றத் தலைமகன் ஆற்றானாயின் அவ்வா
ற்றாமைகண்டு சிவப்பாற்றுவித்தல். தலைமகளிடத்தும், தலைமகனிட
த்தும் இவ்வகைநிகழ்ந்ததுகண்டுதோழியிதுசொன்னாளென்பது.
தலைமகன்றான்சொன்னானெனினுமமையும், என்னை. "மனைவி யு
யர்வுங் கிழவோன் பணிவு-நினையுங் காலைப் புலவியு ளுரிய.,, என்
றார் தொல்காப்பியனார். தலைமகளவ்வகைசெய்யவும் பெறுமென்
பது. (௩௧௭)

முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தல்.

முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தலென்பது. கலவியிடத்தூடாநி
ன்றதலைமகளுக்கு, யாங்கொடியநெறியைச்சென்று சிறியவூரின்
கண் மனையதட்பள்ளியின் இச்செறிந்தமெல்லியமுலைகள் என்
மார்பிடைவந்தடர்க்கத் தங்கிய சிறியதுயிற்குமாறுகண்டிலம் அ
தனைநீயுள்ளியுமறிதியோவென முன்னிகழ்வுரைத்துத் தலைமகன்
அவளையூடறீராநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஆறூர்சடைமுடியம்பலத்தண்டரண்டம்பெறினு *
மாறூர்மழவிடையாய்கண்டிலம்வண்கதிர்வெதுப்பு *
நீறூர்கொடுநெறிசென்றிச்செறிமென்முலைநெருங்கச் *
சிறூர்மனையதளிற்றங்குகங்குற்சிறுதுயிலே. (௩௧௮)

முன்னிகழ்ந்தது நன்னுதற்குரைத் து
மன்னுபுனலூரன் மகிழ்வுற்ற து.

(இ-ள்.) தவழாநின்ற இளையவேற்றையுடையாய், ஆறுபரந்தச
டைமுடியையுடைய அம்பலத்தின்கணுளராகிய அண்டரதண்ட
முழுதையும் யாம்பெறினும், ஞாயிற்றினுடைய வளவியகதிர்கள்
வெதுப்பிய நீறுபரந்த கொடியநெறியைச்சென்று, இச்செறிந்
த மெல்லியமுலைகள் எம்முடையமார்பினிடைவந்தடர, நெறியா
ற்சிறியவூரின்கண் மனையதட்பள்ளியிற்றங்கிய இரவிற்சிறியதுயி
ற்கு மாறு கண்டிலம், அதனை நீயுள்ளியுமறிதியோ. எ-று.

அண்டரதண்டமுழுதும்பெறுதலால்வருமின்பமும் அத்துயி
லான்வந்தவின்பத்திற்கு மாறல்லவென்றவாறு. இளவேறு- புதல்
வன். தமக்குத்தக்கபள்ளியுமிடமுமின்மையிற் சிறுதுயிலென்றா
ன். துயிலும்பொழுதிற் றுயிலாப்பொழுது பெரிதாகலின் அவ்
வாறுகூறினானெனினுமமையும். துயிற்கென்னுநான்கனுருபு வி
காரவகையாற்றொக்குநின்றது. முன்னிகழ்ந்ததுகூறுவானாய் உ

ண்ணின்றசிவப்பாற்றுவித்தது. ஞெமுங்கவென்பதூஉம் மரவக லென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-உவகை. பயன் - தலைமகளை மகிழ்வித்தல். (௩௬௮)

பரத்தையைக்கண்டமைகூறிப்புலத்தல்.

பரத்தையைக்கண்டமைகூறிப்புலத்தலென்பது-முன்னிகழ்வு றாத்துடதீர்த்து இன்புறப்புணரப்பட்டதலைமகள் பிறர்க்கும் நீ இவ்வாறின்பஞ்செய்தியென்றுகூற, நின்னையொழிய யான்வே றொருத்தியையுமறியேனென்றதலைமகனுக்கு, நின்பரத்தை போகாநின்றவள் நம்வாயிற்கணின்று தேருருட்டிவிளையாடாநின்றபு தல்வனைக் கண்டு நின்மகனென்றையுற்றுத் தழுவ, நீ யையுறவே ண்டா, அவன் உன்மகன், உறவு மெய்யாகியவுறவே, ஈதும் உனதி ல்லமே, ஈண்டுவருவாயாகவென்றியான்கூற, அதுகேட்டுத் தானா ணிப்போயினாள், யானவளையறியேனாக நீ மாயங்கூறவேண்டுவ தில்லையெனத் தான் பரத்தையைக்கண்டமைகூறிப் பின்னுமவ னொடுபுலவாநிற்றல். அதற்குச்செய்யுள்.

ஐயுறவாய்நம்மகன்கடைக்கண்டுவண்டேருருட்டு *
மையுறுவாட்கண்மழலைவத்தழுவமற்றுன்மகனே *
மெய்யுறவாமிதுன்னில்லேவருகெனவெள்கிச்சென்றாள் *
கையுறுமான்மறியோன்புலியூரன்னகாரிகையே. (௩௬௯)

பரத்தையைக்கண்ட பவளவாய்மாதர்
அரத்தநெடுவே லண்ணற்குரைத்தது.

(இ-ள்.) நமதகன்றகடைக்கட்கண்டு நின்மகனென்றையுற்று வள் வியசிறுதேரையுருட்டும் மையுற்றவாட்கண்ணையுடைய புதல்வனைத் தான்வந்துதழுவ, அதனைக்கண்டு, அவன் உன்மகனே, உறவு மெய்யாகியவுறவே, இதுவும் நினதில்லமே, ஈண்டுவருவாயாகவென்றி யான்கூற, கையைப்பொருந்திய மான்மறியையுடையவனது புலியூரைப்போலுங்காரிகை நாணிப்பெயர்ந்தாள், அதனால், யானவளையறியாதேனாக நீ நினைத்து மாயங்கூறவேண்டுவதில்லை. எ-று.

ஐயுறவாகவெனத்திரித்துக்கொள்க. அரத்தகுநெடுவேலென்பது பாடமாயின், அரத்தொழிலாற்றக்க நெடுவேலெனவுரைக்க. மெய்ப்பாடு-நகை. பயன்-சிவப்பாற்றுதல். ஆற்றாமையே வாயிலாகப்புக்கதலைமகன் தலைமகளைச்சிவப்பாற்றுவிப்பான் நின்னின்வேறுசிலரெனக்கில்லையால் நீ வெகுளற்கவென்றாற்குத் தலைமகளிவ்வகைசொன்னாளென்பது. (௩௭௰)

ஊதியமெடுத்துரைத்தூடறீர்த்தல்.

ஊதியமெடுத்துரைத்தூடறீர்த்தலென்பது - பரத்தையைக்கண்டமைகூறிப்புலந்து வேறுபட்ட தலைமகளுக்கு, இத்தன்மையனாய் யாவர்க்குமூதியமாகலின், அன்பானன்றியருளாற்பரத்தையர்க்குந் தலையளி செய்யவேண்டுமன்றே, புறப்பெண்டிரைப்போல யாமவனோடுபுலக்கற்பாலேமல்லேம், அவன்வரும்பொழுது எதிர்தொழுதும் போம்பொழுது புறந்தொழுதும், புதல்வனைப்பயந்திருக்கையன்றோ நமக்குக்கடனாவதெனத் தோழி தலைமகனதூதியமெடுத்துரைத்து அவளையூடறீர்த்து, அவனோடுபொருந்தப்பண்ணுநிற்றல். அதற்குச்செய்யுள்.

காரணிகற்பகங்கற்றவர்நற்றுணைபாணரொக்கல் *
சீரணிசிந்தாமணியணிதில்லைச்சிவனடிக்குத் *
தாரணிகொன்றையன்றக்கோர்தஞ்சங்கநிதிவிதிசே *
ரூருணியுற்றவர்க்கூரன்மற்றியாவர்க்குமூதியமே. (சா)

இரும்பரிசி லேற்றவர்க்கரு வி
விரும்பினர்மகிழ மேவுதலுரைத்த து.

(இ-ள்.) ஊரன் வேண்டாமைக்கொடுத்தலிற் காரோடொக்கும், வேண்டக்கொடுத்தலின் அழகியகற்பகத்தோடொக்கும், நுண்ணியகல்வியனாகலிற் கற்றவர்க்கு நல்லவுசாத்துணை, இசையுணர்வானுங்கெழுதகைமையானும் பாணர்க்கு அவர்சுற்றத்தோடொக்கும், நினைத்தது கொடுத்தலிற் சீரையுடைய நல்லசிந்தாமணியோடொக்கும், அழகியதில்லைக்கட்சிவனது திருவடிக்குத் தாராகி அவனாலணியப்படுங் கொன்றைப்பூவின் நன்மையையுடையன், சான்றோர்தமக்குத் தொலையாதநிதியாயிருத்தலிற் சங்கநிதியோடொக்கும், நட்டார்க்கும் பகைவர்க்குந் தப்பாதுபயன்கொடுத்தலின் விதியோடொக்கும், சுற்றத்தார்க்கு அவர்வேண்டிய செய்யவிருத்தலின் அணித்தாகியவூருணியோடொக்கும், அதனான் வரைவின்றி எல்லார்க்கும் இவன் பெரும்பயன். எ-று.

தாரணிகொன்றையனென்பது குரங்கனென்பதுபோல உவமைப்பொருட்பட நின்றதெனினுமமையும். விதிசேரூருணியென்பதற்கு முறைமையாற்சேரப்படுமூருணியெனினுமமையும்.

தக்கார்க்குஞ் சுற்றத்தார்க்குங்கொடுத்தல் வன்மையன்மையின் அவனை வேறுபிரித்துக்கூறினள். ஊடறீர்ந்துகூடியவழித் தலைமகட்கு உண்ணின்றசிவப்பு ஒருகாரணத்தாற்சிறிதுபுலப்பட, ஊரல்யாவர்க்குமுரியபரதலின் அன்பானன்றி அருளாற்பரத்தையர்க்குந்தலையளிசெய்யுமன்றே, அதனான் நீபுலக்கற்பாலைபல்லையென்று குறிப்பினாற்றோழி சிவப்பாற்றுவித்தது. மெய்ப்பாடு உவகை. பயன்-மெய்ம்மகிழ்தல்.

இவ்வகை கூத்தர் மகிழ்ந்து இன்னபோல்வன தலைமகனது குணங்களைப் பாராட்டினரென்பது என்னை, "தொல்லவை யுரைத்தலு நுகர்ச்சி யேத்தலும்- பல்லாற்றானு மூடலிற் றணித்தலு- முறுதி காட்டலு மறிவுமெய்ந் நிறுத்தலு - மேதுவி னுணர்த்தலுந் துணிபக்காட்டலு-மணிநிலை யுரைத்தலுங் கூத்தர் மேன.,, என்றார் தொல்காப்பியனார். இப்பாட்டு ஐவகைத்திணைக்கும் உரித்தாகலிற் பொதுவகைத்தெனப்பெறுமென்பது. (சா)

பரத்தையிற்பிரிவுமுற்றிற்று.

திருக்கோவையாருரைமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

பாட்டுமுதற்குறிப்பகராதி.